2821

T.N.L.A. Debates

Official Report

Vol II 344

March 15, 16 - 1985

Y211, 31 N85
N85.2.344
1.6367

[வெளியீடு 19-9-85]

[Issued 19-9-85

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES

## பணித்துறை வெளியீடு—OFFICIAL REPORT

வெள்ளிக்கிழமை, மார்ச் 15, 1985 - தொகுதி II எண் 3

Friday the 15th March 1985 - Volume II No 3

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009

**Legislative Assembly Secretariat, Fort St. George,**
**Madras - 600 009**

விலை: ரூ. 3-50 காசுகள்]

**Price Rs. 3-50 paise**

136367
சென்னை-600 005.

# உள்ளடக்கம்

15—3—1985


| | பக்கங்கள். |
|---|---|
| 1. வினாக்கள்—விடைகள்— | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் | 275—278 |
| 2. ஒழுங்குப் பிரச்னை— | |
| எதிர்க்கட்சித் தலைவர் வெளியே பத்திரிகைக்கு அளித்த பேட்டி குறித்து .. .. | 278 |
| 3. அறிவிப்பு— | |
| அமைச்சர்கள் பேரவை நிகழ்ச்சிகளுக்கே முதலிடம் அளித்தல் வேண்டும் எனக் குறிப்புரைத்தல் .. .. | 279 |
| கவன ஈர்ப்பு— | |
| சென்னை நகரப் பகுதியில் கழிவுநீர் தெருக்களில் தேங்கி நிற்பதன் காரணமாக ஏற்பட்டுள்ள சுகாதாரக் கேடு .. | 280—283 |
| அரசினர் சட்ட முன்வடிவுகள்— | |
| (அ) ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு 1985 .. .. | 284—291 |
| (ஆ) ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்டமுன்வடிவு 1985 .. | 292 297 |
| (இ) ஊராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு 1985 .. .. | 297—298 |

6. ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம்—விவாதம் (தொடர்ச்சி) .. .. 290—437

திரு. கு. வடிவேல் .. 298—306
திரு. கி. ராமன் .. 298—306
திரு. ப. ந. இராமச்சந்திரன் .. 306—313
திரு. சோ. மா. இராமச்சந்திரன் . 313—321
திரு. எம். இராசரத்தினம் .. 321—326
திரு. ஆ. கா. அ. அப்துல் சமத் .. 326—330
திரு. கு. ரமணி .. 330—345
திரு. பெ. செங்கோட்டையன் .. 345—362
திருமதி இரா. சரோஜா . 362—369
திரு. கி. வெங்கடாசலம் .. 369—371
திரு. குமரி அனந்தன் .. 371—381
டாக்டர் த. முகம்மது சலீம் 381—398
திரு. ஜி. ஆனந்த கிருஷ்ணா 398—401
திரு. எஸ். பி. துரைராசு .. 401—405
திரு. க. பாரமலை .. 405—409
திருமதி பி. லட்சுமி .. 409—414
திரு. எஸ். டேனியல் ராஜ் .. 414—417
திரு. எம். சண்முகையா பாண்டியன் .. 418—421
திரு. கே. முத்துவேல் . 421—425
திரு. துரை கிருஷ்ணமூர்த்தி .. 425—429
திரு. மு. மாரிமுத்து .. 430—432

7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்— .. 433—437
438—439


---

## தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை.

---

**1985, மார்ச் 15, வெள்ளிக்கிழமை.**

**பங்குனி 2, ரக்தாட்சி—திருவள்ளுவர் ஆண்டு 2016.**

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"அரும்பயன் ஆயும் அறிவினார் சொல்லார்
பெரும்பயன் இல்லாத சொல்".

அருமையான பயன்களை ஆராயவல்ல அறிவை உடைய அறிஞர், மிக்க பயன் இல்லாத சொற்களை ஒருபோதும் சொல்ல மாட்டார்கள்.

### 1. வினாக்கள்—விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

### சைதை தொகுதியில் தனியார் தெருக்களுக்கு அடிப்படை வசதிகள்.

1. (***வினா எண். 218**)—**திரு. சா. துரைசாமி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சைதை தொகுதியில் உள்ள அனைத்துத் தனியார் தெருக்களையும் மாநகராட்சியால் பொது தெருவாக அறிவித்து, அடிப்படை வசதிகள் செய்யும் பணி பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்:** (அ) ஆம்.

(ஆ) 25 சதவீத அபிவிருத்தி கட்டணம் வசூலித்தபின் அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

[1985 மார்ச் 15

திரு. சா. துரைசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகரில் அதிகமான அளவில் தனியார் தெருக்கள் அன்-ஆத்தரைஸ்டு லே அவுட்ஸ் (unauthorised lay-outs) என்று சொல்வார்களே அவைகள் அங்கீகரிக்கப்படாத வகையில் வீடுகள் கட்டப்பட்டு இருக்கின்றன. அதுபோன்ற இடங்களில் சாலை வசதிகள் இல்லாமல் இருப்பதால் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் தனியார் தெருக்களாக இருந்தாலும் சாலை போடப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த அடிப்படையில் மாநகராட்சியே சாலைகளை முதலில் அமைத்து விட்டு, அதற்குப் பிறகு பெட்டர்மெண்ட் டாக்ஸை 3, 4 ஆண்டு களில் தவணை முறையில் வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இத்தகைய தனியார் தெருக்களில் போதுமான பராமரிப்பு இல்லாத காரணத்தால் அந்தப் பகுதி களில் இருக்கின்ற மக்கள் தொல்லைகளுக்கும், துயரங்களுக்கும் ஆளாகிறார்கள் என்பதை எண்ணிப் பார்த்துத்தான் தமிழக முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் இந்தப் புதிய திட்டத்தை உருவாக்கித் தந்து இருக்கிறார்கள். இந்த வகையில் இதை வேகமாக செயல்படுத்திக்கொண்டு இருக்கிறோம். மிக விரைவில் பணி முடிவடையும்.

திரு. சா. துரைசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த 25 சதவீதத் தொகையையும் தவணை முறையில் வசூலிக்க இயலுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : பேரவைத் தலைவர் அவர்களே, அரசு அதை பரிசீலிக்கும்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர், சார், விதி 51 (3)-ன்படி குறுகிய கால கேள்வியிலே ஒரு துணைக் கேள்விக்குமேல் அனுமதிக்கக்கூடாது என்று இருக்கிறது . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது குறுகிய கால கேள்வி அல்ல. ரெகுலர் கேள்வி. கேள்வி நேரத்தில் உறுப்பினர்கள் பாயிண்ட் ஆப் ஆர்டர் எழுப்பக் கூடாது.



1985 மார்ச் 15]

**மேற்கு சாரதி நகர் பகுதியில் சலவைத் துறை கட்டும் பணி.**

2. (*வினா எண். 219)—திரு. சா. துரைசாமி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை மாநகராட்சியால் சைதை மேற்கு சாரதி நகர் பகுதி சலவையாளர்களுக்கு சலவைத்துறை கட்டுகின்ற பணி துவங்குவதில் காலதாமதத்திற்கு காரணம் என்ன ?

(ஆ) நடப்பு நிதியாண்டில் பணி துவங்கப்படுமா ?

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : (அ) சைதை மேற்கு சாரதி நகர் பகுதியில் சலவைத்துறை கட்டுகின்ற பணியானது, மாம்பலம்—கிண்டி வட்டாட்சியருடன் புல கூட்டு தணிக்கை செய்வது நிமித்தம் தேக்கத்திலுள்ளது.

(ஆ) மேற்படி நிலமாற்ற நடவடிக்கை முடிவுற்றவுடன் சலவைத்துறை கட்டும் பணி துவக்கப்படும்.

திரு. சா. துரைசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்கு ஜோன்சு சாலையில் சலவைத் துறை அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் மனு கொடுக்கப் பட்டிருக்கிறது. தனியார்கள் அந்த இடத்தை தருவதாக ஒப்புதல் அளித்து இருக்கிறார்கள். தனியார் அந்த இடத்தை தருவதற்கு ஒப்புதல் அளித்தும் ஏன் அந்த இடத்தை இன்னும் எடுத்துக்கொள்ளவில்லை என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் நான் குறிப் பிட்டேன். வட்டாட்சியருடன் ஒரு ஜாயிண்ட் இன்ஸ்பெக்ஷன் செய்து முடித்ததற்குப் பிறகு அது மேற்கொள்ளப்படும். மேலும் சரோஜா என்ற அந்த அம்மையார் அதை தனக்குச் சொந்தமான இடம் என்றும் அந்த இடத்தை விலைக்குத் தர சம்மதம் தெரிவிக் கிறேன் என்றும் கூறியிருக்கிறார்கள். அந்த ஆட்சேபனை மனு பெற்றிருக்கிறார்கள். ஆகவே அது சம்பந்தமாக முழு விசாரணை முடிந்தவுடன் பணி தொடங்கப்படும்.

திருமதி பா. வளர்மதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, சென்னை நகரத்தில் பல்வேறு பகுதிகளில் சலவைத் தொழிலாளர்கள் வசித்து வருகிறார்கள். அவர்களுக்கு எல்லாம்

மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் சலவை இயந்திரங்களை தவணை முறையில் அளித்ததைப் போல், அவர்களுக்கு வேண்டிய பொருள்களையும் மலிவு விலையில் தருவதற்கு இந்த அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு அதைப் பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடம் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. ஒழுங்குப் பிரச்சனை.

**எதிர்க்கட்சித் தலைவர் வெளியே பத்திரிகைக்கு அளித்த பேட்டி குறித்து.**

**திரு. கு. சுப்பராயன்:** பாயிண்ட் ஆப் ஆர்டர் சார். மதுரையிலே எதிர்க்கட்சித் தலைவர் பத்திரிகையாளர்களுக்கு பேட்டி அளித்தபோது தம்மிடம் பஞ்சாயத்து தேர்தல்கள் நடத்தப்படும் என்று முதலமைச்சர் அவர்கள் தெரிவித்ததாகச் சொல்லியிருக்கிறார்கள். இங்கே சபை நடந்துகொண்டிருக்கும்போது இப்படிப்பட்ட அறிவிப்புகளை இங்கேதான் வெளியிட வேண்டும். சபைக்கு வெளியே.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெளியே பேசியதைப் பற்றி எல்லாம் இங்கே கேட்க முடியாது. ஆகவே, இதிலே எந்த விதமான பாயிண்ட் ஆப் ஆர்டரும் இல்லை.

**திரு. பொ. உத்திராபதி:** தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு சிகிச்சை அளிப்பதற்காக ஆன செலவை அரசாங்கமே ஏற்றுக்கொள்ளும் என்று....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவையிலே நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஒரு பிரச்சனையைப் பற்றித்தான் பாயிண்ட் ஆப் ஆர்டர் எழுப்ப முடியும். இதெல்லாம் பாயிண்ட் ஆப் ஆர்டரில் வராது.



## 3. அறிவிப்பு.

**அமைச்சர்கள் பேரவை நிகழ்ச்சிகளுக்கே முதலிடம் அளித்தல் வேண்டும் எனக் குறிப்புரைத்தல்.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஓர் அறிவிப்பு. அரசு அலுவல் காரணமாக வெளியூர் சுற்றுப்பயணம் போக வேண்டி இருப்பதால் அந்த நாட்களில் பேரவையில் அலுவல்கள் எதையும் நிகழ்ச்சி நிரலில் தங்களுக்குச் சேர்க்க வேண்டாம் என்று கேட்டு மாண்புமிகு அமைச்சர்களிடமிருந்து கடிதங்கள் வந்துள்ளன.

பேரவையின் நிகழ்ச்சிகள் குறித்து முன்னதாகவே பேரவையில் அறிவிக்கப்படுகிறது. மேலும் எந்தெந்த நாட்களில் எந்தெந்த அமைச்சர்களுக்கு வினாக்கள் பேரவையில் வைக்கப்படும் என்பதையும் நிச்சயித்து எல்லா அமைச்சர்களுக்கும் அறிவிக்கப் பட்டுள்ளது.

பேரவை கூடுவது குறைந்த நாட்கள்தான் என்பதாலும் பேரவை நிகழ்ச்சிகளுக்கு முதலிடம் கொடுப்பதுதான் பேரவைக்கு மரியாதை காட்டுவதாகும் என்பதாலும் மாண்புமிகு அமைச்சர்கள் தங்கள் சுற்றுப்பயணங்களைப் பேரவை நிகழ்ச்சிகளுக்குத் தக்கவாறு மாற்றி வைத்துக் கொள்ள வேண்டுமென்றும், நிகழ்ச்சிநிரலில் அவர்களுக்கு எந்தப் பொருளும் சேர்க்க வேண்டாமென்று கேட்பதைத் தவிர்க்க வேண்டுமென்றும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு அமைச்சர்களுக்கு மற்றுமொரு வேண்டுகோள். பேரவைக் கூட்டம் ஆரம்பிக்கும்போதே, வினாக்கள் பட்டியலிலும், நிகழ்ச்சி நிரலிலும் அலுவல்கள் உள்ள மாண்புமிகு அமைச்சர்கள் பேரவைக்கு வருவது சிறப்பாக இருக்கும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

[1985 மார்ச் 15

## கவன ஈர்ப்பு.

### சென்னை சைதைப் பகுதியில் கழிவு நீர் தெருக்களில் தேங்கி நிற்பதன் காரணமாக ஏற்பட்டுள்ள சுகாதாரக் கேடு.

திரு. சா. துரைசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீர் அகற்றும் வாரியத்திற்கு மதிப்பீட்டுத் தொகையில் 25 சதவிகிதம் பணம் செலுத்தினால் வழங்கப்படும் குடிநீர் இணைப்பு மற்றும் கழிவு நீர் அகற்றும் வசதி, கடந்த மூன்று மாதங்களாக நிறுத்தி வைக்கப்பட்டதன் காரணமாக சைதைப் பகுதியில் கழிவு நீர் தெருக்களில் தேங்கி நின்று கொசுத் தொல்லை மற்றும் சுகாதார பாதிப்பு ஏற்படுவது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:—

### அறிக்கை.

சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம், குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று இணைப்புகள் தருவதற்கு திட்ட மதிப்பீட்டில் 25 சதவிகிதத்தை மட்டும் பெற்றுக் கொண்டு வசதிகளை செய்து தருவதில்லை. விண்ணப்பத்தின் பேரில் தனியார் வீடுகளுக்கு குடிநீர் வழங்கும் இணைப்பிற்கும் கழிவு நீர் அகற்றும் வசதிக்கும், திட்ட மதிப்பீட்டு முழுத் தொகை வசூலிப்பதையே வாரியம் வழக்கத்தில் கொண்டுள்ளது. கழிவு நீரகற்று வசதிகள் செய்யப்படாத பகுதிகளில் கழிவு நீர்க் குழிகளில் கழிவு நீர் நிரம்பி வழிவதைத் தடுக்க சென்னைப் பெருநகர் குடிநீர் வாரியம் அவ்வப்போது லாரிகள் மூலம் தேங்கியுள்ள கழிவுநீரை வெளியேற்றுகிறது. வீடுகளில் உள்ள மலக் குழிகளை சுத்தம் செய்ய வீட்டுச் சொந்தக்காரர்கள் குறிப்பிட்ட கட்டணம் செலுத்தியவுடன் மலக் குழிகளிலுள்ள கழிவுகள் லாரிகள் மூலம் சென்னைப் பெருநகர் குடிநீர் வாரியம் அப்புறப்படுத்தி வருகிறது.





மேலும் சென்னைப் பெருநகரில் குடிநீர் வசதி பெறாத இடங்களுக்கு குடிநீர் வசதி செய்து தரும்பொருட்டு அரசு எப்பொழுதும் அளிப்பதுபோன்று பாதி மானியம், பாதி கடன் என்ற அடிப்படையில் 6 ஆவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் ரூ. 175 இலட்சம் அளவில் திட்டம் ஒன்றுக்கு ஒப்பளிப்பு அளித்துள்ளது. இத்திட்டத்தின் கீழ் குடிநீர்க் குழாய்கள் சைதாப்பேட்டை பகுதி உள்ளிட்ட நகரின் பணியளிக்கப்படாத தெருக்களுக்கு அமைக்கப்பட்டு வருகின்றன.

கழிவுநீர் அகற்றும் வசதிகள் இல்லாத பகுதிகளில் பாதாள சாக்கடை அமைப்பது சம்பந்தமாக, சென்னை மாநகராட்சியின் முன்பு பின்பற்றப்பட்ட வழக்கம் இவ்வாரியத்தில் கீழ்க்கண்ட வகையில் தொடர்ந்து பின்பற்றப்பட்டு வருகிறது:—

(அ) பொதுத் தெருக்களில் பாதாள சாக்கடைக் குழாய்கள் கட்டணம் ஏதும் திரட்டாமல் அமைக்கப்பட்டு வருகிறது.

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட/ஒப்பளிப்பு அளிக்கப்பட்ட மனை கட்டுப் பிரிவிலுள்ள சாலைகளிலும், மற்ற தனியார் தெருக்களிலும், பாதாள சாக்கடைகள் தொழில் நுட்ப ரீதியில் சாத்தியக் கூறுகள் இருக்குமாயின், பயனாளர்களிடமிருந்து முழுச் செலவையும் திரட்டிய பின்னரே அமைக்கப் பட்டிருக்கின்றன.

மேற்குறிப்பிட்டுள்ள (ஆ) வகையில் சம்பந்தப்பட்ட வழக்குகளில் சென்னை மாநகராட்சி, பாதாள சாக்கடை பதிப்பதற்காக, மேம்பாட்டுத் தொகையை அவர்கள் எந்தெந்த தெருக்களுக்கு திரட்டியிருக்கிறார்களோ, அந்த சில தெருக்களுக்கு, முழுச் செலவையும் செலுத்துவது வழக்கம்.

பொது மக்களிடமிருந்து குடிநீர் கழிவுநீர் அகற்று இணைப்புகளுக்கு வாரியச் செலவிலேயே செய்ய மிகுந்த எண்ணிக்கையில் முறையீடுகள் இருந்ததால், சட்டக் கருத்து பெறப்பட்டது. சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் அங்கீகரிக்கப்படாத மனைக்கட்டு பிரிவுகளின் வளர்ச்சியையும், அங்கீகரிக்கப்படாத கட்டிடங்கள் கட்டுவதையும் தவிர்க்க விரும்புகிறது. வாரியம் நகரில் பணியளிக்கப்படாத பகுதிகளில் குடிநீர்க் குழாய்கள் மற்றும் பாதாள சாக்கடைகள் பதிப்பது சம்பந்தமாக கீழ்க்கண்டவாறு சமீபத்தில் முடிவெடுத்தது:—

[டாக்டர் கா. காளிமுத்து] [1985 மார்ச் 15

**பணியளிக்கப்படாத பகுதிகளில் குடிநீர் குழாய்கள் பதிப்பதற்குரிய வாரியக் கொள்கை.**

(1) கட்டிடங்கள் கட்டுவதற்கு சென்னை மாநகராட்சி/உள்ளாட்சி மன்றம் ஆகியவைகளால் ஒப்பளிப்புள்ள வரைபடம் உள்ள தெருக்கள்/சாலைகள், அங்கீகரிக்கப்பட்ட தெருக்கள் என்று எடுத்துக் கொள்ளலாம். இப்படிப்பட்ட தெருக்களில் மட்டும், அரசால் ஒப்பளிப்பு அளிக்கப்பட்ட உதவி மானியத் திட்டத்தில் குடிநீர் குழாய்கள் பதிக்கலாம். இந்த வேலைகள் அந்த தெருக்களில் குடியிருப்பவர்களின் முறையீடுகளின் பேரில் எடுத்துக் கொள்ளப்படும்.

(2) வேறு எந்த தெருக்களிலும் பயனாளர்களிடமிருந்து முழுத் தொகையை முன்பே பெறப்பட்ட பின்னர் வாரியம் குறிப்பிடுகின்ற தகுதியுள்ள அதிகாரியின் ஒப்புதல் பெற்று குடிநீர் குழாய்கள் பதிக்கலாம்.

**பணியளிக்கப்படாத பகுதிகளில் கழிவு நீர்க் குழாய்கள் பதிப்பதற்குரிய வாரியக் கொள்கை.**

(1) பொதுத் தெருக்களில் படிப்படியான திட்டத்தின் அடிப்படையில் வாரியச் செலவில் கழிவுநீர்க் குழாய்கள் பதிக்கலாம்.

(2) தனியார் தெருக்களில், கழிவுநீர்க் குழாய்கள், மனைக் கட்டுப் பிரிவு அங்கீகரிக்கப்பட்டதாயிருக்கும் என்ற நிலைமையில் பயன்படுத்துவோரின் செலவில் பதிக்கலாம்.

(3) அங்கீகரிக்கப்படாத தனியார் தெருக்களில் கழிவுநீர்க் குழாய்கள் பதிக்க வேண்டிய அவசியமில்லை.

எப்படியிருப்பினும், கழிவுநீர்க் குழாய்கள் பற்றிய வாரியக் கொள்கை முடிவு, நகரின் கழிவுநீர்க் குழாய்கள் பதிக்கப்படாத பகுதிகளுக்கு கழிவுநீர்க் குழாய்கள் பதிப்பது பற்றி, குடிநீர் குழாய்கள் பதிப்பதில் இருப்பது போன்று ஒரு சீரான கொள்கையை தோற்றுவிப்பதற்காக மறு பரிசீலனையில் இருக்கிறது.



1985 மார்ச் 15] [டாக்டர் கா. காளிமுத்து]

சென்னை மாநகரில் கொசுத் தொல்லையை ஒழிக்க சென்னை மாநகராட்சி தீவிர நடவடிக்கை எடுத்து வருகிறது.

**திரு. சா. துரைசாமி**: தலைவர் அவர்களே, சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீர் அகற்றும் வாரியம் சென்னை மாநகரில் அங்கீகரிக்கப்பட்ட, அங்கீகரிக்கப்படாத என்று இரண்டு, மூன்று பிரிவுகளாக பிரித்து தங்களுடைய பணிகளைச் செய்து கொண்டு இருக்கிறார்கள். அதிலே குறிப்பாக மாநகராட்சியில் 25 சதவிதம் கட்டினால் அடிப்படை வசதிகளைச் செய்யலாம் என்று தான் அந்தப் பணியை மாநகராட்சி மேற்கொண்டு நடைமுறைப்படுத்தி வந்தது. அந்த அடிப்படையில் பெருநகர் குடிநீர் வழங்கல் வாரியம் இப்போது அங்கீகரிக்கப்படாத தெருக்களுக்கு 10, 15, 7 ஆண்டு என்று சொல்லி ஆரம்ப காலத்தில் லே அவுட்ஸ் இல்லாமல் கட்டப்பட்ட வீடுகளுக்கு இணைப்பு தர வேண்டும் என்று அதன் உரிமையாளர்கள் விண்ணப்பித்து இருக்கிறார்கள். அவர்கள் முழுத் தொகையையும் நாங்கள் கட்டுகிறோம் என்று சொல்கிறார்கள். அப்படி சொல்கிறவர்களுடைய இல்லங்களுக்கு இந்த வாரியம் இணைப்பு கொடுக்க முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து**: தலைவர் அவர்களே, முழுத் தொகையையும் கட்டினால் இணைப்புக் கொடுப்பதில் எந்தவிதமான சிக்கலும் இல்லை.

**திரு. சா. துரைசாமி**: தலைவர் அவர்களே, எம்.எம்.டி.ஏ. என்ற அந்த அமைப்பு அங்கீகரிக்கப்படாத தனியார் தெருக்களுக்கு இதுபோல் முழுத் தொகையையும் கட்டினால் கூட உரிமம் வழங்கக்கூடாது என்ற தடையை விதித்து இருக்கிறது. அதை மறு பரிசீலனை செய்ய அரசு முன்வருமா?

(முற்பகல் 9-10)

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து**: தலைவரவர்களே, மாநகராட்சியோ அல்லது எம்.எம்.டி.ஏ. யோ ஒப்புதல் வழங்கிய தற்குப் பிறகுதான் அத்தகைய இணைப்புகளைக் கொடுப்பதற்கு இந்த வாரியத்தால் முடியும்.

## 5. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

### (அ) ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு 1985.

**திரு. அ. ரகுமான்கான்:** பேரவைத் தலைவரவர்களே, நான் ஒரு பிரிவிலேஜ் பிரச்சினையை எழுப்ப விரும்புகிறேன். சட்டமன்றத்தினுடைய விதிகளில் 215-வது விதியின்கீழ் நோட்டீஸ் கொடுத்தும் பிரிவிலேஜ் கொடுக்கலாம்; அல்லது சபையின் அலுவல் குறித்து உரிமை மீறல் இருந்தால் உடனே தங்களுடைய இசைவினைப்பெற்றுக் கொண்டுவரலாம் என்று விதி இருக்கிறது. நம்முடைய அமைச்சரவர்கள் இங்கே ஒரு சட்டத்தைக் கொண்டு வரவிருக்கிறார்கள். எனவே, இது ஒரு முக்கியமான உரிமைப் பிரச்சினை என்பதால், நாங்கள் அருள் கூர்ந்து இதற்கு அனுமதி அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். உங்களுக்கே தெரியும், பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன்களின் தனி அதிகாரிகளின் பதவிக் காலத்தை நீட்டிப்பதற்காக இந்த அவசரச் சட்டத்தை. . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவை நடந்துகொண்டிருக்கும்பொழுது ஏதாவது உரிமை மீறல் நிகழ்ந்தால் . . . . .

**திரு. அ. ரகுமான்கான்:** நான் பில்லை எதிர்த்துப் பேசுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் தீர்மானத்தை மொழிந்தபிறகு பேசலாம்.

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ்நாடு 1985 ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்".

**திரு. அ. ரகுமான்கான்:** பேரவைத் தலைவரவர்களே, சபையின் நடவடிக்கையை ஒட்டித்தான் உரிமை மீறல் பற்றிச் சொல்கிறேன். இப்பொழுது அமைச்சரவர்கள் இந்தச் சட்ட





முன்வடிவை இங்கே இன்ட்ரொட்யூஸ் செய்து விட்டார்கள். எனவே, அது சம்பந்தமாகத்தான் உரிமை மீறல் எழுகின்றது. அதற்குத் தங்களுடைய தீர்ப்பைக் கோருகிறேன். அதற்குமுன் அதற்கான விளக்கத்தைச் சொல்லி விடுகிறேன். அமைச்சரவர்கள் பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன்களினுடைய தனி அதிகாரிகளினுடைய பதவிக் காலத்தை நீட்டிப்பதற்கான இந்தச் சட்ட முன்வடிவினை இங்கே இன்ட்ரொட்யூஸ் செய்திருக்கிறார்கள்.

ஆனால் நான் ஒன்றைத் தெரிவித்துக்கொள்கிறேன், இந்த அவையிலே ஒரு வாக்குறுதி தரப்பட்டாலே அந்த வாக்குறுதி எந்தக் காரணத்தைக்கொண்டும் மீறப்படக் கூடாது என்பது உங்களுக்குத் தெரியும். அஷ்யூரன்ஸ் கமிட்டி என்று வைத்திருக்கிறோம். அதன் நோக்கம் என்ன? அமைச்சராக இருப்பவர்கள் இந்த அரசாங்கத்தின் சார்பாக வாக்குறுதி தந்தால் அது மீறப்படக்கூடாது. எனவே, பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன் தேர்தல்கள் சம்பந்தமாக என்ன வாக்குறுதி கொடுக்கப்பட்டிருக்கிறது என்றால் 1979 ஆம் ஆண்டு அப்பொழுது அமைச்சராக இருந்த மாண்புமிகு திரு. காளிமுத்து அவர்கள் ஒரு வாக்குறுதியைக் கொடுத்திருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது பிரிவிலேஜில் வராது.

**திரு. அ. ரகுமான்கான்:** இதுபற்றிய தங்கள் தீர்ப்பைக் கடைசியாகச் சொல்லும்படி கேட்டுக்கொள்கிறேன். அமைச்சர் காளிமுத்து அவர்கள் இங்கே பேசுகின்றபொழுது சொன்னார்கள். பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன்களுக்கான தேர்தல்கள் அடுத்து எப்பொழுது நடைபெறும் என்று கேட்டபொழுது, 1979 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 28 ஆம் தேதியன்று—அன்றைக்கு அமைச்சராக இருந்த திரு. காளிமுத்து அவர்கள் பேசியது சபைக் குறிப்பில் இருக்கிறது. புரொசீடிங்ஸை வேண்டுமானாலும் நான் காட்டுகின்றேன். "அடுத்த முறை சட்டமன்றம் கூடுகிறபோது உங்களைச் சந்திக்கின்ற நேரத்திலே உங்களுக்குக் கொடுத்த உறுதிப்படி நான் தேர்தல்களை நடத்தி விட்டேன்" என்று தெரிவிக்கின்ற வகையில் இருப்பேன் என்று சொல்லிக்கொண்டு இந்தச் சட்டமுன்வடிவுகளை நிறைவேற்றித்

[திரு. அ. ரகுமான்கான்] [1985 மார்ச் 15

தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள். அப்பொழுது திரு. உமாநாத் அவர்கள் கேட்கிறார்கள், "தலைவர் அவர்களே, ஐந்து மாத காலம் என்று நீட்டிப்புக் கேட்டு இருக்கிறீர்கள். அந்த பீரியடினுடைய கடைசி காலம் மழைக் காலம். ஆகவே, டெபனிட்டாக மினிஸ்டர் அஷ்யூர் பண்ணுவாரா? அப்பொழுது மழைகாலம் என்று சொல்லி மேலும் இன்னொரு ஐந்து மாதம் கேட்பார்களே; ஆகவே அவர்கள் இந்த ஐந்து மாதத்தில் நடத்தப்படுமென்று அஷ்யூர் பண்ணுவார்களா?" என்று கேட்கிறார்கள். அமைச்சரவர்கள் சொல்கிறார்கள், அஷ்யூர் செய்யும் விதத்தில் சொல்கிறார்கள், "தலைவர் அவர்களே, அடாது மழை பெய்தாலும் விடாது தேர்தல் நடத்தப் பெறும்" என்று. இந்தத் தேர்தல் நடைபெறும் என்று அமைச்சரவர்கள் 1979 ஆம் ஆண்டிலே வாக்குறுதி கொடுத்திருக்கிறார்கள்.

இரண்டாவதாக, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 21—4—1983 அன்று இந்தச் சட்டசபையிலே சொல்லியிருக்கிறார்கள், "ஊராட்சி, நகராட்சி, மாநகராட்சித் தேர்தல்கள் வருகிற ஜூலை மாதத்தில் கட்டாயம் நடத்தப்படும்" என்று. இவ்வாறு 1983 ஆம் ஆண்டு சொல்லியிருக்கிறார். பெண்கள், அரிசன மக்கள் மற்றும் மலைஜாதியினருக்கு என்று இட ஒதுக்கீடு செய்யப்படுவதை எதிர்த்து கோர்ட்டிலே ஏதேனும் வழக்கு இருந்தால், யாரேனும் தடையை வாங்கிவிட்டால் இது பற்றி விவரமாக மக்களிடத்திலே நிலைமையை விளக்கிச் சொல்லிவிட்டு, முன்பு இருந்த சட்டத்தினுடைய அடிப்படையிலேயே தேர்தல் நடத்தப்படும் என்று வாக்குறுதி தரப்பட்டிருக்கின்றது. ஆனால் இந்த வாக்குறுதியை நிறைவேற்றுகிற விதத்தில் இல்லாமல் மீண்டும் தனி அதிகாரிகளுடைய பதவிக் காலத்தை பஞ்சாயத்து யூனியன்களில் நீட்டித்துக் கொண்டு போவது, கோர்ட்டிலே வழக்கு இருக்கின்றது, தடை இருக்கின்றது என்றெல்லாம் சமாதானம் சொல்வது முதலமைச்சர் அவர்கள் சட்டமன்றத்திலே கொடுத்த வாக்குறுதியையும், அமைச்சர் திரு. காளிமுத்து அவர்கள் கொடுத்த வாக்குறுதியையும் மீறுவதாகும். அப்படி என்றால் வாக்குறுதி அளிப்பதன் பயன் என்ன? கச்சத்தீவைப் பற்றி



1985 மார்ச் 15] [திரு. அ. ரகுமான்கான்]

வாக்குறுதி, மொழிப் பிரச்சினை பற்றி நேரு அவர்கள் கொடுத்த வாக்குறுதி, என்று வாக்குறுதிகளை எல்லாம் கொடுத்தபின் அதை நிறைவேற்றவில்லை என்றால் என்ன பயன்? பழைய சட்டத்தில்,

One-fourth of the members are to be elected from the scheduled castes and ladies—

என்று இருக்கிறது. ஆக இட ஒதுக்கீட்டைப் பொறுத்த வரையில் பழைய சட்டத்தில் இடம் இருக்கின்றது. தனி அதிகாரிகளின் பதவி நீட்டிப்பினைப் பொறுத்தவரையில் உயர் நீதிமன்றத்தில் இட ஒதுக்கீடு பற்றி வழக்கு இருக்கின்றது என்று சொல்வதும், தடை இருக்கின்றது என்று சொல்வதும் சரியான காரியமல்ல. சபையிலே கொடுக்கப்பட்ட உறுதிமொழிகளை இப்படித் தொடர்ந்து மீறிக்கொண்டு இருப்பது சரியாக இருக்காது. It is a contempt of the house. It is a breach of privilege of the house. எனவே அமைச்சர் அவர்கள்மீது நான் உரிமைப் பிரச்சினையாகக் கொண்டுவருகிறேன். எனவே தாங்கள் அதற்குத் தீர்ப்பு வழங்கவேண்டும். இதன் நோக்கம் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்பதுதான்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: அஷ்யூரன்ஸ் கொடுக்கிறார்கள் அமைச்சர்கள்.

Non-implementation of an assurance will not amount to breach of privilege. That is separate.

Thiru A. RAHMAN KHAN : What is the purpose of constituting a separate Assurance Committee ?

Mr. SPEAKER : Assurance is different. I am strictly speaking according to Rules. If assurance is not implemented, it is not a breach of privilege.

Thiru A. RAHMANKHAN : Then what is the purpose of constituting an Assurance Committee ?

Mr. SPEAKER : I will read the relevant portion from "Kaul and Shakdhar" page 237. Non-implementation of an assurance given by a Minister on the floor of the House is neither a breach of privilege nor contempt of the House.

[1985 மார்ச் 15

**திரு. அ. ரகுமான்கான் :** தங்களது தீர்ப்புக்குப் பிறகு பேசுவது முறையல்ல. என்றாலும் ஒரு சிறு விளக்கத்தைப் பெற விரும்புகிறேன். இந்த மன்றத்திலே கொடுக்கப்பட்ட வாக்குறுதிகள் மீறப்பட்டால் what is the purpose of constituting a Committee?

Mr. SPEAKER : You must pull up the Committee Members.

Thiru A. RAHMAN KHAN : My submission is, we are the Members of the House here. Ministers are giving every day assurances on the floor of the House. If assurances are not implemented what is the use then?

Mr. SPEAKER : In your case there is no breach of privilege involved.

Thiru A. RAHMAN KHAN : What is the use of constituting an Assurance Committee when Ministers are flouting the assurance given on the floor of the House?

**திரு. மா. சின்னராசு :** பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் அளித்த தீர்ப்பைத் தொடர்ந்து நான் இதைக் கூறுவதற்கு விரும்பவில்லை. ஆனால் சென்ற முறை இருந்த அவைக் கூட்டத்திலே பேசப்பட்ட ஒரு பொருள் குறித்து பிரிவிலேஜ் மோஷன் கொண்டுவந்து இந்தத் தொடரிலே நாம் பேச முடியுமா என்று நான் கேட்க விரும்புகிறேன். பேரவைத் தலைவரின் தீர்ப்பு இதுகுறித்து வேண்டும். ஆகவே மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் பேசிய அனைத்தையும் அவைக் குறிப்பிலே இருந்து நீக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 9-20)

**திரு. கு. சுப்பராயன் :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவை மொழிகிற கட்டத்திலேயே நான் கடுமையாக ஆட்சேபிக்கிறேன். ஏனென்றால், நடத்தப்படுகின்ற கவர்னர் உரையிலே, 'நிர்வாகத் திறனை உயர்த்தும் நோக்குடனும், நிர்வாகத்தை மக்களுக்கு நெருக்கமாகக் கொண்டு வரும் நோக்குடனும்' என்று தான் அறிவித்திருக்கிறார்கள். ஆனால், இங்கே அரசின்



1985 மார்ச் 15] [திரு. கு. சுப்பராயன்]

சார்பாக மொழியப்பட்டிருக்கிற சட்டம், வழங்கியிருக்கிற சலுகைகளை பயன்படுத்தியோ, சட்டத்தால் வழங்கப்பட்டிருக்கிற மக்களின் உரிமைகளை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு நசுக்குகிறது என்பதால் அதை நான் ஆட்சேபிக்கிறேன். மேலும் இந்த மொழிவின் மூலம் மக்கள் சட்டபூர்வமாகத் தங்களை நிர்வகிக்கக்கூடிய அமைப்பைத் தேர்ந்தெடுக்க முடியாமல் நிறுத்துவதை செய்வதாகத்தான் அமைகிறது. அரசே, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தொடர்ந்து உள்ளாட்சித் தேர்தலை நடத்தாமல் தள்ளிவைப்பதும், தனி அதிகாரிகளை நியமித்துக் கொண்டு செல்வதும், ஜனநாயகத்தைச் சித்திரவதை செய்வதாகும். ஆகவே, இதை உடனடியாக வாபஸ் பெற வேண்டுமென்று நான் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக வற்புறுத்துகிறேன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன் :** பேரவைத் தலைவர் அவர்களே, 1977-க்குப் பிறகு தமிழகத்திலே பஞ்சாயத்துத் தேர்தல் நடத்தப்படவில்லை. அதே நேரத்திலே பொதுத் தேர்தல்கள் நடத்தப்பட்டிருக்கின்றன. மாநிலச் சட்ட மன்றங்களுக்குத் தேர்தல் நடத்தப்பட்டிருக்கிறது. சட்ட மன்றங்களுக்கு மட்டுமல்லாமல், நாடாளுமன்றத்திற்கும் தேர்தல் நடத்தப்பட்டிருக்கிறது. அதுபோல், பஞ்சாயத்துக்களுக்குத் தேர்தல் நடத்துவதும் ஜனநாயகத்தினுடைய அஸ்திவாரம் என்பதை நாம் அனைவரும் அறிவோம். இன்று பஞ்சாயத்து உறுப்பினர்கள் செய்ய வேண்டிய வேலையை, சட்ட மன்ற உறுப்பினர்கள் செய்ய வேண்டிய ஒரு அசாதாரணமான நிலை ஏற்பட்டிருக்கிறது. இதன் காரணமாக, பஞ்சாயத்துக்களிலே பொது மராமத்து வேலைகள் சரியான முறையில் பல இடங்களில் நடக்கவில்லை. அதைக் காலாகாலத்திலே கண்காணிப்பதற்கான வாய்ப்புகள் இன்றைக்குச் சட்ட மன்ற உறுப்பினர்களுக்குக் குறைவாக இருக்கிறது. இன்றைக்குப் பஞ்சாயத்துக்களைப் பொறுத்தவரையிலும் பல இடங்களிலே வாட்டர் சப்ளை ஸ்கீம் நிறைவேற்றப்பட்டிருந்தாலும்கூட சரியான முறையில் பராமரிக்கப்பட்டு தண்ணீர் கொடுக்கப்படாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. நேற்று முன்தினமே நான் குறிப்பிட்ட கேஸைப் பற்றிச் சுட்டிக் காட்டினேன். அப்படிப்பட்ட நிலை

[திரு. ஜே. ஹேமச்சந்திரன்] [1985 மார்ச் 15

இன்று தமிழகத்தில் நீடித்துக் கொண்டிருப்பதற்குக் காரணம் இப்படிப் பஞ்சாயத்துத் தேர்தல்கள் நடத்தப்படாதது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

பஞ்சாயத்துத் தேர்தல்கள் நடத்தப்பட வேண்டுமென்ற சூழ்நிலை இங்கே சுட்டிக்காட்டப்பட்ட நேரத்தில், ஆளும் கட்சியைச் சேர்ந்த சில உறுப்பினர்கள், அமைச்சர்கள் கூட்டிய கூட்டத்திலே எதிர்க் கட்சியைச் சேர்ந்தவர்கள் வராததன் காரணமாகத்தான் இன்று தேர்தல் நடத்த முடியாத நிலைமை ஏற்பட்டது என்று சொன்னார்கள். அன்று எதிர்க் கட்சியைச் சேர்ந்தவர்கள் அந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ளாமல் இருப்பதற்குத் தெளிவான காரணத்தைச் சுட்டிக்காட்டினார்கள். அரசே ஒரு தேதியை நிர்ணயித்து தேர்தல் நடத்துவதிலே எங்களுக்கு ஆட்சேபணை இல்லை. ஆகவே, நாங்கள் அந்தக் கூட்டத்திற்கு வர வேண்டியதில்லை. ஆகவே, அரசே ஒரு நாள் குறிப்பிட்டுத் தேர்தல் நடத்த வேண்டுமென்று சொன்னார்கள். அப்படிச் சொல்லிய பிறகும் தேர்தல் நடத்தாமல் இருப்பது சரியல்ல. ஆகவே, அவசரச் சட்டம் பிறப்பித்து, அதை அங்கீகரிப்பதற்கான சட்டம் கொண்டு வந்திருப்பது சரியல்ல, நியாயம் அல்ல. ஏற்கனவே, அதில் சொல்லப்பட்டிருக்கிற காரணம் உயர் நீதிமன்றத்திலே வழக்கு இருந்து கொண்டிருக்கிறது. உயர் நீதிமன்றம் தடை இல்லை என்று நீக்கியிருக்கிற சூழ்நிலையிலே இந்தத் தேர்தலை விரைவாக நடத்துவதற்கு எந்த வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டுமோ அந்த வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூட இப்பொழுது அவையில் இருப்பதன் காரணமாக—அவர்கள் வெளியே சொன்னதாக இன்றைக்குப் பத்திரிகையிலே வந்திருக்கிறது. விரைவில் தேர்தல் நடத்தப்படும் என்று—முதலமைச்சரே அறிவித்திருப்பதன் காரணமாக, இந்தச் சட்டத்தை இங்கே பிரேரேபிப்பது சரியல்ல. அதை வாபஸ் பெற்று, தேர்தலை நடத்துவதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அமைச்சர்களும் அரசும் முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



1985 மார்ச் 15]

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜனநாயகத்தின் மீது மற்றவர்கள் கொண்டிருக்கிற அதே நம்பிக்கை மட்டுமல்ல, இன்னும் முழு அளவு நம்பிக்கையை நம்முடைய முதல்வர் புரட்சித் தலைவர் தலைமையில் இருக்கிற இந்த அமைச்சரவையும் இந்த அவையும் வைத்திருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர் ஜனநாயகத்தைச் சித்திரவதை செய்து கொண்டிருப்பதாகச் சொன்னார்கள். ஜனநாயகத்தைச் சித்திரவதை செய்பவர்களாக இருந்தால் நிச்சயமாக நடந்து முடிந்த தேர்தல்களில் இவ்வளவு பெரிய வெற்றியை மக்கள் எங்களுக்குத் தந்திருக்க மாட்டார்கள் என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். ஆகவே, யார் ஜனநாயகத்தைச் சித்திரவதை செய்கிறார்கள் என்பதை மக்கள் உணர்ந்திருக்கிறார்கள். ஜனநாயகத்தை முறைப்படி செயல்படுத்துவதற்காகத்தான் இந்தச் சட்டத்தையே நான் கொண்டு வந்திருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

"தமிழ்நாடு 1985 ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்: இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

[1985 மார்ச் 15

## (ஆ) ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு 1985

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ்நாடு 1985 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

திரு. ப. பொன்னுரங்கம்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவை அறிமுக நிலையிலேயே நான் எதிர்க்கிறேன். காரணம், இது ஜனநாயக விரோதமான சட்டம். மக்களுக்கு வழங்கப்பட்டிருக்கிற உரிமைகளை நாம் பறித்துக் கொண்டேயிருக்கிறோம். தொடர்ச்சியாக ஒவ்வொன்றுக்கும் வேறு வேறு காரணம் சொல்லி வந்தோம். நேற்று பேசியபோது ஸ்டேட்டைப் பற்றிப் பேசினோம். ஸ்டே, கோர்ட்டில் ஸ்டே இருக்கிறது, ஆகவே ஸ்பெஷல் ஆபீசர்கள் நியமித்தல் என்கிறார்கள் மெயின் ரீஸன் அதுதான். ஸ்டே எப்போது கொடுத்தார்கள்? 23—3—1984-ல். அந்த ஸ்டேயை வெக்கேட் செய்ய சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். அந்த ஸ்டேயை நாம் வெக்கேட் செய்து விட்டோம், முதல் அமைச்சர் அவர்களை மதிப்பதாக இருந்தால் முதல் அமைச்சர் அவர்கள் மதித்து அந்த வாக்குறுதியை தந்தார்கள், இந்த நகராட்சித் தேர்தல்கள் அனைத்தும் நடைபெறும் என்று. அதை மீறி யாரோ கோர்ட்டுக்குப் போனார்கள். கோர்ட்டுக்குப் போன காரணத்தைக் காட்டி எக்ஸ்டென்ஷன் வாங்கினார்கள். ஒரு சிறிய திருத்தம் போதும். முதல் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள் அல்லவா? அவர்கள் வார்த்தைக்குக் கூட மதிப்பு கொடுக்கக் கூடாதா? இந்தச் சட்டத்தைக் கொண்டுவரும்போது அவர்கள் என்ன சொன்னார்கள்? யாராவது கோர்ட்டுக்குப் போனால் ரிசர்வேஷனையொட்டி, பெண்களுக்கு அல்லது மலை ஜாதியினருக்கு அல்லது ஆதி திராவிட மக்களுக்கு என்று போவார்களானால், முந்தைய நிலையிலேயே தேர்தல்கள்



நடைபெறும் என்று அழகாகச் சொன்னார்கள். முந்தைய நிலையில் நடக்கும் என்று ஒரு திருத்தமாக இந்த ஆர்டினன்ஸோ அல்லது இந்த பில்லோ வந்திருந்தால், முதல் அமைச்சர் அவர்களுக்கு மரியாதை கொடுப்பதாக அர்த்தம். ஆக இந்த மசோதா முதல் அமைச்சர் அவர்களுக்கு மரியாதை தரமாட்டேன் என்கிறது. அதுமட்டுமல்ல, (மணியடிக்கப் பெற்றது.) மற்றவர்கள் பேசும்போது ரொம்ப நேரம் பேச விடுகிறீர்கள். மற்றவர்களுக்கு ஒரு நீதி எனக்கு ஒரு நீதியா, சொல்லுங்கள் பார்ப்போம்.

காந்தியார் அவர்கள் என்ன சொன்னார்கள்? அவர்கள் அடிக்கடி கூறியது என்ன? ராமராஜ்யம் என்றால் எது? உண்மையான ராமராஜ்யம் என்றால் கிராம ராஜ்யம்தான் ராமராஜ்யம் என்று சொன்னார்கள். நிர்வாகப் பிரச்னைகள் கூட வெளியே பேசப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முதன் முதலாக உங்களால் தான் எக்ஸ்பஞ்ச் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. எதையும் எக்ஸ்பஞ்ச் பண்ணக் கூடாது என்று முடிவு எடுத்திருந்தேன். நான் எக்ஸ்பஞ்ச் பண்ணக் கூடாது என்றால் நீங்கள் எல்லாம் ரெஸ்ட்ரெயின்டாகப் பேச வேண்டும். தற்போது உறுப்பினர் குறிப்பிட்ட வாசகங்கள் நீக்கப்படுகின்றன.

திரு. ப. பொன்னுரங்கம்: கிராம மக்களுக்கு பல வசதிகளைச் செய்கிறீர்கள். முதல் அமைச்சர் அவர்கள் செய்கிறார்கள். கிராமங்களை நோக்கமாகக் கொண்டு சத்துணவுத் திட்டம், உடைகள் மற்ற விவகாரங்கள் எல்லாம் செய்கிறார்கள். நான் இல்லை என்று மறுக்கவில்லை. ஆனால் அதே நேரத்தில் அவர்களுக்கு தரப்படுகிற உரிமை, வாக்களிக்கிற உரிமையை அந்த உரிமையை மட்டும் தொடர்ச்சியாக பறிப்பானேன் என்று நான் கேட்க விரும்புகிறேன். ஆக இதுபோன்ற குறைகள் எல்லாம் இருக்கின்ற காரணத்தினால், இந்தத் திருத்தத்தோடு முதல் அமைச்சர் அவர்கள் உறுதியை, முதல் அமைச்சர்

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

(திரு. ப. பொன்னுரங்கம்) [1985 மார்ச் 15

அவர்கள் பேசியதை மதித்து திருத்தத்தோடு வந்திருக்குமானால் வரவேற்றிருப்பேன். அதற்கு மாறாக வந்திருக்கிற காரணத்தினால் நான் இதை எதிர்க்க வேண்டிய துர்பாக்கிய கரமான நிலைக்கு ஆளாகினேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. பொ. உத்திராபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது அவைமுன் கொண்டு வந்திருக்கக் கூடிய மசோதாவில் ஊராட்சிகளுக்கெல்லாம் தனி அதிகாரிகளை மீண்டும் நியமிக்க வேண்டும் என்று கொண்டு வந்திருக்கிறார்கள். ஊராட்சிகள்தான் அடிப்படையில் மக்களுடைய பிரச்னைகளை அன்றாடம் கவனிக்கக்கூடியதொரு அமைப்பாகும். ஆனால் இந்த அமைப்பில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இல்லாததால் சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு வரக்கூடிய மனுக்களை எல்லாம் பார்த்தால் குடிதண்ணீர் இல்லை, ரோடு இல்லை என்று இப்படித்தான் ஒவ்வொரு சட்ட மன்ற உறுப்பினருக்கும் கடிதங்கள் அல்லது மனுக்கள் வந்து குவிந்து கொண்டிருக்கின்றன. நடந்து முடிந்த சட்ட மன்றத் தேர்தலில் கூட அனேகமாக ஒரு சில தொகுதிகள் தவிர, பெரும்பாலான தொகுதிகளில் பெரும்பாலான மக்கள் நாங்கள் வாக்களிக்க மாட்டோம், இந்தத் தேர்தலை நாங்கள் புறக்கணிப்போம் என்று இலட்சக்கணக்கான நோட்டீஸ்களைப் போட்டார்கள். அது அனேகமாக எல்லோருக்கும் தெரியும். ஏன் அப்படி நோட்டீஸ்கள் போட்டார்கள்? நடக்க சரியான பாதைகள் இல்லை, கைப் பம்புகள் கெட்டுப் போயிருக்கின்றன.

(முற்பகல் 9-10)

வெற்றி பெற்று, நன்றி சொல்வதற்காக தொகுதிக்குச் செல்லுகிறபோது, அங்குள்ள கை பம்பு இன்னும் அப்படியே தான் நிற்கிறது. ஊராட்சி மன்ற ஆணையரை அழைத்துக் கொண்டு போய் காண்பித்தோம். இருந்தும், இன்றைக்கும் குடிக்க தண்ணீர் இல்லை. அங்குள்ள பல்புகல் பல மாதங்களாக எரியாமல் இருக்கின்றன. இதற்கெல்லாம் காரணம், அங்கே வார்டு மெம்பர் கிடையாது; ஊராட்சித் தலைவர் கிடையாது;



1985 மார்ச் 15] [திரு. பொ. உத்திராபதி]

மக்களுடைய குறைகளைச் சொல்வதற்கு அங்கே பொறுப்பான பிரதிநிதி கிடையாது. மக்களுக்கு ஏற்படக்கூடிய முக்கியமான பிரச்னைகள், அதாவது சாலை போக்குவரத்து, குடிதண்ணீர், மின்சாரம். . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இவைகளைப் பற்றி டிமாண்டிலே பேசலாம்; இப்போது எதிர்க்கிறேன் என்ற வார்த்தையை மட்டும் சொல்லுங்கள், போதும்.

**திரு. பொ. உத்திராபதி:** இப்படிப்பட்ட நன்மைகள் எல்லாம் கிடைக்காமல், இந்த தேர்தல் நடந்த பிறகும் நிலைமை நீடித்துக் கொண்டு வருகிறது. முதலமைச்சர் அவர்கள் இங்கே இருப்பதால், அவர்களைக் கலந்து கொண்டு, விரைவிலே இந்த ஊராட்சிகள் தேர்தலை நடத்துவதற்கு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அப்படியில்லாமல், இப்படி தனி அதிகாரிகளின் பதவிக் காலத்தை நீடித்துக் கொண்டே போவதை நான் கண்டித்து, உடனடியாக தேர்தலை அறிவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு அமர்கிறேன்.

**திரு. கோ. வீரய்யன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் ஆரம்பத்திலேயே நான் எதிர்க்கிறேன். காரணம், 1970 ஆம் ஆண்டு ஜூன் மாதத்திலே தமிழகத்திலே ஊராட்சிகள் தேர்தல் நடைபெற்றது. அதற்குப் பிறகு ஏறத்தாழ 16 ஆண்டுகள் கடந்துவிட்டது. அந்தத் தேர்தல் நடந்த 5 ஆண்டுகள் தவிர. எனவே, கடந்த 9, 10 ஆண்டு காலத்திலே ஊராட்சி மன்றங்கள் தனி அதிகாரிகளின் கீழ் நடந்து வருவதால், கிட்டத்தட்ட கிராமங்கள் முழுவதும் சீரழிந்த நிலைமையிலே இருக்கின்றன. இந்தத் தனி அதிகாரிகளைக் கொண்டு வருவது என்பது ஒரு முறை அல்ல; பல முறை இந்த அவையிலே சட்ட முன்வடிவு கொண்டு வரப்பட்டு, நிறைவேற்றப்பட்டிருக்கிறது. நேற்றைக்கு முன் தினம்கூட, முதலமைச்சர் அவர்களை எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சந்தித்ததாகவும், ஊராட்சிகள் தேர்தல் சீக்கிரத்திலே நடக்க இருப்பதாகச் சொன்னதாகவும் பத்திரிகைகளிலே செய்தி வந்தது. முதலமைச்சர் அவர்கள் அப்படி எதிர்க்கட்சித் தலைவர் அவர்களிடம் கூறுகிற நோக்கிலே, மேலும் ஓர் ஆண்டு

[திரு. கோ. வீரய்யன்] [1985 மார்ச் 15

காலத்திற்கு இந்த தனி அதிகாரிகள் பதவிக் காலத்தை நீடிக்கும் சட்ட முன்வடிவைக் கொண்டு வருவதற்கான காரணத்தை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. எனவே, இந்த அரசை பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக நான் கேட்டுக் கொள்ள விரும்புவது, உள்ளாட்சி அமைப்புகளுக்கு தேர்தல் நடத்துவது என்ற கொள்கையை இந்த அரசு ஏற்கிறதா, இல்லை தேர்தல் நடத்தாமல், தனி அதிகாரிகள் மூலமாகவே அந்த நிர்வாகத்தை நடத்த முடிவு செய்துவிட்டதா என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

அடுத்து, இந்த ஊராட்சிகளிலே உள்ள கிராமங்களுக்கு முழுவதும் ஊர்நலப் பணியாளர்கள் என்று தனி அதிகாரிகளால் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் மக்களை மதிப்பதே இல்லை. அவர்கள் சொல்லும் குறைகளைக் கேட்பதில்லை. அங்குள்ள மக்களுடைய வரிப் பணம் முழுவதும், மக்களுக்குப் போய்ச் சேராமல், வீணாக்கப்படுகிறது. அதனால் அங்குள்ள மக்கள் அதிருப்தியும், கோபமும், துன்பமும், துயரமும் அடைவதற்கு வழி செய்கிறது இந்தச் சட்டம். எனவே, இந்தச் சட்ட முன்வடிவை திரும்பப் பெற வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, ஆரம்பத்திலேயே இதை நான் எதிர்க்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சி மன்றங்கள் மக்களுடைய தேவைகளை அவ்வப்போது கவனித்து வருவதற்காகத்தான் தனியாக ஒரே ஒரு அதிகாரி இருப்பது சரியில்லை என்பதால், அவருக்குத் துணையாக மக்களுடைய குறைகளை அவ்வப்போது கேட்டு நிறைவேற்ற வேண்டுமென்பதற்காக தனி அதிகாரி ஒருவரும், அவருக்குத் துணையாக ஒரு அதிகாரி என்ற விதத்திலும், ஜனநாயக மாண்பு பாதுகாக்கப்படுகிற விதத்திலும், நிர்வாகக் கேந்திரங்கள் நின்று விடாமல் முறையாக செயல்படுவதற்காக இந்தச் சட்ட முன்வடிவை நாங்கள் கொண்டு வந்திருக்கிறோம். ஆகவே, இந்தச் சட்ட முன்வடிவினால் எந்தவிதத்திலும் ஜனநாயகம் பாதிக்கப்படாது என்பதைச் சொல்லி, இதை நிறைவேற்றித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



1985 மார்ச் 15]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி:

"தமிழ்நாடு 1985 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்:** இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

**(இ) ஊராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1985.**

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ்நாடு 1985 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்".

**திரு. ப. பொன்னுரங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்தை நான் அறிமுக நிலையிலேயே எதிர்க்கிறேன். காரணம், மற்ற சட்டங்களுக்கு வேறு வேறு காரணங்கள் இருக்கலாம். ஆனால், இந்தச் சட்டம் 15 பஞ்சாயத்து கவுன்சில்கள் சம்பந்தப்பட்ட சட்டம். இதை ரீ-கான்ஸ்டிடியூட் பண்ணுவதிலே உங்களுக்கு என்ன கஷ்டம்? ஏன் காலதாமதம்? ரீ-கான்ஸ்டிடியூட் பண்ணுவதற்கு இவ்வளவு நாட்கள், வருஷங்கள் தேவையா? எலக்ஷன் நடத்த முடியாமல் இருக்க காரணம் இருக்கலாம். ரீ-கான்ஸ்டிடியூட் பண்ணுவதற்கு எந்த கோர்ட்டிலே தடையிருக்கிறது? ஆனால், இதைப் பற்றி ஒவ்வொரு ஆண்டும் ஆர்டினன்சும் வருகிறது; பில்லும் வருகிறது. இந்த 15 கவுன்சில்களுக்கும் 'ரீ கான்ஸ்டிடியூட்' வேண்டும். அதற்கு இவ்வளவு நாளா? அட்மினிஸ்ட்ரேஷன் ட்ராப்ட் என்பதைத்தான் இது குறிக்கிறது.

(திரு. ப. பொன்னுரங்கம்) [1985 மார்ச் 15

உங்களுக்கு இதிலே அக்கறை இல்லை என்பதைத்தான் இது
காட்டுகிறது. அதனால்தான் இப்படிப்பட்ட ஆர்டினன்ஸ்
வருகிறது. மசோதா வருகிறது. ரீ-கான்ஸ்டிடியூட் பண்ணிய
பிறகு கூட ஸ்டே இருக்கிறது. வழக்கு இருக்கிறது, அதனால்
முடியவில்லை என்று சொன்னால் ஓரளவுக்கு ஏற்றுக்
கொள்ளலாம். இது ஒரு பெக்கூலியர் கேசாக இருக்கிறது.
ஆகவே, இந்த மசோதாவை எதிர்க்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள
கேள்வி:

"தமிழ்நாடு 1985 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (திருத்த) சட்ட
முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க
வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்
பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்: இச்சட்ட
முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு
அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

### 6. ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம்—விவாதம் (தொடர்ச்சி)

* திரு. கு. வடிவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,
தமிழ்நாட்டிலே நாலரை கோடி மக்களின் தளநாயகனாக
விளங்குகிற எங்களுடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித்
தலைவர் அவர்களைக் காப்பாற்றிய தமிழக மருத்துவர்களுக்கும்
வெளிநாட்டு மருத்துவர்களுக்கும், எங்கள் தங்கத் தலைவர்
நலம் பெற வேண்டுமென்று பிரார்த்தனைகள் செய்து, வணங்காத
தெய்வத்தை எல்லாம் வணங்கி பிரார்த்தனை செய்த தமிழக
மக்களுக்கும், எங்களுடைய தலைவர் உயிரைக் காப்பாற்ற
வேண்டும், எங்கள் உயிரை வேண்டுமானால் எடுத்துக்
கொள்ளுங்கள் என்று உயிர் தியாகம் செய்த தியாகிகளுக்கும் என்
மனமார்ந்த இதயப்பூர்வமான உணர்வுகளையும் வாழ்த்துக்
களையும், பாராட்டுக்களையும், நன்றியையும் முதற்கண்
தெரிவித்துக்கொள்கிறேன்.



1985 மார்ச் 15] [திரு. கு. வடிவேல்]

இந்த மாமன்றத்திற்கு இரண்டாவது முறையாக என்னைத்
தேர்ந்தெடுத்து அனுப்பியிருக்கிற கரூர் தொகுதி வாக்காளர்
பெருமக்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்து, கவர்னர்
உரையின்மீது நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தில் என்னுடைய
உரையை ஆரம்பிக்கிறேன்.

நடைபெற்று முடிந்த தேர்தலிலே எங்களுடைய
அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றி
பெற்றதற்கு என்ன காரணம் என்று திராவிட முன்னேற்றக்
கழகத்தைச் சேர்ந்தவர்கள் அலசி ஆராய்ந்து பார்த்து, அனுதாப
அலை என்று சொன்னார்கள். அவர்களைப் பார்த்து நான்
ஒன்றைக் கேட்க விரும்புகிறேன்.

உயிரோடு இருக்கக்கூடிய ஒரு முதலமைச்சரை இறந்து
விட்டார், ஐஸ் பெட்டியிலே வைத்திருக்கிறார்கள். தேர்தல்
வரையிலே அதை வெளியிலே சொல்லமாட்டார்கள் என்று ஒரு
பொய்யான, தவறான பிரச்சாரத்தைச் செய்தீர்களே! உங்கள்
மீது எப்படி மக்களுக்கு அனுதாபம் ஏற்படும்? அதுதான்
இருக்கட்டும். 7 ஆண்டு காலத்திற்கு முன்பு நம்முடைய
முன்னாள் பாரதப் பிரதமர் அன்னை இந்திரா அவர்கள் மதுரை
மாநகருக்கு ஒரு நிகழ்ச்சிக்கு வந்தபோது இந்திய நாட்டின்
பிரதமர் என்றுகூட பார்க்காமல், ஒரு பெண் என்றுகூட
பார்க்காமல் * * * என்பதை
மட்டும் நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். இன்றையதினம்
* * * என்று தமிழக மக்கள் நன்றாக
அறிந்துதான் உங்கள்மீது அனுதாபம் இல்லாமல். . . .
(குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் பேசும்போது
பதில் சொல்லலாம்.

திரு. அ. ரகுமான்கான்: அதற்காக எதை வேண்டுமானாலும்
பேசலாமா?

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க
அகற்றப் பெற்றது.

திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே பேசுகின்றபோது திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சுட்டிக்காட்டி இங்கே * * * என்ற கருத்துப்பட எடுத்துச் சொல்லி, * * * என்ற கருத்துப்பட பேசுகிறார்கள். ஒன்று, அது இன்னும் வழக்கிலே இருக்கிறது. இரண்டு, * * * அது எதிர்ப்புப் போராட்டம் என்பது இந்த நாட்டுக்குத் தெரியும். வழக்கு மன்றத்திலே வழக்கு இருக்கின்றபோது சட்ட மன்றத்தில் இப்படிப் பேசி பதிவு செய்வது ஏற்புடையதாக ஆகாது என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீதிமன்றத்தில் வழக்கு இருப்பதால் அதைப்பற்றி பேச வேண்டாம். எல்லபஞ்ச் ஆகாத வண்ணம் உறுப்பினர்கள் பேசுவது நல்லது. இப்போது அவர்கள் குறிப்பிட்டவற்றை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடுகிறேன்.

(முற்பகல் 9-40)

திரு. கு. வடிவேல்: பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்ப்பு என்பது அல்ல. * * உண்மை. (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீதிமன்றத்திலே இருப்பதைப் பற்றி பேச வேண்டாம்.

திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, சப்ஜுடிஸ் என்பதற்கான விளக்கத்தைத் தாங்கள் அறிவீர்கள். சப்ஜுடிஸ் ஆக இருக்கிற பிரச்சனையைப் பற்றி அவரவர்கள் பேசுவது என்று சொன்னால், இது சட்டமன்ற விவாதத்தையே மாற்றுகிற நிலைமைக்குப் போகும்.

திரு. என். எஸ். வி. சித்தன்: பேரவைத் தலைவர் அவர்களே, வழக்கிலே இருக்கின்ற காரணத்தால், வழக்கின் தன்மையைப் பற்றிப் பேசக்கூடாது என்பதை நாங்கள் அறிவோம். ஆனால் அன்றைக்கு மதுரையிலே ** எல்லோருக்கும் தெரியும். பாதிக்கப்பட்டவன் நான் இங்கே இருக்கிறேன். நானும் சாட்சியாக இருக்கிறேன். (கரவொலி)

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



13636 சென்னை-600 008.

திரு. அ. ரகுமான்கான்: தலைவர் அவர்களே, அன்றையதினம் நான் மதுரையிலே இல்லை. ஆனால் * * என் மீதும் வழக்கிருக்கிறது. நான் அன்றையதினம் மதுரையிலே இல்லை.

திரு. கு. வடிவேல்: பேரவைத் தலைவர் அவர்களே, அனுதாபம் என்று பேசியதால்தான் நான் சொன்னேனே தவிர, வழக்கிற்குள்ளே நான் செல்லவில்லை.

அடுத்து இன்னும் ஒன்றை நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். தமிழகத்தில் உள்ள ஏறத்தாழ 80 லட்சம் குழந்தைகளுக்கு—தான் கற்றறிந்த பொருளாதாரம் எல்லாம் வறுமையைப் போக்க வேண்டும், சிறிய வயதிலே ஒரு நேர உணவுக்காக எவ்வளவு கஷ்டப்பட்டோம் என்பதை அனுபவபூர்வமாக அறிந்த உண்மையை, மக்களுக்குத் தெளிவாக எடுத்துச்சொல்லி, சத்துணவுத் திட்டத்தைப்படைத்தாரே நம்முடைய தங்கத் தலைவன், டாக்டர் புரட்சித்தலைவர் அவர்கள் கொண்டு வந்த சத்துணவுத் திட்டத்தைப் பார்த்து நீங்கள் அன்றையதினம் ஏற்றுக்கொண்டீர்களா? அல்லது இந்த சத்துணவுத் திட்டம் நல்ல திட்டம் என்று சொன்ன நேரத்திலே அதை ஏற்றுக் கொண்டீர்களா? இந்தத் திட்டத்தைப் பிச்சைக்காரத் திட்டம் என்று நீங்கள் கூறவில்லையா? தேர்தல் நேரத்தில் வாக்குகளை வாங்க வேண்டும் என்ற காரணத்தால், சத்துணவுத் திட்டம் ஒரு நல்ல திட்டம், ஆனால் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் குழந்தைகளை தட்டு ஏந்தி பிச்சைக்காரர்களாக ஆக்கி விட்டார்கள். ஆனால் நாங்கள் ஆட்சிக்கு வந்தால், இலைமேல் சாப்பாடு போடுவோம் என்று நீங்கள் சொன்னது இந்த நாட்டு மக்களுக்குத் தெரியாதா? எந்த அடிப்படையிலே உங்களுக்கு அனுதாபம் கிடைக்கும்.

அதுமட்டுமல்ல, அன்னை இந்திரா காந்தி அவர்கள் உங்கள் ஆட்சியைக் கலைப்பதற்கு முன்பாக என்ன சொன்னீர்கள்? அன்னை இந்திரா காந்தி அவர்கள் 20 அம்சத் திட்டம் என்று ஒரு

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

(திரு. கு. வடிவேல்) [1985 மார்ச் 15

அருமையான திட்டத்தைக் கொண்டு வந்து இந்த நாட்டின் முன்னேற்றத்திற்காக அரும்பாடுபட்டபோது நீங்கள் என்ன சொன்னீர்கள் தெரியுமா? எங்களுடைய தலைவர் கருணாநிதி அவர்கள் 21-ஆம் அம்சம் ஒன்றை வைத்திருக்கிறார்கள், அது என்ன திட்டம் என்றால், விதவைகளுக்கு மறுவாழ்வு அளிக்கின்ற திட்டம் என்று சொல்லி, கேலியும் கிண்டலும் பேசவில்லையா? உங்களுக்கு தமிழக மக்கள் மட்டுமல்ல, இந்தியமக்களும் உங்கள் மீது எந்த அடிப்படையிலே அனுதாபப்படுவார்கள். அனுதாபம் என்பது உண்மையிலே இருக்க வேண்டும் என்றால், நிச்சயமாக நான் ஒன்றைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். 1977-ஆம் ஆண்டு எங்களுடைய தலைவர் மாபெரும் வெற்றி பெற்றவுடனே, உங்கள் தலைவர் என்ன சொன்னார், இது கவர்ச்சி வெற்றி என்று சொன்னார்.

அதுமட்டுமல்ல, 1980-லே பெற்ற வெற்றிக்கு என்ன சொன் னார்கள், தெரியுமா? மக்கள் இன்னும் திருந்தவில்லை என்று சொன்னார்கள். அதை அடுத்து, 1984 ஆம் ஆண்டு பெற்ற வெற்றிக்கு நீங்கள் அனுதாப வெற்றி என்று சொல்கிறீர்கள். ஒன்றை மட்டும் நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். தமிழகத்து மக்கள் நன்றாகத் திருந்திவிட்டார்கள். அவர்கள் புத்திசாலிகள், 1984 ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலிலும், அதற்குப் பிறகு 4 மாதங்களுக்குப் பிறகு நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலிலும் இந்திய மைய அரசுக்கு காங்கிரஸ் பேரியக்கமும், தமிழகத்திற்கு அனைத்திந்திய அண்ணா தி.மு.க.வும் தான் தேவை என்பதைத் தெளிவாக எடுத்துக் காட்டினார்கள். மக்கள் நன்றாகத் திருந்திவிட்டார்கள். ஆனால் நீங்கள்தான் திருந்தவில்லை, எனவே நீங்கள் திருந்த வேண்டும் என்றுதான் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

எந்தக் கருத்தைச் சொன்னாலும், எந்தக் காரியத்தைச் செய்தாலும் உடனே அதற்கு எதிர்ப்பு. மரியாதைக்குரிய மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர் பொன் முத்துராமலிங்கம் அவர்கள் சொன்னார்கள். மைனாரிட்டிகளை மதிக்கவேண்டும், சிறுபான்மையினரை மதிக்க வேண்டும் என்று சொன்னார்கள். பேரறிஞர் அண்ணா அவர்கள் தமிழகத்திலே



1985 மார்ச் 15] (திரு. கு. வடிவேல்)

சிறுபான்மை மக்களை மதித்து, 'மாற்றான் தோட்டத்து உள்ள மல்லிகைக்கும் மணம் உண்டு' என்ற அந்த அடிப்படைத் தத்துவத்திலேதான் ஆட்சியை நடத்திக் கொண்டிருக்கிறார்கள், எங்கள் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் என்பதை நீங்கள் மறந்துவிட முடியாது என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். (கரவொலி).

அதை அடுத்து கவர்னர் உரைமீது பேச வரும்போது எங்களுடைய தலைவர் மிக அருமையான ஒரு காரியத்தைச் செய்திருக்கிறார் என்பதைச் சொல்லித்தான் ஆக வேண்டும். ஏழை எளிய சிறு விவசாயிகளுக்கு இலவச மின்சாரமும், பெரிய விவசாயிகளுக்கு ஆண்டுக்கு ஒரு முறை ஒரு குதிரைத் திறன் கொண்ட நீரேற்றுப் பொறிக்கு ரூ. 75 மட்டுமே செலுத்த வேண்டும் என்ற வகையில் அறிவித்திருப்பது மிக அருமையான திட்டமாகும். இதனால் இன்றைய தினம் ஏறத்தாழ 10 லட்சத்திற்கும் மேற்பட்ட விவசாயிகள் பயன் அடைகிறார்கள். ஆனால், அதிலே மட்டும் சின்னத் திருத்தம் வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஏனென்றால் தமிழகத்திலே பல பகுதிகளிலே வறட்சி நிலையின் காரணமாக, போதிய கிணறுகள் இருந்தும், போதிய மின்சார பம்ப் செட்டுகள் இருந்தும், தண்ணீர் எடுத்து விவசாயம் செய்ய இயலாமல் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அந்த விவசாயி களுக்கு மட்டும் ஒரு சிறு சலுகையை அறிவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். காரணம் தண்ணீர் கிணற்றிலே இல்லை. மின்சார பம்புகளை அதனால் ஓட்ட முடியவில்லை. ஆனால் ஒரு விவசாயி 1 எச்.பி. பவர் கொண்ட பம்ப்செட் மோட்டாரை வைத்துக் கொண்டிருந்தால், அவர் அந்த மோட்டாரை ஓட்டினாலும் சரி, ஓட்டாவிட்டாலும் சரி, வருடத்திற்கு அந்த 75 ரூபாயைக் கட்டியாக வேண்டும். ஆகவே, அதைச் சற்று மாற்றி, வறட்சிப் பகுதியில் இருக்கிற விவசாயிகள் மட்டும், வருடத்திற்கு 75 ரூபாய் என்று இல்லாமல் எந்த அளவுக்கு மின்சாரத்தைப் பயன்படுத்தி மோட்டாரை ஓட்டியிருக்கிறார்களோ அந்த அளவிற்கு பணம் கட்டுவதற்கு வழி செய்து, அந்த வறட்சிப் பகுதிகளுக்கு மட்டும் சலுகைகள் செய்து தந்தால், உண்மையிலேயே புரட்சித் தலைவர்

அவர்களுடைய ஆட்சிக் காலம் விவசாயிகளுக்குப் பொற்காலம் என்ற வகையிலே சரித்திரத்தில் இடம் பெறுவதை யாரும் மறுத்துவிட முடியாது.

அடுத்து எங்களுடைய பகுதியில் குடகனாறு அணையை ** அவர்கள் கட்டினார்கள். அந்தக் குடகனாறு அணையை. . . . . (குறுக்கீடு)

**திரு. அ. ரகுமான்கான்:** பேரவைத் தலைவர் அவர்களே, ** என்றெல்லாம் ஒரு கட்சித் தலைவரைச் சொல்வதை நீங்கள் அனுமதிக்கிறீர்களா? அது அவைக்குறிப்பில் இடம் பெற வேண்டுமா? . . . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேசிக் கொண்டிருக்கும் உறுப்பினருக்கு நான் ஒரு ஆலோசனை சொல்கிறேன். தயவு செய்து வெளியிலே பேசுவது போல் இங்கே சொற்களைப் பயன் படுத்த வேண்டாம். இந்த அவை பின்பற்ற வேண்டிய கண்ணியத்திற்கும் முறைக்கும் ஏற்ப பேச வேண்டும். அவர் கூறிய அந்தப் பகுதியை அவைக் குறிப்பிலேயிருந்து நீக்க ஆணையிடுகிறேன். நீங்கள் தொடர்ந்து பேசலாம்.

**திரு. கு. வடிவேலு:** எங்கள் பகுதியில் குடகனாறு என்று ஒரு அணை கட்டப்பட்டது. 1977-ல் ஏற்பட்ட ஒரு பெரிய வெள்ளத்தில், பெரிய வெள்ளம் என்று சொல்வது கூட சரியல்ல, ஒரு சிறிய வெள்ளத்திலேயே அந்த அணை உடைந்ததோடு மட்டும் அல்ல, ஏறத்தாழ 100-க்கும் மேற்பட்ட உயிர்ச் சேதங்கள் ஏற்பட்டு பல ஆயிரக்கணக்கான ஏக்கர் விவசாய நிலங்கள் பாதிக்கப்பட்டு, விவசாயிகள் விவசாயமே செய்ய முடியாத நிலை ஏற்பட்டதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். அந்த அணையை மீண்டும் திருத்தி நல்ல முறையிலே மிகவும் உறுதியோடு கட்ட வேண்டும் என்பதற்காக எங்கள் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் நேரடி உத்திரவிட்டு, அதற்கு ஆவன செய்து, அந்த அணை கட்டி முடிக்கப்பட வேண்டும் என்று இந்த மாமன்றத்தின் மூலமாகக் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.





அடுத்து, என் கரூர் பகுதியில் தமிழ்நாடு செய்தித்தாள் நிறுவனத்தை ஏற்படுத்தியிருப்பதை, மிகவும் மனதாரப் பாராட்டி வரவேற்கிறேன். என்றாலும், அந்த ஆலை அங்கே ஏற்படுவதற்கு நிலம் கொடுத்தவர்களுக்கெல்லாம், அந்த ஆலையிலேயே வேலை வாய்ப்பு கொடுக்கும் வகையில் ஏற்பாடு செய்ய வேண்டும் என்றும், எங்களுடைய பகுதியிலே இருக்கக் கூடிய பட்டதாரிகளுக்கு அந்த நிறுவனத்தில் வேலை வாய்ப்பிற்கு முன் உரிமை கொடுக்க வேண்டும் என்றும் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தாற்போல கிராமங்களுக்கெல்லாம் அடிப்படைத் தேவையான வசதிகள் என்னவென்று சொன்னால், குடிதண்ணீர், சாக்கடை வசதி, கழிப்பிட வசதி, மின்சார விளக்கு வசதி, பள்ளிகள், சாலைகள், சுடுகாடு போன்றவைதான். இவைகள் தாம் 'பேசிக் நீட்ஸ்' என்று சொல்லப்படக் கூடிய அடிப்படைத் தேவைகள். இவைகளையெல்லாம் ஒவ்வொரு கிராமத்திற்கும் செய்து கொடுத்தால் போதும், இந்த ஊராட்சி மன்றங்களுடைய சட்டத்தைப் பற்றி இங்கே அதிகமாகச் சொல்ல வேண்டிய அவசியமே ஏற்படாது என்று சொல்லிக் கொள்கிறேன். நம்முடைய இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சியில் இவைகள் எல்லாம் செய்து கொடுக்கப்பட வேண்டும் என்றுதான் மக்கள் ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு அந்த வசதிகளை நிச்சயமாகச் செய்து கொடுக்கும் இந்த அரசு என்று நாங்கள் நம்பிக்கையையும், உறுதியையும் சொல்லிவிட்டு வந்திருக்கிறோம். ஆகவே, அவைகளுக்கு இந்த அரசு முன் உரிமை கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, கரூர் பகுதியைப் பொறுத்தவரையில் திருச்சி மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து எங்களுடைய கரூர் பகுதியை தலைநகராக்கி, கரூரையும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளையும் இணைத்து தனி மாவட்டமாக அமைத்துத் தர வேண்டும் என்று இந்த நேரத்திலே இந்த மாமன்றத்தின் வாயிலாகக் கேட்டுக் கொள்கிறேன். அடுத்து, ஆங்கிலேயர் காலத்திலிருந்து கேட்டுக் கொண்டிருந்த நொய்யலாறு திட்டம், எங்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களுடைய

(திரு. ரு. வடிவேலு) [1985 மார்ச் 15

ஆட்சியில் தான் நிறைவேற்ற ஆரம்பிக்கப்பட்டு, விவசாயிகள் அவர்களுடைய பரம்பரைகள் இருக்கும் வரையில், இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களை மறக்க முடியாத அளவுக்கு, ஆங்கிலேயர் காலத்திலிருந்து கேட்டு வந்த தொய்யலாறு திட்டத்தை நிறைவேற்றி, அது விவசாயிகளுக்கு பாசனம் அளிக்கக் கூடிய வகையில் முன்னேறி வருகிறது என்பதை இந்த நேரத்தில் சொல்லி, எனக்குப் பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி அமர்கிறேன்.

(முற்பகல் 9-50)

*திரு. கி. ராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களே அனைவருக்கும் என் அன்பு கலந்த வணக்கங்கள். இந்திய நாட்டின் வளர்ச்சிக்காகவே தன் வாழ்நாள் முழுவதும் உழைத்து நாட்டு நலனுக்கு உயிரையே அர்ப்பணித்து அமரராகிவிட்ட அன்னை இந்திரா காந்தி அவர்களுக்கு என் அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவர்கள் விட்டுச் சென்ற பணியை, புதிய பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்கள் திறம்பட செயல்பட்டு மக்களுக்கு நல்வாழ்வு அளித்திட நாமெல்லாம் கரம் கொடுத்து அவர்களுடைய கரங்களை பலப்படுத்த வேண்டும் என்று எல்லோரையும் கேட்டுக் கொள்கிறேன். தமிழ் நாட்டு மக்கள் நலம் பெற ஏழை எளியவர்கள் நல்வாழ்வு வாழ்ந்திட நல்ல புரட்சிகரமான திட்டங்களைத் தீட்டி செயல்பட்டு வரும் மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் பூரண ஆரோக்கியம் பெற்று பல்லாண்டுகள் வாழ வேண்டும் என்று பிரார்த்திக்கிறேன். அவர்களுக்கு அமெரிக்காவில் அறுவை சிகிச்சை நடந்தபோது ராஜபாளையம் மாரியம்மன் கோயிலில் விசேஷ பூஜை நடத்தி பிரார்த்தனை செய்தவர்களில் அடியேனும் ஒருவன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து எனக்கு கல்வி அளித்து, இந்தப் பேரவையின் முன்னால் நிற்கும் அளவிற்கு என்னை உயர்த்திய நம்முடைய முன்னாள் முதல்வர், ஒரிசா மாநிலத்தின் முன்னாள் ஆளுநர், சிறந்த தேச பக்தர், காங்கிரஸ் தியாகி, திரு. பி. எஸ். குமாரசாமி அவர்களுக்கு என் அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



1985 மார்ச் 15] [திரு. கி. ராமன்]

ராஜபாளையம் தொகுதியில் அவர்களால் ஆளாக்கப்பட்ட என்னை விரும்பி அழைத்து போட்டியிடச் செய்த ராஜபாளையம் தொகுதி மக்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் தீர்மானத்தை ஆதரித்து எனக்கு முன்னால் அனைத்து கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள பல பேர்கள் பேசியிருக்கிறார்கள். என்னைப் பொறுத்தவரையில், இந்தத் தீர்மானத்தை பொதுவான முறையில் நான் ஆதரித்தாலும், சில திருத்தங்களை மக்களுடைய நலனைக் கருதி இந்தப் பேரவையில் சமர்ப்பிக்க ஆசைப்படுகிறேன். காரணம் நல்ல நல்ல திட்டங்கள் ஆளுநர் உரையில் சொல்லப் பட்டு இருந்தாலும் அவைகளைச் சரியான முறையில் அமுல்படுத்த முடியாமல் குறைகள் நிறைந்து, திட்டங்களின் பலன்கள் பாமர மக்களைச் சேர்வதில்லை. ஏற்கனவே இருக்கும் திட்டங்கள் மற்ற மாநிலங்களில் இல்லாத சிறப்பு அம்சங்களாகும். இவற்றை நான் ஒத்துக்கொள்கிறேன். இதில் இரண்டாவது ஒப்பினியன் யாருக்கும் கிடையாது.

பள்ளிப் பிள்ளைகளுக்குச் சீருடைகள், பாடப் புத்தகங்கள் வழங்கும் புதிய திட்டங்களை அரசு அறிவித்திருக்கிறது. அதற்காக மக்களின் சார்பில் நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

கடந்த ஞாயிறு அன்று என்னுடைய தலைவர் திரு. சுப்பிரமணியம் முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களைச் சந்தித்து கடுமையான மின்சாரத் தட்டுப்பாட்டைத் தவிர்க்கவும், நகராட்சி, ஊராட்சித் தேர்தலை உடனே நடத்தவும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அன்புடன் கேட்டுக் கொண்டதாக அறிகிறேன். இந்த இரண்டு பிரச்சனைகளும் முக்கியமான பிரச்சனைகள் ஆகும். உடனடியாகக் கவனிக்க வேண்டியவைகள் ஆகும். மின்சாரத்தைப் பொறுத்தவரையில் வருடா வருடம் இந்தக் கஷ்டத்தை நாம் சந்திக்கின்றோம். இதற்கு நிரந்தரமான பரிகாரத்தை அரசு காண வேண்டும். மின்சாரத் தட்டுப்பாட்டினால் தான் தமிழ் நாட்டின் பொருளாதாரமே பாதிக்கப்படுகிறது. சிறு தொழில்கள், பெரிய தொழில்கள் போன்றவற்றை முழுவதுமாகச் செயல்படுத்த முடியாத நிலை இருக்கிறது. அதன் விளைவாக உற்பத்தி குறைவும், அதன்

[திரு. கி. ராமன்] [1985 மார்ச் 15

காரணமாக விலைவாசி ஏற்றம் போன்ற பலவிதமான சிக்கல்களைத் தோற்றுவிக்கிறது. மின்சாரத் தட்டுப்பாட்டினால் விவசாயம் பெரும் அளவில் பாதிக்கப்படுகிறது. ஆயிரக் கணக்கான விவசாயிகள் பம்ப் செட்டிற்கு, மின்சார இணைப் பிற்கு காத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை எனக்கு முன்னால் பேசிய சட்டமன்ற உறுப்பினர்கள் இந்தப் பேரவையில் தெரிவித்தார்கள்.

போன வருடம் என்னுடைய தொகுதி விவசாயிகள் மனு கொடுத்தபோது, நான் ராஜபாளையம் டிவிஷனல் என்ஜினியரை நேரில் சந்தித்தேன். அவர், 1979-லே அப்ளிகேஷன் கொடுத்தவர்களுக்கு மட்டும் தான் இப்போது இணைப்பு கொடுத்துக் கொண்டிருக்கிறோம், உங்களுக்கு இன்னும் எத்தனை ஆண்டுகள் ஆகுமோ தெரியாது என்று சொல்லிவிட்டார். இந்தத் தட்டுப்பாட்டிற்கும் இடையில், விவசாயம் செய்பவர்களுக்குத் தான் தெரியும் அதில் உள்ள கஷ்டங்கள். அதாவது விவசாயச் செலவு, உழவுச் செலவு, உரச் செலவு, நீர்ப்பாசனச் செலவு, அறுவடைக் கூலிகள் கட்டுக்கடங்காமல் அதிகமாக ஆகிவிட்டதால், பல விவசாயிகள் விவசாயம் செய்யத் தயங்கிக் கொண்டிருக்கிறார்கள். ஏற்கெனவே பல இடங்களில், விவசாய நிலங்கள் வீடு கட்டும் மனைகளாக ஆகிவிட்டன. அதோடு, தற்போதுள்ள நிலங்களிலும் விவசாயம் செய்வதில் கஷ்டங்கள் ஏற்பட்டால், பின்னர் விளையக் கூடிய பிரச்சினைகள் பலவாகும்.

நகராட்சித் தேர்தல், பஞ்சாயத்துத் தேர்தல்களை இன்னும் தாமதப்படுத்தாமல், உடனே நடத்திட வேண்டுமென்று பல சட்டமன்ற உறுப்பினர்கள் ஏற்கனவே பேசியிருக்கிறார்கள். நான் வேண்டிக் கொள்வதெல்லாம், இந்த நகராட்சி, உள்ளாட்சித் தேர்தல்களை உடனடியாக நடத்தி, இந்த நிர்வாகம் நல்ல முறையில் நடந்திட அரசு உதவ வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நகராட்சிக் கவுன்சில் இல்லாத காரணத்தால், சாதாரணமாக நடக்கக் கூடிய வேலைகள் நடக்காமல் தேங்கிக் கிடக்கின்றன. கேட்பாரற்ற நிலையில் இருக்கிறது. கழிவு நீர்த் தேக்கம்,



1985 மார்ச் 15] [திரு. கி. ராமன்]

சாக்கடை நீர்ப் பிரச்சினை, கிராமங்களில் எங்கு பார்த்தாலும் காணப்படுகின்றன. இந்தக் கஷ்டங்களை எல்லாம் நிவர்த்திக்க வேண்டுமென்றால், இந்த நகராட்சி, உள்ளாட்சித் தேர்தல்களை உடனடியாக நடத்த வேண்டும். இந்த நேரத்தில் பேரவைத் தலைவரின் அனுமதியின் பேரில் ஒரு விகடத் துணுக்கைச் சொல்கிறேன். நண்பர்கள் படித்து இருக்கலாம். ஒரு வாரப் பத்திரிகையில் வந்தது. மரண தண்டனை விதிக்கப்பட்ட ஒரு கைதியிடம் ஜட்ஜ் கேட்கிறார், உன்னுடைய கடைசி விருப்பம் என்ன என்று. அதற்கு அந்தக் கைதி சொல்கிறான், நான் சாகும் முன்னால், பஞ்சாயத்துத் தேர்தலில் ஓட்டுப் போட வேண்டுமென்று சொல்கிறான். இந்தத் துணுக்கை ஒரு விகடமாக எடுத்துக்கொள்ளாமல், இதில் எவ்வளவு ஆழமாக இந்தக் கருத்து பதிந்திருக்கிறது என்பதை அரசு உணர்ந்து அதற்கேற்றவாறு செயல்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஆளுநர் உரையில் பெண்களுக்கான கழிப்பிடம் மிக மிக வெற்றிகரமாகச் செயல்பட்டு வருகிறது என்பது 9-வது பக்கத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. 11,200 கிராமங்களில், இத்திட்டம் ஏற்கனவே செயல்படுத்தப்பட்டு விட்டது என்று இந்த அறிக்கை சொல்கிறது. நான் தேர்தல் சமயத்தில் பல கிராமங்களுக்குச் சென்றபோது இந்தப் பெண்களுடைய கழிப்பிடம் எவ்வளவு வெற்றிகரமாகச் செயல்படுகிறது என்பதை நேரிலே கண்டவன். ஏற்கனவே இருக்கக் கூடிய கழிப்பிடங்கள் தண்ணீர் வசதி இல்லாத காரணத்தால் உபயோகப்படுத்தப்படாமல், கல், முள் போன்றவைகளால் அடைபட்டு, உபயோகமற்ற நிலையில் இருக்கின்றன. ஆகவே, இந்தக் கழிப்பிடங்கள் வெற்றிகரமாகச் செயல்பட்டு வருகிறது என்று சொல்வதைக் காட்டிலும், வெற்றிகரமாகச் செயல்படாமல் இருக்கின்றன என்று சொல்வது பொருத்தமாகும்.

அடுத்தது குடிநீர் வழங்குதல், பக்கம் 17-ல் ஆளுநர் உரையில் சொல்லப்பட்டிருக்கிறது. சில கிராமங்களுக்கு நான் சென்ற போது, பெண்கள் வந்து அப்படியே என்னை மறித்துக் கொண்டார்கள். ஐயா, எங்களுடைய கிராமத்தில் குடிநீர் இல்லை. நீங்கள் குடிநீர் வழங்காவிட்டால் நாங்கள் எல்லோரும்

ஓட்டுப்போட மாட்டோம் என்று மறித்துக் கொண்டு விட்டார்கள். அப்போது நான் சொன்னேன், அம்மா, நீங்கள் ஓட்டுப் போட வில்லையென்றால், உங்களுடைய பிரச்சினை தீர்ந்துவிடாது, உங்களுடைய தொகுதிக்கு முதன் முதலாக ஓட்டுக் கேட்க நான் வந்திருக்கிறேன், ஆகவே என்னை சட்டமன்றத்திற்குத் தேர்ந்தெடுத்தால், உங்களுடைய குறைகளை எவ்வளவு சீக்கிரமாகத் தீர்க்க முடியுமோ, அவ்வளவு சீக்கிரமாக தீர்த்து வைக்க ஆளுநர் கட்சியின் சார்பிலே முயற்சி செய்கிறோம் என்று இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி சார்பிலே நான் மக்களை வேண்டிக் கொண்டேன். எனக்கு முன் பேசிய சட்டமன்ற உறுப்பினர்கள் சொன்னதுபோல், இன்று பொதுவாக கிராமங்களில் உள்ள குறை என்னவென்றால், குடிநீர் சரியாகக் கிடைக்கவில்லை, வசதியில்லை என்பதுதான். இந்தக் குடிநீர்ப் பிரச்சினையைப் பொறுத்தவரையில் எங்களுடைய தொகுதியில், ஸ்ரீவில்லிபுத்தூருக்கு அருகாமையில் உள்ள களங்காப்பேரி, தொலக்கச்சேரி, சொக்கநாதன் புத்தூர் கிராமங்களில் குறிப்பாக ஹரிஜன மக்கள் வாழ்கிறார்கள்.

(முற்பகல் 10-00)

அரிசனப் பெண்கள் அங்கே சூழ்ந்து கொண்டு, ஐயா எங்களுக்கு குடிக்கத் தண்ணீர் இல்லை, ஏதோ கிணறு வெட்டிக் கொடுத்தார்கள். அந்தக் கிணற்றில் தண்ணீர் சாப்பிட முடியாமல் உப்பாக இருக்கிறது. பக்கத்தில் உள்ள விவசாயக் கிணற்றிலே தண்ணீர் எடுக்க வேண்டும் என்றால் காலையிலே 4, 5 மணி அளவில் பெண்கள் போய் எடுக்க வேண்டியிருக்கிறது. இப்படிப்பட்ட நிலைமையிலே, அரிசன மக்களின் மீது உள்ள வெறுப்பால் மேல் ஜாதியைச் சேர்ந்தவர்கள் மலத்தையும் சாணியையும் அள்ளிப் போட்டு விடுகிறார்கள். இதனால், அவர்கள் தண்ணீர் குடிக்க முடியாத நிலைமை இருக்கிறது. ஆகவே அந்த கிராம மக்கள் திண்டாடிக் கொண்டு இருக்கிறார்கள். நான் தாழ்மையோடு இந்த அரசை வேண்டிக் கொள்வது எல்லாம், அந்தக் காரியத்தைச் செய்வதற்கு தாமதம் செய்தாலும் தயவுசெய்து இந்தக் காரியத்தை களங்காப்பேரி அரிசன மக்களுக்குத் தண்ணீர் வசதி செய்து கொடுக்கும் காரியத்தை உடனடியாகச் செய்து கொடுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.





அடுத்து, சொக்கநாதன் புத்தூர் என்ற இடத்தில் ஏற்கனவே குடிநீர் தொட்டி கட்ட ஆரம்பிக்கப்பட்டு முடிக்கப்படாமல் இருக்கிறது. அந்தப் பகுதி மக்கள் தண்ணீர் இல்லாமல் சிரமப்படுகிறார்கள். ஆகவே, ஏற்கனவே, கட்டி முடிக்கப்படாத அந்தத் தண்ணீர்த் தொட்டியை கட்டி முடித்து மக்களுக்குக் குடிநீர் வசதியை வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து மருத்துவ மனைகள். எல்லோருக்கும் கிராமங்களில் உள்ள மருத்துவ வசதிப் பற்றி தெரியும். எங்களுடைய ராஜபாளையம் தொகுதியைப் பற்றிச் சொல்ல வேண்டுமானால், அங்கு ஒரு சிறிய மருத்துவமனை இருக்கிறது. அங்கே குறைபாடுகள் உண்டு. விளக்குகள் இல்லை. சாதாரண மக்களுக்கு வைத்திய வசதி கிடைப்பது இல்லை. யாராவது சிபாரிசுக் கடிதம் கொடுத்தால் தான் அந்த டாக்டர் சிகிச்சை செய்து வைப்பார். அந்த ஆஸ்பத்திரிக்குப் போகிற சாதாரண மக்களுக்குக் கூட, எம்.எல்.ஏ. சிபாரிசுக் கடிதம் வேண்டியிருக்கிறது. ஐயா, இந்தக் கடிதத்தைக் கொண்டு வருபவர் ஒரு அரிசன ஏழை, கவனியுங்கள் என்று எம்.எல்.ஏ. கடிதம் கொடுக்க வேண்டிய நிலை இருக்கிறது என்றால் அந்த ஆஸ்பத்திரி இயங்க வேண்டியது இல்லை. ஆஸ்பத்திரி போன்ற நிறுவனங்கள் யார் சென்றாலும் வைத்திய உதவி செய்ய வேண்டும்; அது அவர்களுடைய கடமை. அந்த கடமையை நிறைவேற்ற அரசு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

எனக்குக் கிடைத்த இன்னொரு தகவலின்படி ஒரு பஞ்சாயத்து யூனியனில் ஒரு லட்சம் ஜனத்தொகை இருந்தால் இரண்டு பிரைமரி ஹெல்த் சென்டர் தொடங்கலாம் என்று அரசு உத்தரவு இருப்பதாக நான் கேள்விப்படுகிறேன். ஏற்கனவே என் தொகுதியில் ஜமீன் கொல்லங்கொண்டான் என்ற இடத்தில் ஒரு பிரைமரி ஹெல்த் சென்டர் இருக்கிறது. இரண்டாவதாகக் கிழவிகுளம் என்ற கிராமத்தில் ஒரு பிரைமரி ஹெல்த் சென்டர் கட்ட வேண்டும் என்று அந்தக் கிராம மக்கள் 5 ஏக்கர் நிலம் ஆளுநர் பெயரில் தானமாக அளித்து இருக்கிறார்கள். 5—7—1981-ல் அதைக் கொடுத்து இருக்கிறார்கள். 10—9—1981-ல், 10 ஆயிரம் ரூபாய் அந்தக் கிராம மக்களுடைய நன்கொடையாகக் கொடுத்து

இருக்கிறார்கள். அப்படிக் கொடுத்தும்கூட கடந்த 4 வருடங்களாக பிரைமரி ஹெல்த் சென்டர் அந்த கிராமத்தில் ஆரம்பிக்கப்படாமல் இழுத்துக் கொண்டிருக்கிறது. எந்த முடிவும் இல்லாமல் அந்த மக்கள் என்னை வற்புறுத்துகிறார்கள். தயவு செய்து நான் அரசைக் கேட்டுக் கொள்ளுவது என்னவென்றால் ஏற்கனவே அவர்கள் கொடுத்த 5 ஏக்கர் நிலத்தையும், 10 ஆயிரம் ரூபாய் நன்கொடையையும் பயன்படுத்தி அந்தக் கிராம மக்களுக்கு ஒரு பிரைமரி ஹெல்த் சென்டர் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆதி திராவிடர் நலனைக் காணும்போது உண்மையிலே நான் மிகவும் வேதனைப்படுகிறேன். இதைச் சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லோரும் கவனமாகக் கேட்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். சுதந்திரம் அடைந்து 37 ஆண்டுகள் ஆகியும் கூட, ஒரு அரிசன மகன் மேல் ஜாதிக்காரன் தெருவுக்குள் சைக்கிள் ஓட்டிச் செல்ல முடியவில்லை, நடந்துதான் போக வேண்டும் என்ற நிலை இருக்குமானால் இதைவிடக் கேவலமான நிலை இருக்க முடியாது. நான் பச்சையப்பன் கல்லூரியில் படிக்கும்போது தீண்டாமைக் கொடுமையைக் அனுபவித்து இருக்கிறேன். தெருக்களிலே போக விட மாட்டார்கள். தாகத்திற்கு தண்ணீர் கேட்டால், "உன்னுடைய ஜாதி என்ன?" என்று கேட்பார்கள். அரிசன் என்று சொன்னால் தண்ணீர் குடிக்க டம்ளர் கிடைக்காது; கையை நீட்டு என்று சொல்வார்கள். இதே நிலைமை இன்றும் நீடிக்குமானால் அவர்களுக்கு எப்படி நன்மைகள் கிடைக்கும்? எங்கு எங்கு தீண்டாமை இருக்கிறதோ அங்கே எல்லாம் சம்பந்தப்பட்டவர்களுக்குக் கடுமையான தண்டனை கொடுக்க அரசு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

மேலும் அரிசன மக்கள் இருக்கிற பகுதிகள் தனியாக இருக்கின்றன. அவர்களுடைய நிலை, வாழ்க்கைத்தரம், வீடுகள் இவைகள் எல்லாம் மற்ற ஜாதிக்காரர்களிடமிருந்து அவர்களை வித்தியாசப்படுத்துவது போல் இருக்கிறது. இது அரிசன மக்கள் வாழும் பகுதி என்று பார்த்தவுடனேயே தெரிந்து கொள்ளலாம். அரிசன மக்களுக்கு வீடுகள் கட்டிக் கொள்ளுவதற்கு இப்போது 6 ஆயிரம் ரூபாய் மானியம் கொடுப்பதாக அறிகிறேன்.



இப்போது உள்ள விலைவாசியில், 6 ஆயிரம் ரூபாயில் வீடு கட்ட முடியாது. நல்ல குடிசை கூட போட முடியாது. எனவே இங்கே சட்டமன்ற உறுப்பினர்கள் கேட்டுக் கொண்டது போல், 6 ஆயிரம் ரூபாயை 10 ஆயிரமாக அதிகப்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து நெசவாளர்கள் பிரச்சினை. ராஜபாளையம், சத்திரப் பட்டி ஆகிய இடங்களில் நெசவாளர்கள் மிகுதியாக இருக்கிறார்கள். அங்குள்ள கூட்டுறவு நிறுவனம் ஆர்டர் கொடுத்து உற்பத்தி செய்த துணிகள் டெலிவரி எடுக்காமல் அப்படியே தேங்கி கிடக்கின்றன. அதை நானே நேரிடையாகப் பார்த்தேன். பல லட்சக்கணக்கான ரூபாய் பெறுமான துணிகள் தேங்கி இருக்கின்றன. இதை நாள்தோறும் மக்கள் வந்து முறையிடுகிறார்கள். ஆகவே, அரசு இந்தக் கூட்டுறவு நிறுவனத்திற்கு [illegible] இன்ஸ்ட்ரக்ஷனை கொடுத்து இந்த உற்பத்தி செய்த பொருட்களை உடனுக்குடன் டெலிவரி எடுத்து நெசவாளர்கள் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சத்துணவுத் திட்டத்தைப் பற்றி பேச தயவுசெய்து என்னை அனுமதிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். சத்துணவுத் திட்டம் ஒரு நல்ல திட்டம், அழகான திட்டம், பாமர மக்களுக்கு பயன்படுகிற திட்டம். ஆனால் சத்துணவு மையங்களில் நடப்பது என்ன? காய்கறிகளை சப்ளை செய்வதற்கு ஒரு சொசைட்டி. அதாவது "காய்கறி உற்பத்தியாளர்கள் சங்கம்" என்று இருக்கிறது, அவர்கள் காய்கறிகளை உற்பத்தி செய்வது இல்லை. ஊழலைத்தான் உற்பத்தி செய்கிறார்கள். சாதாரணமாக மார்க்கெட்டில் கிடைக்கக்கூடிய விலைக்கும் அதிகமாக பில் போடுகிறார்கள். பில்லைப் போட்டு கொடுத்தாலும் அந்தக் காய்கறிகளைப் பயன்படுத்தவில்லை. நான் சென்று நேரில் பார்த்த போது சில கிராமங்களில் 2 மாதம், 3 மாதமாகப் பருப்பு, காய்கறி இவைகளை உபயோகிக்காமல் அரிசியை மட்டும் வேகவைத்துக் கொடுக்கிறார்கள் சத்துணவு என்ற பெயராலே. இதை கண்கூடாக நான் பார்த்தேன். (மணியடிக்கப் பெற்றது).

[1985 மார்ச் 15

திரு. ப. ந. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுனாமிகளின் சங்கடங்கள் கண்டுகொண்டு இருக்கிற வங்கக்கடல் ஓரம் துயிலுகின்ற திராவிட இயக்கத்தின் வழிகாட்டி அமரர் பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவுகளுக்கு அஞ்சலியைச் செலுத்தி, தமிழ்த்தின் தளநாயகர், அண்ணாவின் இதயக் கனி, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுக்கு நன்றியையும், வணக்கத்தையும் கூறி, புரட்சித் தலைவர் அவர்கள் அமெரிக்கத் திருநாட்டில் நோய்வாய்ப்பட்டு இருந்தபோதும், அப்பல்லோ மருத்துவ மனையில் நோய்வாய்ப்பட்டு இருந்த போதும், சிங்கார சென்னையிலே, சிலம்பொலித்த மதுரையிலே, பஞ்சு நகர் கோவையிலே, பாணிரும் நெல்லையிலே, நஞ்சைசூழ் தஞ்சையிலே, நல்தமிழ் காஞ்சியிலே, கொஞ்சு தமிழ் குமரியிலே, மறவர் குல முக்கையிலே, மாங்கனி சேலத்திலே, மலைக்கோட்டைத் திருச்சியிலே, தென் வட ஆற்காட்டினிலே, தர்மபுரி நீலகிரிதனிலே எங்கு பார்த்தாலும் மக்கள் திரண்டு எழுந்து ஆண்டவனை வேண்டி நின்ற நோக்கில் மறு பிறவி அளித்த ஆண்டவனையும், அந்த ஆண்டவனுக்கு உறுதுணையாக உழைத்த அமெரிக்க, அப்பலோ மருத்துவமனை மருத்துவர்களையும், அவர்களுக்கு உற்ற துணையாக இருந்து உதவிய அன்னை இந்திரா காந்தி அவர்களையும் ஆனந்தக் கண்ணீர்ப் பூக்களால் அர்ச்சனை

(பிற்பகல் 10-10)

செய்கின்ற கோடானுகோடி உயிர் நெஞ்சங்களில் என்னையும் ஒருவனாக இணைத்துக்கொண்டு இந்த மாமன்றத்திலே என்னுடைய கருத்துக்களை எடுத்துச் சொல்வதற்கு வாய்ப்பளித்த, வாக்களித்த பட்டுக்கோட்டை தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கு என்னுடைய நன்றியறிதலைக் காணிக்கையாக ஆக்கி என்னுடைய உரையினைத் துவங்குகின்றேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

இங்கே கொடுக்கப்பட்டிருக்கின்ற பேரவை ஆளுநரின் உரையை ஆராய்ந்து பார்க்கின்ற நோக்கில், திகட்டும் தேன்பாகாய், தெவிட்டாத தெள்ளமுதாய், புத்துலகம் காண்பதற்குப் புறப்பட்ட வான் விளக்கு, மங்கத்தில் வைரம் பதித்தாற்போன்று, தஞ்சையிலே தங்கத் தெருவிப்பதைப் போல, சிறந்தோங்கிக் காணப்படுகின்றது. ஆனால், இங்கே பேசிய முதற்...



1985 மார்ச் 15] [திரு. ப. ந. இராமச்சந்திரன்]

திராவிட கருத்துடைய எதிர்க்கட்சியைச் சார்ந்த நண்பர்கள், முன்னேற்றக் கழகம், பொதுவுடைமைக் கட்சியைச் சார்ந்த பெரியவர்கள், மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே விமர்சனம் செய்தார்கள்; கேலி பேசினார்கள்; நாலுக்கு பாடி நையாண்டி செய்தார்கள். நான் அவர்களுக்கு மெத்தப் பணிவன்போடு கூறிக் கொள்ள ஆசைப்படுகின்றேன். இந்த அறிக்கையை நான் மேலும் ஒருமுறை கண்ணுற்றுப் பார்த்தேன்.

பாலும் பழமும் பஞ்சணையும் கொஞ்சலும் தங்களுக்கே சொந்தம் என்று சொல்லுகின்ற பணக்கார வர்க்கத்திற்காகத்தான் இது தயாரிக்கப்பட்டிருக்கின்றதா என்று இந்த அறிக்கையைப் பார்க்கின்ற நோக்கில், இல்லை, அது பசியால் வாடும் பச்சிளம் குழந்தைகளின் பட்டினியைத் தீர்ப்பதற்காகத் தயாரிக்கப்பட்டிருக்கின்ற சத்துணவுத் திட்ட அறிக்கையாகத்தான் தெரிகின்றது. சாந்தும், சந்தனமும், ஜவ்வாதும் பொட்டுகளும் தங்களுக்குத்தான் சொந்தம் என்று சொல்லி சாதித்துக் கொண்டிருக்கும் ஆதிக்க வர்க்கத்திற்காக இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கின்றதா என்று பார்க்கின்ற நோக்கில், இல்லை, அது சாண் வயிற்றுக் கஞ்சிக்கு வழியின்றி திண்டாடுகின்ற ஏழை எளிய பாட்டாளிகளின் 70 இலட்சம் குழந்தைகளுக்குச் சத்துணவு அளிப்பதற்காக வந்த அறிக்கையாகத்தான் தெரிகின்றது. அந்தவகையிலே, இந்த ஏழை எளிய பாட்டாளி மக்கள், காலையிலே எழுந்து, விவசாய வேலைக்கு, தொழிற்சாலைக்கு செல்லுகின்ற அந்த ஏழை எளியவர்களின் குழந்தைகளுக்குச் சத்துணவு அளிக்கின்ற நல்ல திட்டத்தைப் புரட்சித் தலைவரவர்கள் இந்தத் தமிழ்நாட்டிற்குத் தந்திருக்கிறார்களே, அது இந்த அறிக்கையிலே சுட்டிக்காட்டப் பட்டிருக்கின்றதே, அதை அவர்கள் பாராட்டக்கூடாதா?

அதோடு மட்டுமல்லாமல், சத்துணவு தந்த அந்த சரித்திர நாயகன் அதற்குப் பின்னாலே, இந்த அறிக்கையிலே சொல்லி இருக்கின்றார். ஒன்று முதல் எட்டாம் வகுப்பு வரையில் சீருடை கொடுக்கின்ற அந்தத் திட்டத்தை நீங்கள் பாராட்டக் கூடாதா?

[திரு. ப. ந. இராமச்சந்திரன்] [1985 மார்ச் 15

அதற்கும் பின்னாலே நான் பார்க்கின்றேன். இருண்ட கொடுத்ததோடு மட்டுமல்லாமல், குமாஸ்தாக்கள் கல்வி முறையை வெள்ளையர்கள் இங்கே அறிமுகப்படுத்தினார்களே, அந்தக் குமாஸ்தா கல்வி முறையை நாட்டிலிருந்து ஒழிப்பதற்காகத் தொழிற்புரட்சி செய்ய வேண்டும்; தொழிற்கல்வி வளர வேண்டுமென்று இன்றையதினம் தொழில் நுட்பக் கல்விக் கூடங்களை ஆண்டுதோறும் பரப்பி வருகின்ற அளவிலே விரிவுபடுத்தியிருக்கின்றாரே, அந்தத் திட்டத்தை நீங்கள் பாராட்டக் கூடாதா?

அதோடு மட்டுமல்ல, இங்கே நான் பார்க்கின்ற நேரத்தில் மிகத் தெளிவாக ஒரு கருத்து தெரிகின்றது. வருங்காலத்தில், விஞ்ஞானிகளை, சட்ட நிபுணர்களை, மருத்துவர்களை, இராஜ தந்திரிகளை, இராஜாங்க மந்திரிகளை உருவாக்குகின்ற பள்ளிக் கூடங்கள் இன்றையதினம் பழுதடைந்த நிலையிலே காணப்படுகின்றனவே, அவைகளைப் பழுதுபார்க்க வேண்டுமென்ற கருத்து இந்த அறிக்கையிலே தெளிவாக எடுத்துக் கோடிட்டுக் காட்டப்பட்டிருக்கின்றதே அதை நீங்கள் பாராட்டக் கூடாதா?

எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத தமிழ் என்று சங்கே முழங்கு என்று சிந்தை குளிர சிந்து பாடினாரே சிங்க நிகர் தமிழ் மறவன், சிந்தனைக்கோர் சிற்பி, சிறப்பின் சிகரம், புதுமைப்பித்தன், புத்துலகின் வித்தகன், புதுவையில் வந்தோன், புரட்சிக் கவிஞர் பாவேந்தர் பாரதிதாசன், அந்தப் பாரதிதாசனுக்குப் பல்கலைக் கழகம் கண்டாரே புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள், அதை அவர்கள் பாராட்டக் கூடாதா?

நான் பேசுகின்ற அந்தத் தமிழுக்கு, தஞ்சையும், புதுவையும் போட்டி விளையாடுகின்ற தஞ்சைத் தரணியிலே ஒரு பல்கலைக் கழகத்தைத் தமிழுக்காக அமைத்துத் தந்தாரே அதைப் பாராட்டக் கூடாதா?

இந்தியத் திருநாட்டின் விடுதலைக்காக வித்திட்ட தமிழகத்தின் [illegible] பாரதியின் பெயராலே பல்கலைக்கழகம் கண்டாரே [illegible] பாராட்டக் கூடாதா?



1985 மார்ச் 15] [திரு. ப. ந. இராமச்சந்திரன்]

அதுமட்டுமல்ல, தலைவரவர்களின் மூலமாக மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்களை வேண்டுகின்றேன். வெங்கொடுமைச் சாக்காட்டில் விளையாடி களம் கண்டு, ஈழத்திலேயிருந்து இங்கே திரும்பி வந்தார்களே ஈழத் தமிழர்கள், அந்தத் தமிழர்களுக்காக, இங்கே தமிழகத்தின் பொருளாதார நிலையைப் பாதித்தாலும் பரவாயில்லை என்று எண்ணி, அவர்களை அகதிகளாக ஏற்காமல் அன்புச் சகோதரர்களாக, இரத்தத்தின் இரத்தமான, உடன் பிறப்புக்களாக ஏற்றுக்கொண்டு, அதற்கான திட்டங்களைத் தீட்டித் தந்திருக்கிறார்களே புரட்சித் தலைவர் அவர்கள், அந்த இனிய திட்டத்தை நீங்கள் பாராட்டக் கூடாதா என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, இன்றையதினம், கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாமென்று சொன்னார்களே, அந்தக் கொள்கையில் சிறிதளவேனும் மாற்றமிருக்கக் கூடாது என்ற உயர்ந்த கருத்தில் விடுதலையடைந்த பிறகு காங்கிரஸ் ஆட்சி படாத ஆலயங்களே இல்லை என்று சொல்லுகின்ற அளவிற்கு இன்றைய தினம் தமிழகத்தில் இருக்கின்ற அத்தனை ஆலயங்களும் புதுப்பிக்கப்பட்டு, திருப்பணி செய்யப்படுகிறது. அதை நீங்கள் பாராட்டக்கூடாதா? புரட்சித் தலைவர் அவர்களால் தெய்வங்களுக்குக் கூட இன்றையதினம் மரியாதை ஏற்பட்டிருக்கின்றது. அந்தக் காரியத்தை நீங்கள் பாராட்டக்கூடாதா? இன்றையதினம் நாம் பார்க்கிறோமே, நாற்பதாண்டுகால விடுதலை வரலாற்றில் பால்வளத்துறை என்ற ஒன்று இருந்ததாக வரலாறே தெரியவில்லை. ஆனால் இன்றையதினம் பார்க்கிறோமே ஈரோட்டிலே, மதுரையிலே மதர் டைரி என்னும் பால்பெருக்குப் பண்ணைகள் எங்கு பார்த்தாலும் வெண்மைப் புரட்சி என்ற வகையிலே கிராமங்களில் பால் உழவர் கூட்டுறவுச் சங்கங்கள், பால் விநியோகச் சங்கங்கள் இல்லாத கிராமமே இல்லாத அளவில் ஒரு நிலைமையை உருவாக்கி இன்றையதினம் நாட்டிலே வெண்மைப் புரட்சியை உருவாக்கி இருக்கிறார்களே, அதைப் பாராட்டக்கூடாதா?

தொழிற்சாலைகளைப் பொறுத்தவரையில் தஞ்சையிலே மயிலாடுதுறையில் 10 கோடி ரூபாய் செலவிலே ஒரு தொழிற்சாலையை உருவாக்கி இருக்கிறார்களே, அது இன்றையதினம் நிறைவேற்றப்பட்டிருக்கின்றதே, அதை நீங்கள் பாராட்டக் கூடாதா? திருச்சியிலே ஹெவி அல்லாய் பெனிட்ரேட்டிங் ஃபேக்டரி என்ற ஒரு ஆலையை மத்திய அரசு அனுமதியோடு 170 கோடி ரூபாய் செலவில் உருவாக்கி இருக்கிறார்களே, அது இந்தத் திட்டத்தில் காணப்படுகின்றதே அதை நீங்கள் பாராட்டக் கூடாதா?

அதோடு மட்டுமல்ல. இன்றையதினம் கிராமப்புறங்களில்—அண்ணல் காந்தியடிகள் சொன்னார்கள் கிராம ராஜ்யம்தான் ராம ராஜ்யம் என்று. மாண்புமிகு உறுப்பினர்கள்கூட இங்கே சொன்னார்கள் கிராமப்புறங்கள் வளர்ந்தால் நாடு வளரும் என்று. அந்தச் சீரிய சித்தாந்தத்தை வலியுறுத்துகின்ற வகையில் என்.ஆர்.ஈ.பி., மற்றும் ஆர்.எல்.ஈ.ஜி.பி போன்ற கிராமப்புறங்களில் வேலைவாய்ப்பை உருவாக்கித் தரும் திட்டங்களை கிராமப்புறங்களைச் சீராக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு கொண்டு வந்தார்களே புரட்சித் தலைவர் அவர்கள். அதை நீங்கள் பாராட்டக்கூடாதா? இதையெல்லாம் விட்டுவிட்டாலும் கூட விடுதலை அடைந்த பிறகு எந்த அரசும் செய்திராத அளவுக்கு ஏழை எளிய விவசாயிகளுக்கு ஏறத்தாழ 200 கோடி ரூபாய் அளவில் கூட்டுறவுக் கடன் வழங்கும் சங்கங்களிலிருந்து கடன்களைத் தள்ளுபடி செய்து கொடுத்திருக்கிறார்கள் புரட்சித்தலைவர் அவர்கள் அப்படிப்பட்ட அரசுக்கு நீங்கள் நன்றி சொல்லக்கூடாதா? பாராட்டக் கூடாதா? என்று நான் கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்து, அன்பிற்குரிய மாண்புமிகு உறுப்பினர்களிடம் பேரவைத் தலைவர் அவர்களின் மூலமாக ஒன்றை நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். அரசுப் பணியாளர்களுடைய குடும்ப நல உதவிக்காக ஏறத்தாழ 10 ஆயிரம் ரூபாயிலே இருந்த அந்த சேமநல நிதியினை 20 ஆயிரம் ரூபாயாக உயர்த்தி இருக்கிறார்களே அந்தத் திட்டத்தை நீங்கள் பாராட்டக்கூடாதா?





அடுத்து, இலங்கைப் பிரச்சினையில் இங்கே நான் ஒரு கருத்தைச் சொல்ல ஆசைப்படுகிறேன். இந்த மாமன்றத்திலே பேரறிஞர் அண்ணா அவர்களின் தம்பியான புரட்சித் தலைவர் அவர்கள்—சென்ற ஆண்டு கருதுகிறேன்—ஒரு கருத்தை வெளியிட்டார்கள். 'இந்தி எதிர்ப்புப் பிரச்சினையில் திராவிட முன்னேற்றக் கழகமும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும் இரட்டைக் குழல் துப்பாக்கிகளாகச் செயல்படும்' என்று சொன்னார்கள். நான் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்வது எல்லாம் ஈழத் தமிழர் பிரச்சினையில் இந்தியத் திருநாட்டின் 70 கோடி மக்களும் துப்பாக்கிகளாக மாற வேண்டிய சந்தர்ப்பம் வரும் என்பதை நான் இந்த மன்றத்தின் வாயிலாகத் தெரிவித்துக் கொள்கிறேன். அந்தக் கருத்தைத்தான் இங்கே பேசிய பேராசிரியர் பெருந்தகை அவர்கள் சொன்னார்கள். அன்னை இந்திராகாந்தி அவர்கள் சுடப்படுவதற்கு முன்னால் எப்படியும் இந்த இலங்கை அப்பாவித் தமிழர்களுக்கு வாய்ப்பளிக்க அவர்கள் தகுந்த நடவடிக்கை எடுக்க சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக்கொண்டிருந்தார்கள் என்று சொன்னார்கள்.

"ஞாலம் கருதினும் கைகூடும் காலம்
கருதி இடத்தாற் செயின்"

என்ற வள்ளுவன் வாக்கிற்கிணங்கத்தான் அன்னை இந்திராகாந்தி அவர்களும், புரட்சித் தலைவர் அவர்களும் செயல்பட்டுவந்தார்கள். எனவே அவர்களுடைய போக்கு இயலாமையோ அல்லது காரியம் ஆற்ற முடியாமையோ அல்ல என்பதை இந்த மன்றத்தில் சொல்லிக்கொள்கிறேன்.

இங்கே இருக்கின்ற எதிர்க்கட்சி நண்பர்களுக்கு ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இங்கே பேசியவர்கள் எல்லாம் சொன்னார்கள், ஆந்திராவைப் பாருங்கள், கர்நாடகத்தைப் பாருங்கள், அஸ்ஸாமைப் பாருங்கள், உத்திரப்பிரதேசத்தைப் பாருங்கள், மேற்கு வங்கத்தைப் பாருங்கள் என்றெல்லாம் சொன்னார்கள். அந்தப் பொதுவுடைமைக் கருத்துக்களைச் சொல்கின்ற புரட்சிக் குயில்களுக்கும், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்களுக்கும் நான் சொல்லிக்கொள்வது நீங்கள் தயவுசெய்து தமிழகத்தைப் பாருங்கள், தமிழகத்தைப் பார்ப்பதற்காகத்தான் நம்மை எல்லாம் மக்கள் வாக்களித்து

இங்கே அனுப்பி இருக்கிறார்கள். வாக்களித்த அந்த ஏழை, பாட்டாளி மக்கள் இரட்டை இலையையும் பார்த்திருந்தார்கள்; காக்கும் கை சின்னத்தையும் பார்த்திருந்தார்கள்; கதிர் அரிவாள் சின்னத்தையும் பார்த்திருந்தார்கள்; உதயசூரியனையும் பார்த்திருந்தார்கள். அவர்கள் அவ்வாறு பார்த்ததனால் புரட்சித் தலைவர் வெகுதூரத்திலே, அமெரிக்கத் திருநாட்டிலே இருக்கிறார் என்றறிந்தும் வாக்களித்து அந்த புரட்சித் தலைவரை ஆட்சியிலே அமர்த்தியிருக்கிறார்கள். எனவே அதை அறிந்து நீங்கள் செயல்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து என்னுடைய தொகுதிப் பிரச்சினையாக [illegible] கருத்துக்களை மட்டும் இங்கே சொல்வதற்கு பேரவைத் தலைவர் அவர்கள் அனுமதி அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய பட்டுக்கோட்டை தொகுதியில் புதிய பேருந்து நிலையம் அமைப்பதற்காக புரட்சித்தலைவர் அவர்களின் அரசு வழிவகை செய்திருக்கின்றது. பாதாளச் சாக்கடைத்திட்டம் அமைய வழிவகை செய்திருக்கின்றது. புதிய பாலிடெக்னிக் அமைய வழிவகை செய்திருக்கின்றது. கோட்டாட்சி, வட்டாட்சி, வணிக வரி அலுவலகம் அமைய வழிவகை செய்திருக்கின்றது. அப்படிப்பட்ட நல்ல அரசு எதிர்வரும் காலங்களில் என்னுடைய தொகுதியில் நகராட்சியில் அடிக்கல் நாட்டப்பட்ட நிலையில் கட்டப்படாமல் இருக்கின்ற அந்தத் திருமண மண்டபத்தைக் கட்டித்தர வேண்டும், அதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, பட்டுக்கோட்டையில் காவல் நிலையத்தை நகரம், டவுன் என்று பிரித்து இன்றையதினம் இருக்கின்ற காவல் நிலையத்தில் வசதிகள் போதவில்லை; காவலர்கள் பற்றாக்குறையாக இருக்கிறார்கள்; ஆகவே பட்டுக்கோட்டை நகரத்தில் ஒரு காவல் நிலையத்தை உருவாக்கித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 10-20)

அதோடு மட்டுமல்ல, நான் வழக்கறிஞன் என்ற காரணத்தாலே, சட்டக் கல்லூரியின் வளாகத்திற்குள்ளே படித்த பட்டதாரி என்ற காரணத்தாலே ஒரு கருத்தைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். பட்டுக்கோட்டையில், எல்.எம். கோர்ட் [illegible] அரசு [illegible]





மருத்துவமனையை விரிவுபடுத்தும் காரணத்தால் வேறு ஒரு இடத்திற்கு மாற்றுகிறார்கள். அதனால் பொதுமக்களுக்கும் வழக்கறிஞர்களுக்கும் இடையூறாக, வசதிக் குறைவாக இருக்கிற காரணத்தினால் அரசு அதைப் பரிசீலனை செய்து, அந்த சப் கோர்ட் வளாகத்திற்குள்ளே இந்தக் கோர்ட்டுக்கான கட்டிடத்தைக் கட்டித்தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு வாய்ப்பளித்த பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றியைக் கூறி என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

* திரு. சோ. மா. இராமச்சந்திரன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இங்கே நம்முடைய மேதகு ஆளுநர் அவர்கள் இந்த அவைக்கு வைத்துள்ள அறிக்கையை ஒட்டி, இங்கே பேசிய ஆளுங்கட்சி உறுப்பினர்கள் அத்தனை பேரும் [illegible] முன்னேற்றக் கழகம் அதை வேண்டுமென்றே எதிர்த்து வருகிறது என்று தெரிவிக்கின்றார்கள். அவர்கள் சொல்வது எல்லாம் நாங்கள் சத்துணவு போட்டோம். அந்தச் சத்துணவை வைத்தே பாராட்டக் கூடாதா என்பது. அவர்கள் அதுபற்றி பெருமையாகப் பேசுகின்றார்கள். அந்தச் சத்துணவை வைத்துதான் ஆளுநர் உரையில் மிக அதிகப்படுத்திச் சொல்லி இருப்பதைக் கண்டு ஏமாற்றம் அடைந்த உறுப்பினர்களிலே நானும் ஒருவன் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இந்தச் சத்துணவைப் பற்றி பெருமையாகப் பேசுவதை நான் வேண்டாம் என்று சொல்லவில்லை என்றாலும், நம்முடைய வளர்ச்சி எதிலே இருக்கிறது என்பதைக் குறிப்பிட்ட புள்ளி விவரத்தோடு சொல்ல வேண்டுமென்பதை நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். நான் சோறு போட்டேன், சோறு போட்டேன் என்று சொல்வதை விட அன்று கலைஞர் அவர்கள் ஆண்டு கொண்டிருந்த காலத்தில் தொழில் துறையில் மூன்றாவது இடத்திலேயிருந்த தமிழகம் இன்றைய தினம் எங்கே தள்ளப்பட்டிருக்கிறது என்பதைச் சிந்திக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். நான் சொல்லும்போது ஆளும் கட்சி உறுப்பினர்கள் [illegible] பாய்ச்சலோடு எங்களைப் பார்க்கிறார்கள். சில உறுப்பினர்கள் அதை சிரித்துக் கொண்டே வரவேற்கிறார்கள் என்பதை நான் கண்டுகொண்டுதான் இருக்கிறேன். அதிலே உற்ற தோழர்களாக

இருக்கிற காங்கிரஸ் தோழர்கள் சொல்லும்போது அவர்களை எல்லாம் விட்டுவிட்டு, நேரடியாக திராவிட முன்னேற்றக் கழகத்தின்பால் பாய்வது என்ன என்று எனக்குத் தெரியவில்லை.

ஆகவேதான் நான் சொல்கிறேன் என்று சொல்வதைவிட பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னதை நான் இங்கே கூற விரும்புகிறேன். அதனால் ஆளும் கட்சித் தோழர்களுக்கு இனிமையாக இருக்கும் என்பதால் நான் அவர்களுக்குச் சுட்டிக்காட்டி, இதற்கு முன்பு இந்த நாடு வளர்ச்சி பெற வேண்டுமென்பதற்காக அவர் எவ்வளவு உரிமையோடு சொன்னார் என்பதை இப்பொழுது நான் அவையிலே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அண்ணா அவர்கள் அன்றிருந்த ஆட்சியைப் பற்றி ஒரு குறிப்பைச் சொன்னார்கள். நீங்கள் அணையைக் கட்டினேன் என்கிறீர்கள், நீங்கள் மதிய உணவைப் போட்டேன் என்று சொல்கிறீர்கள். இதையெல்லாம் வைத்துப் பார்த்தால் நான் கூட உங்களைக் கேட்கிறேன், வெள்ளையன்கூட இந்த நாட்டிற்கு ரயிலைக் கொண்டு வந்தான், அவன்தான் ஆகாயவிமானத்தைக் கொண்டு வந்தான், அவன்தான் ஆயிரம் மைலுக்கு அப்பாலும் பேசக்கூடிய தொலைபேசியைக் கண்டு பிடித்தான். நான் பேசுகின்ற இந்த ஒலி பெருக்கி கூட அவன் கண்டு பிடித்து தந்ததுதான். ஆகவே, அந்தமுறையில் பார்க்கிறபோது அவர்களை போ என்று சொல்வது முறையா என்று கேட்டார்கள். அது எப்படி சரியில்லையோ இதுவும் சரியில்லை என்று சொல்லி நாட்டில் தொழில்வளம் உயரவேண்டுமே தவிர, நான் சோறு போடுகிறேன் என்று சொல்லவேண்டாம் என்ற முறையில் அண்ணா அவர்கள் உங்களுக்கு அறிவுரையாக சொல்லியிருக்கிறார்கள் என்பதை ஞாபகப்படுத்த விரும்புகிறேன். நான் இதைச் சொல்வதினால் நீங்கள் யாரும் கோபப்படமாட்டீர்கள் என்று கருதுகிறேன். என்னுடைய தானைத்தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சியின் போது தமிழகம் தொழில் துறையில் மூன்றாவது இடத்தில் இருந்ததை யாரும் மறுக்கமாட்டீர்கள் என்று கருதுகிறேன். தமிழகம் இன்றையதினம் எந்த இடத்திற்குத் தள்ளப்பட்டிருக்கிறது என்பதை நம்முடைய கோவில்பட்டி சட்டமன்ற உறுப்பினர் அவர்களும், திருவண்ணாமலை சட்டமன்ற உறுப்பினர் களும் இங்கே குறிப்பிட்டார்கள். அவர்கள் உங்களோடு தோளோடு தோள் சேர்த்து நின்றாலும் பிரச்னைகள் வருகிற





போது மக்களுக்காக எவ்வளவு கருத்தோடு பாடுபடுகிறார்கள் என்பதை எண்ணி அவர்களை இந்த நேரத்தில் மனமுவந்து பாராட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே உறுப்பினர்கள் பேசுகிறபோது 'நீங்கள் தேய்ந்து விட்டீர்கள்' என்று சொல்கிறார்கள். நான் அவர்களுக்கு ஒன்றைச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். அண்ணா அவர்கள் வழியில் வந்தவர்கள் நீங்கள் என்பதை சிந்தித்துப் பார்த்து பேச வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சட்டமன்றத்திற்கு வருவதற்காக ஆரம்பிக்கப்பட்டது திராவிட முன்னேற்றக் கழகம் இல்லையென்று அண்ணா அவர்கள் ஒருமுறை குறிப்பிட்டார்கள். இங்கே நாங்கள் ஒருவர் கூட இல்லையென்றாலும் திராவிட முன்னேற்றக் கழகக் குரல் ஒலித்து கொண்டிருக்கும் என்பதை இந்த நேரத்தில் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து என்னுடைய தொகுதியை பற்றி சிலவற்றை குறிப்பிட விரும்புகிறேன். இன்றையதினம் தேர்ந்தெடுக்கப்பட்ட நகர மன்ற உறுப்பினர்கள் இல்லாத காரணத்தால் எவ்வளவு அலங் கோலங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதை நான் மட்டும் சொல்ல வேண்டாம். சென்னையில் உள்ள மக்கள் அனைவரும் இதனை நன்றாக அறிவார்கள். அதிலும் குறிப்பாக கொசுத் தொல்லை இன்றையதினம் மிக அதிகமாக இருப்பதை அனைவரும் அறிவோம். என்னுடைய தொகுதியில் பல ஆளும் கட்சி உறுப்பினர்களும், அதிகாரிகளும் இருந்து வருகிறார்கள். என்னுடைய அண்ணாநகர் தொகுதிக்கு இரவில் ஆறு மணிக்கு மேல் யாராவது விருந்தினர் வந்தால் வீட்டில் இருப்பவர்கள் அவர்களை வாருங்கள் என்று அழைப்பதற்குகூட பயப்படுகி றார்கள். காரணம் வாயைத் திறந்து பேசும்போது கொசு உள்ளே புகுந்துவிடுமோ என்ற பயத்தில் ஜாடையிலேயே அவர் களை அழைக்கிறார்கள். அந்த அளவிற்கு என்னுடைய தொகுதி யில் கொசுத் தொல்லை இருந்து கொண்டிருக்கிறது. இந்த நேரத்தில் ஒன்றை நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். 1982-83 ஆம் ஆண்டு ஆடிட்டர் ஜெனரல் அறிக்கையிலிருந்து இதைக் குறிப்பிடுகிறேன். கொசு ஒழிப்புத் திட்டத்தின் கீழே நம்முடைய தமிழக அரசிற்கு மத்திய அரசால் இனாமாக 38 லட்சம் ரூபாய் தெளிப்பான் எண்ணெய் ஒதுக்கப்பட்டது.

[திரு. சோ. மா. இராமச்சந்திரன்] [1985 மார்ச் 15

அதை முழுவதுமாக பெறாமல் ரூ. 25.44 மதிப்புள்ள என்ணையை திருப்பி அனுப்பியிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன். தேர்ந்தெடுக்கப்பட்ட நகரமன்ற உறுப்பினர்கள் இல்லாத காரணத்தால்தான் இவ்வளவு அலங்கோலங்களும் நடந்து கொண்டிருக்கின்றன என்பதை தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

(முற்பகல் 10.30.)

அடுத்து, இங்கே குடகனாறு பற்றி நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் ஒருவர் குறிப்பிடும்போது, கலைஞர் கட்டிய அணை உடைந்துவிட்டது என்று சொன்னார். அந்த அணையைக் கட்டுவதை யாரும் தடுக்கவில்லை. அந்த அணையைக் கட்டுவதற்காக 1982-83 ஆம் ஆண்டிலே ஒதுக்கப்பட்ட தொகை 63.80 இலட்சம் ரூபாய். அந்தப் பணத்தைச் செலவிடாமல் 62.93 இலட்சம் ரூபாயைத் திருப்பிச் செலுத்தியிருக்கிறார்கள். நிர்வாகம் சரியாகச் செயல்படவில்லை என்பதைத்தான் இது குறிக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, நகராட்சிப் பள்ளிகள் பற்றி இலவற்றை குறிப்பாக என்னுடைய தொகுதியிலிருப்பனவற்றைப்பற்றி மட்டும் குறிப்பிட விரும்புகிறேன். என்னுடைய தொகுதியில் எம்.எம்.டி.ஏ. காலனி என்று ஒன்று இருக்கிறது. அங்கே இருக்கிற ஒரு பள்ளியில் மொத்தம் ஐந்து அறைகள் இருக்கின்றன. அந்தப் பள்ளியில் 1,126 குழந்தைகள் படிக்கின்றார்கள். ஐந்து அறைகளிலே 1,126 குழந்தைகள் எப்படி வசதியாகப் படிக்க முடியும் என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

ஆளுநர் உரையைப்பற்றி பெருமையாகப் பேசிய உறுப்பினர்கள் சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். அவர்களுக்குத் தெரியும். இங்கே திராவிட முன்னேற்றக் கழகம் நல்லமுறையில் செயல்பட்டுக்கொண்டிருப்பதால்தான் அவர்கள் ஆதரித்துப் பேசுகின்றார்களே தவிர, உள்ளன்போடு பேசவில்லை என்று நான் சுட்டிக்கொள்ள விரும்புகிறேன்.



1985 மார்ச் 15] [திரு. சோ. மா. இராமச்சந்திரன்]

திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இருந்தபோதுதான் குடிசைமாற்று வாரியம் ஏற்பட்டது. அந்த குடிசைமாற்று வாரியத்தின் தலைவராக திரு. அரங்கண்ணல் அவர்கள் இருந்த போது என்னுடைய தொகுதியில் சில கழிவறைகளைக் கட்டினார்கள். அவை இன்றையதினம் பராமரிக்கப்படாமல், செயல்படாமல் உள்ளன. அங்கே இருக்கிற தாய்மார்களும் சகோதரர்களும், அந்தக் கழிவறைகள் செயல்படாமல் உள்ளதால், மாலை ஆறு மணிக்குமேல் அந்தக் கூவம் ஆற்றங்கரையில் வரிசையாக அமர்ந்திருப்பதை பார்க்கலாம். எதிலே சோஷலிசம் இருக்கிறதோ இல்லையோ, கழிப்பிடத்திற்கு செல்லும் ஆண்களும் பெண்களும் அங்கே ஒரே நேரத்தில் சமமாக அமர்ந்திருப்பதிலே சோஷலிசத்தைப் பார்க்கலாம். இந்த நிலைமையை மாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போன்று மின்சார இணைப்பு பற்றி ஆளுநர் உரையில் சொல்லியிருக்கிறார்கள். ஆளுநர் உரையிலே இந்த நாட்டுக்கு ஒதுக்கியிருக்கிற பணத்திலே 25 சதவீதம் மின்சாரத்திற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இவ்வளவு பணம் செலவிட்டும், இன்றையதினம் இருக்கின்ற நிலைமை என்ன? என்னுடைய அண்ணாநகர் தொகுதியில், அண்ணா நகரில் 11—9—1984 அன்று கனெக்ஷன் கேட்டு, அதற்குப் பணம் கட்டிய ரசீதுகள் இருக்கின்றன. இன்றுவரையில் அவர்களுக்கு மின்சார இணைப்பு கொடுக்கவில்லை. 500, 600 வீடுகளுக்கு இப்படி பணம் கட்டியும் கனெக்ஷன் கொடுக்காமல் இருக்கிறார்கள். மின்சாரத் துறை அதிகாரிகளைக் கேட்டால் கேபிள் இல்லை; நீங்கள் வாங்கிக்கொடுத்தால் உடனே இணைப்பு கொடுத்துவிடுகிறோம் என்று சொல்கிறார்கள். இவ்வளவு பெருமளவுக்குச் செலவு செய்தும் கனெக்ஷன் கேட்கிறவர்கள்தான் கேபிள் வாங்கிக் கொடுக்க வேண்டும் என்று சொல்லக்கூடிய அளவுக்கு இருக்கிறது என்றால் இந்த ஆட்சியிலே சரியாக நிர்வாகம் செய்ய முடியவில்லை என்பதைத்தான் இது காட்டுகிறது.

(திரு. சோ. மா. இராமச்சந்திரன்) [1985 மார்ச் 15

அடுத்து, என்னுடைய தொகுதியில் நமச்சிவாயபுரத்தில், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் குடிசைமாற்று வாரியத்தின் மூலமாக சலவைத் தொழிலாளர்களுக்கு துணி வெளுப்பதற்காக சில கிணறுகளை வெட்டி, ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒரு தொட்டி வீதம் கட்டிக்கொடுத்தார்கள். அவை பராமரிப்பு இல்லாத காரணத்தால் இன்றையதினம் செயல்படவில்லை. அந்த சலவைத் தொழிலாளர்கள் கூவம் ஆற்றிலே வருகின்ற கழிவு நீரில் துணிகளை அலசி சலவை செய்து கொடுக்கிற காரணத்தால் சென்னையில் இருக்கிற பெருவாரியான மக்களுக்கு, அந்தத் துணிகளின் மூலமாக தொற்றுநோய் வரக்கூடிய நிலைமை இருக்கிறது. இப்படிப்பட்ட நிலைமைகளை எல்லாம் போக்க வேண்டும். இப்படிப்பட்ட பல்வேறு காரணங்களால் இன்றையதினம் இந்த ஆளுநர் உரையில் நாங்கள் பெருத்த ஏமாற்றம் அடைந்திருக்கிறோம் என்பதை இந்த நன்றி கூறும் தீர்மானத்திலே தெரிவித்துக்கொள்கிறோம் என்று சொல்லி அமர்கிறேன்.

* திரு. எம் இராசரத்தினம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையின் மீது பேசுவதற்கு வாய்ப்பளித்த தலைவர் அவர்களுக்கு முதற்கண் என்னுடைய நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன். புரட்சித் தலைவர் அவர்கள் மூன்றாம் முறையாக தமிழகத்தின் முதல்வராக பொதுமக்களுடைய பேராதரவுடன் ஆட்சி பொறுப்பேற்றிருக்கிறார்கள். மக்கள் தீர்ப்பே மகேசன் தீர்ப்பு என்று மேடைதோறும் கூறும் மாற்றுக் கட்சி நண்பர்கள், இங்கே மக்களுடைய தீர்ப்பை, அனுதாப அலை என்று கூறுவது மிகவும் கேலிக்குரியதாகும் என்று நான் பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

அதைப்போன்று, மக்களுடைய எண்ணத்தையும், அவர்களுடைய தீர்ப்பையும் ஏதோ அனுதாபத்தாலே அவர்கள் வாக்களித்தார்கள், சிந்திக்கத் திறன் அற்றவர்கள் என்று கூறுவது மிகவும் முறையற்றது என்பது மட்டுமல்ல, தேர்தல் நேரத்திலே மக்களிடத்திலே மன்னிப்பைக் கோரி வாக்குகளைக் கேட்டவர்கள் இதற்கும் சேர்த்து எதிர்காலத்திலே மன்னிப்பு கேட்க வேண்டி வரும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.



[திரு. எம். இராசரத்தினம்] [1985 மார்ச் 15

அதைபோன்று மறப்போம், மன்னிப்போம் என்ற மாபெரும் கொண்டு இருக்கும் நமது மாநிலத்தில் உள்ள பச்சைத் தமிழர்கள் கட்ட மன்னிக்க முடியாத பல தவறுகளைச் செய்ததின் விளைவாகத்தான் இன்று மக்களுடைய தீர்ப்பையே அனுதாப அலை என்று பேசுபவர்களைத் தூக்கி எறிந்துவிட்டார்கள் என்பது நாடறிந்த உண்மை. தோல்வியின் காரணமாக, தாழ்த்தப்பட்ட மனப்பான்மையின் காரணமாக, தங்களைத் தாங்களே தேற்றிக்கொள்[illegible]காக, இன்றைக்கு அண்ணா தி.மு.க.வினர் அனுதாப [illegible]அலையினால் ஆட்சிக்கு வந்து விட்டார்கள் என்று மேடைகளிலேயும், வெளியீடுகளிலும், தி.மு.க. வினர் பேசுகிறார்கள் என்[illegible] மக்கள் நன்றாகப் புரிந்து வைத்துக் கொண்டிருக்கிறா[illegible]

இதைக் குறிப்பிடும்போது, நான் ஒன்[illegible] குறிப்பிட [illegible] விரும்புகிறேன். அண்ணாவின் கொள்கை[illegible] உறுதியாக [illegible] பின்பற்றக்கூடிய எங்களது இதய தெய்வம் புரட்சித் தலைவர், அண்ணாவின் நடைமுறைகளை பின்பற்றுகிற எங்களுடைய புரட்சித் தலைவர், தன்னுடைய மருத்துவச் செலவிற்குக் கூட, அரசினுடைய உதவியை எதிர்பார்க்காமல், தன்னுடைய [illegible] அந்தச் செலவுகளை ஏற்கும் என்று அண்ணா தி.மு.கழகம் அவர்கள் அண்ணா[illegible]டைய அறிவித்ததோடு மட்டுமல்லாமல், வழியிலே நடைபோட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நீங்கள் உணர வேண்டும்.

அதேநேரத்தில் மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னதை இதிலாவது தி.மு.க.வினர் கடைப்பிடிப்பார்கள் என்று எதிர்பார்த்தோம். ஆனால் எருக்கம்பூவில் வாசத்தை எதிர்பார்த்தது போல, ஆயிற்று. எங்கள் தலைவர் செய்யும் நல்ல காரியங்களைக் கூட உங்களுக்குப் பாராட்ட மனம் இல்லை என்றாலும், குறைந்தது குறை கூறாமல் இருக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

கொடுத்துச் சிவந்த கரங்கள், கறைபடாத கரங்களுக்குச் சொந்தக்காரர் என்று மக்களிடம் நற்பெயர் வாங்கிய புரட்சித் தலைவர் அவர்களுக்கு, அண்ணா தி.மு.க. தோழர்கள் மட்டுமல்ல, கூலி வேலை செய்யும் பாட்டாளிகளும், விவசாயக்

கூலி வேலை செய்யும் பெண்களும் ஒருவேளை உணவு கூட இல்லாமல் போனாலும் பரவாயில்லை, என் தர்மத் தலைவனுடைய மருத்துவச் செலவிற்கு சிறு உதவி செய்யக் கூடிய வாய்ப்பு தனக்கு கிடைத்ததே, அதுதான் பாக்கியம் என்று கருதி நன்கொடை அளிப்பதைக் காணத்தான் போகிறீர்கள்.

சத்துணவு தந்த சரித்திர நாயகனுடைய புகழை யாராலும் அழிக்க முடியாது என்பதுதான் கடந்த தேர்தலின் முடிவு. புரட்சித் தலைவர் ஆற்றும் பணிகள் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியவை. நீங்காத சரித்திரம் படைக்கும் புரட்சித் தலைவர் முதல்வரின் பொற்காலங்களில் நானும் இச்சபையில் சட்டமன்ற உறுப்பினராக அங்கம் வகிக்க வாய்ப்பளித்த எங்கள் தங்கத் தலைவனுடைய பொற்பாதங்களுக்கு என் வணக்கத்தைச் சமர்ப்பிக்கிறேன். பெரும்பான்மையாக வாக்குகளை அளித்த தொகுதி மக்களுக்கும், வெற்றிக்குப் பாடுபட்ட அண்ணா தி.மு.க. தோழர்களுக்கும், காங்கிரஸ் பேரியக்க தோழர்களுக்கும் காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ் இயக்கத் தோழர்களுக்கும் இந்தத் தருணத்திலே நான் நன்றி கூற கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, நான் தென் ஆற்காடு மாவட்டத்தின் அறநிலைய நியமன மண்டலக் குழுத் தலைவராக பணியாற்றியதினால், கோயில் நிலங்களின் ஆக்கிரமிப்புகளை நன்றாக அறிந்தவன் என்ற முறையில் அரசு உடனடியாக குத்தகை நில உரிமை சட்டத்திலிருந்து அதனை விடுவித்து விரைவாக மாற்று ஏற்பாடுகள் செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, அரசு தடை உத்தரவு இருந்தும் சில இடங்களில் வீடியோ படங்கள் திரையிடுவதை அரசு உடனடியாகத் தடுத்து நிறுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். குறிப்பாக கிராமங்களில் திருவிழா நடக்கும் இடங்களில் சமூக விரோதிகளின் துணையுடன் நபர் ஒன்றுக்கு ரூபாய் ஒன்று என்ற வீதத்தில் வசூல் செய்து படங்கள் காட்டப்படுகின்றன. ஒரு காரிலேயே சிறிய ஜெனரேட்டரை வைத்து, மற்றும் வீடியோவுடனும் வந்து படத்தை திரையிடுகிறார்கள். பொதுமக்கள் புகார் செய்து அதிகாரிகள் வருவதற்குள் போய் விடுகிறார்கள். அதுமட்டுமல்லாமல், குறிப்பாக தணிக்கை





செய்யாத படங்களையும் மிக அருவருக்கத்தக்க காட்சிகளையும் திரையிடுகிறார்கள். எனவே இந்நிலை நீடித்தால் பொதுமக்களும், குறிப்பாக பள்ளியில் பயிலும் பாலகர்களும் கெடுவதுடன் கிராமப்புறங்களில் ஏற்கனவே வசூலில் பின்தங்கியிருக்கும் திரையரங்குகளை மூட வேண்டிய நிலை ஏற்படும். அதனால், அரசுக்கும் வருவாய் இழப்பு ஏற்படக்கூடிய ஆபத்து இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே மாநிலத்திலுள்ள மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கும், மாவட்ட காவல் துறை அதிகாரிகளுக்கும் தகுந்த நடவடிக்கை எடுக்க அறிவிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

ஏற்கனவே கலைத் துறைக்கு பல நன்மைகளைச் செய்திருக்கும் நமது முதல்வர் அவர்களையும், நல்ல திட்டங்களை வகுத்துத் தந்திருக்கிற அறநிலையத் துறை அமைச்சர் அவர்களையும் கலைத் துறையினர் பாராட்டுகிறார்கள் என்பதோடு, உடன் இதனையும் செய்தால், தயாரிப்பாளர்கள், விநியோகஸ்தர்கள், திரை அரங்கு உரிமையாளர்கள், பாதுகாக்கப்படுவார்கள் என்பதுடன், நமது அரசை என்றும் நன்றிப் பெருக்கோடு நோக்குவார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 10.40.)

மேலும் திரைப்படத் துறை பற்றி பல்வேறு விவரங்களை வரவிருக்கும் வரவு செலவு கூட்ட விவாதத்தில் குறிப்பிடும் வாய்ப்பு இருப்பதனால் இதை அத்துடன் நிறுத்திக் கொள்கிறேன்.

அடுத்து, விவசாயத்திற்கு முன்னுரிமை கொடுத்து கூடுதலான நேரத்திற்கு மின் சக்தி கொடுத்தால்தான் விவசாயம் முழுமையாக செய்ய இயலும். மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள் சிரமைத்து, உணவு உற்பத்தியை முன்னிட்டும், விவசாயிகளின் அவசர அவசியத்தை முன்னிட்டும் புரிவுடன் நோக்கியும் உடன் விவசாயத்திற்கு முன்னுரிமை கொடுக்க வேண்டுகிறேன். மேலும் கோடை காலம் மிக வறட்சியாக இருக்கும் அறிகுறி தென்படுவதால் அனல் மின்சார நிலையங்களை அதிக அளவு மின்சார உற்பத்தி செய்யவும்,

இடையில் எந்தவித தடங்கலுக்கும் இடம் இல்லாமலும் செயலாற்றும்படி அதிகாரிகட்கு அறிவிக்குமாறு அன்புடன் அவசர அவசிய வேண்டுகோளாக விடுக்கிறேன்.

அடுத்து, கரும்பு விவசாயிகளுக்கு அரசு நிர்ணயித்து அறிவித்த விலையை இன்னும் சில தனியார் ஆலைகள் அமல்படுத்தாமல் இருப்பது வேதனைக்குரியது. அரசு உடனடியாக கவனம் செலுத்துவதுடன் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் இதற்கு தனிக் கவனம் செலுத்தி கரும்பு விவசாயிகளின் குறையைப் போக்க வேண்டுகிறேன்.

அடுத்து, அரசினால் ஏற்கனவே முடிவு செய்யப்பட்டு, விழுப்புரம் மாநகரை தலைநகரமாகக் கொண்டு பிரிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்ட வள்ளலார் மாவட்டத்தை, மாவட்டத்தின் நடுநாயகமாக விளங்கும் தலைநகரில் எந்தவித மாற்றமும் இல்லாமல் விரைவில் மாவட்ட பிரிவுகளை அமல்படுத்துமாறு பணிவன்புடன் முதல்வர் அவர்களையும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களையும் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, விழுப்புரத்தில் நீண்டகாலமாக திட்டத்திலிருக்கும் பேருந்து நிலையத்தை விரைவில் கட்டி முடிக்க போக்குவரத்துத் துறை அமைச்சரைக் கேட்டுக் கொள்கிறேன். அத்தோடு மிகச் சிறந்த முறையில் பால்வள நிறுவனம் செயல்பட்டுக் கொண்டிருக்கும் இந்த நேரத்தில், என்னுடைய தொகுதியான விழுப்புரத்தில் இருக்கும் பால் வள நிறுவனங்களை பெருநாட்சிக்கும் விரிவுபடுத்த வேண்டும் என்று விரும்பி வேண்டிக் கேட்டுக் கொண்டு இந்த மாமன்றத்தில் பேசுவதற்கு எனக்கு வாய்ப்பை நல்கியதற்காக அவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கலந்த வணக்கத்தை கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

* திரு. ஆ. கா. அ. அப்துல் சமத்: மாண்புமிகு பேரவை யினுடைய துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் ஆற்றிய ஆங்கில உரையினுடைய தமிழ் ஆக்கத்தை நம்முடைய மாண்புமிகு பேரவைத் தலைவர் தமிழிலே வாசித்துக் காட்டினார்கள். ஆனால் ஆங்கில உரைக்கும், தமிழ் உரைக்கும்,





வேறுபாடு இருக்கிறது. மொழிபெயர்ப்பிலே இருக்கக் கூடிய முழுமையடையாத சில வரிகளை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

ஏனென்றால் நம்முடைய பேரவைத் தலைவர் அவர்கள் இந்த அவையிலே அந்த மொழிபெயர்ப்பை வாசித்து விட்ட பிறகு அது வழி வழியாக வரலாற்றிலே இடம் பெறத்தக்க, பதிவேடாகி விடக் கூடிய காரணத்தால் அந்தத் தவறுகளை அன்பு கூர்ந்து திருத்திக்கொள்ளுமாறு நான் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழிலே தரப்பட்டிருக்கக்கூடிய வடிவத்தின் 22-வது பக்கத்திலே, "இத்திட்டத்தினை நிறைவேற்ற மத்திய அரசு மூலம் உதவி பெற இவ்வரசு உலக வங்கியை அணுகுவதென்று கருதியுள்ளது" என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஒரு மாநில அரசு நேரிடையாக உலக வங்கியை அணுகுவது என்பது நம்முடைய அரசியல் சாஸனத்தின்படி இயலாத காரியம். மத்திய அரசின் மூலமாகத்தான் நாம் அணுக முடியும். ஆங்கில உரையிலே அது முழுமையாக அமைக்கப்பட்டிருக்கிறது.

"The State Government propose to approach the World Bank through the Government of India for assistance in implementing this scheme" என்று இருக்கிறது. ஆகவே அந்த மொழிபெயர்ப்பை பதிவேட்டிலே திருத்திக் கொள்ளுமாறு நான் வேண்டிக் கொள்கிறேன். அத்தோடு ஆங்கிலத்தில் செய்யப்பட்டிருக்கக் கூடிய அறிவிப்பில்

"The Government propose to start a Health Services University" என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் தமிழ் ஏட்டில் "சென்னையில் மருத்துவப் பல்கலைக் கழகம் ஒன்றினைத் தொடங்க அரசு கருதியுள்ளது." என்று குறிப்பிடப் பட்டிருக்கிறது. ஹெல்த் சர்வீஸ் யூனிவர்சிட்டிக்கும், மெடிகல் யூனிவர்சிட்டிக்கும் உள்ள அந்த வேறுபாட்டை கருதி, "சென்னையில் மருத்துவ சேவை பல்கலைக் கழகம் ஒன்றினைத் தொடங்க அரசு 'கருதியிருக்கிறது' என்ற திருத்தத்தையும் இணைத்துக் கொள்ள வேண்டும் என்று விரும்புகிறேன்.

(திரு. ஆ. கா. அ. அப்துல் சமத்) [1985 மார்ச் 15

அரசினுடைய சாதனைகளை சொல்லிக் காட்டவும், சாதிக்க இருப்பதை கோடிட்டுக் காட்டவும் ஆளுநர் உரை வாய்ப்பு ஏற்படுத்தித் தந்திருக்கிறது. அதைப்பற்றி நான் மகிழ்கின்றேன். இதில் எதுவுமே இல்லை என்று இடித்துரைக்கவும் மாட்டேன். எல்லாமே இருக்கிறது என்று புகழ்ந்து உரைக்கவும் மாட்டேன். இன்னும் சரியாக சொல்வதானால் நாட்டை அலைக்கழித்துக் கொண்டிருக்கின்ற பிரச்சனைகளைப் பற்றி இந்த அரசு என்ன அவசர உணர்வோடு காரியங்களை நடத்த இருக்கிறது என்பது பற்றி இந்த ஆளுநர் உரையிலே போதுமான குறிப்பு இல்லை என்ற குறைபாடு எனக்கு உண்டு. குறிப்பாக ஒரு சமுதாயத்தை அமைக்க நாம் எல்லாம் சங்கல்பம் கொண்டிருக்கிறோம். ஒரு ஒழுக்கமான சமுதாயம், எல்லோருடைய நன்மையை கருதக் கூடிய ஒரு சமுதாயம் இந்த நாட்டிலே இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலாக ஊறி திளைத்திருக்கக் கூடிய பண்பாட்டை நிலைநிறுத்தக்கூடிய ஒரு சமுதாயம், இதை உண்டாக்குவது நம்முடைய குறிக்கோள் என்பது அரசினுடைய சார்பாக பலமுறை தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

அப்படிப்பட்ட ஒரு சமுதாயத்தை அமைப்பதற்கு இந்த காலத்திலே மிகவும் குந்தகமாக இருக்கக்கூடிய ஒரு செயல் எது என்று சொன்னால் என்னைப் பொறுத்தவரையில் நான் அழுத்தம் திருத்தமாக குறிப்பிட விரும்புகிறேன், நாட்டிலே திறந்து வைக்கப்பட்டு இருக்கக்கூடிய மது வகை கடைகள் தான். இந்த மதுவிலக்கை அமல்படுத்த வேண்டும் என்பதில் பேரறிஞர் அண்ணா அவர்களுக்கு எவ்வளவு அழுத்தமான உணர்ச்சி இருந்ததோ, ஆவல் இருந்ததோ அந்த ஆவல் நிச்சயமாக இன்றைய பெருமதிப்பிற்குரிய முதல்வர் அவர்களுக்கும் இருக்கிறது என்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன். அதை அவர்கள் பல முறை இந்தப் பேரவையிலும் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். மக்களுடைய மன்றத்திலும் அவர்கள் அழுத்தம் திருத்தமாக வலியுறுத்தி இருக்கிறார்கள். இன்னும் சொல்லப் போனால் அண்மையில் தேர்தல் நடந்தபோது தேர்தலிலே, ஆளும் கட்சியின் சார்பாக வாக்குகளை சேகரிப்பதற்கு பொது மக்களை அணுகிய பொறுப்பிலே இருக்கக்கூடிய தலைவர்கள், அண்ணா அவர்கள் பிறந்த நாளாகிய செப்டம்பர் மாதம் 15 ஆம் நாள் அன்று பூரணமான மதுவிலக்கை தமிழகத்திலே கொண்டு



1985 மார்ச் 15] (திரு. ஆ. கா. அ. அப்துல் சமத்)

வருவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்று சொல்லிக் காட்டியிருக்கிறார்கள். இதை நம்முடைய மதிப்பிற்கும், அன்பிற்கும் உரிய முதல்வர் அவர்கள் தேர்தல் காலத்திற்கு முன்னாலேகூட ஒருசமயம் குறிப்பிட்டிருக்கிறார்கள் என்பது எனக்கு நினைவு. அப்படிப்பட்ட ஒரு ஆதாரமான கொள்கையை, ஒரு அடிப்படையான கொள்கையை ஐந்து கோடி மக்களுடைய நல்வாழ்வை கருதக்கூடிய கொள்கையை இந்த ஆண்டு அமல்படுத்துவதற்கு இந்த அரசு என்ன திட்டத்தை முனைப்போடு செய்ய இருக்கிறது என்பதைப் பற்றி ஆளுநர் உரையிலே ஒரு குறிப்பும் இல்லையே என்று நான் வேதனைப் படுகிறேன். ஆளுநர் உரையிலே இல்லாவிட்டாலும் கூட அடுத்து வரக்கூடிய வரவு-செலவுத் திட்டத்தினுடைய உரையில் முன்னவர் அவர்கள் அதற்கான நிதி ஒதுக்கீட்டையும் செய்து முதலமைச்சர் அவர்களுடைய சார்பாக ஒரு திட்டவட்டமான கொள்கையை அறிவிப்பாக வெளியிட வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இந்த அவையினுடைய உறுப்பினர்களாக நாங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்தபோது, வள்ளுவருடைய திருக்குறளுடைய பிரதி ஒன்று எங்களுக்கு அன்பளிப்பாக தரப்பட்டது. அதை நான் புரட்டியபோது கள்ளுண்ணாமை என்ற அத்தியாயம் என்னுடைய கண்ணிலே பட்டது. அவையிலே பொறுப்பு ஏற்றுவிட்டு உள்ளே வந்து அமர்ந்த ஒரு கணம், நான் அக்கம் பக்கத்திலே ஏறிட்டு பார்த்தபோது காந்திஜியினுடைய திருவுருவப் படம் என் கண்ணிலே பட்டது. திரும்பிப் பார்க்கிறேன். மூதறிஞர் இராஜாஜி படம் தெரிகிறது. பக்கத்திலே பேரறிஞர் அண்ணா அவர்களுடைய படம் தெரிகிறது. பெரும் தலைவர் காயிதே மில்லத் படமும் இருக்கிறது.

(முற்பகல் 10.50)

இன்னும் இந்த நாட்டில் தன்மான இயக்கத்தின் தலைவராக விளங்கிய, தந்தைப் பெரியாருடைய படம் இருக்கிறது. இந்த நாட்டினுடைய சட்டத்திற்கு வடிவு கொடுத்த அம்பேத்கார் அவர்களுடைய படம் இருக்கிறது. பெருந்தலைவர் காமராஜர் அவர்களுடைய படம் இருக்கிறது, திருக்குறளைப்

படித்துப் பார்த்துவிட்டு, உள்ளே வந்து பார்த்தபோது இங்கே படமாக காட்சி தந்திருக்கக் கூடிய, அந்தப் பெரியவர்கள் எல்லாம், குறிப்பாக காந்திஜி அவர்கள் என்னுடைய உள்ளத்தில் உயர்ந்த கொள்கை தீண்டாமை வேர் அறுப்பும், மதுவிலக்கும் தான் என்று சொன்னது என்னுடைய காதில் ஒலிக்கிறது.

அகில இந்திய அளவிலே நாட்டினுடைய தந்தை என்று பாராட்டப்பட்ட காந்திஜி அவர்கள் அந்தக் கொள்கையை வற்புறுத்திப் பேசியபோது, அது ஒரு கனவு உலகத்தினுடைய பேச்சு என்று மற்றவர்கள் எல்லாம் கருதிக் கொண்டிருந்த காலக் கட்டத்தில், 1939 ஆம் ஆண்டு பிரிக்கப்படாத சென்னை மாநிலத்தினுடைய பொறுப்பை ஏற்ற மூதறிஞர் இராஜாஜி அவர்கள் முதன் முதலாக இந்தத் தமிழ் மண்ணிலே மதுவிலக்குக் கொள்கையை அமல்படுத்திக் காட்டினார்கள். அது சன்னஞ்சன்னமாக காங்கிரஸ் காலத்திலே, அடுத்தடுத்து வந்த முதல்வர்களினால், இன்னும் சொல்லப் போனால் பெருந்தலைவர் காமராஜ் அவர்கள் காலத்திலே, முனைப்போடு செயல்படுத்தப்பட்டது. பேரறிஞர் அண்ணா அவர்கள் அதை உயரிய கொள்கையாகக் கொண்டு, அதை அவர்கள் அமல் நடத்தினார்கள். அவர்களை அதிகாரிகள் நெருங்கி அதை ரத்து செய்துவிட்டால், கோடானு கோடி வருமானம் வரும் என்று சொல்லிய நேரத்திலே, அதற்கு அவர் சொல்லிக் காட்டியது, அந்தக் கோடானு கோடி ரூபாய் தமிழகத்தினுடைய மொத்த வரவு-செலவுகளுக்காக பெறுவதைக் காட்டிலும், ஒரு தலைமுறையாக தமிழகத்தில் நிலைநாட்டப்பட்டிருக்கின்ற அந்தப் பண்பாட்டை சிதைக்க நான் ஒருகாலும் உடன்பட மாட்டேன் என்று அழுத்தந்திருத்தமாகச் சொல்லியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட மரபு, இடைப்பட்ட காலத்திலே பின்னப்படுத்தப்பட்டது, சேதப்படுத்தப்பட்டது. இதை அமல்படுத்த வேண்டுமென்பதிலே அதிக அக்கறை உள்ள இன்றைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் பொறுப்பேற்று, அந்தச் சீரிய கொள்கை தமிழகத்தில் மீண்டும் செம்மையாக அமல்படுத்தப்படும் என்று அறிவித்தது, எங்களிடத்தில் நம்பிக்கை ஏற்படுத்தியது. அவர் பொறுப்பிலே வந்து ஏழு ஆண்டுகளாகி, வரலாற்றிலே மிக ஆழமாகப் பதியத்தக்க அளவுக்கு அவர்கள், மூன்றாவது முறையாக முதலமைச்சராக





தேர்ந்தெடுக்கப்பட்ட இந்த நேரத்திலே அந்தச் சீரிய கொள்கையை முற்றாக தமிழகத்திலே நிலைநாட்டுவதற்காக அவர்கள் முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக் கொள்கிறேன். அப்போதுதான் படமாக இருந்து இங்கே நமக்கு உணர்வு ஊட்டக் கூடிய தலைவர்களுடைய பாடத்தை நாம் பெற்றோம் என்ற எண்ணம் நமக்கு ஏற்படும்.

இன்னொன்று நான் சொல்ல நினைப்பது, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் பூரண உடல்நலம் பெற்றவராக, நம்முடைய மத்தியிலே பொறுப்பேற்று அமர்ந்திருக்கின்ற காட்சியைப் பார்த்த நான் மெத்த மகிழ்ச்சியடைகிறேன். அவர்கள் மேலும் நீண்ட நெடுங்காலமாக வாழ்ந்து, தமிழகத்தில் மேலும் செம்மையான அளவில் பொது நலக் காரியங்கள் நடப்பதற்கான ஆதாரமாக விளங்க வேண்டுமென்று நான் ஆசிக்கிறேன். அவர்கள் நோய்வாய்ப்பட்டபோது இந்த நாடே அவருக்காக தன்னுடைய பரிவை தெரிவித்துக் கொண்டது. அவர் பூரண நலம் பெற வேண்டுமென்ற விருப்பத்தைத் தெரிவித்துக் கொண்டது. இன்னும் சொல்லப் போனால், கோடானுகோடி மக்கள் பிரார்த்தனையும் செய்துள்ளார்கள். அந்த மக்களுடைய பிரார்த்தனையும், மருத்துவருடைய சிகிச்சையும் ஒன்று சேர, எங்களுடைய நெறியினுடைய ஒரு சொற்றொடரை நான் உபயோகிப்பது என்றால், வெறும் துவா மட்டுமல்லாமல், தவாவும் சேர்ந்தது—துவா என்றால் பிரார்த்தனை, தவா என்றால் மருந்து. இந்த இரண்டின் அடிப்படையில், அவர்கள் உடல் நலம் பெற்று, நாடு திரும்பியதற்குப் பிறகும், நாடு திரும்புவதற்கு முன்னாலும் கூட, அவர்கள் பூரண நலத்தைப் பெறுவதற்கு தமிழக அரசு எத்தனை கோடி ரூபாய் செலவழித்தாலும், அதை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்கிற மனப்பான்மை எல்லோருக்கும் இருந்ததை நான் நன்றாக அறிவேன். அப்படிப்பட்ட எண்ணத்தில் சட்டசபை கூடி வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிக்கின்றபோது, ஏற்கனவே அமைச்சரவை செய்த முடிவிற்கு இணங்கி, முதலமைச்சருடைய நலத்திற்காக செலவிடப்பட்ட தொகையை இந்த அரசு ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று முடிவு செய்து, ஒரு தீர்மானம் முன்வடிவாக

[திரு. ஆ. கா. அ. அப்துல் சமத்] [1985 மார்ச் 15

எங்கள் முன்னால் வைக்கப்படும் என்று எதிர்பார்க்கின்ற நேரத்தில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அரசினுடைய பணம் தேவையில்லை என்றும், தங்களுடைய அரசியல் கட்சியின் சார்பாகவே அதை சேகரித்துக் கொள்ளலாம் என்று சொல்வது, எனக்கு ஏமாற்றத்தை அளிக்கிறது.

நான் இந்த அணியிலே அமர்ந்து இருக்கக்கூடிய எல்லா பெரும் தலைவர்களுடைய, எதிர்க்கட்சித் தலைவர்களுடைய மன நிலையையும் அந்தக் கட்சி தொண்டர்களுடைய மனநிலையையும் அறிந்தவன் என்ற முறையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை கேட்டுக் கொள்கிறேன், அன்பு கூர்ந்து எற்கனவே அமைச்சரவை எடுத்த முடிவிற்கு இணங்க அந்தச் செலவை அரசினுடைய செலவாக ஏற்றுக் கொள்வதற்கு ஒருமனப்பட வேண்டும்.

குறிப்பாக இன்று அவர்கள் பொறுப்பு ஏற்று இருக்கக்கூடிய ஒரு சூழல் ஒரு சிறப்பான சூழல். ஒரு முதலமைச்சர் மீண்டும் முதலமைச்சராக ஆவதே நம்முடைய நாட்டிலே காண முடியாத ஒன்று. முதலமைச்சராக வந்தவர் ஒரு நாள்கூட உட்கார முடியாமல் வெளியே சென்று கொண்டு இருப்பதும் இன்னொரு காட்சி. ஐந்து ஆண்டுகளுக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட முதலமைச்சர் தன்னுடைய ஆட்சியை 2½ ஆண்டு காலத்தில் முடிப்பதையும் கூட. இந்த நாட்டில் நடைமுறையாக்கிக்கொண்டு வருகிறோம். இப்படிப்பட்ட ஒரு சூழலில் 3-வது முறையாக புரட்சித் தலைவர் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு இருக்கக்கூடிய இந்த நேரத்திலே தமிழகத்திலே ஒரு சுமுகமான சூழல் நிலவ வேண்டும் என்று நான் ஆசைப்படுகிறேன்.

தமிழகத்தினுடைய அரசியல் இந்திய துணைக்கண்டத்தினுடைய அரசியலுக்கு ஒரு எடுத்துக் காட்டாக பன்னெடுங்காலமாக இருந்து வந்திருக்கிறது. அந்த பண்பாட்டை மேலும் நிலைநாட்ட வேண்டுமானால் குறைந்த அளவு அரசியல் கட்சிகளுடைய தொண்டர்களிடையே பதட்ட நிலை இல்லாமல் இருக்கச் செய்ய வேண்டும்.

இந்த சட்டமன்றத்தில் ஆளுநர் உரையின் மீது நடைபெற்றுக் கொண்டு இருக்கிற விவாதத்தை கூர்ந்து கவனிக்கும்போது, ஆளுநர் உரை ஆற்றினார் என்பதை மறந்து விட்டு யார் யார்



1985 மார்ச் 15] [திரு. ஆ. கா. அ. அப்துல் சமத்]

வெளியே உரை ஆற்றினார்களோ அவர்களைப் பற்றிய விவாதமே இந்த சட்டமன்றத்தினுடைய பெரும்பகுதி நேரத்தை ஆக்கிரமித்துக் கொண்டு இருப்பதை பார்க்கும் போது இந்த நிலை மாற வேண்டும் என்று நான் உளமாற வேண்டுகிறேன்.

அரசியல் பெரும் தலைவர்கள், மேலிடத் தலைவர்கள், ஒரு கண நேரத்திலே தங்களுடைய மாச்சரியங்களை எல்லாம் மறந்துவிட்டு, மிக அன்போடு பழகிக்கொள்கிறார்கள். ஆனால் அடி மட்டத் தொண்டர்கள் ஏற்கனவே வளர்ந்துவிட்ட காழ்ப்புணர்ச்சி, அரசியல் வேறுபாடுகள் இவற்றை மட்டும் வைத்துக்கொண்டு தமிழகத்தின் பட்டி தொட்டிகளில் நடமாடுகிற காரணத்தால் தேவைப்படுகிற அளவுக்கு அமைதி நிலவ வேண்டிய கிராமங்களில் கூட அமைதி இல்லாமல் ஆக்கப்பட்டு இருக்கிறது. அப்படிப்பட்ட ஒரு நிலை ஏற்படுவதற்கு இன்று அமைந்து இருக்கக்கூடிய இந்த அரசு ஒரு சிறந்த சமிக்ஞையாக ஒரு நல்ல நடவடிக்கையாக தேர்தல் காலத்தின் போதும் அதற்கு முன்னரும் அரசியல் கட்சியினர் மீது போடப்பட்ட எல்லா வழக்குகளையும் அன்பு கூர்ந்து வாபஸ் பெற வேண்டும் என்று வற்புறுத்தி நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். அப்படி செய்வது நம் நாட்டினுடைய மரபாக இருந்த வந்திருக்கிறது. பண்டைய தமிழ் மன்னர்கள் காலத்திலே யாராவது பட்டம் ஏற்பார்களேயானால் அந்த பட்டமளிப்பு விழாவிலே இப்படிப்பட்ட விடுதலைகள், சிறைக் கைதிகளை விடுதலை செய்வது, வழக்குகளை திரும்பப் பெறுவது ஆகியவை நடந்து இருக்கின்றன. இந்த நவீன காலத்தில் கூட சர்வாதிகாரிகள் ஒரு ஆண்டு கால ஆட்சி முடிவடைந்து ஆண்டு விழா நடத்துகிறபோது அரசியல் எதிரிகளை ஆயிரம் ஆயிரமாக ஒட்டுமொத்தமாக விடுதலை செய்து விடுதலை செய்தவர்களுக்கு பதவி கூட தந்து நாட்டிலே அமைதி ஏற்படுத்தக்கூடிய தன்மைகளை எல்லாம் உலகத்திலே நாம் பார்க்கிறோம். மிகப் பெரிய மனதுடன் தமிழகத்திலே ஒரு நல்ல சுமுக சூழ்நிலை உண்டாக்கக்கூடிய முறையில் நம்முடைய முதல்வர் அவர்கள் அரசியல் கட்சித் தொண்டர்கள்மேல் போட்டு இருக்கக்கூடிய எல்லா வழக்குகளையும் வாபஸ் பெற வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த ஆளுநர் உரையை கேட்டபோது ஒரு குறிப்பிடத்தக்க விஷயத்தைபற்றி அவர்கள் ஆழமாக வற்புறுத்தவில்லையே என்ற வேதனை எனக்கு ஏற்பட்டது. இன்று நவீன காலத்திலே நம்முடைய வாழ்க்கையினுடைய எல்லா துறைகளிலும் இணைந்து இருக்கக்கூடிய இன்றியமையாத சக்தியாக அமைந்து இருப்பது மின்சார சக்தி. இந்த அரசு அமைக்கப்பட்ட பிறகு வந்த முதல் அறிக்கை மின்வெட்டு பற்றிய அறிக்கையாக இருந்தது நல்ல ஆரம்பமாக படவில்லை. மின்சார பற்றாக்குறை எப்படிப் பட்ட ஒரு சூழ்நிலையில் தமிழகத்தில் ஏற்பட்டிருக்கிறது என்பதைநாம் நேரடியாக உணருகிறோம். ஆரம்பிக்கப்பட்டு இருக்கக்கூடிய தொழிற்சாலைகள் மட்டும் அல்ல, ஏற்கனவே இயங்கி வருகிற தொழிற்சாலைகள் கூட முடமாக்கப்பட்டு இருக்கின்றன.

வேளாண்மைத் துறையில் தீவிரமாக முயற்சி எடுத்து உரம் எல்லாம் இட்டாலும் கூட தேவைப்படுகிற தண்ணீரை விடுவதற்கு மின்சாரம் கிடைக்காமல் வேளாண்மைத்துறை வளர்ச்சியும் பாதிக்கப்பட்டு இருக்கிறது. இப்படி என்றுமே பற்றாக்குறை யாகவும், தட்டுப்பாடாகவும், கட்டுப்பாடாகவும் இருந்து வருகிற மின்சார துறையை அபிவிருத்திச் செய்வதற்கு இந்த அரசு என்ன நினைத்து இருக்கிறது.

(முற்பகல் 11-00)

ஒரு அவசர உணர்வோடு போர்கால முனைப்போடு இந்த மின்சார உற்பத்தியை அதிகப்படுத்துவதற்கு என்ன திட்டங்களை அரசு வைத்திருக்கிறது என்பதை ஆளுநர் உரையிலே கோடிட்டுக் கூட காட்டவில்லை என்பது என்னுடைய குறை. அப்படிச் செய்யப்படுவதற்கு அரசு சில நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். தமிழிலே சொல்லும்போது வற்றாத ஜீவநதிகள் வளைந்து ஓடும் நாடு' என்று வசனம் பேசு கின்றோமே தவிர தமிழகத்திலே பெரினியல் ரிவர்ஸ் (Perennial Rivers) என்று சொல்லக்கூடிய என்றுமே தண்ணீர் ஓடக்கூடிய நதி என்று ஒரு நதிகூட கிடையாது. இப்படிப்பட்ட நிலை போக்கப்பட வேண்டுமானால் எனக்கு ஒன்று தோன்றுகிறது. அண்டை மாநிலமான கேரளத்தில் மேற்கு தொடர்ச்சி மலையிலிருந்து கிட்டத்தட்ட 30 நதிகள்





உற்பத்தி ஆகி கேரள மண்ணிலே 30 மைல்கள் கூட ஓடாமல் மேற்கே அரபிக் கடலிலே சங்கமம் ஆகிறது. அந்த நதிகளில் நீர் பெருக்கெடுக்கும்போது கேரளத்தினுடைய மண்ணுக்கு பெரும் சேதம் ஏற்படுகிறது என்பது இந்த நாட்டிலே உணரப்படுகிறது. நமக்கு இருக்கக்கூடிய இன்றைய பரந்த தொடர்புடைய அடிப்படையில் இன்றைய ஆளும் கட்சிக்கும், மத்தியிலே இருக்கக் கூடிய ஆளும் கட்சிக்கும் இருக்கக்கூடிய அணுக்கமான நட்பின் அடிப்படையில் எப்படியாவது முயற்சித்து கேரளத்திலே மேற்காக ஓடிக்கொண்டு இருக்கிற இரண்டு நதிகளையாவது திசை திருப்பி விட்டு தமிழகத்தின் பக்கம் ஓடச்செய்வோமானால் அப்படி திருப்பி விடக்கூடிய நதியினுடைய நீரினுடைய மிகையினாலே மின்சாரத்தை நாம் உற்பத்திச் செய்ய முடியும். அது மட்டும் அல்ல, முகவை, மதுரை, நெல்லை போன்ற மாவட்டங்களில் மேலும் வேளாண்மையைப் பெருக்குவதற்கும் நாம் வகை செய்ய முடியும். அந்த முறையில் அரசு முயற்சிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த உரையின் மீதான விவாதத்தில் பங்கு கொண்டு பேசிய அத்தனைபேர்களும் பேசும்போது பாதுகாக்கப்பட்ட குடிநீர் தங்கள் பகுதியிலே வழங்கப்படவில்லை என்பதைக் குறையாக எடுத்துக் காட்டினார்கள். தொலை தூரத்திலே கிராமங்களிலே யிருந்து வரக்கூடிய உறுப்பினர்கள் மாத்திரம் அல்ல, புற நகரத்திலே வாழக்கூடிய மக்களுக்கும் அப்படிப்பட்ட வேதனை இருக்கிறது என்பதையும் தெரிவித்து இருக்கிறார்கள். இதற்காக இந்த அரசு என்ன திட்டத்தை வைத்து இருக்கிறது, என்பது கூட குறிப்பிட்டு கூறப்படவில்லை. இந்த நாட்டில் நீண்ட நாட்களாக ஒருகோரிக்கை வற்புறுத்தப்பட்டு வந்திருக்கிறது. கங்கையில் ஓடக்கூடிய நீரை முக்கியமாக காவேரியில் கொண்டு வந்து இணைப்பதன் மூலமாக ஒட்டுமொத்தமாக இந்தியத் திருநாட்டிலே ஒரு பெரிய வளத்தை நாம் பெருக்க முடியும் என்று வற்புறுத்தப்பட்டு வருகிறது. ஆனால் அதைப்பற்றி மத்திய அரசு கவனம் செலுத்தவில்லை. கங்கையை சுத்தப் படுத்து வதற்கு ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். சுத்தப் படுத்த வேண்டியதுதான். அதற்கு ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கும் போது நீரே இல்லாத பகுதிகளில் இந்த மிகையான நீரை திருப்பி விடுவதற்காக ஒரு திட்டம் இருக்கக்கூடாதா என்று

தான் நான் ஆதங்கப்படுகிறேன். அதை வற்புறுத்தத் தக்க முயற்சிகளை நம்முடைய தமிழக அரசு மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

சென்னை நகருக்கு குடிநீர் வழங்குவதற்காக கிருஷ்ணா நதியிலிருந்து நீர் கொண்டு வருவதற்காக 200 கோடி ரூபாய் திட்டத்தை நாம் ஆரம்பித்துவிட்டோம். அதற்காக 30 கோடி ரூபாய் ஏற்கனவே தரப்பட்டு விட்டது. மேலும் பணம்கொடுக்க வேண்டிய ஒரு கால கட்டத்தில் நாம் இருக்கிறோம். ஆனால் அந்தத் திட்டம் எப்போது நிறைவேறப்போகிறது? அதற்காக மேலும் எவ்வளவு செலவாகப்போகிறது? இந்தக் குறிப்புகூட ஆளுநர் உரையில் தரப்படவில்லை. நான் ஒன்றைச் சொல்ல விரும்புகின்றேன். அது வரக்கூடிய காலத்தில் வரட்டும். அது நம்முடைய தலைமுறையிலேயே வரப் போகின்றதா அல்லது அடுத்த தலைமுறைக்கு உதவப் போகின்றதா என்பதை என்னால் அறுதியிட்டுச் சொல்ல முடியவில்லை. ஆனால் நம் கையே நமக்கு உதவி என்று சொல்லுமாப்போலே, ஏற்கனவே தமிழக அரசின் சார்பாகத் தொடங்கப் பெற்ற வீராணம் திட்டத்தினைப் பூர்த்தி செய்வதுபற்றி நீங்கள் அருள்கூர்ந்து மீண்டும் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்தத் திட்டம் இன்னும் முற்றாகக் கைவிடப்பட்டதாக எனக்குத் தகவல் இல்லை. இன்றைக்கும்கூட அந்தத் திட்டத்திற்காக ஏறத்தாழ மாதம் ஒன்றுக்கு ரூ. 50,000 அந்தத் திட்டத்தின் இன்ஃப்ராஸ்ட்ரக்சருக்காக ஏற்படுத்திய அந்த நிலைகளுக்காகச் செலவாகின்றது என்று நான் கேள்விப்படுகிறேன். எனவே, நீங்கள் மீண்டும் அதை ஒருமுறை யோசித்துப் பார்த்தால் ஒரு கோடி ரூபாய், இரண்டு கோடி ரூபாய்களை அதிகமாகச் செலவழித்து ஏற்கனவே [illegible] மைல் தூரத்திற்கு பைப்புகள் போடப்பட்ட அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவீர்களேயானால், கிருஷ்ணா நதியிலிருந்து தெலுங்கு—கங்கா திட்டத்தின் மூலமாக வரக்கூடிய அது வருகின்ற காலத்தில் வரட்டும்; இடையிலே வீராணம் திட்டத்தையும் நிறைவேற்றுவீர்களேயானால் சென்னை நகரத்திற்கு மட்டுமல்லாமல், வீராணத்திலிருந்து சென்னைக்கு வரக் கூடிய வழியில் உள்ள 139 ஊர்களுக்கும் பாதுகாக்கப்பட்ட குடி தண்ணீரை நாம் வழங்க முடியும். எனவே, எல்லாப் பக்கங்களிலிருந்தும் எதிரொலிக்கக்கூடிய இந்தக் கோரிக்கையை





நிறைவேற்றுவதற்கு, மிகக் குறைந்த நிதி ஒதுக்கீட்டில் இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு நீங்கள் முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டுமென்று நான் உங்களிடத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சரவர்கள் தங்களுடைய திருத்தப் பிரேரணைகளைப் பிரேரேபித்தபொழுதே எதிர்க்கட்சி அணியில் இருந்தவர்கள் எல்லாம் எழுந்து, அதை அறிமுகப் படுத்துவதையே எதிர்க்கக் கூடிய ஆர்வம் உடையவர்களாக இருந்தார்கள். ஆனால் நான் ஒருவன்தான் உடனே எழுந்து அதை ஆட்சேபிக்கவில்லை. காரணம் என்னவென்றால், எனக்கு இருக்கக்கூடிய இந்த வாய்ப்பில் அதைச் சொல்லலாம் என்று இருந்துவிட்டேன். மாநிலம் முழுவதும் இன்றைக்குச் சுகாதாரத்திலே மிகவும் கேடுபட்டுப் போய் இருப்பதற்குக் காரணம் இந்த அடிப்படையே ஜனநாயக நிறுவனங்கள் இல்லாமற்போனதுதான். கிட்டத்தட்ட 10, 12 ஆண்டுகளுக்கும் மேலாக, ஊராட்சி மன்றங்கள், பேரூராட்சி மன்றங்கள், நகராட்சி மன்றங்கள், மாநகராட்சி மன்றங்கள் என்று சொல்லப்படுகின்ற அந்த ஜனநாயகத்தினுடைய அடிப்படை நிலையில் உள்ளவைகள் இல்லாமல் ஆக்கப்பட்டிருப்பதால்தான் மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை ஆங்காங்கே செய்து கொடுத்து, சரிபார்த்து, செப்பனிட்டு, சீராக்கி அவர்களுக்கு நலவாழ்வு தரக் கூடிய நிலைமைகள் இல்லாமல் இருக்கின்றன.

இப்படிப்பட்ட இந்தக் குறைபாடுகள் எல்லாம் நீங்குவதற்கான ஒரேவழி ஊராட்சி மன்றங்களுக்கும், பேரூராட்சி மன்றங்களுக்கும் தேர்தலை வைப்பதுதான். ஆனால், திருத்தம் கொண்டு வந்து மீண்டும் அந்தத் தனி அதிகாரிகளுக்கு ஓராண்டு காலத்திற்குப் பதவியை நீட்டித்து அளிக்க வேண்டுமென்ற சட்டத்தைக் கொண்டு வருகின்றபொழுது ஏற்கனவே எதிர்க்கட்சி வரிசையிலே இருக்கின்றவர்கள், இப்படித் திருத்தங்களைக் கொண்டு வருகின்றபொழுதெல்லாம் அளிக்கப்பட்ட வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லையே என்று உணர்ந்திருப்பதால், தங்களுடைய அச்ச உணர்வை வெளியிட்டிருக்கிறார்கள். நான் உள்ளாட்சித் துறை அமைச்சரவர்களிடத்தில் ஒன்றை எதிர்பார்த்தேன். நாங்கள் ஓராண்டு காலத்திற்கு இப்படிப்பட்ட தனி அதிகாரிகளினுடைய

[திரு. ஆ. கா. அ. அப்துல் சமத்] [1985 மார்ச் 15

பதவிக் காலத்தை நீட்டிப்பதற்காக இந்தத் திருத்தங்களைக் கொண்டு வருகிறோம் என்று சொல்லுகின்ற இப்பொழுதாவது, இப்படிக் கொண்டு வருகிறோம் என்றாலும் குறித்த ஒரு காலகட்டத்திற்குள்—இன்னும் ஒரு ஆறு மாத காலத்திற்குள்ளாக வாவது இந்தத் தேர்தலை நடத்தப் போகிறோம் என்ற வாக்குறுதியை, முதலமைச்சரவர்கள் இங்கே அமர்ந்திருக் கின்ற நேரத்தில் தருவார்கள் என்று எதிர்பார்த்தேன். ஆனால் என்ன காரணத்தினாலோ தெரியவில்லை, அப்படிச் சொல்லக்கூடிய அதிகாரம் இன்னும் வழங்கப்படவில்லையோ அல்லது முடிவு அமைச்சரவையில் எடுக்கப்பட வில்லையோ தெரியவில்லை, அவ்வாறு சொல்லவில்லை. ஆனால் நான் ஒன்றை வற்புறுத்த விரும்புகின்றேன், இந்தக் கூட்டத் தொடரிலேயாவது திட்டவட்டமாக, நிச்சயமாக, குறிப்பிட்ட காலகட்டத்திற்குள் இந்த அடிப்படை ஜனநாயகத்தைக் கட்டிக் காக்கின்ற நிறுவனங் களுக்கு நிச்சயமாகத் தேர்தல்கள் நடத்தப்படும் என்ற அறிவிப்ட வைக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இடையிலே ஒரு யோசனையைச் சொல்ல விரும்புகிறேன் நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சரவர்கள், சட்டமன்றப் நடந்து கொண்டிருக்கின்றபொழுதே, மாநகராட்சி மன்றத்தில் ஒரு நாள் உட்கார்ந்துகொண்டு, அங்கே தெரிவிக்கப்பட்ட குறைபாடு களையெல்லாம் கேட்டார்கள் என்று சொன்னபோது, அப்படிக் குறைகளைக் கேட்க வேண்டுமென்ற உள்ளுணர்வை நான் வரவேற்கிறேன். ஆனால் எத்தனை நாட்களுக்கு நம்முடைய அமைச்சரைச் சிறப்பு அதிகாரியாக வைத்து அழகு பார்க்க முடியும்?

நன்றி சொல்வதற்காக நான் என்னுடைய தொகுதிக்குச் சென்ற பொழுது அந்த மக்கள் ஒன்றே ஒன்றைச் சுட்டிக்காட்டி னார்கள். அதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன் கீழே ஓடுகின்ற சாக்கடையைக் காட்டுகிறார்கள். அதற்கு முன்னே நின்று ஒரு மணி நேரம் மூக்கைப் பிடித்துக்கொண்டு பேசிக்கொண்டிருக்க வேண்டிய நிலைமை இருக்கிறது. இப்படிப் பட்ட அடிப்படைத் தேவைகளைக்கூட கவனிக்காமல் இருக்கின்ற நிலைமையை மாற்ற வேண்டுமென்று சொன்னால், அதற்குள்ள ஒரேயொரு வழியைப்பற்றிச் சிந்திக்க வேண்டும். சென்னை, மதுரை மாநகராட்சிகள் இருக்கின்றன.



1985 மார்ச் 15] [திரு. ஆ. கா. அ. அப்துல் சமத்]

(முற்பகல் 11-10)

கோவை மாநகராட்சி இருக்கின்றது. இந்த மாநகரத்தி லிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்ட ஒரு கன்சல்டேட்டிவ் கமிட்டியாவது மாதம் ஒரு முறை மாநகராட்சி மன்றத்திலே கூடி இந்த மாநகராட்சியினுடைய பிரச்சினைகளை எல்லாம் கண்காணிப்பதற்கும், கவனிப்பதற்கும், குறைபாடுகளை நிவர்த்திப்பதற்கும் ஆவன செய்யவேண்டும் என்ற முறையிலே குழு அமைத்தால் நீங்கள் தேர்தலை நடத்தக் கூடிய காலம் வரையில் இந்தக் குழுக்களாவது அமைக்கப் பட்டால், தேர்ந்தெடுக்கப்பட்டு அங்கே இருந்து செயல்படுகி றார்கள், அவர்கள் கேள்வி கேட்பார்கள் என்ற அச்ச உணர்வோடு அதிகாரிகள் தங்கள் காரியங்களைச் செவ்வனே ஆற்ற முடியும். எனவே அதைச் செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

குறிப்பாக தொழில் வளத்தைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கும் போது 176 கோடி ரூபாயில் ஒரு அலாய் தொழிற்சாலை ஆரம் பிக்கப்படுவது பற்றி பெருமிதமாக ஆளுநர் அவர்கள் குறிப்பிட் டிருக்கிறார்கள். அத்துடன் ஏற்கெனவே இருக்கக்கூடிய எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை விஸ்தரிக்கப்படும் என்று சொல்லப்பட்டிருக்கின்றது. 5 கோடி மக்கள் வாழக்கூடிய ஒரு நாட்டிற்கு 176 கோடி ரூபாய் கிடைத்திருக்கின்றது என்று நாம் திருப்தி அடைந்தால் தமிழகத்திலே பெரிய தொழில் வளத்தை ஏற்படுத்துவதற்கு நாம் உதவி செய்தவர்களாக மாட்டோம். ஆனால் இன்றைய இந்தியப் பிரதமர் அவர்களின் அமேதி தொகுதியில் 1,000 கோடி ரூபாயில் தொழிற்சாலை ஆரம்பிக்கப் பட்டிருக்கின்றது என்று சொன்னால் 40 பார்லிமெண்ட் உறுப்பினர் களைக் கொண்ட இந்தத் தமிழ்நாட்டில் 5 கோடி மக்கள் வாழக் கூடிய இந்தப் பகுதியில் 176 கோடி ரூபாய் அளவில் தொழில் ஆரம்பிக்கப்படுகின்றது என்றால் இந்தத் தமிழகத்தின் தொழில் வளர்ச்சிக்கு நாம் செய்ய வேண்டிய காரியத்தைச் செய்கிறோம் என்று பொருள் அல்ல.

அண்ணா அவர்கள் ஆட்சிப் பொறுப்பிற்கு வந்து அமர்ந்த இரண்டே மாதத்தில் சேலம் உருக்காலைத் திட்டத்தைப் பற்றி என்னென்னவோ சொல்லப்பட்டு தள்ளப்பட்டு வருகின்றது என்று அவர்கள் உணர்ந்தபோது ஆட்சிப் பீடத்திலே அமைச்சராக

அமர்ந்தபிறகும் கூட இரண்டு மாதத்திலே ஒரு போராட்டத்தை ஆளும் பீடத்திலே அமர்ந்துகொண்டே அவர்கள் நடத்திக் காட்டி தமிழக மக்களுடைய உணர்வை மத்திய அரசுக்கு எடுத்துக் காட்டிய காரணத்தால்தான் சேலம் உருட்டாலையாவது வந்தது. அந்த உருட்டாலையை உருக்காலையாக மாற்றுவதற்கு என்ன உருப்படியான திட்டத்தைத் தமிழக அரசு வைத்திருக்கின்றது என்பதை ஆளுநர் அவர்கள் சொல்லியிருக்கக் கூடாதா என்ற வேதனை எனக்கு இருக்கின்றது.

ஒன்றே ஒன்றை மட்டும் நான் குறிப்பிட்டுவிட்டு அமர விரும்புகிறேன். இந்த அரசு அறிவிக்கக்கூடிய திட்டங்கள் எல்லாம் பாராட்டக்கூடியவை ; வரவேற்கக் கூடிய திட்டங்கள் தான். ஆனால் ஒன்றை நான் காண்கிறேன். சிறந்த திட்டங்களை அறிவித்துவிட்டு உடனே அதைச் செய்து முடித்ததைப்போல பாராட்டு நடத்திவிட்டு மெத்தனமாக அமர்ந்துவிடக்கூடிய காட்சியைக் காண்கிறேன். அறிவிக்கப்பட்ட திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றதா என்பதைப் பார்க்கும்போது இடையிலே இருக்கக் கூடிய அந்த இடைவெளியை நிரப்புவதற்குரிய முயற்சிகளைத் தொடர்ந்து அரசு முனைப்போடு செயல்படுவதற்குரிய வகையில் அதிகாரிகளைத் தட்டிக் கேட்கக்கூடிய அந்த நிலையில், தொடர்ந்து ஆளும் கட்சியினர் ஈடுபடவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். உதாரணமாக இங்கே ஒன்றை, என்னுடைய சமுதாயம் சம்பந்தப்பட்ட பிரச்சினையைச் சொல்ல விரும்புகிறேன். ஹஜ் பயணிகள் தங்கிச் செல்வதற்கு 85 இலட்ச ரூபாய் செலவில் ஒரு விடுதியைக் கட்ட அரசு முடிவு செய்தது. அதை நாங்கள் மனதார வரவேற்கிறோம். பாராட்டினோம். அதை உளமாறப் போட்டோம். எங்கள் கட்சியின் சார்பாக தீர்மானமும் ஆனால் எங்காவது அவ்வாறு கட்டப்பட்டிருக்கின்றதா என்றால் இதுவரையில் இல்லை. அதற்கென்று ஒதுக்கப்பட்ட இடம் விவாதத்திற்குரிய இடமாக ஆகிவிட்டதன் காரணத்தால் அது கட்டப்படவில்லை என்று சொல்லப்படுகின்றது. அதை நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் அரசு தொடர்ந்து முயன்றால் வாக்களித்ததைப்போல அந்தக் கட்டடத்தைக் கட்டுவதற்குரிய ஒரு காலி நிலத்தைப் பெற முடியாதா ? அப்படிப் பெறவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.



அதைப்போல இன்று நாம் செய்யவேண்டிய காரியங்களைச் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக மத்திய அரசிலே புதிய வக்ப் திட்டம் பாஸ் ஆகிவிட்டது. அதன் படி, அந்த அடிப்படையில் தமிழகத்தினுடைய வக்ஃப் வாரியத்தையும் மாற்றியமைக்கவேண்டாமா ? எனவே அதையும் காலத்தோடு செய்யுங்கள் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இன்னொன்று. ஹஜ் பயணிகள் சென்னை நகரத்திலிருந்து நேராக மெக்காவிற்கு செல்வதற்கு சென்ற ஆண்டு ஏற்பாடு செய்யப்பட்டு ஒரு விளம்பரத்தின் அடிப்படையில் விமானக் கட்டணமும் பெறப்பட்டது. ஆனால் கடைசிநேரத்தில் அவர்கள் எல்லாம் பம்பாய்க்குச் சென்றுதான் ஏறவேண்டும் என்று விதிக்கப்பட்டுவிட்டது. எனவே இந்த ஆண்டாவது நம்முடைய தமிழகத்தினுடைய அமைச்சரவைப் பொறுப்பில் இருப்பவர்கள் தொடர்ந்து முயன்று சென்னை நகரத்திலிருந்து நேராக ஹஜ்ஜுக்கு செல்லக் கூடிய பயணிகள் செல்வதற்குரிய ஏற்பாடுகளைச் செய்து தரவேண்டும் என்று நான் கேட்டுக் கொண்டு என்னுடைய வார்த்தைகளை இத்துடன் முடித்துக் கொள்கிறேன்.

* திரு. கு. ரமணி : மதிப்பிற்குரிய மன்றத்தின் துணைத் தலைவர் அவர்களே, எங்களுடைய கட்சியைச் சேர்ந்த இரண்டு உறுப்பினர்களோடு அவையினுடைய மற்ற மாண்புமிகு உறுப்பினர்கள் பேசியிருக்கிறார்கள். முக்கியமான பல விஷயங்களை அவர்கள் தங்களுடைய உரையிலே கொண்டு வந்து இந்த அவையின் முன்னால் தெரிவித்துள்ளார்கள். அவற்றையெல்லாம் நான் திரும்பச் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. சில முக்கிய கருத்துக்களையும் விஷயங்களையும் மட்டும் நான் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். முதலாவதாக, இலங்கைத் தமிழர்களுக்கு ஏற்பட்டு வரும்படியான மோசமான நிலைமையைப் பற்றி சிலவற்றைக் கூற விரும்புகிறேன். இலங்கையிலே இன்றைக்கு ஒரு சுத்தமான இனப் படுகொலை நடந்து கொண்டிருக்கிறது என்பதுதான் உண்மை. தமிழ் மக்களை எந்த அளவுக்குச் சித்திரவதை செய்ய வேண்டுமோ அவை அத்தனையையும் அந்த அரசாங்கம் செய்து கொண்டிருக்கிறது. அந்த அரசாங்கத்தினுடைய தலைவர் திரு. ஜெயவர்த்தனே அவர்கள் வட்ட மேஜை மாநாடு கூட்டி

[திரு. கு. ரமணி] [1985 மார்ச் 15

அந்த இனப் பிரச்னைக்குத் தீர்வு காண வேண்டுமென்று முயற்சி
பண்ணி, அந்த முயற்சிகளைக் கைவிட்டுவிட்டார்கள்.
அப்படியானால் இந்த இனப் பிரச்னைக்கு எப்படி அங்கே முடிவு
ஏற்படும்? இலங்கையிலிருக்கிற தமிழ் மக்களும் சிங்கள
மக்களும் எந்த இனத்தைச் சேர்ந்த மக்களாயிருந்தபோதிலும்
சரி, அந்த நாட்டினுடைய முன்னேற்றத்திற்கும் ஒற்றுமைக்கும்
ஒன்றுபட்டு வாழ வேண்டிய அனைவருக்கும் ஜனநாயக
உரிமைகளும் ஆட்சியிலே அவர்களுக்கு உரித்தான இடங்களும்
கிடைக்கப் பெறாமல் அந்தப் பிரச்னைக்கு எப்படித் தீர்வு காண
முடியும்?

ஆகவே, அதிலே தீர்வு காண்பதிலே எடுத்த முயற்சி
களைக் கைவிட்டு மோசமான நிலைமைகளைக் கொண்டு
வந்திருக்கிறது இலங்கையில் இருக்கும்படியான அரசாங்கம்.
அதனுடைய முழுப் பொறுப்பும் அந்த அரசாங்கத்தைச்
சேர்ந்தது. அந்த அரசாங்கத்தினுடைய நடவடிக்கைகள்
இந்திய நாட்டோடு இருக்கும்படியான நல்லுறவைக் கூடப்
பேணிக் காக்கும்படியான நிலையில் இல்லை. இந்திய
நாட்டினுடைய பாதுகாப்புக்கும் நல்லுறவுக்கும் ஆபத்து
விளைவிக்கக்கூடிய போக்கும் அந்த அரசாங்கத்தினுடைய
நடவடிக்கைகளிலே வெளிப்பட்டு வருவதை அனுதினமும் நாம்
காண்கிறோம். இவ்வளவு தைரியம் அந்த அரசாங்கத்திற்கு
எப்படி ஏற்படுகிறது? அன்னிய ஏகாதிபத்தியவாதிகளுடைய
தூண்டுதல்களும் அவர்களுடைய பின்பலமும்தான். அவற்றைப்
பயன்படுத்திக் கொள்ளக்கூடிய ஒரு பிற்போக்குத் தன்மையான
நடவடிக்கையிலே ஈடுபட்டிருக்கக்கூடிய ஒரு அரசாங்கம் அது
என்பது அவர்களுடைய நடவடிக்கையிலிருந்து தெரிய வருகிறது.
ஆகவே, மத்திய அரசாங்கம் உலக மக்களுடைய அனுதாபத்தை
அந்தப் பிரச்னையில் பெறும் வகையில் இலங்கை அரசு மீது
தகுந்த நடவடிக்கை எடுப்பதற்கான எல்லா நிர்பந்தத்தையும்
செலுத்தியாக வேண்டும். இலங்கையிலே அக்கிரமங்கள் எப்படி
நடைபெறுகின்றன, இனப் படுகொலைகளை எப்படித் தூண்டி
விட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பது பற்றி இலங்கைக்கு
எதிரான கருத்துக்களை உலக அரங்கத்திலே உருவாக்கி,
நிர்ப்பந்தம் செலுத்துவதற்கு மத்திய அரசு முழு நடவடிக்கை
களும் எடுத்தாக வேண்டும். அதற்கு நமது மாநில அரசாங்கமும்



1985 மார்ச் 15] [திரு. கு. ரமணி]

என்ன என்ன செய்ய வேண்டுமோ, அதையெல்லாம் செய்ய
வேண்டியுள்ளது. அப்பொழுதுதான் இந்தப் பிரச்னைக்குத்
தீர்வு காண முடியும்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை.)

இப்பொழுது அங்கே தமிழ் மக்கள் வாழ முடியாமல் இந்திய
நாட்டிற்கு குடிபெயர்ந்து அகதிகளாக வந்து
கொண்டிருக்கிறார்கள். பத்திரிகையிலே வந்திருக்கும்படியான
செய்தி உண்மையானால் கிட்டத்தட்ட 50,000-க்கு மேற்பட்ட
அகதிகள் தமிழகத்திலே வந்து சேர்ந்துள்ளார்கள். அந்த
அகதிகளைப் பராமரிப்பது என்பது தமிழக அரசாங்கத்திற்கு
எப்படிப்பட்ட நெருக்கடியை உண்டாக்கும் என்பது நம்
எல்லோருக்கும் தெரிந்த விஷயம். வெளி நாடுகளிலிருந்து
இந்திய நாட்டுக்குத் திரும்ப வரக்கூடிய அகதிகளுடைய
பிரச்னைக்குத் தீர்வு காண்பதற்கான முழு முனைப்பும் எடுக்க
வேண்டிய மத்திய அரசாங்கம் இந்த அகதிகளைப் பராமரிக்கக்
கூடிய பரிபூரண செலவுகளை ஏற்றுக்கொண்டாக வேண்டும்.

(முற்பகல் 11-20.)

இந்தப் பிரச்னை புதியதில்லை. மேற்கு வங்கத்திலே பல
கோடிக்கணக்கான அகதிகள் பாகிஸ்தானிலிருந்தும்,
பங்களாதேஷிலிருந்தும் வந்து தண்டகாரண்யம் போன்று பல
அகதிகள் முகாம்களை உருவாக்கி என்னென்ன சீரழிவுகள்,
கஷ்டங்கள் இந்த நாட்டிற்கு ஏற்படுத்தப்பட்டன நாட்டினுடைய
பொருளாதாரத்திற்கு எப்படிப்பட்ட சவாலாக அது இருந்தது.
மத்திய அரசாங்கம் இந்தப் பிரச்னையை எடுத்து நியாயம்
வழங்குவதற்காக மேற்கு வங்கத்தில் கோடிக்கணக்கான மக்கள்
பேரியக்கத்தை நடத்தி முழு செலவுகளையும் மத்திய அரசே
செய்ய வேண்டுமென்று வற்புறுத்த வேண்டிய நிலை ஏற்பட்டது.
இவைகளையெல்லாம் நாம் நினைவில் கொள்ள வேண்டும்.
அகதிகளுடைய பிரச்னை நீண்டு நீண்டு போய்க் கொண்டே
இருந்தால் பெரிய கஷ்டங்கள் ஏற்படக்கூடிய நிலை வரும்.
அகதிகளுக்கும் பாதுகாப்பில்லாமல், தமிழக மக்களுடைய
பொருளாதார வாழ்விற்கும் பிரச்னையாகி அது ஒரு சவாலாக
மாறும். இதை மத்திய அரசாங்கம் உணர்ந்து கொள்ள
வேண்டும். உணர்கிற முறையிலே நிர்ப்பந்தங்களை ஏற்படுத்த
வேண்டுமென்பது எங்களுடைய கருத்து.

[திரு. கு. ரமணி] [1985 மார்ச் 15

இப்போது இந்தத் தகராறு ஏற்பட்டதற்குப் பின்னால்
மீனவர்களுடைய கஷ்டம் எவ்வளவு மோசமான நிலைமைக்கு
வந்திருக்கிறது என்பது நமக்குத் தெரியும். சமூகமாக இருந்த
காலத்தில் கடலில் அவர்கள் என்ன எல்லை வைத்திருந்தார்களோ
அதில் அவர்கள் மீன் பிடித்துக் கொள்வது இருந்தது. எல்லையை
மீறி தவறிப் போனாலும் கூட அதற்காக பெரிய தகராறு,
சண்டை, கலவரம் எதுவும் நடந்ததில்லை. இன்றைக்கு
திட்டவட்டமாக இலங்கை சேர்ந்த படகுகள் கடலில் சுற்றி
வந்து இராமேஸ்வரம் பக்கத்திலே மீன்பிடிக்கிற நம் மீனவர்களை
சுட்டு கொலை செய்கிற அளவிற்கு நிலைமை போய் பல்லாயிரக்
கணக்கான குடும்பங்கள் வாழ முடியாமல், பட்டினியும், தொழில்
இல்லாத நிலைமையும் உருவாக்கப்பட்டிருக்கிறது. இதற்கு
பரிபூரணமாக பாதுகாப்பு கொடுக்க வேண்டிய பொறுப்பு
நம்முடைய மத்திய அரசைச் சேர்ந்தது ஆகும். அவர்கள்
தங்களுடைய சேர்ந்த படகுகளை அழைப்பு நிலைமையை
சமாளிக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. ஆனால் சுட்டுக்
கொலை செய்யப்பட்டவர்கள் எத்தனை பேர்கள்? அவர்களுடைய
குடும்பங்கள் எப்படி பாதுகாக்கப்படும்? என்பது மிகப் பெரிய
பிரச்னை. ஆகவே இந்த மீனவர்களுடைய பாதுகாப்பு மிக
முக்கியமானது. இதற்கும் மத்திய அரசினுடைய நடவடிக்கைகள்
மிகப் பிரதானமானது என்பதை இந்த அரசு உணர்ந்து சகல
ஏற்பாடுகளையும் செய்ய வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

அடுத்து, ஒரு முக்கியமான பிரச்சினையைச் சொல்ல
விரும்புகிறேன். மின்சார தட்டுப்பாடு பற்றி அனைத்து
உறுப்பினர்களும் சபையில் குறிப்பிட்டார்கள். ஆளும்
கட்சியைச் சார்ந்த உறுப்பினர்களும், தங்களுடைய
அரசாங்கத்தின் சார்பிலே வைக்கப்பட்டுள்ள அறிக்கையானாலும்
கூட மின்சாரத் தட்டுப்பாடு எப்படிப்பட்ட மோசமான
நிலைமையை உண்டாக்கிவிட்டது என்பதை தெளிவாக எடுத்துக்
காட்டினார்கள். உண்மை நிலையை யாரும் மறுக்க முடியாது.
இங்கே ஆளுநர் உரையிலே கொடுக்கப்பட்டிருப்பது என்ன?
மின்சார உற்பத்தி அதிகமென்று லட்சக்கணக்கான
யூனிட்டுகளைப் போட்டு அறிக்கையிலே கொடுத்திருக்கிறார்கள்.
ஆனால் உண்மையான நிலைமை என்ன? மின்சார வெட்டு



1985 மார்ச் 15] [திரு. கு. ரமணி]

ஏற்பட்டு மின்சாரம் கிடைக்காத நிலைமை இருக்கிறது. பல மணி
நேரங்களுக்கு கிராமப் பகுதிகளிலும், நகரங்களிலும் மின்சாரம்
இல்லாமல் இருக்கிற நிலைமை. சொல்லுக்கும் செயலுக்கும் இது
எப்படி பொருந்தும் என்பதைச் சிந்திக்க வேண்டும்.

இந்த அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கும் மின்சார உற்பத்தி
பெருக்கம் சென்ற ஆண்டினுடைய கணக்கு என்று சொல்வதிலே
பிரயோஜனம் இல்லை. இப்போது நடைமுறையில் என்ன
இருக்கிறது? மின்சாரம் இல்லை. எங்களைப் பொறுத்தவரையில்
இந்த மின்சாரத் தட்டுப்பாடு என்பது தொடர்ந்து வந்து
கொண்டிருக்கிறது. அதற்கு முன்காலத்தில் ஆண்டவர்கள்
தான் பொறுப்பு என்று சொல்லலாம். ஆனால் முன்காலத்திலே
ஆண்டவர்கள் பொறுப்பானாலும் கூட இன்றைக்கு ஆளக்
கூடியவர்கள், இதே அண்ணா திராவிட முன்னேற்றக் கழக
அரசாங்கம் தான் ஏழு ஆண்டுகளுக்கு மேலாக ஆண்டு
வந்திருக்கிறது. ஆகவே இந்தப் பிரச்னைக்கு ஒரு தீர்வு
காண்பதற்கு தகுந்த நடவடிக்கை இந்த அரசாங்கம் எடுக்க
வேண்டும். இன்றைக்கு ஏன் மின்சாரத் தட்டுப்பாடு வந்தது?
அணைக்கட்டுகளில் தண்ணீர் குறைந்து வற்றிப் போய்
மின் நிலையங்களில் மின் உற்பத்தி குறைந்து விட்டது.

நேற்றைக்கு பவானிசாகர் தொகுதி உறுப்பினர் பேசும்போது
அங்கே இருக்கிற தண்ணீர் வற்றிப் போய்க் கொண்டிருக்கிறது.
மீன்களை சீக்கிரம் பிடிக்கவில்லை என்றால் பெரும் இழப்பு
வரும் என்று சொன்னார்கள். ஏற்கனவே இப்படிப்பட்ட
வறட்சி ஏற்பட்டு, மீன்கள் எல்லாம் சேற்றிலே செத்து
மிதந்தன. அந்த மீன்களை எல்லாம் குழிதோண்டி புதைக்க
வேண்டிய நிலைமை ஏற்பட்டது. இப்போதும் அப்படிப்பட்ட
நிலைமை வந்து கொண்டிருக்கிறது. ஆகவே, சீக்கிரமாக அந்த
மீன்களைப் பிடிக்க வேண்டுமென்று குறிப்பிட்டார். இது எதைக்
காட்டுகிறது? அணைக்கட்டுகளில் தண்ணீர் இல்லை. அதனால்
நீர் மின்சாரத் திட்டங்கள் வேலை செய்யவில்லை. நம்முடைய
நீர் மின்சாரம் மொத்த உற்பத்தியில் கிட்டத்தட்ட பாதி
உள்ளது நின்றுவிட்டது. இன்னும் நெருக்கடி அதிகமாகிக்
கொண்டிருக்கிறது. இந்த நோக்கில் அனல் மின்சாரத்
திட்டத்தைத்தான் நாம் நம்ப வேண்டியிருக்கிறது. அதிலேயும்
பல சங்கடங்கள் இருக்கின்றன.

[திரு. கு. ரமணி] [1985 மார்ச் 15

இன்றுகூடச் சொன்னார்கள். தூத்துக்குடியில் இருக்கக் கூடிய ஒவ்வொன்றும் 210 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யக் கூடிய மூன்று இயந்திரங்களில் ஒன்று கெட்டுப் போயிருக்கிறது. அதற்குத் தேவையான உறுப்புகளை நம்மால் செய்ய முடியவில்லை. வெளி நாட்டிலிருந்து இறக்குமதி செய்யவும் முடியவில்லை. அதை சீர் செய்ய இன்னும் பல மாதங்கள் ஆகும் என்று சொல்கிறார்கள். அப்படியானால் மின்சார உற்பத்தியில் ஒரு பயங்கரமான நிலை ஏற்பட்டு, பல சங்கடங்களுக்கு நாம் ஆளாகப் போகிறோம். இதை எல்லாம் கோடிட்டுக் காட்டக் கூடிய அம்சங்கள் இந்த ஆளுநர் உரையிலே இல்லை. இப்படிப் பட்ட விஷயங்கள் இல்லாமல் ஆளுநர் உரையில் இது இருக்கிறது, அது இருக்கிறது என்று சொல்வதில் என்ன பயன் ஏற்படப் போகிறது? இப்படிப்பட்ட நெருக்கடிகளைச் சமாளிக்கக் கூடிய அடிப்படையான நடவடிக்கை தேவை. அதற்கான பொறுப்புகள் மத்திய சர்க்காரிடம்தான் இருக்கின்றன.

அனல் மின்சாரத் திட்டத்திற்கு அடிப்படையான தேவை நிலக்கரி. நிலக்கரியை சப்ளை பண்ணுவது, கொண்டு வந்து சேர்ப்பது போன்ற பொறுப்புகள் இருக்கின்றன. நிலக்கரியை ஆஸ்திரேலியாவிலிருந்து இறக்குமதி செய்வதா அல்லது வேறு வெளி நாடுகளிலிருந்து இறக்குமதி செய்வதா என்பதைப் பற்றி எல்லாம் ஆராய்ச்சி நடந்து கொண்டிருக்கிறது. நமக்குக் கிடைக்கின்ற நிலக்கரியும் தரமானதாக இருக்கிறதா என்றால் இல்லை. 40 சதவீதம் சாம்பல் கலந்ததாக இருக்கிறது என்று 'சாம்பிள்' வரவழைத்துப் பார்த்ததில் தெரிய வந்திருப்பதாகச் சொல்கிறார்கள். அப்படியானால் மின்சாரத் தட்டுப்பாட்டைத் தீர்க்கக் கூடிய நடவடிக்கைகளை நாம் எப்படி கையாளப் போகிறோம்? மக்கள் தேவையைப் பூர்த்தி செய்ய என்ன செய்யப் போகிறோம்?

மக்கள் தேவை நாளுக்கு நாள் பெருகிக் கொண்டேதான் வரும்; அதை யாரும் தடுக்க முடியாது. மக்கள் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த நீங்கள் என்னதான் திட்டங்களைப் போட்டாலும், சலுகைகளைக் கொடுத்தாலும் மக்கள் பெருக்கம் ஏற்பட்டுக் கொண்டேதான் இருக்கிறது; தேவைகளும் பெருகிக்கொண்டே தான் வருகின்றன. தொழில் வளர்ச்சியில் முன்னேற்றம் ஏற்பட



1985 மார்ச் 15] [திரு. கு. ரமணி]

வேண்டுமென்றால் பெருமளவுக்கு மின்சாரத்தைப் பயன்படுத்தி தான் ஆக வேண்டும். அப்படியானால் மின்சாரத்தின் தேவை அதிகம் ஏற்படத்தான் செய்யும். இதை எல்லாம் கணக்கிலே எடுத்துக் கொண்டு, இன்னும் 10 ஆண்டு, 20 ஆண்டுகளில் மக்கள் தொகைப் பெருக்கம், தேவை எல்லாவற்றையும் எண்ணிப் பார்த்து, அந்தக் கண்ணோட்டத்தின் அடிப்படையில் திட்டங்களை தயாரிக்க வேண்டிய பொறுப்பு ஆளும் சர்க்காரைச் சேர்ந்தது. மாநில சர்க்கார் தயாரிக்கும் திட்டங்களை நிறைவேற்ற மத்திய சர்க்கார் தயாராக இருக்க வேண்டும். அது இல்லை என்றால் எந்தவிதமான பிரயோஜனமும் இல்லை. இப்படிப்பட்ட எண்ணங்கள் எல்லாம் இந்த ஆளுநர் உரை பிரதிபலிக்காமல் இருப்பது வருந்தத்தக்கது, துரதிருஷ்டமானது.

சத்துணவுத் திட்டத்தைப் பற்றி பெரிய விவாதமே நடந்து கொண்டிருக்கிறது. சத்துணவுத் திட்டம் ஒரு அடிப்படையான, பெரிய புரட்சிகரமானத் திட்டம் என்பது ஆளும் கட்சியினர் கருத்து. அவர்கள் அந்தக் கருத்தைச் சொல்வதற்கு உரிமை உண்டு, இல்லை என்று நான் சொல்லவில்லை. எங்களுடைய கட்சியைப் பொறுத்தவரையில் சத்துணவுத் திட்டத்தை வரவேற்கிறோம், எதிர்க்கவில்லை. ஆனால் சுமார் 250 கோடி ரூபாய் இந்த சத்துணவுத் திட்டத்திற்கு நமது கஜானாவிலிருந்து மக்கள் பணத்தைச் செலவு செய்கிறோம். அதனால் எங்களுக்கு ஏற்பட்டிருக்கக் கூடிய கருத்து, விமர்சனம் எல்லாம் இந்தத் திட்டத்திற்கு இவ்வளவு செலவு செய்கிறார்களே, குழந்தைகள் வயிற்றுக்கு இது ஒழுங்காகப் போய்ச் சேருகிறதா என்பதுதான். எங்களுடைய கணிப்பு என்னவென்றால் இந்த சத்துணவு குழந்தைகள் வயிற்றுக்கு சரியாகப் போகவில்லை. 80 இலட்சம் குழந்தைகள் சாப்பிடுகிறார்கள். ஒவ்வொரு பள்ளிக்கூடத்திலும் இந்தத் திட்டத்திற்காக சமயல் கூடம், பிற கட்டிடங்கள் எல்லாம் கட்டப்பட்டிருப்பதாக புள்ளிவிவரங்கள் கொடுத்திருக்கிறார்கள். பணச் செலவைச் சொன்னால் போதாது. சத்துணவு உண்மையாகவே குழந்தைகள் வயிற்றுக்குப் போய்ச் சேருகிறதா என்பதை கண்காணிக்க வேண்டும். நாங்கள் அன்றைக்கும் இதைத்தான் சொன்னோம், இன்றைக்கும் சொல்கிறோம்.

[திரு. கு. ரமணி] [1985 மார்ச் 15

இந்த சத்துணவுத் திட்டத்தில் பல திருட்டுக்கள் நடைபெறுகின்றன. இதைத் தடுக்க தகுந்த நடவடிக்கை தேவை. பல இடங்களில் சத்துணவு அமைச்சர் போய் திடீர் திடீர் என்று சோதனையிட்டு, கண்காணிப்பு நடத்தி பல உத்தியோகஸ்தர்கள் மீது நடவடிக்கை எடுக்கிறார்கள். இதிலே இருந்து என்ன தெரிகிறது என்றால் நிச்சயமாக தவறு நடக்கிறது, திருட்டு நடக்கிறது. இப்படி திருட்டுப் போனால் சத்துணவுத் திட்டத்தின் நிலைமை என்னவாகும்? சுமார் 250 கோடி ரூபாய் செலவில் நடைபெறும் சத்துணவுத் திட்டம் வீணாகும், குழந்தைகளுக்குச் சத்துணவு போகாது. அதற்குப் பதிலாக திருடர்களுக்குத்தான் போய்ச் சேரும். அதை நாம் அனுமதிக்க முடியாது, அனுமதிக்கக் கூடாது. திருட்டைத் தடுக்கவில்லை என்றால் நாம் எதிர்பார்த்ததற்கு மாறாக விஷமக்காரர்கள்தான் பெருகுவார்கள்.

(முற்பகல் 11-30.)

ஒரு ஆச்சரியமான விஷயம். நான் இருக்கிற கோவை மாநகராட்சியில் என்னுடைய வீட்டுக்குப் பக்கத்திலே 1,300 பள்ளிக் குழந்தைகள் படிக்கின்ற சித்தாபுதூர் பள்ளிக்கூடம் என்று சொல்லக்கூடிய ஆரம்பப் பள்ளியும், உயர்நிலைப் பள்ளியும், மேல்நிலைப் பள்ளியும் ஒன்றாக இருக்கின்றன. அந்த ஆரம்பப் பள்ளியில் சத்துணவு சமைப்பதற்கு 5 ஆயிரம் ரூபாய்க்கு மேல் விலையுள்ள ஒரு பெரிய சாக்கு, அதாவது, வெண்கலத்தால் செய்யப்பட்ட ஒரு பெரிய உருளி புதைக்கப் பட்டிருக்கிறது. அதை 10 பேர் இல்லாமல் அசைக்க முடியாது. அதையே திருடிக் கொண்டு போய்விட்டார்கள். இன்று வரைக்கும் எந்த போலீசும் அதைக் கண்டுபிடிக்கவில்லை. இதை நான் ரிப்போர்ட் செய்திருக்கிறேன், அங்கேயிருக்கிற முனிசிபல் கார்ப்பரேஷனிடம். அவர்கள் தானே இதற்குப் பொறுப்பாளிகள். நான் இதை எதற்காகச் சொல்கிறேன் என்றால் சகல பொருள்களும், கட்டடத்திலேயிருந்து உடைத்து எடுக்கப்பட்டு பொருள்கள் எல்லாம திருட்டுப் போய்க் கொண்டிருக்கிறது. அங்கேயிருக்கிற சில ஊழியர்கள், தவறான வழியிலே செல்பவர்கள், இந்தத் திருட்டு வேலையைச் செய்கிறார்கள். பாத்திரங்கள், பண்டங்கள் திருட்டுப் போகின்றன. இவைகள் எல்லாம் உண்மையாக அரசாங்கத்தினுடைய கவனத்திற்கு வருகிறதா? இதுதான் எங்களுடைய விமர்சனம்.



1985 மார்ச் 15] [திரு. கு. ரமணி]

இதைத் தடுக்க, கண்காணிப்புக் கமிட்டிகள், ஜனநாயக அரசியல் கட்சிகள், பொது ஜன பிரதிநிதிகள் கொண்ட கமிட்டிகள் இருக்க வேண்டும். அவைகள் தொடர்ந்து கண்காணிக்க வேண்டும். தகுந்த நடவடிக்கைகள் உடனுக்குடனே எடுக்க வேண்டும். இங்கே தப்பு நடந்தால் குழந்தைகள் சோற்றிலே மண் விழுகிறது என்றுதான் அர்த்தம். இதை நீங்கள் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். எல்லோருமே சத்துணவுத் திட்டத்தை எதிர்க்கிறார்கள் என்ற ஒரு எண்ணத்தை வைத்துக் கொண்டு தாக்குவதிலே பிரயோசனம் கிடையாது. யாரும் குழந்தைகளுக்கு உணவு கொடுப்பதை தப்பு என்று சொல்லமாட்டார்கள். அப்படிச் சொல்வது சரியும் அல்ல. அதேசமயத்தில் இது சமுதாயத்திற்குத் தேவைப்படுகிற அடிப்படையான மாற்றத்தை ஏற்படுத்தும் புரட்சிகர திட்டமா? இதைத்தான் நீங்கள் சிந்திக்க வேண்டும். அப்படிக் கணக்குப் போட்டால் அது தவறாகப் போய் முடியும். அந்தக் குழந்தைகளுக்கு ஒரு நேரம் உணவு போடுவதால், அது அவர்களுடைய பட்டினியைத் தீர்க்காது. பெற்ற தாயும் தகப்பனும் பட்டினியாக கிடக்கிறார்கள். அந்தக் குழந்தை களுக்காவது ஒருவேளை சோறு கிடைப்பது என்பது நல்லது. இதனால் அவர்களுடைய குடும்பப் பட்டினி தீராது. நில விநியோகம் இல்லாமல் கிராமத்திலே இந்தப் பட்டினி தீராது. அந்தத் தொழிலாளர்களுடைய வருமானம் உயராமல் குடும்பத்திலே உள்ள பட்டினி தீராது. ஆகவே அடிப்படை புரட்சித் திட்டம் இது என்று நீங்கள் கருதினால் அது எப்படி தவறாக இருக்கிறது என்பதை மட்டும் நான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

அடுத்தது ஒரு முக்கியமான விஷயம். உள்ளாட்சித் தேர்தல். உள்ளாட்சித் தேர்தலைப் பற்றி இன்றைக்கு காலையிலே இந்த மன்றத்திலே அமைச்சர் அவர்கள் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை என்று வேதனையோடு சொன்னார்கள். உண்மைதானே அது. இங்கே பேசும்போது விதிகளிலே இடம் இருக்கிறதா என்று நாம் வாதாடுகிறோம். விதிகள் எல்லாம் பார்க்க முடியாது, ஒரு சபையை நடத்துவதற்கு, சரியான விதிகள் நடைமுறையாக வேண்டியதுதான். ஆனால் கொடுத்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட்டதா, இல்லையா என்பதைப் பற்றி எத்தனையோ விஷயங்களில் சொல்லலாம். ஆகவே

[திரு. ரு. ரமணி] [1985 மார்ச் 15

நூற்றுக்கணக்கான சினிமாப் படங்கள்தானே பிரச்சாரத்தில் முன்னணி வகித்தது. ஆயிரக்கணக்கான டி.வி. செட்டுகள்தானே பிரதான அங்கம் வகித்தது. இவைகள் எல்லாம் என்ன? மக்களுடைய அனுதாபத்தை உருவாக்குவதற்காக திட்டமிட்டு செய்த பிரச்சாரக் கருவிகள்தான். அதை மறுப்பதிலே என்ன பிரயோஜனம்?

உண்மை என்ன என்று கேட்டால் நாட்டிலே இருக்கிற மக்கள் ஒரு முடிவிற்கு வந்தார்கள். இந்த நாடே சிதறுண்டு போகாமல் இருக்க வேண்டும் என்ற முடிவிற்கு வந்தார்கள். எங்கு பார்த்தாலும் தகராறு. பஞ்சாபிலே தகராறு. அஸ்ஸாமிலே தகராறு. வகுப்புக் கலவரங்கள், ஜாதிக் கலவரங்கள், இவைகளைப் பார்த்தார்கள். நாட்டு மக்களுடைய ஒற்றுமை விடுதலைப் போராட்டக் காலத்திலே இருந்தது போல் இன்றைக்கு இல்லை என்பதை உணர்ந்தார்கள். அப்படிப்பட்ட சூழ்நிலையில் நாடு சிதறுண்டு துண்டாகக் கூடாது. இந்த நாடு ஒன்று பட்டிருக்க வேண்டும், என்கிற எண்ணம் மக்கள் மத்தியிலே வேரூன்றியது.

அதிலும் கடைசிக் கட்டத்திலே, யாரும் எதிர்பார்க்க முடியாத கட்டத்திலே இந்திய நாட்டினுடைய பிரதமர் அநியாயமாக, கொடூரமாக சுட்டுக் கொலை செய்யப்பட்டது யாரும் எதிர் பார்த்து பிரச்சாரத்திற்காக தயார் பண்ணக் கூடிய காரியம் அல்ல. திடீர் என்று ஏற்பட்ட ஒரு நிகழ்ச்சி. அதேபோல நம்முடைய மாநிலத்தில் நம்முடைய மரியாதைக்குரிய முதல்வர் அவர்கள் திடீர் என்று நோய்வாய்ப்பட்டு, அன்னிய நாட்டில் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற வேண்டிய நிலைமை. இந்த சூழ்நிலைகள் வந்தபோது, இந்த நாட்டு மக்களுக்கு கவலை ஏற்பட்டது. என்ன கவலை? இந்த நாடு துண்டாகி விடக் கூடாது என்று ஒன்று. இரண்டாவது, சிறந்த எதிர்க்கட்சிகளுடைய ஒன்றான ஒரு அமைப்பு அப்போது இல்லை. அப்போது ஒரு ஒற்றுமை அமைப்பு எதிர்க்கட்சிகள் மத்தியில் இருந்திருந்தால் நிலைமை வேறு விதமாகப் போயிருக்கும். ஆனால் அப்படி இல்லை.



1985 மார்ச் 15] [திரு. ரு. ரமணி]

ஆகவே அப்படி எதிர்க்கட்சிகள் ஒன்றுபடாத ஒரு சூழ் நிலையில் உள்ள பலவீனத்தையும் மக்கள் பார்த்தார்கள். அவர்களுக்கு படிப்பு இல்லாமல் இருக்கலாம். பெரிய வாதங்களிலே பெரிய விமர்சனங்களைச் செய்ய நம்மைப்போல பழகாமல் இருந்திருக்கலாம். ஆனால் அவர்கள் புத்திசாலிகள். அவர்கள் உணர்ந்தார்கள். நாட்டினுடைய ஒற்றுமை உணர்வின் அவசியத்தை அவர்கள் உணர்ந்தார்கள். ஆகவே, இந்த ஜனநாயக நாட்டிலே ஏற்பட்டிருக்கும்படியான மற்றப் பிரச்னைகளைப் பற்றி அவர்கள் யாரும் கவலைப்படவில்லை.

விலைவாசி ஏற்றத்தைப் பற்றியோ, கோடிக்கணக்கான மக்கள் வேலையற்றிருப்பதைப் பற்றியோ, விவசாயிகள் விவசாயம் செய்ய முடியாமல் அல்லல் உறுவதைப் பற்றியோ, தொழில்கள் மின்சார தட்டுப்பாட்டினால் முடங்கிக் கிடப்பது பற்றியோ, போலீஸ் அடக்கு முறைகள் பற்றியோ, அடக்குமுறைச் சட்டங்களைப் பற்றியோ அவர்கள் கவலைப்படவில்லை. அவர்கள் முதன்மையானதாக கவலைப்பட்டது, நாட்டினுடைய ஒற்றுமை. இப்படிப்பட்ட பிரச்னைகளுக்கு தீர்வு காணுவதற்கான அடிப்படை மாற்றம் இந்திய அரசியலமைப்பிலே இல்லை எனவும், ஜனாதிபதி ஆட்சிமுறையில்தான் இயலும் என்றும் மக்கள் மத்தியிலே காங்கிரஸ் கட்சி ஒரு சமயத்தில் கூறிவந்தது. அப்படி ஒரு பிரச்சாரம் நாடு முழுவதும் நடந்தது. அப்படிப்பட்ட சூழ்நிலையில் மக்கள் என்ன முடிவுக்கு வந்தார்கள். முதலில் நம்முடைய தேசம். அது முதலில் உருப்படியாக இருக்க வேண்டும். அதற்குப் பிறகுதான் மற்றவைகள் எல்லாம் என்று சிந்தித்து, வேறு மாற்று ஏற்பாடு இல்லாத நிலையில், காங்கிரஸ் கட்சிக்கு ஓட்டு போட்டார்கள். அந்தச் சந்தர்ப்பத்தைத்தானே அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் பயன் படுத்தியது? அதைச் சொல்வதிலே என்ன தப்பு? ஆனால், ஒரே ஒரு உறுப்பினர் மட்டுமே மிகத் தெளிவாக ஒப்புக் கொண்டார். அனுதாப அலையின் காரணமாகத்தான் நான் வெற்றி பெற்றேன் என்று. ஆனால் அப்படி பூரணமான அனுதாபம்தான் காரணம் என்றால், மக்களுடைய தேசிய கவலை என்று ஒன்று இருக்கிறதே, அதற்கு என்ன அர்த்தம்? நாட்டினுடைய ஒற்றுமையைப் பற்றி மக்களின் கவலை இருக்கிறதே அது என்ன ஆகிறது?

அடிக்கிறது. "Authoritarianism still it is continuing" தேர்தலுக்கு முன்னே மத்திய அமைச்சர், ஒரு பெரியவர் சொன்னார். இந்த தேர்தலிலே எந்த கட்சிக்கும் பெரும்பான்மை கிடைக்கப்போவது இல்லை என்று. அப்படி அன்றைக்கு கணக்கு போட்டு ஒரு மாதம், அல்லது ஒன்றரை மாதம் முன்னே காங்கிரஸ் கட்சியும், அவர்களோடு சேர்ந்த நீங்களும் உண்மையிலேயே தேர்தல் முடியும் வரை இப்படிப்பட்ட வெற்றி கிடைக்கும் என்று திட்டமிட்டு தீர்மானித்து முடிவிற்கு வந்தீர்களா? இல்லை என்பது என்னுடைய கருத்து. ஆகவே இதை நான் குறிப்பிடுகிறேன். அரசியல் சூழ்நிலைமையிலே ஏற்படுகின்ற மாற்றங்களைப் பற்றி துல்லியமான கணிப்பை நாங்கள் எடுக்கவில்லையெனில், பல தவறுகள் ஏற்படும்.

ஆகவே எங்களைப் பொறுத்தவரையில் இந்தக் கொள்கை அடிப்படையில் நாங்கள் உறுதியாக இருந்தோம். மாநிலங்களுக்கு அதிக அதிகாரமும், சுயாட்சியும் தேவை. அந்த எட்டாவது நிதிக் கமிஷனுடைய தீர்ப்புகளைப் பற்றியெல்லாம் நீதி கிடைக்கவில்லை என்று கவர்னர் அறிக்கையிலே, மேன்மை தங்கிய ஆளுநர் அறிக்கையிலே சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. இது அரசாங்கத்தினுடைய கொள்கைதானே? நிலைமை என்ன? ரூ. 300 கோடி மேற்கு வங்கத்திற்குக் கொடுக்கப்பட வேண்டிய பணம் இன்னும் கொடுக்கப்படவில்லை. நாடு முழுவதிலும் இருக்கிற மாநிலங்களுக்கு 2,000 கோடி ரூபாய். அப்போது நிதிக் கமிஷனுடைய தீர்ப்பின் பிரகாரம் 1984 ஆம் வருஷம் கொடுக்கப்பட வேண்டியது, கொடுக்கப்படவில்லை. அதைப் பற்றி உங்களுக்கு கடுமையான வார்த்தைகளைக் கூட சொல்ல முடியாமல் இருக்கிறது. அதுதான் இப்போதைய உறவினுடைய தெளிவு, கனிவு என்று நான் சொல்ல விரும்புகிறேன். இப்படி இருந்தாலும் நீங்கள் இன்றைக்கும் ஒரு காங்கிரஸ் இல்லாத அரசாங்கம் என்பதை நான் மறந்துவிடவில்லை. உங்களுடைய நடவடிக்கை உங்களைச் சிந்திக்கச் செய்து, தமிழக மக்களுக்கும் அது போன்று ஒவ்வொரு மாநில மக்களுக்கும் எப்படிப்பட்ட நல்ல காரியங்கள் இந்த நாட்டிலே நடப்பதற்கு ஒரு கூட்டாட்சி, ஒரு 'பெடரல் ஸ்ட்ரக்சர் ஆப் தி கவர்ன்மெண்ட்' அங்கு சென்ட்ரல் இருக்கிறதோ, அதற்கு எப்படிப்பட்ட ஜனநாயக





முறைகளைக் கையாள வேண்டுமென்று கணக்கில் எடுக்கவில்லை என்றால், நாம் அரசியலில் பெரும் தவறுகளைச் செய்வோம், அப்படிப்பட்ட தவறுகளுக்கு இரையாகக்கூடாது. தமிழக மக்கள் அதை எதிர்பார்க்கவில்லை.

1967-க்குப் பிறகு, 17 ஆண்டுக் காலமாக இப்போது தானே காங்கிரஸ் கட்சி உங்களோடு சேர்ந்து இந்த மாபெரும் வெற்றியை ஈட்டி நிற்கிறார்கள். 17 ஆண்டுக் காலமாக ஜனங்கள் அதை ஏற்றுக்கொள்ளவில்லையே, ஆகவே ஜனங்கள் எல்லாம் ஒரே நாளில் மாறிவிட்டார்கள். அதுவும் உங்களுடைய ஆதரவினாலே மாறிவிட்டார்கள். இது உங்களுக்காக ஓட்டுப் போட்டிருக்கலாம். அவர்களுக்கு எப்படி ஓட்டுப் போட்டார்கள்? இன்றைக்கு இருக்கிற வேலையில்லாத் திண்டாட்டத்திற்கும், பட்டினிக்கும், தரித்திரத்திற்கும் மத்திய சர்க்கார் பொறுப்பில்லையா? அங்கே மாகாண சர்க்கார்கள் மக்களிடமிருந்து நேரடியாக தாக்குதல் வாங்குகிறது. ஆனால் மத்திய சர்க்கார் அங்கே சும்மா உட்கார்ந்திருக்கிறது. ஆனால் மத்திய சர்க்காருக்குத் தானே பிரதான பொறுப்பு? நாங்கள் கேட்டு தொழில்கள் வரவில்லை, நாங்கள் கேட்டு வேலைவாய்ப்பு தருவதில்லை. நாங்கள் கேட்ட பல கோரிக்கைகள் நிறைவேற்றப்படவில்லை. இதை எடுத்துக் காட்டி விமர்சனம் செய்வது தான் ஒரு ஜனநாயக உரிமையினுடைய முக்கிய அம்சம்.

இந்தியா நாடு முழுவதும் இருக்கக் கூடிய 17 எதிர்க் கட்சிகளின் ஆரம்பக் கூட்டத்திற்கு நீங்கள் சென்றீர்கள். உங்களுடைய முதலமைச்சரும் சென்றார்கள். இருந்தும் இந்த நாட்டிலே இப்படிப்பட்ட ஒரு 'அதாரிட்டேரியன் ட்ரெண்ட்' மைய அரசாங்கத்திடம் வளர்ந்து வருவது நாட்டினுடைய ஜனநாயகத்திற்கும், மாநில சுயாட்சிக்கும் பெரிதும் கேடுதல் விளைவிக்கும் என்பதை எடுத்துச் சொல்லி, எதிர்க்கட்சிகள் முழுவதும் இன்றைக்கு போராடிக் கொண்டிருக்கிறார்கள். இது நடந்த 12 சட்டமன்றத் தேர்தல்களில் வெளிப்பட்டதைப் பாருங்கள். இங்கே பரிசீலனை செய்து பாருங்கள். ஆகவே, ஜனநாயகத்தின் மக்கள் அடுத்த கட்டத்திலே இதற்கு வேறு விதமான தீர்ப்பும் எழுதுவார்கள். அப்படித் தானே எழுதினார்கள், 1977-ல் மத்திய சர்க்காரில். மறுபடியும்

[திரு. கு. ரமணி] [1985 மார்ச் 15

அப்படிப்பட்ட தீர்ப்பை எழுதாமல் இருந்ததும் இந்த ஜனங்கள் தான். இதை நானும் உங்களுக்கு எடுத்துக்காட்டும் வகையில், நம்முடைய விமர்சனங்கள் பயனுள்ள முறையில், சரியான முறையில் விமர்சனங்களாக அமையட்டும் எனக் கூற விரும்புகிறேன். நியாயத்தையும் உண்மையையும் உணர்ந்த தமிழக மக்களுடைய முன்னேற்றத்திற்காக இருக்கும்படியாக நல்ல காரியங்களுக்காக என்றைக்கும் நாங்களும் ஆதரவு அளிப்போம். அந்தக் கொள்கைத் துறையிலும், அரசியல் துறையிலும் தவறு செய்து சறுக்கி விழுந்து நீங்கள் மத்திய சர்க்காரின் பிடியிலே சிக்கி, தமிழக மக்களுக்கு ஆபத்து வருவதை நிச்சயமாக எதிர்க் கட்சிகள் ஒன்றாக நின்று எதிர்த்துப் போராடித் தான் தீருவோம். இந்த ஜனங்கள் முறியடிப்பார்கள் என்ற நம்பிக்கையும் எனக்குண்டு என்பதைத் தெரிவித்துக் கொண்டு என்னுடைய வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன்.

* திரு. பெ. செங்கோட்டையன்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்களின் உரையின் மீது நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தில் பேசுவதற்கு வாய்ப்பு அளித்ததற்காக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த சட்டமன்றத்தில் பேச தகுதியளிக்கும் வகையில் கபிலர் மலைத் தொகுதிக்காக என்னைச் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுத்த கபிலர்மலை வாக்காளர் பெருமக்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நடந்து முடிந்த பொதுத் தேர்தலில் தமிழக அரசையும், இந்தியப் பேரரசையும் எந்தவிதமான மனமாற்றத்திற்கு இடமில்லாமலும், சந்தேகத்திற்கு இடமில்லாமலும், ஒரு திட்டவட்டமான ஆட்சியை, நிலையான ஆட்சியை அமைத்துக்கொடுத்த தமிழக மக்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



1985 மார்ச் 15] [திரு. பெ. செங்கோட்டையன்]

(முற்பகல் 11-50)

தேர்தல் முடிவுகள் திட்டவட்டமாக மத்திய அரசாங்கத்தி னுடைய கொள்கையையும், மாநில அரசினுடைய கொள்கையை யும், அதுபோன்று மத்திய அரசாங்கத்தை நடத்திச் செல்லும் எங்களுடைய அருமைத் தலைவர், மாண்புமிகு ராஜீவ் காந்தி யுடைய தலைமையையும், தமிழக முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய தலைமையையும் அங்கீகரித் ததாக அமைந்திருக்கின்றன.

இந்த நல்ல முடிவை மக்களுடைய தெளிவான தீர்ப்பை, கொச்சைப்படுத்தும் வகையில் எதிர்க்கட்சியைச் சேர்ந்த வர்கள் தங்களுக்கே உரித்தான முறையில் சொந்தக் கருத்துக்களை எல்லாம் சொல்லிக் கொண்டு இருப்பது மக்களு டைய தீர்ப்பை மதிக்காமல் தங்களுடைய தோல்விக்கான காரணங் களை தேடிக்கொண்டு இருக்கிற நிலையைத்தான் காட்டுகிறதே தவிர நியாயமாக இருக்க முடியாது. ஏதோ திராவிட முன்னேற் றக்கழகத்தைச் சேர்ந்தவர்கள் இப்படி எல்லாம் பேசுவார்கள், பேசுவார்கள் என்று தான் நினைத்து இருந்தேன். ஆனால் மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு கட்சியைச் சேர்ந்தவர்கள் கூட இந்தத் தேர்தல் முடிவை கொச்சைப்படுத்துவது வினோதமாக இருக் கிறது. மக்களிடம் மீண்டும் நம்பிக்கையை பெற வேண்டும் என்ற முயற்சியை அவர்கள் எடுப்பார்கள் என்று நான் நினைத் துக் கொண்டு இருந்தேன். ஆனால் மக்கள் ஏதோ ஏமாந்து விட்டார்கள், அவர்களை யாரோ ஏமாற்றி விட்டார்கள் என்று எல்லாம் சொல்லுவது ஜனநாயகத்தை எள்ளி நகையாடக்கூடிய தாக இருக்கிறது. இந்த மாமன்றத்திற்கு தாம் தேர்ந்தெடுக்கப் பட்டது எப்படி நியாயம் என்று கருதுகிறார்களோ அதை எப்படி மக்களுடைய சிறப்பான முடிவு என்று சொல்கிறார்களோ அதேபோல் தான் மற்ற உறுப்பினர்களும் அந்த அந்த தொகுதி மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு இருப்பது சரியான முடிவு என் பதை அவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள் கிறேன்.

இலங்கைப் பிரச்சினை பற்றி மிகவும் பெரியதாக இந்த அவை யில் பேசப்பட்டு வருகிறது. இலங்கையில் உள்ள தமிழ் மக்கள் பாதுகாக்கப்பட வேண்டும். அவர்களுடைய உரிமை பாதுகாக் கப்படவேண்டும், என்பதிலே எங்கள் கட்சிக்கு எந்தவிதமான

[திரு. பெ. செங்கோட்டையன்] [1985 மார்ச் 15]

அபிப்பிராயபேதமும் கிடையாது. அதிலே நாங்கள் மற்ற யாருக்கும் சளைத்தவர்கள் அல்ல. இந்தப் பிரச்சினையில் வீரத்தைக் காட்டுவதை விட விவேகத்துடன் சிந்திப்பது நல்லது என்று நான் நினைக்கிறேன். இலங்கைப் பிரச்சினையில் மூன்று விதமான பிரிவுகள் இருக்கின்றன. ஒன்று, ஈழத்தில் பாரம்பரையாக வாழ்ந்து கொண்டிருக்கிற ஈழத் தமிழர்களுடைய பிரச்சினை, இரண்டாவதாக இலங்கையில் உள்ள தேயிலைத் தோட்டங்களில் வேலை செய்து வாழ்ந்து வருகிற இந்திய வம்சாவழி தமிழர்கள். மூன்றாவதாக இலங்கையினுடைய நகரப்பகுதிகளில் கொழும்பு, கண்டி, அனுராதபுரம் போன்ற பல பகுதிகளிலே இங்கு ஒரு காலும் அங்கு ஒரு காலும் வைத்துக்கொண்டு இருக்கக்கூடிய தமிழர்கள் ஆகியவர்கள் இருக்கிறார்கள். படை எடுப்பது என்பது வெளிப்படையாக சொல்லக்கூடிய அரசியல் நாகரீகம் அல்ல. அது இந்திய நாட்டைப் பொறுத்த பாரத பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அவர்கள் முடிவு எடுக்கக்கூடிய நடவடிக்கையாகும். ஈழத் தமிழர்களை பாதுகாக்கிறபோது இலங்கையிலே கடை வைத்து பிழைக்கக்கூடிய இந்திய வம்சாவழித் தமிழர்கள், தேயிலைத் தோட்டங்களில் வேலை செய்கின்ற தமிழர்கள் இவர்களுக்கு எந்தவிதமான பங்கமும் ஏற்படாத வகையில் இலங்கைப் பிரச்சினையை தீர்ப்பதில் தமிழக அரசும் மத்திய அரசும் ஈடுபடும் என்று நான் நினைக்கிறேன். ஆகவே விவேகத்துடன் செயல்படுவதுதான் சிறந்ததாக இருக்கும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இலங்கைப் பிரச்சினையோடு பங்களாதேஷ் பிரச்சினையை ஒப்பிடுவது சரியல்ல. பங்களாதேஷ் பிரச்சினையிலே மேற்கு பாகிஸ்தானும் கிழக்கு பாகிஸ்தானும் தங்களுக்குள் போராட்டம் நடத்திக்கொண்டு இருந்த நேரத்திலே அகதிகளை காப்பாற்றுவதற்காக மேற்கு பாகிஸ்தானிலிருந்த படைகளை மட்டும் வெளியேற்ற வேண்டிய நிலை ஏற்பட்டது. ஆனால் இலங்கைப் பிரச்சினையைப் பொறுத்த வரையில் அந்த மாதிரி போர் வந்தாலும் ஈழத் தமிழர்களை பாதுகாக்க முடியுமே தவிர இலங்கை வாழ் இந்திய வம்சாவழியினரை பாதுகாப்பது சிக்கலான பிரச்சினையாக இருக்கும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். என்னுடைய பகுதியில் இலங்கை வாழ் தமிழர்கள் ஏராளமானவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் அங்கே ஏற்பட்ட



1985 மார்ச் 15] [திரு. பெ. செங்கோட்டையன்]

சொல்லியிருக்கிறார்கள். ஆகவே அந்த அடிப்
கஷ்டங்களைச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே அந்த அடிப்
படையில் தமிழக அரசும், இந்தியப் பேரரசும் இது வரை எடுத்து
இருக்கக்கூடிய முடிவுகளை நான் பாராட்டுகிறேன். தேர்தலுக்கு
முன்பாகவே இந்த இலங்கைப்பிரச்சினைப்பற்றி பேசப்பட்டது.
தேர்தலிலே இந்த முற்போக்கு கூட்டணியை மக்கள் தேர்ந்
தெடுத்து இருப்பதால் இலங்கைப் பிரச்சினையைப் பற்றி இந்திய
அரசும், தமிழக அரசும் எடுத்த கொள்கைக்கு மக்கள் ஒப்புதல்
அளித்து இருக்கிறார்கள் என்று நான் கருதுகிறேன். மத்திய
அரசு அறிவித்துள்ள வறுமை ஒழிப்புத் திட்டங்களான R.D.P.
N.R.E.P., R.L.E.G.P." ஆகிய இந்தத் திட்டங்கள் எல்லாம்
அருமையான திட்டங்கள். இந்தத் திட்டங்களை அமுல்படுத்து
வதிலே சில குறைகள் இருக்கின்றன. கிராமப்பகுதிகளிலே
உள்ள மக்களுக்கு இந்தத் திட்டங்களின் பலன்கள் முழுமையாக
போய்ச் சேர்ந்தால் காந்தி அடிகள் கனவு கண்ட இராமராஜ்யம்
உருவாவதற்கான வாய்ப்பு ஏற்படும்.

ஐ.ஆர்.டி.பி. மூலமாக கடன்கள் மானியங்கள் வழங்கப்படு
கின்றன. யாருக்கு அவற்றை வழங்குவது என்பதிலே பொது
மக்கள் பிரதிநிதிகள் யாருக்கும் இடம் இல்லை. அதிகாரிகளே
தான் அதை நிர்ணயித்து கொடுக்கிறார்கள். அப்படி கொடுக்கிற
போது அதிகாரிகளின் விருப்பு, வெறுப்புக்கு தகுந்த மாதிரி
கொடுப்பதால் பல தவறுகள் ஏற்பட்டு சரியான முறையில்
மக்களுக்கு போய்ச் சேரவில்லை என்று நான் நினைக்கிறேன்.

எங்கள் பகுதியிலே கறவை மாடுகளுக்காக அரிசன மக்களுக்கு
கொடுக்கப்பட்ட கடன்கள் முழுமையாக அவர்களுக்குப் போய்
சேரவில்லை. இப்படிப்பட்ட குறைகளை களைந்து இன்னும்
நல்லவிதமாக இந்த நல்ல சிறப்பான திட்டங்களை நடத்தும்படி
கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் படித்துவிட்டு வேலை அற்றோருக்கு மானியத்
துடன் கடன் தரும் திட்டம் இருக்கிறது. கடன் ஒவ்வொரு
மாவட்டம் முழுவதற்குமாக சேர்த்து மாவட்டத் தொழில்
மையத்தின் மூலம் தொழில் தொடங்குவதற்கு கொடுக்கப்படு
கிறது. ஒவ்வொரு மாவட்டத்திற்கும் என்று ஒதுக்காமல்
ஒவ்வொரு வட்டாரத்திற்கும் இவ்வளவு தொகை என்று பிரித்துக்
கொடுத்தால் எல்லா வட்டாரங்களில் உள்ளவர்களும் பயன் பெற்று

தொழில் செய்யக்கூடிய வாய்ப்பு ஏற்படும். அப்படி இல்லாமல் மாவட்டம் முழுவதற்கும் என்று கொடுக்கப்படுவதால் அதிலே சில வட்டாரங்கள் புறக்கணிக்கப்படக்கூடிய நிலைமை ஏற்படுகிறது.

அடுத்து, பெரிய மாவட்டங்களை நிர்வாக வசதிக்காக பிரிக்கிறார்கள். அது ஒரு நல்ல நிர்வாகத்தினுடைய நிகழ்ச்சியாகும். அதேபோல் பெரிய தாலுக்காக்களையும் பிரித்துக் கொடுத்தால் மிகவும் நன்றாக இருக்கும். அந்த அடிப்படையில் சேலம் மாவட்டத்திலே உள்ள நாமக்கல் தாலுக்காவை இரண்டு தாலுக்காவாக பிரிக்க வேண்டும் என்ற முறையில் ஏறத்தாழ 10 ஆண்டுகளுக்கு முன்பு உத்திரவு இடப்பட்டு அந்த உத்திரவு இன்னும் அமல் செய்யாமல் இருக்கிறது. நாமக்கல் தாலுக்கா என்றும் நாமக்கல் கூடுதல் தாலுக்கா என்றும் இரண்டாக இருந்து தலைமை அலுவலகம் நாமக்கல்லில் செயல்பட்டு வருகிறது.

பரமத்தி, வேலூர் இரண்டுக்கும் மத்தியிலே அல்லது பரமத்தியிலோ அல்லது வேலூரிலோ ஏதோ ஒரு இடத்திலே தாலுக்கா அலுவலகம் வைத்து ஒரு தாலுக்காவை ஏற்படுத்தினால் அந்தப் பகுதி மக்களுக்கு வசதியாக இருக்கும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

மாவட்டங்கள் பிரிக்கப்பட்டு பெயர் வைக்கப்பட்டவைகள் எல்லாமே அந்த அந்தப் பகுதி மக்களுடைய விருப்பத்திற்கு ஏற்றவாறு நியாயமான முறையிலே அமைந்து இருக்கின்றன. அதே முறை தொடர்ந்து இருக்கும் என்று நம்புகிறேன். அதற்கான வகையிலே இந்த அரசு தொடர்ந்து செயல்படும் என்று நம்புகிறேன்.

நான் சார்ந்து இருக்கிற கபிலர் மலைத் தொகுதி, ஒரு கிராமப்புற பகுதியாகும். ஒரு நகராசபை கூட கிடையாது. சிறிய பஞ்சாயத்துகள், பெரிய பஞ்சாயத்துகள்தான் இருக்கின்றன. அந்தப் பகுதியில் உள்ள மக்கள் முழுமையாக விவசாயம் தான் செய்து வருகிறார்கள். இந்த காலத்தில் விவசாயத்தை அபிவிருத்தி செய்ய வேண்டும் என்ற நோக்கத்தோடு செயல்பட்டு வரும் போது மின்சாரம் இன்றியமையாத ஒன்றாக இருக்கிறது. எங்கள் பகுதியிலே இருப்பவர்கள் பூராவும் கிணற்றுத் தண்ணீரை





இறைத்து விவசாயம் செய்யக்கூடிய நிலையில் உள்ளோம். மின்சாரம் பம்புசெட்டுகளுக்கு கொடுக்கிறபோது ஏழை எளியவர்களுக்கு இலவசமாகவும், அதற்கு மேலே உள்ளவர்களுக்கு, ஒரு எச். பி. க்கு 75 ரூபாய் என்றும் திட்டத்தை அறிவித்து இருக்கிறார்கள். இது நல்ல திட்டம் தான். சிறிய விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் கொடுப்பது நல்ல திட்டம்தான். ஆனால் எங்கள் பகுதியைப் பொறுத்தவரையில் கிணற்றிலிருந்து தண்ணீரை இறைத்து விவசாயம் செய்யக்கூடிய காரணத்தாலும் கிணறுகளில் போதிய தண்ணீர் இல்லாததாலும் 1 எச்.பி.-க்கு 75 ரூபாய் என்பதை 50 ரூபாயாக குறைத்தால் அந்த விவசாயிகள் மீண்டும் உங்களை வாழ்த்துவார்கள் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

(நண்பகல் 12-00)

இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் அதிக பம்பு செட்டுகளுக்கு மின்னிணைப்பு கொடுத்திருக்கிறோம் என்று பெருமைப்படுகின்ற நிலையில் நாம் இருந்தாலும்கூட, இந்தியாவிலேயே மின்னிணைப்பு கொடுக்கப்படாத பம்பு செட்டுகள் நமது மாநிலத்தில்தான் அதிகமாக இருக்கின்றன என்றும் சொல்ல விரும்புகிறேன். பத்து இலட்சம் பம்பு செட்டுகளுக்கு மின்னிணைப்பு கொடுத்துவிட்டோம் என்றாலும், இன்னும் ஐந்தாறு இலட்சம் பம்பு செட்டுகளுக்கு எப்போது கொடுப்பது என்பதில் கவனம் செலுத்திச் செயல்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன்பு ஒவ்வொரு ஆண்டும் 50,000 பம்பு செட்டுகளுக்கு மின்னிணைப்பு கொடுத்து வந்தார்கள். ஆனால் அந்த நிலைமை இப்பொழுது குறைக்கப்பட்டிருக்கிறது. எனவே, மீண்டும் இப்பொழுதுள்ள பம்பு செட்டுகளுக்கு மின்னிணைப்பு கொடுக்க வேண்டுமென்றால் பழையபடி ஆண்டுதோறும் 50,000 பம்பு செட்டுகளுக்கு மின்னிணைப்பு கொடுப்பதற்கு முயற்சிப்பதோடு, முடிந்தால் ஒரு இலட்சம் பம்பு செட்டுகளுக்கு மின்னிணைப்பு கொடுக்கின்ற வகையிலே நம்முடைய திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். காரணம் என்னவென்றால், மின்சார பம்பு செட்டு வைத்திருக்கின்ற விவசாயிக்கும், ஆயில் எஞ்சின் வைத்திருக்கின்ற விவசாயிக்கும் செலவில் வித்தியாசம் இருக்கிறது. இந்த மின்சார பம்பு செட்டுகளுக்கு 5 எச்.பி. பவருக்கு ஒரு மணி நேரத்திற்கு 1 ரூபாய் ஆகிறது என்றால், அதே 5 ஹார்ஸ் பவர் உள்ள ஆயில் என்ஜினுக்கு

ஒரு மணி நேரத்திற்கு 4 ரூபாய் செலவு ஆகிறது. இப்படி ஒன்றுக்கு நான்கு என்ற விகிதத்தில் செலவு செய்யும் வகையில் ஆயில் எஞ்சின் விவசாயிகள் மிகவும் துன்பப்பட்டுக்கொண்டிருக்கின்றார்கள். ஆகவே, அவர்களுடைய கஷ்டங்களைத் தீர்க்கின்ற வகையிலே அவர்களுக்கு விரைவில் மின்னிணைப்பு கொடுப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

எங்கள் பகுதியிலே ஒரு கூட்டுறவு சர்க்கரை ஆலை இருக்கின்றது. அங்கே கடந்த ஆறேழு ஆண்டுகளாகத் தனி அதிகாரிகள் இருக்கிறார்கள். அது நாடு பூராவும் உள்ள குறையாக இருந்தாலுங்கூட, அந்தக் கூட்டுறவு சர்க்கரை ஆலையில் உண்டாகின்ற மொலாசஸைப் பயன்படுத்தி, எரிசாராயம் உண்டாக்குகின்ற தொழிற்சாலையை அமைக்க வேண்டுமென்று நாங்கள் கேட்டுக்கொண்டிருக்கிறோம். ஏன் என்றால், தமிழகத்திலேயே எங்கும் இல்லாத முறையில் சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலையிலேதான் ஒரு பாலிடெக்னிக் நல்ல முறையில் நடந்து வருகிறது. அப்படியென்றால், செலவினம் அதிகமாகிக்கொண்டே இருக்கிறது. ஆகவே, எரிசாராயத் தொழிற்சாலையை அங்கே ஆரம்பித்தால் அந்த இலாபத்தைக் கொண்டு பாலிடெக்னிக்கை சிறப்பாக நடத்த முடியும். எரிசாராயத் தொழிற்சாலைகள் தனியார் துறைகளிடத்தில்தான் இருக்கின்றன. அதையும் மாற்றி அப்படிப்பட்ட தொழிற்சாலையைக் கூட்டுறவில் அமைத்தோம் என்ற பெருமையை எங்களுக்குக் கிடைக்க இந்த அரசு வாய்ப்பைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எங்கள் பகுதி காவிரியாற்றின் பகுதியில் இருக்கின்ற பகுதியாகும். சேலம் மாவட்டத்தில் காவிரி நதி பாய்ந்தாலும், சேலம் மாவட்டத்தில் காவிரி நதியின் நீரின் பலன் மிகவும் சொற்பமாக இருக்கின்றது. ஏனென்றால், திட்டங்கள் போடப்பட்ட அந்தக் காலத்தில் எல்லாத் திட்டங்களும் தஞ்சைக்கு ஏற்றபடி திட்டமாக இருக்கின்ற அளவில் அமைந்திருக்கின்றன. அதில் எங்களுடைய மூதாதையர்கள் ஏமாந்துவிட்டார்களோ என்னவோ தெரியவில்லை. எங்கள் கொங்கு நாட்டில், அதாவது, சேலம், பெரியார், கோவை மாவட்டங்களுக்குத் தண்ணீரை எப்படிக் கொடுத்தாலும் பரவாயில்லை, விவசாயத்தை அங்கே பெருக்கி



யாக வேண்டுமென்ற நிலை இருக்கிறது. அந்த அளவிற்கு அந்தப் பகுதி விவசாயிகளுக்குத் தண்ணீரின் மேலே அளவில்லாத ஆசை இருக்கின்றது. ஆகவே, சேலம் மாவட்டத்தில் காவிரியாற்றின் நீர் பயன்படுகின்ற அளவிற்குக் கிடைக்க வழி செய்ய வேண்டும்.

முந்நூறு, நானூறு ஆண்டுகளுக்கு முன்னால் வெட்டப்பட்ட இராஜா வாய்க்கால் என்ற ஒரு வாய்க்காலுக்கு மட்டும் தண்ணீர் வழங்குவதுதான் காவிரியாற்றின் சேலம் மாவட்டத்தின் பங்காக இப்பொழுது இருந்து வருகின்றது. அந்த இராஜா வாய்க்கால் மண்ணாலும், கல்லாலும் கட்டப்பட்ட வாய்க்காலாகும். அந்த வாய்க்காலை தற்பொழுது நவீனப்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். காவிரியாற்றின் நீரை எவ்வளவு சிக்கனமாகப் பயன்படுத்த முடியுமோ அவ்வளவு சிக்கனமாகப் பயன்படுத்தினால் அது விவசாயிகளின் பிரச்னைகளைத் தீர்க்கப் பயன்படும் என்பது எங்களுடைய நியாயமான கோரிக்கையாகும். அந்த அடிப்படையில் தஞ்சையில் உள்ள வாய்க்கால்களைப்போல இதையும் நவீனப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆனால் அந்த நிலைமை இப்பொழுது தஞ்சை டெல்டாப் பகுதியில் மட்டும் இருக்கிறது. ஜேடர்பாளையம் வரையில் நீட்டித்து, அதுவரையில் வருகின்ற வாய்க்காலை நவீனப்படுத்தி, தண்ணீரில் சிக்கனத்தை உண்டாக்கி, அந்தத் தண்ணீரை அதிக அளவிற்குப் பாசனத்திற்குக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்த மன்றத்திலே பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்து என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

**திருமதி இரா. சரோஜா**: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த மன்றத்திலே மேதகு ஆளுநர் அவர்களின் உரைக்கு நன்றி தெரிவித்து மாண்புமிகு உறுப்பினர் சகோதரர் திரு. செம்மலை அவர்கள் முன்மொழிந்த தீர்மானத்தை வழிமொழிந்து எனக்குப் பேச வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். அடுத்து எனக்கு மீண்டும் இரண்டாவது முறையாக இந்த மன்றத்திலே பேச வாய்ப்பளித்து பணியாற்றக்கூடிய தகுதியினைக் கொடுத்த எனது இதய தெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர், தமிழக முதல்வர் அவர்களுக்கும் நன்றியறிதலைத் தெரிவித்து

[திருமதி இரா. சரோஜா] [1985 மார்ச் 15

உப்பிலியாபுரம் வாக்காளப் பெருமக்களுக்கும் நன்றி தெரிவித்து
தாய்மார்களுக்கும் நன்றி தெரிவித்து என்னுடைய உரையை
ஆரம்பிக்கிறேன்.

இந்த ஆளுநர் உரையில் தமிழக மக்களுக்கு ஒரு ஒளி
விளக்காகக் காட்சியளிக்கின்ற இந்த ஒளி விளக்கின்
வெளிச்சத்தில் தமிழ்நாட்டு மக்களுக்கென உள்ள பல நல்ல
திட்டங்களைக் காண முடிகிறது. அதில் ஒன்றுதான் குழந்தை
களுக்குச் சீருடை வழங்கும் திட்டம், தொழிற்கல்வித் திட்டமும்
ஆகும். உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே என்று
சொல்வார்கள். எனவே இதய தெய்வம் புரட்சித் தலைவர்
அவர்கள் குழந்தைகளுக்குச் சத்துணவு மட்டும் அளிக்கவில்லை.
சத்துணவு சாப்பிடும் குழந்தைகள் சந்தோஷமாக அணிந்து
கொள்ள சீருடை வழங்குகின்ற திட்டத்தையும் இங்கே அறிவித்
திருக்கிறார்கள். இந்தச் சீரிய திட்டத்தின் மூலம் எதிர்காலத்திலே
சிறப்பான சமுதாயம் அமைய இந்தத் தலைமுறைக் குழந்தை
களுக்கு புரட்சித் தலைவர் அவர்கள் தாயாக இருந்து காப்பாற்றி
வருகிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதனால்
எதிர்க்கட்சியினர் மனம் குளிர்கிறதோ இல்லையோ தெரியவில்லை.
ஆனால் பல இலட்சக்கணக்கான தாய்மார்களின் உள்ளம்
குளிர்ந்திருக்கின்றது என்பதை இங்கே நான் குறிப்பிட்டுக்
காட்டுகிறேன்.

தொழிற்கல்வித் திட்டம் என்பது எந்த அளவுக்கு சிறப்பான
திட்டம் என்பது என்னைப்போன்று கிராமப்புறத்திலிருந்து
வருபவர்களுக்குத்தான் தெரியும். நான் சட்டமன்ற உறுப்பின
ராகத் தேர்ந்தெடுக்கப்பட்டபிறகு எனக்குக் கொடுக்கப்பட்ட
விண்ணப்பங்கள் எல்லாம் குடிநீர்ப்பிரச்சினை சம்பந்தப்பட்ட
விண்ணப்பங்களும் எஸ்.எஸ்.எல்.சி. படித்து முடித்துவிட்டு வேலை
யில்லாமல் இருப்பவர்கள் கொடுத்த விண்ணப்பங்களும்தான்
அதிகமாக இருக்கின்றன. இதுவரையில் திட்டமிடப்படாமல்
நாம் கடைப்பிடித்து வந்த கல்வித்திட்டம்தான் அதற்குக்
காரணம். ஆனால் புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியில்
கல்வித் தகுதி உள்ளவர்களுக்கும், இலட்சக்கணக்கான தாய்மார்
களுக்கும், ஆண்களுக்கும் சத்துணவுத் திட்டத்தின் மூலம்
வேலைவாய்ப்பு கிடைத்திருக்கின்றது.



1985 மார்ச் 15] [திருமதி இரா. சரோஜா]

மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் தொழிற்கல்வித்
திட்டம் நிறைவேற்றப்படுமேயானால் எதிர்காலத்தில் பள்ளிப்
படிப்பை முடித்தவர்கள் எல்லாம் ஒரு தொழில் தெரிந்தவர்களாக
நிச்சயம் இருப்பார்கள் என்பதை உறுதியாகக் கூறலாம். எனவே
வேலையில்லாத் திண்டாட்டத்தை அறவே துரத்தி அடிக்கும்
திட்டமாக இந்தத் திட்டம் ஆளுநர் உரையில் இடம் பெற்று
இருப்பது வரவேற்கத்தக்கது.

புரட்சித் தலைவரின் புனிதத் திட்டமாக குடிசைக்கு ஒரு
விளக்குத் திட்டத்தினை பெண்குலத்தின் பிரதிநிதியாக இருக்
கின்ற நான் பாராட்டியாக வேண்டும். கிராமப்புறங்களிலே
வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கின்ற நலிந்த பிரிவினைச்
சார்ந்த மக்கள் மண்ணெண்ணெய் கூட வாங்க முடியாமல்
கஷ்டப்படுகிறார்கள். வறுமையில் வாழ்ந்துகொண்டிருக்கின்ற
கிராமப்புற மக்கள் இரவு நேரங்களில் வெளிச்சத்தைக் கண்டிருந்
தார்களா என்றால் இதுவரையில் குடிசையில் வாழ்ந்து கொண்
டிருக்கும் குழந்தைகள், படிக்கின்ற அந்தக் குழந்தைகள் கூட
தங்களுக்கு மின்விளக்கு வேண்டும் என்று கேட்கவில்லை. ஆனால்
புரட்சித் தலைவர் அவர்கள் குடிசைக்கு ஒரு மின்விளக்கை
வழங்கினார்கள். குடிசைகளில் மட்டும் அவர் அவ்வாறு
ஒளிவிளக்கை ஏற்றி வைக்கவில்லை. அவர்களுடைய
வாழ்க்கையிலும், உள்ளங்களிலும் ஒளி பிரகாசிக்கின்ற வகையில்
செய்திருக்கிறார்கள். இந்த குடிசைக்கு ஒரு விளக்குத்
திட்டத்தின் மூலமாக, இவ்வாறு குடிசைக்கு ஒரு விளக்குத்
திட்டம், சத்துணவுத் திட்டம் போன்ற திட்டங்களை எந்தத்
தலைவனும் எந்த நாட்டிலும் வழங்கியதாக வரலாறு கிடையாது.
இத்தகைய திட்டங்களைக் கொள்கையாக உள்ளடக்கிய ஆளுநர்
அவர்களுடைய உரைக்கு நன்றி சொல்கிற நேரத்திலே
என்னுடைய தொகுதிப் பிரச்சினைகளையும் இங்கே நான்
எடுத்து வைக்க கடமைப்பட்டிருக்கிறேன்.

திருச்சி மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து பெரம்பலூரைத்
தலைநகராகக் கொண்டு புதிய மாவட்டம் உருவாக்குவதை
வரவேற்கும் இந்த நேரத்தில் என்னுடைய தொகுதிக்குட்பட்ட
துறையூரை ஒரு கோட்டமாகப் பிரித்து கோட்டாட்சி
அலுவலகம் துறையூரில் அமைய வழி செய்யுமாறு இந்த நேரத்தில்
பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

[திருமதி இரா. சரோஜா] [1985 மார்ச் 15

அடுத்து என்னுடைய தொகுதியான உப்பிலியாபுரத்தில் எந்தவிதமான தொழிற்பயிற்சிப் பாலிடெக்னிக்குகளும் இல்லாத தால் திருச்சி மாவட்டத்திலே அமைக்கப்பட இருக்கும் ஐ.டி.ஐ.-ஐ உப்பிலியாபுரத்திலே அமைத்து என்னுடைய தொகுதிக்கு வழங்க வேண்டும் என்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12-10)

எனது தொகுதி மலைகளும், மலைகளைச் சேர்ந்த இடமுமாகும். ஆகவே, மழைக் காலத்தில் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடி வீணாகிறது. அதைச் சேமித்துப் பாசனத் திற்குப் பயன்படுத்தும் வகையில் வாய்ப்புள்ள இடங்களுக்குக் குறுக்கே அணைகள் கட்ட நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

எனது தொகுதியிலுள்ள ஜம்பேரி திட்டத்தை விரைவுபடுத்த நடவடிக்கை எடுத்த புரட்சித் தலைவர் அவர்களுக்கு எனது நன்றியையும் எனது தொகுதி மக்களின் நன்றியையும் தெரிவித்து அந்த ஏரியிலுள்ள ஆக்கிரமிப்புகள் அனைத்தையும் அகற்றினால், அதன் மூலம் அதிக நீரைத் தேக்கி வைக்க வகை உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த ஏரி 20 கிராமங் களுக்குப் பாயக்கூடிய ஒரு தாய் ஏரியாகும். அந்த ஏரியிலுள்ள பிரச்சனையைத் தீர்த்துக் கொடுக்குமாறு நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதே போல் எனது தொகுதியிலுள்ள செங்காட்டுப்பட்டி கோம்பை கிராமத்திலும் களிங்கமுடையான்பட்டியிலும் பெரிய ஏரி ஒன்றை அமைத்து பாசன வசதியைப் பெருக்கித் தர நடவ டிக்கை எடுத்துத் திட்டத்தை நிறைவேற்றித் தர வேண்டுமென்று நோட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதி பெரும்பாலும் மலைப்பகுதியாக இருப்பதால் பாதை இல்லாமல் இருக்கிறது. அந்தக் குறையைப் போக்கும் வகையில், பாதை அமைத்துக் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அங்கு குடிநீர் உப்பு நீராக இருப்பதால், காவிரி ஆற்றிலிருந்து குடிநீர் எனது தொகுதிக்குக் கொண்டு வர ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1985 மார்ச் 15] [திருமதி இரா. சரோஜா]

பச்சைமலைப் பகுதி மலைவாழ்மக்கள் வாழ்கின்ற பகுதியாக இருப்பதால், அதை ஊராட்சி ஒன்றியமாக அமைத்து, மலைவாழ் மக்களுக்குத் திட்டங்களை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முசிறி பிரிவு சாலையிலிருந்து துறையூர் அரசு மருத்துவ மனை வரை பை-பாஸ் ரோடு போட்டுத் தர வேண்டுமென்று இந்த மாமன்றத்திலே வேண்டிக்கொள்கிறேன்.

துறையூர் அரசு பெண்கள் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தானாம்பாடி ஆற்றிலிருந்து செல்லிபாளையம் மருவத்தூர் ஏரிக்கு வரும் வாய்க்காலை சீர்படுத்தித் தருமாறு கேட்டுக்கொள் கிறேன்.

எனது தொகுதியிலுள்ள பச்சைமலையில் மணவாடை, மாத்தூர், புதூர், பாளையம், புத்தூர் என்ற ஊர்களில் வசிக்கும் மலை வாழ்மக்கள் மலையில் விளையும் பொருள்களைக் கீழே விற்கக் கொண்டு வரும்போது, அவர்களை மிரட்டிப் பொருள்களைப் பறிக்கக் கொண்டு போவதும், 10, 15 பேர்கள் சேர்ந்து கொண்டு, மலைக்கு வந்து ஊர் மக்களை மிரட்டி, ஆடுமாடுகளைப் பிடித்துக் கொண்டு செல்வதும், அவர்கள் தர மறுத்தால் அங்குள்ள பெண்களை அவலப்படுத்துவதுமாக உள்ளார்கள். இதை பெரம்பலூர் வட்டம் லாடப்புரத்தைச் சேர்ந்த சில குறிப்பிட்ட ஆதி திராவிடர்கள் செய்து கொண்டு வருகிறார்கள். அதனால் மலைவாழ் மக்கள் பயந்துகொண்டு உயிருக்கு ஆபத்து வரும் என்று அஞ்சுகிறார்கள். அதில் தக்க நடவடிக்கை எடுத்து அந்த மலைவாழ் மக்களுக்கு உடனடியாகத் தக்க பாதுகாப்பு கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆதி திராவிடர் நலன்—பழங்குடியினர் நலன் என்று சொல்லப் படுகிறது. ஆனால் பழங்குடியினருக்கு எந்த வாய்ப்பும் வசதியும் கிடைக்கவில்லை. ஆகவே, பழங்குடியினருக்கு என்று ஒரு தனி துறையை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[திருமதி இரா. சரோஜா] [1985 மார்ச் 15

சத்துணவு அமைப்பாளர்களுக்கு ஊதிய உயர்வு கொடுத்து, அங்கே பணிபுரியும் தாய்மார்களுக்கு மகப்பேறு விடுப்புடன் கூடிய சம்பளத்தை வழங்க வேண்டுமென்று நான் முன்னாள் சத்துணவு அமைப்பாளர் என்ற முறையிலே கேட்டுக்கொள்கிறேன். புரட்சித் தலைவர் ஆட்சியில் சத்துணவுத் திட்டம் மிக நல்ல ஒரு திட்டம் என்று போற்றக்கூடிய அளவிலே, பாராட்டக்கூடிய அளவிலே, சிறப்பான திட்டமாக விளங்கிக் கொண்டிருக்கிறது. முற்காலத்தில் ஒன்று கூறுவார்கள் குப்தர்களுடைய காலம் பொற்காலம் என்று ஏட்டளவில் படித்துள்ளோம். ஆனால், இப்பொழுது புரட்சித் தலைவர் காலம் பொற்காலம் என்று தமிழக மக்கள் தீர்ப்பளித்திருக்கிறார்கள் என்று கூறி என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன், நன்றி, வணக்கம்.

* திரு. கி. வெங்கடாசலம்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இன்றையதினம் தொடர்ந்து ஐந்தாம் நாளாக நடைபெறுகின்ற மேதகு ஆளுநர் அவர்களுடைய உரை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு என்னுடைய கருத்துக்களை இந்த மாமன்றத்தில் வைக்கின்ற வாய்ப்புதனை எனக்களித்திட்ட எனது லால்குடி தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கு இந்த அவையின் வாயிலாக முதற்கண் நான் எனது நன்றியினை தெரிவித்து எனது உரையைத் தொடங்குகிறேன்.

இந்த மாமன்றத்தில், மறைந்த பாரதப் பிரதமர், 70 கோடி மக்களின் இணையற்ற தலைவி அன்னை இந்திரா காந்தி அம்மையார் அவர்களின் திருவுருவப் படத்தை திறந்து வைக்க இருப்பதாக மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அதற்காக நான் சார்ந்திருக்கிற இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பில் இந்த அரசுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொண்டு ஒரு வேண்டுகோளையும் வைக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன். திருவுருவப் படத்தைத் திறந்து வைப்பதோடல்லாமல், சென்னை மெரினா கடற்கரையில் காந்தி சிலை அருகில் மறைந்த பிரதமர் அன்னை இந்திரா காந்தி அம்மையார் அவர்களுக்கு அரசுச் செலவில் நினைவுச் சின்னம் அமைக்க அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மேலும் சென்னையில் புதியதாக அமையவிருக்கிற மருத்துவப்



1985 மார்ச் 15] [திரு. கி. வெங்கடாசலம்]

பல்கலைக் கழகத்திற்கு அன்னை இந்திரா காந்தி அம்மையார் அவர்களுடைய பெயரை வைக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

ஏழை எளிய மக்களின் முன்னேற்றத்திற்கும், தாழ்த்தப்பட்டோரின் துயரங்களைத் துடைப்பதற்கும், வறுமையையும், வேலையின்மையையும் நீக்குவதற்கும், தூய்மையும், திறமையும் வாய்ந்த நிர்வாகத்தை அளிக்கவும் முயல்வோம் என்று மேதகு ஆளுநர் அவர்களின் உரையில் குறிப்பிடப்பட்டிருப்பது வரவேற்கப்பட வேண்டிய ஒன்றாகும். ஏழாவது ஐந்தாண்டுத் திட்டம் வகுக்கப்பட்டு வருகின்ற இந்த நேரத்தில் இந்தப் பெரிய நாட்டின் பிரதமர் பொறுப்பை எங்கள் கட்சியின் எழுச்சிமிகு உன்னதத் தலைவன் மாண்புமிகு இராஜீவ் காந்தி அவர்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். நாட்டின் உற்பத்தியைப் பெருக்கவும், நிர்வாகத்தைத் தூய்மைப்படுத்தவும் மைய அரசு மேற்கொண்டுள்ள முயற்சிகளுக்கு முழுமையான ஆதரவையும் ஆளுநர் அவர்கள் உரையில் தெரிவித்திருக்கிற தமிழக அரசை நான் பாராட்டுகிறேன். அடுத்து இருபது அம்சத் திட்டத்தைச் செயல்படுத்துவதில் தமிழ் நாடு அரசு மத்திய அரசுக்கு தன் முழுமையான ஒத்துழைப்பைக் கொடுக்கும் என்று தெரிவித்திருப்பதற்கும் என் பாராட்டைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மத்திய அரசினுடைய ஆர்.எல்.இ.ஜி.பி. என்ற ஊரக நிலமற்றோர் வேலைவாய்ப்புறுதித் திட்டம், என்.ஆர்.இ.பி. என்ற தேசிய கிராமப் பகுதி வேலைவாய்ப்புத் திட்டம் முதலியன கிராமப் பகுதிகளில் வேலை வாய்ப்பை பெருக்குவதுடன், அடிப்படை வசதிகளான உணவு, உடை, வீடு முதலியனவற்றை ஏற்படுத்த முடியும் என்ற நம்பிக்கை மேதகு ஆளுநர் அவர்களுடைய உரையில் குறிப்பிட்டிருப்பது சிறப்புக்குரியது.

பொது விநியோக முறை மிகச் சிறப்பாக நடந்து வருகிறது என்று ஆளுநர் அவர்களுடைய உரையில் குறிப்பிட்டிருப்பது ஏற்றுக்கொள்ளத் தக்கதாக இல்லை. கிராமங்களில் உள்ள நியாய விலைக் கடைகளில் அக்கிரமங்கள் தான் நடந்து

[திரு. கி. வெங்கடாசலம்] [1935 மார்ச் 15

வருகின்றன. மக்களுக்குத் தேவையான பொருள்கள் தேவையான நேரத்தில் கிடைப்பதில்லை. குறிப்பாக மண்ணெண்ணெய், சர்க்கரை போன்ற அத்தியாவசியப் பொருள்கள் நியாய விலைக் கடைகளில் இருந்து மொத்தமாக பல்வேறு வியாபாரிகளுக்கும் விற்கப்படுகின்றது. இவைகளைத் தடுத்து நிறுத்தி சீரான, முறையான பொது விநியோக முறையினை உருவாக்கிட வேண்டும்.

உள்ளாட்சித் தேர்தல்களையும், கூட்டுறவுத் துறை தேர்தல்களையும் உடனே நடத்திட இந்த அரசு முன்வர வேண்டும். இவைகளைப் பற்றி இந்த ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது. என்னுடைய தொகுதியில் பல கிராமங்களில் தெரு விளக்குகள் சில பல ஆண்டுகளாக எரியவில்லை. காரணம் தெரு விளக்குகளை பராமரிக்கும் பொறுப்பு மின் வாரியத்திடம் உள்ளது. ஊராட்சி ஒன்றிய ஆணையரிடத்தில் இந்தக் குறையினை நீக்கக் கேட்டால் அவர் மின் வாரியத்திடம் முறையிடுங்கள் என்று கூறுகிறார். கிராம மக்கள் அதிலும் குறிப்பாக வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கும் மக்கள் மிகவும் இன்னல்களுக்கு உட்படுத்தப் படுகிறார்கள். எனவே தெரு விளக்குகளை பராமரிக்கும் பொறுப்பினை ஊராட்சி ஒன்றியங்களிடமே கொடுத்தால் நலமாக இருக்கும். இப்படியே தான் குடிநீர் பிரச்னையும். தகுதி வாய்ந்த அனைவருக்கும் முதியோர் ஓய்வூதியம், ஆதரவற்ற குழந்தைகள் அனைவருக்கும் வசதிகள் செய்ய ரூபாய் 44.28 இலட்சம் செலவில் 16 புதிய ஆதரவற்றோர் இல்லங்கள் ஏற்படுத்தும் முயற்சி ஆகியவற்றை பாராட்டுகின்ற நான் பெண்களுக்குக் கழிப்பிடம் பற்றி ஆளுநர் உரையின் ஆறாம் பக்கத்தில்

"The programme for women in rural areas announced by the Chief Minister is being implemented successfully."

என்று குறிப்பிடப்பட்டுள்ளது. குறிப்பாக கிராமத்துப் பெண்கள் இந்தக் கழிப்பிடங்களை முறையாக பயன்படுத்த முடியாத காரணத்தாலும், அநேகமாக கழிப்பிடங்கள் பெரும்பாலானவற்றில் தண்ணீர் வசதி இல்லாத காரணத்தாலும், சீர்கெட்டு நோய்கள் பெருகுவதற்குத்தான் இது உதவிகரமாக இருக்கின்றது. குடிப்பதற்கே தண்ணீர் வழங்க இயலாமல்



1985 மார்ச் 15] [திரு. கி. வெங்கடாசலம்]

இருக்கின்ற இந்த நேரத்தில், கழிப்பிடங்களுக்குத் தண்ணீர் வழங்குதல் சற்று இயலாத காரியம் தான், என்றாலும் கூட இந்தத் திட்டத்திற்காக மாவட்டம் ஒன்றுக்கு ரூபாய் 40 முதல் 50 லட்சம் செலவு ஆகிறது. எனவே இவ்வளவு அதிகத் தொகை செலவாகியும் முறையாக பயன்படாத இந்தத் திட்டம்,

"It is being implemented successfully"

என்று குறிப்பிட்டிருப்பது சரியல்ல என்று குறிப்பிட விரும்புகிறேன்.

இலங்கைத் தமிழர் பிரச்னை பொறுத்தவரையில் எவ்வளவோ இருந்தாலும் எங்களுடைய திருச்சி மாவட்ட காங்கிரஸ் கமிட்டி சார்பிலே இங்கே வந்திருக்கிற அகதிகளின் துயர் துடைப்பு பணிகளுக்காக ஏறத்தாழ ஒரு லட்சம் ரூபாய் பெறுமானமுள்ள உணவுப் பொருள்களை வாங்கி, 10 ஆயிரம் ரூபாய்க்கு பண முடிப்பாகவும் வசூல் செய்து கடந்த 11—3—1985 ஆம் தேதி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடத்தில் கொடுத் திருக்கிறோம். அடுத்து, தொழில் வளர்ச்சி பற்றியோ, புதிய தொழில்கள் தொடங்குவது பற்றியோ ஆளுநர் உரையில் ஒன்றுமே குறிப்பிடாதது வருந்தத்தக்கது. தொழிலாளர்கள் அரசு என்று சொல்லிக் கொள்ளும் இந்த அரசு தொழிலாளர்கள் பற்றியோ, போக்குவரத்துத் தொழிலாளர்கள் பற்றியோ ஆளுநர் அவர்களின் உரையில் ஒன்றும் குறிப்பிடாதது ஏனோ தெரியவில்லை. பத்திரிகைகளின் வாயிலாக பேருந்துக் கட்டணம் உயரவிருக்கிறது என்ற அறிவிப்பு வருகிறது. ஆனால் போக்குவரத்துத் தொழிலாளிக்கோ, பேருந்து பயணிகளுக்கோ இந்த அரசு கூடுதல் வசதிகள் எதுவும் செய்து தரவில்லை. திருச்சி திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தில் கூடு கட்டும் பிரிவில் சுமார் 74 பணியாளர்கள் ஏறத்தாழ ஒரு ஆண்டு காலத்திற்கு முன்பு வேலையிலிருந்து நீக்கம் செய்யப்பட்டார்கள். பணி நீக்கம் செய்யப்பட்ட பணியாளர்கள் அனைவரும் திருச்சியிலிருந்து சென்னைக்கு கால்நடையாக நடந்து வந்து தங்கள் கோரிக்கையினைத் தெரிவித்தும், இந்த அரசு எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளாதது செவிடன் காதில் ஊதிய சங்குபோல் இருக்கிறது என்பதை நினைத்துப் பார்க்கிறபொழுது வருத்தமாக இருக்கிறது. மேலும் எனது தொகுதியில் கல்லக்குடி அருகே உள்ள முதுவத்தூரில் உள்ள

[திரு. கி. வெங்கடாசலம்] [1985 மார்ச் 15

'சிமின்ட் ரீசர்ச் இன்ஸ்டிடியூட்' கடந்த 14—6—1982 முதல் மூடப்பட்டு, சுமார் 150 குடும்பங்கள் வேலையிழந்து தவிக்கின்றன. எனவே இந்த அரசு இந்த சி.ஆர்.ஐ. நிறுவனத்தை மீண்டும் திறந்து, வேலையிழந்த அனைவருக்கும் வேலை கிடைக்கச் செய்ய வேண்டுகிறேன்.

(பிற்பகல் 12-20)

மேலும் எனது தொகுதியில் உள்ள கல்லகம் ஆண்டி ஓடைத் திட்டத்தை நிறைவேற்றி, சுமார் 2,000 ஏக்கர் நிலம் சாகுபடியாக வழிவகை செய்து தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

எனது தொகுதியில் தீ அணைப்பு நிலையம் ஒன்றை அமைத்துத் தருவதோடு, காவல் துறை அவுட்போஸ்ட் ஒன்றும் புள்ளம்பாடியில் அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்,

மின்சாரம் இன்றி நாட்டில் ஒன்றும் இயங்காது என்ற நிலை ஆளுநர் உரையின் 9 ஆம் பக்கத்தில் "Better capacity utilisation in the thermal stations under Tamil Nadu Electricity Board has been reflected in the improvement in power generation" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. தமிழக மின் வாரியத்திற்குச் சொந்தமான தூத்துக்குடி, எண்ணூர் மின் நிலையங்கள் வெற்றிகரமாக அமையவில்லை. பேசின்பிரிட்ஜ் மின் நிலையம் தொடங்கிய நாளிலிருந்தே நோய்வாய்ப்பட்டிருக்கிறது. மத்திய அரசுக்குச் சொந்தமான நெய்வேலி, கல்பாக்கம் மின் நிலையங்களை வைத்துத்தான் ஓரளவுக்கு மின் தேவையை நாம் பூர்த்தி செய்து வருகிறோம். தமிழகத்தின் மொத்த மக்கள் தொகை சுமார் 5 கோடி என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. தமிழக மின் வாரியத்திற்குச் சொந்தமான தூத்துக்குடி, எண்ணூர், பேசின்பிரிட்ஜ் மின் நிலையங்களில் ஆண்டொன்றுக்கு 200 கோடி ரூபாய் நஷ்டம் ஏற்படுகிறது என்று நான் அறிகிறேன். இப்படி கணக்குப் பார்க்கிறபோது தமிழக மக்கள் ஒவ்வொருவரும் தமிழக மின் வாரியத்தால் மட்டும் 40 ரூபாய்க்கு கடனாளியாக்கப்படுவதாக கருதுகிறேன். (ரூ. 40 பர் காபிட்டா). எனவே இந்த மின் நிலையங்களில் பவர் ஜெனரேஷன் சிஸ்டம், டிஸ்டிரிபியூஷன் சிஸ்டம், நிர்வாகச் சீர்கேடுகள் முதலியவற்றுக்



1985 மார்ச் 15] [திரு. கி. வெங்கடாசலம்]

கான காரணங்களை ஆராய ஒரு மின் தொழில் தெரிந்த நிபுணரைக் கொண்டு நீதி விசாரணை (இன்வெஸ்டிகேஷன்)-க்கு இந்த அரசு உத்தரவிட வேண்டுமாய் நான் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் டொமெஸ்டிக் சர்வீசுக்கு மின்வெட்டு அறிவிக்கப்படவில்லை. ஆனால் மின்வெட்டு அமுலில் உள்ளது, எவ்வகையில் நியாயம் என்று தெரியவில்லை.

மேலும் தமிழ் நாட்டிலே உள்ள விவசாயிகள், தங்கள் பாசனக் கிணற்றுக்கு மின் இணைப்புத் தேவை என்றால் பம்பு செட்டுகளை வாங்கி வைத்துவிட்டு, உடனடியாக சம்பந்தப்பட்ட மின் இலாகா அதிகாரிகளிடம் தங்கள் பெயர்களை பதிவு செய்து கொண்டால், வெகு விரைவில் அவர்களுக்கு மின் இணைப்புத் தரப்படும் என்று அரசு சார்பில் சுமார் நான்கு ஆண்டுகளுக்கு முன்பு அறிவிக்கப்பட்டது. அதனை நம்பி பல்வேறு கிராமங்களில் குறிப்பாக எனது தொகுதியில் தச்சங்குறிச்சி, கும்ளூர், மால்வாய், ஒரத்தூர், கல்லகம். கீழரசூர் போன்ற கிராமங்களில் உள்ள வறுமைக் கோட்டிற்கும் கீழே வாழ்வின் அடித்தளத்தில் உள்ள விவசாயிகள், நினைத்தால் 50 ரூபாய் கூட கடன் பெற முடியாத நிலையில் உள்ளவர்கள் தங்களிடம் இருந்த பண்ட பாத்திரங்கள் முதல் மிச்சம் மீதியிருந்த நகைகளை எல்லாம் விற்று அல்லது கடன் பெற்று பம்பு செட்டுகளை வாங்கி வைத்திருக்கிறார்கள். நான் கண்ட காட்சியைச் சொல்லுகிறேன். வாங்கி வைத்துள்ள அந்த பம்பு செட்டுகள் மின் இணைப்புகள் தரப்படாததால் விவசாயிகளின் வீடுகளிலே உள்ள திண்ணைகளில் இன்றையதினம் தூங்குகின்றன. ஒவ்வொரு விவசாயியும் தன்னுடைய சக்திக்கு அப்பாற்பட்டு கடன் பெற்று பம்புசெட்டுகளை வாங்கி வைத்திருக்கிறான். நான்கு ஆண்டுகளாகின்றன; மின் இணைப்பு கிடைக்கவில்லை. ஏதோ சிலருக்கு கொடுத்திருக்கிறார்கள். நான் மறுக்கவில்லை. அவர்கள் கையிலே இருந்த நகையும் போய் முகத்திலே இருந்த புன்னகையும் போய் இன்றையதினம் வேதனைக் கண்ணீர் விடுகிறார்கள்; விழிநீரைத் துடைத்துக் கொண்டிருக்கிறார்கள். இதனை களைய வேண்டுமாய் மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்களை மெத்தப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் ஆளுநர் அவர்களுடைய உரையில் திருச்சிராப் பள்ளியில் 170 கோடி ரூபாய் செலவில் "கனரக உலோகக் கலவை வடிவத் தொழிற்சாலை (ஹெவி அலாய் பெனிட்ரேட்டர் ஃபாக்டரி) அமைக்க மத்திய அரசு அனுமதி வழங்கியிருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் மத்திய அரசு அனுமதி வழங்கியதோடு நில்லாமல் இந்தத் தொழிற்சாலை ஏற்கெனவே அங்கு ஆரம்பிக்கப்பட்டு 'சிவில் ஒர்க்ஸ்' போன்ற வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன என்பதையும் நான் இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்து, திருச்சியில் இரண்டாவது இரயில் பெட்டித் தொழிற்சாலை அமைக்க மத்திய அரசுக்கு மாநில அரசு இடம் வழங்க முன்வந்திருப்பது குறித்து மகிழ்ச்சி. மேலும் இந்தத் தொழிற்சாலை விரைவில் அமைய அரசு எடுக்கும் முயற்சிகள் யாது என்பது பற்றி ஆளுநர் அவர்களுடைய உரையில் குறிப்பிடப்படவில்லை என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

கரும்பு உற்பத்தியாளர்களின் நலனைக் காக்கும்பொருட்டு 'மதுரா சுகர்ஸ்' நிறுவனத்தை அரசு தன் பொறுப்பில் எடுத்துக் கொண்டதைப் பாராட்டுகின்றேன். ஆனால் மத்திய அரசின் நேரிடை ஆளுகைக்கு உட்படுத்தப்பட்டிருக்கிற பெட்டவாய்த் தலை சர்க்கரை ஆலையும், தமிழக அரசுக்குச் சொந்தமான பெரம்பலூர் சர்க்கரை ஆலையும் கரும்பு உற்பத்தியாளர்களுக்கு டன் ஒன்றுக்கு 340 ரூபாய்க்கு மேல் கொடுக்கிறபொழுது, எனது தொகுதியில் உள்ள காட்டூர் கோத்தாரி சர்க்கரை ஆலை டன் ஒன்றுக்கு 220 ரூபாய் கொடுக்கவே மறுக்கிறது. இந்த ஆலையில் நிர்வாகச் சீர்கேடுகள் பல இருக்கின்றன. அவற்றைக் களைய தமிழக அரசு நடவடிக்கை எடுப்பதோடு இந்த ஆலையை தமிழக அரசு தனக்குச் சொந்தமாக ஆக்கிக்கொள்ள முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியிலே நடமாடும் சுகாதார நிலையங்கள் அமைக்க வேண்டும் என்று கோருகிறேன். கைத்தறி நெசவாளர் களுக்கு பல வசதிகள் செய்து தரப்படும் என்பதை நான் வரவேற்கிறேன். ஆனால் அவர்களால் நெய்யப்படும் துணிகளை வாங்க அரசு உடனடி நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.





குறிப்பாக என்னுடைய தொகுதியில் பூவாளூர், பு. சங்கேந்தியில் உள்ள கைத்தறிக் கூட்டுறவு நெசவாளர் சங்கங்களில் உற்பத்தியான துணிகள் சுமார் எட்டு லட்சத்திற்கும் மேல் தேங்கிக் கிடக்கின்றன. இவற்றை கொள்முதல் செய்ய அரசு முன்வர வேண்டும்.

முதலமைச்சர் சத்துணவுத் திட்டம், 1 முதல் 8 வகுப்பு வரை உள்ள தகுதியுள்ள பிள்ளைகள் அனைவருக்கும் இலவச சீருடைகள், இலவசப் பாடப் புத்தகங்கள் கொடுப்பது வரவேற்கக்கூடிய ஒன்றாகும். அடுத்தபடியாக 10,000 குழந்தை நல நிலையங்கள், பாலர் தொடக்கப் பள்ளிகளாக மாற்றப்படுவது, சென்னை மருத்துவப் பல்கலைக் கழகம் ஆகியவை பாராட்டுக்குரிய அம்சங்களாகும். பழுதுபட்ட நிலையில் உள்ள பள்ளிக் கட்டிடங்கள் செப்பனிட, அவசியமான இடங்களில் புதிய பள்ளிக் கட்டிடங்கள் கட்டுவது எல்லாம் வரவேற்கத் தக்கவை என்று கூறி இந்த அளவோடு, ஆளுநர் உரையிலே என்னுடைய கருத்துக்களைக் கூறி அமைகிறேன்.

*திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, திரு. செம்மலை அவர்கள் முன்மொழிந்த ஆளுநர் உரை மீது நிகழ்கின்ற இந்த விவாதத்தை வழிமொழிந்து பேசுகின்ற வாய்ப்பினைத் தந்தமைக்கு உங்களுக்கு முதலிலே நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். என்னை இந்த மன்றத்திலே தொடர்ந்து பணியாற்றுகின்ற வாய்ப்பாளனாக ஆக்கிய ராதாபுரம் தொகுதி மக்களுக்கு முதலில் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அதனை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கு துணை நின்ற இந்திய தேசிய காங்கிரசுக்கும், அகில இந்திய அண்ணா தி.மு.க. விற்கும் எங்களின் இயக்கத்தைச் சேர்ந்த காந்தி-காமராஜ் தேசிய காங்கிரஸ் உடைய தோழர்களுக்கும், பொதுமக்களுக்கும், மற்றும் இந்த அணியிலே இருந்த நண்பர்களுக்கும் நான் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ராதாபுரம் தொகுதி மிகவும் பின்தங்கிய தொகுதியாக பல்லாண்டு காலமாக இருந்து வருகிறது. ஏறத்தாழ ஒரு புறத் திலேயிருந்து மறுபுறம் பார்த்தால் 33 மைல்கள் நீளம் என்ற பெயராலே அமைந்து கிடைக்கின்ற ஒரு பெரிய தொகுதி. அங்கே

மலையுண்டு, மலைச்சாரல் உண்டு, எனவே குறிஞ்சி நிலம் உண்டு. பக்கத்திலே கடலும் கடல் சார்ந்த இடமும் உண்டு. அதாவது காடும், காட்டைச் சேர்ந்த பகுதியாகிய முல்லையும் உண்டு. பக்கத்திலே கடலும் கடல் சார்ந்த இடமும் உண்டு. எனவே நெய்தல் நிலமும் உண்டு. வயலும், வயல் சார்ந்த இடமும் உண்டு. எனவே மருத நிலமும் உண்டு. பாலை போன்று காட்சியளிக்கின்ற மணல் தேரிகளும் உண்டு, எனவே பாலை என்று சொல்கின்ற அந்தத் திணையும் உண்டு. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்று சொல்லுகின்ற அந்த ஐந்து திணைகளும் மயங்கிக் கிடக்கின்ற ஒரு நிலமாக ஒரு தொகுதியாக அது இருக்கின்றது.

அதைப்போலவே ஓரி, விஜயாபதி போன்ற இந்துக் கோயில்கள் இருக்கின்ற மிகச் சிறந்த தலைசிறந்த ஸ்தலங்களும், நூற்றாண்டுக் காலத்திற்கு மேலாக இருக்கின்ற கோயில் கொண்டிருக்கிற கல்லிக் குளம் போன்ற இடங்களும், ஆற்றங்கரை பள்ளிவாசல் போன்ற இஸ்லாமிய சகோதரர்கள் தொழுகின்ற இடங்களும் இருந்தாலும், அவைகள் செழிப்புற்று இல்லை. அதற்குரிய காரணம் என்ன என்று சொன்னால், நீண்டகாலமாக நினைவிலே வைத்திருக்கிற பல திட்டங்கள் நிறைவேற்றப்படாத திட்டங்களாக இருப்பது தான்.

மாண்புமிகு புரட்சித் தலைவருடைய அரசு அதை நிறைவேற்றும் என்ற நம்பிக்கையின் அடிப்படையிலே பல்வேறு இடங்களிலே நாங்கள் விடுத்த வேண்டுகோளை மறுபடியும் இங்கே விடுப்பதற்கு நான் விரும்புகிறேன். தாமிரபரணி திட்டம், கொடுமுடியாறு திட்டம், பச்சையாறு திட்டம் போன்றவைகள் உடனடியாக நிறைவேற்றப்பட்டால், அந்தப் பகுதிகள் மிகவும் செழிப்பாக இருக்கும் என்பதிலே எந்தவிதமான ஐயப்பாடும் இல்லை.

அதைப்போலவே, கடல் வளம் அங்கே நிறைய இருக்கின்ற காரணத்தால் மீனவ மக்கள் பிடிக்கின்ற மீன்களை எல்லாம், உடனடியாக பக்கத்தில் இருக்கின்ற ஊர்களுக்குக் கொண்டு செல்வதற்கு வசதியாக மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் எல்லாம் வாகனங்கள் வாங்குவதற்கு கடன் வசதிகளை வழங்கினால்





அவர்கள் நல்வாழ்வு வாழ்வதற்கும் வழி உண்டு. இடிந்தகரை போன்ற பகுதிகளிலே வாழ்ந்துகொண்டு இருக்கிற மீனவர்கள் கடலின்பால் துன்புற்றுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய துன்பத்தைத் துடைப்பதற்கும் நாம் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

அதைப்போலவே, பனையேற்றத் தொழிலிலே ஈடுபட்டிருக்கின்ற சாதாரண மக்கள் பழங்காலத்திலே அவர்களுக்கு என்று அமைக்கப்பட்ட சங்கங்களும் அமைப்புகளும் மூடிக்கிடப்பதாலே, அரசாங்கத்திடமிருந்து சலுகைகளை பெற முடியாமல் இருக்கிறார்கள். கீழே விழுந்து விபத்துக்கு உள்ளானவர்கள்கூட அவர்களுடைய ஈட்டுத் தொகையைப் பெற முடியாமல் அந்த அலுவலகத்திற்கும், இந்த அலுவலகத்திற்கும் அலைந்துகொண்டு இருக்கிற ஒரு நிலை ஏற்பட்டிருக்கிறது. இந்தத் தொகுதியைப் பற்றிச் சொல்கிறபோது ராதாபுரத்திலும் திசையன்விளையிலும் இரண்டு உப மின் நிலையங்களை ஏற்படுத்துவதற்கு இந்த அரசாங்கம் முன் வந்ததை நான் மிகவும் பாராட்டுகிறேன். ஆனால், துரிதமாக வேலை நடைபெற வேண்டும். இந்த திசையன்விளை என்று சொல்லுகின்ற இடத்தில் ஏறத்தாழ 16 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் வாழ்கிறார்கள். அந்த பெரு நகரத்திலே குடிநீர் மேல்நிலைத் தொட்டி எல்லாம் கட்டியாகி விட்டது. குழாய்கள் எல்லாம் போட்டாகிவிட்டது. ஆனால், தண்ணீர் மட்டும் வராது இருப்பதற்குக் காரணம் மின்சார இணைப்பு கொடுக்க முடியவில்லை.

போதுமான மின்சாரம் இல்லாத காரணத்தினாலே குடிநீருக்கு மிகவும் துன்பப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் அங்கேயிருக்கிற மக்கள். அந்தப் பகுதி ஒரு மழை மறைவுப் பிரதேசமாக இருந்து கொண்டிருக்கிற காரணத்தினாலே வறட்சி என்பது எப்போதும் அந்த தொகுதியிலே இருந்து கொண்டிருக்கிற ஒரு நிலையான ஒன்றாக காட்சியளிக்கிறது. ஆழ கிணற்றைத் தோண்டி அங்கேயிருக்கிற தண்ணீரை வெளியிலே கொண்டு வருவதற்கு படுகிற பாடு மிகப் பெரிய பாடாக இருக்கிறபோது, மின்சாரம் இல்லை என்று சொன்னால், மெத்த சிரமம் ஏற்படுகிறது. அந்தப் பகுதியிலே வாழ்ந்து கொண்டிருக்கிற மக்களுக்கு ஏதாவது ஒரு தொழிற்சாலையை ஆரம்பித்துக் கொடுத்து, அவர்களைக் காப்பாற்றுவதற்கு இந்த அரசாங்கம் முன்வரவேண்டும்.

(பிற்பகல் 12-30)

வாழை மரங்கள் ஏராளமாக இருக்கிற காரணத்தினாலே அந்த வாழை நாரை வைத்துக் கொண்டு, வாழைத் தண்டுகளை வைத்துக் கொண்டு ஏதாவது ஒரு தொழிற்சாலையை, காகிதத் தொழிற்சாலையை அங்கே ஆரம்பிக்க ஏற்பாடு செய்ய முடியுமா என்பதை அரசாங்கம் உடனடியாக பரிசீலிக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்த செய்தியாக 'காற்றரிப்பு தடுப்பு' என்று சொல்கிற ஒரு திட்டம். மணல்தேரிலிருந்து காற்றடித்து பக்கத்திலே இருக்கிற வயல் வெளிகளிலும், நல்ல நஞ்சை நிலங்களையும் மூடி விடுகிறது என்பதற்காக குறுக்கே மரங்களையெல்லாம் வைத்து நடுகிறார்கள். அந்த மரங்களை வைத்து நடுகிறபோது ஐந்து ஆண்டுகளுக்கு மட்டும் அந்தப் பணி நடைபெறுகிறது. அதன்பிறகு அடுத்த இடத்திற்குச் சென்று விட வேண்டும் என்று ஒரு திட்டத்தோடு அரசாங்கம் செயல்படுகிறது.

ஆனால், ஐந்தாண்டுகளுக்குள்ளாகவே அந்த மரம் வளர்ந்து விட்டதா, வேர் பிடித்து விட்டதா, செழித்து கிளைகளை பரப்பி வந்து விட்டதா, பூத்துக் காய்க்கிற பருவத்திற்கு வந்து விட்டதா என்று பார்த்துத்தான் அந்த இடத்தை விட்டு அடுத்த இடத்திற்குப் போக வேண்டும். ஐந்து ஆண்டு காலம் முடிந்ததா என்று பார்ப்பதை விட, அந்த ஐந்து ஆண்டினுடைய உழைப்பும் பயன் தந்திருக்கிறதா என்று பார்ப்பதே முக்கியம் என்று கருதி, அப்படிப்பட்ட பணியில் பணி புரிந்து கொண்டிருக்கும் பணியாளர்களை, அவை நல்ல முறையில், செழித்து வளருகிற வரையில் அங்கேயே இருக்கின்ற வகையில் ஒரு குறிப்பிட்ட ஆண்டுகளுக்கு அங்கேயே இருக்கின்ற முறையிலே அரசாங்கம் இந்த திட்டத்தை நடத்திக் கொடுக்க வேண்டும் என்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.



அதேபோல, சில கூட்டுறவுச் சங்கங்களைப் பற்றி நமது கூட்டுறவு அமைச்சர் அவர்கள் உடனடியாக கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. உதாரணத்திற்குச் சொல்லப் போனால் காரிகோயில் என்ற இடத்தில் ஒரு பனை வெல்ல சொசைட்டி இருக்கிறது. அங்கேயிருக்கிற உறுப்பினர்களுக்கு போதிய உதவிகளைச் செய்யாமல் தவறுகளையே செய்து கொண்டிருக்கிறது என்றெல்லாம் நமக்கு தகவல்கள் வந்து கொண்டிருக்கின்றன. இவைகளையெல்லாம் அரசாங்கத்தினுடைய அதிகாரிகளும் அமைச்சர்களும் தடுக்க வேண்டும். மொத்தத்திலே சொல்லப் போனால், குறைகள் எங்கிருந்தாலும் கவனித்துப் போக்க வேண்டிய கடமை அரசாங்கத்திற்கு இருக்கிறது. என்னுடைய பகுதியிலே இரண்டு மணி நேரத்திற்கு மேலே மொத்தத்திலேயே மின்சாரம் கிடைக்காத நிலைமை இருக்கிறது. இவைகளையெல்லாம் அரசாங்கம் சரி செய்யும் என்ற நம்பிக்கையிலே முதலிலேயே சொன்னேன்.

அடுத்து, அரசாங்கத்தின் சார்பிலே ஆளுநர் உரையிலே சொல்லப்பட்டிருக்கிற கருத்துக்களைப் பற்றி என்னுடைய எண்ணங்களை வைக்கிறேன். தேர்தல் மிக சுமுகமாக நடந்து முடிந்தது என்று சொல்வதை ஒரு வகையில் ஒப்புக்கொள்கிறோம். ஆனால் சில இடங்களில் போட்டியிட்ட வேட்பாளர்கள்—எந்தக் கட்சியின் சார்பிலே போட்டியிட்டவர்கள் என்று நான் சொல்லவில்லை—ஆனால் கூட்டணியின் சார்பிலே போட்டியிடாதவர்களும் கூட, எந்தக் கூட்டணியாக இருந்தாலும் சரிதான், இந்தக் கூட்டணியிலே போட்டியிடுகிறவர்களுக்கு சில படங்களை காட்டுவதற்கும் சில வாசகங்களை உபயோகப்படுத்துவதற்கும் உரிமை பெற்றவர்கள்; அது போல அந்தக் கூட்டணியிலே உள்ளவர்கள் சில படங்களைப் போடுவதற்கும் சில வாசகங்களை உபயோகப்படுத்துவதற்கும் உரிமை உள்ளவர்கள். ஆனால் இந்த இரு கூட்டணி வேட்பாளர்களையே எதிர்த்துப் போட்டியிட்டவர்களும், அதே வாசகத்தை, அதே படங்களை அதே உருவங்களையும் போட்டு தேர்தல் பிரச்சாரம் செய்தால்கூட அதை தடுக்க முடியாத நிலை இந்தத் தடவை பல தொகுதிகளிலே இருந்தது நாம் கண்ட ஒன்றாகும்.

இவைகளை வைத்துப் பார்க்கிறபோது சுமுகமான முறையிலே தேர்தல் நடந்தது என்று சொல்லி ஒரு வரியிலே அதற்கு முற்றுப்புள்ளி வைத்து விடாமல், அந்த அத்தியாயத்தை மூடிவிடாமல், இப்படிப்பட்ட புகார்கள் வந்திருக்கின்றனவா, அவை இனிமேல் வாராமல் இருப்பதற்கு என்ன செய்ய வேண்டும் என்று நடவடிக்கையை மேற்கொள்வதே அரசாங்கத்தினுடைய கடமையும், அதன் மூலம் எலக்ஷன் கமிஷனுக்கும் அந்தச் செய்தி செல்ல வேண்டும் என்பதற்காகவும் இதனை இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன்.

இந்தத் தேர்தலைப் பொறுத்த வரையில் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களுடைய உடல் நலம் பற்றியும், இந்தியாவினுடைய பிரதமராக இருந்த, மறைந்து விட்ட இந்திரா காந்தி அவர்களைப் பற்றியும் இங்கே பேசப்பட்டது. நான் ஒரே ஒரு கருத்தை மட்டும் சொல்ல விரும்புகிறேன். அனுதாப அலையாலே நீங்கள் வெற்றி பெற்றீர்கள் என்று ஒருவர் சொன்னதாலேயே அது நம்மை சிறுமைப்படுத்துவது போல் நினைக்க வேண்டியது இல்லை. அனுதாப அலையை மட்டும் நம்பித்தான் இருந்தோம் என்று அவர்கள் சொல்லிவிடுவார்களோ என்ற எண்ணத்தாலேயே குறுகுறுத்த நெஞ்சத்தோடு இதைப் பார்க்க வேண்டிய தேவையில்லை. யாருக்கு நோய் வந்தால் அனுதாபம் வரும் அல்லது யார் மறைந்தால் அனுதாபம் வரும் என்று சொல்கிறபோது, இந்தியாவினுடைய பிரதமர் மறைந்தார் என்று சொன்னால், அந்தப் பிரதமர் தேச மக்களுடைய ஒற்றுமைச் சின்னமாக காட்சியளித்த காரணத்தினாலும், அனைத்து மக்களுடைய பிரதிநிதியாக காட்சியளித்த காரணத்தினாலும், அவர் இல்லையே என்று சொல்கிற ஏக்கம்தான் காரணம்.

அவர் இல்லையே என்று சொல்கிறபோது, 'எவர்' என்ற கேள்விக்குறி எழுகிறபோது, மிகப் பெரியவர், மிக உயர்ந்தவர், மிகச் சிறந்தவர், நாட்டுக்காக உழைத்தவர் என்று சொல்கிற சந்தர்ப்பங்கள் வருகிற காரணத்தினாலே, அந்த அனுதாபமும் கூட அவருடைய ஆற்றலால் வந்தது, அவருடைய உழைப்பால் வந்தது, அவருடைய தியாகத்தால் வந்தது, அவர் நாட்டிற்குச் செய்த நன்மையால் வந்தது என்று சொல்கிறபோது, அந்த அனுதாபம் வேறு யாராக இருந்தாலும் வந்திருக்க முடியுமா என்று நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.





அதைப்போல நோய்வாய்ப்பட்டவர் யார்? தாயினும் நல்லார் ஆக இருந்தவர். குகனைப்பற்றி சொல்கிறபோது கம்பன் சொல்வானே, 'மீனும் தேனும் கொண்டு வந்தால் கூட தாயினும் நல்லான்' என்று, அதைப்போல நாட்டு மக்களுக்கு உணவு அளித்து, 'உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோர்' என்று சொல்கிற அளவிற்கு அன்னையாக இருந்தவரை நோய் ஆட் படுத்தி, உட்படுத்தி அவரை மருத்துவ மனையிலே படுக்க வைத்து விட்டதே என்ற அனுதாபம் வருகிறபோது, யார் மீது அந்த அனுதாபம் வந்தது என்று சொன்னால் நல்லது செய்தவருக்காக வந்தது என்பதுதான். யாருக்குத் துன்பம் வந்தாலும், அல்லது யார் இறந்து விட்டாலும் அனுதாபம் வருகிற அளவிற்கு என்று மட்டும் அல்லாமல், அதை விட அதிகமாக அது அலையாக வந்தது என்பதுதான் முக்கியம். அதற்கு அவர்கள் செய்த நல்ல காரியம்தான் காரணம். ஆகவே அனுதாபத்தின் காரண மாகவே வந்தது என்று சொன்னால், அதனாலே மட்டுமல்ல, அவர்கள் முன்னாலே செய்த பல ஆற்றலாலும் அது நிகழ்ந்தது என்று நாம் எடுத்துக்கொண்டு, அந்த அலைகளைப் பற்றி நாம் சிந்திக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மருத்துவச் செலவைப் பொறுத்தவரையில் மந்திரிசபை கூடி எடுத்த முடிவை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று எனக்கு முன்னாலே பேசிய அருமைமிகு உறுப்பினர் மாண்புமிகு அப்துல் சமத் அவர்கள் இங்கே பேசினார்கள். இந்த மந்திரிசபை எடுத்த முடிவோ, இந்த மந்திரி சபைக்கே தலைமை தாங்கிக்கொண்டு நிற்கின்ற மரியாதைக்குரிய முதல்வர் அவர்கள் எடுத்த முடிவோ இது. எந்த முடிவாக இருந்தாலும் இது மக்களுடைய பணம் தான். மந்திரிசபை எடுத்துக்கொண்டிருக்கின்ற முடிவின்படி பார்த்தாலும், அதை மக்களுடைய வரிப் பணத்திலிருந்து எடுத்து கொடுக்கிறோம். எந்த மக்களுக்காக மாண்புமிகு முதல்வர் அவர்கள் அல்லும் பகலும் சிந்திக்கிறாரோ, பாடுபடுகிறாரோ, அந்த மக்கள் கொடுத்த வரிப் பணத்திலிருந்து எடுத்துக்கொடுப்பது தப்பு இல்லைதான், தவறு இல்லைதான். இன்னும் ஒரு முதல்வர், இன்னொரு காலத்திலே வருகின்றபோது அவர் நோய் நொடி இல்லாமல் இருக்கவேண்டும் என்பதை விரும்புகிறோம். எத்தனையோ ஆண்டுகளுக்கு பிறகு நம்முடைய முதல்வர் தொடர்ந்து பல்லாண்டு பல்லாண்டுகளாக

இருக்கவேண்டுமென்று ஆசைப்படுகிறோம். இன்னொரு
முதல்வர் எதிர்காலத்திலே வருகின்ற நேரத்திலேகூட அரசாங்க
த்துடைய பணத்தை எடுத்தால் தப்பில்லை என்று சொல்லுகின்ற
ஒரு முன் உதாரணத்தை இங்கே நிலைநிறுத்திவிட்டு போனாலும்
தவறில்லைதான். ஒருவேளை, அவருக்கே வழிகாட்டியாக
இருந்த பேரறிஞர் அண்ணா அவர்கள், தம்முடைய மருத்துவ
செலவையெல்லாம் மக்களிடமிருந்துதான் பெற்றார் என்ற முன்
உதாரணத்தை தானே பின்பற்ற வேண்டுமென்று விரும்பி
னாலும் அதை நாம் தவறு என்று சொல்ல இயலாது. அப்படி
முதல்வர் அவர்கள் சொல்வார்களானால் காந்தி காமராஜ் தேசிய
காங்கிரஸ் கட்சியின் சார்பில், எங்களுடைய நிதி என்ற பெயரில்,
ஒரு சிறு தொகையை காணிக்கையாக கொடுப்பதற்கு தயாராக
இருக்கிறோம் என்பதை பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தத் தேர்தலை பொறுத்தவரையில் அந்த இரண்டு பெரு
மக்களுக்கும் என்று சொல்வதைத் தவிர, அந்த வெற்றிக்கொடி
நாட்டிய அத்தனை பொது மக்களுக்கும் கூட நாம் நன்றி
சொல்ல வேண்டும். ஏனென்றால் பொதுமக்கள் எதனை விரும்பி
னார்கள்? பாரதப் பிரதமராக ராஜீவ் காந்தி வரவேண்டு
மென்று விரும்பினார்கள். தமிழகத்தின் முதல்வராக புரட்சித்
தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் வரவேண்டுமென்று விரும்பி
னார்கள். எனவே இந்த விருப்பத்தை நிறைவேற்றிய வகையில்
"எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார் திண்ணியராகப்
பெறின்" என்று சொல்வதைப்போல, பொதுமக்கள் திண்ணிய
ராக இருந்தார்கள். பொது மக்கள் எண்ணிய காரியம் இங்கே
நிறைவேறி இருப்பதினால் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கிறோம்.

அடுத்து ஆளுநர் உரையிலிருந்து ஒன்றை இங்கே சுட்டிக்
காட்ட விரும்புகிறேன். ஒன்றிலிருந்து எட்டாம் வகுப்பு வரை
உள்ள பள்ளி மாணவர்களுக்கு இலவச உணவு, உடை என்று
சொல்லப்பட்டிருக்கிறது, மகிழ்ச்சி. அதைப்போலவே, மருத்துவ
நிலையம், பல்கலைக் கழகம் போன்ற செய்திகள் வருகின்றன,
மகிழ்ச்சி. இப்படி பல செய்திகள் வந்தாலும் எமக்கு மனக்
குறையும் உண்டு. இவற்றையெல்லாம் சொல்லியிருக்கலாமே,
பொதுமக்கள் எதிர்பார்த்துக்கொண்டிருப்பார்களே என்று
சொல்கின்ற மனக்குறை என்னவென்றால், ஆசிரியப்





பெருமக்களுக்கு வீட்டு வசதி வாரியம் ஏற்படுத்துவோம் என்று
தேர்தல் அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிறதே அதனை
சுட்டிக்காட்டவில்லை. அதைப்போலவே மேற்கே பாய்கின்ற
நதிகளையெல்லாம் கிழக்கே திருப்புவோம் என்று சொல்லுகின்ற
முயற்சியை பற்றி எதுவுமே சொல்லாமல் இருப்பதும், கிருஷ்ணா
நதி நீரை சென்னைக்கு கொண்டு வருவதுபற்றி ஒன்றுமே குறிப்
பிடவில்லை என்பதும் நமக்கெல்லாம் ஒரு குறைதான். அதைப்
போலவே இன்னொன்று சொல்லியிருக்க வேண்டும். அதாவது
வடக்கே பாய்ந்து கொண்டிருக்கின்ற கங்கை நீரை தெற்கே
கொண்டு வருவோம் என்று. "கங்கை இங்கே வரவேண்டும்,
குமரிக் கடலைத் தொட வேண்டும்" என்பது தமிழ்நாட்டு
மக்களுடைய எண்ணமாக இருக்கின்றபோது, அதைப் பற்றி
சுட்டிக்காட்டி இருக்க வேண்டும் என்பதெல்லாம் நம் மனதிலே
இருக்கின்ற குறை. ஏனென்றால், பொது மக்கள் எதிர்பார்த்துக்
கொண்டிருக்கிறார்கள்.

ஒரு செய்தியை இங்கே குறிப்பிட்டு காட்டியிருக்கிறார்
ஆளுநர் அவர்கள். இலவச மின்சார திட்டம் என்பதை சுட்டிக்
காட்டி இருக்கிறார். மகத்தான திட்டம். இன்னும் சொல்லப்
போனால், மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்த இந்த
திட்டத்திற்கு ஈடான ஒரு திட்டத்தை இந்தியாவிலே எந்த
மாநிலமும் செய்யவில்லை. அப்படிப்பட்ட அற்புதமான திட்டம்
மின்சாரத்தை இலவசமாக தருகிறேன் என்று சொல்கின்ற
திட்டம். இது புரட்சிகரமானது, புதுமையானது, சரித்திரத்
திலே பொன் எழுத்துக்களால் பொறிக்கத்தகுந்த ஒரு திட்டம்.
இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துகின்ற நேரத்தில்,
அதிகாரிகள் முதலமைச்சருடைய நெஞ்சத்திற்கேற்ப காரியங்
களை நடத்திக்கொண்டு போகிறார்களா, அவருடைய உள்ளத்திற்
கேற்ப அவர்களுடைய உழைப்பு இருக்கிறதா, அவருடைய
எண்ணத்தை ஈடேற்றுகின்ற வகையில் அவர்கள் செயல்கள்
புரிந்துகொண்டிருக்கிறார்களா என்பதை மட்டும் ஒரு கணம் நாம்
சிந்தித்து பார்க்க கடமைப்பட்டிருக்கிறோம். இதை ஏன்
இங்கே குறிப்பிடுகிறேன் என்றால், இலவச மின்சாரம் என்று
ஏழை எளியவர்களுக்கு கொடுக்க வேண்டும் என்று திட்டம்
அது 12 பைசா விதம் இதுவரை செலுத்திக்
போடுகின்றார்கள்.

கொண்டிருந்த சிறு விவசாயிகள் இருக்கிறார்கள் பாருங்கள். அவர்களுக்குக் கூட இன்னும் அது சரியான வகையில் கொடுக்கப்படவில்லை என்பதுகூட அல்ல. சில இடங்களிலே, அவர்களுக்கு நீங்கள் மின்சார கட்டணத்தை கட்டவில்லை என்று சொன்னால், உடனடியாக நாங்கள் அவைகளையெல்லாம் எடுத்துவிடுவோம், இனிமேல் அந்த கனக்ஷனை நாங்கள் தரமாட்டோம் என்று சொல்கின்றதெல்லாம் நடந்துகொண்டிருக்கிறது.

ராஜபாளையத்திலே, முகவூர் பிரிவிலே ஒரு பெண்மணியிடம் மோட்டார் பம்ப் செட்டிற்கு இதுவரை 12 பைசா கட்டிக்கொண்டு இருந்தவர், இரண்டு ஏக்கர் கூட இல்லாதவர். அவரிடமிருந்து கூட இலவச மின்சாரம் உங்களுக்குதர முடியாது என்று சொல்லுகின்ற தகவல் வந்திருக்கிறது. அரசாங்க அதிகாரிகளிடமிருந்து வந்திருக்கிறது. நான் பணிவோடு இங்கே நம்முடைய மின் துறை அமைச்சர் இருக்கின்ற காரணத்தினால் கேட்டுக்கொள்வேன். இலவச மின்சாரம் என்பது அற்புதமான திட்டம். ஆனால் அதிலே போடப்பட்டிருக்கின்ற நிபந்தனைகள் இருக்கிறது பாருங்கள், வேறு ஒரு சிறிய தொழிலை செய்தால் இலவச மின்சாரம் கிடையாது, அவர்கள் உத்தியோகம் பார்த்தால் இலவச மின்சாரம் கிடையாது என்று இரண்டரை ஏக்கர் நஞ்சையும், ஐந்து ஏக்கர் புஞ்சையும் வைத்திருக்கின்றவர்களுக்கு சொல்லுவது மாண்புமிகு முதலமைச்சர் நெஞ்சத்திற்கு இனிய செய்திகள் அல்ல.

(பிற்பகல் 12-40)

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆகஸ்ட் 15-ஆம் தேதி இந்தக் கோட்டையிலே கொடியேற்றி வைத்துப் பேசுகின்ற நேரத்திலே சொன்னார்கள். இதுவரை 12 பைசா யார் செலுத்தினார்களோ, 5 ஏக்கர் புஞ்சை நிலத்தை யார் வைத்திருக்கிறார்களோ, 2½ ஏக்கர் நஞ்சை வைத்திருக்கிறார்களோ அவர்களுக்கெல்லாம் இலவசம் என்று சொன்னதை நாம் நிறைவேற்ற வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.



அதுபோன்று குதிரைச் சக்திக்கு ரூ. 75 என்பது அருமையான திட்டம் என்பது மட்டுமல்ல, சில விவசாயிகளை உடனடியாக செல்வந்தர்களாக ஆக்குகின்ற திட்டம். இப்படிப்பட்ட நல்ல திட்டம் இருந்தும், சில இடங்களிலே, சிலர் துயரில் தள்ளப்படுகிறார்கள் என்பதை மனதிலே கொள்ள வேண்டும். உதாரணமாக, தண்ணீருக்குப் பற்றாக்குறை இருக்கின்ற நேரத்தில் மின்சார மோட்டார் பம்ப் செட்டுகளை எப்போதும் பயன்படுத்த முடிவதில்லை. அவர்கள் மினிமம் சார்ஜ் என்று சொல்கின்ற அளவிற்கு ஒரு சிறு தொகையைக் கட்டிக்கொண்டிருந்தவர்கள். இப்போது தண்ணீரைப் பாய்ச்சுகின்றார்களோ, இல்லையோ, மின்சார மோட்டாரை உபயோகப்படுத்துகின்றார்களோ, இல்லையோ, அவர்கள் குதிரைச் சக்திக்கு ரூ. 75 விதம் கட்ட வேண்டிய நிலை வருகின்றபோது, மற்றவர்களுக்கெல்லாம் சலுகை இருக்கின்றபோது எங்களுக்கு மட்டும் ஏன் தண்டனையா என்று கேட்கின்ற ஒரு வினா எழுகிறது பாருங்கள். அதனைத் தயவுசெய்து மனதிலே வைத்து, அப்படிப்பட்டவர்களுக்குச் சலுகைகள் வழங்கலாம். மூன்று ஆண்டுக் காலமாக அவர்கள் கட்டியிருக்கின்ற மின்சாரக் கட்டணத்தினுடைய ஒட்டுமொத்தமான தொகையைக் கணக்கெடுத்து, அதற்கு ஆண்டுக்குச் சராசரி என்னவென்று பார்த்து, அந்தச் சராசரியிலே 50 சதவீதம் கட்டினால் போதும் என்ற ஒரு அறிவிப்பை வெளியிட்டால்கூட, அவர்கள் மகிழ்வார்கள். ஆனால் நமது இறுதி இலட்சியம், அனைவருக்கும் மின்சாரம் இலவசம். விவசாயத்திற்காக மின்சாரம் இலவசம் என்று இருக்க வேண்டும். அந்த இலட்சியத்தை நோக்கி நாம் நடைபோடுவோமாக என்பதுதான் என்னைப் போன்றவர்கள் உங்களுக்கு அன்போடு கொடுக்கின்ற வேண்டுகோளாகும், விடுக்கின்ற கோரிக்கையாகும்.

இங்கே இலங்கைத் தமிழர்களைப் பற்றிய செய்தி வந்தது. இந்த இலங்கைத் தமிழர்களைப் பற்றித் தான் நான் மாண்புமிகு அவைத் தலைவரின் அனுமதியோடு சிறிது நேரம் சற்றுக் கூடுதலாகக் கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

[திரு. குமரி அனந்தன்] [1985 மார்ச் 15

இன்று காலையில் வானொலியைத் திருப்புகின்றபோது ஒரு மகிழ்ச்சியான செய்தியைக் கேட்டேன். எந்த வகையிலே மகிழ்ச்சி என்று சொன்னால், மத்திய அரசாங்கமே நமது அரசாங்கத்தைப் பாராட்டியிருக்கின்றது என்ற அளவிற்கு மகிழ்ச்சியான செய்தி. கண்ணீரும், கம்பலையுமாக ஓடோடி வந்த, கட்டிய துணியோடு ஓடோடி வந்திருந்த இலங்கைத் தமிழர்களுக்குத் தமிழக அரசாங்கம் வேண்டுவன எல்லாம் செய்து கொடுக்கிறது. இந்த அளவிற்குச் செய்வதை மத்திய குழு பாராட்டி இருப்பது, தமிழகத்திலுள்ள ஒவ்வொரு குடிமகனுக்கும் கிடைத்த பாராட்டு என்று எண்ணி நாம் மகிழலாம். ஆனால் அவர்கள் ஏன் இப்படி ஓடி வந்தார்கள்? அங்கிருந்து அவர்கள் அநாதையாக ஓடி வருவதன் காரணம் என்ன? அங்கே வாழ்ந்து கொண்டிருக்கின்ற மக்கள் பாரதி சொன்னதைப்போல அங்கே இருக்க முடியாமல் இங்கே வருவதற்கு என்ன காரணம் அமைந்தது என்று பார்த்தால்,—'விம்மி, விம்மி, விம்மி, விம்மி, விம்மியழுகின்ற குரல் கேட்டிருப்பாய் காற்றே' என்று அவர் ஓர் இடத்திலே பாடுவார்—அவர்கள் இப்போது விம்மி அழும் திறம் கூட இல்லாமற் போனதன் காரணத்தாலே அங்கிருந்து இங்கு ஓடி வருகிறார்களே, என்ன காரணம் என்று பார்க்கின்றபோதுதான் உலகம் மனச்சாட்சியிலே பட்டுத் தெறிக்க ஒரு சொட்டுக் கண்ணீராக அந்த இலங்கை காட்சியளித்துக் கொண்டிருக்கிறது.

இன்று அந்த இலங்கையைப் பொறுத்தவரையில், இந்தியாவை, பாரதமாதாவின் முகம்போல காட்சியளிக்கின்ற ஒரு படத்தைப் போட்டோமேயானால், அந்த மூக்கிலே தொங்கிக் கொண்டிருக்கின்ற அந்தப் புல்லாக்கு போன்று, அங்கே கிடந்து கொண்டிருக்கின்ற அந்த இலங்கை மூக்கிலே தொங்கித் தங்கிக் கொண்டிருக்க வேண்டிய அந்தப் புல்லாக்கு இப்பொழுது மூக்கையே வெட்டுவேன் என்று சொல்வதைப்போல கொடுவாளை எடுத்துக்கொண்டு நம்மை எதிர்த்து நின்று கொண்டு இருப்பதுதான் உலக அரங்கத்தில் இருக்கின்ற மக்களுக்கெல்லாம் வியப்பை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது. இது இன்று நேற்று தொடங்கிய பிரச்னை அல்ல. 1956 ஆம் ஆண்டுவரை இருந்து கொண்டிருந்த தமிழ் மொழி ஆட்சி மொழி என்று



1935 மார்ச் 15] [திரு. குமரி அனந்தன்]

சொல்கின்ற பெருமை 1956-லே அகற்றப்பட்டது. 1958 ஆம் ஆண்டு சிங்களமொழி சிங்களத்தைத் தவிர வேறு எந்த மொழியையும் நாங்கள் அரசாங்க மொழியாக ஏற்றுக்கொள்ள மாட்டோம் என்று சிங்கள அரசு அறிவிக்கிறது, அறிவித்ததோடு மட்டுமல்லாமல், ஸ்ரீ என்ற எழுத்து அங்கே பயன்படுத்தப் படுகிறது. ஸ்ரீ என்ற எழுத்தைப் பயன்படுத்துவதை எதிர்த்து, திரு என்ற எழுத்தைப் போட வேண்டுமென்று சொல்லுகின்ற ஸ்ரீலங்கா என்று சொல்வதற்குப் பதிலாக நாம் இங்கே திரு என்று போட வேண்டுமென்று சொன்னோம் பாருங்கள், அதுபோல அங்கேயும் ஸ்ரீ என்ற எழுத்தை எதிர்த்து அங்கே இருக்கிற மக்கள் கொதித்து எழுகிறார்கள். அதனாலே பல கொலைகள் நிகழ்ந்தன, தமிழ் மக்கள் கொலை செய்யப் பட்டார்கள்.

1961-லே தமிழர்கள் சிங்களப் போலீசாரால் தாக்கப்பட்டு நிறைய பேர் மாண்டார்கள். 1974-லே தான் நடந்தது மிகப் பெரிய கொடுமை. உலகத் தமிழ் மாநாடு யாழ்ப்பாணத்தில் நடைபெற்றுக் கொண்டிருந்த நேரத்தில், 50,000 மக்கள் கூடியிருந்த நேரத்தில் தமிழ் மொழியினுடைய உயர்வை, சிறப்பை, தவநாகரீகத்தை எடுத்து விளம்பிக் கொண்டிருந்த நேரத்தில் சிங்களப் போலீசார் உள்ளே புகுந்து 9 பேர்களைச் சுட்டுக் கொன்றார்கள். அந்த 9 பேரைச் சுட்டுத் தள்ளி தமிழ் இனத்தையே நாங்கள் இவ்வாறு அழிப்போம் என்பதுபோல அங்கே ஆங்காங்கே குண்டுகள் வெடித்தன. பிறகு தொடர்ந்து பிரச்சினைகள் எழுந்து, எழுந்து இப்போது எந்த நிலைக்கு வந்திருக்கிறது என்று சொன்னால், அங்கே தமிழர்கள் வாழ முடியாது என்ற நிலைக்கு வந்திருக்கிறது. தமிழர்கள் வாழ முடியாது என்ற நிலைக்கு வந்ததற்கு என்ன காரணம் என்று பார்த்தால் ஒவ்வொரு தடவையும் நாம் செய்ய வேண்டிய காரியத்தைச் சரியாகச் செய்யவில்லையோ என்று சொல்லுகின்ற ஒரு வினா எழுகிறது.

உதாரணத்திற்கு, கச்சத் தீவை எடுத்துக் கொடுத்தது. கச்சத் தீவை எடுத்துக் கொடுத்தது நல்ல நம்பிக்கையின் அடிப்படையிலே. கச்சத் தீவை எடுத்துக் கொடுத்தது யார் என்கின்ற வினாவை எல்லாம் இப்போது கேட்டால், பழைய சரித்திரத்தை மீண்டும் புரட்ட வேண்டிவரும்.

[திரு. குமரி அனந்தன்] [1985 மார்ச் 15

இராமநாதபுரம் சமஸ்தானத்திற்குச் சொந்தமாக இருந்தது கச்சத் தீவு. இந்தியாவினுடைய எல்லைக்குள் இருந்தது கச்சத் தீவு. அதற்கு ஆதாரமாக எத்தனையோ தஸ்தாவேஜுகளும் ஆவணங்களும் நம்மிடம் இருந்தும்கூட பாரதப் பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் இரண்டு தேசங்களும் நேசமாக இருக்க வேண்டும் என்ற முறையில் பேசி கச்சத் தீவு கொடுக்கப்பட்டது. கச்சத் தீவு கொடுக்கப்பட்டபோது என்ன என்ன நிபந்தனைகள் இருக்க வேண்டும் என்று போடப்பட்டதோ அத்தனையும் மீறப்பட்டு இருக்கின்றன. மீனவர்கள் தங்கள் வலைகளைக் காய வைக்கலாம். மீனவர்கள் தாங்கள் பிடித்த மீன்களைக் கருவாடாக்கலாம். அந்தோணியார் திருவிழா நடத்தலாம். இப்படிப்பட்ட உரிமைகள் இருக்கின்றன. அந்தோணியார் திருவிழா இன்று தொடங்கியிருக்க வேண்டும். மார்ச் 15 ஆம் தேதி தொடங்கி 7 நாட்கள் தொடர்ந்து நடக்க வேண்டும். ஆனால் இலங்கை அரசு அதைத் தடுக்கிறது. யார் அங்கே விழா நடத்தலாம் என்று சொல்லுகிற நிபந்தனையின் பேரிலே கச்சத் தீவைக் கொடுத்ததற்குப் பின்னால் இலங்கை அரசு தனியொருவராக அவர்களே அதை ரத்து செய்வதற்கு என்ன உரிமையிருக்கிறது?

ஒரு ஒப்பந்தம் ரத்து செய்யப்படுமானால் அதிலே உள்ள சரத்துக்கள் மீறப்படுமானால் கச்சத் தீவைத் திரும்பி இந்தியா எடுத்துக்கொள்வதிலே என்ன தடையிருக்க முடியும் என்பதை நான் கேட்க விரும்புகிறேன். நிபந்தனையின் அடிப்படையிலே கொடுக்கப்பட்ட தீவு கச்சத் தீவு. எங்களுக்கு இவ்வளவு நாளும் இருக்கிற உரிமை, இருந்த உரிமை, இருக்க வேண்டும் என்று கொடுக்கப்பட்டதல்லவா கச்சத் தீவு? இவ்வளவு நாளும் இருந்த உரிமை இருக்க வேண்டும் என்று சொல்லுகிற உரிமையிலே மீன் பிடிக்கிற உரிமையும் உண்டு. அங்கே விழா எடுக்கிற உரிமையும் உண்டு. தங்கு கடல் என்று சொல்வார்கள்—காலையில் போய் இரவிலே வருவது அல்ல, இரண்டு நாட்கள் அங்கு தங்கியிருந்து மீனைப் பிடிப்பதாக இருந்தால் அதற்குத் தங்கு கடல் என்று பொருள்—அந்த உரிமையும் உண்டு. இந்த நிபந்தனைகள் அத்தனையும், 1974 ஆம் ஆண்டு போடப்பட்டு இருந்ததைப் பின்னாலே வேறோ



1985 மார்ச் 15] [திரு. குமரி அனந்தன்]

விளக்கம் என்ற பெயராலே மாற்றி இருக்கிறார்கள். பின்னாலே விளக்கம் என்ற பெயராலே மாற்றியவர்கள் யார்? அந்த நாட்டினுடைய அமைச்சர் யாரும் கையெழுத்து இடவில்லை, இந்த நாட்டினுடைய அமைச்சர் யாரும் கையெழுத்து இடவில்லை. இரண்டு அதிகாரிகள் கையெழுத்து இட்டு இருக்கிறார்கள். Fishing right is prohibited என்று போட்டிருக்கிறார்கள். முதலிலே போடப்பட்ட ஒரிஜினல் ஒப்பந்தத்திலே Fishing rights உண்டு என்றுதான் இருந்தது. அங்கே போனால் மீனவ சங்கத்தவர்கள் இரண்டாவது ஒப்பந்தம் ஏன் வந்தது? எதற்கு வந்தது? யாருடைய அனுமதியோடு வந்தது? என்று கேட்கிறார்கள். இன்று கச்சத் தீவு பக்கத்திலேயே நாம் மீன் பிடிக்கப் போக முடியாததற்கு என்ன காரணம் என்று பார்த்தால் நாம் ராமேஸ்வரத்திலிருந்து கடல் எல்லையைக் கணக்கிட வேண்டும். கச்சத் தீவு நம் கையில் இருந்திருந்தால் கச்சத் தீவிலிருந்து நாம் கணக்கிட்டு இருப்போம். இன்று காம்பவுண்டு சுவரிலிருந்து நம் சொத்து என்ன என்று பார்ப்பதற்குப் பதிலாக வீட்டு வாசற்படியிலிருந்து நமது சொத்து என்ன என்று பார்க்கிற காரணத்தால் காம்பவுண்டுக்குள்ளே நம்மை விடாமல் இருக்கிறார்கள். இலங்கை ராணுவம் சுற்றி வந்து கொண்டிருக்கிறது. பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் சொன்னதற்கு நேர்மாறாக சிங்கள ஆட்சியர் நடந்து கொண்டு இருக்கிறார்கள் என்பதற்கு ஒரு சிறிய சான்றைச் சொல்ல விரும்புகிறேன்.

அங்கே இருக்கிற ராணுவ வீரர் அல்லது போலீஸ்காரர் யாரையும் சுட்டுக் கொல்லலாம். பிணம் கீழே விழுந்தது என்று சொன்னால் அந்தப் பிணத்தைப் பரிசோதிக்க வேண்டியது இல்லை. நீதி விசாரணை தேவையில்லை என்று சொன்னதற்குப் பிறகு முதன் முதலாக இந்திரா காந்தி அவர்கள் சீற்றம் கொண்டார்கள். அதற்குப் பிறகு ஜெயவர்த்தனேயிடம் பேசினார்கள். ஜெயவர்த்தனேயிடம் பேசியதற்குப் பிறகு lasting solution என்ற முறையில் நிரந்தரத் தீர்வு அங்கேயிருக்கிற இனப் பிரச்சினைக்கு வேண்டும் என்று சொன்னால் எப்படி இருக்க வேண்டும் என்று சொல்லுகிறபோது beyond the District Council அந்த மாவட்ட கவுன்சில்கள் என்று

சொல்வதற்கும் அப்பாலே இருக்க வேண்டும் என்று சொல்லுகிற சமஷ்டியிலே வர வேண்டும் என்று சொன்னார்கள். ஆனால் அவர்கள் சம்மதிப்பதைப்போல அங்கே சென்றார்கள். காலம் கடத்தி இராணுவத்தைப் பெருக்கி, ஆயுதங்களைக் குவித்து இப்போது நம்மை எல்லாம் கொன்று குவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

நான் ஒன்றைப் பணிவன்போடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். விடுதலைப் புலிகள் எங்காவது சிங்களப் பெண்களைத் தீண்டியதாகச் செய்தி வந்திருக்கிறதா? விடுதலைப் புலிகள் எங்காவது சிங்களக் குழந்தைகளைக் கொன்றதாகச் செய்தி வந்திருக்கிறதா? விடுதலைப் புலிகள் எங்காவது புத்த விகாரங்களை அழித்ததாகச் செய்தி வந்திருக்கிறதா? சிங்கள காடைகள் சிறு பிஞ்சுக் குழந்தைகளை எல்லாம் கொன்று குவிக்கிறார்கள். பெண்களைக் கற்பழிக்கிறார்கள். வழிபடுகின்ற இடங்களை எல்லாம் அடித்து நொறுக்கி உடைத்து நாசமாக்கித் தள்ளுகிறார்கள். அது மட்டும் அல்ல, அங்கேயிருக்கிற தமிழன் பூண்டோடு வேர் அற்றுப் போக வேண்டும் என்பதற்காக வேரோடு வேரடி, மண்ணோடு பூக்காமல்; காய்க்காமல் சாய்த்து விடுவேன் என்ற சபதத்தை எடுத்துக் கொண்டு வவுனியாவிலிருந்து முல்லைத் தீவு வரை தமிழர்களை அழித்து விரட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

(பிற்பகல் 12-50)

சிறைச்சாலைகளிலே இருக்கிற சிங்களக் குற்றவாளிகளை அங்கே குடியமர்த்துகிறார்கள். கொலை செய்துவிட்டு ஆயுள் தண்டனை பெற்றவர்களை எல்லாம் உள்ளே கொண்டு வந்து வைக்கிறார்கள். அவர்களுக்கு இஸ்ரேல், பிரிட்டன் பாகன் பயிற்சி அளித்து ஆயுதங்களோடு கொண்டு வைத்து இருக்கிறார்கள். இந்த நிலையில் நாம் செய்ய வேண்டியது ஒன்றே ஒன்றுதான். கட்சி வேறுபாடு இல்லாமல் செய்ய வேண்டியது ஒன்றே ஒன்றுதான். இன்று காலையில் நான் ஒரு செய்தியைப் படித்தேன், மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, டெல்லியிலே பாராளுமன்றத்திற்கு முன்னாலே அந்த விவாதம் தொடங்குவதற்கு முன்னாலே காந்தி சிலை





களைக் கடந்து அறவழி ஆர்ப்பாட்டம் நடத்த வேண்டும் என்று தமிழ்ப் பற்றாளர் அறிக்கை வெளியிட்டு இருக்கிறார். நான் உங்கள் மூலமாக இந்த மன்றத்தில் உள்ள மற்றவர்களையும் இந்த அரசாங்கத்தையும் கேட்டுக் கொள்ளுவது தயவுசெய்து இந்த மாமன்றத்திலே இருக்கிற அத்தனை சட்டமன்ற உறுப்பினர்களும் அந்த ஆர்ப்பாட்டத்திலே கலந்து கொள்ளுகிற வகையிலே ஒரு தீர்மானத்தை நிறைவேற்றுங்கள். அத்தனை சட்டமன்ற உறுப்பினர்களும் கலந்து கொள்ள முடியவில்லை என்றாலும் கூட இங்கே இருக்கிற கட்சிப் பிரதிநிதிகள் சிலரையாவது அனுப்புங்கள். சிலரையாவது அனுப்பினால் உலக மக்களின் கண்களில் நாம் எந்தகைய உணர்ச்சியோடு இருக்கிறோம் என்று தெரியும்.

இன்று தமிழர்களைப் பொறுத்தவரையில் கோவாவை திரும்பிப் பார்க்கிறார்கள், கோவாவிலே நடந்தது என்ன என்று பார்க்கிறார்கள். இந்திய எல்லைக்குள் புகுந்த ஒரு இந்திய மீனவனைச் சுட்டுக் கொன்றார்கள். அதுதான் பல காரணங்களிலே முக்கியமான காரணமாகக் கருதப்பட்டு, கோவா கைப்பற்றப்பட்டது என்பதைத் தயவுசெய்து மறந்துவிட வேண்டாம். இங்கே இந்திய கடல் எல்லைக்குள் புகுந்து ஒரு மீனவன் சுட்டுக் கொல்லப்படவில்லை. 26 நாட்களுக்குள் 14 மீனவர்கள் தாக்கப்பட்டார்கள், அதிலே 5 மீனவர்கள் கொல்லப்பட்டார்கள். அந்த 5 மீனவர்கள் தமிழ் மீனவர்கள் மட்டும் அல்ல, அவர்கள் இந்தியர்கள். இந்திய கடல் எல்லைக்குள் புகுந்து 5 பேர்களை சுட்டுக் கொன்றதற்குப் பிறகு நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். கோவாவில் ஒரே ஒரு மீனவனை சுட்டுக் கொன்றதற்காக படையெடுத்து கோவா பிடிக்கப்பட்டது என்று சொன்னால் தான் இங்கே குறிப்பாக சொல்லுகிற செய்தி இந்தியாவைப் பார்க்கிறபோது குமரியிலே கால் வைத்து இமயத்திலே தலை வைத்து, பாரதமாதா நின்று கொண்டு இருக்கிறாள், இந்துமா சமுத்திரத்திலே இந்த இலங்கைத் தீவு பெண்கள் காலிலே அணிகின்ற ஒரு மெட்டியாக இருக்கிறது. பாரதமாதா ஏனோ தன் காலை சற்று நீட்டி அந்த மெட்டியை

[திரு. குமரி அனந்தன்] [1985 மார்ச் 15

மாட்ட வேண்டியதுதான். ஏனோ காலை நீட்டி மெட்டியை மாட்ட மாட்டேன் என்கிறாள். காலை நீட்டத்தான் வேண்டும். மெட்டியை மாட்டத்தான் வேண்டும் என்று கேட்டுக் கொண்டு அமைகிறேன். வணக்கம்.

டாக்டர் த. முகம்மது சலீம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையின் மீது இங்கே பேசுகின்ற வாய்ப்பினை அளித்த எங்களது இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களுக்கும், என்னை இங்கு தேர்ந்தெடுத்து அனுப்பிய பெரியகுளம் தொகுதி வாக்காள பெருமக்களுக்கும் முதற்கண் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். குறிப்பாகச் சொல்லப் போனால் இங்கு இந்த சபையில் மாற்றுக் கட்சிக்காரர்கள் ஆளுநர் உரையின் மீது பல குற்றச்சாட்டுகளைச் சொல்லி அதில் உப்பும் இல்லை, சப்பும் இல்லை என்று அவர்களுக்கே உரிய பாணியில் கூறினார்கள். ஆனால் நான் இங்கே எடுத்துச் சொல்ல விரும்புவது என்ன என்றால், நாம் கடந்த 8 வருட காலமாக என்ன என்ன சாதனைகளைப் புரிந்து இருக்கிறோம், என்ன என்ன சாதனையை இந்த நாட்டு மக்களுக்கு அளித்து இருக்கிறோம் என்பதை எனக்கு முன்பு பேசிய நண்பர்கள் தெள்ளத் தெளிவாக எடுத்துக் காட்டினார்கள்.

குறிப்பாக 3-வது முறையாக, சரித்திரம் படைக்கக்கூடிய அளவுக்கு இந்த எங்களது இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் இங்கே முதலமைச்சராக அமர்ந்து இருக்கிறார்கள். பாராளுமன்றத்திலே நாங்கள் பரவலாக வெற்றி பெற்று வந்து இருக்கிறோம் என்றால் அது அனுதாப அலை ஆக இருக்காது. அனுதாப அலையாக இருந்தால் அந்த அலையானது ஒரு சிறு நேரத்திலே வந்துதான் போகுமே ஒழிய தொடர்ந்து இருக்காது என்பதை நான் இங்கே வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். எங்களது இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் செய்த நேர்மையான, நியாயமான பல நல்ல காரியங்களினால்தான் நாங்கள் 3-வது முறையாகவும் பெரும்பான்மையான வெற்றியோடு இந்த சபையின் ஆளும் கட்சியாக அமர்ந்து இருக்கிறோம் என்பதை உங்களுக்கு நினைவு கூற பிரியப்படுகிறேன்.



1985 மார்ச் 15] [டாக்டர் த. முகம்மது சலீம்]

சத்துணவுத் திட்டத்தைப்பற்றி பேசுபவர்கள் அதிலே சத்து இல்லை வெறும் சப்பாக இருக்கிறது என்று இங்கே கூறுகிறார்கள். இந்த மாநிலத்தைப் பொறுத்தவரையில் மட்டுமல்லாமல், இந்த நாட்டிலுள்ள பிற மாநிலங்களும், இந்த உலகமும் போற்றுகின்ற அளவிற்கு எங்களது பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவரவர்கள் கொண்டு வந்த சத்துணவுத் திட்டத்தினால் 80 இலட்சம் குழந்தைகள் பயன் அடைகின்றார்கள் என்றால் அது நாமெல்லாம் பெருமைப்படக் கூடிய விஷயமாக இருக்கிறது.

மேலும், யாரும் கூறாத அளவிற்கு, அவர்கள் தேர்தல் நேரத்திலே வாக்குறுதியாகக் கூட கொடுக்காமல் இருக்கின்ற பொழுதே, சிறுடை வழங்குகின்றோம் என்று அவராகவே சொல்லியிருக்கிறார்கள். இன்னும் கூறப் போனால், எங்களது

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

பெரியார் அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில், அண்ணாவின் வழியாக நடந்து வருகின்ற அவர்களுடைய மருத்துவச் செலவினை காரணத்தினால், அண்ணாவுக்கு எப்படிப் பொது அண்ணாவின் வழியிலேயே, கழகத்தினுடைய பிரதிநிதிகளே மக்களே, அவர்களுடைய அதைப் போன்று நாங்களும் எடுத்துக் கொண்டார்களோ எங்களுடைய கழகத்திலிருந்து கொடுப்பதற்குப் பிரியத்தோடு இருக்கிறோம், நாங்கள் கொடுக்க இருக்கிறோம். ஆகவே, எங்களது புரட்சித் தலைவரவர்களது பாணியிலே சொல்ல வேண்டுமென்றால் அவர்கள் அண்ணாவின் பாதையிலேதான் தன்னுடைய ஆட்சியை நடத்தி வருகின்றார்கள் என்பதற்கு நமக்கு எந்தவிதமான ஐயப்பாடும் கிடையாது.

இந்த ஆட்சியைக் குறை கூறுகின்றவர்கள், இந்த ஆட்சியிலே எந்தக் குறையைக் கண்டார்கள் என்பதைத்தான் நான் இங்கே கேட்க விரும்புகிறேன். குறிப்பாக முதல்வரவர்கள் செய்கின்ற தொண்டுகள் எல்லாம், நாட்டிலே வருகின்ற வரப்போகின்ற இளம் குழந்தைகளுக்குச் சத்துணவை அளித்து, அந்தக் குழந்தைகள் தங்களது இளம் வயதிலேயிருந்தே நல்ல முறையில் வளர வேண்டும், இந்த நாட்டின் நல்ல குடிமக்கள்களாக விளங்க வேண்டுமென்ற அடிப்படையில்தான் இந்தச் சத்துணவுத் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள்.

[டாக்டர் த. முகம்மது சலீம்] [1985 மார்ச் 15

அடுத்து, என்னுடைய தொகுதியில் உள்ள சில குறைகளை எடுத்துச் சொல்லி, அவற்றை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். என்னுடைய பெரியகுளம் தொகுதியில் பாதி பகுதி மலைப் பகுதி. இன்னொரு பாதி பகுதி தரைப் பகுதி. மலைப் பகுதியிலே வாழுகின்ற மக்கள், கொடைக்கானலுக்கு மேற்கே ஏறக்குறைய 38 மைல்களும், கொடைக்கானலுக்குக் கிழக்கே ஏறக்குறைய 20 மைல்களும் ஆக, மேல பகுதி, கீழ் பகுதி என்று பிரிக்கப்பட்டிருக்கிறது.

பெரியகுளத்தில் இருப்பவர்கள் பெரும்பாலும் விவசாயத்தையே நம்பியிருப்பவர்கள். அங்கே எந்தவிதமான தொழிற்சாலைகளோ அல்லது மற்ற எந்தவிதமான வேலை வாய்ப்புகளோ கிடையாது. அங்கே தரைப் பகுதியில் கரும்பு விளைச்சல் அதிகமாக இருக்கின்ற காரணத்தினால், அங்கே கரும்பாலையை நிறுவி இந்த அரசாங்கம் நடத்தினால் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்களுக்கு வேலைவாய்ப்பைக் கொடுப்பதற்கு வசதியாக இருக்கும்.

இப்பொழுது கட்டப்பட்டுக் கொண்டிருக்கின்ற சோத்துப் பாறை அணையில் வேலைகள் நடந்தாலும் மெதுவாக நடைபெறுகின்றன. அதை சீக்கிரமாக முடித்துக் கொடுப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 1-00)

மலைவாழ் பகுதி மக்கள் தங்கள் காய்கறிகளை விற்க முடியாமல், ஆங்காங்கே உள்ள வியாபாரிகளிடம் எடுத்துச் செல்கிறார்கள். ஆனால் அந்த வியாபாரிகள் அவர்களிடம் மிக குறைந்த விலைக்கு வாங்கி, வெளியே கொண்டு சென்று அதிக விலைக்குக் கொடுக்கின்றபொழுது அந்த மலைவாழ் மக்களுக்கு நஷ்டம் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றது. எனவே, காய்கறி சொசைட்டி ஒன்றை அங்கே ஏற்படுத்த வேண்டும். அங்கே விளையும் அந்தக் காய்கறிகளை சொசைட்டியின் மூலமாக விற்பதற்கு ஏற்பாடு செய்து கொடுத்தால் அவர்களுக்கு நல்ல விலை கிடைக்க ஏற்பாடு செய்தால் அது நல்லதொரு காரியமாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.



1985 மார்ச் 15] [டாக்டர் த. முகம்மது சலீம்]

அடுத்து கொடைக்கானல் என்பது தென்னகத்தில் மட்டுமல்லாமல் இந்தியாவிலேயே ஒரு முக்கியமான கோடை வாஸஸ்தலமாகும். அந்தக் கோடைவாஸஸ்தலத்தில் குடிநீர் வசதியும் மற்றும் போக்குவரத்து வசதியும் கொஞ்சம் பாதிக்கப்பட்டிருக்கின்றது என்ற காரணத்தால் அதனை நல்ல முறையில் நிவர்த்தி செய்ய ஏற்பாடு செய்து தர வேண்டும் என்றும் அதைச் சிறந்த சுற்றுலாத் தலமாக ஆக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து பெரியகுளம் நகராட்சியாக இருந்தபோதிலும் கூட ஏறக்குறைய 70 ஆயிரம் மக்கள் வாழ்கின்ற கிராமப் பகுதிகளைக் கொண்ட அந்தப் பகுதியில் அங்கே ஒரு பேருந்து நிலையம் சரியாக இல்லாத காரணத்தால் இந்தக் கழகத்தின் ஆட்சியில் உள்ளவர்கள் அந்தப் பேருந்து நிலையத்திற்கு வேண்டிய பண உதவி செய்து அதனை நல்ல முறையில் கட்டிக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடிக்கிறேன். நன்றி வணக்கம்.

திரு. ஜி. ஆனந்த கிருஷ்ணா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்களின் உரையின்மீது பங்குபெற எனக்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி என்னுடைய தொகுதி மக்கள் 1967-லேயிருந்து திராவிட முன்னேற்றக் கழகத்தின் பிடியிலிருந்த என்னுடைய தொகுதியை மீட்டு காங்கிரஸ் கட்சியினைச் சார்ந்த என்னைச் சட்டமன்ற உறுப்பினராக ஆக்கி இருக்கிறார்கள். அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதி மக்களுடைய இதயக்குரலை நான் இங்கே பிரதிபலிக்கலாம் என்று நினைக்கிறேன். இந்த அவையில் ஆளுநர் உரையின்மீது உரையாற்றுகின்றபோது திராவிட முன்னேற்றக் கழகத்தின் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களும், பொதுவுடைமைக் கட்சியைச் சார்ந்த மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களும் ஏதோ அனுதாப அலையால் நம்முடைய கூட்டணி வெற்றி பெற்றது என்று சொன்னார்கள். அவர்களை, வாக்காளப் பெருமக்கள் உங்களுக்கு அளித்திருக்கின்ற நிலையை மறந்துவிடாதீர்கள் என்றும் நீங்கள் ஜீரணிக்க முடியாத

[திரு. ஜி. ஆனந்தகிருஷ்ணா] [1985 மார்ச் 15]

நிலைமையில் இருக்கிறார்கள் என்பதை உணரவேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன். அவ்வாறு உணர்வார்கள் என்று நான் நினைக்கிறேன். இந்த இந்தியத் திருநாட்டுக்கு அன்னை இந்திராவினுடைய புரட்சிகரமான பொருளாதாரத் திட்டங்கள், இன்றைக்குப் பொறுப்பேற்று இருக்கிற இளைய தலைமுறை, இளைய தளபதி திரு. ராஜீவ் காந்தி அவர்களுடைய திறமையான ஆட்சி, நேர்மையான ஆட்சி ஆகியவற்றிற்குக் கிடைத்த வாக்கே தவிர, அதேபோல் தமிழகத்தைப் பொறுத்தவரையிலும் புரட்சித் தலைவர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற புரட்சிகரமான சமூக, பொருளாதாரத் திட்டங்களுக்கு அளிக்கப்பட்ட வாக்கே தவிர வெறும் அனுதாப அலையால் பெற்ற வாக்குகள் அல்ல என்பதை நான் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

இந்த ஆளுநர் உரையில் பல திட்டங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. Family Welfare Scheme என்று சொல்லப்படுகின்ற குடும்ப நலத் திட்டத்தின் மூலம் அரசு ஊழியர்களின் குடும்பத்திற்கு 10 ஆயிரம் ரூபாய் என்று இருந்ததை 20 ஆயிரம் ரூபாய் என்று உயர்த்தியதும், அதே நிதியிலே விவசாயக் கூலிகளுக்கும், சிறிய விவசாயிகளுக்கும், கிராமக் கைவினைஞர்களுக்கும், கட்டிடத் தொழிலாளர்களுக்கும் கொடுக்கப்பட்ட தொகையினை 5 ஆயிரத்திலிருந்து 10 ஆயிரமாக உயர்த்தியதும் நெசவாளர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கப்படும் என்றும் பள்ளி மாணவர்களுக்குச் சீருடை அளிக்கப்படும் என்றும் இங்கே அறிவிக்கப்பட்டிருக்கின்ற திட்டங்களை எல்லாம் காங்கிரஸ் கட்சியின் சார்பிலே நாங்கள் வரவேற்கிறோம். ஆனாலும் இந்த ஆளுநர் உரையானது நமக்கெல்லாம் வாக்களித்த மக்களுடைய எதிர்பார்ப்புகளுக்கும் பிரதிபலிப்புகளுக்கும் ஏற்றதாக இல்லை என்பதுதான் என்னுடைய கருத்து. ஏனென்றால் அவர்களுக்கான நல்ல திட்டங்கள் இந்த ஆளுநர் உரையில் கொடுக்கப்படவில்லை. இங்கே கொடுக்கப்படுகின்ற நல்ல திட்டங்களைச் செயல்படுத்துகின்ற அதிகாரிகள் அதை ஒழுங்கான முறையில் செயல்படுத்துகிறார்களா என்பதைச் சீர்தூக்கிப் பார்க்கவேண்டும். ஊரக வளர்ச்சித் திட்டம், கிராம வேலைவாய்ப்புத் திட்டம், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் போன்றவை இன்றைக்கு அதிகாரிகள் முக்கியமாக கிராம நல அதிகாரிகள் என்பவர்களுக்காகக் கூறப்படுகின்ற திட்டங்



1985 மார்ச் 15] [திரு. ஜி. ஆனந்த கிருஷ்ணா]

களாக இருக்கின்றனவே தவிர கிராமங்களில் இருக்கின்ற ஏழை எளிய மக்களுடைய நல்ல திட்டங்களாக இல்லை என்பது என்னுடைய கருத்து.

அங்கே மக்கள் மன்றங்கள் இல்லாத காரணத்தினாலே, இந்தத் திட்டங்கள் அதிகாரிகளுடைய சுரண்டலுக்கு வழி காட்டுவதாக இருக்கின்றன. அந்த நிலை மாற வேண்டுமென்று நான் இங்கே கூறிக்கொள்ள விரும்புகிறேன். உதாரணமாக மாவட்ட ஊரக வளர்ச்சி மையத்திலே மக்களுக்குப் பயன்படுகின்ற திட்டங்கள் தீட்டப்படுகின்றனவா என்றால், அவர்கள் தயாரித்து மக்கள் ஏற்றுக்கொள்ளக் கூடிய திட்டங்கள் கொடுக்கப்படுகின்றனவா என்று ஒரு கணம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இந்த மாவட்ட ஊரக வளர்ச்சி மையத்திலே அவர்கள் கொடுக்கின்ற 3, 4 திட்டங்களைத்தான் ஏழை, கிராமப்புற மக்கள் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று நினைக்கிறார்கள். ஒரு கிராமத்திலே சிறிய தொழில் செய்யத் தெரிந்தவர்கள் தச்சு வேலை செய்யத் தெரிந்தவர்கள் அல்லது கருமார் வேலை செய்யத் தெரிந்தவர்கள். எங்களுடைய மாவட்டத்திலே மாவட்ட ஊரக வளர்ச்சி மையம் இந்தத் திட்டங்களுக்கு உதவுவதே இல்லை. இந்த நிலையிலே நான் கூறிக்கொள்வது, இந்த மாவட்ட ஊரக வளர்ச்சி மையங்கள், சாதாரண மக்கள் விரும்புகின்ற, மக்கள் தயாரித்துக் கொடுக்கின்ற திட்டங்களுக்கு உதவி அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

என்னுடைய பூவிருந்தமல்லி தொகுதியைப் பொறுத்த மட்டில் அங்கே ஆவடி நகரியம், திருவேற்காடு நகரியம் என்று இரண்டு நகரியங்கள் இருக்கின்றன. அந்த நகரியங்கள் கிராமங்களைச் சேர்ந்த பகுதிகளாக இருந்தாலும் ஐ.ஆர்.டி.பி., என்.ஆர்.இ.பி., ஆர்.எல்.இ.பி. போன்ற திட்டங்கள் அங்கே விஸ்தரிக்கப்படவில்லை. ஏனென்றால் அவை நகரியங்கள் என்று கூறுகிறார்கள். அவை நகரியங்களா என்று பார்க்கின்ற நேரத்திலே அந்த நகரியங்கள் ஒருசில கிராமங்கள் சேர்ந்த கூட்டாக இருக்கின்றனவே தவிர, அவை நகரியங்களாகக் காட்சி அளிக்கவில்லை. அங்கே ஏழை விவசாயிகள்தான் வாழ்கிறார்களே தவிர பெரிய நகரங்களாக இல்லை. எனவே, ஐ.ஆர்.டி.பி., என்.ஆர்.இ.பி., ஆர்.எல்.இ.பி. போன்ற திட்டங்களும் இந்த நகரியங்களுக்கு விஸ்தரிக்கப்பட வேண்டும்.

மேலும் என்னுடைய மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்க வேண்டுமென்ற கோரிக்கையையும் நான் விடுக்க ஆசைப்படுகிறேன். என்னுடைய செங்கல்பட்டு மாவட்டம் புதுவை மாநிலத்திலே தொடங்கி, ஆந்திர மாநிலம் வரை விரிந்து கிடக்கிறது. அந்த மாவட்டத்தை வடக்கு, தெற்கு என்று இரண்டு மாவட்டங்களாகப் பிரித்து, ஒரு மாவட்டத்திற்குப் பேரறிஞர் அண்ணா அவர்கள் பெயரையும் மற்றொரு மாவட்டத்திற்குத் தியாகி முத்துசங்கன் பெயரையும் இடவேண்டுமென்று நான் கோரிக்கை விடுக்கின்றேன்.

. . . . . . . .

என்னுடைய பகுதியிலே மத்திய சர்க்காரால் உருவாக்கப்பட்ட டி 72 பிராஜக்ட் அமுலாக்கப்படவில்லை. அந்த பிராஜக்டைப் பொறுத்துதான் அங்கு வாழ்கிற மக்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும். ஆகவே, அந்த டி 72 பிராஜக்டை, எங்களுடைய பகுதிக்குத் தவறாமல் மத்திய அரசு வழங்க வேண்டுமென்று தமிழக அரசு வற்புறுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

. . . . . . . .

இந்த ஆளுநர் உரையிலே விவசாயிகளைப் பற்றி எந்தவித மான குறிப்பும் இல்லை. இன்றைக்கு எங்களுடைய பகுதியிலே விவசாயிகளுக்கு மின்சாரம் எப்பொழுது வரும், எப்போது போகும் என்று தெரியாத நிலை இருக்கிறது. அந்த நிலையை மாற்றி, குறைந்தபட்சம் 8 மணி நேரமாவது அவர்களுக்கு மின்சாரம் கொடுக்க வேண்டும். அதுதான் இன்றைக்கு 60 இலட்சம் மெட்ரிக் டன் உற்பத்தி செய்யப்படுகிறது என்று சொல்கிறார்களே, அதை உற்பத்தி செய்கின்றவிவசாயிகளுக்கு நாம் செய்கின்ற உதவியாக இருக்க முடியும் என்று நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

. . . . . . . .





இன்றைக்கு எங்களுடைய பகுதியிலே பிலேட்டட் பேமென்ட் சர்சார்ஜ் என்று வசூலிக்கிறார்கள். அந்த பிலேட்டட் பேமென்ட் சர்சார்ஜ் இன்றைக்கு மின்சாரக் கட்டணத்தைவிட இரு மடங்கு அதிகமாகியிருக்கிறது. மின்சாரக் கட்டணமே கட்ட முடியாத ஏழை விவசாயிகளால் பல்லாயிரக்கணக்கான ரூபாய் பிலேட்டட் பேமென்ட் சர்சார்ஜ் கட்ட முடியுமா, அது நியாயமா என்று யோசிக்கவேண்டும். என்னுடைய தொகுதியில் அந்த பிலேட்டட் பேமென்ட் சர்சார்ஜைத் தள்ளுபடி செய்யவேண்டுமென்ற கோரிக்கையை விடுக்கிறேன்.

(பிற்பகல் 1-10)

பல கிராமங்களிலே இருக்கிற கூட்டுறவுச் சங்கங்கள் கலைக்கப்பட்டு பக்கத்திலே இருக்கிற கிராமச் சங்கங்களோடு சேர்க்கப்படுகின்றன. இதற்கு காரணம் அங்கே இருக்கிற வட்டி விகிதாச்சாரம், அங்கே இருக்கிற ஜப்தி நடவடிக்கைகள் மற்றும் அங்கே இருக்கிற கெடுபிடிகள். எங்களுடைய மாவட்டத்திலே கிஸ்தி வசூல் செய்வது, கூட்டுறவு கடன்களை வசூல் செய்வது போன்ற கெடுபிடிகள் எல்லாம் பூதாகாரமாக பெருமளவில் விவசாயிகளை பயமுறுத்திக் கொண்டிருக்கின்றன. அந்த விவசாயிகளுக்கு ஆதரவு கொடுக்க வேண்டும். அதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப் பெற்றது.)

**திரு. எஸ். பி. துரைராசு:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்தப் பேரவையிலே மேதகு ஆளுநர் அவர்களின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது பேசுவதற்கு முன்னாலே பேரறிஞர் அண்ணா அவர்களை வணங்கி, பேரறிஞர் அண்ணா அவர்களின் இதயக்கனியாம் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களுக்கும், என்னை இந்த மாமன்றத்திற்கு தேர்ந்தெடுத்து அனுப்பிய காரைக்குடி வாக்காளப் பெருமக்களுக்கும், தாய்மார்களுக்கும் இதயப்பூர்வமான நன்றியைத் தெரிவித்து என்னுடைய கன்னிப் பேச்சைத் துவக்குகிறேன்.

ஆளுநர் அவர்களின் உரையில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு விவசாயிகளின் முன்னேற்றத்திற்கும், தொழில் முன்னேற்றத்திற்கும், ஏழை மக்களுடைய முன்னேற்றத்திற்கும், கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிற மக்களுடைய வாழ்க்கையில் நிம்மதி உண்டாக்குவதற்கும் என்னென்ன திட்டங்களை கடந்த காலத்திலே நிறைவேற்றியிருக்கிறது; இனி வரும் காலத்தில் என்னென்ன திட்டங்களை நிறைவேற்றவிருக்கிறது; என்னென்ன திட்ட நெறிமுறைகளை கடைபிடிக்கவிருக்கிறது என்பதைத் தெளிவாக விளக்கி இருக்கிறார்கள். நான் ஆளுநர் உரையை முழுவதும் படித்து முடித்த பின்பு எனக்கு ஆளுநர் உரை குற்றால நீர்வீழ்ச்சியைப் போல தெரிகிறது. எப்படி குற்றால நீர்வீழ்ச்சியிலே மூலிகைச் சத்துக்கள் எல்லாம் இருக்கிறதோ அதைப்போல ஆளுநர் அவர்களின் உரையில் செய்து கொண்டிருக்கிற, செய்யப் போகிற பல சத்தான திட்டங்களைத் தெரிவித்து இருக்கிறார்கள்.

அதேபோல கடந்த ஐந்து நாட்களாக நம்முடைய எதிர்க்கட்சி நண்பர்கள் எல்லாம் இந்த உரையிலே ஒன்றும் இல்லை, ஒன்றும் இல்லை என்று கேலி பேசிய நிகழ்ச்சியை கண்டு கொண்டிருக்கிறோம். இந்த உரை ஏமாற்றத்தை உண்டாக்கி இருக்கிறது; இதில் எதுவும் இல்லை என்று இங்கே எதிர்க்கட்சி நண்பர்கள் தெரிவித்து இருக்கிறார்கள். ஏற்கனவே தேர்தலில் ஏமாற்றம் அடைந்து இடிவிழுந்த நிலையில் உட்கார்ந்திருக்கும் அவர்களுக்கு ஆளுநர் உரை ஏமாற்றத்தை அளித்தது என்றால் அதில் ஆச்சரியப் படுவதற்கு ஒன்றுமில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அரண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய் என்பதைப் போல ஏமாற்றம் அடைந்த நிலையில் இருப்பவர்கள் எதைப் பார்த்தாலும் ஏமாற்றம் தான் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அனுதாப அலை என்று சொன்னார்கள். இது அனுதாப அலை இல்லை. புரட்சித் தலைவர் திட்டங்கள் மீதும், புரட்சித்தலைவர் கொள்கைகள் மீதும் இந்த நாட்டிலே உள்ள மக்கள் எந்த அளவிற்கு நம்பிக்கை வைத்திருக்கிறார்கள் என்பதை திராவிட முன்னேற்றக் கழக நண்பர்கள் தெரிந்து கொள்ள வேண்டும். அதற்கு மாறாக மக்களின் தீர்ப்பை நீங்கள் அவமதிக்கிறீர்கள். ஜனநாயகத்தின் தீர்ப்பை நீங்கள் கீழே





போட்டு மிதிக்கிறீர்கள். இந்த நாட்டு மக்களுடைய உணர்ச்சியை கேவலப்படுத்துகிறீர்கள் என்பதை இந்த மன்றத்தின் வாயிலாக தெரிவித்துக் கொள்கிறேன்.

மக்களுடைய எண்ணங்களை அலட்சியப்படுத்த முற்படுவீர்களானால் எதிர்காலத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் நிலைமை என்ன என்பதை இங்கு நான் விளக்கத் தேவையில்லை. புரட்சித் தலைவருடைய அரசு எவ்வளவோ நல்ல காரியங்களை இந்த நாட்டிற்காக செய்து கொண்டிருக்கிறது. அவைகள் எல்லாம் உங்கள் கண்களுக்கு புலப்படவில்லையா அல்லது இந்த உலகம் இருண்டு விட்டதாக நினைத்துக்கொண்டு நீங்கள் கண்களை மூடிக்கொண்டிருக்கிறீர்களா என்பது தெரியவில்லை. இந்த நாட்டிலே 80 லட்சம் குழந்தைகள், வாழ்விலே ஆதரவற்றவர்கள், அபலைகள், வறுமைக்கோட்டிற்குக் கீழே இருக்கிறவர்கள் முதலியவர்கள் சத்துணவுத் திட்டத்தின் மூலம் பசியாற உணவு உண்ண உணவு அளிக்கிறார்கள் நம்முடைய புரட்சித் தலைவர் அவர்கள். அவைகள் உங்கள் கண்களுக்கு புலப்படவில்லையா? இன்றைக்கு 80 லட்சம் குழந்தைகள் பாட்டாளி மக்கள் பசி தீர்ந்தது என்று சிரிக்கிறார்களே அவர்களின் புன்சிரிப்பை அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் உருவாக்கித் தந்திருப்பதை இந்த நேரத்திலே சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

ஒருமுறை மறைந்த மாமேதை பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் மிகுந்த வேதனையோடு ஒரு கருத்தை வெளியிட்டார்கள். பல ஆயிரங்கோடி ரூபாயை ஐந்தாண்டுத் திட்டங்கள் மூலம் செலவிட்டும் அந்தத் திட்டங்களின் பயன் இந்த ஏழை எளிய மக்களுக்கு, குடிசைகளில் வாழும் மக்களுக்கு எட்டவில்லை என்று அவர்கள் கூறினார்கள். ஆட்சிப் பொறுப்புக்கு வந்த தமிழக முதல்வர், எங்கள் இதய தெய்வம், புரட்சித் தலைவர் அவர்கள் அந்த நேரு பெருமகனார் கண்ட கனவை நனவாக்கும் வகையில் தீட்டிய திட்டங்கள் எல்லாம் ஏழை எளிய மக்களின் இல்லங்களுக்குச் சென்று, அவர்களுடைய உள்ளம் உவகைப் பெறச் செய்கிறது.

அடுத்தபடியாக, என்னுடைய காரைக்குடி தொகுதி பற்றிய சில முக்கியமான பிரச்சனைகளைச் சொல்லி, விடை பெறுகிறேன். குறிப்பாக காரைக்குடி நகர அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி கடந்த 9 ஆண்டுகளாக வாடகைக் கட்டிடத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இப்போது அந்தக் கட்டிடத்தை காலி செய்யச் சொல்லி, அந்தக் கட்டிடச் சொந்தக்காரர் வக்கீல் நோட்டீஸ் விட்டு, வழக்குத் தொடர இருக்கிறார். அதனால் அந்தப் பள்ளிக்கூடத்திற்கு சொந்தமாக நிரந்தரமான கட்டிடத்தைக் கட்டித் தரவேண்டுமென்றும், அதற்குத் தேவையான நிதி ஆதாரத்தைத் திரட்டித் தரவேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

1950 ஆம் ஆண்டு அழகப்பச் செட்டியார் அவர்கள் காரைக்குடியிலே பல்வேறு கல்வி நிறுவனங்களை நிறுவி, மாபெரும் தொண்டு செய்திருக்கிறார்கள். 1979-ம் ஆண்டு மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் காரைக்குடிக்கு வந்தபோது அழகப்பச் செட்டியார் நினைவாக ஒரு பல்கலைக் கழகத்தை நிறுவ இருப்பதாகக் கூறி; அந்தப் பல்கலைக் கழக வேலைகளுக்கும் துரிதமாக நடந்து கொண்டிருக்கின்றன. அந்த அழகப்பச் செட்டியார் பெயரில் நிறுவ இருக்கிற பல்கலைக்கழகத்தை வரும் நிதி ஆண்டில் நிறுவி முடிக்க, தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

காரைக்குடி நகரிலே பேரறிஞர் அண்ணா அவர்களால் 1968 ஆம் ஆண்டில் காரைக்குடி நகர மன்றக் கட்டிடத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டது. ஆனால் இன்றுவரையில் அந்தக் கட்டடம் கட்டப்படவில்லை. அதனால் தமிழக அரசு உரிய ஆணை வழங்கி, நிதி ஆதாரத்தையும் தேடித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போன்று, காரைக்குடி நகரம் இன்று ஒரு இலட்சம் மக்கள் வாழும் நகரமாக இருக்கிறது. அந்த அளவுக்கு தற்போது சாக்கடை வசதி இல்லாததால், தமிழக அரசு அங்கே பாதாளச் சாக்கடைத் திட்டத்தை அறிவித்து, அதற்கு வேண்டிய நிதி ஆதாரத்தையும் தேடித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.





காரைக்குடியில் நாட்டார், நகரத்தார் கட்டிய சரித்திரப் புகழ் பெற்ற பெரிய கோவில்கள் நிறைய இருக்கின்றன. காரைக்குடியை ஒரு சுற்றுலா மையமாக்கி, அந்தக் கோயில்களை எல்லாம் இந்த நாட்டு மக்கள் கண்டுகளிக்க தமிழக அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். புதிதாக அமைய இருக்கின்ற மாவட்ட நீதிமன்றத்தை காரைக்குடி நகரில் அமைக்க வேண்டுமென்று கேட்டு, வாய்ப்பளித்த துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன். வணக்கம்.

* **திரு. க. பாரமலை:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இரண்டாவது முறையாக என்னை தேர்ந்தெடுத்து இந்த அவைக்கு அனுப்பியுள்ள மானாமதுரை தொகுதி வாக்காளர் பெருமக்களுக்கும், நான் வெற்றி பெறுவதற்கு உதவியாக இருந்த காங்கிரஸ்—அண்ணா திராவிட முன்னேற்றக் கழகச் செயல்வீரர்களுக்கும் நன்றி தெரிவித்து மேதகு ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

ஆளுநர் உரையிலே முதல் பாராவிலே மிகச் சுருக்கமாக நெஞ்சத்தை தொடுகின்ற உண்மையை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அன்னை திருமதி இந்திரா காந்தி அம்மையாரின் கொடுமை மிகுந்த மரணத்தை முன்னிட்டு நாம் அனைவரும் மிகப் பெருங்கவலையில் ஆழ்ந்து கிடக்கையில், ஆளுகை அதிகாரத்தைச் சனநாயக முறைகளின் மூலம், அமைதியான முறையில் மாற்றிக்கொடுத்து, நாட்டைப் பழைய நிலைக்கு மீட்டுக்கொணர்ந்துள்ள சூழ்நிலை, நமக்கெல்லாம் தன்னம்பிக்கையையும், ஊக்கத்தையும் அளிப்பதாக இருக்கின்றது. இயற்கையின் சோதனைகளிலிருந்து விடுபட்டு இந்தியா மீண்டும் தன்னுடைய முழுவலிவையும் நிலைநாட்டியிருப்பதோடு மட்டுமல்லாமல் இங்கு குடியாட்சி முறையானது மிக ஆழமாக வேரூன்றி நிற்கிறது என்பதை உலகுக்குக் காட்டியிருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். மீண்டும் என்று சொல்லுகிறபோது இதற்கு முன்னாலும் இப்படிப்பட்ட சோதனை இந்த தேசத்தில் ஏற்பட்டபோது இந்த நாட்டின் ஜனநாயக தீபம் அணைந்துவிடாமல், தேசம் சிதறுபடாமல் ஜனநாயகம் நிலைநிறுத்தப்பட்டதை நாம் நினைவில் கொள்ள

வேண்டும். அந்த வழியிலேதான் நம்முடைய மரியாதைக்குரிய இராஜீவ் காந்தி அவர்களை பிரதமராக, இந்த நாட்டு மக்கள் தெளிவான சிந்தனையோடு வாக்களித்து, தேர்ந்தெடுத்திருக் கிறார்கள்.

(பிற்பகல் 1-20)

எனக்கு முன்னாலே பேசிய உறுப்பினர் ரமணி அவர்கள் கூட குறிப்பிட்டார்கள். இந்த தேசம் சிதறுண்டு போகக்கூடாதே என்று இந்த நாட்டு மக்கள் எண்ணினார்கள். அது உங்களுடைய வெற்றிக்கு ஒரு காரணமாக அமைந்துவிட்டது என்று கூறினார்கள். இது முழுக்க முழுக்க உண்மை. இப்படிப்பட்ட நெருக்கடியான நேரத்திலே 18 ஆண்டுக் காலம், இடையிலே 2 ஆண்டுக் காலம் போக, இந்த தேசத்தை வழி நடத்திச் சென்ற இந்திரா காந்தி அவர்கள் இறந்தபோது இந்த நாடு என்ன ஆகுமோ என்று அச்சப்பட்டுக் கொண்டு இருந்த நேரத்திலே இப்படிப்பட்ட நெருக்கடியான நேரத்திலே, தேசத்திற்கு தலைமை தாங்கிச் செல்கிற தகுதியும் திறமையும் ராஜீவ் காந்தி அவர்களுக்குத்தான் உண்டு என்று இந்த நாட்டு மக்கள் முடிவு செய்ததன் விளைவு தான் இந்த தேர்தல் முடிவு என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதைப்போலவே தமிழகத்திலே மூன்றாவது முறையாக பெருந் தலைவர் காமராஜுக்குப் பிறகு, மூன்றாவது முறையாக தமிழக முதலமைச்சராக பொறுப்பேற்றிருக்கிற நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள், ஒரு பெரிய வெற்றியை அடைந் திருக்கிறார்கள். 1980 ஆம் ஆண்டு நடந்த தேர்தலிலே தானே கிராமம் கிராமமாகச் சென்று, லட்சக்கணக்கான மக்களைப் பார்த்து, ஓட்டு கேட்ட, நேரத்திலே கூட பெறாத வெற்றியை அமெரிக்காவிலே இருந்து சிகிச்சை பெற்றுக்கொண்டு இருக்கும் போது அந்த வெற்றியைப் பெற்றிருக்கிறார்கள் என்று சொன்னால், அதை நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இது அனுதாப அலையின் காரணமாக கிடைத்த வெற்றி என்று சொல்வது, உண்மையிலேயே ஜனங்களுடைய மனதை புண்படுத்துவதாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்.





சொன்னார்கள். என்னுடைய இங்கே போட்டோ பற்றிச் போட்டோ தொகுதியில் போட்டோ போடவில்லை. நாங்கள் போட்டோ போட்டதைப் காண்பிக்கவில்லை. அந்த வைக் காண்பிக்கவில்லை. அந்த போட்டோ போட்டதைப் பற்றிச் சொல்லவேண்டுமானால், மாற்றுக் கட்சியினர் அவருடைய உடல்நிலை பற்றி தவறான கருத்தை மக்கள் மத்தியிலே சொன்னார்கள், அவர்கள் சொல்கின்ற கருத்து நியாயமில்லை, அதிலே உண்மையில்லை என்று எடுத்துச் சொல்வதற்காகத்தான் அந்த போட்டோ காண்பிக்கப்பட்டதே தவிர, அனுதாபத்தைப் பெறுவதற்காக அல்ல என்பது என்னுடைய தாழ்மையான கருத்து ஏன் என்றால், என்னுடைய தொகுதியிலே எந்தவிதமான போட்டோவும் கிடையாது. அவருடைய பெயரைச் சொன்னாலே மக்கள் ஓட்டுப் போடுகின்ற நிலைமையிலிருக்கும் போது, படத்தைப் போட்டு அனுதாபத்தைப் பெறவேண்டிய அவசியம் இல்லை.

நான் ஒன்றை மட்டும் சொல்லிக்கொள்கிறேன். சென்னை யிலே நடந்த, எழும்பூர், பெரம்பூர் தேர்தலில் தி.மு.க. கழகம் வெற்றி பெற்ற பின்னாலே, இந்திரா காந்தி அலை ஓய்ந்துவிட்டது என்று சொன்னார்கள். ஆனால் அதற்குப் பின்னாலேதான் திருப்பத்தூர் தேர்தல் முடிவும், பாண்டிச்சேரி தேர்தல் முடிவும் வெளிவந்தது என்பதை நாம் மறந்துவிட முடியாது. ஆகவே நாம் இப்படிப்பட்ட சந்தர்ப்பத்திலே மக்களுடைய தீர்ப்பே மகேசன் தீர்ப்பு என்று ஒத்துக்கொள்வதுதான் அரசியல் நாகரீகம் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதோடு இந்த ஆளுநர் உரையிலே பல்வேறு நல்ல அம்சங்கள் இருக்கின்றன. குறிப்பாக, முதியோர் ஓய்வூதியத் திட்டத்தைப் பொறுத்தவரையில் பல சிக்கல்கள் இருந்தன. ஒரு மாவட்டத் திற்கு உச்சவரம்பு என்று நிர்ணயித்து அதிலே யாராவது இறந் தால்தான் புதியவர்களுக்கு பென்சன் என்று இருந்தது. அதை மாற்றி, தகுதியுள்ள அனைவருக்கும் ஓய்வூதியம் கொடுப்பது என்ற நிலையிலே ஏறக்குறைய 81 ஆயிரம் பேர்களுக்கு புதியதாக கிடைக்கக்கூடிய வாய்ப்பை ஏற்படுத்தியிருக்கிறார்கள். அதற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. க. பாரமலை] [1985 மார்ச் 15

அதோடு அரசு ஊழியர்களுக்குக் கொடுக்கப்படும் குடும்ப நல நிதியை ரூபாய் 10 ஆயிரத்திலிருந்து ரூபாய் 20 ஆயிரமாக உயர்த்தியிருப்பது, உழவுத் தொழிலாளர்கள், சிறுநில உழவர்கள் போன்றவர்களுக்கான இழப்பு ஈட்டுத் தொகையை 5 ஆயிரத்திலிருந்து ரூபாய் 10 வரை உயர்த்தியிருப்பது, 1 ஆவது முதல் 3 ஆம் வகுப்பு வரை இலவசமாக, உடை, இலவசமாக புத்தகங்கள் கொடுப்பது போன்ற திட்டங்களை அறிவித்திருப்பது பாராட்டுக்குரியது.

அதோடு குறிப்பாக, திருச்சியில் சுமார் 170 கோடி செலவில் கனரக உலோகக் கலவை வடுருவித் தொழிற்சாலை ஒன்றை அமைக்க மத்திய அரசு ஒப்புக்கொண்டிருப்பதற்காக நம்முடைய அரசுக்கும் மைய அரசுக்கும் என்னுடைய பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையிலே மானாமதுரையில் ஒரு சிமெண்ட் தொழிற்சாலை இருக்கிறது. அந்த சிமெண்ட் தொழிற்சாலையால் அந்தப் பகுதியில் உள்ள விளை நிலங்கள் மிகவும் பாதிக்கிற காரணத்தால், அதை மாற்றி அமைக்க வேண்டும் என அங்குள்ள மக்கள் வேண்டிக் கொண்டனர். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மக்களுடைய கருத்துக்கு மதிப்பளித்து அதை இடையிலே நிறுத்திவைத்தார்கள், ஆனால் என்ன காரணமோ தெரியவில்லை, மீண்டும் அந்தத் தொழிற்சாலை நடைபெறுவதற்கு அனுமதி வழங்கப்பட்டு இருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆகவே அதை நிறுத்தி வைக்க ஏற்பாடு செய்யும்படி சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்களை நான் கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் மானாமதுரையிலே ஆழ்குழாய் கிணறுகள் சம்பந்தப்பட்ட நிர்வாகப் பொறியாளர் அலுவலகம் இருக்கிறது. அதை அங்கிருந்து மாற்றப் போவதாகச் சொல்கிறார்கள். இப்போது புதிதாக அமைக்கப்பட இருக்கும் பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டத்திற்கு தனியாக ஒரு புதிய டிவிஷனை அமைப்பதற்குப் பதிலாக ஏற்கனவே இருக்கிற அந்த டிவிஷனை அங்கேயே இருக்க அனுமதிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)



[திரு. க. பாரமலை]

1985 மார்ச் 15]

அதோடு மேல்நிலைத் தொட்டிகள் பல இடங்களில் கட்டி பயன்படுத்தப்படாமல் இருக்கின்றன. அப்படிப்பட்ட மேல் நிலைத் தொட்டிகளை இயங்க வைப்பதற்கு சரியான நடவடிக்கை எடுக்க வேண்டும். குறிப்பாக என்னுடைய தொகுதியில் மேலத் தொன்னக்குளம், பாப்பான்குளம், ஆவரங்குளம், பூம்பிடாகை, எழுரணி போன்ற கிராமங்களில் இப்படிப்பட்ட மேல்நிலைத் தொட்டிகள் கட்டப்பட்டு செயல்படாமல் இருப்பதை செயல்பட வைக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். குடிதண்ணீரைப் பொறுத்தவரையில், வைகையிலிருந்து சிவகங்கைக்குச் செல்கிற திட்டத்தில் பாப்பான்குளம் என்ற கிராமத்திற்கு தண்ணீர் சப்ளை செய்யவேண்டும்.

அதைப்போலவே திருப்புவனத்திலிருந்து அருப்புக்கோட்டைக்கு தண்ணீர் செல்கிற திட்டத்திலே, நேர்த்தியாயிருப்பு என்ற கிராமத்திற்கு பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர் வழங்கப்பட வேண்டும். அந்த அளவிலே நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று நான் விவசாயத் துறை அமைச்சரைக் கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியிலே பல்வேறு ரோடுகள் சீர்குலைந்து இருக்கின்றன. அந்த ரோடுகளையெல்லாம், நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதித் திட்டத்தின் கீழ், பெத்தானேந்தல், மணல்மேடு, ஆவரங்குளம், வயல்சேரி, தாமரைக்குளம், கொந்தகை, பொட்டபாளையம் போன்ற இடங்களிலே அமைத்துக் கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

ஆதிதிராவிடர் நலனைப் பொறுத்தவரை பல நல்ல சிறப்புத் திட்டங்களை அமைக்கயிருப்பதாக இந்த உரையிலே சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் சென்ற 5 ஆண்டுகளிலே மாநில ஆதிதிராவிட ஆலோசனைக் குழு அமைக்கப்படவில்லை என்பதை வேதனையோடு சுட்டிக் காட்ட விரும்புகிறேன். வருகிற ஆண்டுகளிலாவது மாநில ஆதிதிராவிட நல ஆலோசனைக் குழுவும் மாவட்ட ஆதி திராவிட நல ஆலோசனைக் குழுக்களையும் அமைக்க வேண்டும் என்று ஆதிதிராவிட நலத் துறை அமைச்சரைக் கேட்டுக் கொள்வதோடு, மற்ற மாநிலங்களிலும் பாராளுமன்றத்திலேயும் இருப்பதைப்போல லெஜிஸ்லேச்சர் கமிட்டி ஆன் ஷெட்யூல்ட்

கேஸ்ட், அண்ட் ஷெட்யூல்ட் டிரைப்ஸ் வெல்பேர் என்ற வகையில் கமிட்டியை அமைக்க வேண்டும் என்று நான் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

வெள்ள நிவாரணத்தைப் பொறுத்தவரையில் (மணியடிக்கப் பெற்றது), சென்ற ஆண்டு வந்த வெள்ளத்தின்போது கூட நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஹெலிகாப்டரில் வந்துதான் பார்வையிட்டார்கள். பொட்டலங்களையும் ஹெலிகாப்டர் மூலமாகத்தான் போட்டார்கள். அப்படி ஒரு நிலைமை இருந்தது. ஆகவே அப்படிப்பட்ட இடங்களில் நிரந்தர பணி என்ற வகையில் வெள்ளத் தடுப்பு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். குறிப்பாக பெத்தானேந்தல் கிராமத்திற்கு ஒரு பாலம் கட்ட வேண்டும்; காளூர் கால்வாய் பிரிகின்ற இடத்தில் வைகையில் தடுப்புச் சுவரையும் லாடனேந்தல் அருகில் வைகையிலே ஒரு தடுப்புச் சுவரையும் கட்டுவதற்கு அரசு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அத்தோடு ஸ்பெஷல் காம்பொனன்ட் பிளான்-லே 80-85-க்கு, ஏறத்தாழ 5 ஆண்டுகளில் 538 கோடி ரூபாய் செலவழிக்கப்பட்டிருக்கிறது. வருகிற 5 ஆண்டுகளில் இன்னும் அதில் அதிகமாகச் செலவழிக்க இருக்கிறோம். அந்த திட்டத்திலே இராமநாதபுரத்தில், அபிராமம் என்ற ஊருக்கு அருகில் உள்ள அச்சங்குளத்தில் எப்படி ஒரு மில் கட்டப்பட்டிருக்கிறதோ, அதைப் போல ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு மில் கட்டுவதற்கு, இந்த திட்டத்திலே வழி வகை செய்ய வேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொண்டு, வாய்ப்பளித்தமைக்கு தலைவருக்கு நன்றி சொல்லி முடிக்கிறேன். வணக்கம்.

*திருமதி பி. லட்சுமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இம்மாமன்றத்தில் பேச எனக்கு வாய்ப்பு வழங்கிய இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுக்கும், நான் இந்த மாமன்றத்தில் உறுப்பினராக அங்கம் பெற வாய்ப்பு அளித்த அவினாசி தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும் முதலிலே என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.





மாண்புமிகு உறுப்பினர் திரு. செம்மலை அவர்கள் முன்மொழிந்த தீர்மானத்தை வழி மொழிந்து, ஆளுநர் அவர்களின் உரையின் மீது நன்றி கூறுவதற்கு நான் பேசயிருக்கிறேன். 8 ஆம் வகுப்பு வரை படிக்கும் மாணவ மாணவியருக்கு இலவச சீருடை வழங்குதல், ஆயிரம் கோடி ரூபாய் செலவில் தொழில் கல்வித் திட்டம், அரசு ஊழியர்களின் குடும்பநல நிதியை 20 ஆயிரமாக உயர்த்துதல், விவசாயத் தொழிலாளர்கள், கட்டிடத் தொழிலாளர்கள் இறந்தால் 10 ஆயிரம் ரூபாய் வழங்குதல், ஆதரவற்ற முதியோர்கள் 81 ஆயிரம் பேர்களுக்கும் கூடுதலாக உதவித் தொகை வழங்குதல், போதிய குடிதண்ணீர் இல்லாத கிராமங்களுக்கும் குடிதண்ணீர் வழங்குவது போன்ற புரட்சிகரமான திட்டங்களை அறிவித்திருப்பதை மனதார வரவேற்று பாராட்டுகிறேன், நன்றி தெரிவிக்கிறேன்.

என்னை உறுப்பினராகத் தேர்ந்தெடுத்த அவினாசி தொகுதி சுதந்திரம் அடைந்ததிலிருந்து 38 ஆண்டுகளாக மிகவும் வறட்சியால் பாதிக்கப்பட்ட நிலையிலேயே இருக்கிறது. இதுவரை எத்தனையோ அரசுகள் மாறி மாறி இந்த மாநிலத்தை ஆண்ட போதிலும் கூட, என்னுடைய அவிநாசி தொகுதியில் எந்த விதமான முன்னேற்றத் திட்டத்தையும் செயலாக்கவில்லை. இப்பகுதியில் உள்ள பெரும்பான்மையான மக்கள் விவசாயத்தையே நம்பியிருக்கக் கூடிய மக்கள். அந்த மக்களை தேர்தல் காலங்களில் சந்தித்த அந்த அரசியல்வாதிகள், ஓட்டுக் கேட்கும் நேரத்தில் குந்தா நதிநீர் திட்டத்தைக் கொண்டு வருவதாகவும், பாண்டியாறு புன்னம்பலம் நீர் பாசனத் திட்டத்தைக் கொண்டு வருவதாகவும் வாக்குறுதிகள் தந்து வெற்றி பெற்று, இங்கே உறுப்பினர்களாகவும் இருந்து வந்திருக்கிறார்கள். அவர்களுடைய கட்சியும் ஆட்சியில் இருந்து வந்திருக்கிறது. ஆனால் இதுவரையில் எந்த திட்டமும் நிறைவேற்றப்படவில்லை.

மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் முதல்வராகப் பொறுப்பு ஏற்றதற்குப் பிறகுதான் எனது தொகுதியில் கிராமத் தன்னிறைவுத் திட்டம் கொண்டு வரப்பட்டு, அப்பகுதி மக்களுக்கு குறைந்தபட்ச அடிப்படைத் தேவைகள் ஓரளவிற்கு நிறைவேற்றப்பட்டுள்ளன. அதன் பின்பு கடந்த ஆண்டு அவினாசி தொகுதியை பிற்படுத்தப்பட்ட தொகுதியாக அறிவித்து சிப்காட் மூலமாக

தொழில் மையங்களை உருவாக்கப்போவதாக அரசு அறிவித்துள்ளது. இந்த அறிவிப்புக்குப் பின் தான் நொந்துகிடந்த எனது தொகுதி மக்களின் வயிற்றில் பாலை வார்த்ததுபோல் உள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவையின் அலுவல் நேரம் அவையின் முன் அனுமதியோடு சிறிது நேரம் நீட்டிக்கப் பெறுகிறது.

(பிற்பகல் 1-30)

**திருமதி பி. லட்சுமி :** என்னுடைய தொகுதியில் அவிநாசி, அன்னூர் என்று இரண்டு ஒன்றியங்கள் உள்ளடங்கி உள்ளன. இந்த இரண்டு பகுதி மக்களும் தங்கள் தங்கள் பகுதியில் தொழிற்பேட்டை அமைய வேண்டும் என்று ஆவலாக உள்ளார்கள். இரண்டு ஒன்றியங்களும் பின்தங்கிய பகுதிகளாக இருப்பதால் தொழிற்பேட்டைகளை இரண்டு ஒன்றியங்களிலும் அமைத்து இருபகுதி மக்களின் எண்ணங்களை நிறைவேறச்செய்ய வேண்டும் என்று மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். இந்த நடப்பு ஆண்டிலேயே இத்திட்டத்தை நிறைவேற்றித்தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மேற்படி தொழிற்பேட்டையை உருவாக்கும்போது என் தொகுதியில் உள்ள படித்த இளைஞர்களுக்கும் பெண்களுக்கும் சமமாக வேலைவாய்ப்பை ஏற்படுத்தித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் என்னுடைய தொகுதி வறட்சியான காரணத்தினால் பெரும்பாலான கிராமங்களில் குடிதண்ணீர் தட்டுப்பாடு இருந்து வருகிறது. எனவே தண்ணீர் இறைவைத் திட்டத்தில் கணிசமான மேல் நிலை, கீழ்நிலை தொட்டிகள் போன்றவற்றின் மூலம் குடிதண்ணீர் வசதி செய்து கொடுக்கப்பட்டிருந்தாலும், மழை காலங்கள் அல்லாத வறட்சிக் காலங்களில் கிணறுகளில் தண்ணீர் வற்றிப் போய், பயன் அற்றுப்போய் கடுமையான தண்ணீர் தட்டுப்பாடு ஏற்பட்டுவிடுகிறது. மேலும் ஆழ்குழாய் கிணறுகள் 300 அடி ஆழத்திற்கு பரவலாக போடப்பட்டிருந்தாலும் இப்பகுதியில் நிலத்தடி நீர் இல்லாததினால் பெரும்பாலானவைகள் பயன்



அற்றுப்போய் உள்ளன. எனவே என் தொகுதியில் குடிநீர் பிரச்சனையைப் போக்க வேறு ஏதாவது ஆக்கப்பூர்வமான திட்டத்தை மாண்புமிகு முதல்வர் அவர்கள் நிறைவேற்றித்தர வேண்டிக்கொள்கிறேன்.

மேலும் எனது தொகுதியில் ஆதி திராவிட மக்கள் பெரும்பான்மையாக உள்ளார்கள். இவர்கள் 30, 40 ஆண்டுகளுக்கு மேலாக குடியிருந்து வந்தாலும், இன்னும் அவர்களுக்கு வருவாய்த் துறை அதிகாரிகளால் சரியாக பட்டாக்கள் வழங்கப்படாமல் இருக்கின்றன. எனவே அவற்றை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் இத்தகைய தாழ்த்தப்பட்ட மக்கள் குடியிருக்கும் பகுதிகளில் குடிதண்ணீர் தேவைகள் முழுவதுமாக பூர்த்தி செய்யப்படாமல் உள்ளதால் அவர்கள் நிலச்சுவான்தார்களின் தோட்டங்களுக்கு சென்று குடிதண்ணீர் கொண்டுவரவேண்டிய நிலை இருப்பதால், அந்த நிலச்சுவான்தார்கள் அந்த வாய்ப்பினை பயன்படுத்தி தாழ்த்தப்பட்ட மக்களை சுயேச்சையாக சிந்தித்து தேர்தல் காலங்களில் செயல்பட முடியாமல், வேண்டாத நிர்பந்தங்களை உருவாக்கி அவர்களை கஷ்டத்திற்கு உள்ளாக்கியிருக்கிறார்கள். மீறினால் குடிக்க தண்ணீர் எடுக்கவிட வேண்டாம் என்று தடுப்பது போன்ற காரியங்களில் ஈடுபடுகிறார்கள் என்று தேர்தல் காலங்களில் நான் சேரிப்பகுதிகளுக்கு சென்றபோது அறிய முடிந்தது. தாழ்த்தப்பட்ட மக்கள் குடியிருக்கும் குடியிருப்புகளுக்கு தனியாக குடிநீர் திட்டங்கள் நிறைவேற்ற நடவடிக்கை எடுக்குமாறு மாண்புமிகு முதல்வர் அவர்களை கேட்டுக்கொள்கிறேன். தாழ்த்தப்பட்ட சமுதாய மக்கள் மாண்புமிகு முதல்வர் அவர்களை தங்கள் வணக்கத்திற்குரிய தெய்வமாக, தங்கள் குறைகளை போக்க வந்த மாமனிதராக என்று மனப்பூர்வமாக நம்பியுள்ளதால், அவர்கள் எங்கள் தீவிர ஆதரவாளர்களாக இருந்து வருவதால் அவர்களுடைய எண்ணங்கள் ஈடேற நடவடிக்கைகள் விரைவில் எடுக்குமாறு பணிவுடன் கேட்டு என் உரையை முடிக்கிறேன், வணக்கம்.

* **திரு. எஸ். டேனியல்ராஜ்:** பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரை மீது இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக, இங்கு பேசுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். காங்கிரஸ் கட்சி வேட்பாளராக அறிவிப்பு செய்த இளைய தலைமுறையின் விடிவெள்ளி பாரதப் பிரதமர் ராஜீவ் காந்திக்கும் மத்திய மகளிர் சமூக நலத் துறை அமைச்சர் மரகதம் சந்திரசேகர் அவர்களுக்கும் என்னை பெருவாரியான வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்த ஸ்ரீவைகுண்டம் வாக்காளப் பெருமக்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் எங்கள் இதய தெய்வம் அன்னை இந்திரா காந்தி அவர்களுடைய திருவுருவப் படத்தை இம்மன்றத்தில் திறக்க முடிவு செய்திருக்கும் அரசையும் பாராட்டி என்று நன்றியை காணிக்கையாக்குகிறேன்.

கடந்த நான்கு நாட்களாக, ஆளுநர் உரையில் பேசிய மாற்று கட்சி உறுப்பினர்கள், அனுதாபத்தின் காரணமாக ஜனநாயக முற்போக்கு கூட்டணி வெற்றி பெற்றதாக பேசினார்கள். நாங்கள் மத்தியிலே தன்னுடைய இன்னுயிரை ஈந்த அன்னை இந்திரா காந்தி அவர்களின் தவப் புதல்வர் ராஜீவ் காந்தி பாரத நாட்டின் பிரதமராக வரவேண்டும். அதுபோல தமிழகத்திலே நேர்மையான ஊழலற்ற ஆட்சி அமைத்திட புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் முதல்வராக வரவேண்டும் என்ற ஒரே கோரிக்கையை வைத்து, தேர்தலிலே போட்டியிட்டோம்.

மக்கள் இரண்டு தலைவர்களின் மீதும் நம்பிக்கை வைத்து ஜனநாயக முற்போக்குக் கூட்டணியை வெற்றி பெறச் செய்தார்கள் என்பதைக் கூறிக் கொள்ள நான் கடமைப் பட்டிருக்கின்றேன்.

ஆளுநர் உரையிலே வறுமையை ஒழிப்பதற்காக மத்திய அரசு வகுத்துள்ள திட்டங்களான தேசிய கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டம், ஊரக நிலமற்றோர் வேலைவாய்ப்பு உறுதி திட்டம் ஆகிய திட்டங்கள் மத்திய அரசின் மானியத்தோடு நிறைவேற்றி வருகிறது. இத்திட்டங்களை நிறைவேற்றுவதில் சில அரசு அதிகாரிகள் செய்கின்ற தவறின் காரணமாக கிராமப்



புறத்திலே வாழ்கின்ற ஏழை எளிய மக்கள் இத்திட்டத்தின் நன்மைகளைப் பெற முடியாமல் சில தனி நபர்கள் லாபம் அடைகிறார்கள். ஆகவே இத்திட்டத்தினை கண்காணிக்க கண்காணிப்புக் குழு ஒன்றினை அமைத்திட அரசு முன்வர வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக சத்துணவுத் திட்டம், அரசுப் பணியாளர்களுக்கான குடும்ப நல நிதி ரூபாய் 10,000-லிருந்து ரூ. 20,000 ஆக உயர்த்தப்படும் திட்டம், முதியோர் ஓய்வூதியம் வழங்கும் திட்டம், காது கேளாதவர்களுக்கு செவிமடுப்புக் கருவிகள் வழங்கும் திட்டம், 1 ஆம் வகுப்பு முதல் 8 ஆம் வகுப்பு வரை படிக்கின்ற தகுதியுள்ள பிள்ளைகள் அனைவருக்கும் இலவசச் சீருடை இலவச பாடப் புத்தகங்கள் வழங்கும் திட்டம் போன்ற முற்போக்குத் திட்டங்களை அரசு அறிவித்திருப்பதை நான் வரவேற்போடு இந்திய நாட்டின் விடுதலைக்காக பாடுபட்டு சிறை சென்ற தியாகச் செம்மல்களுக்கு உயர்ந்த பட்ச பென்ஷன் தொகையாக தமிழக அரசு ரூ. 150 வழங்கி வருகிறது. இத்தொகையை ரூ. 250 ஆக உயர்த்தி தியாகிகளின் கண்ணீரைத் துடைக்க அரசு முன்வர வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து நிர்வாகத் திறனை உயர்த்தும் நோக்கத்துடன், நிர்வாகத்தை மக்களுக்கு நெருக்கமாகக் கொண்டு வரும் நோக்கத்துடனும் பெரிய மாவட்டங்கள் சிலவற்றை சிறிய மாவட்டங்களாகப் பிரிக்க அரசு முடிவெடுத்து நடவடிக்கை எடுத்து வருகிறது. இதன் அடிப்படையில் நெல்லை மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து நெல்லையைத் தலைநகராகக் கொண்டு ஒரு மாவட்டமும், தூத்துக்குடியைத் தலைநகராகக் கொண்டு வ.உ.சி. பெயரில் ஒரு மாவட்டமும் அமைக்க அரசு முடிவெடுத்துள்ளது. இத்திட்டத்தை உடனே நிறைவேற்றுமாறு அரசை கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்ததாக, அரிஜன மக்களின் நலனுக்காக மத்திய அரசும், தமிழக அரசும் பல சலுகைகளை வழங்கி வருகிறது. ஆனால் இந்தச் சலுகைகள், மதத்தின் பெயரால், கிறிஸ்தவ மதத்தைச் சார்ந்த அரிஜன மக்களுக்கு வழங்க அரசு மறுத்து வருகிறது. அரிஜன மக்களுக்கு வழங்குகின்ற சலுகைகளை கிறிஸ்தவ மதத்தைச் சார்ந்த அரிஜன மக்களுக்கும் வழங்க வேண்டும் எனக்

கேட்டுக்கொள்வதோடு கிறிஸ்தவ அரிஜன மக்களை தாழ்த்தப் பட்டோர் பட்டியலில் சேர்க்க வேண்டும் என அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

எனது தொகுதியைப் பொறுத்தமட்டில் பெரிய தொழிற்சாலை ஒன்றுமே கிடையாது. ஸ்ரீவைகுண்டம் தொகுதியில் ஒரு நூற்பாலை நிறுவ அரசு நடவடிக்கை எடுத்து உடனே நிறைவேற்றுமாறு கேட்டுக்கொள்கிறேன். எனது தொகுதியில் சில தொழில் அதிபர்கள் தொழிற்சாலைகளை நிறுவ முன்வருகிறார்கள். அவர்களுக்கு ஊக்கம் அளித்து ஆதரவு கொடுக்குமாறு அரசை கேட்டுக் கொள்கிறேன்.

தாமிரபரணி நீரைப் பயன்படுத்தி எனது தொகுதி விவசாயிகள், விவசாயம் செய்து வருகிறார்கள் எனது தொகுதியில் விவசாயிகளுக்காக கட்டப்பட்டுள்ள குளங்கள் பல ஆண்டுகளாகச் செப்பனிடப்படாமல் இருக்கின்றன. ஸ்ரீவைகுண்டம், கஸ்பா, பேரூர், பெருங்குளம், சிவகளை, பேய்குளம் ஆகிய குளங்களை ஆழப்படுத்திக் கரையை பலப்படுத்த வருகின்ற பட்ஜெட்டில் நிதி ஒதுக்கீடு செய்து இத்திட்டத்தை நிறைவேற்றித் தருமாறும் வடிகால்களை சீரமைப்பதற்கும் உடனே நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

ஸ்ரீவைகுண்டத்தில் இருக்கும் அரசு மருத்துவமனையை விரிவாக்கவும், ஸ்ரீவைகுண்டம், ஏரல் ஆகிய நகரங்களுக்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் அமைத்துக் குடிநீர்ப் பிரச்சினைகளை தீர்க்க அரசு முன்வர வேண்டும்.

ஆறுமுகமங்கலம் நீர்த் தேக்கத்தில் இருந்து தூத்துக்குடியைச் சுற்றியுள்ள தொழிற்சாலைகளுக்குக் குழாய்கள் மூலம் குடிநீர் சப்ளை செய்யப்படுகிறது. மேற்படி குழாய்களுடன் ஒரு இணைப்பு குழாய் கொடுத்து, சாயல்புரம் வரை அதை விரிவுபடுத்தி சாயல்புரத்தின் மக்களுடைய குடிநீர்ப் பிரச்சினையை தீர்க்க அரசை கேட்டுக் கொள்கிறேன்.





விவசாயத்திற்குப் பயன்படுத்தப்படும் பம்பு செட்டுகளுக்குக் கொடுக்கப்படும் மின்சாரம் இப்பொழுது மின்வெட்டு காரணமாக திடீரென்று எந்தவித முன்னறிவிப்புமின்றி மின்சார சப்ளை நிறுத்தப்படுகிறது. மின்சாரம் வழங்கப்படும் நேரத்தை முன் அறிவிப்போடு தெரிவித்தால் விவசாயி விவசாயிகளுக்கு கேட்டுக் களுக்கு வசதியாக இருக்கும் என அரசை கொள்கிறேன்.

புதுக்கோட்டையில் இருந்து ஸ்ரீவைகுண்டத்திற்குச் சாயல்புரம் வழியாக செல்லும் சாலையை உடனே பழுது பார்த்துத் தரும்படி அரசை கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக தூத்துக்குடி நகராட்சியில் பணிபுரிகின்ற 31 ஊழியர்கள் பத்து ஆண்டு காலமாக தொடர்ந்து பணிபுரிந்தும் இன்னும் நிரந்தமாக்கப்படாமல் தற்காலிக ஊழியர்களாக தூத்துக்குடி நகராட்சி நடத்தி வருகிறது. அவர்களை உடனே நிரந்தர ஊழியர்களாக அறிவித்து அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய சலுகைகள் அனைத்தையும் உடனே வழங்குமாறு அரசை கேட்டுக் கொண்டு என்னைப் பேசுவதற்கு வாய்ப்பளித்த பேரவைத் தலைவருக்கு நன்றி கூறி, விடைபெறுகின்றேன்.

(பிற்பகல் 1-40)

**திரு. எம். சண்முகையா பாண்டியன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னை ஆளாக்கி இந்த மாமன்றத்தில் பேச வைத்த என்னுடைய இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுக்கும் எனக்காக இரவு பகல் என்று பாராது கண் துஞ்சாது என்னுடைய அமோக வெற்றிக்கு பாடுபட்ட என்னுடைய ஆலங்குளம் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும் என் இதயங்கனிந்த நன்றியை தெரிவித்துக் கொண்டு என் உரையை துவக்குகிறேன்.

மூன்றாவது முறையாக புரட்சித் தலைவரின் புண்ணிய ஆட்சி அமைந்து புதிய திட்டங்களை நிறைவேற்றும் கடமையில் ஈடுபட்டுள்ளதை ஆளுநர் தம் உரையில் குறிப்பிட்டுள்ளதை பாராட்ட நான் கடமைப்பட்டு இருக்கிறேன்.

குறிப்பாக இந்த நடப்பு ஆண்டு 1985 இளைஞர் ஆண்டு ஆகும். புரட்சித் தலைவர் அவர்கள் இளைஞர்களை சட்டசபைக்கு கொண்டு வந்து சீரிய முறையில் தமிழக மக்களுக்கு பாடுபட ஆணையிட்டுள்ளார்.

இந்திய பேரரசின் 7-வது ஐந்தாண்டு திட்டத்தின் கீழ் தமிழக அரசு மேற்கொண்டுள்ள முன்னேற்றத் திட்டங்கள் அனைத்தும் மக்களின் நல்வாழ்வுக்கு வழிவகுத்து நாட்டின் மேன்மையை மேலும் வெளிப்படுத்தி இந்தியாவின் 20 அம்ச திட்டத்தை செயல்படுத்துவதில் தமிழக அரசு மத்திய அரசுக்கு தன் முழுமையான ஒத்துழைப்பை நல்கி வருவதற்காகவும் நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். வறுமையை விரட்ட வேண்டும் என்ற சபதத்தை நிறைவேற்ற தமிழக ஆளுநர் அவர்கள் தன் உரையில் கூறிய அனைத்து ஆலோசனைகளையும் நாம் உளமார வரவேற்றுத்தான் ஆக வேண்டும். மேலும், கிராமத்தில் உள்ள மக்களுக்கு அடிப்படை தேவைகளை பூர்த்திச் செய்து வசதி செய்து கொடுக்க முனைந்துள்ள நல்ல திட்டங்களை ஆளுநர் அவர்கள் மனதில் கொண்டு முக்கியமான பிரச்சினைகளில் அதை ஒன்றாக கருதி அதற்காக மத்திய அரசு நிதி கொடுப்பதில் தாராளமாக இருப்பதை ஆளுநர் அவர்கள் தம் உரையில் குறிப்பிட்டுள்ளார்கள். அதை நாம் இதயபூர்வமாக வரவேற்றுதான் ஆக வேண்டும். சத்துணவுத் திட்டம் உலகிலேயே பாராட்டத் தக்க வகையில் தொடங்கப்பட்டு தமிழகத்தில் பெரும் சாதனையை புரிந்து வரும் புரட்சித் தலைவரின் அரசில் சத்துணவு அமைப்பாளராக பணி புரியும் அனைவரையும் முழு நேர ஊழியர்களாக ஆக்கிட ஆணை பிறப்பிக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். அத்தோடு சத்துணவுத் திட்டத்தை முழுக்க முழுக்க சமூக நல வாரியமே நடத்துவதற்கு ஆவன செய்யும்படி கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, ஆளுநர் அவர்கள் தம் உரையில் மின்சக்தியைப் பற்றி கூறும்போது குறிப்பாக தொழில் வளர்ச்சிக்கு மின்சக்தி பயன்படுவதைப்பற்றி கூறியுள்ளார். தமிழகத்தில் பெருவாரியான மின்சாரம் விவசாயத்திற்கு பயன்பட்டு வருவதை நாம் கருத்தில் கொண்டு சிறு விவசாயிகளுக்கு மின்சக்தி இலவசமாக





கொடுத்து புரட்சித் தலைவர் அரசு சாதனை புரிந்து இருப்பதை ஆளுநர் அவர்கள் எடுத்து உரைத்து இருப்பதற்காக நான் மனமார பாராட்டுகிறேன். மின்சக்தி விவசாயத்திற்கு மிகவும் இன்றியமையாத ஒன்று ஆகும். இந்திய பேரரசில் தமிழக அரசினுடைய திட்டங்கள் சுலபமாக நிறைவேற்றப்பட்டு வருவதை ஆளுநர் அவர்கள் தம் உரையில் கூறியிருக்கிறார்கள் தமிழ் நாட்டில் உள்ள கிராமப் பகுதிகளில் மத்திய அரசின் முதலீடுகளை நியாயமான முறையில் போதிய அளவில் முதலீடு செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

குறிப்பாக என் தொகுதியாகிய ஆலங்குளம் தொகுதியில் ராஜபாளையம், ஸ்ரீவில்லிப்புத்தூர் போன்ற இடங்களுக்கு தொழிற்சாலைகளை தொடங்க முன்னுரிமை அளிப்பதைப் போல் முன்னுரிமை அளிக்க ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஆளுநர் தம் உரையில் தமிழக அரசு செய்த, செய்து வரும் செய்யப் போகும் திட்டங்களை மிகத் தெளிவாக சமுதாயம் ஏற்றுக்கொள்ளும் வகையில் தெரிவித்து இருப்பதை நான் பாராட்ட கடமைப்பட்டுள்ளேன்.

"தெரிதலும் தேர்ந்து செயலும் ஒருதலையாச்
சொல்லலும் வல்லது அமைச்சு"

என்ற குறளுக்கு ஏற்ப நமது ஆளுநர் செயல்படுவது உண்மையிலே நாம் மகிழ்ச்சியடையும் செயலாகும்.

எனது ஆலங்குளம் தொகுதியில் கீழப்பாவூர் பேரூராட்சிக்கு பக்கத்தில் உள்ள சித்தாறில் இருந்து பாதுகாக்கப்பட்ட குடிநீர் உலக வங்கி உதவியுடன் கொடுக்கப்படுவதாக அறிகிறேன். அதை மிக விரைவில் நடைமுறைப்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஆலங்குளம் சுமார் 5 ஆயிரம் மக்கள் தொகை கொண்ட பேரூராட்சி ஆகும். அதற்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குகின்ற முறையில் அதன் அருகாமையில் உள்ள தாமிரபரணி ஆற்றிலிருந்து பாதுகாக்கப்பட்ட குடிநீரை கொடுக்கவும், வீரகேரளம்புதூர் தெருக்களில்—நான் வாக்காள பெருமக்களை

சந்திக்கப் போகும்போது தெருக்களில் அதிகமாக சாக்கடை ஓடுகிறது—பாதாள சாக்கடை கட்டித் தரவும் கண்டியப் பேரியிலிருந்து கங்கைகொண்டானுக்கு கால்வாய் வெட்டும் திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் உள்ளதாக அறிகிறேன், அதையும் முடித்துக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் முத்துகிருஷ்ணபேரி விலக்க—துத்திகுளம் சாலையில் தற்போது வேலை நடந்து கொண்டிருக்கிறது. மேற்படி சாலையில் உள்ள மாசேர் கால்வாய், மாறந்தை கால்வாய் இவைகளில் ஐப்பசி, கார்த்திகை, மார்கழி ஆகிய மாதங்களில் 9 அடி தண்ணீர் செல்கின்றது. ஆடு மாடுகள் வண்டிகள் செல்கின்றது. நீந்தித் தான் செல்ல வேண்டிய நிலைமை இருக்கிறது. ஆகவே, இந்த கஷ்டத்தைப் போக்குவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என் என்றால் என்னுடைய தொகுதியில் எல்லாம் கிராமங்கள் தான் இருக்கின்றன. ஒரு நகராட்சி கூட கிடையாது. என்னுடைய தொகுதியில் நகராட்சியே இல்லை. ஊத்துமலை சுமார் 5,000 மக்கள் தொகை கொண்ட பேரூராட்சியாகும். அங்கு ஒரு நூற்பாலை ஏற்படுத்தி தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். குறிஞ்சியாக் குளத்தில் 5 ஆண்டு காலமாக லைன் டேப் வைத்து இருந்தார்கள். நான் தேர்தலுக்கு போயிருந்தபோது அங்கே தெரிவித்தார்கள் கடந்த ஒரு ஆண்டு காலமாக அந்த லைன் டேப்பை துண்டித்து விட்டார்கள் என்று சொன்னார்கள். அதன் காரணமாக அந்தப் பகுதியில் உள்ள பம்பு செட்டுகள் எரிந்து விடுகிறது. அதன் காரணமாக அந்தப் பகுதி மக்கள் பேரிழப்புக்கு ஆளாகிறார்கள். ஆகையால் விரைவில் லைன் டேப் முறையை இணைக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். ராஜபாண்டி கிராமத்தில் ஆதி திராவிடர்கள் குடும்பங்கள் 400 இருக்கின்றன. அங்கு யாராவது இறந்துவிட்டால் மாறந்தை கால்வாய் வழியாகத்தான் செல்ல வேண்டும். வருடத்திற்கு அந்த கால்வாயில் 5 மாத காலம் தண்ணீர் வந்து கொண்டு இருக்கிறது. மயானத்திற்கு செல்ல வேண்டுமானால் அங்கே ஒரு பாலம் அமைத்துத் தர வேண்டும். ஆகவே, கால்வாயை கடக்க ஒரு பாலம் அமைத்து தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.





மானூர் ஊராட்சி ஒன்றியத்தில் கங்கைகொண்டான் பேரூராட்சியில் கால்நடை மருத்துவமனை ஒன்று இயங்கி வந்தது. ஒரு ஆண்டு காலமாக அது இயங்காமல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. ஆகவே அதை உடனடியாக செயல் முறைக்கு கொண்டு வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மேலும், எனது தொகுதியில் கல்லத்திக்குளம் என்ற ஒரு கிராமம் இருக்கிறது. அந்த கிராமத்தில் நான் வோட்டு கேட்கக்கூட நான் போகவில்லை. காரணம் அந்த ஊருக்கு ரோடு இல்லை. அந்த ஊர் மக்கள் பஸ்ஸை பார்த்தது இல்லை. அந்த ஊர் மக்களுக்கு ரோடு வசதியும் பஸ் வசதியும் செய்து தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்திய விடுதலைப் போருக்கு முதல் முழக்கமிட்ட மாவீரன் பூலித் தேவன் பிறந்த மண்ணிலே இருந்து வந்தவன் என்பதில் பெருமை அடைகிறேன். மேலும் அம்மாவீரன் பெயரில் போக்குவரத்துக் கழகம் தொடங்கிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். என்னுடைய தொகுதி மக்களின் குறைகளை களைவதற்காக மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களும் உறுதுணையாக இருக்க வேண்டும் என்றும், இதை அமைச்சர்களிடம் சொல்லி ஆவன செய்ய வேண்டும் என்றும் இந்த நேரத்தில் கேட்டுக் கொண்டு பேரவைத் தலைவர் அவர்களுடைய தொகுதிக்கு எப்படி செய்வார்களோ அதைப் போன்று என்னுடைய தொகுதிக்கும் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டு என் உரையை முடிக்கிறேன். நன்றி. வணக்கம்.

* திரு. கே. முத்துவேல்: மாண்புமிகு சட்டமன்ற பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே, சட்டமன்ற உறுப்பினர்களே உங்கள் அனைவருக்கும் முதற்கண் எனது மனமார்ந்த நன்றியினை உரித்தாக்குகின்றேன். என்னை இந்தச் சட்ட மன்றத்திலே பேசுவதற்கு வாய்ப்பளித்த தெய்வீகமும் தேசியமும் எனது இரு கண்கள் என்றும் ஆங்கிலேய ஏகாதிபத்திய ஆட்சி அறவே அகற்றிட தன்னையே அர்ப்பணித்த தென்பாண்டிமண்டலத்து முடிசூடா மன்னர் இந்திய அரசியலில் வாய்ப்பூட்டு சட்டத்தை சந்தித்த எங்கள் இதய தெய்வம் தெய்வீகத் திருமகன் நடமாடும் ஞானக்

[திரு. கே. முத்துவேல்] [1985 மார்ச் 15

கடவுளாக விளங்கிய பசும்பொன் திரு. தேவர் அவர்களது திருவுருவத்தை இந்த அவையிலே கண்டு வணங்கி அவருடைய ஆசியோடும் புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆதரவோடும் என்னை வேட்பாளராக அறிமுகப்படுத்திய அகில இந்திய பார்வர்டு பிளாக் பொதுச் செயலாளர் எங்களுடைய தானைத் தலைவர் திரு. எஸ். ஆண்டித்தேவர் அவர்களுக்கு நன்றி கூறி தொகுதிக்கே செல்லாமல் வெற்றிவாகை சூடிய தேவர் திருமகனுடைய சொந்தத் தொகுதியான முதுகுளத்தூர் தொகுதியில் என்னை சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுத்து, இந்த அவையிலே பேச வாய்ப்பளித்த வாக்காள பெருங்குடி மக்களுக்கு எனது மனமார்ந்த நன்றியை இந்த அவையின் மூலம் தெரியப்படுத்துவதோடு எனது வெற்றிக்காக பாடுபட்ட ஜனநாயக முற்போக்கு கூட்டணியுடைய தலைவர்களுக்கும் செயல்வீரர்களுக்கும் நன்றி கூறி எனது உரையை ஆரம்பிக்கிறேன்.

இந்த அவையில் மார்ச் திங்கள் 8 ஆம் நாள் தமிழக ஆளுநர் அவர்களால் நிகழ்த்தப்பட்ட உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது எனது கருத்தினை தெரியப்படுத்த வாய்ப்பளித்தமைக்கு மீண்டும் ஒரு முறை எனது நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தியத் துணைக் கண்டத்திற்கு சுதந்திரம் கிடைக்கப் போராடிய இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற தலைவர் பசும்பொன் திரு. தேவர் அவர்கள் பெயரால் நிர்வாக வசதியை கருத்தில் கொண்டு பெரிய மாவட்டங்களைப் பிரிப்பது என்ற கொள்கையின் அடிப்படையில் முதன் முதலாக சேதுபதியின் சீமையாகிய இராமநாதபுரம் மாவட்டத்தை மூன்றாகப் பிரித்து அதிலே மாமன்னர் மருதுபாண்டியர்கள் ஆட்சி செலுத்திய சிவகங்கைச் சீமையை தலைநகராகக் கொண்டு இன்றைய தினம் பணி துவங்கப் பெற்றுள்ளது. இத்தகைய வரலாற்று பெருமையை ஏற்படுத்தித் தந்த தமிழக அரசிற்கும் அதன் முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுக்கும் அகில இந்திய பார்வர்டு பிளாக் சார்பிலும், எனது சார்பிலும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



1985 மார்ச் 15] [திரு. கே. முத்துவேல்]

(பிற்பகல் 1-50)

உலகமே இன்று உன்னிப்பாகக் கவனித்துக்கொண்டிருக்கின்ற மிகச் சிறிய நாடு இலங்கை என்பதை நாம் அறிவோம். இந்திய வரலாற்றினைப் புரட்டிப் பார்ப்பீர்களேயானால், இந்த இலங்கை மூவேந்தர்கள் ஆட்சிக்காலத்தில் தமிழகத்தில் ஒன்றாக இருந்தது என்பது நமக்குத் தெரியவரும். ஏதோ காலச்சூழ்நிலையின் காரணமாக, இலங்கைப் பகுதி தனி நாடாக இன்று விளங்குகிறது. நமது நாட்டை அன்று நாம் விட்டுக் கொடுத்ததின் பலனாக இன்று அங்கே நமது மொழி பேசும் மக்கள் அன்றாடம் செத்து மடிந்து கொண்டிருக்கிறார்கள்; நமது பெண்கள் கற்பழிக்கப் படுகிறார்கள்; பச்சிளங் குழந்தைகள் தீக்கிரையாக்கப் படுகிறார்கள். தமிழர்களுடைய இளம் நெஞ்சங்களைத் துப்பாக்கி குண்டுகளால் அன்றாடம் துளைக்கின்றனர். இதனையெல்லாம் நாம் அன்றாடம் செய்தித்தாள்களிலே படிக்கின்றபொழுது நமது நெஞ்சங்கள் வெடிப்பதுபோல் இருக்கின்றது. நமது இரத்த நாளங்கள் துடிக்கின்றன. இருந்தாலும் காலச்சூழ்நிலையின் காரணமாக கண் இருந்தும் குருடராக வாய் இருந்தும் ஊமையாக கைகால்கள் இருந்தும் முடவனாக இருக்கிறோம். இது சம்பந்தமாக மத்திய அரசு இறுதியான ஒரு முடிவினை எடுத்து இலங்கைத் தமிழர்களுக்குத் தகுந்த பாதுகாப்பு அளிக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

அங்கேயிருக்கின்ற தமிழனுக்குத்தான் அந்த நிலை என்றால் இங்கு இருக்கின்ற மீனவர்களுக்கு அதைவிட மோசமான நிலையை உண்டாக்குகின்றார்கள். ஆட்டைக் கடித்து, மாட்டைக் கடித்து இறுதியில் மனிதனைக் கடித்த நிலை என்று சொல்லுவார்களே, அதுபோன்று இலங்கைத் தமிழர்களைக் கொன்று குவிக்கின்ற இலங்கை இராணுவம் நமது மீனவர்களையும் கொன்று குவிக்கிறது.

கச்சத்தீவினை நமது, மீனவர்கள் திரும்பிப்பார்த்தால்கூட இலங்கை இராணுவம் நமது மீனவர்களைச் சுட்டுத் தள்ளுகிறது. கச்சத்தீவு நமது நாட்டிற்குச் சொந்தமானது, அதிலும் குறிப்பாக இராமநாதபுரம் மன்னர் சேதுபதிக்குச் சொந்தமான இடம். இன்றும் அதற்குரிய ஆதாரங்கள் இராமநாதபுரம் அரண்மனையில்

உள்ளது. அப்படியிருந்தும் கச்சத்தீவை மத்திய அரசு இலங்கைக்குத் தாரை வார்த்துக் கொடுத்தார்கள். அவ்வாறு விட்டுக் கொடுக்கக் கூடாது என்று தேவர் தந்த தேவர் அமரர் திரு. பி. கே. மூக்கையாத் தேவர் அவர்கள் அன்றே நாடாளு மன்றத்தில் எதிர்ப்புத் தெரிவித்தார்கள். அவையெல்லாம் அன்று செவிடன் காதில் ஊதிய சங்காகப் போய்விட்டது. இன்று அதன் பலனை அனுபவிக்கின்றோம். கொடுத்த கச்சத்தீவை மீண்டும் பெற இந்த அரசு என்ன நடவடிக்கை எடுத்தாலும் அதற்கு அகில இந்திய பார்வர்ட் பிளாக் முழு ஒத்துழைப்பையும் கொடுக்கும் என்ற உறுதியை இந்த அவையிலே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

நீங்களெல்லாம் நன்றாக அறிவீர்கள். தமிழகத்தின் மிக வறண்ட பகுதி; எந்தவிதத் தொழில் துறையும் இல்லாத பகுதி; மாதம் மும்மாரி பெய்தாலும் சரியாக விளையாத பகுதி புதிய இராமநாதபுர மாவட்டம். இந்த நிலையில் மழையே பெய்யா விட்டால் இந்தப் பகுதி வாழ் மக்களின் நிலை எப்படி இருக்கும் என்பதை நான் சொல்ல வேண்டியதில்லை.

இந்த ஆண்டு ஏற்பட்ட கடும் வறட்சியின் காரணமாக, குறிப்பாக எனது தொகுதியான முதுகுளத்தூர் மக்கள் அன்றாடம் மூட்டை முடிச்சுகளோடு, மனைவி மக்களோடு தஞ்சை மாவட்டம், திருநெல்வேலி மாவட்டம் என்று படையெடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அவ்வாறு செல்வதற்கும் வழியில்லாதவர்கள் பட்டினியால் வாடுகிறார்கள். இன்னும் சில மாதங்கள் கழித்தால் எனது பகுதி பாலைவனமாக, மக்களே இல்லாத இடமாக மாறினாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை.

எனவே, இந்த அரசை நான் பணிவன்போடு கேட்டுக்கொள் கிறேன். இராமநாதபுர மாவட்டத்தில் வறட்சியைப் போக்க போர்க்கால நடவடிக்கை எடுத்து எங்கள் பகுதி மக்களைக் காப்பாற்றுமாறு கேட்டுக் கொள்வதோடு நிலவரியை ரத்து செய்தும், கூட்டுறவுக் கடன்களுக்கு வட்டியினைத் தள்ளுபடி செய்தும் கெடுபிடி வரி வசூலை நிறுத்தும்படியும் இந்த மாமன்றத் தின் மூலம் இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.





எனது தொகுதியில், இராமநாதபுரம் மாவட்டம் கூட்டுறவு நூற்பாலை ஒன்று தற்சமயம் கமுதிக்குப் பக்கத்தில் ஆரம்பிக்கப் பட்டு இயங்கிக்கொண்டிருக்கிறது. அதற்காகத் தமிழக அரசையும், தமிழக முதலமைச்சர் அவர்களையும் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன். அந்த மில்லில் ஆதிதிராவிட மக்களை மட்டும் சேர்த்துக்கொள்கிறார்கள். எனது பகுதி மக்கள் மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள் வசிக்கின்ற பகுதியாக இருப்பதால் அனைத்துத் தரப்பு மக்களுக்கும் இந்த மில்லில் வேலைவாய்ப்பு அளிக்க ஆணை பிறப்பிக்க வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன். அத்துடன், முதுகுளத்தூர் பகுதியில் இன்னொரு மில்லையும் ஆரம்பிக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

இந்தத் தமிழகத்தின் பெரும்பான்மையான மக்கள் விவசாயத் தொழில் புரிபவர்கள். அவர்களின் நலனைக் கருத்திற்கொண்டு மதுரையில் விவசாயப் பல்கலைக்கழகம் நிறுவப்பட வேண்டு மாய்க் கேட்டுக்கொள்கிறேன். அதற்கு, மற்றைய பல்கலைக் கழகங்களுக்குத் தேசியத் தலைவர்களின் பெயரைச் சூட்டியதைப் போன்று, தனது வாழ்நாளில் விவசாய மக்களின் நலனுக்காகப் பல்முறை சிறை சென்ற தெய்வீகத் திருமகன் தேசியத் தலைவர், பசும்பொன் திரு. முத்துராமலிங்கத் தேவர் பெயரைச் சூட்ட வேண்டுமாய் மிகப் பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் பொன்மனச் செம்மல் எம்.ஜி.ஆர். அவர்கள், தனது வைத்தியச் செலவுகளுக்காக செலவு செய்யப்பட்ட அரசினுடைய பணத்தை அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டர்கள் மக்கள் மத்தியில் வசூல் செய்து செலுத்த வேண்டுமென்று குறிப்பிட்டிருக் கிறார்கள். அதற்காக, அகில இந்திய பார்வர்ட் பிளாக் கட்சி யின் சார்பில் என்னுடைய ஒரு மாத சம்பளத்தை அளிக்கிறேன் என்று சொல்லி, அவையில் பேசுவதற்கு எனக்கு இந்த வாய்ப் பினை அளித்தமைக்கு மிகவும் நன்றி கூறி, விடைபெறுகிறேன்.

*திரு. துரை கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, இந்தத் தகுதி வாய்ந்த சபையில் பங்குபெறுகின்ற வகையிலே எனக்கு வாய்ப்பளித்த அண்ணா திரு. சிவாஜி அவர்களுக்கும், பாரதப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அவர்களுக்கும் எனது நன்றியினைத் தெரிவித்துக்கொண்டு தஞ்சை மாநகரிலே எனக்கு வாக்களித்த ஏழை எளிய மக்களுக்கும் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். அல்லும் பகலும் அயராது பாடுபட்டு அதன் காரணமாக பல்லாயிரக் கணக்கான மைல்களுக்கு அப்பால் இருந்த தமிழக முதல்வர் அவர்கள் இங்கே இருந்து செல்கின்ற போது எப்படி தமிழகத்தின் முதல்வராகச் சென்றார்களோ அப்படியே திரும்பி வருகின்றபோதும் தமிழகத்தில் முதல்வராகத் தான் வரவேண்டும் என்ற ஒரே கொள்கையோடு வாக்குகளைக் கேட்டேன். அதை நிறைவேற்றுகின்ற வகையில் தஞ்சைவாழ் மக்கள் தங்களது வாக்குகளை அளித்தார்கள். அவர்களுக்கும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர்களுக்கும், தோழர்களுக்கும், காங்கிரஸ் பேரியக்கத்தைச் சார்ந்த பெரியார்களுக்கும் வெற்றிக்காகப் பாடுபட்ட அனைத்து பெரியோர்களுக்கும் வாக்காளப் பெருமக்களுக்கும் நன்றியைக் கூறிக்கொள்கிறேன். இங்கே கவர்னர் அவர்களின் உரையிலே நல்லபல சாதனைகளைப் பற்றியும், சாதிக்க இருக்கின்ற நல்லபல திட்டங்களையும் கூறியிருக்கிறார்கள். அவற்றை வரவேற்கிறேன். எனக்கு மிகக்குறுகிய காலமே பேசுவதற்குக் கொடுக்கப்பட்டிருப்பதன் காரணத்தால் இங்கே என்னுடைய தொகுதியைப் பற்றி மட்டும் கூறி விடைபெற்றுக்கொள்ள விரும்புகிறேன்.

அருமை அன்னை இந்திரா அவர்களின் திருவுருவப் படத்தை இந்தச் சபையில் திறந்து வைக்க இந்த அரசு தீர்மானித்திருப்பதைப் பாராட்டி வரவேற்கிறேன். அதே நேரத்தில் அம்பத்தூரில் உள்ள பல்லவன் பணிமனையில் அருமை அன்னை இந்திரா அவர்களின் திருஉருவப் படத்தைத் திறந்து வைக்க அனுமதி அளிக்காததை இச்சபைக்குத் தெரிவித்து அந்தக் குறிப்பிட்ட அதிகாரியின் போக்கினைக் கண்டிக்கின்றேன்.





நஞ்சையும், புஞ்சையும் கொஞ்சி விளையாடும் தஞ்சை மாவட்டத்தில் தமிழ்ப் பல்கலைக்கழகம் அமைத்துத் தந்த இந்த அரசைப் பாராட்டுவதில் பெருமை அடைகிறேன். அதேநேரத்தில் மற்ற மாவட்டத்திற்கெல்லாம் நெல் உற்பத்தியில் முன்னோடியாக இருக்கின்ற தஞ்சை மாவட்டத்தில் கடந்த சில வருடங்களாக மாறுபட்ட பாதிக்கப்பட்ட நிலை இருந்தாலும் தஞ்சை மாவட்டத்தில் விவசாயக் கல்லூரி அமைத்துத் தருவது பொருத்தமான ஒன்றாகும்.

அடுத்து மழைக்காலங்களில் அறுவடை செய்யப்பட்ட கதிர்களை சாலைகளில் போட்டு அந்தப் பணிகளைச் செய்து வருகிறார்கள். இதனால் விவசாயிகளுக்கு அசௌகரியமான நிலை ஏற்படுவதோடு, போக்குவரத்திற்கும் இடையூறு ஏற்பட்டு சாலைவிபத்துக்களும் ஏற்பட ஏதுவாகின்றது. இப்படிப்பட்ட நிலைமையை நீக்குவதற்கு உதவியாக விவசாயிகளுக்கு களம் கட்டித் தரவேண்டுமாய் நான் இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

தஞ்சையில் வெகு காலமாகப் போக்குவரத்துக்கு இடையூறாக இருந்து வரும் மேம்பாலத்தை விரிவுபடுத்த இந்த அரசு ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

தஞ்சைக்கு அருகாமையில் உள்ள பள்ளியேறி கிராமத்தில் மக்கள் இணைப்புப் பாலம் இல்லாமல் அவதிப்பட்டு வருகிறார்கள். இதனை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

தஞ்சை மாவட்டத்தில் தமிழ்ப் பல்கலைக்கழகம், மருத்துவக் கல்லூரி, வெளிநாட்டவரும், வெளிமாநிலத்தவரும் வருகின்ற வேளாங்கண்ணி மாதா கோயில், தஞ்சை பெரிய கோவில், நாகூர் ஆண்டவர் மசூதி ஆகியவை இருக்கின்ற காரணத்தால் மாவட்ட தலைநகரில் பல வருடங்களுக்கு முன்பு இருந்த விமான சர்வீஸை மீண்டும் ஆரம்பிக்க இந்த அரசின் மூலமாக மத்திய அரசை வலியுறுத்தவேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. துரை கிருஷ்ணமூர்த்தி] [1985 மார்ச் 15

உலகப் பிரசித்தி பெற்ற சரஸ்வதிமஹால் உள்ளது. அதில் பழைய காலத்து ஓலைச் சுவடிகள், புத்தகங்கள், பழமைவாய்ந்த நினைவுச் சின்னங்கள் எல்லாம் இருக்கின்றன. ஆனால் அந்தக் கட்டிடங்கள் பழுதடைந்து இருக்கின்றன, அதற்கு மாற்றுக் கட்டிடம் அமைத்துத் தரவேண்டும் என்று இந்த அரசை தலைவர் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மற்ற மாவட்டங்களில் அமைந்துள்ள தொழிற்சாலைகளைப் பாராட்டி, தஞ்சையில் மேலும் தொழிற்சாலைகளை அமைத்து வேலையில்லாத் திண்டாட்டத்தை நிவர்த்தி செய்ய வேண்டும் என்று இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

தஞ்சை மாவட்டத்திற்கு முக்கியமான தஞ்சை மருத்துவக் கல்லூரியில் பல யூனிட்டுகள் சரிவர இயங்காத நிலைமையில் இருக்கின்றன. அங்கு தரப்படுகின்ற மருந்துகள் நோய் தீர்க்கும் மருந்துகளாக இல்லை. எந்த ஒரு மருந்தை டாக்டர் எழுதிக் கொடுத்தாலும் அந்த மருந்து ஆஸ்பத்திரியில் கிடையாது என்று சொல்கிறார்கள். அங்கே எக்ஸ்-ரே ஃபிலிம் கிடையாது. எக்ஸ்-ரே ஃபார்ம் கூட இல்லாத நிலை இருந்து வருகின்றது. ஆகவே இதை அரசு உடனடியாக கவனத்தில் கொண்டு நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். தஞ்சையின் சரித்திரத்தில் இல்லாத ஒன்று அரசினர் பெண்கள் கலைக் கல்லூரியின் மாணவிகள் கல்லூரிக்குச் செல்லாமல் போராட்டம் நடத்தியதாகும். அதில் உள்ள பல குறைகளில் மாணவிகள் தங்கும் விடுதி சரிவர இல்லாத காரணமும் ஒன்றாகும். மேலும் அந்த மாணவிகளுக்கு விளையாட்டுத் துறையில் சரியான ஒத்துழைப்பை கல்லூரி நிர்வாகம் தருவதில்லை என்ற காரணத்தாலும் இதனை அரசுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இப்படிப்பட்ட பல்வேறு பிரச்சினைகள் காரணமாக அந்த மாணவிகள் போராட்டம் நடத்தியிருக்கிறார்கள். எனவே அந்த மாணவிகளின் பிரச்சினைகள் தீர உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு வாய்ப்பளித்த சபையின் தலைவர் அவர்களுக்கும் நன்றி கூறி விடைபெறுகிறேன்.



1985 மார்ச் 15]

* **திரு. மு. மாரிமுத்து :** பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே இந்த சட்டமன்றத்தில் நான் பதவி வகிக்கக்கூடிய அளவுக்கு என்னை அரசியலில் உயர்த்திக் காட்டியவரும் எனது இதய தெய்வமுமான மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுக்கும் என்னைத் தேர்ந்தெடுத்து இங்கே அனுப்பி வைத்திருக்கக்கூடிய திருப்பரங்குன்றம் வாக்காளப் பெருமக்களுக்கும் என்னுடைய நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே கவர்னர் உரையின் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு பேசுகின்ற வாய்ப்பினை நான் பெற்றமைக்காக பெருமகிழ்ச்சியடைகிறேன். இங்கே பலவாறான நல்லபல திட்டங்களைக் கவர்னர் உரையிலே காண்கிறோம். இந்தத் திட்டங்களைப் பாராட்டுவதற்கு, இந்த திட்டங்களைப் போற்றிப் புகழ்வதற்கு எதிர்க்கட்சியினைச் சார்ந்த குறிப்பாக மாற்றுக் கட்சியினைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர்களுக்கு மனம் இல்லை என்றாலும் கூட அவர்கள் ஒருசிலவற்றையாவது ஒத்துக்கொண்டிருக்கலாம். ஆனால் அதற்கு மாறாக அவர்கள் அந்தக் கருத்துக்களை நல்ல பல திட்டங்களை இகழ்ந்து பேசக்கூடிய அளவுக்குத்தான் இருக்கிறார்கள். அவர்கள் எப்போதுமே உண்மைகளை ஏற்றுக்கொள்வதில்லை.

(பிற்பகல் 2-00)

இந்த மாபெரும் பொதுத் தேர்தலிலே தோல்வியைத் தழுவியபொழுதும், திராவிட முன்னேற்றக் கழகம் உயர்நீதி மன்றத்தின் படிக்கட்டுகளிலே ஏறி அரசியல் சாசனத்தினுடைய 163 ஆவது சட்டப் பிரிவை எடுத்துக் காட்டி, அதிலேயாவது வெற்றி பெற முடியாதா என்று நினைத்தார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவர் ஆட்சி ஏறியது அரசியல் சாசனத்திற்குப் புறம்பானது என்றெல்லாம் சொல்லியது திராவிட முன்னேற்றக் கழகம். ஆனால் திராவிட முன்னேற்றக் கழகம் தேர்தலில் மட்டுமல்லாமல் நீதி மன்றத்திலும் தோல்வி கண்டிருக்கிறது. இப்படி யதார்த்தத்தை உணர முடியாத காரணத்தால் மட்டுமல்லாமல் 7 ஆண்டுக்காலம் கலைஞர் கருணாநிதி இந்தத் தமிழகத்திலே ஆட்சியிலே இந்தபொழுது நடந்த நிகழ்ச்சிகள் அவர்களுக்கு எதிராக திரும்பியிருக்கின்றன. இங்கே அனுதாப அலைகள் இருந்தனவோ இல்லையோ அது எனக்குத் தெரியாது. ஆனால்

ஒன்றுமட்டும் நிச்சயமாகச் சொல்வேன். திராவிட முன்னேற்றக்
கழகம் கலைஞர் கருணாநிதியின் தலைமையின் கீழே 7 ஆண்டுக்
காலம் இந்த நாட்டிலே ஆட்சிபுரிந்தபோது ஏற்பட்ட நிகழ்ச்சி
களின் காரணமாக, தமிழகத்தின் மக்கள் கலைஞர் கருணாநிதி
தலைமையின்மீது கொதித்துப் போயிருக்கிறார்கள், ஆத்திரப்
பட்டுப் போயிருக்கிறார்கள். அந்த ஆத்திரத்தினுடைய புயல்
அடித்து அவர்கள் தள்ளப்பட்டிருக்கிறார்கள். இங்கே மாண்புமிகு
உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் சொன்னதுபோல் புயல்
அடித்திருக்கிறது, அது ஆத்திரப் புயல்; ஆவேசப் புயல்.
தமிழகத்துப் புயல் அவர்களை இருந்த இடம் தெரியாமல்
செய்திருக்கிறது என்பதை இங்கே சுட்டிக்காட்ட கடமைப்
பட்டிருக்கிறேன்.

இங்கே பல இலவசத் திட்டங்களை நாட்டுமக்களுக்காக
அள்ளித் தந்திருக்கிறார்கள், புரட்சித் தலைவர் அவர்கள்.
ஏனென்றால், அவர்களுடைய ரத்தத்திலே ஊறிப்போன கொடைத்
தன்மை அவர்களுக்கு இருக்கிறது. அந்தக் கொடை வள்ளல்
தமிழக மக்களுக்கு இலவசத் திட்டங்கள் பலவற்றை அள்ளித்
தந்திருக்கிறார்கள். அந்த இலவசத் திட்டங்களின் காரணமாக
பல நன்மைகளைத் தமிழகம் பெறப் போகிறது. இன்னும்
குறிப்பாகச் சொல்லப் போனால் பழமொழி ஒன்று சொல்
வார்கள். நல்லவர்களில் பத்தில் ஒருவர் பாராட்டப்படக்
கூடியவராக இருப்பார். நூறில் ஒருவர் நல்லவராக இருப்பார்.
ஆயிரத்தில் ஒருவர் வல்லவராக இருப்பார். இலட்சத்தில்
ஒருவர் புகழுக்குரியவராக இருப்பார். ஆனால், இவையெல்லாம்
ஒன்று சேர்ந்து கோடியிலே ஒருவர்தான் கொடையாளியாக
இருப்பார் என்று சொல்வார்கள். அந்த வகையிலே புரட்சித்
தலைவர் கொடையாளியாக இருக்கிறார், மக்களுக்கு நல்லது
செய்யவேண்டுமென்ற எண்ணத்தோடு. எனவேதான் அவரை
தமிழகத்து மக்கள் மீண்டும் அரியணையிலே ஏற்றியிருக்
கிறார்கள் என்பதை மாற்றுக் கட்சி நண்பர்கள் புரிந்து கொள்ள
வேண்டுமென்று நான் மிக்கப் பணிவன்போடு தெரிவித்துக்
கொள்கிறேன்.





இங்கே இந்த கவர்னர் உரையில் இந்த வருடத்திற்கு
வருகின்ற திட்டங்களைப் பற்றி மட்டும் சொல்லியிருக்கிறார்கள்.
அரசின் வளம்கொழு பணிகள் ஒரே நாளிலே முடிந்து விடுகிற
பணிகள் அல்ல; ஓராண்டிலே முடிகின்ற பணிகள் அல்ல; அது
தொடர்கின்ற பணிகள்.

என்னுடைய தொகுதியான திருப்பரங்குன்றத்தையும் இந்த
அரசு கவனத்திலே கொள்ள வேண்டுமென்பதற்காக நான் இங்கே
ஒருசில திட்டங்களை சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.
இங்கே என்னுடைய தொகுதியில் முழுமையாக ஓடுகின்ற வைகை
யினுடைய பிரதான நிலையூர் கால்வாய் திட்டத்தை இந்த அரசு
அங்கீகரிக்க வேண்டுமென்று நான் பணிவன்போடு கேட்டுக்
கொள்கிறேன். அதை அப்ரூவ்ப் சானல் என்று சொல்லக்கூடிய,
அங்கீகரிக்கப்பட்ட கால்வாயாக இந்த நிலையூர் கால்வாயை
ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று நான் பணிவன்போடு இந்த
அரசைக் கேட்டுக்கொள்கிறேன். அந்தக் கால்வாயை நவீனப்
படுத்தி, சிமெண்ட் ஸ்லேப்ஸ் போட்டு தண்ணீரை சேதப்படுத்தாத
அளவுக்கு பாசன வசதியைப் பெருக்கித் தரவேண்டுமென்று
அளவுக்கு, பாசன வசதியைப் பெருக்கித் தரவேண்டுமென்று நான்
பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் பனையூர் கால்வாய் திட்டத்தை இந்த அரசு விரைவு
படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அங்கே
கிருதுமால் நதி என்று சொல்லப்படுகின்ற பயன்மிக்க நதியை
ஆழப்படுத்தி, அகலப்படுத்தி, அதன்மூலம் பாசன வசதி செய்யக்
கூடிய நிலையை இந்த அரசு கைக்கொள்ள வேண்டுமென்று
பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. மு. மாரிமுத்து] [1985 மார்ச் 15

மேலும் இந்த வைகையிலிருந்து பிரிந்து திருமங்கலம் வரையில் செல்லக்கூடிய ஒரு புதிய கால்வாய்த் திட்டத்தை ஏற்படுத்தியிருக்கிறார்கள். அந்தக் கால்வாய் என்னுடைய தொகுதியினுடைய மேற்கு எல்லையைத் தொட்டுச் செல்கிறது. அதைச் சிறிது கிழக்கு முகமாகத் திருப்பிவிட்டு, கீழக்குயில்குடி, மேலக் குயில்குடி போன்ற பகுதிகளிலும் மேலக்குயில்குடி, வட பழுஞ்சி, தென் பழுஞ்சி, தோப்பூர், காக்கவிப்படி, வே. புளியங்குளம், போன்ற பகுதிகளிலும் நீட்டித்துத் தருவார்களானால் என்னுடைய பகுதி பொன் விளையும் பகுதியாக மாறும் என்பதை இங்கே அரசுக்குச் சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

மேலும் என்னுடைய பகுதியிலே இரண்டறக் கலந்திருக்கக் கூடிய மதுரை நகரின் 8 வார்டுகள் இருக்கின்றன. அந்த வார்டு களில் சாலை வசதியும் சாக்கடை வசதியும் தண்ணீர் வசதியும் செய்து தர வேண்டுமென்று இந்த அரசை நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய பகுதியில் கதாநாயகனாக விளங்குகின்ற திருப் பரங்குன்றம் நகரியத்தை சுற்றுலா மையமாக அறிவித்தால்தான் வளர்ச்சிப் பணிகள் துரிதமாக நடைபெறும் என்று நான் கருது கிறேன். காரணம், முருகப்பெருமான் குடிகொண்டிருக்கக்கூடிய அந்தத் திருப்பரங்குன்றம் கோயிலின் தென் பகுதியிலே திப்பு சுல்தான் படையெடுப்பினால் சிதைந்து விட்டிருக்கக்கூடிய தென் புறக் குகைக்கோயிலும் அங்கே இருக்கின்றது. அதோடு இன்னும் பல சிறப்புகள் இருக்கின்ற காரணத்தாலே அந்தத் திருப்பரங்குன்றம் நகரை சுற்றுலா நகரமாக அறிவித்து அதற் கான பணிகளைச் செய்து தர வேண்டுமென்று அரசை நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். மேலும் வளர்ந்து வருகிற அவனியாபுரம், நாகமலை, புதுக்கோட்டை ஆகிய பகுதிகளுக்கு பாதுகாக்கப்பட்ட தண்ணீர் வசதி செய்து கொடுக்க வேண்டு மென்று இந்த அரசை பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.



1985 மார்ச் 15] [திரு. மு. மாரிமுத்து]

தோப்பூர், மூணாண்டிப்பட்டி போன்ற பகுதிகளிலே ஹவுசிங் போர்டிலே நிலங்களை கையகப்படுத்தி செய்து வீடுகளை கட்டுகிற திட்டங்களை வைத்திருக்கிறார்கள். இந்தத் திட்டத்தை உடனடியாக செயல்படுத்துவார்களானால் அந்த இரண்டு கிராமத்து மக்களும் உடனடியாக ஊர்களைவிட்டுச் செல்கிற நிலைமை ஏற்படும். ஆகவே நஞ்சை, புஞ்சை நிலங்களை அவர்களுக்கு ஒதுக்கித் தந்து அந்த இரண்டு கிராம மக்களின் வாழ்க்கையை பாதுகாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து ஒரு முக்கியமான பிரச்னையைச் சொல்ல விரும்பு கிறேன். நீதிமன்றப் பிரிவு மதுரை மாநகரத்தில் அமைக்கப்பட வேண்டுமென்று வழக்கறிஞர்கள் சங்கம் மூலமாக பல தடவைகள் எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்களும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களும் வழக்கறிஞர்கள் நடத்திய மாநாட்டிலே இதற்காக உறுதியை அளித்தார்கள். அந்த உறுதியை அடிப்படையாகக் கொண்டு மதுரை மாநகரத்திலே உயர்நீதி மன்றத்தின் ஒரு பிரிவை உடனடியாக அமைத்து தந்து தென்பாண்டி மண்டலத்தைச் சேர்ந்த மக்கள் அதிக சிரமமின்றி நீதியைப் பெறுவதற்கு வழி வகை செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மதுரையின் தென்புலத்தையும், வடபுலத்தையும் ஒன்றாக இணைக்கக் கூடிய அளவிற்கு இரண்டு மேம்பாலங்கள் இருக் கின்றன. இது மக்களின் தேவைக்கு போதுமானதாக இருக் இணைக்கக் கூடிய அளவிற்கு இரண்டு மேம்பாலங்கள் இருக்கின்றன. இது மக்களின் தேவைக்கு போதுமானதாக இல்லாததால் அவர்களின் தேவையை ஈடுகட்டுவதற்கு இன்னும் ஒரு மேம்பாலம் கட்டித் தர வேண்டுமென்று அரசை பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய தொகுதியை கவனத்திற் கொண்டு 149 கோடி ரூபாய் செலவிலே ஏற்படுத்தியிருக்கிற குடிதண்ணீர் திட்டத்தை கொஞ்சம் விரிவாக்கி என்னுடைய தொகுதிக்கும் தரவேண்டுமென இந்த அரசை கேட்டு பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை (16—3—1985) காலை 9.00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 2-07 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

[1985 மார்ச் 15

## 7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்

91. கோயம்புத்தூர், பாரதியார் பல்கலைக் கழகத்தின் ஆட்சிக் குழுவிற்கு உறுப்பினர்களை நியமனம் செய்வது குறித்து கல்வித் துறையின் 29—9—1983 ஆம் நாளிட்ட 91769|NU2|83 ஆம் எண் கடிதத்தில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (1981 ஆம் ஆண்டு பாரதியார் பல்கலைக் கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1982) 65 (2) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).

92. கோயம்புத்தூர், பாரதியார் பல்கலைக் கழகத்தின் ஆட்சி பேரவைக்கு உறுப்பினர்களை நியமனம் செய்வது குறித்து கல்வித் துறையின் 5—12—1983 ஆம் நாளிட்ட 68110|NU2|83 ஆம் எண் கடிதத்தில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (1981 ஆம் ஆண்டு பாரதியார் பல்கலைக் கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1982) 65 (2) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).

93. கோயம்புத்தூர், பாரதியார் பல்கலைக் கழகத்தின் ஆட்சிக் குழுவினை அமைப்பது குறித்து கல்வி, அறிவியல் — தொழில் நுட்பவியல் துறையின் 18—1—1984 ஆம் நாளிட்ட 132126/NU 2/83 ஆம் எண் கடிதத்தில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (1981 ஆம் ஆண்டு பாரதியார் பல்கலைக் கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1-1982) 65 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

94. கல்வி, அறிவியல்-தொழில் நுட்பவியல் துறையின் 11 (2) 75-27/83 ஆம் எண் அறிவிக்கையில் திருத்தமொன்று செய்வது குறித்து கல்வி அறிவியல்-தொழில் நுட்பவியல் துறையின் 10—4—1984 ஆம் நாளிட்ட 5640 Edu|NU2|84 ஆம் எண் கடிதத்தில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (1981 ஆம் ஆண்டு பாரதியார் பல்கலைக் கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1982/65 (2) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது).



1985 மார்ச் 15]

95. பாரதியார் பல்கலைக் கழகத்தின் ஆட்சிப் பேரவையினை அமைப்பது குறித்து கல்வித்துறையின் 8—10—1984 ஆம் நாளிட்ட 91880|NU2|84 ஆம் எண் கடிதத்தில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (1981 ஆம் ஆண்டு பாரதியார் பல்கலைக் கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1982/65 (2) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).

### (ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்

ஏதுவுமில்லை.

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS.

### IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohun Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road, Madras-5.
10 The South India Saiva Siddhanta Works Publishing Society (Tirunelveli) Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras-1.
12 New Century Book House (Private) Limited, Madras-2
13 Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egmore, Madras-8.

### IN MOFUSSIL OF TAMIL NADU.

1 A Venkatasubban & Company, Vellore (North Arcot District)
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V. Nathan Company, Kumbakonam (Tanjore District).
4 Appar Book Stall, Thanjavur.
5 P N Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Bros., Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Cut Road, Coimbatore-12.
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore-1.
11 S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tiruchirappalli-1.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi.
13 Mary Martin, Booksellers, Kottagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem-1.
15 Parameswari Book Shop, No. 45D, Old Market Street, Salem.
16 Meenakshi Pathipagam, Pudukkottai.
17 K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-10.
21 Kumaran Book Depot, Booksellers, Erode-1.
22 Vela Book Company, No. A, Annaji Rao Street, Erode-1.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajantha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchirappalli-2.
26 Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi, Madras-1.

### IN OTHER STATES.

1 Jain Book Agency, New Delhi.
2 Inter National Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthaghalayam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bagchi & Company, 286, R.B. Gandhi Street, Calcutta-11.

Published under Rules 234 and 237 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing Madras.

20/86

வெளியீடு 15-10-1985

Issued 15—10—1985

2821

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

சனிக்கிழமை, மார்ச் 16 1985 - தொகுதி II எண் 4

Saturday the 16th March 1985 - Volume II No 4

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009
Legislative Assembly Secretariat, Fort St. George
Madras - 600 009

விலை [ரூ. 3-50 காசுகள்] Price Rs. 3-50 paise.

## உள்ளடக்கம்

16—3—1985.


| | பக்கங்கள் |
|---|---|
| 1. வினாக்கள்—விடைகள் : | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் | 441–446 |
| 2. கவன ஈர்ப்பு : | |
| கைத்தறித் துணிகள் தேங்கிக் கிடப்பதால் நெசவாளர்களுக்கு ஏற்பட்டுள்ள இன்னல்கள் | 446–452 |
| 3. அரசினர் சட்ட முன்வடிவுகள் : | |
| (அ) தமிழ் பல்கலைக் கழக (திருத்த) சட்ட முன்வடிவு 1985 | 452 |
| (ஆ) கடன் நிவாரண (திருத்த) சட்ட முன்வடிவு 1985 | 453–455 |
| 4. ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம். | 455–460 |
| விவாதம் (தொடர்ச்சி) | |
| திரு. க. அன்பழகன் | 455–495 |
| திரு. உ. சுப்பிரமணியன் | 496–515 |
| மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் | 516–559 |
| 5. பேரவை முன் வைக்கப் பெற்ற ஏடுகள் | 561 |

[1983 மார்ச் 18

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** ஐரோப்பிய நாடுகளிலிருந்து, நமது மாநிலத்திற்கு முதல் கட்டமாக சுமார் 10,000 பால் மாடுகள் பெறுவதற்கான திட்டம் ஒன்றை அரசு தயாரித்து வருகிறது.

**திரு. சா. துரைசாமி:** தலைவரவர்களே, ஐரோப்பிய நாடுகளிலிருந்து பெறப்படுகிற அந்த பசுமாடுகளை எந்த அடிப்படையில் விநியோகம் செய்ய இருக்கிறார்கள்? யார் மூலம் விநியோகம் செய்யப்படும்? யாருக்கு, விலை நிர்ணயம் என்ன என்பனவற்றை அறிய ஆசைப்படுகிறேன்?

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** தலைவரவர்களே, ஐரோப்பிய நாடுகளிலிருந்து ஒரு இலட்சம் பசுக்களை இறக்குமதி செய்ய மத்திய அரசை தமிழக அரசு கேட்டுக் கொண்டுள்ளது. அதன் முதல் தவணையாக 10,000 பசுக்களை உடனடியாகப் பெறுவதற்கு மத்திய அரசு துரிதமான நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. இந்த 10,000 பசுக்களைப் பெறுவதன் மூலமாக தமிழ்நாட்டில் மேலும் 1,20,000 லிட்டர் பால் அதிகமாக உற்பத்தி செய்யப்படும். தற்சமயம் இப்போது தமிழ்நாட்டில் பால் வளத் துறையின் மூலம் 9 இலட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்யப்படுகிறது.

ஐரோப்பிய நாடுகளிலிருந்து மத்திய அரசு வாயிலாக தமிழக அரசு பால் வளத் துறை மூலமாக பெறவிருக்கிற இந்த மாடுகளில் தமிழ் நாட்டிலுள்ள கால்நடைப் பண்ணைகள், வேளாண்மைப் பல்கலைக் கழகம் ஆகிய நிறுவனங்களுக்கு இன அபிவிருத்திக்காக கணிசமான மாடுகள் ஒதுக்கப்பட இருக்கின்றன. மீதியுள்ள பசுக்களை திறன், நீர், நல்ல ஆற்றல் ஆகியவற்றைப் பொருத்து பால் உற்பத்தியாளர்களுக்கு வழங்கப்படும். குறிப்பாக பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்தில் அவர்கள் அங்கத்தினர்களாக இருக்க வேண்டும் என்பது கட்டாயமாகும். மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சித் தலைவர், பால் உற்பத்தியாளர் பிரதிநிதிகள், கால்நடை பராமரிப்புத் துறை பிரதிநிதிகள் ஆகிய மூன்று பேர் கொண்ட ஒரு குழுவின் பரிந்துரையின் பேரில் பால் உற்பத்தியாளர்களுக்கு மாடுகள் விநியோகம் செய்யப்படும். அந்தக் குழு விநியோகம் செய்கின்ற பொறுப்பை ஏற்றுக்கொள்ளும்.



இப்பொழுது தோராயமாக ஒரு மாட்டின் விலை 5,000 ரூபாய் என்று கருதப்படுகிறது. அந்த வகையில் 10,000 மாடுகளுக்கும் ஏறத்தாழ 5 கோடி ரூபாய் என்று மதிப்பீடு செய்யப் பட்டிருக்கிறது. முதல் கட்டமாக இந்த பசுமாடுகள் தமிழ் நாட்டில் செப்டம்பர் மாதம் வரலாம். காரணம் அப்போதுதான் குளிர்காலம். குறிப்பாக இறக்குமதி செய்யப் படுகின்ற மாடுகளில் இரண்டு இனங்கள் உள்ளன. ஜெர்ஸி, பிரீஷியன் என்ற இரண்டு வகை மாடுகள் தமிழ் நாட்டிற்கு வரவிருக்கின்றன. முதல் தவணையாக 10,000 பசுக்கள்தான் இறக்குமதி செய்கிற முயற்சி தீவிரமாக இருக்கிறது என்ற விவரங்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. மா. மணிமாறன்:** தலைவரவர்களே, நாம் மாடு வாங்குகிற அந்த வெளிநாடுகளில் இருந்து ஏறத்தாழ 3 இலட்சம் மாடுகளை இறக்குமதி செய்ய அரசு முயற்சி செய்வதாக கேள்வி. நம்முடைய நாட்டில் பால் உற்பத்தி குறைவாக இருக்கிறது. இங்கே இருக்கின்ற மாடுகளும் குறைந்த அளவு பாலையே கொடுக்கின்றன. அந்த மாடுகளை இறக்குமதி செய்தால் 18 இலட்சம் லிட்டர் பால் உற்பத்தியாகும் என்பதால், அந்த 3 இலட்சம் மாடுகளையும் தமிழக அரசு வாங்க முன்வருமா? அப்படி வாங்குகிற மாடுகளை 'தாட்கோ' மூலம் விநியோகம் செய்ய அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, எப்படிப் பெறுவது, யார் மூலம் பெறுவது என்பதைப் பற்றி நான் மூலக் கேள்விக்குப் பதில் சொல்லும்போது, விளக்கமாக பதில் அளித்திருக்கிறேன்.

**திரு. இரா. தாமரைக்கனி:** பேரவைத் தலைவர் அவர்களே, வெளிநாட்டில் இருக்கும் மாடுகள் குடம்குடமாக பால் கறக்கின்றன. ஆனால் இங்கே வந்தவுடன், சீதோஷ்ண நிலை காரணமாகவோ அல்லது இங்கே உள்ள உணவு நிலைமைகளின் காரணமாகவோ என்னவோ, சரியாக பால் கறப்பது இல்லை. ஆகவே வெளிநாடுகளில் இருக்கும் சீதோஷ்ண நிலை போன்று தமிழ் நாட்டிலும் அத்தகைய மாடுகளுக்கு ஏ.சி. மாதிரி பண்ணைகளை அமைக்க அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1985 மார்ச் 16

அடிப்படையில் பழையேஸ்வரம் என்னும் இடத்தில், இடம் பார்வையிடப்பட்டு, சர்வே செய்யப்பட்டதாக அறிகிறேன். எனவே அந்த இடத்தில் அமைக்கும் சாத்தியக்கூறுகளை ஏற்படுத்தி, அந்தப் பகுதியில் உள்ள மக்களுக்கு வேலை வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கக் கூடிய சூழ்நிலையை உருவாக்கித் தர முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** தலைவர் அவர்களே, அமைச்சருக்கு அந்த விவரங்களை எழுதினால் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) குறியிடப் பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. கவன ஈர்ப்பு.

### கைத்தறித் துணிகள் தேங்கிக் கிடப்பதால் நெசவாளர்களுக்கு ஏற்பட்டுள்ள இன்னல்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருவாளர்கள் செ. செம்மலை, குமரி அனந்தன், எஸ். என். இராமசாமி, மா. சின்னராசு, டாக்டர் தே. குமாரதாஸ், திரு. கு. சுப்பராயன், திரு. பொ. உத்திராபதி, திரு. இரா. தாமரைக்கனி ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

**திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகம் முழுவதும் பல கோடி ரூபாய்கள் மதிப்புள்ள கைத்தறித் துணிகள் தேங்கிக் கிடப்பதால் நெசவாளர்களுக்கு ஏற்பட்டுள்ள இன்னல் குறித்த", அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.



1985 மார்ச் 16]

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

### அறிக்கை.

தமிழ் நாட்டில் 1,568 நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் இயங்கி வருகின்றன. இந்த நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் தலைமைச் சங்கமாக தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம். "கோ-ஆப்டெக்ஸ்" தாய் சங்கமாக இயங்கி வருகிறது. கோ-ஆப்டெக்ஸ், பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் உற்பத்தியாகும் கைத்தறித் துணிகளில் பொதுவாக 50 சதவிகிதம் வரை கொள்முதல் செய்து நாடெங்கிலுமுள்ள அதன் 630 கிளை விற்பனை நிலையங்களின் மூலமாக விற்பனை செய்து வருகின்றது. இது தவிர, பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் தங்களது கிளை விற்பனை நிலையங்கள் இருப்பதின் மூலமாகவும், கேட்பு முகவர் (Canvassing Agent) விற்பனை முகவர் போன்றோர்களை நியமித்து அதன் மூலமும் மொத்த விற்பனை மூலமாகவும் விற்பனை செய்து வருகின்றன.

பொதுவாக தீபாவளி, பொங்கல் போன்ற பண்டிகைகளுக்கு பின்பு உள்ள காலம் கைத்தறித் துணி விற்பனையில் ஒரு மந்த காலம் என்பதால், பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கங்களிலும், கோ-ஆப்-டெக்ஸிலும் கணிசமான அளவுக்கு சரக்கு இருப்பு உள்ளது. சரக்கு இருப்பின் காரணமாக கோ-ஆப்டெக்ஸ் வழக்கமாக செய்யும் அளவிற்கு கொள்முதல் செய்ய இயலவில்லை. எனவே தற்பொழுது பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் சுமார் ரூ. 40 கோடி அளவிற்கு துணி இருப்பு உள்ளது. இத்துணித் தேக்கத்தை குறைப்பதற்கென, கோ-ஆப்டெக்ஸ் உடனடியாக ரூ. 5 கோடி மதிப்புள்ள கைத்தறித் துணிகளை பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கங்களிலிருந்து கொள்முதல் செய்ய திட்டம் தீட்டி உடனடியாக நடவடிக்கைகள் எடுத்து வருகிறது. மேலும், வருகின்ற ஏப்ரல் திங்களில் நடைபெற இருக்கும் 'அகில இந்திய கைத்தறி இருவார விழாவில்' அரசு அளிக்கும் தள்ளுபடி சலுகையைப் பயன்படுத்தி, கோ-ஆப்டெக்சும், பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கங்களும், தங்கள் சரக்குகளை கணிசமாக விற்பனை செய்யும் வாய்ப்பு

டுள்ளது. அகில இந்திய கைத்தறி இருவார விழா விற்பனையை உத்தேசித்தும், கோ-ஆப்டெக்ஸ் சிறப்புக் கொள்முதல் செய்ய இருக்கிறது. அரசு சமீபத்தில் அறிவித்துள்ள பள்ளி குழந்தைகளுக்கு சீருடை வழங்கும் திட்டத்தை நிறைவேற்ற கோ-ஆப்டெக்ஸ் கல்வித் துறை இயக்குநருடன் தொடர்பு கொண்டு அச்சீருடை வழங்குவதற்கு ஏற்ற கைத்தறித் துணிகளை விற்பனை செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதன் மூலமும் கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் தேங்கி யுள்ள சரக்கு கணிசமான அளவுக்கு குறையுமென எதிர்பார்க்கப் படுகிறது. கோ-ஆப்டெக்ஸ் தற்போது ரகத்திற்கு தகுந்த மாதிரி 20 சதவீதம் முதல் 30 சதவீதம் வரை கழிவு விற்பனையை (Clearance Sales) 9—3—1985-லிருந்து நடத்தி வருகிறது. மேலும் கோ-ஆப்டெக்ஸ் இம்மாதக் கடைசியில் கோ-ஆப்டெக்ஸ் துணிகளுக்கு ஒரு வார காலத்திற்கு அரசு 'ரிபேட்' வழங்கவிருக்கிறது. இதனால் கோ-ஆப்டெக்ஸ் தன் இருப்பில் உள்ள துணிகளை பெருமளவுக்கு குறைக்கும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. இதனால் பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் உள்ள சரக்குகளை மேலும் கொள்முதல் செய்ய வாய்ப்புள்ளது.

பிரதம சங்கங்களுக்கும் வெளிச் சந்தையில் விற்பதற்கு தீவிர நடவடிக்கைகள் எடுக்க அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. இவை தவிர, பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் விற்பனை முகவர்கள், விற்பனை நிலையங்கள் ஏற்படுத்தி மற்ற மாநிலங் களில் ஆர்டர்களை பெறவும் சங்கங்களுக்கு அறிவுரை அளிக்கப் பட்டுள்ளது. மேற்கூறிய நடவடிக்கைகளினால் தற்போதுள்ள துணித் தேக்கம் ஓரளவுக்கு குறைக்கப்பட்டு நெசவாளர்களுக்கு தொடர்ந்து தொழில் கொடுப்பதில் எந்தவித நெருக்கடியும் ஏற்படாது.

(முற்பகல் 9-10)

* திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அவைக்கு அளித்துள்ள அறிக்கை திருப்தி அளிப்பதாக இருந்தாலும் அதிலே ஏற்றுமதி பற்றி விவரக் குறிப்பு ஒன்றும் இல்லை. பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள், கோ-ஆப்டெக்ஸ் நிறுவனங்கள்





ஆகிய நிறுவனங்களிலே தேங்கியிருக்கிற துணிகளை உள்நாட்டிலேயே விற்பனை செய்கிற சாத்தியக்கூறுகள் அதிகமாக இல்லை என்ற நிலைமையில், தேங்கிக் கிடக்கிற அந்த கைத்தறி துணிகளை விற்பதற்காக ஏற்றுமதி செய்வதற்கு ஏதேனும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா என்ற விவரத்தையும் அப்படி இல்லை என்றால், இனியாவது ஏற்றுமதி செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா என்ற விவரத்தையும், அத்தோடு ஏற்றுமதிக்கு தேவையான துணிகளை தயார் செய்வதற்கு நெசவாளர்கள் ஊக்குவிக்கப்படுவார்களா என்ற விவரத்தையும், அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு பிரதம கூட்டுறவு நெசவாளர் சங்கங்களில் 40 கோடியே 47 லட்சம் ரூபாய்க்கு துணிகள் தேங்கிக் கிடக்கின்றன. கோ-ஆப்டெக்ஸிலே சுமார் 60 கோடி ரூபாய்க்கு கைத்தறி துணிகள் தேங்கிக் கிடக்கின்றன. இதுவரையில் சுமார் 40 கோடி ரூபாய் மதிப்புள்ள துணிகளை ஏற்றுமதி செய்திருக்கிறோம். மேலும் ஏற்றுமதி செய்ய கோ-ஆப்டெக்ஸ் நிச்சயமாக முயலும்.

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, கைத்தறித் துணித் தேக்கத்தினுடைய முக்கியக் காரணம் கைத்தறிக்கு என்று ஒதுக்கப்படுகிற துணிகள் கூட விசைத்தறியிலே நெய்யப்பட்டு கைத்தறி என்று முத்திரை குத்தி வெளிநாடுகளுக்கும் பிற இடங்களுக்கும் அனுப்பப்படுவது தான் என்று சொல்லப்படுகிறது. விசைத் தறியிலே ஒரு ரூபாய்க்கு நெய்யப்படுகிற ஒன்று, கைத்தறியிலே 4 ரூபாய்க்கு நெய்ய வேண்டிய நிலை இருக்கிறது. இந்தச் சூழ்நிலையில் கைத்தறிகளில் நெய்கிற துணிகளின் விலை அதிகமாகவும் விசைத் தறிகளில் நெய்கிற துணிகளின் விலை குறைவாகவும் இருக்கிற காரணத்தினால், விசைத் தறிகளில் நெய்த துணிகளையெல்லாம் கைத்தறி என்று சொல்லி விற்று விடுகிற காரணத்தினாலேதான் கைத்தறி துணிகளில் தேக்கம் ஏற்படுகிறது என்று சொல்லுகிறார்களே, இதைப் போக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது?

[1985 மார்ச் 16

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதும் ஒரு காரணம். ஆனால் சென்னை உயர்நீதி மன்றத்தில் பவர்லூம் சார்பில் ஒரு வழக்குத் தொடரப் பட்டுள்ளது. கைத்தறிக்கு ஒதுக்கப்பட்ட துணிகளை விசைத் தறிகள் செய்யக் கூடாது என்ற அரசு உத்திரவினை இதுவரையில் தடை செய்திருந்தார்கள். அரசு அதை எதிர்த்து வழக்கு நடத்தி இப்பொழுதுதான் முடிந்திருக்கிறது. விசைத் தறிகள் உற்பத்தி செய்த அந்தத் துணிகளை கைத்தறிகள் என்று சொல்லி மார்க்கெட்டில் விற்பது அரசின் கவனத்திற்கு வந்திருக்கிறது. இதுமாதிரி இனி வாராமல் அரசு கடுமையான நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் தே. குமாரதாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கைத்தறி நெசவாளர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுப்பதாக ஆளுநர் உரையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இப்பொழுது இருக்கிற நிலைமையைப் பார்க்கிறபோது வீடுகளைக் கட்டி அதில் அவர்கள் குடியேறுவதற்கு முன்பாகவே எல்லா நெசவாளர்களும் காலமாகிவிடுவார்கள் போன்ற நிலைமையில் இருக்கிறார்கள். காரணம் என்னவென்றால் ஒவ்வொரு நெசவாளக் கூட்டுறவுச் சங்கங்களிலேயும் 1983 ஆம் ஆண்டிலேயிருந்து பெறப்பட்ட துணிகளுக்கான அந்த தள்ளுபடி சலுகை இன்னும் வழங்கப்படாமல் பல கோடி ரூபாய் தேங்கி யிருக்கிறது. இதன் மூலமாக நெசவாளப் பெருமக்களுக்கு தொழில் செய்வதற்கான வாய்ப்புகள் இல்லாமல் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

அது மட்டும் அல்லாமல் பல கோடி ரூபாய் மதிப்புள்ள துணிகள் பிரதம கூட்டுறவு சங்கங்களில் தேங்கிக் கிடக்கிறது என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அரசுக்கே இவ்வளவு சங்கடமான நிலை என்றால் நெசவாளப் பெருமக்களுக்கு அவர்கள் வயிறு கூட நிறையாத ஒரு சூழ்நிலையில் மிகவும் சிரமப்பட்டுக் கொண்டிருப்பதை அரசு அறியும். ஆகவே, அவர்களிடம் தேங்கியிருக்கிற அந்த கைத்தறி துணிகளை அரசே பெற்று, அவர்களுக்கு வேண்டிய சலுகைகளை வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்வதோடு இப்பொழுது மீண்டும் விசைத்தறி மூலமாக கைத்தறி



1985 மார்ச் 16] [டாக்டர் தே. குமாரதாஸ்]

...ணிகளுக்கு ... (பணியிடக்கப் ... பெற்றது) ... ஆய்த்து ...ற்பட்டுள்ளது. இவைகள் நிவர்த்தி செய்யப்படுமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வியாகக் கேட்க வேண்டும்.

டாக்டர் தே. குமாரதாஸ்: ஆகவே, 1983-84, 1984-85 ஆண்டு களுக்கான அந்த தள்ளுபடி மானியத் தொகையை அரசு உடனே வழங்க முன்வருமா என்று கேட்க ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெசவாளர்கள், இந்த நாட்டில் விவசாய தொழிலாளர்களுக்கு அடுத்தபடியாக இருக்கின்ற தொழிலாளர்கள். அவர்கள் மாளக் கூடாது, சிரஞ்சீவியாக வாழ வேண்டும் என்று தமிழக முதல்வர் அவர்கள் இதுவரையில தொழில் துறையில் இருந்த கைத்தறி இலாக்காவை தனியாக பிரித்து அதற்கென்று ஒரு செயலாளரை நியமிக்க ஆளுநர் உரையில் தெரிவித்திருக்கிறார்கள். அவர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் சிறப்புத் திட்டத்தையும் அறிவித்து இருக்கிறார்கள். நிச்சயமாக நெசவாளர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்க அரசு தீவிர நடவடிக்கை எடுக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆ. சுப்பராயன்: பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே அமைச்சரால் முன்வைக்கப்பட்டிருக்கின்ற இந்த விவர அறிக்கை பிரச்சனையை தட்டிக் கழிப்பதாக இருக்கிறதே தவிர தீர்வு காண்பதாக இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். நடைமுறையில் தேங்கிக் கிடக்கும் கைத்தறித் துணிகளை, தட்டிக் கழிக்காமல் முழுவதுமாக கொள்முதல் செய்ய அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: பேரவைத் தலைவர் அவர்களே, தட்டிக் கழிப்பது நமது கொள்கை அல்ல. எந்தப் பிரச்சனையும் நேரடியாக சந்தித்து பரிகாரம் காண்பதுதான் இந்த அரசினுடைய முடிவாகும். (கரவொலி) உடனடியாக 5 கோடி ரூபாய் மதிப்புள்ள கைத்தறித் துணிகளை எடுக்கவும், அடுத்த மாதம் 25-ந்தேதி அகில இந்திய கைத்தறி கண்காட்சிகள் அமைப்பது மூலம், மாவட்டந்தோறும் கண்காட்சிகள் வைப்பதன் மூலம் மேலும் தேங்கிக் கிடக்கின்ற கைத்தறித் துணிகளை இந்த அரசு கொள்முதல் செய்து அவர்களுக்கு நிவாரணம் அளிக்கும். (குறுக்கீடுகள்)

[1985 மார்ச் 16

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: கேள்வி நேரம் முன்னமேயே முடிந்து விட்டது. இப்பொழுது கவன ஈர்ப்பு தீர்மானத்தை முடித்து, சட்ட முன்வடிவை எடுக்க இருக்கிறோம். இந்த நேரத்தில் பாயிண்ட் ஆப் ஆர்டர் கிடையாது. ஏதாவது பிரச்சனைகள் இருந்தால் தான் பாயிண்ட் ஆப் ஆர்டர். (குறுக்கீடுகள்)

கவன ஈர்ப்பு தீர்மானத்தில் "ஒரு கட்சிக்கு ஒரு உறுப்பினர் வீதம் 5 உறுப்பினர்களுக்கு மேலாக கேட்கக் கூடாது" என்று விதியில் திருத்தப்பட்டிருக்கிறது. கடந்த செவ்வாய் கிழமையிலிருந்து அது அமலில் இருக்கிறது. (குறுக்கீடுகள்) திருத்தப்பட்ட பேரவை விதிப் புத்தகங்கள் உறுப்பினர்களுக்கு அனுப்பப்பட்டு இருக்கிறது. அதனால் இப்போது பாயிண்ட் ஆப் ஆர்டர் கிடையாது.

### 3. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

### (அ) தமிழ் பல்கலைக் கழக (திருத்த) சட்ட முன்வடிவு 1985.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:—

"1985 ஆம் ஆண்டு தமிழ் பல்கலைக் கழக (திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.



1985 மார்ச் 16]

### (ஆ) கடன் நிவாரண (திருத்த) சட்ட முன்வடிவு, 1985.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:—

"1985 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடன் நிவாரண (திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

**திரு. ப. பொன்னுரங்கம்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்தை நான் எதிர்க்க வேண்டிய துர்பாக்கிய நிலைக்கு ஆளாகியிருக்கிறேன். சட்டம் நல்ல சட்டம் தான். ஆனால் கையாண்டு இருக்கிற முறை இருக்கிறதே அதுதான் முரண்பாடானது. ஏழைகளுக்கு பயன்படக்கூடிய இந்தச் சட்டத்தை ஏழைகளே.... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: சட்டம் நல்ல சட்டம் என்று சொல்லிவிட்டீர்கள். எனவே நீங்கள் எதிர்க்கவில்லை.

(முற்பகல் 9-20)

**திரு. ப. பொன்னுரங்கம்**: நான் அப்போஸ் பண்ணுகிறேன். அந்த மூலச் சட்டத்தைத் தான் நல்ல சட்டம் என்று சொல்கிறேன். இந்த சட்டத்தை அல்ல. மூலச் சட்டம் நல்ல சட்டம். இந்தச் சட்டம் ஆகஸ்ட் 1984 வரை முடிகிறது, திருத்தப்பட்ட சட்டம். கவர்னருடைய ஆர்டினன்ஸ் எப்போது வருகிறது என்றால், 30 ஜனவரி 1985 அன்று தான் வருகிறது. எனவே ஆகஸ்ட் 24-லிருந்து 30—1—1985 வரைக்கும் எந்தவித சட்டமும் இல்லை.

உதாரணமாக இதனால் பயனடையக் கூடிய ஏழைகள் இந்தச் சட்டத்தைப் பற்றியே கிராமங்களில் தெரியாது இருக்கிறார்கள். அதனாலேதான் நாம் அடிக்கடி எக்ஸ்டெண்ட் பண்ணுகிறோம் என்று சொல்கிறோம். ஆனால் தெரிந்தவர்களே, 24 ஆகஸ்ட் மாதம் 1984 அன்று சென்று தாசில்தாரிடம் அப்ளிகேஷன் கொடுத்தால் வாங்குகிறார்களா என்று நான் கேட்கிறேன். ஆர்டினன்ஸ் 30—1—1985 அன்று தான் வருகிறது. இந்த ஆர்டினன்ஸ் வருவதற்கு இடையேயுள்ள காலக் கட்டத்தில் எந்த ஒருவராவது இதனால் பலன் பெற வேண்டும் என்று, இந்தச் சட்டத்தைத் தெரிந்து நடப்போரே தாசில்தாரிடம் சென்று, ஐயா, எனக்கு நிவாரணம் வேண்டும் என்று தாசில்தாரிடம்

[திரு. ப. பொன்னுரங்கம்] [1985 மார்ச் 16

அப்ளிகேஷன் கொடுத்தால், தாசில்தாருக்கு வாங்கக்கூடிய அதிகாரம் இருக்கிறதா? நான் அதைக் கேட்க விரும்புகிறேன். ஆக தெரிந்தவர்களும் பயன் பெற முடியாது, தெரியாதவர்களும் பயன் பெற முடியாது. எப்போதிலிருந்து? 24—8—1984-லிருந்து, 29—1—1985 வரை. ஆக இவ்வளவு காலம் கடந்து, 24—8—1984-லிருந்து நிறுத்தப்பட்டு 30 ஜனவரி 1985 அன்று தான் கொண்டுவரப்பட்டிருக்கிறது. இதை 24 ஆகஸ்டிலிருந்து ஏன் கொண்டுவரக் கூடாது? யார், எது தடுத்தது? இடையிலே என்ன நடந்தது? ஆகவே நல்ல சட்டம் என்று சொல்லிக் கொண்டு பல்வேறு தவறுகளைச் செய்வதற்கு ஏலத்தில் விடுகிறார்கள். 24—8—1984-லிருந்து 29—1—1985 வரையில் ஏலத்தில் விடலாம். ஆனால் நீங்கள் சொல்லக் கூடும், ரெட்ராஸ்பெக்டிவ் எபெக்ட் என்று,

ஒரு நகையை ரூ. 2,000-க்கு விற்று விட்டவன் ரூ. 800-க்கு தான் விற்றேன். வாங்கிக் கொள் என்று சொல்லி அடமானம் வைத்தவரிடம் ரூ. 800 கொடுத்தால், அவன் ஒதுக்கொள்ளத் தான் வேண்டும். ஆகவே இந்த நல்ல மூலச் சட்டத்தை இப்படி காலம் கடந்த ஆர்டினன்ஸ் போட்ட காரணத்தால், இதனால் பயன் பெறுபவர்கள் ஏழைகள் அல்ல. மணி லெண்டர்ஸ், பான் புரோக்கர்ஸ். இவர்கள் தானே தவிர, மற்றவர்கள் அல்ல. ஆனால் நான்-இன்ஸ்டிட்யூஷன்ஸ் என்று சொல்கிறீர்கள். (குறுக்கீடு)

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு உறுப்பினர் சட்டமுன்வடிவை சரியாகப் படித்து எதிர்க்க வேண்டும். இந்தச் சட்ட முன்வடிவு பான்-புரோக்கர்ஸ்-க்காக அல்ல. பிற நிறுவனங்கள் சம்பந்தப்படாத மற்றவர்கள் தருகிற கடன்களைப் பற்றியது என்று நான் கருதுகிறேன், சரியாகப் படிக்க வேண்டும்.

திரு. ப. பொன்னுரங்கம்: நான் படித்து விட்டுத்தான் சொல்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அடகு கொடுப்போர்கள், பணம் கடன் கொடுப்போர்கள், நிறுவனங்கள் என்கிற வகையிலே இல்லாத கடன் வழங்கும் பிற ஆதாரத்தினர் ஆகியோரின் கடும் வட்டி வழக்கங்களிலிருந்து தமிழகம் . . . . . . . . (குறுக்கீடு)



1985 மார்ச் 16]

திரு. ப. பொன்னுரங்கம்: தெரிந்துதான் பேசுகிறேன். ஆகையால் இந்தச் சட்டம் மூலச் சட்டத்திற்கு முரண்பாடான சட்டம், ஆர்டினன்ஸ், எந்தக் குறிக்கோளுக்காக ஏழைகள் பயன்பெற வேண்டுமென்பதற்காக என்று மூலச் சட்டம் இயற்றப்பட்டதோ, அந்த மூலச்சட்டத்தை மூலதனமாக வைத்துக் கொண்டு, இதுபோன்ற காரியங்களை நடத்திவிட்டு, இப்படி சட்டம் கொண்டுவருவது உண்மையிலேயே வருந்தத்தக்கது, அதற்காக நான் எதிர்க்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: இது ஏழைகளுக்காகக் கொண்டு வரப்பட்டிருக்கின்ற சட்டம், ஏழைகளுக்காக ஒரு நிவாரணம் தருவதற்காக, கால நீட்டிப்புத் தருவதற்காக கொண்டுவரப்பட்டிருக்கின்ற சட்டம் இதிலே எதிர்ப்பதற்கு எதுவும் இல்லை. ஆகவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இடையிலே ஏன் கொண்டுவரப்படவில்லை என்பதற்காகத்தான் எதிர்த்திருக்கிறார்கள். ஆக கொண்டுவர வேண்டும் என்ற நல்ல எண்ணம் இந்த அரசுக்கு இருக்கிறது என்பதை இந்த சட்ட முன்வடிவின் மூலம் அவர் தெரிந்து கொள்வார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

"1985-ஆம் ஆண்டு தமிழ்நாடு கடன் நிவாரண (திருத்த) சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

V. ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம்—விவாதம்
(தொடர்ச்சி)

*திரு க. அன்பழகன்: மாண்புமிகு பேரவையின் தலைவர் அவர்களே, ஆளுநர் உரை இந்த அவையிலே வழங்கப்பெற்று, அந்த உரை மீது புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பெற்ற பல்வேறு கட்சிகளைச் சார்ந்த உறுப்பினர்கள் [illegible] நிலையிலே,

நிலையில் முதல் அமைச்சர் அவர்கள் இந்த அளவுக்கு உடல் நலம்
பெற்று வந்திருப்பதற்காக என்னுடைய மகிழ்ச்சியைத்
தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அரசியலில் எத்தனையோ
எதிர்ப்புக்களை, மாறுபாடுகளைச் சந்திக்கின்ற வாழ்க்கையைப்
பெற்றவன் நான் எனவே மாண்புமிகு முதல் அமைச்சர்
அவர்களுடைய கருத்தோடு கொள்கையோடு மாறுபாடு எனக்கு
இருக்கிறது என்பதன் காரணமாக, ஒரு முதல் அமைச்சருடைய
உடல்நலக் குறைவுதான் அதற்குப் பரிகாரம் என்று கருதுகிறவன்
அல்ல நான். அவர்கள் இன்னும் பல்லாண்டு இன்னும் சிறப்போடு
வாழ்கிற வாழ்வைப் பெறுவதை நான் வரவேற்கக் கூடியவன்.
அவர்கள் இன்னும் நூறாண்டுகள் வாழ்ந்தாலும் என்னுடைய
எண்ணங்கள் என்னுடைய கருத்துக்கள் எனக்குச் சொந்தமாக
இருக்குமே தவிர என்னுடைய கருத்துக்களை எனக்குச்
சொந்தமாக இல்லாத கருத்துக்களாக மாற்றிக் கொள்ளக்கூடிய
நிலைமைக்கு என்னுடைய வாழ்நாளில் நான் ஆளாகமாட்டேன்
என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஏனென்றால், ஜனநாயகமே கருத்துக்களைப் பரிமாறிக்
கொள்கிற ஒரு வாய்ப்பாக அமைந்த ஒன்று. கருத்துக்கள் என்பது
மனித வாழ்க்கையை மேம்படுத்துவதற்கு இன்றியமையாத
ஒன்று. உலகம் தோன்றிய காலம் முதல் மனிதனின் முன்னேற்றம்
கருத்து வேறுபாடுகளுக்கு இடையேதான் உருவாகி, மனிதன்
முன்னேறியிருக்கிறானே தவிர ஒரேவிதமான கருத்து என்றால்
உலகத்தில் மனிதன் முன்னேறுவதற்கு அது துணை செய்வதாக
இருக்க முடியாது என்பதை வரலாறு அறிந்த பெருமக்கள்
நிச்சயமாக உணர்வார்கள். ஒரே கட்சியில் கூட, ஆளும்
கட்சியிலே கூட கருத்து வேறுபாடுகள் ஏராளம் உண்டு என்பதற்கு
நான் சான்றுகள் தந்து விளக்கத் தேவை இல்லை. என் முன்னால்
இருக்கிற என்னுடைய அருமை நண்பர்களான அமைச்சர்களே
அதற்குச் சான்று. எனவே கருத்து வேறுபாடுகள் வரவேற்கப்
படுவதன் மூலமாக, அவரவர் கருத்துக்களை எடுத்துச்
சொல்வதன் மூலமாக மேலும் தெளிவு ஏற்படுவதற்குப்
பயன்படும் என்ற நோக்கத்தோடு இந்த உரை மீது என்னுடைய
கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

ஆளுநர் உரை மூலமாக நாடு எப்போதும் ஏதேனும் புதிய
திட்டங்களை புதிய செய்திகளை எதிர்பார்ப்பது வழக்கம்.
அரசாங்கத்தினுடைய கருத்தாக இருந்தாலும்கூட, அந்த உரை

என்னுடைய கருத்தை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாகத் தெரிவிக்கிற வாய்ப்பைப் பெற்றிருப்பதற்காக நன்றி தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

ஆளுநர் உரை என்பது ஒரு மரபாக, சடங்காக நிகழ்ந்து வருகிற ஒன்றாக ஆகியிருக்கிறது. அதற்கு ஆளும் கட்சியின் சார்பில் நன்றி தெரிவிப்பது என்பது அவர்களுடைய கடமை. ஏனென்றால் ஆளும் கட்சியின் கருத்தைத்தான், ஆளும் கட்சியின் எண்ணத்தைத்தான் ஆளுநர் உரைக்கிறார் என்ற முறையில் தங்கள் கருத்தையே ஆளுநர் அவர்கள் சொல்கிறபோது அதை வரவேற்க நன்றி தெரிவிக்க அவர்கள் கடமைப்பட்டவர்கள். எதிர்க்கட்சிகளினுடைய நிலையில் அதைப் பற்றி அவர்கள் கருதக்கூடிய குறைகளை, மாறுபாடுகளை தெரிவிக்க வேண்டிய கடமையுடையவர்கள். எனவே எதிர்கட்சியில் உள்ளவர்கள் மறுத்துப் பேசுகிறபோது அல்லது குறைகளை எடுத்துச் சொல்கிறபோது அதற்காக ஆளும் கட்சியில் உள்ளவர்கள் வருத்தப்படுவதில் பொருள் கிடையாது. ஏனென்றால் ஆளும் கட்சியின் கருத்துக்களைத்தான், அமைச்சரவையின் கருத்துக்களைத்தான் ஆளுநர் கூறுகிறார் என்று சொல்லிவிடுகிறபோது, ஆளுநர் பெயரால் வருகிற உரையில் முதல் அமைச்சர் அவர்களைப் பாராட்டி உரைக்கிறபோதுகூட உள்ளபடியே என்னைப் போன்றவர்களுக்கு அது வருத்தத்தை அளிக்கிற காரியம் அல்ல என்று சொன்னாலும்கூட முதல் அமைச்சர் அவர்களை முதல் அமைச்சர் அவர்களே பாராட்டுகிற கருத்தாக கவர்னர் படிப்பதாக கருதப்படுவதற்கு இடமிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறன்.

இருந்தாலும் அவையினுடைய கருத்து என்ற முறையில், நம்முடைய மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் மிகவும் கடுமையான உடல்நலப் பாதிப்புக்கு ஆளானார் என்று ஆளும் கட்சி சார்பில் சொல்லியபோது அவர்கள் இங்கே வந்த பின்னரும் திரும்பவும் பொறுப்பை ஏற்றுக்கொள்கிறபோது முதல் அமைச்சராக இருந்து எந்தக் கடமையையும் நிறைவேற்ற முடியாத ஒரு நிலை இருக்கக்கூடும் என்று கூறினார். அதன் காரணமாக முதல் அமைச்சர் அவர்கள் இலாகாக்கள் இல்லாத, பொறுப்புகள் இல்லாத, முதல் அமைச்சராக [illegible] மட்டும் விளங்குவார் என்ற ஒரு கருத்து இங்கே ஆளும் கட்சியினரால் சொல்லப்பட்டிருக்கிறது. எனவே அந்த





நிலையில் முதல் அமைச்சர் அவர்கள் இந்த அளவுக்கு உடல் நலம் பெற்று வந்திருப்பதற்காக என்னுடைய மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அரசியலில் எத்தனையோ எதிர்ப்புக்களை, மாறுபாடுகளைச் சந்திக்கின்ற வாழ்க்கையைப் பெற்றவன் நான் எனவே மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களுடைய கருத்தோடு கொள்கையோடு மாறுபாடு எனக்கு இருக்கிறது என்பதன் காரணமாக, ஒரு முதல் அமைச்சருடைய உடல்நலக் குறைவுதான் அதற்குப் பரிகாரம் என்று கருதுகிறவன் அல்ல நான். அவர்கள் இன்னும் பல்லாண்டு இன்னும் சிறப்போடு வாழ்கிற வாழ்வைப் பெறுவதை நான் வரவேற்கக் கூடியவன். அவர்கள் இன்னும் நூறாண்டுகள் வாழ்ந்தாலும் என்னுடைய எண்ணங்கள் என்னுடைய கருத்துக்கள் எனக்குச் சொந்தமாக இருக்குமே தவிர என்னுடைய கருத்துக்களை எனக்குச் சொந்தமாக இல்லாத கருத்துக்களாக மாற்றிக் கொள்ளக்கூடிய நிலைமைக்கு என்னுடைய வாழ்நாளில் நான் ஆளாகமாட்டேன் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஏனென்றால், ஜனநாயகமே கருத்துக்களைப் பரிமாறிக் கொள்கிற ஒரு வாய்ப்பாக அமைந்த ஒன்று. கருத்துக்கள் என்பது மனித வாழ்க்கையை மேம்படுத்துவதற்கு இன்றியமையாத ஒன்று. உலகம் தோன்றிய காலம் முதல் மனிதனின் முன்னேற்றம் கருத்து வேறுபாடுகளுக்கு இடையேதான் உருவாகி, மனிதன் முன்னேறியிருக்கிறானே தவிர ஒரேவிதமான கருத்து என்றால் உலகத்தில் மனிதன் முன்னேறுவதற்கு அது துணை செய்வதாக இருக்க முடியாது என்பதை வரலாறு அறிந்த பெருமக்கள் நிச்சயமாக உணர்வார்கள். ஒரே கட்சியில் கூட, ஆளும் கட்சியிலே கூட கருத்து வேறுபாடுகள் ஏராளம் உண்டு என்பதற்கு நான் சான்றுகள் தந்து விளக்கத் தேவை இல்லை. என் முன்னால் இருக்கிற என்னுடைய அருமை நண்பர்களான அமைச்சர்களே அதற்குச் சான்று. எனவே கருத்து வேறுபாடுகள் வரவேற்கப் படுவதன் மூலமாக, அவரவர் கருத்துக்களை எடுத்துச் சொல்வதன் மூலமாக மேலும் தெளிவு ஏற்படுவதற்குப் பயன்படும் என்ற நோக்கத்தோடு இந்த உரை மீது என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

ஆளுநர் உரை மூலமாக நாடு எப்போதும் ஏதேனும் புதிய திட்டங்களை புதிய செய்திகளை எதிர்பார்ப்பது வழக்கம். அரசாங்கத்தினுடைய கருத்தாக இருந்தாலும்கூட, அந்த உரை

மூலமாக ஏதேனும் புதுமைகள் ஏதேனும் புதிய திட்டங்கள், ஆண்டுக்கு ஒருமுறை பரிசீலிக்கப்பட்டு ஆய்வு செய்யப்பட்டு வெளியிடப்படும் என்று எதிர்பார்க்கப்படுவது மரபு. அந்த முறையில் இந்த ஆண்டு ஆளுநர் உரையை நான் படித்துப் பார்த்த போது, கடந்த ஆண்டு வெளியிடப்பட்ட அந்த உரையில் காணப்பட்ட செய்திகள்தான் திரும்பக் காணப்படுகின்றனவே தவிர புதிய செய்திகள், வரவேற்கப்பட வேண்டிய செய்திகள், எழுச்சியை ஊட்டுகிற செய்திகளாக எந்தச் செய்தியும் என்னுடைய அறிவுக்கு எட்டவில்லை என்பதை நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(முற்பகல் 9-30)

வேண்டுமானால், கடந்த ஆண்டு அறிக்கையையே, இந்த உரைக்குப் பதில், இந்த ஆண்டிற்கு விவாதத்திற்கு எடுத்துக் கொண்டால், ஒருவேளை இந்த விவாதம் அதிகப் பயனுள்ளதாக இருக்கும் என்று கருதக்கூடிய அளவுக்குத்தான் இருக்கிறது. ஒருவேளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கடந்த 4 மாத காலமாக உடல்நிலை குன்றியிருந்ததன் காரணமாக, அரசாங்கமே செயல்பாடு அற்று இருந்ததன் காரணமாக, இந்தச் சூழ்நிலை ஏற்பட்டிருக்கலாம் என்று சொல்லப்படுமானால், அந்தச் சூழ்நிலை இனியும் நீடிக்காது, இனியாவது இந்த அரசு ஏற்கெனவே அறிவித்த கடமைகளை நிறைவேற்றுவதிலே இன்னும் வேகமாக செயல்படும் என்று சொல்லப்படுமானால், அதனை ஏற்றுக்கொண்டு, திட்டங்களை முறையாக, செம்மையாக நடத்துவதற்கு வழிவகை காண முயற்சிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மேதகு ஆளுநர் அவர்கள் உரையிலே சொல்லியிருக்கிறார்கள். "ஏழை எளிய மக்களின் முன்னேற்றத்திற்கும், தாழ்த்தப்பட்டோரின் துயரங்களைத் துடைப்பதற்கும், வறுமையையும், வேலையின்மையையும் நீக்குவதற்கும், இந்த அரசு எடுத்துக்கொண்ட உறுதிமொழியைத் தொடர்ந்து நிறைவேற்றுவதற்கு பாடுபடும் என்பதை இந்த வாய்ப்பிலே நான் மீண்டும் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்" என்று. ஏற்கனவே சொன்னதை வலியுறுத்திக் கூற விரும்புகிறேன் என்பதுதான் அது. தொடர்ந்து அவர் சொன்னதைப்போல, வறுமையை ஒழிப்பதற்கு என்ன நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டு, நிறைவேற்றப்பட்டிருக்கின்றது, வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதற்கு என்ன





நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்பட்டு, எந்த அளவுக்கு நிறைவேற்றப்பட்டிருக்கின்றன? இன்னும் சொல்லப் போனால், மக்களுடைய வருமானத்தை உயர்த்துவதற்கு மாநில அரசு செய்யக்கூடிய எந்தெந்தப் பணிகள் இந்த நாட்டிலே நடைபெற்று இருக்கின்றன? பொதுமக்கள் தாங்களாகவே நிறைவேற்றக் கூடிய கடமைகளை செம்மையாக நிறைவேற்றுவதற்கு மின்சாரம் தங்கு தடையின்றிக் கிடைக்க உரிய கடமைகள் நிறைவேற்றப் பட்டதா? கிராமங்களில் பொருளாதார நிலை உயர்த்தப் பட்டதா? என்று இப்படிப்பட்ட நிலைமைகளை எண்ணிப் பார்க்க வேண்டும்.

இரண்டு லட்சம் வீடுகள் நலிந்த பிரிவினருக்கு கட்டிக் கொடுக்கப்படும் என்று ஏற்கனவே உறுதிமொழி கொடுக்கப் பட்டது. எனக்குக் கிடைத்த புள்ளிவிவரங்களின்படி, ஏறத்தாழ 1,10,000 வீடுகள் கட்டப்பட்டிருப்பதாக அறிகிறேனே தவிர, அதற்கு மேல் கட்டப்படவில்லை. எனவே, சொன்ன வாக்குறுதியைக் கூட நிறைவேற்றவில்லை என்பதுதான் ஆளுநர் அவர்கள் உறுதிமொழி கூறுவதன் மூலமாக, இங்கே தெரிவிக்கப் பட்டிருக்கிறது.

மற்றும் ஒன்று. தமிழ்நாடு திட்ட நிதி உதவி கோரி திரும்பத் திரும்ப மத்திய அரசாங்கத்திற்கு எழுதியிருப்பதாகவும், அப்படி எழுதியும், எட்டாவது நிதிக் குழு தகுந்த பரிகாரத்தைக் காண்பதாகத் தெரியவில்லை என்றும் கருத்து தெரிவிக்கப்பட்டு, இதற்காக மேலும் வலியுறுத்துகின்ற முறையில் இந்த அரசு செயல்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. மத்திய அரசாங்கத்திலும், மாநில அரசாங்கத்திலும் எந்தக் கட்சி ஆட்சியை நடத்துகின்ற நிலைமையிருந்தாலும், அவர்கள் ஒத்துழைக்கக் கடமைப்பட்டவர்கள். ஆனால், உரிமையை வலியுறுத்திப் போராடுவது இன்றியமையாத தேவை. மத்திய அரசுக்கு மாநில அரசு அரசியல் சட்டத்தின் அடிப்படையில் ஏறத்தாழ கட்டுப்படுத்தப்பட்ட, தனி உரிமைகளை, நிலைநாட்ட முடியாத, தனித்த செயல்பாடற்ற நிலை இருப்பதன் காரணமாகத்தான், பேரறிஞர் அண்ணா அவர்கள் மாநில சுயாட்சி என்ற கொள்கையை அவருடைய காலத்தில் மிக அழுத்தம் திருத்தமாக வலியுறுத்தி எடுத்துச் சொன்னார்கள். மாநில சுயாட்சி என்பது ஒரு இலட்சியம் என்று சொன்னாலும் கூட, இந்த சுயாட்சி இல்லாத ஒரு குறை மாநிலத்திற்கு இன்றைக்கு இருக்கிறது. மத்திய அரசு ஒரு கொடை வள்ளல் போலவும், ஒரு பிரபுவைப் போலவும், அள்ளிக்

கொடுக்கின்ற ஒரு மனிதரைப் போலவும், மாநில அரசுகள் கையேந்தி பிச்சை எடுக்கின்ற ஒரு நிலையில் இருப்பதுபோலவும் உள்ள ஒரு இக்கட்டான நிலையிருப்பது வருந்தத்தக்கது. ஜனநாயக மரபுப்படி சொல்லப்போனால், இந்தியாவிலே ஏற்றுக்கொள்ளப்பட்ட அடிப்படையான கொள்கை கூட்டாட்சி கூட்டரசு முறை. இந்த அடிப்படை பெடரேஷன் முறை. இந்த அடிப்படை தகர்ந்து போகின்ற நிலைமையிருப்பதைப் பல முறை இந்த அவையிலே பலரும் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். எனவே, அப்படிப்பட்ட நிலைமையில் மாநில அரசு ஆளுநர் உரையில் இந்தக் கருத்தைச் சொல்வது மட்டுமின்றி, அதற்காகப் போராட வேண்டுமென்று நான் இந்த அரசாங்கத்தை வலியுறுத்த மாட்டேன். ஆனால் இதை வலியுறுத்தி மக்களிடத்திலே எடுத்துச் சொல்லுகின்ற முறையில் ஆந்திரப் பிரதேச முதல்வர் என். டி. இராமாராவ் அவர்கள், மத்திய அரசு ஏதோ மாநில அரசுகளுக்கு தருமம் செய்வதுபோல் சொல்வதை நான் ஆதரிக்க மாட்டேன். நாங்கள் பிச்சைக்காரர்களும் அல்ல, அவர்கள் பிரபுக்களும் அல்ல என்ற கருத்தை மத்திய அரசைக் குறித்து எடுத்துச்சொன்னதைப் போல, எடுத்துச் சொல்லவேண்டிய மாபெரும் கடமை இந்த அரசுக்கு இருக்கிறது. ஆனால், இந்த அரசுக்கு எப்படியோ மத்திய அரசினிடத்தில் இரகசியமாகக் கேட்டு பெற்றுக்கொள்ளலாம் என்ற மனப்பான்மை இருப்பது வருந்தத்தக்கது என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

எட்டாவது நிதிக் குழுவுக்கு மாநில அரசு சார்பில் தெரிவித்த கருத்துக்களைப் பற்றி, விவாதிப்பதனால் அது தனி விவாதமாக ஆகும். இருந்தாலும், அந்தக் கருத்துக்களைப் பொது அளவில் வரவேற்கிறேன். ஆனால், வலியுறுத்துவதற்கு இந்த மாநில அரசு என்னென்ன காரியத்தில் ஈடுபட்டது? அதற்காக எப்போது குரல் எழுப்பியது? மாநில அரசு புறக்கணிக்கப்படுகிறது என்பதை எப்படி எடுத்துக் காட்டியது? இப்படிப் புறக்கணிக்கப்படுகிற நிலைமையை நாங்கள் ஏற்றுக்கொள்ள மாட்டோம் என்று அவ்வப்போது எடுத்துக் கூறத் தவறியது என்பது உள்ளபடியே வருந்தத்தக்கது ஆகும். நேஷனல் டெவலப்மெண்டு கவுன்சிலுக்கு செல்லுகிறபோது கூட அந்த அடிப்படையில் விவாதத்தை நடத்துவதற்கு நம்முடைய அமைச்சரவையைச் சேர்ந்தவர்கள் தயாராக இல்லை. மறைமுகமாக மத்திய அரசை ஆதரிப்பதை காட்டிக்கொள்ளுவதில்தான் முனைப்பாக இருந்தனர்.





மற்றொன்று தென்மாநில அரசுகள் மாநாட்டில் சில மாநில அரசுகள் கலந்து கொண்டு பொருளாதார அடிப்படையில் மாநில அரசுகளின் உரிமைகளை வலியுறுத்துவதற்காக பெங்களூரிலே நடந்த மாநாட்டில், கர்நாடக மாநில முதலமைச்சர் திரு. ராமகிருஷ்ண ஹெக்டே அவர்கள் அழைத்து நடைபெற்ற அந்த மாநாட்டில், தமிழக அரசின் சார்பில் முதலமைச்சர் அவர்களோ, வேறு அமைச்சரோ கலந்துகொள்ளவில்லை என்பது வருந்தத்தக்கது. 8-வது நிதிக் குழு மட்டும் அல்ல, 7-வது நிதிக் குழுவாக இருந்தாலும் சரி, 6-வது நிதிக் குழுவாக இருந்தாலும் சரி மத்திய அரசால் ஒரு நிதிக் குழு நியமிக்கப்பட்டு அந்த நிதிக் குழு மத்திய அரசினுடைய நோக்கங்களை நிறைவேற்றுகின்ற ஒரு கருவியாகத் தான் இருக்கிறதே தவிர, இந்தியாவிலே இருக்கிற பல கோடி மக்களுக்குப் பரவலாக நன்மைகள் விளையத்தக்க அளவுக்கு, மாநில அரசுகள் முழு அளவில் இயங்குகின்ற அடிப்படையில் நிதிக் குழு எதுவும் துணை நிற்கவில்லை. காட்கில் காலத்திலிருந்தே தொடர்ந்து இப்படிப்பட்ட நிலைமைதான் இருந்து வருகிறது. ஆகவே இவற்றை எல்லாம் விவாதிப்பதற்கு ஒரு அரங்கத்தை ஏற்படுத்திக் கொள்ளுவது தவறு இல்லை என்பதை நான் தெரிவிக்க விழைகிறேன். இந்த அரசு மத்திய அரசுடன் வாதாடுகிற இடத்திற்குச் சென்றாலே நம்மைத் தவறாக கருதுவார்கள் என்று கருதி ஒதுங்கிவிடுவது என்பதை நமக்கு நாமே ஏற்படுத்திக் கொண்டிருக்கிற பலவீனம் என்பதை நான் நினைவுப்படுத்த விரும்புகிறேன்.

அடுத்து, மாநில சுயாட்சி பற்றி. இந்த அவையிலே அவ்வப்போது மத்திய அரசிடத்திலே மாநில அரசு நிதி கேட்கிறபோது எல்லாம் வற்புறுத்தினீர்களா என்று, நேற்றையதினம் மாண்புமிகு உறுப்பினர் ஒருவர் கேள்வி எழுப்பினார். மாநில அரசு மத்திய அரசிடத்திலே நிதிதான் கேட்கிறதே தவிர மாநில சுயாட்சி கேட்டுவிடவில்லை. இந்த அரசாங்கமே அந்தக் கொள்கையைப் பார்த்து பயப்படுவதாகப் பலமுறை தெரிவித்துக்கொண்டிருக்கிறது. மாண்புமிகு அவை முன்னவர் நாவலர் அவர்கள், ஓரிரு முறை மாநில சுயாட்சி என்ற சொற்றொடரைப் பயன்படுத்தி

[திரு. க. அன்பழகன்] [1985 மார்ச் 16

யிருந்தாலும்கூட, இந்த அரசாங்கத்தினுடைய மொத்த கொள்கை மாநில சுயாட்சி என்ற சொல்லோடு தொடர்புபடுத்தி தம்முடைய வேண்டுகோளை வலியுறுத்தக் கூடாது என்பதும், மாநில மாநிலங்களுக்கு சில உரிமைகள் கேட்பது, மாநிலங்களுக்கு சில வசதிகள் கேட்பது, என்று தான் சொல்ல வேண்டும் என்பதுமான ஒரு மனப்பான்மையை, ஒரு கொள்கையை ஒரு போக்கை வைத்துக் கொண்டிருக்கிற காரணத்தால்தான் நீங்கள் நிதி கேட்கிற நேரத்திலே நாங்கள் வற்புறுத்துவதிலே அர்த்தமும் இல்லை, பொருளும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு வாய்ப்பு கிடைக்கிறபோது எல்லாம் மாநில சுயாட்சி பற்றிய....

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, ஒரு சிறு விளக்கம் மட்டும் கூற விரும்புகிறேன். மாண்புமிகு பேராசிரியர் அவர்கள் குறிப்பிடுகின்றபோது இந்த மாநிலத்திற்கு சேர வேண்டிய நிதி ஆதாரங்கள், பங்கு, முதலியவற்றை வற்புறுத்த வேண்டும் என்பதை வலியுறுத்தினார்கள். அதிலே இந்த அரசுக்கு முரண்பாடு இல்லை. பெங்களூரிலே நடைபெற்ற திரு. ஹெக்டே அவர்கள் கூட்டிய அந்த மாநாட்டிலே, முதல் அமைச்சர் அவர்களும் நானும் கலந்து கொண்டோம். ஆந்திர முதலமைச்சர் அவர்களும் கலந்து கொண்டார்கள். பாண்டிச்சேரி முதலமைச்சர் அவர்களும் கலந்து கொண்டார்கள். பெங்களூரிலே நடைபெற்ற அந்த மாநாட்டிலே நாங்கள் கலந்து கொண்டோம். விஜயவாடாவிலே நடைபெற்ற அந்த மாநாட்டிலே நாங்கள் கலந்துகொண்டோம். காஷ்மீரில் நடைபெற்ற மாநாட்டிலே கலந்துகொள்ள வேண்டும் என்று வந்த அழைப்பிலே சில கருத்து வேறுபாடுகள் இருந்த காரணமாக அந்தக் கடிதங்களை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த அவையிலே படித்துக் காண்பித்தார்கள். அங்கே கலந்து கொள்ளவில்லை என்று சொன்னார்களே தவிர அந்தக் கருத்தில் இருந்து வேறுபடவில்லை என்ற விளக்கத்தை மட்டும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. க. அன்பழகன்:** நான் சொல்லுவது தவறாக இருந்தால், அதற்காக வருத்தம் தெரிவிக்கக் கடமைப்பட்டவன். என்னுடைய நினைவு அது சரியாக இருக்கிறதோ, இல்லையோ பெங்களூரில் நடைபெற்ற மாநாட்டில் கலந்து கொள்ளவில்லை என்று நினைவு



1985 மார்ச் 16] [திரு. க. அன்பழகன்]

கலந்து கொண்டதாக நினைவு. எப்படியும் திரு. ஹெக்டே அவர்களும் மற்ற முதலமைச்சர்களும் கலந்து கொண்டு நிறைவேற்றியுள்ள தீர்மானங்கள் மாநில உரிமைகளை வலியுறுத்துகிற தீர்மானங்கள், மாநிலங்களுக்கு நிதி உரிமை கேட்பதை வலியுறுத்துகிற தீர்மானங்கள் அந்தத் தீர்மானங்களை வலியுறுத்துகிற அளவுக்கு, நீங்கள் ஆளுநர் உரையை பயன்படாது என்று கருதி, அதிலே வலியுறுத்தாவிட்டாலும் கூட, நடைமுறையில் வலியுறுத்துவதற்கு இந்த அரசு முன்வந்தால் தவிர மாநில நிதிப் பிரச்சினைகளைத் தீர்க்க முடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 9-40)

மற்றொன்று, மத்திய அரசும், மாநில அரசுகளும் நாட்டினுடைய நலனை நாடுவதிலே ஒரே குறிக்கோளோடு செயல்படுவது நியாயமே தவிர, மாநில அரசு, மத்திய அரசு இரண்டும் ஒரு பெரிய கலெக்டர் அலுவலகத்திற்கும் தாலுக்கா அலுவலகத்திற்கும் இடையே உள்ள தொடர்போடு இயங்குகின்ற ஒரு நிலைமை இருக்க வேண்டும் என்று கருதுவது, இந்திய அரசியலிலே முளைத்து இருக்கிற ஒரு தவறாகும். இந்தியாவினுடைய பிரதமராக அண்மையிலே தேர்ந்தெடுக்கப்பட்டு இருக்கிற திரு. ராஜீவ் காந்தி அவர்கள், தன்னுடைய கருத்து என்ற முறையில் தன்னுடைய கட்சிக்கு ஆதரவு கேட்பதோடு நிற்காமல் மத்தியிலும், மாநிலத்திலும் ஒரே கட்சி ஆட்சி இருப்பது இந்தியாவுக்கு நல்லது என்றும், ஒரே கட்சி ஆட்சி இருந்தால்தான் ஒத்துழைப்பு கிடைக்கும் என்றும், அப்போது மாநில மக்களுக்கு நன்மைகள் கிடைக்கும் என்றும் பேசியிருப்பது ஜனநாயகத்தினுடைய வேரை அறுக்கின்ற ஒரு காரியமாகும். ஒரே கட்சிதான் இந்தியாவிலே முழுவதும் ஆளுவதற்குத் தகுதி பெற்றது, உரிமை பெற்றது என்று சொல்லிவிட முடியாது. இன்னும் சொல்லப்போனால், ஜனநாயகத்திலே ஒரே கட்சிக் கருத்துதான் ஏற்கப்பட வேண்டும் என்பது ஜனநாயக இந்தியாவிலே ஏற்றுக்கொள்ளப்பட முடியாத ஒன்று என்பது மட்டுமல்ல, ஒரே கட்சியின் தலைவர்களும், ஒரே கருத்துக்குச் சொந்தக்காரர்களாக என்றைக்கும் இருந்தது

இல்லை என்பதையும் நினைவுபடுத்த விரும்புகிறேன். இந்தியா முழுவதும் ஒரே கட்சி ஆட்சி என்ற பல்லவி தொடங்கப்பட்டு இருப்பது ஏற்கனவே, இந்தியாவிலே ஜனாதிபதி ஆட்சி "Presidential form of Government" என்ற முறையை ஏற்படுத்தலாம் என்று கருதிய அந்த எண்ணத்தின் தொடர் விளைவாக உருவாகியிருக்கிறதோ என்றும் நான் சந்தேகப்படுகிறேன். "Presidential form of Government" என்றும் குடியரசுத் தலைவர் ஆட்சி என்பது இந்தியா போன்ற மத்திய அரசுக்கு கட்டுப்பட்டு மாநில அரசுகளைக் கொண்டிருக்கிற ஆட்சி முறை இருக்கிற ஒரு நாட்டில் முறையாகாது. ஒரே கட்சி ஆட்சி என்பதும் மாநில அரசுகளை அடிமைப்படுத்துகிற முறையாக வரமுடியுமே தவிர, மாநில சுயாட்சி கிடைத்தால் தவிர, இன்றைய ஜனநாயக முறையைக் கூட காப்பாற்றுவது எளிது அல்ல.

இந்த நிலையில் நாட்டினுடைய பிரதமர் என்ற பொறுப்பு ஏற்றுக் கொண்டு இருப்பவர் இந்தியாவில் உள்ள பல்வேறு கட்சிகளிடத்திலும் நடுநிலையோடு நடந்துகொள்ள வேண்டிய கடப்பாடு உடையவர் காஷ்மீர் தேசிய கட்சியாக இருந்தாலும் சரி, ஆந்திரத்திலே தெலுங்கு தேச கட்சியாக இருந்தாலும் சரி, தமிழ் நாட்டிலே ஆளுகின்ற கட்சியாக இருக்கிற அ.இ.அ.தி.மு. கழகமாக இருந்தாலும் சரி கேரளத்திலேயோ, வங்காளத்திலேயோ இருக்கக்கூடிய மார்க்சிஸ்டு கட்சியாக இருந்தாலும் சரி, சிக்கிமிலே அண்மையிலே ஆட்சிக்கு வந்திருக்கிற கட்சியாக இருந்தாலும் சரி, நடுநிலைமையோடு நடந்து கொள்ள வேண்டிய பொறுப்பு மாண்புமிகு பிரதமருக்கு உண்டு. அவரே ஒரே கட்சி ஆட்சி அனைத்து மாநிலங்களிலும் இந்தியாவிலே வர வேண்டும் என்று கூறுவது மாநில மக்களுடைய உரிமைகளிலே தலையிடுகின்ற ஒரு அநீதியாகும் என்ற கண்டனத்தை நான் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன். அவர் அவருடைய கட்சிக்கு ஆதரவு கேட்கலாம். அவர் கட்சி மக்களுக்குச் செய்யக்கூடிய நன்மைகளை எடுத்துச் சொல்லலாம், இன்னும் சொல்லப் போனால் பாராளுமன்றத்திலேகூட எதிர்க்கட்சி இருப்பதே நல்லதல்ல என்று கருதக்கூடிய மனப்பான்மையின் விளைவாக





உருவாகி இருக்கக்கூடும் என்று கருதுகிறேன். இது மறைமுகமாக ஜனநாயகத்தின் பெயரால் சர்வாதிகார சிந்தனை உருப்பெறுகிறதோ என்ற சந்தேகத்தை ஏற்படுத்துகிறது.

இந்தியாவில் உள்ள கல்வி முறையைப் பயனுடையதாக மாற்றியமைக்க வேண்டும் என்று பிரதமர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இந்தியாவில் உள்ள எல்லா மாநிலத்திலும் ஒரு மாநிலத்திற்கு ஒரு ஆண்டுக்கு 100 மத்திய பள்ளிக்கூடங்கள் உருவாக்கப்படும் என்ற முறையில் தொடர்ந்து ஒவ்வொரு மாநிலத்திலும் ஆண்டுக்கு 100 பள்ளிகள் விதம் ஐந்தாண்டுத் திட்டத்தில் 500 மத்திய பள்ளிகளை உருவாக்க இருப்பதாகவும், அதற்குப் பின்னர் அவை மற்ற பள்ளிகளுக்கு எல்லாம் வழிகாட்டும் பள்ளிகளாக விளங்கும் எனவும், அதற்கு மத்திய கல்வி ஆராய்ச்சி நிறுவனத்திற்குத் தலைவராக இருக்கும் மல்கோத்ரா என்பவர் திட்டமிட்டிருப்பதாகவும், அறிவித்த செய்தி வெளியிடப்பட்டு இருக்கிறது. அப்படிப்பட்ட ஒரு நிலைமை இந்த நாட்டிலே வருகிறபோது ஏற்கனவே கல்வி, மாநிலங்களுடைய உரிமைக்குரிய ஒரு பொருளாக இருந்தது என்பதையும் மாநிலங்கள் அந்த அந்த மாநில மக்களுக்கு ஏற்ற முறையில் கல்வியை உருவாக்க முடியும் என்ற நிலைமை இருந்தது என்பதையும் அண்மைக் காலத்தில் கல்வி, மத்திய அரசினுடைய கூட்டுப் பொறுப்புக்கு உரியதாகப் பொதுப்பட்டியலிலே அரசியல் சட்டத்திலே இடம் பெற வைக்கப் பட்டதனால்தான் இந்த தவறான தீதான நோக்கத்திற்கு இன்றையதினம் பயன்படுகிறது என்பதையும் கருத நேரிடுகிறது.

பொது பட்டியலில் இடம் பெறுகிற ஒவ்வொரு பொருளிலும் மாநில அரசுக்கும் உரிமை உண்டு, மத்திய அரசுக்கும் உரிமை உண்டு என்றாலும் ஒவ்வொரு பொருளும் ஒவ்வொரு விதமான தலைப்பும் நாளடைவில் பொது பட்டியலுக்கு கொண்டு போகப் படுகிற காரணத்தால் மத்திய அரசின் கைக்கே அந்த தலைப்பின் அதிகாரங்கள் செல்லக்கூடிய நிலைமைகள் உருவாகியிருக்கின்றன. அந்த முறையிலே, மறைமுகமாக மாநில அரசுகளுடைய உரிமைகளிலே மத்திய அரசு கைவைத்து [illegible]விலையும் மேற்கொண்டு பள்ளிக்கூடங்கள் நடத்துகின்ற அளவுக்கு முற்பட்டு, அதனுடைய தொடர்பின் விளைவாக இந்தப் பள்ளிக்கூடங்களில் இந்தி மொழி பயிற்றுவிக்கப்படுவது

செயலாக்கப்பட்டு, இந்தியாவிலேயே இரு மொழிக் கொள்கையை கொண்டு இருக்கிற ஒரே மாநிலமாக உள்ள தமிழ் நாட்டில், அந்த இருமொழிக் கொள்கையை தகர்த்திடும் ஒரு வஞ்சகமான, சூதான திட்டமாகத்தான் அந்தத் திட்டம் இருக்கிறது என்ற காரணத்தால் மத்திய அரசு தமிழ்நாட்டில் பள்ளிக்கூடங்கள் துவக்குவது என்பது முறையல்ல என்பதையும், மாநிலத்திலே பள்ளிக் கூடங்கள் நடத்த வேண்டும் என்றால் அந்த மாநில அரசு மூலமாகத்தான் நடைபெற வேண்டும் என்பதையும், மத்திய அரசால் வழங்கப்படக்கூடிய சிலபஸ் பாடத் திட்டம் இருக்க வேண்டுமானால் அந்த சிலபஸ் மாநில அரசுக்கும் ஏற்புடையதாக இருக்குமானால் மாநில அரசு அந்த சிலபஸ் உள்ள பள்ளிக் கூடங்களையும் மத்திய அரசு ஊழியர்களுக்காக நடத்தலாமே தவிர மத்திய அரசே பள்ளிக்கூடங்களை நடத்துவது, மத்திய அரசு நேரடியாகப் பள்ளிக்கூடங்களுக்கு அனுமதி வழங்குவது என்ற முறை சரியல்ல. கல்வியில் தலையிடும் இந்த முறைகள் உள்ளபடியே மாநில அரசினுடைய தன்மானத்தில் கை வைக்கின்ற ஒரு செயலாகவே இருக்கிறது. நான் குறிப்பிட விரும்பு கிறேன். பேரறிஞர் அண்ணா அவர்களால் கொண்டு வரப்பட்டு, இன்றைக்கு இருக்கின்ற ஆளுங்கட்சியால் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கின்ற, என்றைக்கும் கைவிட மாட்டோம் என்று சொல்லப் படுகின்ற இருமொழிக் கொள்கையைத் தகர்க்கக் கூடிய முறையில், இந்தி மொழியை எந்தெந்த வடிவத்திலே நுழைக்கலாமோ அப்படியெல்லாம் நுழைப்பதற்காகச் செய்யப் படக் கூடிய காரியம் இது என்பதால், இப்படிப்பட்ட முறைகேட்டினை எதிர்த்து வாதாடுவதற்கு இந்த அரசு முன்வர வேண்டுமென்று நான் வற்புறுத்திக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

உண்மையாகவே இன்றைதினம் நீங்கள் கல்வித் துறையைப் பற்றி எண்ணிப் பார்க்கின்றபொழுது இன்னொரு கருத்தையும் நான் இங்கே குறிப்பிட்டாக வேண்டும். மெள்ள மெள்ள ஒரு கலாச்சாரத்தை அழிக்கக்கூடிய நிலைமை அல்லது மறக்கப்படக் கூடிய ஒரு நிலைமை உருவாகி வருகின்றது என்பதை யாரும் மறந்துவிடக் கூடாது. திராவிட இயக்கமானது இந்தக் கலாச் சாரத்தைப் பாதுகாப்பதற்காகத் தோன்றியதுதானே தவிர ஆட்சி பீடத்திலே அமர்வதற்காகவே மட்டும் தோன்றியது அல்ல





இந்தக் கலாச்சாரத்திற்குத் இன்னும் சொல்லப்போனால், உரியவர்களாக, தொடர்புடையவர்கள் தாழ்வு மனப்பான்மைக்கு கொள்ளுகின்ற தங்களை நான்காம்தர பிரஜைகளாகக் கருதிக் என்பதற்காகத்தான், மனப்பான்மையை மாற்ற வேண்டும் செய்ய தமிழனைத் தன்மானம் உள்ள இனமாக வளரச் வேண்டும் என்பதற்காகத் தானே தவிர, ஏதாவது ஒரு வகையில் ஆட்சிபீடத்தில் அமர்வதற்காகவே தோன்றியது அல்ல இந்த இயக்கம். அதனுடைய நினைகள் தோன்றி, பின்னர் ஏற்பட்ட வளர்ச்சியின் காரணமாக ஆட்சி பீடத்தில் அமரக் கூடிய நிலை ஏற்பட்டு, பின்னர் அதில் ஏற்பட்ட பிளவின் காரணமாக இப்பொழுது நீங்கள் ஆட்சி பீடத்தில் அமர்ந்திருக்கின்றீர்கள். அப்படி ஆட்சிப் பீடத்தில் அமர்கின்ற பொறுப்பு ஏற்பட்டது மக்கள் தந்த தீர்ப்பின் காரணமாகத்தான். சில பேர் பேசுகின்ற பொழுது மக்கள் தந்த தீர்ப்பை இவர்கள் ஏற்றுக் கொள்ள வில்லை, தங்களுடைய தோல்வியாக அதை ஒப்புக்கொள்ளவில்லை என்று குறிப்பிட்டுப் பேசினார்கள்; வருத்தப்பட்டுப் பேசினார்கள்.

தோல்வியை ஒப்புக்கொள்வது என்பதற்கு உள்ள மிக முக்கியமான அடையாளமே நாங்கள் இங்கே எதிர் வரிசையிலே உட்கார்ந்து கொண்டிருப்பதுதான். உங்களை ஆளுங்கட்சியாக ஒப்புக்கொண்டு தான் நாங்கள் இங்கே எதிர்க்கட்சி வரிசையிலே உட்கார்ந்திருக்கிறோம். அப்படி நாங்கள் ஒப்புக்கொள்ள வில்லை என்றால், அமைச்சர் திருநாவுக்கரசு அவர்களைப் பார்த்து, நாங்கள்தான் ஆளுங்கட்சி, எனவே, நீங்கள் இந்தப் பக்கம் வாருங்கள், நாங்கள் அங்கே போகின்றோம் என்று தகராறு செய்யக் கூடிய நிலைமை உண்டாகும். ஆனால் இப்பொழுது அப்படிச் செய்கின்ற தன்மையில் யாரும் இல்லை. நாங்கள் எதிர்க்கட்சி தான், இரண்டாவது நிலையிலேயிருந்தாலும் நாங்கள் இரண்டாவது நிலையிலே உள்ள எதிர்க்கட்சிதான்; நீங்கள் ஆளுங்கட்சிதான்; நாங்கள் 86 இலட்சம் மக்களின் ஓட்டுகளைப் பெற்றிருக்கிறோம்; ஆனால் நீங்கள் 117 இலட்சம் மக்களின் ஓட்டுக்களைப் பெற்று, பெரும்பான்மை பலத்தைப் பெற்றிருப் பது உண்மைதான். அந்த உண்மையைத் தெரிந்து கொள்ளா மலோ, ஒப்புக் கொள்ளாமலோ, மக்கள் அளித்த தீர்ப்பை மதிக்காமலோ இருக்கின்ற அரசியல்வாதிகளாக நாங்கள் இருந்து அப்படிப்பட்ட அரசியலை நடத்தவில்லை. இன்னும் சொல்லப்

[திரு. க. அன்பழகன்] [1985 மார்ச் 16

போனால் ஆளுங்கட்சியாக நீங்கள்தான் வந்துவிட்டீர்கள் என்பதை ஏற்றுக்கொண்டுதான் இருக்கின்றோமே தவிர நாங்கள்தான் ஆளுங்கட்சி என்று கூறுகின்ற நிலையில் நாங்கள் இல்லை. தமிழக மக்கள் தாங்களாகவே தேர்ந்தெடுத்துக்கொண்ட ஆட்சி அந்த ஆட்சியினால் அவர்களுக்குக் கிடைக்கின்ற பலன்களை ஐந்தாண்டுக் காலத்திற்கு அனுபவிக்க வேண்டுமென்பதுதான் எங்கள் முடிவாக இருக்கிறதே தவிர, இடையிலே இந்த ஆட்சி கலைக்கப்பட வேண்டுமென்றுகூட நாங்கள் விரும்பவில்லை. எனவே, இந்த அடிப்படையில் ஆளுங்கட்சி அது பெற்றிருக்கின்ற உரிமை, அதன் தகுதி ஆகிய இவைகளைக் குறைத்து மதிப்பிடுவதாக யாரும் கருதத் தேவையில்லை.

ஆனால், ஆளுங்கட்சியிலே இருக்கின்றவர்களுக்கு இங்கே பொறுப்பு அதிகமாக ஆகின்றது. பேரறிஞர் அண்ணா அவர்கள் மாண்புமிகு முதலமைச்சராக இங்கே விளங்கிய காலத்தில், இந்தத் தமிழ்நாட்டின் கலாச்சாரம், பண்பாடு ஆகிய இவைகளைக் காப்பாற்றுவதற்காக எடுத்த நடவடிக்கைகளில் ஒன்றுதான் சுயமரியாதைத் திருமணம் சட்டப்படி செல்லும் என்ற நிலைமையை சட்டமன்றத்தின் மூலம் உருவாக்கியதாகும். இன்றைக்கு இருக்கின்ற அமைச்சர்களில் சிலரும்கூட அதில் பங்கு கொண்டிருக்கின்றார்கள். அந்தக் கொள்கையை மறுப்பதற்கு யாரும் முன்வர முடியாது. அவ்வாறு சுயமரியாதைத் திருமணம் செல்லுபடியாகும் என்று சொன்னால் அதில் என்னென்ன பொருள் அடங்கியிருக்கின்றது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

தமிழர்களுடைய பண்பாடு சிதைக்கப்பட்டு வந்த அந்தப் பழக்கத்தை எதிர்த்து, அந்தப் பழக்கத்தின் அடிப்படையில் இந்தியாவிலுள்ள திருமணச் சட்டம், சுயமரியாதைத் திருமணத்தைச் செல்லுபடியாகச் செய்யுமா என்பது பற்றி நீதிமன்றத்திலே தீர்மானிப்பதில் சிக்கல் இருந்த காரணத்தினால், பேரறிஞர் அண்ணா அவர்கள் அந்தச் சுயமரியாதைத் திருமண முறையைச் சட்டப்படி காப்பாற்றித் தந்தார்கள்.

அந்த உணர்வு இன்றைக்கு நம்மிடையே இருந்தால், இந்த நாட்டிலே தமிழ் மொழியைவிட உயர்ந்த, சிறந்த மொழி உண்டு என்று இன்னொரு மொழியைக் குறிப்பிட்டுப் பேசுகின்ற அவல



1985 மார்ச் 16] [திரு. க. அன்பழகன்]

நிலை தோன்றாது என்று கருதுகின்றேன். ஏனென்றால் நான் உங்களுக்கு நினைவூட்ட விரும்புகின்றேன். நம்முடைய தமிழ் நாட்டிலே சமய உணர்வு என்பது எப்படியோ மாறி மாறி நம்மிடத்திலே ஏதாவது ஒரு வகையிலே தழைத்து வருகிறது. தனி மனிதனுடைய உணர்வு என்ற முறையில் தான் அதிலே அதிகம் குறை காண விரும்புவது இல்லை. தனி மனிதனுடைய மனப்பான்மையாக, உணர்வாக நான் அதை மதிக்கத் தயார். ஆனால், அந்தச் சமய உணர்விலே செல்வாக்கு பெறுகிற தகுதியுடையவர்கள், இப்பொழுது இருக்கிற காஞ்சி சங்கராச்சாரியார் அவர்கள் சில மாதங்களுக்கு முன்னாலே பேசினார்கள். "ஒரு மொழிக்குக் கௌரவம் அந்த மொழியில் உள்ள நல்ல நூல்களே. அப்படிப் பார்க்கும்போது சமஸ்கிருதத்திலும் தமிழிலும் உள்ள நல்ல நூல்களுக்கு நிகராக வேறு எந்த மொழியிலுமே கிடையாது. இறைவனின் வடிவமாகவே உள்ளது சமஸ்கிருதம். இறைவனால் அருளப்பட்டது தமிழ். இறைவன் செய்து கொடுத்தது தமிழ். இறைவனாகவே இருப்பது சமஸ்கிருதம். ஆகவே, இந்த இரண்டு மொழிகளுமே தெய்வத் தன்மையோடு கூடியவை" என்று சொல்லி, சமஸ்கிருதம் கடவுள், தமிழ் கடவுளால் இயற்றப்பட்ட ஒரு கருவி என்ற கருத்திலே அவர்கள் பேசினார்கள்.

(முற்பகல் 9 50)

அது அவர்களுக்கேற்ற கருத்து. அவர்கள் ஏன் அப்படிப் பேசினார்கள் என்று கேட்க எனக்கு உரிமை இல்லை. ஆனால் நம்முடைய அண்ணா அவர்கள் பேசிய கருத்து ஏட்டிலே பதிவான ஒன்று. அவர்கள் பல காலத்திற்கு முன்னாலே சொன்னார்கள், 'தமிழ் நாட்டிலே பிறந்தும் தமிழ் மொழி பயின்றும், தமிழ் மொழி மூலம் பிழைத்து வந்தாலும், தமிழன் என்று சொல்லிக் கொண்ட போதிலும் தமிழிலே பண்டிதர் என்ற பட்டம் பெற்றாலும் சங்க நூல்களைக் கற்றாலும் சிலர் தமிழைத் தமது தாய்மொழி என்று கருதுவதில்லை; அவர்களுடைய பற்றும் மதிப்பும் எண்ணமும் எல்லாம் வடமொழியாகிய சமஸ்கிருதத்தில்தான்' என்று அறிஞர் அண்ணா அவர்கள், தமிழ் பேசுகின்ற மக்களுக்கே இருக்கின்ற தாழ்வைப் போக்க தமிழிடத்திலே பற்று இல்லாமல் தமிழைப் பயின்ற மிகப் பெரிய புலவர்களும் இருக்கிறார்கள் என்னும் கருத்தை குறிப்பிட்டார்கள். உள்ளபடியே ஆதி சங்கராச்சாரியாரோ அல்லது மற்ற சங்கராச்சாரியார்களோ சமஸ்கிருதத்தில் பற்று

[திரு. க. அன்பழகன்] [1985 மார்ச் 16

வைத்திருப்பதைக் குறை காண்பதற்கு எனக்கு அவசியம் இல்லை. அது அவர்களுடைய கொள்கை. இன்னும் சொல்லப் போனால் அது அவர்களுடைய இனத்திற்காக ஏற்றுக் கொண்டிருக்கின்ற ஒரு கொள்கை. ஆனால் நம்முடைய அமைச்சர் ஒருவர் இரண்டு நாட்களுக்கு முன்னாலே ஒரு இடத்திலே பேசி, பத்திரிகையில் வந்திருக்கின்ற ஒரு கருத்து இது. "சமஸ்கிருதம் ஒரு இனத்திற்கோ அல்லது ஒரு மதத்திற்கோ உரிய மொழியாக எப்போதும் இருந்ததில்லை; மிகப் பெரிய பழைய மொழிகளின் தாய் என அது போற்றப்படுகின்றது: தமிழுக்கும் எல்லா மொழிகளுக்கும் சமஸ்கிருதம் தாய்" என்று இந்த அமைச்சரவையில் இருக்கின்ற அமைச்சர் ஒருவர் அண்மையில் பேசி அது பல ஏடுகளிலும் வந்திருக்கின்றது என்று சொன்னால் ஏதோ இன்றைக்கு இருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகத்தின் தோழர்கள், அமைச்சர் சொன்ன காரணத்தால் எதிர்ப்பு தெரிவிக்கிறார்கள் என்று யாரும் கருதத் தேவையில்லை. ஒருமுறை வடலூர் வள்ளலார் அவர்கள் சங்கராச்சாரியாரைச் சந்தித்து உரையாடுகின்றபோது வடலூர் வள்ளலாரிடத்திலே அன்றைக்கு சங்கராச்சாரியாராக இருந்த பெரியவர் "நமது மொழிகள் எல்லாம் எவ்வளவு சிறந்தன என்று சொன்னாலும் சமஸ்கிருதமொழி எல்லா மொழிகளுக்கும் தாய் மொழியாக விளங்குகின்ற தகுதி உடையது" என்று சொன்னார்கள். அப்படிச் சொல்கின்றபோது வடலூர் வள்ளலார் அவர்கள் சொன்னார்கள். "தாங்கள் சொல்வதை நான் மறுக்கவில்லை, வடமொழி ஒருவேளை தாய் மொழியாக இருக்கலாம்: ஆனால் தமிழ் மொழி தந்தை மொழி" என்று—தமிழ் தந்தை மொழியாக இல்லாவிட்டால் தாய் மொழி என்ற யோக்யதை சமஸ்கிருதத்திற்கு வராது என்று சொன்னார்கள். அந்த அளவு வடலூர் வள்ளலாரே சொல்ல முடிந்தது என்றால்—நாம் சொல்வதில் தவறென்ன [

ஆனால் இன்றைக்கு ஆட்சியிலே உள்ளவர்கள எந்த அடிப்படையில் கருத்துக்களை நாட்டிலே பேசுகிறார்கள் என்று நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். பேரறிஞர் அண்ணா அவர்களுடைய எண்ணங்களை, இப்படிப்பட்ட கலாச்சார அடிப்படையில் உள்ள கொள்கைகளை எல்லாம் கைவிட்டுவிட்டு, வேறு என்னதான் இந்த நாட்டிலே நாம் வாழ்ந்து சாதிக்கப் போகிறோம் என்று எனக்குத் தெரியவில்லை. பெருந்தலைவர் காமராஜர்



1985 மார்ச் 16] [திரு. க. அன்பழகன்]

அவர்கள் காங்கிரஸினுடைய மிகப் பெரிய தலைவராக இருந்து 9 ஆண்டுக் காலம் ஆட்சி நடத்தியபோது தந்தை பெரியார் அவர்கள் காமராஜரை ஆதரித்து வாழ்த்திப் பேசிய நேரத்திலே எல்லாம் அவர்கள் சொன்னது தமிழனுடைய கலாச்சாரத்தையும், தமிழ் இனத்தையும் பாதுகாக்க காங்கிரஸில் ஒரு பெரிய தலைவர் நமக்குக் கிடைத்திருக்கிறார் என்ற கருத்தைத்தான் அறிஞர் அண்ணா அவர்கள் அரசியலில் மாறுபட்டு எதிர்த்தாலும் கூட காமராஜரிடத்திலே ஒரு கனிவான உள்ளத்தோடுதான் இருந்தார்கள். அதற்கு என்ன காரணம் என்பது விளக்கவேண்டிய அவசியத்திற்குரியதல்ல. தமிழனுக்கு இருக்கின்ற பலகீனம் எவ்வளவு வீழ்ச்சிக்கு உரியதாக இருக்கின்றது என்பதை ஒரு கணம் எண்ணிப்பார்த்தால் பெருங் கவலையே ஏற்படும். இன்றைக்கு வானொலி, டெலிவிஷன் இவை எல்லாம் மத்திய அரசினுடைய கருவிகளாக இருந்து கொண்டு, மத்திய அரசு திட்டப்படி அகில இந்தியாவிலே என்னென்ன பொம்மலாட்டங்களை நடத்துகிறதோ, என்னென்ன கேலிக்கூத்துக்களை நடத்துகின்றதோ, என்னென்ன மட்டமான கருத்துக்களைப் படம் பிடிக்கிறார்களோ அவைகள் எல்லாம் டெலிவிஷன் மூலமாக, வானொலி மூலமாகத் தமிழ்நாட்டிலே பரப்பப்பட்டு நம்முடைய கலாச்சாரம் பாதிக்கப்படுகின்றது. தமிழ் மொழியில் தமிழ்நாட்டில் நடைபெறக்கூடிய நிகழ்ச்சிகள், இன்னும் சொல்லப்போனால் கலைநிகழ்ச்சிகள்—அன்பழகன் விரும்புவது எதுவோ அதைப்பற்றிக் கவலை கிடையாது, ஆனால் —தமிழ் நிகழ்ச்சிகள் வானொலியிலும், டெலிவிஷனிலும் இடம் பெறுகின்ற காலம் குறைக்கப்படக்கூடிய நிலைமை ஏற்பட்டிருப்பதை இந்த அரசு வன்மையாகக் கண்டித்தாக வேண்டும்.

வானொலியோ, தொலைக்காட்சியோ, மத்திய அரசினுடைய ஏகபோகக் கருவியாக இருப்பதற்கு எந்தவிதமான நியாயமும் இல்லை. உலகத்திலே இருக்கின்ற பல ஜனநாயக நாடுகளிலே எல்லாம் வானொலி, தொலைக்காட்சி இவை எல்லாம் அந்தந்த வட்டாரத்திலே வாழ்கின்ற மக்களுடைய விருப்பத்திற்கேற்ப நடத்தப்படக்கூடிய, தனியார் நடத்தக்கூடிய தொழிலாக இருக்கின்றது. அவ்வாறு தனியாரே நடத்தக்கூடிய தொழில் அது. ஆகவே நம்முடைய நாட்டிலும் அது தனியார் நடத்துகிற தொழிலாக இருக்க வேண்டும் என்று நான் கட்டாயப்படுத்தவில்லை. ஆனால் அந்தந்த மாநிலங்களிலே உள்ள தொலைக்

காட்சி நிலையங்களும், வானொலி நிலையங்களும் மாநில அரசின்—அதற்குப் பின்னால் எதிர்க் கட்சிக்கு என்ன இடம் என்பதை நான் பேசிக்கொள்ளத் தயார்—பொறுப்பிலேதான் இருக்க வேண்டும். வேண்டுமானால் அகில இந்திய செய்தியை அறிவிக்கின்ற அந்த கால் மணி நேரம் அதிகம் வேண்டுமானால் 20 நிமிட நேரம் மத்திய அரசினுடைய செய்தியை அப்படியே அறிவிக்கலாமே தவிர மற்றைய கலை நிகழ்ச்சிகளைப் பொறுத்த வரையில் எந்தவிதமான நிகழ்ச்சிகளைப் பரப்ப வேண்டும் என்பது உள்ளபடியே அங்கு வாழும் மக்களுக்காகத்தான்; அந்தக் கருவிகளுக்காக அல்ல. அங்கே வேலை செய்கின்ற 60 பேர்களுக்காக அல்ல. அந்த மக்களுக்குப் பயன்பட வேண்டும்; கலாச்சாரம் பாதுகாக்கப்பட வேண்டும் என்றால் அந்த உணர்வு நிச்சயமாக இந்த அரசுக்கு இருந்தால் இவர்கள் அதற்காக வாதாட வேண்டும்.

ஏற்கெனவே திராவிட முன்னேற்றக் கழகம் தேர்தல் காலத்தில் சொன்ன ஒரு கருத்து "மத்திய அரசின் வானொலி நிலையங்களும், அதேபோல் தொலைக்காட்சி நிலையங்களும் ஒரு தனிப்பட்ட சுதந்திரம் உள்ள அமைப்பாக இயங்கச் செய்வதற்கான வழிவகை காண முயற்சிப்போம்" என்பதாகும். ஆனால் இன்றைக்கு நான் குறிப்பிடுவது மாநில உரிமை கேலிக்குரியதாக ஆகக் கூடாது என்பதற்காக. ஏனென்றால் ஒரு மாநில அரசு, அந்த மாநிலத்திலே பரப்பப்படக்கூடிய கலை நிகழ்ச்சிகள், திரைப்படங்கள் பற்றிக் கூட தீர்மானிக்க முடியாத ஒரு நிலைமை அந்த மாநிலத்திற்கு இருந்து மத்தியிலே உள்ள அமைச்சர், அவர் சொல்வதுதான் நிறைவேற்றப்பட வேண்டுமென்பது எந்த வகையிலும் நியாயம் அல்ல. நம்முடைய அமைச்சரே செய்கிறபொழுதும் தவறுகள் வரலாம்; எதிர்க் கட்சிகள் விழித்துக்கொண்டுதானிருக்கின்றன; அதற்கு முறை வைப்பதற்குக் கேட்டுக்கொள்ள முடியும்; ஏதேனும் சில முறைகளை உருவாக்கிக்கொள்ள முடியும். மத்தியிலே மட்டும் எதிர்க் கட்சி கிடையாதா? ஆனால் மத்திய அரசாங்கம்தான் அவற்றையெல்லாம் பொறுப்பேற்று நடத்த வேண்டுமென்று சொல்வது முறை அல்ல; இன்னும் சொல்லப் போனால் கலாச்சார அடிப்படையில் கூட நம்முடைய மாநில உரிமையைப் பாதிக்கிறது என்பதைத்தான் நான் நினைவூட்ட விரும்புகிறேன்.





குறிப்பாக, இலங்கையிலே வாழ்கிற தமிழர்களுடைய—வாழ்கிற தமிழர்கள் என்று நான் சொல்வதேகூட தவறு; தினமும் சாகிற தமிழர்களுடைய—நிலைமையைப் பற்றி எண்ணிப் பார்க்காமல் இன்றைக்கு யாரும் இல்லை. அந்த இலங்கையிலேயிருக்கிற தமிழர்கள் எப்படிப்பட்ட நிலைமைக்குக் கடந்த 20 ஆண்டுக் காலமாக ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள்? 1958-வது ஆண்டே பேரறிஞர் அண்ணா அவர்களுடைய தலைமையில் சென்னையிலே நடைபெற்ற ஒரு பேரணி, இலங்கை துணை கமிஷனர் அலுவலகம் முன்னாலே சென்று, எங்களுடைய கண்டனத்தைத் தெரிவித்து, அன்றையதினம் அந்த வேண்டுகோளை, விண்ணப்பத்தை, அவர்களிடத்திலே கொடுத்து, இலங்கைத் தமிழர்களுக்கு இழைக்கப்படுகிற கொடுமைகள் நிறுத்தப்பட வேண்டுமென்று கேட்டோம்.

1948-லேயிருந்து, 1968, 1973, 1978 கடந்து, 1983-லே கொடுமை நடைபெற்று, தாங்கொணாத கொடுமை நடைபெற்று, பத்திரிகைகளைப் படித்தால், படிக்கிற எவனும், தமிழன் மட்டுமல்ல, நாகரீகம் உள்ள எவருமே, வேதனைப்படக்கூடிய அந்தச் செய்திகளாக வெளிவந்தன, 1983-க்குப் பின்னால் 1985-வது ஆண்டு மார்ச் மாதம் வரையில் அந்தப் பிரச்னைத் தீர்க்கப்படவில்லை என்று சொன்னால், அப்படித் தீர்க்கப்படாத நிலைமையில் தமிழர்கள் மேலும் கொடுமைப்படுத்தப்படுகிறார்கள்; அந்தப் பிரச்னை தீர்க்கப்படாமல் அங்கேயிருக்கிற பாராளுமன்றத்திலே விவாதம் நடத்தப்படுகிற ஒரு பிரச்சினையாக மட்டும் இருந்து கொண்டிருக்குமானால் நான் அதற்காக, இங்கே நமக்கெல்லாம் உணர்ச்சி கொள்ளும் நிலைமை ஏற்படுவதை விரும்ப மாட்டேன். பாராளுமன்ற விவாதத்திலே, அங்கே உள்ள அறிஞர்கள் கூடி விவாதிக்கிற மண்டபத்தில் அந்தப் பிரச்னை பேசப்படுகிற கட்டத்தைக் கடந்து, அப்படி பேசப்பட்ட ஒவ்வொரு கால கட்டத்திலேயும் தமிழர்களுடைய தலைவர்களுக்குத் தரப்பட்ட உறுதிமொழிகள், வாக்குறுதிகள், ஒப்பந்தங்கள் அத்தனையும் மீறப்பட்டு, தமிழர்களின் நம்பிக்கை உடைத்து நொறுக்கப்பட்டு அவை எதுவும் நிறைவேற்றப்படாமல் தமிழர்கள் இரண்டாந்தரக் குடிமக்களாக்கப்பட்டு 20 ஆண்டுக் காலமாகிவிட்டது. இரண்டாந்தரக் குடிமக்கள், உரிமை இழந்த தமிழ் மக்கள், உடைமை இழந்த தமிழர்களாக வாழ்கிற தமிழர்கள், தம் உயிரையேனும் பாதுகாத்து வாழக்கூடிய நிலைமையாவது நீடிக்கமுடியுமா

என்று முயற்சித்து, அதிலேயும் தோல்வி ஏற்பட்டு, அப்படித் தோல்வி ஏற்பட்ட காரணத்தாலேதான் இலங்கையிலே இன்றைய தினம் விடுதலைப் புலிகள் போராடுகிற ஒரு காலகட்டம் உருவாகியிருக்கிறது.

உள்ளபடியே, திருமதி இந்திரா காந்தி அவர்கள் இந்திய அரசின் பிரதமராக, ஆளுங்கட்சித் தலைவராக இல்லாதபொழுது, எதிர்க் கட்சித் தலைவராக விளங்கிய அந்தக் காலகட்டத்தில் இலங்கைத் தமிழர் பிரச்சனையில் "அன்றைக்கு—இந்தியாவில் இருந்த ஆட்சி அக்கறை காட்டுவது என்பது நாம் எதிர்பார்க்கக்கூடியது அல்ல. அப்படிப்பட்ட வாய்ப்பு எனக்கு கிடைக்கிறபொழுது, இலங்கைத் தமிழர் பிரச்சனையில முழு அக்கறை எடுத்துக் கொண்டு நான் செயல்படுவேன்" என்ற வாக்குறுதியை, அமெரிக்காவுக்குப் போயிருந்த ஒரு இலங்கைத் தமிழர் திருமதி இந்திரா காந்தி அவர்களுக்கு எழுதிய கடிதத்திற்குப் பதிலாக, அன்றைக்கு எழுதி இருந்தார்.

திருமதி இந்திரா காந்தி அவர்கள் பிரதமராக இருந்த பொழுது, அரசியல் வட்டாரத்திலே கருதப்பட்ட எண்ணம் இந்திரா காந்தி அவர்கள் எடுத்துச் சொல்கிறார்கள், சமாதானம் பேசுகிறார்கள், திரு. ஜி. பார்த்தசாரதி அவர்களை அனுப்புகிறார்கள், பேச்சு வார்த்தையிலே முடிந்தால் நல்லது என்று எதிர்பார்க்கிறார்கள் என்பது ஒரு காலகட்டம், அதையும் கடந்து ஒருநிலை வந்து விடுமானால் திருமதி இந்திரா காந்தி அவர்கள் தன்னுடைய முழு ஆற்றலையும் இந்த விஷயத்தில் திருப்புவார்கள், என்று எதிர்பார்க்கப்பட்டது. திருமதி இந்திரா காந்தி அவர்களைப் பற்றி அப்படி ஒரு நம்பிக்கை உருவாகி இருந்தது. திரு. ராஜீவ் காந்தி அவர்களைப் பற்றி எனக்கு எந்தவிதமான எண்ணமும் இல்லாத நிலைமையில் நான் ஒரு கருத்தைக் குறிப்பிட முடியாது. தேர்தல் முடிந்ததற்குப் பிறகு திருமதி இந்திரா காந்தி அவர்கள் பிரதமராக இருந்திருப்பாரானால், அவர்களால் இதுவரையில் எடுக்கப்பட்ட முயற்சிகளுக்கு ஏற்பட்ட தோல்வியை எண்ணிப் பார்த்தாவது, திருமதி இந்திரா காந்தியினுடைய வேண்டுகோள் புறக்கணிக்கப் பட்டதைப் பார்த்தாவது, இங்கே வந்து பேசுகிறபொழுது, இலங்கையினுடைய





சார்பிலே பேசுகிற அதுலத் முதலியோ, இன்னும் அங்கேயிருந்த ஜெயவர்த்தனேயோ அல்லது அவர்களைச் சேர்ந்தவர்களோ, இங்கே வந்து பேசுகிறபொழுது, சமாதானம் பேசுவதாகக் காட்டிவிட்டு திரும்பச் சென்றதற்குப் பின்னர், தங்களுடைய நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்வதற்காக, அந்தச் சமாதானப் பேச்சு வார்த்தையினால் காலம் கடத்துவதற்காகவும், தங்களது திட்டப்படி தமிழர்கள் மீதான தாக்குதலை அதிகப்படுத்துவதற்காகவும் தங்களுடைய நோக்கத்தை மெல்ல நிறைவேற்றுவதற்கே முயற்சிக்கிறார்கள். இலங்கையில் இன்னும் 5 ஆண்டுகள் கழித்துத் தமிழர் பிரச்சனையே இருக்காது, ஏனென்றால் இலங்கையில் தமிழனே இருக்கமாட்டான்.

எனக்குத் தெரிந்து இதுவரையில் ஒரு லட்சம் தமிழர்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள். 1983-ஆம் ஆண்டிலே நடைபெற்ற கலவரத்திலே துவங்கி இன்று வரையில் ஒரு லட்சம் தமிழர்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள். அதிலே 60 ஆயிரத்துக்கு மேல் இளைஞர்கள். இலங்கைக்கு அண்மையில் போய் வந்த, இலங்கையைப் பற்றி நன்றாக தெரிந்த நண்பர் ஒருவர் சொன்னார். 18-லிருந்து 30 வயது வரையிலுள்ள இளைஞர்களை மொத்தமாக அழிப்பதைத் திட்டமிட்டு தொடர்ந்து ஒரு ஆண்டுக் காலமாகவே செய்து வருகிறார்கள். விடுதலைப் புலி இயக்கத்தில் சேராத இளைஞர்களை கூட எப்படியாவது கொன்று விடுகிறார்கள். நான் இப்படிப்பட்ட. கொடுமையினுடைய எல்லைக்கு ஒரு அடையாள வார்த்தைச் சொல்ல விரும்புகிறேன்.

அது இந்த அவைக்கு அவ்வளவு பொருத்தம் இல்லையென்றாலும் அந்த வார்த்தையிலே ஒன்றும் தவறில்லையென்ற காரணத்தால் சொல்கிறேன். "இனி இலங்கையிலே தமிழ்ப் பெண்களுக்கு விடுதலைப் புலி பிறக்க மாட்டான். தமிழன் பிறக்க மாட்டான். இனி சிங்கங்கள்தான் பிறக்கும்" என்று சொல்கிற கருத்து இலங்கை முழுவதும் பரவியிருக்கிறது. இதை விடக் கொடுமையான, இதைவிட வேதனையான, இதைவிட வெட்கப்படத்தக்க நிலை எதுவும் இல்லை. அதுவும் என்னைப் போல் 40 ஆண்டுக்காலம் ஒரு இயக்கத்திலே, தமிழன் என்ற எண்ணத்தோடு இருந்து வருகிற எனக்கு வேதனைப்படத்தக்க நிகழ்ச்சி வேறு எதுவும் கிடையாது. அந்த அளவிற்கு இலங்கையிலே தமிழ்ர்கள் கொன்று குவிக்கப்பட்டு, மானபங்கப் படுத்தப்பட்டு, அழிக்கப்பட்டு, பெண்களுக்கு இப்படிப்பட்ட

சீரழிவு இழைக்கப்பட்டுச் சிதறி ஓடுகிற ஒரு நிலைக்குத்
தமிழர்கள் ஆளாகியிருக்கிறார்கள் விடுதலைப் புலிகளை நான்
பாராட்டப்படுகிறேன். ஒருவேளை ஒரு நான்கு ஆண்டுகளுக்கு
முன்னாலே விடுதலைப் புலிகளின் வன்முறை இயக்கம், தமிழர்
களை எப்படிக் காப்பாற்றும் என்று சந்தேகப்பட்டவன்தான்
நான். ஆனால் அந்த விடுதலைப் புலிகளை இந்த நேரத்தில் நான்
மனதாரப் பாராட்டுகிறேன். அவர்களும் இல்லையென்றால்,
தமிழர்களைக் காப்பாற்ற இந்த உலகத்திலே வேறு எவரும்
இல்லை. விடுதலைப் புலிகளைத் தவிர அந்தத் தமிழர்களைக்
காப்பாற்ற உலகத்தின் எந்தப் பகுதியிலும் வேறு எவரும்
இல்லை. அனுதாப வார்த்தைகளைச் சொல்லத்தான் எங்களைப்
போன்றோர் இருக்கிறார்கள். அந்த நிலையில் அந்த விடுதலைப்
புலிகள் தங்கள் உயிருக்கு அஞ்சாமல், தினமும் 5 பேர், 10 பேர்
செத்தாலும், சிங்களவர்களை எதிர்த்துப் போராடுகின்ற, கொல்
கின்ற அந்தப் போராட்டத்தின் மூலமாகத் தமிழர்களின் வீரர்
இன்னும் செத்து மடியவில்லையென்று காட்டுகின்ற அந்த
உணர்ச்சியை இந்த மன்றம் மதிக்க வேண்டுமென்று நான் விரும்பு
கிறேன். விடுதலைப் புலி இயக்கம்தான் பரிகாரம் என்று நான்கு
ஆண்டுகளுக்கு முன்னாலே கருதாத நான், வேறு வழியில்லாத
காரணத்தால் அந்த விடுதலைப் புலிகளை விட்டால் தமிழர்
களுக்கு வேறு பாதுகாப்பிற்கு வழியில்லை என்பதற்காக அவர்
களைப் பாராட்டுகிறேன்.

அந்த அளவிற்குக் கொடுமைகள் நடைபெறுகிறபோது இந்திய
அரசு எந்த நிலையில் இருக்கிறது என்பதை அருள்கூர்ந்து
எண்ணிப்பார்க்க வேண்டும். வெளிநாட்டில் நடைபெறுகின்ற
நிகழ்ச்சியாகத்தான் மத்திய அரசு கருதுகிறது. இலங்கை இனப்
பிரச்சினையில் இந்திய அரசிற்கு தொடர்பு ஏதனால் ஏற்படுகிற
தென்றால், இது வரையில் யூ.என்.ஓ. வில் அவர்கள்
திரு. இராமச்சந்திரன் அவர்களை அழைத்துச் சென்றபோது
பேசப்பட்ட கருத்தாக இருந்தாலும் சரி, அல்லது மனித உரிமை
பாதுகாப்புக் கழகத்தில் குடியுரிமை அடிப்படையில் மனித
உரிமையை நிலைநாட்டுகிற அந்தக் கழகத்தில் பேசப்பட்ட
இந்திய பிரதிநிதியின் கருத்தாக இருந்தாலும் சரி; இலங்கையி
லிருந்து இந்தியாவிற்கு 1983 ஆம் ஆண்டிலே 50 ஆயிரம் அகதிகள்
வந்தார்கள். அதற்கு முன்னாலே ஒப்பந்தப்படி மூன்று
லட்சத்து 50 ஆயிரம் பேர்கள் வந்தார்கள். இந்த ஒரு மாதத்தில்





15 ஆயிரம் பேர்கள் அகதிகளாக வந்திருக்கிறார்கள் இந்த
நிலைமை இந்தியாவைப் பாதிக்கிறது. இந்தியாவைப் பாதிக்கக்
கூடிய அளவிற்கு இலங்கையிலே இனப்பிரச்னை கலவரமாக வடி
வெடுத்து, சிங்கள இராணுவம் இந்த அக்கிரமத்திலே ஈடுபடுகிற
காரணத்தாலே எங்களுக்கல்லவா தலை வேதனையாக
இருக்கிறது? எனவே இந்தப் பிரச்னையைத் தீர்க்க இலங்கைப்
பேரரசு முன் வரவேண்டுமென்று வலியுறுத்துகிற முறையில்தான்,
அவர்கள் கருத்து இருக்கிறது. இலங்கையிலே மனித உரிமை,
அடிப்படை குடியுரிமை, நசுக்கப்படுகிறது, லெபனானில் உள்ள
இஸ்லாமியத் தோழர்கள் இஸ்ரேல் படையால் தாக்கப்பட்டு
அழிக்கப்படுகிறபோது இந்திய அரசு காட்டுகிற அந்தக் கருணை
உள்ளம், அதிலே காட்டுகிற அக்கறை, அதைக் கண்டித்து வெளி
யிடுகிற தீர்மான வாசகம், இன்னும் சொல்லப்போனால் தென்
ஆப்பிரிக்காவில் அல்லது ஆப்பிரிக்காவின் வேறு பகுதியில் 200,
500 கறுப்பு நிறத்தவர்கள் கொலப்படுகிறபோது இந்திய அரசு
அதிலே காட்டுகிற நியாய உணர்வு, அதிலே எடுத்துப் பேசுகிற
தர்ம நியாயம், தமிழர்கள் அழியும்போது பிறக்கவில்லை.
இலங்கையிலே மனித உரிமை பறிக்கப்பட்டு, அழிக்கப்படுவதைக்
காணும்போது நமது அரசு அதைச் சகித்துக் கொண்டிருக்காது
என்னும் ஒரு வார்த்தையை கூட இதுவரையில் இந்தியாவின்
பொறுப்பிலே இருக்கிற பிரதமரும், அமைச்சர்களும் தெரிவிக்க
வில்லை என்பதை நான் வெட்கத்தோடு குறிப்பிட விரும்பு
கிறேன்.

நடுநிலைப் பத்திரிகையான ஒரு ஏட்டில் அண்மையில்
எழுதப்பட்ட ஒரு தலையங்கத்திலே தெரிவித்து இருக்கிறார்கள்.
இந்திய அரசு படை எடுக்காவிட்டாலும் போகட்டும், இந்திய
அரசு அப்படிப்பட்ட நிலைமை நீடிக்குமானால் உங்கள்
நாட்டோடு உள்ள நட்புறவை முறித்துக்கொள்ள வேண்டிய
நிலைமையை அது ஏற்படுத்தும் என்றாவது சொல்லி இருக்கக்
கூடாதா? உங்களுடைய நட்பு எங்களுக்குத் தேவையில்லை.
நீங்கள் செய்து கொண்டிருக்கிற அக்கிரமங்களைப் பொறுத்துக்
கொண்டு நாங்கள் உங்கள் நாட்டோடு நட்புறவு கொண்டிருக்
கிறோம் என்று சொல்ல மறுப்போம் என்று சொல்லவாவது
இந்திய அரசு தயார் ஆயிற்றா? அல்லது அப்படித் தயாராக
வேண்டுமென்று இந்த மாநில அரசு, அந்த அளவிற்காவது
வலியுறுத்தியதா? தமிழனுடைய அரசுதான். தமிழ்நாட்டு

[திரு. க. அன்பழகன்] [1985 மார்ச் 16

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுதான். 117 லட்சம் வாக்காளர்கள் வாக்களித்து இருக்கிறார்கள். அந்த 117 லட்சம் மக்களுக்கே இலங்கைத் தமிழர்களைப் பற்றி அக்கறை இல்லை என்று யாரும் கூற முடியாது. இந்த அரசு அந்த அளவிற்காவது மத்திய அரசை நோக்கி நீங்கள் இலங்கை அரசோடு உள்ள நட்புறவை முறித்துக் கொண்டாவது நியாயத்தை வலியுறுத்துங்கள் என்று கேட்கக் கூடிய நிலைமை உண்டா?

அண்மையிலே இலங்கைக்குச் செல்லவேண்டிய, கொழும்புக்குச் செல்ல வேண்டிய விமானம் ஒன்று திருவனந்தபுரத்திலே இறங்கி, அதிலே ஏராளமான போர்த் தளவாடங்கள் இருந்ததாகச் சொல்லப்பட்டு, அதுவும் அரசாங்கத்தின் சார்பிலே உள்ள அதிகாரிகளால் சொல்லப்பட்டு, அந்தப் போர் தளவாடங்களோடு இங்கே வந்து இறங்கிய காரணத்தால், இந்த நாட்டின் மூலம் இலங்கைக்குச் செல்வது முறைகேடு; மேலும் அந்தக் கருவிகள் இலங்கையிலுள்ள தமிழர்களுக்கு எதிராகப் பயன்படுத்தக்கூடியவை என்பதால் நிறுத்தி வைக்கப்பட வேண்டுமென்ற கருத்தைச் சொல்லிக் கொண்டிருக்கும்போதே இந்திய நாட்டினுடைய பிரதமர் 'take a lenient view' என்று சொல்லி அந்த விமானத்தை இலங்கைக்கு அனுப்பியுள்ளது எங்களைப் போன்றவர்களுக்கு இந்த நாட்டினுடைய பிரதமருக்கு இராஜதந்திரம் கூட இல்லை என்று சந்தேகப்படச் செய்கிறது. இன்னும் சொல்லப் போனால் நேற்றைய தினம் நாடாளுமன்றத்தில் அவர் தெரிவித்திருக்கிறார் it did not contain any weapon, but it is only ammunition என்று. துப்பாக்கிகள் இல்லை; துப்பாக்கிக் குண்டுகள்தான் போயிற்று என்று சொல்கிறார். அம்யூனிஷன் என்றால் போர்க் கருவிகளுக்குப் பயன்படுத்தி, அதன் மூலமாக எதிரிகளை அழிக்கப் பயன்படுவது. யாரை அழிக்க பயன்படுத்தப்போகிறார்கள்? இலங்கைக்கு அம்யூனிஷன் எதற்காக? ஒருவேளை இந்திய அரசிடமே கூட அவர்கள் கேட்பார்களே யானால் அமெரிக்க நாடு வெளிநாடுகளுக்கு அனுப்புகிற போர்க் கருவிகளைப் பற்றிச் சொல்கின்ற அந்த வாதத்தின் முறையில் நாங்கள் நேரடியாகக் கருவிகள் அனுப்பவில்லை; நாங்கள் அனுப்பியது அம்யூனிஷன்தான் என்று கூறும் முறையில், இந்திய அரசு இலங்கைக்கு அம்யூனிஷன் கொடுத்தால்கூட கொடுக்கலாம் என்று நாங்கள் வேதனைப்படுகிறோம். ஒரு பிரதமர் இப்படிப் பட்ட பதிலை நாடாளுமன்றத்தில் சொன்னது வருத்தத்துக்கு



1985 மார்ச் 16] [திரு. க. அன்பழகன்]

அவர் என்ன சொல்லியிருக்கலாம்? இலங்கையில் நடக்கிற பேச்சுவார்த்தை நல்லமுறையில் முடியும் என்ற காலகட்டத்தில் வந்திருப்பதால் அனுமதித்துவிட்டோம், இனி அப்படிச் செய்ய மாட்டோம் என்று சொல்லியிருந்தால் ஓரளவு சமாதானமாகவாவது இருந்திருக்கும்.

இலங்கைத் தமிழர்கள்தான் அங்கே சீரழிந்துகொண்டிருக்கிறார்கள் என்றால் இங்கு அகதிகளாக வருகிறவர்களும் அப்படிப்பட்ட சீரழிவில்தான் இருந்துகொண்டிருக்கிறார்கள். அகதிகளாக வருகிறவர்களுக்கு ஓரளவுக்குத் துன்பம், துயரம் இருக்கும், அது தவிர்க்க முடியாதது. இருந்தாலும் அகதிகளைக் காப்பாற்றுகிற போது, ஓரளவு சங்கடங்கள் நேர்ந்தாலும், இது தமிழக அரசின் பொறுப்பு அல்ல, மத்திய அரசுதான் பொறுப்பு என்று மெத்தனமாக இருக்காமல், மாநில அரசும் பெரும் பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

இலங்கையிலிருந்து இந்தியாவுக்கு அகதிகளாக வருகின்றவர்கள் இரண்டுவேளை உணவு கொடுப்பதற்காக இங்கே வரவில்லை. இலங்கையில் வாழமுடியவில்லை என்பதால்தான் இங்கே வந்துகொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் இங்கே வாழ வழிவகைச் செய்துதர வேண்டும்; வேறு வழியில்லை. இந்திய அரசு பங்களாதேஷ் அகதிகளுக்குக் கொடுத்ததைப்போல, இலங்கை அகதிகளுக்கும் வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று நான் கருதினாலும், அத்தகைய வசதி கிடைக்கும் என்று எதிர்பார்க்கவில்லை. இருந்தாலும் கிழக்கு வங்காளத்திலிருந்து வந்த அகதிகளுக்கு மேற்கு வங்காளத்தில் எத்தகைய வசதி செய்யப்பட்டது என்பதை எண்ணிப்பார்த்து அந்த அளவுக்காவது செய்ய வேண்டும். இன்னும் சொல்லப் போனால் கடந்த பத்து நாட்களுக்கு முன்னால் வரை அவர்கள் பல்வேறு வகைகளிலே துன்பப்பட்டார்கள், துயரப்பட்டார்கள் அகதிகள் முகாமிலே. அவர்களுக்குப் பல தொல்லைகள் ஏற்பட்டன. அவர்கள் கொண்டுவந்த பொருள்களை எல்லாம் சோதனை போட்டார்கள். ஏனென்றால் அவர்கள் எல்லாம் போலந்து நாட்டிலேயிருந்து அம்யூனிஷன் கொண்டு வந்திருப்பார்கள், வெப்பன்ஸ் கொண்டு வந்திருப்பார்கள் அல்லவா, அதனால் சோதனை போட்டார்கள். சோதனை போடுகிறபோது அவர்கள் நான்கு புடவைகள் கொண்டு வந்திருந்தால் அவற்றிலே ஒன்றை எடுத்துக் கொண்டு மூன்றைக் கொடுத்திருக்கிறார்கள். ஏனோ

[திரு. க. அன்பழகன்] [1985 மார்ச் 16

தமிழ் நாட்டில் நீண்டகாலமாகத் தமிழனுக்கு இப்படி ஒரு மனப்பான்மை வளர்ந்து கொண்டிருக்கிறது. இத்தகைய துன்பங்களை அவர்கள் அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். இப்போது அப்படி நீடிக்கவில்லை என்று கருதுகிறேன். இலங்கை அகதிகள் பிரச்சனையில், மனிதாபிமான அடிப்படையில் அதை அணுகி, இந்தப் பணிக்காக எவ்வளவு செலவிட்டாலும், அதை ஒரு நன்றிக் கடனாக ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொன்றையும் இங்கே தெளிவுபடுத்துவதற்காகச் சொல்கிறேன். நேற்றையதினம் தமிழ்நாட்டிலுள்ள மிகப்பெரும் தலைவர்கள், பல்வேறு துறைகளைச் சேர்ந்தவர்கள்—முன்னாள் நிதி அமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம், முன்னாள் முதலமைச்சர் திரு. பக்தவத்சலம், முன்னாள் உயர்நீதிமன்ற நீதிபதி திரு. எம். எம். இஸ்மாயில் இப்படிப்பட்ட பல்வேறு அறிஞர்கள் ஒன்றுகூடி ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கிறார்கள். அதிலே அவர்கள் குறிப்பாக ஒன்றைச் சொல்லியிருக்கிறார்கள்.

While all should work to preserve the unity and integrity of the Island, the Tamils cannot and will not be content to remain a suppressed minority of second-class citizens. The only rational and enduring solution is a political structure ensuring genuine regional autonomy for the northern and eastern districts and equal rights and opportunities for all citizens of Sri Lanka.

என்று தெரிவித்திருக்கிறார்கள். இந்தக் கருத்து, இந்த எண்ணம் நிறைவேறும் என்ற நம்பிக்கையைத் தெரிவித்திருக்கிறார்களா என்றால் இல்லை என்பதை கவலையோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இது தவிர, இன்னொன்றையும் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். ஆனால் அதற்கு நேர் மாறான நிலைமைதான் இலங்கையில் நடந்து கொண்டிருக்கிறது.

(முற்பகல் 10-10)

அதற்கு நேர்மாறான காரியங்கள். இரண்டாம்தரக் குடிமக்களாக அந்த உரிமைகள்கூட அவர்களுக்கு இல்லாமல், குடியிருக்கிற வீடுகளிலேகூட அவர்கள் குடியிருக்க முடியாமல், அவர்கள்



1985 மார்ச் 16] [திரு. க. அன்பழகன்]

நடமாட முடியாமல், தொழில் நடத்த முடியாமல் மீன் பிடிக்கிற கடமையைக் கூட மீனவர்கள் செய்ய முடியாமல் துன்பப்படுத்தப் பட்டு, தமிழர்களை துன்பப்படுத்துவதனாலேயே அவர்கள் ஓடி விடவேண்டும் என்று கருதுகிற இலங்கை அரசினுடைய நடவடிக்கை, ஓர் ஆண்டுக் காலம், 2 ஆண்டுக்காலம், 3 ஆண்டுக்காலமாக நடைபெற்று வருகிறபோது இந்த நல்லுரை, நல்ல கருத்து அந்த இலங்கை அரசாலே ஏற்றுக்கொள்ளப்படும் என்று நம்புவதற்கு வழியே கிடையாது. இலங்கை அரசு இவைகளை ஏற்றுக்கொள்ளாமல் அங்கே உள்ள தமிழர்களால்மட்டும் விதாயம் காண முடியாது. அவர்கள் வாழும் வழி காண்பதாக இருந்தால், என்றைக்கு விடுதலைப்புலிகள் வெற்றி பெறுகிறார்களோ, அன்றைக்குத்தான் அவர்களுக்கு வாழ்வு.

இன்னும் சொல்லப்போனால், இந்தியாவிலேயிருந்து அங்கே போய் இருக்கிற தமிழர்களின் சார்பாக தலைவராக இருக்கிற தலைவர் தொண்டமான் அவர்கள் இங்கே வந்தபோது பேசினார்கள். இலங்கைத் தமிழர்களை இங்கே அகதிகளாக ஏற்றுக்கொள்கிற காரணத்தால்தான் அவர்கள் வருகிறார்கள், எனவே ஏற்றுக்கொள்ளக்கூடாது இந்திய அரசு என்று சொல்கிறார். ஏன் என்றால் அவர் மிகப் பெரிய நீதிமான். அவர்கள் உலகம் தெரிந்த அறிஞர். எப்படி எது கிடைக்கிறதோ, அதற்காக அப்படி வளைந்து பழக்கப்பட்டவர். எனவே அவர்கள் பேசிய அந்தக் கருத்து கண்டனத்திற்குரியது. தமிழன் வேறு கதியில்லாமல் வருகிற தமிழன், ஏழை, தமிழன், ஒன்றும் அமைச்சராக இருந்துவிட்டு ஓடிவருகிற தமிழன் அல்ல. அல்லது மருத்துவமனை பெயரைச் சொல்லி தமிழ்நாட்டில் உள்ள குடும்பங்களைக் காப்பாற்ற வருகிறவன் அல்ல. அப்படி வருகிற அந்தத் தமிழர்களுக்கு இங்கே வாழ்வு அளிப்பதைக் கூட அவர்கள் கேலி செய்து, மறுநாள் அவர் தன்னுடைய பேச்சை திருத்திக் கொண்டு வேறு கருத்தைப் பேசி இருந்தாலும் கூட, அப்படிப் பேசுகிற தமிழர்களுக்கு கூட இலங்கைப் பாராளுமன்றத்தில் கண்டனத் தீர்மானம், நம்பிக்கையின்மைத் தீர்மானம் தான் வருகிறது என்பது எதைக் காட்டுகிறது? தமிழர்களைப் பற்றி இலங்கை அரசு துச்சமாகக் கருதுகிறது என்பது மட்டுமல்ல, இனி அவர்கள் அங்கு மிச்சம் இருக்கக் கூடாது என்ற கருத்தைக் கொண்டு செயல்படுகிறது. இன உணர்ச்சி மற்று

[திரு. க. அன்பழகன்] [1985 மார்ச் 16

இனத்திற்கு எல்லாம் அப்படி வளர்ந்து வருகிறது.
நம்முடைய நாட்டிலே தமிழன் என்ற இன உணர்வைப் பற்றிப்
பேசினால், சில பேர்கள் தவறாகக் கருதுகிறார்கள். இனம்
என்று பேசினாலே இனம் கெட்டுவிடும் என்று கருதுகிறார்கள்.
இனம் என்று பேசுவதே தரக் குறைவு என்று கருதுகிறார்கள்.
இங்கேயிருக்கிற தேசியத்திலே, தமிழன் தன்னை அடையாளம்
காட்டிக்கொள்வது கூட தவறு என்ற ஒரு கருத்து இருக்கிறது.

ஆனால் அங்கே ஒரு இனம் இன்னொரு இனத்தை அழிக்கிற
சாட்சி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அப்படிப்பட்ட கால
கட்டத்தில் நான் இந்த அரசை வலியுறுத்திக் கேட்டுக்கொள்ள
விரும்புகிறேன். இந்த ஆட்சிதான் இருக்கும் என்ற நம்பிக்கை
யோடு, தமிழர்களைப் பாதுகாப்போம் என்ற பெருமையாவது
நமக்கு இருக்கும் என்ற எண்ணத்தோடு, இந்த அரசு மத்திய
அரசாங்கத்தைப் பார்த்து, "இலங்கைத் தமிழர்கள்
பிரச்சனையிலே நீங்கள் சமாதானம் பேசுகிற காலகட்டம்
ஓர் ஆண்டுக்கு முன்னரே போய்விட்டது. இருந்தாலும்
பேசுவதாகச் சொல்லிக் கொண்டு இருக்கிறீர்கள். நேற்றைய
தினம் கூட பிரதமர் பேச்சு வார்த்தை நடக்கும் என்ற அந்தக்
கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே இனி பேச்சு
வார்த்தைக்கு ஒரு பொருளற்ற நிலைமை ஏற்பட்டு இருப்பதன்
காரணமாக, இலங்கைத் தமிழர்களைக் காப்பாற்ற இந்திய அரசு
தீவிர நடவடிக்கை எடுத்தாக வேண்டும் என்பதையும்,
யு.என்.ஓ. போன்ற அமைப்பில் இலங்கையில் நடைபெறுகிற
அட்டூழியம் மனித உரிமைகளுக்கு மாறுபட்டது என்பதை
எடுத்துச் சொல்லுகிற கடமையை இந்திய அரசு ஏற்றுக்
கொள்ள வேண்டும் என்பதையும், உலகம் முழுவதும் அதற்கான
பிரச்சாரம் நடைபெற வேண்டும் என்பதையும்" வலியுறுத்த
வேண்டுமென்று இந்த அரசினை நான் வலியுறுத்தக் கடமைப்பட்
டிருக்கிறேன். இதைக்கூட செய்யாமல் வேறு என்னதான்
செய்யப்போகிறோம், என்று நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

தி.மு.க. வைப் பொறுத்தவரையில் கிட்டவட்டமாக நான்
சொல்ல விரும்புகிறேன். இலங்கைத் தமிழர்களுக்கு தனி நாடு
காண்பதைத் தவிர வேறு வழியில்லாத கட்டம், அவர்கள் மீது
திணிக்கப்பட்டு விட்டது. இனி இலங்கையில் உள்ள தமிழர்கள்,
சிங்களவர்களுடன் சேர்ந்து வாழ்வது என்பதற்கு வழியே



1985 மார்ச் 16] [திரு. க. அன்பழகன்]

இல்லை. அவர்கள் விரும்பி ஒத்துக் கொண்டாலும் கூட, அந்த
வாழ்க்கை நிலைக்கவோ, நீடிக்கவோ முடியாது, என்ற
நிலைமைக்குத்தான் அவர்கள் ஆளாகியிருக்கிறார்கள். இதை
நாங்கள் தேர்தல் நேரத்திலே வலியுறுத்தி, ஈழத் தமிழகம், தனித்
தமிழகமாக ஆவதன் மூலமாகத்தான் இலங்கைத் தமிழர்களுக்கு
வாழ்வு கிடைக்கும் என்பதை நாங்கள் சுட்டிக்காட்டி
யிருக்கிறோம். மத்திய அரசு அண்டை நாடுகளைக் குறித்து
அப்படிப்பட்ட ஒரு கொள்கையை ஒத்துக்கொள்ளாத அரசாங்கம்
அல்ல. பங்களாதேஷ் பிறந்தபோது, எந்த அடிப்படையிலே
ஒத்துக்கொண்டார்கள். பாகிஸ்தானுடைய ஒற்றுமையிலே
இன்டகிரிட்டியிலே தான் தலையிடுகிறோம் என்று அவர்கள்
கருதினார்களா? அப்படித் தலையிட்டு, அதை இரண்டாக்குவது
முறையல்ல என்று எண்ணினார்களா? உலகத்திலே உள்ள வேறு
சில நாடுகள் பிறப்பதைக்கூட. நியாயம்தான் என்று ஒப்புக்
கொள்கிற இந்திய அரசு, இலங்கைப் பிரச்சினையில்
மட்டும் பாரபட்சமாக இருக்கிறது என்று சொன்னால்,
யாரோ ஒருவர் சொன்னார், சிங்களவர்களாக இருந்தாலும்,
தமிழர்களாக இருந்தாலும் இரண்டு பேரும் இந்தியாவிலேயிருந்து
இலங்கைக்கு குடியேறியவர்கள்தான் என்கிற முறையிலே.

ஒருவேளை அப்படிக் குடியேறியவர்களுள், அவரவர்கள்
இந்தியாவில் எங்கேயிருந்து போய் அங்கு குடியேறினான்
என்பதைப் பொறுத்தோ, என்னவோ என்று கருத
வேண்டிய நிலைமை எங்களுக்கு ஏற்படும் என்பதை நான் தெரி
விக்க விரும்புகிறேன். ஒருவேளை ஈழத்திலே இருக்கிற 15 லட்சம்
தமிழர்களுக்காக, இலங்கையிலே வாழ்கிற மிச்சம் இருக்கிற
10 லட்சம் இந்தியத் தமிழர்களுக்காக ஒரு தனி நாடு கேட்பதை
ஆதரிக்கும் நீங்கள் தமிழ்நாட்டில் 4 கோடியே 85 லட்சம் மக்கள்
இருக்கிறார்களே, அவர்களுக்காகத் தனி நாடு கேட்கவில்லையே
ஏன் என சிலர் ஒருவேளை கேட்கக்கூடும். அறிஞர் அண்ணா
அவர்களே அதைக் கைவிட்டுவிட்டார்கள் என்பதுதான் நாங்கள்
சொல்கிற ஒரு விளக்கம். இன்னொரு விளக்கம், இந்த
நாட்டிலே இன்னும் அடிப்படை உரிமையிருக்கிறது என்று நம்பிக்
கொண்டு இருக்கிறோம் நாங்கள். இந்த நாட்டிலே குடியுரிமை
பறிக்கப்படவில்லை என்று நம்புகிறோம். ஒருவேளை
நம்முடைய உரிமைகளை நிலைநாட்டுகிற செல்வாக்கு, ஆற்றல்
இல்லாமல் இருக்கலாமே தவிர, சட்டப்படி, அரசியல் சட்டப்படி

அனைவருக்கும் உரிமையிருக்கிறது. மிச்சம் மீதி இருக்கிற
மொழி உரிமையை, பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் வழங்கிய
உறுதிமொழியை அவர்கள் காப்பாற்றக் கடமைப்பட்டிருக்கி
றார்கள். அதைக் காப்பாற்றிக்கொள்ளப் போகிறோமா, அல்லவா
என்பதுதான் கேள்வியே தவிர, நமக்கு வேண்டுமானால் நமக்கு
கிடைத்திருக்கிற உரிமையைக் கொண்டு வளர்வதற்கான வாய்ப்பு
இருந்தியாவினுடைய சூழ்நிலையில் இல்லாமல் இருக்கலாமே
தவிர, இங்கே குடியுரிமை இல்லை என்று நான் கருதவில்லை.
அப்படி ஒரு நிலைமை இலங்கையில் உள்ளதுபோல், இங்கே
குடியுரிமை, மொழி உரிமை பறிக்கிற நிலைமை வருமானால்
அப்போது தமிழ்நாடு பிரியத்தான் வேண்டும் என்று வாதிடு
வதிலே நான் ஒன்றும் பின்நின்றுவிட மாட்டேன் என்பதை இந்த
அவையிலே உள்ள நண்பர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இலங்கைத் தமிழர்களைப் பொறுத்த வரையில், அவர்கள்
உரிமைக்காகத் திராவிட முன்னேற்றக் கழகம், தன்னுடைய
சக்திக்கு ஏற்ற அளவுக்கு தொடர்ந்து ஏதாவது ஒரு போராட்ட
தைச் செய்து வந்திருக்கிறது. இது அரசியல் கட்சி நோக்கத்தி
காக அல்ல. இலங்கைத் தமிழர்களுக்காக இங்கே இருக்கிற
இரண்டு கட்சிகளில், ஒன்று அண்ணா திராவிட முன்னேற்றக்
கழகம் இல்லையானால் திராவிட முன்னேற்றக் கழகம், யாராவது
முனைப்போடு செயலாற்றினால்தான், மத்திய அரசுக்கு
அதனுடைய விளைவுகளைச் சுட்டிக்காட்ட முடியும். தமிழ்
மக்களிடம் ஏற்படும் அதன் விளைவுகளை உணர்த்த முடியும்.
அப்படி உணர்த்திய சில கால கட்டத்தில் மத்திய அரசு
நம்மோடு ஒத்துப் போவதாகக் காட்டியிருக்கிறது. ஆனால்
செயல்படவில்லை.

எனவே, அப்படிப்பட்ட நிலையில் திராவிட முன்னேற்றக்
கழகம் ஒரு எதிர்க்கட்சியாக இருக்கிற காரணத்தினால்,
ஆளும் கட்சியாக இல்லாத காரணத்தால், அந்தப் பொறுப்பை
நிறைவேற்ற வேண்டியிருக்கிறது என்பதற்காக நிறைவேற்ற
கிறோமே தவிர, ஒரு அரசியல் கட்சிக்கு ஏதாவது ஒரு
போராட்டம் வேண்டும் அல்லது ஏதாவது ஒரு செயல் வேண்டும்
என்பதற்காக அல்ல என்பதையும் சொல்லிக் கொள்கிறேன்.





இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் சிலர், ஏதோ திராவிட
முன்னேற்றக் கழகத் தலைவர் கலைஞர் கருணாநிதி ஆட்சிக்
காலத்திலேதான் இங்கே இலங்கையிலிருந்து வந்த குட்டிமணி
என்னும் யோகச்சந்திரன் என்ற அந்தத் தோழரையும்,
அவர்களைச் சேர்ந்தவர்களையும் கைது செய்து அவர்களைக்
காட்டிக் கொடுத்ததாகப் பேசினார்கள். ஒருவேளை இந்த
அவையிலே அதற்கு முன்னாலே சொல்லப்பட்ட விளக்கங்கள்
அவருக்குத் தெரிந்திருக்காது. தெரியாத காரணத்தினாலேதான்
அவர்கள் சொல்லியிருக்கக் கூடும் என்றாலும் இந்த அவையிலே
அது இடம் பெற்ற காரணத்தினாலே, அவருடைய சார்பில் நான்
கூற விரும்புகிறேன். மிக விரிவான கடிதம் இது. குட்டிமணி
என்னும் யோகச்சந்திரன் எழுதிய கடிதம் அது. அவர்
சிறைச்சாலையில் இருந்த காலத்தில், வழக்கறிஞர் ஒருவர்
கண்டு, கரிகாலன் என்ற அவருடைய வழக்கறிஞர் கண்டு,
அவரிடம் இருந்து பெற்றது இது. அந்தக் கடிதம் முழுவதும்
வேண்டுமானாலும் அதைத் தலைவரிடத்திலே ஒப்படைக்க நான்
தயாராக இருக்கிறேன். அந்தக் கடிதத்தில் குறிப்பிட்ட பகுதியை
மட்டும் படித்துக் காட்டினால் பொருந்தும் என்று நான் எதிர்
பார்க்கிறேன்.

"உண்மையில் அந்த நாட்களில் நாங்கள் சார்ந்துள்ள தமிழ்
ஈழ விடுதலை இயக்கம் பற்றியோ, எமது போராட்டச்
செயல்பாடுகளைப் பற்றியோ, தமிழகமோ, தமிழ்நாடு அரசோ
சரியாக அறிந்துகொள்ளும்படி இருக்கவில்லை. இலங்கைப்
போலீசார் கள்ளக் கடத்தல்காரர்கள் என்றே எம்மைப் பற்றிப்
பொய்யாகப் புனைந்து கூறி இந்திய மத்திய அரசை ஏமாற்றி,
எம்மை இலங்கையிலிருந்து நாடு கடத்துவதற்கு மத்திய அரசிடம்
ஒப்புதல் பெற்றனர். எமது இயக்கத் தோழர்கள் அந்த
நோக்கில், தமிழ்நாடு அரசிடமோ, கலைஞரிடமோ எமது
விடுதலைப் போராட்ட ஈடுபாடுகளைப் பற்றி எடுத்துக்
கூறவில்லை. எமது ஈடுபாடுகளை யாம் இரகசியமாக
வைத்திருந்த காரணத்தினால், இயக்க கட்டுப்பாட்டை மீறி
யாம் யார் என்பதை தமிழ்நாடு போலீசாருக்கு கூட கைது

செய்யப்பட்ட வேளையில் வெளிப்படுத்தவில்லை. போலீசார்
தான் கைது செய்தார்கள், வேதாரண்யம் பகுதியிலே—
அவர்களிடம்கூட நாங்கள் சொல்லவில்லை. அவற்றை யாம்
வெளிப்படுத்தியிருந்தால் கலைஞரின் கழக அரசும், இந்திய
மத்திய அரசும் எங்களை இலங்கை சிங்கள அரசிடம் கையளிக்க
விடாது, எம்மை தலையிட்டுத் தடுத்திருக்கும், என்பது உறுதி.
இத்தகைய பின்னணியில் தலைவர் கலைஞர் எம்மைக் காட்டிக்
கொடுத்தார் என்றும், இலங்கை அரசிடம் எம்மை கையளித்தார்—
கையளித்தார் என்பது ஒப்படைத்தார் என்று பொருள்—
என்றும் பழி சுமத்துவது உண்மைக்குப் புறம்பானதும், நியாயம்
அற்றதும் ஆகும். இதனால் கலைஞரும், கழகத் தோழர்களும்
புண்பட்டிருந்தால் வருந்துகிறோம்" என்று, இந்த அவையிலே
அன்று ஆளும் கட்சியின் சார்பாக அப்படிச் சொல்லப்பட்ட
காரணத்தால், அதற்காக அவர்கள் கலைஞருக்கு வருத்தத்தைத்
தெரிவித்திருக்கிறார்கள்.

"இது குறித்து மக்களுக்கு நிலைமையை விளக்க எமது இயக்
கத்தின் மத்தியக் குழுவின் சார்பில் வெளியிடப்பட்ட அறிக்கை
12—9—1982 அன்று "முரசொலி" இதழில் வெளிவந்தமை பற்றி
வழக்கறிஞர் கரிகாலர் அவர்கள் மூலம் அறிந்து ஆறுதல்
அடைகிறோம். தமிழ் ஈழப் போராளிகளுக்கு ஆதரவு கொடுத்துக்
கொண்டும், குரல் கொடுத்துக் கொண்டுமிருந்த, தமிழ்நாட்டின்
அனைத்துக் கட்சித் தலைவர்களுக்கும் எனது நன்றியைத்
தெரிவித்துக் கொள்கிறேன். சிங்கள வெறியாட்சி மூட்டிய
வெள்ளித்தீயிலே நாம் வெந்து செத்தாலும் தமிழ் ஈழ விடுதலை
நிச்சயம் மலரும் என்பது உறுதி" என்று, குட்டிமணி என்னும்
யோகசந்திரன் அவர்கள் எழுதிய கடிதம் இது. அதனுடைய
ஓரிஜினல் காப்பி என்னிடத்திலே இருக்கிறது. 'போட்டோ'
படியாக எடுக்கிற முறையிலே எடுத்தது இது.

அவர்களுடைய துணைவியார் குட்டிமணி ராஜரூப ராணி
இப்பொழுதும் இங்கே இருக்கிறார்கள். அவர்கள் எழுதினார்கள்,
"எமது கணவர் தம்மைத் தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தில்
செயல்படுத்திய செயல் அதிபர் குட்டிமணி என்ற யோகசந்திரன்
இனவெறி பிடித்த சிங்கள ராணுவத்தால் படுகொலை செய்யப்
பட்டதைபொட்டி நானும் எனது குழந்தைகளும், எனது





உறவினர்களும் படும் துன்பத்தில், தமிழ் இன மக்கள் காட்டிவரும்
பரிவும் பாசமும் எங்களுக்கு ஓரளவு ஆறுதலை அளித்து
வருகிறது. இந்த நிலையில் எனது கணவரைத் திராவிட
முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தின்போது, முதலமைச்சர்
கலைஞர் அவர்கள் இலங்கை அரசிடம் பிடித்துக் கொடுத்து
விட்டார்கள் என்ற பிரச்னை ஒன்றை கிளப்பி அதனை ஒட்டிய
செய்தியையும் பத்திரிகையில் பார்த்து நாங்கள் அதிர்ச்சியும்
வேதனையையும் அடைந்துள்ளோம்.

இந்தப் பிரச்னை தேவையில்லாதது. முன்பு ஒரு முறை இந்தப்
பிரச்னை எழுந்தபோது தமிழ் ஈழ இயக்கத்தின் செயல் அதிபர்
மறுப்புத் தெரிவித்ததோடு, இந்த உண்மை நிலையையும் விளக்கி
உள்ளார்கள். அதேபோல இந்தப் பிரச்னையை எனது
கணவருக்குத் தெரிவித்தபோது, வெளிக்கடை சிறையில்
இருந்தபடியே கலைஞர் என்னை பிடித்துக் கொடுக்கவில்லை
என்று கடிதம் எழுதியுள்ளார். அதுவே உண்மை நிலையும் கூட,
"என்கிற இந்த கடிதம் குட்டிமணி அவர்களுடைய துணைவியார்
எழுதியது. இதை நான் படிப்பதற்கு மிக முக்கியமான காரணம்
இலங்கைப் பிரச்சனையில் நமக்கிடையிலே இருக்கிற
மாறுபாட்டின் காரணமாக, இந்தப் பிரச்னையிலே அங்கே உள்ள
தமிழர்களிலேயே (குறுக்கிடு)

(முற்பகல் 10-20)

அவர்கள் கடிதத்தின் தேதி பற்றிக் கேட்கிறார்கள் என்று
நினைக்கிறேன். 15-2-1983 என்னும் குறிப்புடன், செல்வராஜா,
யோகசந்திரன், வெளிக்கடை சிறைச்சாலை, கொழும்பு-9,
15-2-1983 என்னும் குறிப்புடன் அவருடைய கையெழுத்தும்
இருக்கிறது. அவருடைய வழக்கறிஞர் கரிகாலன்தான்
கடிதத்தைக் கொண்டு வந்தவர். நான் இதைச் சொல்வது,
இதனால் ஏதோ, அப்படி நீங்கள் குற்றம் சாட்டுவதினால்,
திராவிட முன்னேற்றக் கழகம் கலகலத்துப் போய்விடும்
என்று அல்ல, அப்படிக் கருதிக் கொண்டு சொல்லவில்லை.
நமக்கிடையே வீணான சந்தேகங்கள் தேவையில்லை.
ஒருவேளை இலங்கைத் தமிழனைக் காப்பாற்றுவதிலே, குரல்

கொடுப்பதிலே, காங்கிரஸ் கட்சி ஒருவகையாகவும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கட்சி ஒரு வகையாகவும், திராவிட முன்னேற்றக் கழகம் ஒருவகையாகவும் குரல் கொடுக்க நேரிட்டால்கூட அந்தக் குரலுடைய குறிக்கோள் ஒன்றாக இருக்க வேண்டும். தமிழர்கள் ஈழத் தமிழ்நாடு வேண்டும் என்று சொல்கிறார்கள். தமிழர்களை காப்பாற்றத்தான் இந்தியப் பிரதமர் சமாதானமாவது பேசட்டும் என்று காங்கிரசார் சொல் லட்டும். ஆளும் கட்சி, காங்கிரசார் சொல்கின்றபடி பிரதமர் பேசினால் மட்டும் போதாது, எச்சரிக்கைவிட்டாக வேண்டும் என்று வலியுறுத்தட்டும். அப்படியாவது அந்தக் கடமையை ஒரே குறிக்கோளோடு நிறைவேற்ற வேண்டுமே தவிர பின்னிட லாகாது, இந்தக் கடமையை நிறைவேற்றுவதில் ஏறத்தாழ எதிர் கட்சியில் உள்ள எல்லோருமே இந்த உணர்வு பெற்றிருக்கிறோம். அது குறித்து மகிழ்ச்சி தெரிவித்துக்கொள்கிறேன்.

நேற்றைய தினமோ, அதற்குமுன்னரோ, இங்கே பேசிய ஆளும் கட்சியினைச் சார்ந்த நண்பர்கள் சிலரும், எதிர்க்கட்சியினரான காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த நண்பர்கள் சிலரும், இலங்கையிலே தமிழர்கள் இந்தப் படுகொலைக்கு தொடர்ந்து ஆளாக்கப்படுவார் களானால் சிங்களவர்களுக்குப் பதிலடி கொடுக்கின்ற ஒரு காலம் வரும் என்று பேசியது தமிழர்களுக்குக் கொஞ்சம் தெம்பு ஏற்படுத்தக்கூடியதாக, நம்பிக்கை ஏற்படுத்தக்கூடியதாக இருக்கும் என்று நிச்சயமாக நம்புகிறேன்.

அடுத்து ஒன்றைத் தெரிவித்துக்கொள்கிறேன். இங்கே ஆளும் கட்சி நண்பர்கள் பேசுகின்றபோது, எதிர் கட்சித் தலைவர், கலைஞர் கருணாநிதி அவர்கள் மாண்புமிகு முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய படத்தையும், தன்னுடைய படத்தையும் சேர்த்து வெளியிட்டது. சுவரொட்டிகள் ஒட்டியது, எதிர் கட்சிக்கு மிகப் பெரிய கேவலம் அல்லவா என்று எங்களைப் பார்த்து தாங்கள் தாழ்ந்துவிட்ட நிலை அதுவென எங்களுக்கு காட்டிக் காட்டினார்கள். எம்.ஜி.ஆர். அவர்கள் படத்தை நாங்கள் போட்டால், அது எங்களுக்கு கேவலம் என்றால் தான் ஒத்துக் கொள்கிறேன். தேர்தல் நேரத்திலே எம்.ஜி.ஆர். பற்றி படம்





போட்ட காரணத்தால் நீங்கள் இந்த அளவாவது வெற்றி பெற்றீர்கள் என்றார்கள். எம்.ஜி.ஆருக்கு ஒரு கட்சி இருக்கிறது. உள்ளபடியே அவர் பெயரால், அவருடைய தலைமையில் இயங்கு கின்ற ஒரு இயக்கம் இருக்கிறது. அவருடைய படம் போடும் எண்ணம் எதனுடைய விளைவாக ஏற்பட்டது என்பதை குறிப்பிட விரும்புகிறேன்.

எம்.ஜி.ஆர். உடல் நலம் குறைந்து மருத்துவ மனையில் இருந்தபோது அவரைப் பார்ப்பதற்காக கலைஞர் அவர்கள் ஈரோட்டிலிருந்து உடனடியாக வந்தார்கள். என்னையும் அழைத்தார்கள். நானாக எதற்கும் போய்ப் பழக்கம் இல்லை. அது நாவலர் அவர்களுக்கும் தெரியும். அழைத்த காரணத்தால் அவரோடு நானும் போனேன். இல்லையானால், செய்தியைப் பத்திரிகையிலே பார்த்துவிட்டு விரைவில் நலம் பெறட்டும் என்று தான் இருப்பேன். அங்கு போனால் நாவலர் அவர்களும் இருந்தார்கள். மற்றவர்களும் இருந்தார்கள். முதல்வரைப் பார்க்க முடியவில்லை. பார்க்க யாரையும் அனுமதிக்கவில்லை. நான் நாவலர் அவர்களைக் கேட்டேன். என்ன நாங்கள்தான் பார்க்க முடியவில்லை. நீங்கள் போய்ப் பார்த்தீர்களா என்றேன். நானும் பார்க்க முடியவில்லை என்றார். பின் எப்போதுதான் பார்க்கப் போகிறீர்கள் என்றேன். அதுவும் தெரியவில்லை என்றார். முதல்வரை அமெரிக்காவிலேதான் போய்ப் பார்த்தார் என்று நான் கருதிக் கொண்டிருக்கிறேன்.

அப்படி ஒரு நிலைமை இருந்தபோது, சூழ்நிலை இருந்த போது, கலைஞர் அவர்கள், முதலமைச்சருக்கு ஏற்பட்ட கடுமையான நோயைப் பற்றி ஒரு எதிர்க் கட்சித் தலைவர் தன்னுடைய நல்லெண்ணத்தைத் தெரிவிக்க வேண்டாமா என்ற அந்த நல்லெண்ணத்தில் எழுதிய அந்தக் கடிதம் இது 'நானும் பிரார்த்தனை செய்கிறேன்' என்பது தலைப்பு. அதிலே, இந்த 12 ஆண்டு பகையையும், 40 ஆண்டுக் கால நட்பு, பனிக் கட்டியைப் போல் கரைந்துவிட்டதற்கு அடையாளம் உங்கள் நோய் பற்றி கேள்விபட்டவுடன் என் கண்கள் அருவிகள் ஆனதுதான். அந்த அருவியில் கருத்து மாறுபாடுகள் கரைந்து போகவில்லை. கசப்பு உணர்வுகள் இருந்த இடம் தெரியாமல் மறைந்து போய்விட்டன. மூதறிஞர் இராஜாஜி உடல்நிலையை கேள்விப்பட்டு, மருத்துவ மனைக்கு வந்த பெரியார் அப்படியே ஆடிப்போய்விடவில்லையா?

என்று கேட்டுவிட்டு பின்னாலே சொல்லுகிறார்கள். "என் இனிய நண்பரே, உங்களுக்காக நடைபெறுகின்ற பிரார்த்தனைகள் வெற்றி பெறட்டும். பாசம் மிகுந்த எனது பழைய காலத்துத் தோழரே, நீங்கள் அந்தப் பழைய புன்னகை முகத்தோடு எங்களைக் காண வாருங்கள். உங்களைக் காண எங்களுக்கு இப்போது அனுமதி இல்லை. பரவாயில்லை. நீங்கள் நலமெல்லாம் பெற்று எங்களைக் காண வந்தால் போதும். பிரார்த்தனைக்கு நன்றி என்பது மட்டுமல்ல, வேண்டுகோள் என்ற பொருளும் உண்டு. அந்த பொருளில் வேண்டு மானால் நானும் பிரார்த்தனை செய்கிறேன்" என்று அக் கடிதத்தில் எழுதியிருக்கிறார். அதையெல்லாம் நான் தொடர்ந்து படிப்பதை விட வேண்டுமானால், அவர் எழுதிய கடிதங்களை மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்டால் தரத் தயார்.

எனவே அப்படி எழுதப்பட்ட அந்த கடிதங்களில் ஏற்கனவே இருந்த பற்றை, பாசத்தை குறிப்பிட்டு, எழுதிய பின்னர்—ஆளும் கட்சி உடன்பிறப்புகள் 10, 12 பேர் தீ குளித்த நிலையில்—' உடன் பிறப்புகளே, உங்களுக்கு இருக்கின்ற உயிரினும் சிறந்த தலைவர் மீது இருக்கின்ற அன்புப் பெருக்கத்தை அறியாதவன் அல்ல நான். அவர்களுடைய உடல்நலம் மிகத் துன்புற்றிருந்த நேரத்தில், உங்களுடைய இதயம் எப்படித் துளைக்கப்பட் டிருக்கும் என்பதை என்னால் உணர முடியும். அந்தப் பற்றும் பாசமும் பெற்று, அவர் நீண்ட நாள் வாழ வேண்டுமென்பதே அல்லாமல், உங்களை நீங்களே கருகிக் கொள்வதற்குக் காரணமாக ஆக்கிவிடக் கூடாது. அவர் நலம் பெற்று வருகிறார்கள் என்ற நல்ல செய்திகள் அரசின் சார்பில் அறிவிக்கப்படுகின்றன. நான் இந்தக் கடிதம் எழுதும் நேரத்திலே முதலமைச்சர் அவர்கள் உடல்நிலையில் மேலும் முன்னேற்றம் என்ற செய்தியைத் தந்துள்ளார்கள். அந்தச் செய்திகள் தொடரட்டும், அவ்வாறு தொடர வேண்டுமெனத் தமிழகமே விழைகிறது" என்று எழுதியுள்ளார். ஆக தமிழகமே விழைகிறது என்று தான் எழுதினார். நானும் விழைகிறேன் என்று தான் எழுதினார். இந்தக் கடிதங்களைக் கூட ஆளும் கட்சி நண்பர்கள் பல பேர் அச்சகத்திலே கொடுத்து, அச்சடித்து மக்களுக்கு வழங்கியதை நான் சென்னையிலே பார்த்தேன். எனவே ஆளும் கட்சி நண்பர்களுக்கு இந்தக் கடிதம் மனதுக்கு ஆறுதலாக இருந்தது. எதிர்க்கட்சித் தலைவர் கூட நம்முடைய முதலமைச்





சருடைய உடல்நலம் விரைவில் நலம் பெறவேண்டுமென்று விரும்பு கிறார் என்ற நல்ல எண்ணத்திலே மகிழ்ச்சியடைந்தார்கள். மதுரையிலே அந்த மாவட்டச் செயலாளர் சொன்னார், எம்.ஜி.ஆர். படமும், கலைஞர் படமும், இரண்டையும் ஒன்றாக இணைத்து பல இடங்களில் இளைஞர்கள் அந்த நேரத்திலே அதை, தங்களுடைய உணர்ச்சியைக் காட்டுவதற்கு அடையாள மாக வைத்திருக்கிறார்கள். இதிலே ஒன்றும் அரசியல் பித்த லாட்டம் இல்லை. அந்த உணர்விலே தான் தேர்தலில் நாங்கள் எங்களுக்கு வாக்கு கேட்கிறோமே தவிர, எம்.ஜி.ஆர். உடல்நலம் பெறுவதைப் பொறுத்து நாங்கள் உடன்பட்டவர்கள் தான். முதல்வர் உடல் நலம் பெற வேண்டுமென்றுதான் விரும்புகிறோம், என்ற அடையாளத்திற்குக் கலைஞர் அவர்கள் அவருக்கு இருக்கிற அன்பு, ஆர்வம், வேகம் காரணமாகப் படத்தைப் போட்டார்களே தவிர, என்னைப் போல் கொஞ்சம் மாத்துப் போனவராக இருந்தால், இந்தக் காரியத்தில் ஈடுபட்டிருக்க மாட்டார். எனவே, அதை நான் இங்கே குறிப்பிடுவதற்குக் காரணம், அதையே ஒரு குற்றமாகப் பேசுவது என்றால், அரசியலிலே அது ஒரு நாகரீகமாகாது. ஒரு வேளை அதுதான் குற்றம் என்று சொன்னால், அந்தக் குற்றத்தை ஏற்றுக்கொள்ள நாங்கள் தயார். எம்.ஜி.ஆர். படம் போடுவது குற்றம் என்றால், ஏற்கனவே அவரது படங்களைப் பார்த்துக்கொண்டே தானே இருக்கிறோம். அரசாங்க ஏடுகளைப் புரட்டுகிறபோது 30 பக்கத்தில் 12 பக்கத்தில் அவருடைய படத்தைப் பார்க்கவில்லையா? அதற்காக நான் ஒன்றும் வருத்தப்பட்டதில்லை. எனவே இதில் நான் குறிப்பிடுவது ஒரு பக்குவமான மன நிலை ஏற்பட வேண்டுமென்பதே தவிர, வேறு அல்ல.

டாக்டர் கே. பி. இராமலிங்கம்: பாயிண்ட் ஆப் ஆர்டர், சார், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர் டாக்டர் கலைஞர் கருணாநிதி அவர்கள் ஒரு உன்னத மான நோக்கோடு அதைச் செய்திருப்பது உண்மையாக இருக்கு மேயானால், தேர்தல் காலத்தில், அவரைப் பக்கத்திலே வைத்துக் கொண்டு, ஆபரேஷனுக்குப் பிறகு எம்.ஜி.ஆர். 'டண், டண்டணாக்கு' என்று ஒரு பேச்சாளர், திரைப்பட நடிகர்

[டாக்டர் கே. பி. இராமலிங்கம்] [1985 மார்ச் 16

பேசுவதற்கு அவர் அனுமதித்தாரே, அதை எந்த நோக்கத்தோடு அனுமதித்தார் என்பதை விளக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, ஆளுங்கட்சியில் உள்ளவர்கள் வெளியிட்ட பல்வேறு விதமான செய்திகளைத் தொகுத்துப் பார்த்தால், அதற்கு இடையிலே வருகிற பல உண்மைகள் தெரியும். என்னென்ன விதமான செய்திகள் வெளியிடப்பட்டன. ஆளுங்கட்சியினால், எந்தெந்தத் தாப்பில், என்னென்ன பேசப்பட்டன என்பதும் நாடறியும். அதற்குள்ளே செல்வது என்னுடைய தகுதிக்கு ஏற்றதல்ல. எனவே நான் அந்த நியாயத்தை விளக்கிச் சொல்ல விரும்பவில்லை.

ஆனால் நான் இந்த அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். மிக முக்கியமான இன்றியமையாத சில பிரச்சினைகளில் கவனம் செலுத்த வேண்டுகிறேன்.

மின்சாரத்தைப் பற்றி குறிப்பிடும்போது அரசாங்கச் சார்பிலே குறிப்பிட்ட கருத்தை நான் வெளியிடுகிறேன். ஆளுநர் உரையில் அவர்கள் தெரிவிக்கிறார்கள். "தமிழ்நாடு மின் வாரியத்தின் கட்டுப்பாட்டிலுள்ள அனல்மின் நிலையங்களை முழுமையாகப் பயன்படுத்திக்கொண்டதன் பலனாக மின்சக்தி உற்பத்தி பெருமளவு உயர்ந்துள்ளது" என்று. இது ஆளுநர் உரையிலே, மார்ச்சு 8ஆம் தேதி அன்று. 7 ஆம் தேதி அன்றுதான் மின்வாரியத் தலைவர் ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரி தெரிவிக்கிறார், "இந்த ஆண்டு தமிழ் நாட்டில் மின்சாரத் தட்டுப்பாடு மிகக் கடுமையாக இருக்கும். இந்த ஆண்டில் 100 மெகாவாட் விசைப் பற்றாக்குறை எதிர்பார்க்கப்படுகிறது. புனல் மின் நிலையங்களில் நீர்த் தேக்க நிலைமைகள் மோசமாக இருப்பதும், சில அனல் மின் நிலையங்களில் உள்ள கோளாறுகளும் கூட இந்த நிலைமைக்குக் காரணமாகும்.

"எனவே ஆளுநர் உரை 8 ஆம் தேதி தரப்படுகிறபோது, 7 ஆம் தேதி அந்தத் துறையினுடைய, இலாகாவினுடைய பொறுப்பில் இருக்கிற தலைவரால் இவ்வளவு பெரிய ஒரு நெருக்கடியை எதிர்நோக்கிக் கொண்டிருக்கிறோம் என்று தெரிவிக்கப்பட்டிருக்கும் நிலையில்," ஆளுநர் உரையில் அந்த நெருக்கடியை எடுத்துக்காட்டவில்லை. இந்த நெருக்கடி



1985 மார்ச் 16] [திரு. க. அன்பழகன்]

இருப்பதன் காரணமாகத்தான், இங்கே பேசிய மாண்புமிகு
கம்யூனிஸ்டு கட்சி உறுப்பினர், திரு. சிந்தன் அவர்களும் மற்ற
நண்பர்களும் எடுத்துச் சொன்னதைப்போல் தமிழகத்தில் சிறு
தொழில்கள் எல்லாம் இயங்கமுடியாத நிலைமை ஏற்பட்டிருக்
கிறது. இன்னொரு பக்கம் பெரிய தொழிற்சாலைகள் பல
வாரத்தில், 2 நாட்கள் 3 நாட்கள் இயங்கக் கூடிய கட்டத்திற்கு
வந்து கொண்டிருக்கிறது.

இன்னும் சொல்லப் போனால், விவசாயிகளுக்கே இன்னும்
முறையாக மின்சாரம் வழங்கப்படவில்லை என்பதற்கு
என்னிடத்தில் ஏராளமான ஆதாரங்கள் உள்ளன. அண்மையிலே
ஒருவர் எழுதியிருக்கிறார். தொழில் தொடங்குவதற்காக
அரசாங்கத்தினுடைய ஒரு அமைப்பிலிருந்து கடன் வாங்கி,
அந்தக் கடன் தொகையைக் கொண்டு தொழிற்சாலை
கட்டுமானப் பணி முடிந்து கொண்டிருக்கின்ற நேரத்தில்,
மின்சார இணைப்பு காலத்தில் கிடைக்காத காரணத்தால் கடன்
தொகையைச் செலுத்த முடியவில்லை. ஒரு ஆறு மாத காலத்
திற்கு தவணையை ஒத்திவைத்துத் தரவேண்டுமென்று எழுது
கிறார். இப்படி தமிழ்நாடு முழுவதும் மின்சாரப் பற்றாக்குறை
யினாலே ஏற்பட்டிருக்கின்ற தொல்லைகள் மிக அதிகம்.
நாளுக்குநாள் தேவைகள் வளர்ந்து கொண்டே இருக்கின்றன.
இந்தத் தேவைகளுக்கு 73-ஆவது ஆண்டிலும், 74 ஆவது
ஆண்டிலும் என்ன நடைபெற்றது என்று கேட்கிறவர்கள்,
நாட்டின் நடப்பில் 74 அல்ல 84, 84 அல்ல 85 என்பதைத் ஆழ்ந்து
எண்ணிப்பார்க்க வேண்டும்.

(முற்பகல் 10-30)

1974-லிலே இருந்த தேவையைப் போல இரண்டு மூன்று மடங்கு
தேவையிருக்கிறது. தேவை ஏற்படுவதற்கு மூலகாரணமாக
அரசாங்கமே இருக்கிறது. தொழிலைத் தொடங்கச் சொல்
கிறது. விவசாயத்தை நடத்தச் சொல்கிறது. இவற்றை நடத்து
வதற்காக உதவி செய்வதாக சொல்கிறது. பம்புசெட் போடும்
படி சொல்கிறது. ஆனால் போட்டதற்கு பின்னாலே இங்கே
பெரிய ராஜபாளையம் காங்கிரஸ் கட்சி உறுப்பினர் எடுத்துச்
சொல்லியதுபோல் மின்சார இணைப்புப் பெற இன்னும் 6 ஆண்டு
காலம் ஆகும் என்று சொல்லக்கூடிய அவல நிலை இருக்கிறது.
அதிர்ஷ்டம் இங்கே ஆளும் கட்சி உறுப்பினர் சமயநல்லூரில் இருந்த

[திரு. க. அன்பழகன்] [1985 மார்ச் 16

மின்சார நிலையத்தை விற்று விட்டதைப் பற்றிச் சொன்னார்.
விற்க வேண்டியதை விற்க வேண்டிய காலத்தில் விற்காமல்
இருப்பதுதான் தவறு. இந்த நிலைமை எல்லாம் ஏற்பட்ட
இழப்புப் பற்றி எல்லாம் அமைச்சராக இருக்கும் ராமச்சந்திரன்
அவர்கள் அதற்கு பின்னாலே இந்தத் துறைக்கு பொறுப்பு
ஏற்றுக்கொண்டாலும்கூட, அவர்களுக்கு மிக நன்றாகத் தெரியும்.
இப்போதும் விற்க வேண்டிய ஒரு நிலையம் சென்னையிலே
இருக்கிறது. பேசின் பிரிட்ஜ் மின்சார நிலையத்தினால் ஏற்படுகிற
தூய்மைக் கேடு எவ்வளவோ. 4-லே ஒரு பங்கு கூட அதனால்
பயன் இல்லை. 10 மெகாவாட் அளவுக்குத்தான் மின் உற்பத்திச்
செய்கிறது. அங்குள்ள இயந்திரங்களில் மூன்றிலே இரண்டு
பங்கு பாழ் அடைந்து விட்டது. அந்த மின் நிலையம்
இன்னும் இயங்குகிற காரணத்தால் அந்த வட்டாரத்தில் உள்ள
மக்கள், ஏறத்தாழ 7 லட்சம் பேர் பாதிக்கப்படுகிறார்கள்.
தெருக்களிலே நடக்கிறபோது ஏறத்தாழ 1 அங்குலம் புகை அல்ல,
தூசி படிந்திருக்கிறது. அதனால் ஏற்படக்கூடிய நோய் 7 லட்சம்
பேரில் ஏறத்தாழ 70 ஆயிரம் பேரையாவது பாதிக்கிறது.

சுற்றுப்புற சூழலைப் பாதுகாப்பதற்கு ஒரு சட்டம். நீர்
நிலைகளைத் தூய்மையாக வைக்கப்படுவதற்காக ஒரு சட்டம்.
அதற்காக ஒரு அமைப்பு போர்டு இவ்வளவு இருந்தும் கூட, அந்த
நிலையம் தகுந்த அளவு மின் உற்பத்திக்கு பயன்படாமல் ஒரு
யூனிட்டுக்கு 1.10 ரூபாய் செலவாகிற நிலையில் இயங்குகிறது
ரயில்வேக்கு சொந்தமான நிலத்தில் இருப்பதால், ஆண்டு
ஒன்றுக்கு 1 லட்ச ரூபாய் அதற்காக வாடகை வேறு கொடுக்கப்
படுகிறது. இந்த நிலையில் உள்ள அந்த மின் நிலையத்தை
நிச்சயமாக அந்த இடத்தை விட்டு அப்புறப்படுத்தியாக
வேண்டும். அப்படி இல்லாவிட்டால் ஒருவேளை புகையே வராத,
மக்களுக்கும் கேடுகளை விளைவிக்காத முறையில் இயங்கும்
இயந்திரங்கள் அமைக்கப்பட வேண்டும். . எக்ஸ்பிரஸ்
பத்திரிகையிலோ, அல்லது இந்து பத்திரிகையிலோ ஒரு செய்தி
வந்திருக்கிறது. அதை நான் இங்கே படித்துக்காட்ட
வேண்டிய அவசியம் இல்லை எனக் கருதுகிறேன்.
அப்படி வேறு விதமாகச் செயல்படுகிற நிலையமாக
அது மாற்றப்பட்டால் அங்கு இருக்கலாம்; இல்லையென்றால்
அந்த நிலையத்தை உடனடியாக அப்புறப்படுத்த வேண்டும்.



1985 மார்ச் 16] [திரு. க. அன்பழகன்]

சுற்றுப்புறச் சூழல் கெடுகிறது, நோய் வளர்கிறது, மின்சார உற்பத்தி மிகக் குறைவு, அதற்கு ஆகிற செலவு மிக அதிகம். அதிலே ஈடுபட்டு இருக்கிற தொழிலாளர்கள் மொத்தம் 200. 250 பேர்கள் வேறுவிதமாக காண்டிராக்ட் தொடர்புடைய ஓர்க்கர்ஸ் ஆக இருப்பவர்கள் 450 பேர்கள்; இவர்களுக்கு, சென்னை நகரத்திலே வேறு இடங்களில் வேலை தர முடியும். அதைமாற்றி அமைக்க, அல்லது உடனடியாக நீக்க இந்த அரசாங்கம் ஆவன செய்ய வேண்டும் என்று, மக்களுக்குச் செய்யும் ஒரு கடமை என்ற வகையில் நான் வலியுறுத்திக் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். இன்னும் பல கருத்துக்கள் இருந்தாலும்கூட தொடர்ந்து இங்கு இருக்கத்தான் போகிறேன் என்ற எண்ணத்தோடு, மறுபடியும் வேறு வாய்ப்புகள் கிடைக்கும் என்று கருதி, ஒன்றை மட்டும் கூறி முடித்துக் கொள்ளலாம் என்று நினைக்கிறேன்.

ஏற்கனவே திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக இந்த சட்டமன்றத்திலே இடம் பெற்று இருந்த நானும் கட்சியின் தலைவர் கலைஞர் அவர்களும் சட்டப்பேரவையில் இருந்து ராஜினாமா செய்தது பற்றிக் குறைபட்டார்கள். அவர்கட்குக் கூறிக்கொள்வது இதுதான். எங்களிடத்திலே அது தான் இருந்தது. எனவே அதை ராஜினாமாச் செய்தோம். நீங்கள் அதைவிட பெரிய வாய்ப்பைக் கொடுத்தால் அதையும் நாட்டுக் காக எந்த நேரத்திலும் ராஜினாமாச் செய்வோம் என்ற உறுதியைக் கூறி முடித்துக் கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

**திரு. கு. வடிவேல்:** தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் திரு. அன்பழகன் அவர்கள் தேர்தல் காலத்திலே புரட்சித் தலைவர் அவர்கள் படத்தை அவர்கள் போட்டது அவர்கள் நல்ல முறையில் குணம் அடைய வேண்டும் என்ற நல்ல எண்ணத்தோடு தான் போட்டோம் என்று சொன்னார்கள். அப்படி தேர்தல் காலத்தில் தான் போட வேண்டுமா? அப்படி தேர்தல் காலத்திலே போட்ட அவர்கள் நல்ல எண்ணம் உள்ளதாக சொல்கிறவர்கள் அ.இ.அ.தி.மு.க. வோடு இணைத்துக் கொள்ள விரும்புகிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**திரு. க. அன்பழகன்:** தலைவர் அவர்களே, அதற்கு எல்லாம் விளக்கம் அரசியல் தெரிந்தவர்களுக்குத் தெரியும். ஆனால் அதை விட எம்.ஜி.ஆர். அவர்கள் அமெரிக்க மருத்துவ மனையிலே

நோய்வாய்ப்பட்டு இருக்கிறபோதே, தேர்தல் நடத்த வேண்டும் என்ற அவசியம் ஆளும்கட்சிக்கு வந்துவிட்டதே என்ற அந்த பரிதாபத்தைப் பார்த்துத்தான், அதைப்புரிய வைத்திட நாங்கள் அப்படி படம் போட்டுக் காட்டினோம்.

**திரு. உ. சுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவ்வாண்டு ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது நடைபெறுகின்ற விவாதத்தில் எங்கள் கட்சியின் சார்பாக சில கருத்துக்களை முன் வைக்கிறேன். அதிலே கூறப்பட்டுள்ள கருத்துக்களை ஒட்டி இந்த அரசுக்கு சுட்டிக் காட்ட வேண்டிய விஷயங்களை நான் சொல்ல விரும்புகிறேன். அண்மையிலே நடந்து முடிந்த பொதுத் தேர்தல் அமைதியான முறையில் நடந்தேறியதாகவும், பெருவாரியான மக்கள் முன்வந்து தங்கள் வாக்குரிமைகளை முறையாக பயன்படுத்தி யுள்ளார்கள் என்றும் இந்த உரையிலே குறிப்பிடப்பட்டு இருக் கிறது, அதையே நான் உங்கள் மத்தியிலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். எப்படி பாராளுமன்றத்திற்கும், இந்த மன்றத் திற்கும் தேர்தல் நடந்து முடிந்ததோ அதைப்போல உள்ளாட்சி மன்றங்களாகிய மாநகராட்சி, நகராட்சி, பஞ்சாயத்து யூனியன் கள், பஞ்சாயத்துக்கள் ஆகியவற்றிற்கும் விரைவில் தேர்தல் நடத்தி முடித்து நீங்கள் எதிர்பார்க்கிற அந்த நல்ல சூழ்நிலையை உருவாக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தூய்மையும், திறமையும் நிறைந்த நிர்வாகத்தை அளிக்க வேண்டும் என்பதிலே இந்த அரசு முனைப்பாக உள்ளது என்று இதிலே குறிப்பிடப்பட்டு இருக்கிறது. அதிலே யாருக்கும் கருத்து வேறுபாடு கிடையாது. ஆனால் நடைமுறையில் நடக்கின்ற பல்வேறு சீர்கேடுகள் இந்த மாநிலத்தின் நிர்வாகத்தில் ஏற்பட்டு இருக்கிற காரணத்தால் மக்கள் படுகிற அவதியை எடுத்துச் சொல்ல வேண்டியது எங்கள் கடமை. ஆகவே, உங்கள் மத்தியிலே பல்வேறு காரியங்களை எடுத்துச் சொல்ல முன்வந்திருக்கிறேன். மத்திய அரசு வகுத்துள்ள பல்வேறு திட்டங்கள் IRDP, NREP, RLEGP போன்ற திட்டங்களை தீவிரப்படுத்துவதற்கு அரசு முன்வந்திருக்கிறது. ஏராளமாக கோடி கோடியாக பணம் செலவழிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அங்கே உண்மையான நிலவரம் என்ன என்பதை நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். எந்த நல்ல நோக்கத்தோடு மத்திய அரசு பணம் கொடுத்து இருக்கிறதோ, அந்த நல்ல





நோக்கத்தோடு இந்த மாநில அரசு அதை அமல் செய்ய விரும்புகிறதோ அந்த அளவுக்கு அவர்கள் விரும்புகிற காரியங்கள் நடைபெறுகிறதா? அதனால் பலன் ஏற்பட்டு இருக்கிறதா? என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும். இந்த திட்டங்கள் எல்லாம் வேலைவாய்ப்பை கிராமத்தில் கொடுக்க வேண்டும். அதன் மூலம் கிராமத்திலும் மற்ற பகுதிகளிலும் இருப்பவர்களுக்கு ஒரு உணர்வு பெறக் கூடிய வகையில் ஊதியம் கிடைக்க வேண்டிய நிலைமையில் திட்டங்கள் தீட்டப்பட்டு இருக்குமானால்—அந்த காரியங்கள் எல்லாம் என்ன காரணமோ தெரியவில்லை—ஆங்காங்குள்ள ஒப்பந்தக்காரர்களிடம் ஒப்படைக்கப்பட்டு என்.எம்.ஆர். என்ற முறையில் ரசீது கையெழுத்து வாங்கி ஒப்பந்தக்காரர்கள் மூலமாகவே தான் நடக்கிறதே தவிர நேரிடையாக அதிகாரிகள் மேற்பார்வையில் வேலை செய்கிறவர் களுக்கு அதனுடைய பலன் முழுமையாக கிட்டவில்லை. அதன் வாயிலாக செலவிடப்படுகிற தொகைக்கு முழுமையான பலன் கிடைக்கவில்லை.

நாம் நேரிடையாக இதைப் பார்ப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. அந்த வேலைக்கு கொடுக்கப்படும் சிமெண்ட் எந்த அளவுக்கு துஷ்பிரயோகம் ஆகிறது என்பது அனைவருக்கும் தெரியும். இந்த திட்டத்தின்கீழ் கட்டப்பட்ட பல பள்ளிக் கூடங்கள். பல கட்டிடங்கள் கட்டி முடிக்கப்பட்டு 10 நாட்கள் சென்று நாம் போய் பார்த்தால் அந்த தளம் எல்லாம் பழுது பட்டு இருப்பதை நாம் பார்க்கிறோம். ஆகவே நல்ல முறையில் செம்மையாக செயல்படவேண்டும். அரசு செலவழிக்கும் ஒவ்வொரு நயா பைசாவும் விரயம் ஆக்கப்படக் கூடாது என்பதில் நாம் கவனமாக இருக்க வேண்டும்.

மின்சாரத்தைப் பற்றி அதிகமானவர்கள் பேசிவிட்டார்கள். இன்றைய சூழ்நிலையில் இது முக்கியமான பிரச்சினையாக இருக்கிறது என்பதை மின் துறை அமைச்சர் அவர்களுக்கு நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். உதாரணமாக முதலில் விவசாயி களுக்கு கொடுக்கப்படுகின்ற மின்சாரத்திற்கு புதிய முறையில் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. இனாமாக ஒரு பகுதியினருக்கும், மற்றவர்களுக்கு எச்.பி. ஒன்றுக்கு 75 ரூபாய் வீதமும் வசூல் செய்யப்படுகிறது. இந்த இலவசமாக மின்சாரம் கொடுப்பது சம்பந்தமாக நேற்று முன் தினம் கூட நான் மின் துறை அமைச்சர் அவர்களிடம் ஒரு மனுவை சேர்ப்பித்தேன். அவர் ஏழை

[திரு. உ. சுப்பிரமணியன்] [1985 மார்ச் 16

நியாயமாக இருக்கிற காரணத்தால் அவர் அரசாங்கத்திடமிருந்து
உதவித் தொகை பெறுகிறார். அவருக்கு இருப்பதோ
2½ ஏக்கருக்கும் குறைவான நிலம். ஆனால் உதவித் தொகை
பெறுகிற ஒரே காரணத்தால், அவருக்கு வருமானம் இருக்கிறது
ஆகவே நீங்கள் இதற்கு அருகதை இல்லை என்று மறுக்கப்பட்டு
இருக்கிறது. அதை நான் அமைச்சர் அவர்களிடம் சொன்னேன்.
அதை அவர்கள் அனுதாபத்துடன் கவனிப்பதாகச் சொல்லி
யிருக்கிறார்கள்.

அது மட்டும் அல்ல, ஒரு எச்.பி.-க்கு 75 ரூபாய் விதம் வாங்கும்
போது குறைந்தபட்சம் 5 எச்.பி.-க்கு ரூ. 375 கட்ட வேண்டிய
சூழ்நிலை இருக்கிறது. உங்களுக்கு எல்லாம் தெரியும் எல்லா
பகுதியிலும் கிணறுகள் வறண்டு கொண்டே போகின்றன.
தொடர்ச்சியான வறட்சி ஏற்பட்டு இருக்கிற காரணத்தால்
கிணறுகளில் தண்ணீர் ஊறுவது குறைந்து இருக்கிறது. ஆகவே,
75 ரூபாய் அளவுக்கு அவர்கள் பம்புசெட்டை ஓட்ட
விரும்பினாலும் கூட அங்கே தண்ணீர் கிடையாது. ஆகவே,
இறைக்காத தண்ணீருக்கு, உபயோகப்படுத்தாத மின்சாரத்திற்கு
கட்டணம் கட்ட வேண்டிய நிலை இருக்கிற காரணத்தால்
மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் இதை மறுபரிசீலனை
செய்து புதிய விகிதத்தை ஏற்படுத்தி ஏழை விவசாய பெருங்குடி
மக்களுக்கு நன்மைசெய்ய வேண்டும் என்று மிக பணிவன்போடு
கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-40)

மின் உற்பத்தியைப் பொறுத்தவரை தமிழ்நாட்டில் ஹைடல் பவர்
என்று சொல்லக்கூடிய நீர் மின் உற்பத்தி முழுமையாக ஏறத்தாழ
பூர்த்தி ஆகிவிட்டது. தெர்மல் பவர் இருக்கிறதே அதுவும்
அட்டமிக் எனர்ஜி மூலமாக கிடைக்கின்ற மின் சக்தியும் நமக்கு
கிடைக்கிறது. இந்த இரண்டிலும் உள்ள தெர்மல் ஸ்டேஷன்கள்
பல்வேறு நிலைகளில். பல்வேறு காலங்களில் பழுதுபட்டு நிற்
கின்றன; கரி வருவதில் தாமதம்; அல்லது வருகின்ற கரியில் சாம்
இருத்தல், அதனால் சாம்பல் மிகுதியாக இருக்கிறது என்ற நிலை;
இதனால் தெர்மல் ஸ்டேஷன் சரியாக இயங்காமலும், பழுதுபட்ட
நிலையிலேயும் மின்சாரம் குறைவாகக் கிடைக்கிறது. மின்
வெட்டுக்கான காரணங்களைச் சொல்லுகின்றபொழுது, அவை



1985 மார்ச் 16] [திரு. உ. சுப்பிரமணியன்]

களைச் சீர்திருத்தம் செய்கிறார்கள் அல்லது வேறு விதத்தில்,
பழுது பார்க்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. இப்படி மின்
வெட்டு இருக்கின்ற காலத்திலேதான் அவைகள் செய்யப்பட
வேண்டுமா? நல்ல மழை பெய்கின்ற காலத்தில் அந்தக் காரியங்
களைச் செய்யக் கூடாதா அல்லது இந்த நேரத்தில்தான்
அவைகள் பழுதடைகின்றனவா என்பது எங்களுக்குத் தெரிய
வில்லை. ஆகவே, இதில் அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டு
மென்று கேட்டுக்கொள்கிறேன்.

மின்சாரத்தைப் பொறுத்தவரையில், இந்த நாட்டில் அது
இன்றியமையாத ஒரு தேவையாக இருக்கிறது; அன்றாடத்
தேவையாகவும் இருக்கிறது. பொருள்களை உற்பத்தி செய்யக்
கூடிய தொழில்களுக்கும், இன்னும் வேறு தொழில்களுக்கும்
மின்சாரம் தேவைப்படுகிறது. அவைகளுக்கு மின்சாரம் இல்லாத
காரணத்தினால் பொருட்களின் உற்பத்தியும் குறைகிறது. புதிய
புதிய தொழிற்சாலைகளை வெளிமாநிலத்திலே உள்ளவர்
களாகட்டும் அல்லது நம்முடைய மாநிலத்திலேயே உள்ளவர்
களாகட்டும் இங்கே துவங்குவதற்கு முன்வருவதில்லை. ஏனென்று
கேட்டால், அவர்களுக்கு உத்தரவாதமாக, வருடம் முழுவதும்
மின்சாரம் கிடைப்பதில்லை. இந்த நிலைமையில் நாங்கள் எப்படி
தமிழ்நாட்டில் தொழில்களை ஆரம்பிப்போம் என்று வெளி
மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் சொல்லுவதாகச் செய்திகள்
வருகின்றன. இந்தப் பிரச்னைக்கு எப்படியாவது முடிவு கட்ட
வேண்டும். இதைப்பற்றி மின்சாரத் துறை அமைச்சரவர்கள்,
எல்லா கட்சித் தலைவர்களையும், வல்லுநர்களையும் கொண்டு
எப்படியாவது இந்தக் கஷ்டத்தைப் போக்க வேண்டுமென்ற
முடிவிற்கு வர வேண்டும்.

எனக்குத் தெரிந்த ஒரு சிறிய யோசனையைச் சொல்ல
விரும்புகிறேன். ஏற்கனவே இந்தக் கருத்தை அமைச்சரவர்கள்
கூடத் தெரிவித்து இருக்கிறார்கள். அதை விரைவில் அமல்படுத்த
வேண்டுமென்று வற்புறுத்த விரும்புகிறேன். பெருந்தொழில்களை
நடத்துகின்றவர்கள், தாமாகவே பவர் ஜெனரேஷனுக்கு ஏற்பாடு
செய்து கொள்வதாகத் தெரிவித்தால் அதற்கு விரைவில் அனுமதி
கொடுத்து அவர்கள் அப்படிச் செய்துகொள்கின்ற நிலைமைகள்
உருவாக்க வேண்டும். அதன்மூலம், அவர்களுக்குக் கொடுக்கப்

படக்கூடிய மின்சக்தியை வேறு வகைகளிலே பயன்படுத்திக்
கொள்ள முடியும் என்று ஒரு ஏற்பாட்டைச் செய்து கொடுத்தால்,
அந்த மின்சாரம் ஏழை எளிய விவசாயிகளுக்குக் கிடைக்கும்,
அவர்கள் மின் சக்தி பெறுவதற்கான வசதி இருக்கிறது என்பதை
நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். ஆகவே, அதைப்பற்றி
ஒரு கருத்தாய்வை அமைச்சரவர்கள் செய்வார்கள் என்று
நம்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவரவர்களே, இது
சம்பந்தமாக நமது அரசு ஒரு திட்டத்தைப் பரிந்துரை செய்து
இந்திய அரசுக்கு அனுப்பியிருக்கிறது. இந்திய அரசுதான்
அதுபற்றி கொள்கையளவில் முடிவு செய்ய வேண்டியுள்ளது.
ஆகவே, மாண்புமிகு உறுப்பினர், தலைவரவர்கள், அதைச்
சொல்ல வேண்டிய இடத்தில் சொல்லி, பெற்றுத் தருவார்களே
யானால் நல்லது.

**திரு. உ. சுப்பிரமணியன்:** பேரவைத் தலைவரவர்களே,
நம்முடைய மாநிலத்தின் நலன்களுக்காக எந்தக் காரியத்தைச்
செய்வதாக இருந்தாலும் அதற்கு எங்களுடைய துணை, ஆதரவு
எப்பொழுதும் உண்டு என்பதை உங்களுக்குச் சொல்லிக்கொள்ள
விரும்புகிறேன். உங்களுடைய முயற்சிக்குத் துணையாக
இருப்போம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாவட்டப் பிரிவினை அண்மையில் நடைபெற்றது. குறிப்பாக,
எங்கள் மாவட்டத்தை, தமிழகத்திலேயே முதன்முதலாக மூன்று
மாவட்டங்களாகப் பிரித்திருக்கிறார்கள். எங்களுடைய நீண்ட
நாள் கோரிக்கையை இந்த அரசு நிறைவேற்றியதற்காக எங்கள்
மாவட்டத்தைச் சார்ந்த அத்தனை பேர்களின் சார்பாகவும்
நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

இந்தப் புதிய மாவட்டங்கள் நேற்று முதல் அமுலுக்கு
வந்திருக்கின்றன. அந்த மாவட்டங்களுக்கு நல்ல முறையில்
பெயர்கள் • வைக்கப்பட்டிருக்கின்றன. மேற்கு இராமநாத
புரத்திற்கு மறைந்த பெருந்தலைவர் காமராஜ் அவர்களின் பெயர்
சூட்டப்பட்டிருக்கிறது. கிழக்கு முகவை மாவட்டத்தின்
ஒரு பகுதியாகிய நாங்கள் வசிக்கும் பகுதிக்கு, சிவகங்கையைத்
தலைமையிடமாகக் கொண்ட அந்த மாவட்டத்திற்குப்





பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களின் பெயர்
சூட்டப்பட்டிருக்கின்றது. ஏற்கனவே இருந்த இராமநாதபுரம்
மாவட்டம் என்ற பெயர் அழிந்துவிடக் கூடாது என்பதற்காக,
ஒரு தொடர்பு இருக்க வேண்டுமென்பதற்காக இராமநாத
புரத்தைத் தலைமையிடமாகக் கொண்ட மாவட்டத்திற்கு
இராமநாதபுரம் மாவட்டம் என்ற பெயர் சூட்டப்
பட்டிருக்கிறது. அந்த மாவட்டங்களெல்லாம் நேற்றையதினத்
திலிருந்து அமுலுக்கு வந்திருக்கின்றன. இங்கேயும் அந்தப்
பெரியவர்களின் படங்களை வைத்துப் போற்றிப் பாராட்டியிருக்
கின்றோம். அவர்கள் இந்தத் தேசத்திற்கு ஆற்றிய தொண்டைப்
பாராட்டுகின்ற வகையில் அந்த மாவட்டங்களுக்குப் பெயர்களை
வைத்திருப்பதற்காக இந்த அரசாங்கத்திற்கு நான் நன்றி
சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தொடர்ந்து பல ஆண்டுகளாக நம்முடைய மாநிலத்தில் வறட்சி
நிலைமை ஏற்பட்டு வருவதைப் பார்க்கின்றோம். குறிப்பாகத்
தென் மாவட்டங்களான மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி
மாவட்டத்தின் ஒரு பகுதி, மற்றும் வடாற்காடு போன்ற பகுதிகள்
வறட்சிக்கு இலக்காகி உள்ளன. இந்த நேரத்தில் தீங்கள்
மனிதாபிமானத்தோடு எங்களுடைய கஷ்டங்களைப் போக்க
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த அரசாங்கத்தின்
கவனத்திற்கும் அது வந்திருக்கும் என்று கருதுகிறேன்.
எங்களுக்குப் பல தந்திகளும், மனுக்களும் வந்திருக்கின்றன.
ஆங்காங்கே கெடுபிடி வசூல் செய்கிறார்கள். ஜப்தி செய்கிறார்கள்;
வரி வசூலிக்கிறார்கள். கடன்களை வசூலிக்கும் செவ்வியத் துறை
அதிகாரிகள் மிகத் தீவிரமான முனைப்புடன் இருக்கிறார்கள்
என்று அறிகிறோம். வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகள்,
தங்களுடைய கையிலிருக்கின்ற பொருட்களைச் செலவு செய்து
விவசாயம் செய்து, அவர்கள் நஷ்டம் அடைந்துள்ள நிலையில்,
விவசாயமே செய்யாமல், உழாமலேயே அந்த நிலங்கள் தரிசுகளாக
இருக்கின்ற காட்சிகளை இராமநாதபுரம் மாவட்டத்திலே
பார்க்கலாம்; வேறு சில மாவட்டங்களிலேயும் பார்க்க முடியும்.
ஆகவே இதை எல்லாம் கருத்தில் கொண்டு நிவாரண வேலை
களைச் செய்யவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.
தண்ணீர் வரக்கூடிய காவிரி டெல்டா பிரதேசங்களில் பயிருக்கு
ஓரளவுக்குத் தண்ணீர் கிடைத்தாலும், தண்ணீர் கிடைக்காததால்
வருகின்ற பாதிப்பினைவிட நோயாலும் பூச்சியாலும்தான் அதிக

அளவில் பாதிப்பு ஏற்படுகின்ற நிலைமைகள் இருக்கின்றன என்று அந்த மாவட்டத்தில் சொல்வதை நாம் கேட்கிறோம். எனவே இந்த நிலவரித் துறையில் மிகக் குறைந்த அளவுக்குத்தான் வருமானம் வருகின்றது என்று பலமுறை நாங்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறோம். அதற்கு வரக்கூடிய வருமானத்தைக் கழித்துவிட்டுப்பார்த்தால் மிகக் குறைந்த அளவுக்குத்தான் அதாவது நெக்லிஜிபிள் என்று சொல்லக்கூடிய அளவுக்குத்தான் அந்த வருவாய் இழப்பு என்பது இருக்கும். எனவே அது மிகவும் கவலைப்படக்கூடிய அளவுக்கு இல்லாத ஒன்றாகத்தான் இருக்கின்றது. ஆகவே பெரிய மனது வைத்து அதனை அறவே நீக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இல்லை என்றால், வறட்சி, புயல், வெள்ளம் போன்றவை ஏற்படுகின்ற காலங்களில் அந்த நிலைமைகளை எல்லாம் உணர்ந்து அந்த வரியினை வஜா செய்யவேண்டும், தள்ளுபடி செய்யவேண்டும். சில காலங்களையும் ஒத்திவைக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய அரசாங்கத்தின் ரெவின்யூ துறை அதிகாரிகள் எழுதிய ரிப்போர்ட்டை வைத்துத்தான் காரியங்களைச் செய்கிறார்கள். அவர்களைக் கேட்டால் டிசம்பர் 15-ஆம் தேதி வரை பார்க்கவேண்டும் என்று சொல்கிறார்கள். ஆனால் சில சமயங்களில் ஜனவரி மாதத்திலேதான் மழையே பெய்கின்றது. ஆனால் அவர்களுடைய ரிப்போர்ட்படி அவ்வாறு மழை பெய்திருக்கின்றது என்றுதான் எழுதுவார்கள். ஆனால் அப்படி பிந்தி பெய்கின்ற மழைத் தண்ணீரால் எந்தவிதமான பயனும் இல்லாமல் போவதோடு விவசாயம் பாதிக்கப்படுகின்ற நிலையும் ஏற்படுகின்றது. எனவே அதை மனதில் கொண்டு காரியங்களை ஆற்றவேண்டும்.

அடுத்து விவசாயிகளை இனம் பிரித்து வைத்து இருப்பது பல வகைகளிலும் பாதிப்பை ஏற்படுத்துகின்றது. சிறிய விவசாயிகள், நடுத்தர விவசாயிகள், பெரிய விவசாயிகள் என்றெல்லாம் பிரித்து வைக்கப்பட்டிருக்கின்றது. ஆனால் 15 ஸ்டாண்டர்டு ஏக்கருக்கு மேல் யாரும் நிலம் வைத்திருக்க முடியாது. அப்படி 15 ஸ்டாண்டர்டு ஏக்கர் வைத்திருந்தாலும் நல்ல முறையில் பூச்சி வராமல், நோய் வராமல், தண்ணீர் தட்டுப்பாடு இல்லாமல் பயிர் விளைந்தாலும் மிகச் சில ஆயிரம் ரூபாய்தான் வருமானமாக வரக்கூடிய நிலைமை இருக்கின்றது. எனவேதான் அவர்களை





எல்லாம் இனம் பிரித்து பெரிய விவசாயிகள், சிறிய விவசாயிகள் என்று பாகுபாடு செய்து சலுகைகளை வழங்குவதில் தரம் பிரிக்க வேண்டாம் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து தஞ்சை மாவட்டத்தில் கொள்முதல் செய்யப்படுகின்ற நெல்லுக்கு மட்டும் குவிண்டால் ஒன்றுக்கு 15 ரூபாய் ஊக்கத் தொகையாகக் கொடுக்கப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். ஆனால் வேறு மாவட்டங்களில் வாங்கப்படுகின்ற நெல்லுக்கு அப்படி 15 ரூபாய் கொடுக்கப்படுவதில்லை. அங்கே உறுதி செய்யப்பட்ட தண்ணீர் அதாவது கேரண்டீட் வாட்டர் சப்ளை என்று சொல்லப்படுகின்ற நிச்சயமாக தண்ணீர் கிடைக்கக்கூடிய வசதியுள்ள தஞ்சை மாவட்டத்திற்கே ஊக்கத் தொகையினைக் கொடுக்கின்றபோது பம்ப் செட் போட்டு தண்ணீர் இறைத்து, மின்சாரம் வரவில்லை என்றால் டீசல் இன்ஜின் வைத்துத் தண்ணீர் இறைத்து இப்படி எவ்வளவோ அதிகமான செலவுகளைச் செய்து பயிர் செய்யவேண்டிய நிலைமை வறட்சிப் பகுதிகளில் மற்ற இடங்களை விட அதிகமாக இருப்பதால் அவர்களுக்கும் ஊக்கத்தொகை கொடுக்கவேண்டும். எனவே அரசு இதனை மறுபரிசீலனை செய்யவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து வரி பாக்கிக்காகக் கெடுபிடி செய்கின்றபோது கையிலே ஓரளவுக்கு நெல் இருக்கின்ற நேரத்திலே இந்த அதிகாரிகள் வராமல், அவர்களிடத்திலிருந்த நெல்லை எல்லாம் விற்று அவர்கள் வேறு செலவினங்களுக்கும், வாங்கிய கடன்களுக்காகவும் கொடுத்ததற்குப் பிறகு அதிகாரிகள் வசூல் செய்ய வருவதன் காரணத்தால் அவர்கள் மிகவும் அதிகமாகக் கஷ்டப்படுகிறார்கள். எனவே ஊக்கத் தொகையினை தஞ்சை மாவட்டத்திற்குக் கொடுப்பதுபோல் மற்ற மாவட்டங்களுக்கும் கொடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். மற்ற மாவட்டங்களைப் பொறுத்தவரையில் 15 ரூபாய் என்று மட்டுமல்லாமல் மேற்கொண்டும் அறிவித்து அத்தோடு மட்டுமல்லாமல் வேறு வகைகளிலும் அதாவது அவர்கள் அரசாங்கத் துறைகளிலே கட்ட வேண்டிய பாக்கிகளுக்காக நெல்லாகக் கொடுப்பார்களேயானால் அவர்களுக்கு ஊக்கத் தொகையாக அதிகமான அளவில் சலுகைகளை வழங்கினால் நெல்லும் கொள்முதலுக்குக் கிடைக்கும், உங்களுக்கு வருவாயும் வசூலாகும் என்ற ஒரு யோசனையைச் சொல்ல விரும்புகிறேன்.

[திரு. உ. சுப்பிரமணியன்] [1985 மார்ச் 16

(முற்பகல் 12-30)

மின்சாரத்தைப் பற்றி சொல்கிறபொழுது ஒன்றைச் சொல்ல
மறந்துவிட்டேன், அதை அமைச்சர் அவர்களுக்கு ஞாபகப்படுத்த
விரும்புகிறேன். இராமகுண்டத்திலே இருக்கிற என்.டி.பி.சி
என்ற ஒரு சர்கிட் மூலம் நமக்குப் பற்றாக்குறை நேரத்திலே மின்
சாரம் கிடைப்பதற்கான வசதி இருக்கும் போதுமான டிஸ்டிரிபி
யூஷன் லைன்—நமக்குக் கரண்ட் கிடைப்பதற்கான லைன்—சரி
யான முறையிலே இல்லாததால் அல்லது இன்னும் பூர்த்தி
செய்யப்படாத காரணத்தினால் பாதகம் ஏற்படுகிறது என்று
சொல்லுகிறார்கள். அப்படி இருக்குமானால் டிரான்ஸ்மிஷன்
லைன் நிறுவுகின்ற வேலையை துரிதப்படுத்தி, மின்சாரட
கொண்டு வருவதற்கான வேலையைத் துரிதப்படுத்தினால் அடுத்த
ஆண்டிலாவது இந்தப் பற்றாக்குறையைப் போக்குகின்ற
வகையில் அது நமக்கு உதவும் என்று நான் சொல்லிக்கொள்ள
ஆசைப்படுகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

தொழில் வளர்ச்சியைப் பொறுத்தவரை நம்முடைய மாநிலம்
பல்வேறு வகையிலே பாதிக்கப்பட்டிருக்கிறது. குறிப்பாக, மின்
சாரத்தைப்பற்றி நான் சொன்னேன். மேலும் அரசாங்கத்தினு
டைய கொள்கையால் நாட்டிலே தொழில் பாதிக்கப்பட்டிருக்
கிறது என்ற உண்மையை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும்,
நீங்கள் ஏற்றுக்கொள்ளவேண்டும். எங்களுடைய மாவட்ட
மாகிய இராமநாதபுரம் மாவட்டத்தில் மானாமதுரையில் சிப்காட்
என்ற ஒரு நிறுவனம் நிறுவப்பட்டு சுமார் 5 ஆண்டுகளுக்கு மேலா
கிறது. அதற்காக 600 ஏக்கர்கள் கொள்முதல் செய்யப்பட்டு,
அங்கே எல்லா விதமான வசதிகளும் செய்யப்பட்டு விட்டன.
ரோடு போட்டுவிட்டார்கள், தண்ணீர் கொண்டு வந்திருக்கிறார்
கள். மின்சாரம் கொண்டு வந்திருக்கிறார்கள். நிர்வாகக் கட்டிடம்
கட்டி விட்டார்கள், சினிமாக் கொட்டகைக் கட்டிடம் கட்டப்
பட்டிருக்கிறது, பள்ளிக்கூடம் வந்திருக்கிறது, பாங்க் கூட
வந்திருக்கிறது. ஆனால் தொழில் முனைவர்கள்தான் வரவில்லை
ஐந்தே ஐந்து பேர்கள்தான் வந்திருக்கிறார்கள், கடந்த 5 ஆண்டில்



[திரு. உ. சுப்பிரமணியன்]

1985 மார்ச் 16]

காரணம் என்ன என்று நாம் சிந்தித்துப்
காலமாக. இதற்குக் காரணம் என்ன என்று நாம் சிந்தித்துப்
பார்க்கவேண்டும். தொழில் அமைச்சர் அவர்கள் இப்பொழுது
இல்லை. அவர்கள் இருந்திருந்தால் அவர்களை இன்னும் நேரிலே
கேட்டிருப்பேன் இப்பொழுது இருக்கிற முறையை மாற்றி,
பல்வேறு முறையிலே தொழில் முனைவர்களுக்கு ஊக்கம்
கொடுக்க வேண்டியது அவசியம். 600 ஏக்கரும் பல கோடி
ரூபாயும் செலவிட்டு அந்த ஸ்பிக் நிறுவனம் 5 தொழில் அதிபர்
களுக்கு மேல் கொண்டு வர முடியவில்லையென்றால் அடிப்
படையில் என்ன காரணம் என்பதைச் சிந்தித்துப் பார்க்க
வேண்டும்.

சென்ற ஆண்டு நாங்கள் பஞ்சாபுக்குச் சென்றிருந்தபொழுது
அங்கே இருந்த ஒரு சிறு தொழிற்சாலைக்குச் சென்று அவர்
களிடம் பல்வேறு விஷயங்களைக் கேட்கும்போது உங்களுக்கு
அரசு எந்த, எந்த வகையில் உதவி செய்கிறது என்று கேட்ட
பொழுது அந்தத்தொழில் அதிபர் எல்லா வகையிலும் என்று
சொன்னார். எல்லா வகையிலும் என்று சொன்னால், ஒன்றைக்
கூறுங்கள் என்று கேட்டபொழுது, அவர் சொன்னார்,
எங்களுக்குத் தேவையான பர்மிட், லைசன்ஸ், கோட்டா போன்று
அரசாங்கத்திடமிருந்து பெற வேண்டிய அத்தனை
காரியங்களையும் அரசு அதிகாரிகளே எங்களுக்குச் செய்து
கொடுக்கிறார்கள். ஆகவே அவை பற்றி நாங்கள் கவலைப்பட
வில்லை. அவர்கள் செய்து கொடுக்கிற காரணத்தால், எங்களுக்கு
விரைவாக காரியங்கள் நடைபெறுகின்றன என்று சொன்னார்கள்.
அந்த நிலைமையை நாங்கள் புரிந்து கொண்டோம்.

இங்கே சிங்கிள் விண்டோ சிஸ்டம் கொண்டு வருவதாகச் சொன்
னார்கள். ஒரே இடத்தில் எல்லா காரியங்களும் நடைபெறுவதற்
கான முறை வகுக்கப்படும் என்று சொன்னார்கள். அது அமுலில்
இருக்கிறதா? அமுலில் இல்லை என்றால் ஏன் இல்லை. நல்ல
காரியங்களை அமுல் செய்ய ஏன் தயக்கம் என்று நான் கேட்க
விரும்புகிறேன். இந்தத் தாமதத்தின் காரணமாக தொழில்கள்
துவங்குவது தடைப்படுகிறது. இப்பொழுது சர்வசாதாரணமாக
குறைந்த மூலதனம் ரூ. 25 இலட்சம் என்று சொல்கிறார்கள். ரூ. 1
கோடி, ரூ. 2 கோடி, ரூ. 3 கோடி, ரூ. 10 கோடி என்றெல்லாம் சர்வ
சாதாரணமாக சொல்கிற நிலையிலே அரசாங்கத்திலே இருந்து
கிடைக்க வேண்டிய சில அனுமதிகள் தாமதமாகக் கிடைக்கிற

காரணத்தால் அவர்கள் தொழில்கள் துவங்குவதற்குக் கால
தாமதம் ஆகிறது. அந்தக் காரணத்தினால் அவர்கள் போட்டி
ருக்கிற மூலதனத்திற்கு வட்டி, கடன் வாங்கியதற்கு வட்டி,
அதைத் தவிர்த்து Escalation in prices and wages
என்று சொல்வார்களே, காலம் செல்ல, செல்ல, தாமதம் ஆக, ஆக,
விலை வாசி உயர்வு, கூலி உயர்வு போன்றவற்றால் நசித்து விடு
கிறார்கள்; தொழில்களை முனைந்து செயல்படுத்துவதில்லை.
ஆகவே, இதை நிதி அமைச்சர் அவர்களும், தொழில் அமைச்சர்
அவர்களும் கவனத்தில் கொண்டு, புதிய மாற்றத்தை ஏற்படுத்தி,
தொழில் அதிபர்களை, எதிரிகளாகக் கருதாமல் அவர்களுக்கு
உதவி செய்ய வேண்டும். வரி மூலமாகவும் வேறு வகையிலும்
அவர்கள் உதவி செய்கிறார்கள் என்ற வகையிலே நாமும் அவர்
களுக்குத் துணை செய்யவேண்டும்.

மத்திய அரசின் முதலீட்டினை இங்கு அதிகமாக்க வேண்டு
மென்ற கோரிக்கையினையும் மத்திய அரசின் பல்வேறு தொழிற்
களையும் இங்கு மேலும் விஸ்தரிக்க வேண்டுமென்ற கோரிக்கை
யினையும் விடுப்பதில் அனைத்துக் கட்சியும் ஒன்றுபட்டிருக்கும்,
ஒன்றுபட வேண்டும். அதிலே எந்தவிதமான மாறுபாடும் இடை
யாது. ஆகவே, இந்த மாநிலத்தின் முன்னேற்றத்திற்கு எல்லா
விதத்திலும், எல்லா கட்சிகளும் ஒத்துழைக்கத் தயாராக இருக்
கிறார்கள். நான் இதற்கு ஒரு யோசனையாகச் சொல்ல விரும்பு
கிறேன், நம்முடைய பாராளுமன்ற உறுப்பினர்கள், எந்தக் கட்சி
யைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், அவர்களை நம்முடைய
அமைச்சரவையில் சில குறிப்பிட்ட அமைச்சர்கள் அவ்வப்போது
சந்தித்து, பாராளுமன்றக் கூட்டம் நடக்கும்போது, நம்முடைய
பிரச்னைகளை, அதன் நியாயத்தை வலியுறுத்த, மத்திய அரசின்
மூலம் நமக்குக் காரியங்கள் நடைபெறுவதற்கு அவர்களைத்
தூண்ட வேண்டும், அவர்களுக்குப் பின்பலமாக நாம் இருக்க
வேண்டும். அந்த முயற்சியில் நிதி அமைச்சர் அவர்கள் ஈடுபட
வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, சமூகக் காடு பற்றி குறிப்பிடப்பட்டிருக்கிறது. காடு
வளர்ப்பில் மிகவும் பின்தங்கி இருக்கின்றோம் என்ற நிலைதான்
இருக்கிறது. காடு வளர்ப்பு என்ன பெரிய பிரச்னையா, நாட்
டிலே எவ்வளவோ பிரச்னைகள் இருக்கின்றன என்று நினைக்க
லாம். நானும் நம்முடைய நிதி அமைச்சர் அவர்களும் நம்முடைய





தலைவர் அவர்களும் தொழில் அமைச்சர் அவர்களும் செக்கோஸ்
லோவியாவிற்கும் ரஷியாவிற்கும் சென்று அங்கே பார்க்கும்
போது, 'போரன் லான்ட்' என்று சொல்லக்கூடிய மரமோ, புல்லோ
இல்லாத நிலைமையே அங்கே இல்லை. காடுகளாக இருந்தாலும்
சரி, ஊராக இருந்தாலும் சரி, மனிதனால் வளர்க்கப்பட்ட
மரங்கள் ஏராளமாக ஆங்காங்கு இருந்ததை நாங்கள் கண்டோம்.
ஆகவேதான் அங்கே நல்ல மழை பெய்கிறது. இப்போது கூட
நம் நாட்டிலே பல வல்லுநர்கள் சொல்லுகிறார்கள். "ஈகால
ஜிகல் பேலன்ஸ்" என்று சொல்கிறோமே அவர்கள் எல்லாம் சொல்
கிறார்கள்.

சென்ற ஆண்டு பம்பாயைச் சேர்ந்த ஒரு பெரிய வல்லுநர்
சொன்னார். தமிழ் நாட்டிலே, கேரளாவிலே, கர்நாடகத்திலே
இப்போது போகிற போக்கிலே மரங்களை வெட்டி காடுகள்
அழிக்கப்படுமானால் தார் பாலைவனம் போன்று அந்தப்
பகுதிகள் ஆகக்கூடிய ஆபத்து இருக்கிறது. ஆகவே அதைத்
தடுத்து நிறுத்த வேண்டும். புதியதாக மரங்களை வளர்க்க
வேண்டுமென்று சொன்னார். ஸ்வீடன் நாட்டிலிருந்து அவர்கள்
உதவியோடு சமூக காடு வளர்ப்புத் திட்டத்தில் சுமார் 40 கோடி
ரூபாயில் மரங்கள் நடப்படுகின்றன. நல்ல முறையில் அந்தத்
திட்டம் பயன்படுகிறது என்பது எங்களுக்குத் தெரியும். அதை
மேலும் விஸ்தரித்து கொடுக்க வேண்டும். எப்படியும் மழை
பெய்ய வேண்டும். மழை பெய்வதற்கு மரங்கள் வேண்டும்.
மரங்களை உண்டாக்க வேண்டும். உண்டாக்கிய மரங்களை
பாதுகாக்க வேண்டுமென்ற முடிவிற்கு வர வேண்டும். இந்த
நேரத்தில் முக்கியமாக ஒன்றைச் சொல்லிக் கொள்ள
விரும்புகிறேன். இரண்டு ஆண்டுகளுக்கு முன்னாலே பரம்பரை
கிராம அதிகாரிகளை நீக்கிவிட்டு புதிய வி.ஏ.ஓ.க்கள் என்ற
முறையில நியமித்ததன் காரணமாக பெரிய பெரிய காடுகள்
அழிந்திருக்கின்றன. கண்மாய்கள், புறம்போக்குகள்,
தரிசுகளிலிருந்து அரசுக்கு சொந்தமான மரங்கள் எல்லாம்
கோடிக்கணக்கான ரூபாய் மதிப்பில் வெட்டப்பட்டிருக்கின்றன.
அரசாங்கம் நஷ்டம் அடைந்தது மட்டுமல்லாமல் அந்தப்
பகுதிகள் எல்லாம் வறண்டுபோய்விடுகிற நிலைமை உருவாகி
இருக்கிறது. ஆகவே மரங்களை வெட்டுவதை உடனடியாக
அரசாங்கம் தடுத்து நிறுத்த வேண்டுமென்பது எங்களுடைய
கோரிக்கையாகும். ....

அடுத்து குடிதண்ணீர் பிரச்னை. இந்தப் பிரச்னையைப் பொறுத்தவரையில் இந்தத் தேர்தலுக்குச் சென்ற அத்தனை பேருக்கும் நன்றாக தெரியும். மக்கள் என்ன கேட்டார்கள்? குடிப்பதற்கு தண்ணீர் வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டார்கள். அந்த வசதியை செய்து கொடுப்பதற்காக நம்மிடம் குடிநீர் வடிகால் வாரியம் என்ற பெரிய அமைப்பை நாம் ஏற்படுத்தி இருக்கிறோம். ஆனால் அவர்கள் சர்வாதிகாரமாக இயங்குகிறார்கள் என்றுதான் சொல்ல வேண்டும். ஏனென்றால் எந்த இடத்தில் ஆழ் குழாய் கிணறுகள் போட வேண்டுமென்று அவர்கள் யாரையும் கேட்பதில்லை. அவர்களுக்கும் அங்கே இருக்கும் பி.டி.ஓ. க்களுக்கும் மற்ற அதிகாரிகளுக்கும் எந்தவிதமான தொடர்பும் இருப்பதில்லை; அவர்களிடையே கோ-ஆர்டினேஷன் இல்லை. அவர்களாக நினைத்த இடங்களில் குழாய்களை போட்டு விடுகிறார்கள்.

நான் தலைவராக இருந்த பஞ்சாயத்திலே ஒரு சிறிய கிராமத்திலே ஒரு கிராமச் சாவடி பொது இடம் உண்டு. அந்த இடத்தில் வலது புறம் ஒன்றும், இடது புறம் ஒன்றும் இரண்டு ஆழ்குழாய் கிணறுகளும், அடி பம்புகளும் இருக்கின்றன. அந்த பஞ்சாயத்தில் 9 கிராமங்கள் இருக்கின்றன. அந்த ஒன்பது கிராமங்களில் ஒரு கிராமத்தில் கூட ஆழ்குழாய் கிணறு கிடையாது. அடி பம்பும் கிடையாது. அந்தப் பாகுபாடு ஏன் ஏற்படுகிறது என்றால் மக்கள் பிரதிநிதிகளோடு அவர்களுக்கு, அந்த அதிகாரிகளுக்கு தொடர்பு கிடையாது. இப்போது இருக்கிற நிலையில் அவர்களிடத்தில் எடுத்துச் சொன்னாலும் சிந்திப்பதும் இல்லை. கோடிக்கணக்கான ரூபாய் மத்திய அரசிடமிருந்து கிடைக்கிறது. மாநில அரசாங்கமும் செலவு செய்கிறது. ஆழ்குழாய் கிணறுகளைப் போடுகிறார்கள். போட்ட இடத்தில் குழாய் மட்டும் பதித்துவிட்டு சென்று விடுகிறார்கள். சில இடங்களில் பம்ப் போடுகிறார்கள். போன மறுநாள் அடித்தால் அது ரிப்பேர் ஆகி விடுகிறது. மேல்நிலைத் தொட்டிகள் என்று இருக்கின்றன. அவை ஏராளமாக கட்டப்பட்டிருக்கின்றன. அவை அவமானச் சின்னங்களாக இருக்கின்றன. சில இடங்களில் கட்டி எத்தனை ஆண்டுகளாகின்றன என்று கேட்டால், பல ஆண்டுகள் ஆகின்றன என்று சொல்கிறார்கள். அவை இணைக்கப்பட்டு உபயோகப்படுகிறதா என்றால் இல்லை. ஏன் என்று கேட்டால்



மோட்டார் வைக்கவில்லை என்று சொல்கிறார்கள். சில கிராமங்களில் கேட்டால் மோட்டார் இருக்கிறது, மின்இணைப்பு கொடுக்கவில்லை என்று சொல்கிறார்கள். மின் இணைப்பும் கொடுத்து, கிணற்றில் நல்ல தண்ணீரும் இருந்து, ஏன் உபயோகப்படுத்தவில்லை என்று அவர்களிடம் கேட்டால் கட்டிய டாங்க் ஒழுகுகிறது என்ற நிலை இருக்கிறது. ஆகவே இவற்றை எப்படியும் சீர்திருத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மனிதனுக்கு அடிப்படை தேவை தண்ணீர். ஆகவே இதிலே கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, காவல் படையினருக்கு டெரிக்காட்டன் சீருடைகள் அளிப்பது, மழைக் கோட்டுகள், காலணிகள் வழங்குவது போன்ற பல திட்டங்கள் மூலமாக அவர்களுக்கு வசதிகள் செய்து கொடுப்பது பாராட்டுக்குரியதாகும். இந்தக் காவல் துறையில் சமீபகாலத்தில் நடைபெறுகிற நிகழ்ச்சிகளைப் பார்க்கிறபோது, அவர்களால் பொதுமக்களுக்கு ஏற்படுகிற கஷ்டங்களை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். காவல் துறை என்றால் எல்லோரையும் அவர்கள் தண்டிக்கவேண்டுமென்ற நிலையில் இல்லை. தவறு செய்பவர்களைத் தண்டிப்பதற்கு கோர்ட்டுகள் இருக்கின்றன. தவறு செய்பவர்களைப் பிடித்துக்கொண்டுபோய் கோர்ட்டிலே ஒப்படைக்க வேண்டிய பொறுப்பு தான் காவல் துறையினருக்கு இருக்கிறது என்றுதான் இதுவரைக்கும் நினைத்தோம். ஆனால் இப்போது காவல்துறையில் ஒரு பகுதியினர் அவர்களே சட்டத்தை கையிலே எடுத்துக்கொண்டு அவர்களே தண்டனை கொடுத்து நியாயம் வழங்குவதாகத் தெரிகிறது. அந்த நிலையை சிந்தித்துப் பார்க்க வேண்டும். அண்மையில் ராத்தூரில் நடந்த நிகழ்ச்சி மிகவும் துக்ககரமான நிகழ்ச்சி. அவர் ஒருவர் படித்தவர், வக்கீல் உத்யோகம் பார்ப்பவர். வீட்டிற்குச் சென்று, காவலர்கள் நடந்து கொண்ட முறை ஒரு சாதாரண, படிக்காத ஏழை மக்கள் வீட்டிலே கூட அதுபோன்ற அக்கிரமம் நடந்திருக்க முடியாது. அவரை அடித்து துன்புறுத்தியது மட்டுமல்லாமல், அவர் வீட்டிலே இருந்தவர்களையும் துன்புறுத்தி இருக்கிறார்கள். அதனால் கன்னியாகுமரி முதல் சென்னை ஹைகோர்ட் வரையிலான எல்லா நீதிமன்றங்களிலும்

வக்கீல்கள் நீதிமன்றங்களை பகிஷ்காரம் செய்து தங்களுடைய உணர்ச்சியை வெளிப்படுத்திய நிகழ்ச்சி உங்கள் அனைவருக்கும் தெரியும்.

அதேபோல திருத்துறைப்பூண்டியிலே சமீபத்தில் இரண்டு தரப்பினர் தகராறு செய்து சச்சரவு செய்து கொண்டிருக் கிறார்கள். அதில் எங்கள் கட்சியைச் சேர்ந்த ஒருவர் தலை யிட்டு சமரசம் செய்து வைத்திருக்கிறார். அவரோ வயதானவர் அவரை பிடித்துச் சென்று நான்கு காவலர்கள் போலீஸ் ஸ்டேஷனில் கைவிலங்கு, கால் விலங்கு போட்டு நீண்ட நேரம் தாமதிக்க வைத்திருக்கிறார்கள். அவர் ஆஸ்பத்திரிக்கு சென்ற போது கூட அங்கும் கையில் விலங்கோடுதான் இருந்திருக்கிறார் என்பதை புகைப்படம் மூலம் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (புகைப்படம் ஒன்றை கொடுத்தார்) இந்த நிலை நீடிக்கக்கூடாது என்பதை என்னுடைய கோரிக்கையாக வைக்கிறேன்.

(முற்பகல் 11-00)

அதுமட்டுமல்ல. இன்றைக்கு எத்தனையோ திருட்டுக்கள் நடைபெறுகின்றன; கொலைகள் நடைபெறுகின்றன. அவற் றைக் கண்டுபிடிப்பதிலே தீவிரம் காட்டி, புலன் விசாரணை நடத்தினால் நாம் எல்லாம் பாராட்டலாம். எங்கள் ஊரிலே சிவகங்கையில் நடைபெற்ற ஒரு சம்பவத்தை இங்கே குறிப்பிடு கிறேன். அதை நான் மிகைப்படுத்திக் கூறவில்லை. அங்கே ஆர்.டி.ஓ. வீட்டில் திருட்டு, ஜட்ஜ் வீட்டில் திருட்டு, பிரேக் இன்ஸ்பெக்டர் வீட்டில் திருட்டு. எந்தத் திருட்டுமே இது வரையில் கண்டுபிடிக்கப்படவில்லை. எங்களுக்கெல்லாம் இதிலே ஒரு சந்தோஷம். ஏனென்றால் இப்படிப்பட்டவர்கள் வீட்டிலே திருட்டுப் போனதால், இனியாவது தகுந்த நடவடிக்கை எடுப்பார்கள் என்று கருதுகிறோம். அதிகாரிகள் வீட்டில் திருட்டுப்போனால் அவர்கள் எப்படியும் கண்டுபிடிக்க ஏற்பாடு செய்வார்கள்.

அதிகாரிகள் வீடுகளில் மட்டும் திருட்டுப்போகவில்லை. ஒரு கோவிலில் நடைபெற்ற சிலைத் திருட்டில், கைப்பற்றப்பட்ட அந்த சிலைகளை கோர்ட்டிலே பாதுகாப்பாக வைத்திருந் தார்கள். அங்கேயும் அந்த சிலைகள் திருட்டுப்போய்விட்டன



கோர்ட்டிலேயும் திருட்டுப் போகிறது என்றால் சாதாரண மக்க ளுக்கு என்ன பாதுகாப்பு இருக்கும்? அதனால் தயவுசெய்து காவல் துறை என்ற பெயரை மாற்றுங்கள் அல்லது காவல் துறை, காவல் துறையாகச் செயல்பட ஏற்பாடு செய்யுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மின்சாரத்தை நினைத்துப் பார்த்தால், பல இடங்களில் தெரு விளக்குகள் எரியவில்லை. தெருவிளக்கு எரியாத இடங்களில் தான் பெரும்பாலும் திருட்டு நடைபெறுகிறது. அதனால் கிராமப்புறங்களிலும், நகரப்புறங்களிலும் கண்டிப்பாக தெரு விளக்குகள் எரிய ஏற்பாடு செய்ய வேண்டும். சமீபத்திலேகூட சில ஊர்களில் 2 அடி டியூபை மாற்றி, அந்த இடத்தில் 4 அடி டியூபை போட்டிருக்கிறார்கள். மாற்றியபின் இரண்டு நாட்கள் சரியாக எரிந்தன பின்னால் எரியவில்லை. காரணம் நோக்கின் தரம் சரியில்லை என்று சொல்கிறார்கள். அதனால் போட்ட டியூபுகள் எல்லாம் 'ஃப்யூஸ்' ஆகிவிட்டன. அவற்றை எல்லாம் மீண்டும் எரியவைக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சர்விஸ் கமிஷனைப் பொறுத்தவரையில் 'குரூப்-1'க்கு 1982-ல் தேர்வு நடந்தது. யாரோ ஒருவர் 'ரிட்' போட்டதால் அதனுடைய முடிவு தெரிவிக்கப்படவில்லை. மீண்டும் 1984 டிசம்பரில் தேர்வு நடத்த ஏற்பாடு செய்யப்பட்டது. தேர்வு நடக்கும்போது 1983, 1984 ல் காலியான இடங்களுக்கு புதிய விண்ணப்பங்கள் கோரப்பட்டிருக்கின்றன. அதற்கு ஆஜரான விண்ணப்பங்களுக்கு, விண்ணப்பம் செய்தவர்களுக்கு வயது வரம்பை 'ரிலாக்ஸ்' செய்யவில்லை. காலம் கடந்தது அவர் களுடைய தவறு அல்ல. கோர்ட் நடவடிக்கையின் காரணமாக வயது வரம்பு தகுதியை அவர்கள் இழந்திருக்கிறார்கள். அது அவர்களுடைய தவறு இல்லை என்பதால் வயது வரம்புக்கு ரிலாக்சேஷன் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆதி திராவிட நல மேம்பாட்டிற்கு விரிவான திட்டம் தயா ரிக்கப்படும் என்று ஆளுநர் உரையில் கூறப்பட்டுள்ளது. ஆனால் என்னென்ன திட்டங்கள் என்று சொல்லப்படவில்லை. சென்ற பொதுத் தேர்தலின்போது நாங்கள் வாக்கு கேட்க சென்றபோது, ஆதி திராவிட மக்களிடம் வாக்கு கேட்டபோது, நாங்கள் கூரை இல்லாத வீட்டில் இருக்கிறோம், இடிந்த வீட்டில் இருக்கிறோம்,

[திரு. உ. சுப்பிரமணியன்] [1985 மார்ச் 16

ஏந்தவிதமான பாதுகாப்பும் இல்லாமல் இருக்கிறோம்;
எத்தனையோ முறை நீங்கள் வந்திருக்கிறீர்கள், ஆட்சி மாறி
இருக்கிறது, ஆனால் எங்களுடைய நிலை மாறவில்லையே
என்று சொன்னார்கள். அவர்கள் எல்லாம் மிகவும் துன்பப்படுகி
றார்கள். அவர்களுடைய நிலைமை இன்னும் பரிதாப
மாகத்தான் இருக்கிறது. ஆகையால் வேறு எந்தச் செலவை
யாவது குறைத்துக்கொண்டு, இந்த மக்களுக்கு நிச்சயமாக பல
நல்ல காரியங்களைச் செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன்.

சத்துணவுத் திட்டம், மதிய உணவுத் திட்டம் போன்ற
திட்டங்களை யாரும் குறை சொல்லவில்லை; அதுவே அவசியம்.
ஆனால் அந்தத் திட்டங்கள் மூலம் நடைபெறுகிற
ஒழுங்கீனங்களை, தவறுகளை தடுக்க வேண்டும். அரசாங்கம்
மக்களுக்காகச் செலவழிக்கின்ற பணம் வேறு வகைகளிலே
போவதை நாம் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. ஏதோ
குறிப்பிட்ட சிலருக்கு வேலை கிடைக்கும், அவர்கள் வசதி
பெறுவார்கள் என்பதற்காக, அந்தக் கண்ணோட்டத்தில் இந்தத்
திட்டம் இருக்கக் கூடாது. தவறு செய்கிறவர்கள் யார்,
எந்தக் கட்சி என்று பார்க்காமல் யாராக இருந்தாலும்
கண்டிப்பாக தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும். அரசாங்கம்
இதிலே தயக்கம் காட்டக் கூடாது, என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக நான் குறிப்பிட விரும்புவது இலங்கைப்
பிரச்சனை. மத்திய அரசு இதற்கு அரசியல் ரீதியில் தீர்வு காண
வேண்டும் என்பதை வரவேற்கிறோம்; பாராட்டுகிறோம்.
இந்தப் பிரச்சனை சம்பந்தமாக மத்திய அரசு பல
நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறது. மேலும் இந்தப்
பிரச்சனையிலே ஒரு தீர்வு காண விரும்புகிறோம், வேறு பல
விளைவுகள் ஏற்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டியிருக்கிறது.
தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டால் சர்வதேசப்
பிரச்சனை வரும், வேறு வல்லரசுகள் தலையீடுகள் இருக்கும்
என்பதால் அத்தகைய சூழ்நிலைக்கு நாம் இடம் அளிக்கக்
கூடாது என்பது எங்களுடைய கருத்து. இலங்கையிலுள்ள
நம் மக்களை துன்புறுத்துவதை, கொட்டியடிப்பதை யாரும்
விரும்பவில்லை; அது விரும்பத்தக்கதும் அல்ல. இருக்கின்ற
சூழ்நிலைகளை எண்ணிப் பார்த்து, தகுந்த முயற்சிகளை



1985 மார்ச் 16] [திரு. உ. சுப்பிரமணியன்]

மேற்கொள்வதில் யாருக்கும் தயக்கம் இல்லை. என்னைப்
பொறுத்தவரையில் நான் அங்கேயிருந்த காரணத்தால் சில
விவரங்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன். இப்போது வருகின்ற
பிரச்சனை ஈழத் தமிழர்கள், வட பகுதியிலும், கிழக்குப்
பகுதியிலும் உள்ள தமிழ் இன மக்கள் என்பதிலேதான் நிற்கிறது,
ஆனால், இலங்கையிலே மத்தியப் பகுதியில் தோட்டத்
தொழிலாளர்களாக வாழ்கின்றவர்கள், அவர்களில் பெரும்பான்மை
யானவர்கள் இந்திய வம்சாவழி தமிழர்கள். அவர்களில் பலர்
நேரு-கொத்தலவாலா ஒப்பந்தம், சாஸ்திரி-சிரிமாவோ
பண்டாரநாயகா ஒப்பந்தம் ஆகியவற்றின் மூலமாக பல லட்சக்
கணக்கானவர்கள் வெளியேற்றப்பட்டு இருக்கிறார்கள். இன்னும்
இருப்பவர்கள் அங்கேயிருக்கிறார்கள். அவர்களுடைய நிலை
என்ன? இந்தப் பிரச்சனை இப்படியே நீடித்துக் கொண்டு
போனால் நம்முடைய தமிழ் சகோதரர்களுக்கு சிரமமான
நிலைமையிருக்கிறது. வேறு வகையில் பாதகமான நிலைமைகள்
ஏற்படுமானால் அவர்களும் சேர்ந்து கஷ்டப்பட வேண்டிய
நிலையிருக்கிறது.

ஆகவே இந்த பிரச்சனையில் உணர்ச்சிவசப்படாமல்,
ஏதோ அரசியல் பிரச்சனையாக மட்டும் கருதாமல்,
மனிதாபிமானத்துடன் நாம் தமிழ் பேசுகின்ற அந்த ஈழ
மக்களுக்கும், நம்முடைய சகோதரர்களாக இருக்கிற இந்திய
வம்சாவழி பிரஜைகளுக்கும் காரியங்கள் செய்ய வேண்டும்
என்பதிலே தயங்கக்கூடாது. இதை வற்புறுத்திச் சொல்வதில்
யாருக்கும் தயக்கம் கிடையாது. ஆனால் சொல்லுகின்ற
முறைகள் தான் வித்தியாசமே தவிர, எங்களுக்கு அனுதாபம்
இல்லை என்று சொல்ல முடியாது. ஆகவே இந்தப் பிரச்சனை
ஆங்கிலத்திலே சொல்வார்களே, அதைப்போல, டிக்லிஷ்
பிராப்ளமாக இருக்கிறது. இதைப் பற்றி இங்கே உள்ள
தலைவர்கள் எல்லாம் சென்று மீண்டும் டெல்லியிலே பிரதமர்
அவர்களைச் சந்தித்து எப்படி அவசரமான, அவசியமான
நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதை வற்புறுத்திச்
சொன்னால் அது குற்றமாகாது. அதற்கு நீங்கள் எல்லாம்
முன்வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஆகவே
நாம் இங்கே பேசுகின்ற சில பேச்சுக்களும், நிகழ்ச்சிகளும் அதன்
காரணமாக அங்கே எதிரொலியாக நிகழ்ச்சிகள் நடப்பதைப்

பார்க்கிறோம். எனவே அந்த எதிரொலி நம்முடைய தமிழர்களுக்கு பாதகமாக இருக்கிறது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

தமிழக மீனவர்களுடைய பிரச்சனை மிகப் பெரிய பிரச்சனை. இலங்கை இந்தியாவிற்கு மிக சமீப தூரத்திலே இருக்கிற காரணத்தால்—சுமார் 22 மைல்கள்தான் இருக்கிறது—அதுவும் குறிப்பாக கச்சத் தீவு நம்முடைய கரையின் ஓரமாகத்தான் இருக்கிறது. கச்சத் தீவைக் கொடுத்தது சரியா, தப்பா என்ற அந்தப் பிரச்சனைக்குள் நான் போக விரும்பவில்லை. எப்படியிருந்தாலும், அந்தக் கச்சத் தீவை ஒட்டித்தான் நல்ல இறால் மீன்கள் கிடைக்கின்றன. ஆகவே நம்முடைய மீனவர்கள் அங்கே போக வேண்டிய அவசியம் இருக்கிறது. அவர்கள் செல்கின்ற நோக்கிலே சிங்கள ராணுவத்தினர் தாக்குகின்றனர். அதுவும் இப்போது ஏற்பட்டிருக்கிற இந்தப் புதிய சூழ்நிலையின் காரணமாகத் தான், அவர்களுடைய வெறுப்புணர்ச்சிக்கு ஆளாகி, அதைக் காட்டுகிறார்கள் என்ற நிலை ஏற்படுகிறது.

இது சம்பந்தமாக கூட 1974 ஆம் ஆண்டு ஒரு ஒப்பந்தமும், 1976 ஆம் ஆண்டு ஒரு ஒப்பந்தமும் நடைபெற்றிருக்கிறது. 1974 ஆம் ஆண்டில் ஏற்பட்ட ஒப்பந்தத்தின் சில ஷரத்துக்கள், 1976 ஆம் ஆண்டில் ஏற்பட்ட ஒப்பந்தத்தில் விடப்பட்டிருக்கின்றன என்று அங்கே இருக்கின்ற மீனவர்கள் சொல்கிறார்கள். இதையெல்லாம் நம்முடைய மத்திய அரசுக்கு எடுத்துச் சொல்லி, மீண்டும் ஒரு புதிய நிலைமையை உருவாக்குவதற்கு நாம் அனைவரும் ஒன்றுபட்டு பாடுபட வேண்டும் என்று நான் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அங்கேயிருந்து வருகின்ற இலங்கை அகதிகளுக்கு ராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் தகுந்த முறையில் சிறப்பாக ஏற்பாடுகள் செய்து வருகிறார்கள், என்று ஆளுநர் உரையிலே குறிப்பிடப்பட்டு இருக்கிறது. மூன்று தினங்களுக்கு முன் நான் மதுரைக்குச் சென்றபோது, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் என்னிடத்திலே விளக்கமாக எடுத்துச் சொன்னார்கள். அங்கேயிருந்து வருகின்றவர்களுக்கு, அந்த தேசத்தை விட்டு, விரட்டப்பட்டு, கஷ்டப்பட்டு வருகின்ற, மனது புண்பட்டு வருகின்றவர்களுக்கு நல்ல ஏற்பாடுகளை எல்லாம் செய்து வருகிறார்கள். ஆகவே நம்முடைய பாராட்டினை அவர்களுக்கு தெரிவிக்க வேண்டும்.





அடுத்து காவிரி நதியைப் பற்றி பேச வேண்டும் என்று நண்பர்கள் சிலர் சொல்லியிருக்கிறார்கள். அந்தப் பிரச்சனை நீண்ட காலமாக இருக்கிற பிரச்சனை. நாம் வேண்டுவது எல்லாம் காவிரி உற்பத்தியாகிற இடத்திலே நல்ல மழை பெய்ய வேண்டும். அவர்கள் தேக்கி வைக்க முடியாத அளவிற்கு அவர்கள் அணைகளைத் திறந்துவிட வேண்டும் என்ற அளவிலே மழை பெய்ய வேண்டும். ஆகவே இதைப் பற்றி விரிவாக பேச வேண்டிய அவசியம் இல்லை. இந்த ஆண்டு முதலிலே காவிரி தண்ணீர் வந்தாலும் கூட, பின் பகுதியில் தண்ணீர் பற்றாக்குறை காரணமாக காவிரி டெல்டா பகுதியில் உள்ள விவசாயிகள் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள் என்பது தெரியும். ஆகவே இந்த நதி நீர் பிரச்சனையைப் பொறுத்தவரையிலே என்னுடைய சொந்தக் கருத்து அது மத்திய அரசால் எடுத்துக்கொள்ளப்பட வேண்டிய ஒரு சப்ஜெக்ட் என்று நான் கருதுகிறேன். அவர்கள் அதிர்ஷ்டவசமாக மழை பெய்கிற இடத்திலே பிறந்திருக்கிறார்கள். ஆனால் துரதிருஷ்டவசமாக நாம் மிக வறண்ட பகுதியிலே பிறந்திருக்கிறோம். ஆகவே அவர்கள் உரிமையோடு அந்த தண்ணீரை எங்களிடமிருந்து மற்றவர்கள் கேட்க முடியாது கோர முடியாது என்று சொல்வதில் அர்த்தம் இல்லை. ஆகவே, பல்வேறு இனங்களில் சேர்க்கப்பட்ட விஷயங்கள் போல் இதையும் எடுத்து, பல்வேறு காரியங்களைச் செய்ய மத்திய அரசு முனைய வேண்டும். அதற்கான முயற்சியில் நாமும் ஈடுபட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஆகவே இந்த ஆளுநர் உரையின் மீது பேசுவதற்கு வாய்ப்பு அளித்த பேரவைத் தலைவருக்கு நன்றி கூறி முடிக்கிறேன். வணக்கம்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

(முற்பகல் 11-10)

**திரு. பொ. உத்திராபதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு விளக்கம். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொல்கிறபோது தஞ்சை மாவட்டத்திற்கு குவிண்டாலுக்கு 15 ரூபாய் போனஸ் கொடுக்கப்படுவது போல மற்ற மாவட்டங்களுக்கும் கொடுக்கப்பட வேண்டும் என்று சொன்னார்கள். அதில் கருத்து வேறுபாடு கிடையாது.

ஆனால், தொடர்ச்சியாக விவசாயிகளுக்கு உற்பத்திக்கு ஏற்றவாறு விலை கொடுக்கிறபோது, மத்திய சர்க்கார் தொடர்ந்து கொடுப்பதற்கு மறுத்து வருகிறார்களே; அந்த விவசாயிகளுக்கு கட்டுப்படியான விலை கிடைப்பதற்கு, உயர்த்திக் கொடுப்பதற்கு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் மத்திய சர்க்காரை வற்புறுத்தி வாங்கிக் கொடுப்பார்களா என்று கேட்க விரும்புகிறேன்?

**திரு. உ. சுப்பிரமணியன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்களுடைய கட்சியின் சகோதர அமைப்பாக உழவர் கட்சி என்ற ஒரு அமைப்பை ஏற்படுத்தியிருக்கிறோம். அதன் மூலமாக இந்தப் பிரச்னையை நாங்கள் தெரிவித்திருக்கிறோம். வட நாட்டில் உற்பத்தியாகிற கோதுமை குறைந்த செலவில் உற்பத்தியாகிறது. அதைவிட அதிகமான செலவில் நெல் உற்பத்தியாகிறது. வறண்ட பகுதிகளில் தண்ணீர் நிலைமை, மின்சார கட்டணம், டீசல் செலவு போன்றவற்றிற்கெல்லாம் அதிகமாக செலவு செய்கிற நிலை இருக்கிற காரணத்தால், தமிழக விவசாயிகள் பாதிக்கப் பட்டிருக்கிறார்கள். நெல்லுக்கு உயர்ந்த விலை கொடுக்க வேண்டும் என்று நாங்கள் மத்திய அரசைக் கேட்டுக் கொண்டிருக்கிறோம்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்களின் உரைமீது சென்ற 5 நாட்களாக நடைபெற்ற விவாதத்தில் 76 பேர்கள் கலந்துக் கொண்டு உரையாற்றி யிருக்கிறார்கள். 6-வது நாளாகிய இன்று மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும், மாண்புமிகு திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவர் பேராசிரியர் அவர்களும் உரையாற்றிய வகையில் 78 ஆக ஆகி பதிலுரைக்கிற நிலையில் 79 ஆக நான் வந்து சேர்ந்திருக்கிறேன்.

ஆகவே, மேதகு ஆளுநரின் உரை மீது இதற்கு முன்னால் நடைபெற்ற பல்வேறு கூட்ட விவாதங்களிலே கூட இவ்வளவு அதிகமான பேர்கள் கலந்துக் கொண்டு தங்களுடைய கருத்துக்களை வழங்குகிற சூழ்நிலை இதற்கு முன்னால் ஏற்பட்டது இல்லை. அந்த அளவுக்கு இந்த தடவை பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த பல்வேறு உறுப்பினர்களும் தங்களுடைய





அரசியல் கருத்துக்களை வெளிப்படுத்த வேண்டுமென்ற எண்ணத்திலேயும், தாங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்திருக்கிற தொகுதிகளிலே உள்ள பல்வேறு பிரச்னைகளை இந்த அவையிலே எடுத்து வைக்க வேண்டுமென்ற ஆர்வத்தாலும் மிகச் சிறப்பாக இங்கே பேசியிருக்கிறார்கள்.

இன்னும் ஒன்றையும் சிறப்பாக குறிப்பிட வேண்டும். இந்தத் தடவை நடைபெற்று முடிந்த தேர்தலுக்குப் பிறகு வந்திருக்கிற உறுப்பினர்களில் பல பேர் சென்ற தடவை வெற்றி பெற்று வந்து மிகச் சிறப்பாக பேசியிருக்கிறார்கள், அழகாகவும் பேசி யிருக்கிறார்கள், ஆர்வத்தோடும் பேசியிருக்கிறார்கள்—எல்லாத் தலைப்பிலும் பேசியிருக்கிறார்கள் என்பதிலும் எனக்கு பெரும் மகிழ்ச்சியுண்டு. ஆளுநர் உரையின் மீது நடைபெற்ற விவாதத்தில் கலந்துக் கொண்டு உரையாற்றியவர்களிலே பெரும்பாலோர் ஆளுநர் உரையில் குறிப்பிடப்பட்டுள்ள செய்தி, முடிக்கப்பட்ட பணிகள் செய்து வருகிற பணிகள், செய்யப்பட விருக்கிற பணிகள், நடந்து முடிந்த சிறப்புக்குரிய நிகழ்ச்சிகள், பெருமைக்குரிய வெற்றிகள் ஆகியவற்றைப் பாராட்டியும், போற்றியும், அவற்றையெல்லாம் வாழ்த்தியும் வரவேற்றும் பேசி தங்களுடைய உவகைப் பெருக்கை வெளிப்படுத்தி யிருப்பதற்காக, அந்த உறுப்பினர்கள் அத்தனை பேருக்கும் என்னுடைய மகிழ்ச்சியையும் நன்றியையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

உறுப்பினர்களிலே பல பேர் செய்யப்பட வேண்டிய பணிகள் என்னென்ன என்பதைச் சுட்டிக்காட்டி சிலபல பரிந்துரைகளைச் செய்து இருப்பதையும் நான் மிகவும் வரவேற்கக் கடமைப் பட்டிருக்கிறேன். இங்கே மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், அவருக்கு முன்னால் பேசிய திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவர் பேராசிரியர் அவர்களும், இன்று இங்கே பேசிய பேச்சுக்களிலே பல கருத்துக்கள் உள்ளபடியே எனக்கும் உடன்பாடானவைதான். அந்த வகையிலே அவர்களுக்கு நான் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்த வகையிலே பல பேர் சிறப்பான கருத்துக்களை எடுத்துச் சொல்லி யிருக்கிறார்கள்.

மேதகு ஆளுநர் உரையின் மீது எடுத்துச் சொல்லப்படுகிற கருத்துக்கள் இந்த அரசு எடுத்துக் கொண்டு வருகிற நடவடிக்கை களுக்கு மேலும் வழிகாட்டுகிற வகையிலும், குறைபாடுகள்

இருந்தால் அதைப் போக்கிக் கொள்கிற முறையிலும், அதற்கு
திருத்தம் செய்ய வேண்டிய அவசியம் இருந்தால் அதற்கான
ஆலோசனைகளை எடுத்துச் சொல்கிற வகையிலும் சொல்லி
யிருப்பார்களேயானால், நிதியமைச்சர் என்ற முறையில் எனக்கு
ஓரளவிற்கு பயன் உள்ளதாக இருந்திருக்கும். ஆனாலும் பலபேர்
தங்களுடைய உணர்ச்சி வயத்தினால், தங்களுடைய கட்சி
மாச்சரியங்களின் அடிப்படையில் கருத்துக்களை பரிமாறிக்
கொண்டதன் காரணமாக சட்டமன்றமே ஒரு பொதுக்கூட்ட
மேடையாகவே மாறி நின்ற சூழ்நிலை ஏற்பட்டதன் காரணமாக
சட்டசபையை பொறுத்தவரையில வரவேண்டிய பலன்கள்
கிடைக்காமல் போயிற்று.

சில பேர் சொல்லுகின்றபோது எடுத்த எடுப்பிலேயே ஆளுநர்
உரையிலே எதுவுமே இல்லை என்று எடுத்து சொல்லிவிட்டு,
எதை எதையோ எடுத்துச் சொன்னார்கள் என்பதை நான்
காணுகின்றபோது அவற்றை தடுத்தோ அல்லது அடித்தோ
அல்லது தொடுத்தோ கூட என்னாலும் சொல்ல முடியாத அள
விற்கு நானும் எதை எதையோ சொல்ல முடியாத அளவிற்கு
இருக்கிறேன் என்றாலும் கூட எனக்கு ஒரு மகிழ்ச்சி. இந்த
ஆளுநர் உரையிலே எதுவுமே இல்லை என்று சொல்லி ஒரு கால்
மணி நேரமாவது பேசியிருக்கிறார்களே என்பதிலே மிக்க
மகிழ்ச்சி.

மாண்புமிகு உறுப்பினர் அப்துல் சமத் அவர்கள் எடுத்துச்
சொல்லியது போன்று இந்த மேதகு ஆளுநர் உரையிலே எதுவுமே
இல்லை என்றும் சொல்லிவிட முடியாது, எல்லாமும் இருக்கிறது
என்றும் சொல்லிவிட முடியாது என்று எடுத்துச் சொன்னார்கள்.
அந்தக் கருத்துதான் என்னுடைய கருத்தும். இதிலே எதுவுமே
இல்லை, ஆனால் இதிலே இருக்கின்ற கருத்துக்கள் சிலருக்கு
உடன்பாடு உடையது அல்ல. இதிலே இருக்கின்ற கருத்துக்கள்
எங்களுக்கு மாறுபட்ட கருத்துக்கள். இன்னவிட இப்படிப்பட்ட
கருத்துக்கள் சிறப்பான கருத்துக்கள் இருந்திருதால் நன்றாக
இருந்திருக்கும் என்பதை சொல்லியிருப்பார்களானால் கூட நான்
அவர்களுடைய ஆய்வுத் திறனை பாராட்டியிருப்பேன்.
பாராட்டக்கூட வேண்டியதில்லை. எனக்கு பயன்படக்கூடிய
தாக இருந்திருக்கும். ஆனால் எதுவுமே இல்லை என்றும்





சொல்லிவிட முடியாது, எல்லாமும் இருக்கிறது என்றும் சொல்லி
விட முடியாது. ஒரு ஆளுநர் உரையிலே என்சைக்ளோபிடியா,
பிரிட்டானிகா மாதிரி கொண்டு வந்து வைத்து, உலகப் பிரச்
சனைகள் முழுவதையும் இதிலே நீங்கள் கண்டுகொள்ளலாம்
என்று எடுத்துச் சொல்லிவிட முடியாது.

சாதாரணமாக 10, 12 ஆண்டுகளுக்கு முன்னால் பார்ப்போ
மானால், ஆளுநர் உரையானது 8 பக்கம் 10 பக்கம் 12 பக்கங்கள்
தான் வருமே தவிர அதற்கு மேலாக வராது. உறுப்பினர்களுக்கு
கொஞ்சம் அதிக விளக்கங்கள் கிடைக்கட்டுமே, அவர்களுக்கு
கொஞ்சம் தெளிவு என்று அந்த அடிப்படையிலே கருத்துக்கள்
எடுப்பதற்கு வாய்ப்புகள் ஏற்படும் என்று சொல்லி 25, 26
பக்கங்கள் இப்பொழுது ஆளுநர் உரை போகிறது. சாதாரணமாக
வரவு செலவு திட்டத்தின் அடிப்படையில் எடுத்து வைக்கப்படு
கின்ற உரைகள் தான் நீண்ட அளவிலே அதிக விளக்கங்கள்
தருகின்ற வகையிலேயும், எடுக்கப்படுகின்ற பணிகள் பற்றி
எடுத்துச் சொல்கின்ற வகையிலேயும் அமையும். இந்த அளவிற்கு
வைப்பதற்குக்கூட காரணம் ஓரளவிற்கு கோடிட்டு காட்டுவதற்குத்
தான். ஆளுநர் உரையிலே, எல்லாவற்றிற்கும் விளக்கங்கள் தர
முடியாது. பல உறுப்பினர்கள் பல எதிர்பார்ப்புகளை எதிர்பார்க்
கிறார்கள் என்பது உண்மை. அவர்களுடைய எதிர்பார்ப்புகள்
அத்தனையும் இதில் இருக்க வேண்டும் என்றும் அவர்கள் எதிர்
பார்க்கிறார்கள். அவைகள் அத்தனையும் இதிலே இருப்பதற்கு
வழி இல்லை. இதற்கு அடுத்தடுத்து வரக்கூடிய துணை மானிய
கோரிக்கையில் வரக்கூடியது, வரவுசெலவு திட்டம் வருகின்ற
போது வரக்கூடியது, இதற்குப் பிறகு மானிய கோரிக்கைகள்
அந்தந்தத் துறையை பொறுத்தவரையில் வருகின்றபோது
விரிவாகவும் விளக்கமாகவும், தெளிவாகவும், திட்டவட்டமாகவும்
எடுத்துச் சொல்வதற்கு வாய்ப்புகள் ஏற்படும். இதற்கு ஆண்டு
முழுவதும் நடைபெறுகின்ற பல்வேறு தொடர் கூட்டங்களில் கூட
நாம் மேற்கொள்கின்ற பல்வேறு பிரச்சனைகளின் அடிப்படையில்
கொண்டுவரப்பட்ட தீர்மானத்தின்மீது கூட கருத்துக்கள் சொல்
வதற்கு வாய்ப்பு ஏற்படும்.

சாதாரணமாக ஒரு செய்தித்தாளைப் பார்ப்போமானால்,
தலைப்புகள் போட்டிருப்பார்களே தவிர, தலைப்புகளின் உள்ளே
தான் அதற்கான விளக்கங்கள் அதிகமாக வரும். அது மாதிரி
திட்டத்தில் இன்னின்ன நடைபெறும், இந்த ஆண்டில்

இன்னின்ன குறிக்கோள்கள் நடைபெற இருக்கின்றன
இன்னின்ன அணுகுமுறையில நடைபெற இருக்கின்றன என்று
கோடிட்டு காட்டுகின்ற அளவிற்குத்தான் ஆளுநர் உரை வா
இயலுமே தவிர, முழு விளக்கங்களையும், எல்லா பிரச்சனை
களுக்கும் பரிகாரம் பெறுகின்ற ஒரு நிலை இதிலே வருவதற்கு
நியாயம் இல்லை.

மாண்புமிகு உறுப்பினர்கள் சிலபேர் எடுத்துச் சொல்லி
யிருக்கின்ற கருத்துக்கள் வேடிக்கைக்கு எடுத்துச் சொல்லியிருப்
பார்கள் என்று கருதுகிறேன் வேடிக்கையாக உப்பும் இல்லை
சப்பும் இல்லை என்று சொன்னார்கள். நான் அவர்களுக்குச்
சொல்லிக்கொள்வதெல்லாம் நாங்கள் இந்த ஆளுநர் உரையிலே
உப்பையும் சேர்க்கவில்லை, சப்பையும் சேர்க்கவில்லை. ஆனால்
ஆளுநர் உரையில் சிந்தனை செய்வதற்காகவும், சீர்தூக்கிப்
பார்ப்பதற்காகவும், செயலாற்றுவதற்காகவும், செய்து முடிப்பதற்
காகவும், நலம் பயக்கக்கூடிய, பலன் விளைவிக்கக்கூடிய
கருத்துக்கள், எந்த முறையிலே இருக்கலாம் என்று வகையில்,
கொள்கைகளும், குறிக்கோள்களும், திட்டங்களும் சொல்லப்
பட்டனவே தவிர இதிலே உப்பை எந்த அளவிற்குச் சேர்க்கலாம்,
உரப்பை எந்த அளவிற்குச் சேர்க்கலாம், கார்ப்பை எந்த
அளவிற்குச் சேர்க்கலாம், கழிப்பை எந்த அளவிற்குச் சேர்க்கலாம்,
இனிப்பு, புளிப்பை எந்த அளவிற்குச் சேர்க்கலாம் என்கின்ற
முறையிலே அல்ல. வேடிக்கைக்குச் சொன்னதாலே நானும்
வேடிக்கையாகச் சொல்கிறேன். அந்த அளவிற்கு அல்ல. அது
மளிகைக் கடைபோல் ஆகிவிடக் கூடும்.

(முற்பகல் 11-20)

இப்போதுகூட ஐரோப்பாக் கண்டத்திலே ஒரு நாட்டைப்
பார்த்தேன். சாதாரணமாக அஞ்சல் தலை ஒட்டுகின்றபோது,
தங்களுடைய எச்சிலை எடுத்து ஒட்டுகின்ற நிலைமை
இருப்பதால், இதிலே இனிப்பைச் சேர்த்து விடுகின்ற ஒரு
தன்மையை ஏற்படுத்தி, அந்த எச்சிலைச் சேர்க்கும் போது
இனிப்பும் சேரும் என்ற முறையைக் கொண்டு வந்திருப்பதாக
நான் படித்தேன். அந்த வகையிலே இல்லாமல் இருந்தாலும்
பொதுவாக உறுப்பினர்கள் தங்களுடைய அக்கறையைக் காட்டிப்
பல்வேறு கருத்துக்களை எடுத்துச்சொல்லியிருப்பதற்காக அவர்
கள் அனைவருக்கும் என்னுடைய நன்றியை தெரிவித்துக்



கடமைப்பட்டிருக்கிறேன். ஆக இந்த மன்றத்திலே
கொள்ளக்
உள்ள பல்வேறு உறுப்பினர்கள் இந்த மாநிலம் நன்றாக இருக்க
வேண்டும், இந்த மாநிலம் பல்வேறு வகையிலும் வளம் பெற
வேண்டும், மக்களுடைய நலன்கள் எல்லாம் பல்வேறு
துறைகளிலும் பெருகி நிற்கவேண்டும், இருக்கிற குறைபாடுகளை
அகற்றவும். ஒரு நிம்மதியான வாழ்வு ஏற்பட வேண்டுமென்ற
அந்தக் கருத்திலே அக்கறை கொண்டிருக்கிறார்கள் என்பதில்
யாரும் ஐயப்பட வேண்டிய அவசியம் இல்லை, மாச்சரியம்
கொள்ள வேண்டிய அவசியம் இல்லை.

மேதகு ஆளுநர் அவர்களின் உரையிலே அனைத்திந்திய
அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு சாதித்த சாதனை
களின் அடிப்படையிலே, மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்
களின் தலைமையின் மீது மக்கள் வைத்திருக்கின்ற நம்பிக்கையின்
காரணமாக, மீண்டும் இந்த அரசு அமைக்கக் காரணமாக
அமைந்தது என்று ஆளுநர் அவர்கள் தங்களுடைய உரையிலே
குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆக இந்தத் தன்மையை எடுத்துச்
சொல்கிறபோது, ஒரு அரசு மறுபடியும் ஆட்சிக்கு வருவதும்
மக்களுடைய நம்பிக்கையையும், நன்மதிப்பையும் எந்த
அளவுக்குப் பெறுகிறது என்பதும், மக்களால் எந்த அளவுக்கு
அரவணைத்து, ஆதரித்திருக்கின்ற அளவுக்கு அமைந்திருக்கிறது
என்பதில் எந்தக் கட்சி யார் எவ்வளவு பெறுகிறார்களோ,
அவர்கள் தான் மக்களால், தேர்ந்தெடுக்கப்படுகின்ற ஒரு நிலை
இருக்கிறதே தவிர, வேறு பல காரணங்களை வைத்து நாம்
பேசுவதிலே அர்த்தம் இல்லை.

மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. பி. சிந்தன் அவர்கள் பேசும்
போது இங்கே குறிப்பிட்டார்கள். என்னைவிட, எங்களை விட,
உங்களை எல்லாம்விட, பொதுமக்கள் மிகவும் புத்திசாலிகளாக
இருக்கிறார்கள் என்று எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அதிலே
இன்னும் ஒன்றைக்கூட நான் சேர்த்துக்கொள்ள விரும்புகிறேன்.
பத்திரிகை நிருபர்களைவிட பத்திரிகையாளர்களைவிட,
விமர்சனக்காரர்களைவிட, மக்கள் மிகத் தெளிவாகவே இருந்து,
அவர்களுடைய போக்கிலே அவர்களுடைய உள்ளத்தை, யாரும்
அசைக்க முடியாமல், ஆட்ட முடியாமல், குழப்பத்திற்கு இடம்
அளிக்க முடியாத வகையில் அவர்கள் வாக்களித்திருக்கிறார்கள்
என்பது மட்டும் உண்மை. அந்த வகையில்தான் நாங்கள் தெளி

வாக எடுத்துச் சொன்னோம். மக்களுடைய நம்பிக்கையை
எங்களால் பெற முடியும். ஆளுங் கட்சியைச் சார்ந்த அனைத
திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அணியைச்
சார்ந்த பல்வேறு உறுப்பினர்கள் பல்வேறு கருத்துக்களை
எடுத்துச் சொன்னார்கள். அனைத்திந்திய அண்ணா திராவிட
முன்னேற்றக் கழக அணியைச் சார்ந்தவர்களானாலும் சரி,
திராவிட முன்னேற்றக் கழக அணியைச் சார்ந்தவர்களானாலும்
சரி, தேர்தல் களத்திலே தங்கள் தங்கள் கருத்துக்களை எடுத்துச்
சொல்லி, தாங்கள் ஆட்சிக்கு வருவோமேயானால். என்னென்ன
செய்வோம் என்று மக்களுக்கு எடுத்துச் சொல்லி மக்களுடைய
நம்பிக்கையைப் பெறுவதிலும், மக்களுடைய நன்மதிப்பைப்
பெறுவதிலும் முனைப்பாக இருந்து, அந்த அளவிற்கு
வெற்றி பெறும் வகையில் பாடுபட்டு இருக்கிறார்கள்.
மக்களே எடுத்துத் தெரிவித்து இருக்கிறார்கள். அந்த வகையிலே
நாங்கள் திட்டவட்டமாகவும் தெளிவாகவும், மக்களுடைய
நம்பிக்கை எங்கள் பக்கம் இருக்கும். மக்களுடைய நன்மதிப்பு
எங்கள் பக்கம் இருக்கும் என்ற காரணத்தின் அடிப்படையிலே
தான் இந்தத் தேர்தல் களத்தை நாங்கள் அணுகினோம்.
அவ்வாறு அணுகியபோது நாம் ஒன்றை நன்றாகக் கவனிக்க
வேண்டும். மாண்புமிகு உறுப்பினர்கள் மிகத் தெளிவாக
எடுத்துச் சொன்னார்கள்.

இந்தியாவினுடைய மாண்புமிகு பிரதமர், அன்னை இந்திரா
அம்மையாரை இழந்துவிட்டு காங்கிரஸ் கட்சி இந்தத் தேர்தலிலே
ஈடுபடவேண்டிய கட்டத்திலே இருந்தது. அனைத்திந்திய
அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்த வரையில்
புரட்சித் தலைவர் அவர்கள் நோய்வாய்ப்பட்டு, அமெரிக்காவில்
மருத்துவமனையில் இருக்கின்றபோது, அவர்களுடைய பணிகள்,
அவர்களுடைய சுற்றுப்பயணங்கள் மூலமாக, மக்களிடத்திலே
வாக்குகள் வாங்குகின்ற சூழ்நிலையை அனைத்திந்திய அண்ணா
திராவிட முன்னேறக்கழகத்தால் பெறமுடியவில்லை. அன்னை
இந்திராகாந்தி அம்மையார் அவர்களை இழந்த நிலையிலே
தேர்தலிலே ஈடுபடவேண்டிய அவசியம் காங்கிரஸ் கட்சிக்கு
மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய அன்பு, அரவ
ணைப்பு, செல்வாக்கு, புகழ், அவர்களிடத்திலே மக்கள் வைத்
திருந்த பிரியம் ஆகிய அத்தனையும், அங்கே நின்று நிலவி
யத்தாலுங்கூட, அவரே ஒவ்வொரு ஊருக்கும் சென்று, தொகுதி



தொகுதியாகச் சென்று மக்களை நேரடியாகச் சந்தித்து, வாக்கு
கேட்டு பெறுகின்ற சூழ்நிலைமை. இந்தத் தேர்தலில் நாங்கள்
பெறவில்லை. அந்த வகையிலே, சொல்கின்ற வகையிலே,
திருப்பி, திருப்பி இந்தப் பேச்சுக்களிலே அடிபட்ட ஒன்று, இந்த
அனுதாபம், அனுதாபம் என்கின்ற தன்மையால் அதற்கு எதிர்
வாதங்கள், மற்றவைகள் உறுப்பினர்கள் பல பேரால் எடுத்துச்
சொல்லப்பட்டவை என்பதை நான் நன்றாக அறிவேன்.
நாங்கள் தெளிவாகவே சொன்னோம். தேர்தல் காலத்திலே
ஒவ்வொரு களத்திலேயும் நின்றபோது எங்களுக்கு நம்பிக்கை
இருந்தது. பொது மக்கள் எங்களை ஆதரித்தார்கள். மாண்புமிகு
புரட்சித் தலைவர் அவர்கள் அமெரிக்காவுக்குச் செல்கிறபோதும்
முதல்வராகச் சென்றார்கள். அங்கே போய் மருத்துவ சிகிச்சை
பெற்றுக்கொண்டு இருக்கும்போதும் முதல்வராக செய்துகொண்டு
இருக்கிறார்கள். நாங்கள் சொன்னோம் திரும்பி வருகிறபோது
முதல்வராக வருவார்கள். வந்ததற்கு பிறகும் அவர்கள்
முதல்வராகத் தான் இருப்பார்கள் என்ற எண்ணத்தை மக்களிடம்
நாங்கள் எடுத்துச் சொன்னோம். அந்த எண்ணத்திற்கு பங்கம்
ஏற்படாத வகையில் எங்கள் நம்பிக்கை வீண்போகாத வகையில்
மக்கள் ஆதரவு நாங்கள் கொண்ட எண்ணத்தை நிறைவேற்றி
யிருக்கிறது. பாராளுமன்றத் தேர்தலையும், சட்டமன்றத் தேர்த
லையும் இந்த நிலைகளை ஒட்டி நாங்கள் வைத்தோம் என்ற ஒரு
கருத்து சில உறுப்பினர்களால் எடுத்துச் சொல்லப்பட்டது.
அன்னை இந்திரா காந்தி இறந்துபடாமல் உயிரோடு இருக்கும்
போதே மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவர் அவர்கள்
நோய்வாய்ப்பட்டு, மருத்துவமனைக்குச் செல்வதற்கு முன்னா
லேயே பாராளுமன்றத் தேர்தல் ஜனவரி 20 ஆம் தேதிக்குள்
நடத்தேதீர வேண்டும். 5 ஆண்டு கணக்குக்கு, சட்டமன்றத்
தேர்தல் ஜூன் 18 ஆம் தேதி வரையிலும் நமக்கு ஆயுட்காலம்
இருந்தது. அப்போதே இதை எல்லாம் நான் எடுத்துச்
சொன்னேன்.

ஆக இரண்டு தேர்தலையும் ஒன்றாக வைத்துவிடுவது
நமக்கு நல்லது என்று எடுத்துச்சொன்னேன். அதன் காரணமாக
நாட்டுக்கு நேரம் மிச்சமாகும், பணம் மிச்சமாகும், மறுபடியும் ஒரு
தேர்தலிலே அரசியல் கட்சிகளையெல்லாம் பொதுமக்களுக்குத்
தொல்லை கொடுக்கக்கூடிய நிலைமையை ஏற்படுத்த வேண்டாம்
என்று சொல்லி இரண்டு தேர்தல்களையும் ஒன்றாக

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1985 மார்ச் 16

வைப்பதன் மூலம் நன்மைகள் இருக்கின்றன என்று புரட்சித்
தலைவர் அவர்கள் மருத்துவ மனைக்குச் செல்வதற்கு முன்னா
லேயே இந்திரா காந்தி அவர்கள் இறந்துபடுவதற்கு முன்னாலேயே
மாண்புமிகு உறுப்பினராக இருந்த திரு. உமாநாத் அவர்கள்
கேட்ட கேள்விக்கு நான் பதிலளிக்கும்போது சொன்னேன்.
இரண்டையும் ஒன்றாக வைத்தால் ஏற்படுகிற பலன் என்ன என்று
கேட்டபோது ஏற்படுகிற தேர்தல் செலவு 12 கோடி ரூபாய்
என்றால் 6 கோடி ரூபாயை மத்திய அரசு கொடுக்கும், 6 கோடி
ரூபாயை மாநில அரசு கொடுக்கும். மற்றொன்று ஒவ்வொரு
கட்சிக்கும் அதிகப்படியான செலவு இரண்டு தேர்தல்களையும்
இரண்டு தடவைகளில் நடத்துவதால் கட்சி நோக்கத்தில் பார்த்
தாலும்கூட வேட்பாளர் நோக்கத்தில் பார்த்தாலும்கூட
கஷ்டங்கள் வரும் என்ற நிலையில் தான் தெரிவிக்கப்பட்டது. 2
ஆண்டு காலம் கழித்து தேர்தல் வந்தாலும் பரவாயில்லை.
அடுத்த 4 மாதங்களுக்குள்ளாகவே இன்னொரு தேர்தல் வருகிற
காரணத்தால் இந்த நிலைமைகளை எல்லாம் அன்னை இந்திரா
காந்தி மறைவதற்கு முன்பு புரட்சித் தலைவர் அவர்கள் நோய்
வாய்ப்படுவதற்கு முன்பு எடுத்துக் காட்டப்பட்டது. இப்படிப்
பட்ட நிலைமைகளை எடுத்துச் சொன்னதற்கு பிறகும் 9
மாநிலங்களில் ஜூன் 18, 19 தேதிகளில்தான் தேர்தல் நடத்த
வேண்டும், இருந்தாலும் முன்னாள் பிரதமராக இருந்த இந்திரா
காந்தி அவர்கள் தமிழகம் ஒன்றுக்குத் தான் நாடாளுமன்றத்
தேர்தலையும், சட்டமன்றத் தேர்தலையும் சேர்த்து நடத்துவதற்கு
இசைவு தந்தார்கள். மற்ற இடங்களுக்கு தரவில்லை. பாண்டிச்
சேரிக்கும் அப்படி தாருங்கள் என்று நாங்கள் வற்புறுத்தினோம்.
பாண்டிச்சேரி கலைக்கப்பட்டு 1½ ஆண்டுகள் ஆகியும்கூட
சேர்த்து நடத்தினால் செலவு மிச்சமாகும் என்று நாங்கள்
சொல்லியும் என்ன காரணத்தாலோ தள்ளி வைக்கவேண்டிய
சூழ்நிலை ஏற்பட்டது. ஆகவே சேர்த்து வைக்க வேண்டும் என்ற
எண்ணம் தானே தவிர வேறு அல்ல.

மற்றொன்று இங்கே எடுத்துச் சொல்லப்படுகிறபோது
அனுதாபம், அனுதாபம் என்று சொன்னார்கள். அனுதாபம்
ஒருவர் இடத்திலே எப்போது வரும்? ஒருவர் இடத்திலே அன்பு
வைக்கப்படுகிறது, பற்று வைக்கப்படுகிறபோது பந்தம், பாசம்
மற்றவைகள் வைக்கப்படுகிறபோது வரும். இந்த அனுதாபத்தி
னுடைய அளவு எப்படி நிற்கும் என்றால், எந்த அளவுக்கு அன்பு,



1985 மார்ச் 16] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

பற்று, பந்தம், பாசம் இருக்கிறதோ அந்த அளவுக்கு இருக்கும்.
ஆண்டிமடத்திலே ஆண்டியப்பனை ஆறுமுகம் சுட்டான்
என்றால் யார் அனுதாபப் படுவார்கள். யாரோ ஒருவன்
நோய்வாய்ப்படுகிறான் என்றால் யார் அனுதாபப்படுவார்கள்.
ஆகவே நோய்வாய்ப்படுகிறவரோ, படுகொலை செய்யப்படுவரோ
மக்களால் விரும்பப்பட்டு மக்களால் போற்றப்படுகிற, பாராட்டப்
படுகிற, வாழ்த்தப்படுகிற அளவுக்கு அண்ணல் காந்தி அடிகள்
மாதிரி இருக்கிற, அன்னை இந்திரா காந்தி அம்மையார் மாதிரி
இருக்கிற, தந்தை பெரியார் மாதிரி இருக்கிற, பொறிஞர் அண்ணா
மாதிரி இருக்கிற, பெருந்தலைவர் காமராஜர் மாதிரி இருக்கிற
வர்களுக்கு ஒரு சிறுகேடு ஏற்பட்டாலும்கூட மக்கள் அனுதாபம்
செலுத்துவார்கள். அனுதாபம் எங்கிருந்து வருகிறது என்றால்
ஏற்கனவே திரட்டி வைத்து இருக்கிற பாராட்டு, போற்றுதல்,
ஏற்கனவே திரட்டி வைத்து இருக்கிற செல்வாக்கு ஆகியவற்றின்
அடிப்படையில் வருகிறதே தவிர வேறு ஒன்றும் அல்ல.
மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களிடத்திலே மக்கள்
ஏற்கனவே பிரியம் வைத்து இருந்தார்கள்; தொடர்ந்து வைத்து
இருக்கிறார்கள். இந்திரா காந்தி மறைந்ததை காங்கிரஸ் கட்சி
மட்டும் அல்ல, எல்லாக் கட்சிக்காரர்களும், இந்தியாவில் உள்ள
அத்தனை பேரும் பகைவன், நொதுமலர் அத்தனை பேரும்
சேர்ந்து வருந்தினார்கள். எல்லோரும் சேர்ந்து வருத்தத்தைத்
தெரிவிக்கக்கூடிய அளவுக்கு அனுதாபத்தைத் தெரிவித்து
இருப்போம்.

(முற்பகல் 11-30)

மாண்புமிகு திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்
பேராசிரியர் அவர்கள் இங்கே எடுத்துச் சொல்லியது போல்
டாக்டர் கலைஞர் அவர்களும், புரட்சித் தலைவர் அவர்கள்
நோய்வாய்ப்பெற்றவுடனே முரசொலியிலே எழுதிக் காட்டிய
வாசகங்கள் மற்றவைகளையும் அவர்கள் படித்துக் காட்டியது
போல கருத்து வேறுபாட்டுக்கு மதிப்பளிப்பது என்பது ஒன்று,
மனிதனுக்கு மனிதன் மதிப்பு அளிப்பது என்பது மற்றொன்று.
இதை நான் ஏன் சொல்ல விரும்புகிறேன் என்றால், அனுதாப
அலை இருந்தது; ஆகவே வந்தார்கள். இந்த அனுதாப அலை
தீர்ந்து விட்டது இனிமேல் இல்லை என்ற வாதம் திருப்பத்
திரும்ப இங்கே எடுத்து வைக்கப்பட்டது. இதற்கு அடிப்படை

காரணம் இல்லை என்பதற்காகச் சொல்கிறேன். இந்திரா காந்தி மறைந்தார், மறைந்ததன் காரணமாக இந்திய மக்களிடம் இரக்கம் கொண்டது. திரு. ராஜீவ் காந்தி அவர்கள் அந்தப் பொறுப்பை ஏற்றுக் கொண்டார்கள். இந்த அனுதாப அலை தான் வெற்றித் தேடித் தந்தது. வேறு பல சூழ்நிலைகள் எல்லாம் அடிப்படைக் காரணமாகாது. சாதனைகளோ, இதற்கு முன்னாலே நடத்திக் காட்டிய நிலைமைகளையோ நிலைத்த ஆட்சி நடத்திக் காட்டிய தன்மைகளோ நீடித்த ஆட்சியை நடத்திக் காட்டிய தன்மைகளோ இல்லை என்றால் இந்த அலை ஆந்திராவில் வீசி இருக்க வேண்டும், கர்நாடகத்திலே வீசி இருக்க வேண்டும், சிக்கிமிலே வீசி இருக்க வேண்டும். ஆந்திராவில் பாராளுமன்றத் தேர்தலில் வீசவில்லை, இப்போது சட்டமன்ற தேர்தலிலும் வீசவில்லை. மக்கள் எல்லாம் திரு. என்.டி.ஆர். மீது நம்பிக்கை வைத்து இருக்கிறார்கள். அவரை மக்கள் சூழ்ந்து நிற்கக் கூடிய நிலைமை இருப்பதாலே நாடாளுமன்றத்திலே பெரும்பான்மையான இடத்திலேயும், சட்டமன்றத் தேர்தலிலே 200—சில்லரை இடங்கள் பெறும் வாய்ப்பு அவருக்கு ஏற்பட்டது. சிக்கிம் முதலமைச்சராக இருந்தவர் விலக்கப்பட்டு அவர் பரிஷத் என்ற ஒரு தனிக் கட்சி ஆரம்பித்து 28 இடங்களில் 27 இடங்களைப் பெறக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டு இருக்கிறது. ஒரே ஒரு இடம் தான் இந்திரா காங்கிரஸ் கட்சிக்கு வந்து இருக்கிறது. ஆகவே, அங்கே இந்திரா காந்தி அனுதாப அலை வீசவில்லை என்றுதானே அர்த்தம்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை.)

திரு. அ. ரகுமான்கான்: அனுதாப அலை ஆந்திராவிலே என் இல்லை, சிக்கிமிலே என் இல்லை என்று மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கேட்டார்கள். ஆந்திராவில் என்.டி.ஆர். ஆட்சி அகற்றப்பட்டது அதுதான் அங்கே அனுதாபம். சிக்கிமிலே பண்டாரி ஆட்சி அங்கே அகற்றப்பட்டது. அது தான் அங்கே அனுதாபம். ஆகவே எங்கள் கருத்தைப் போலே நீங்களும் அனுதாபம் என்றுதான் சொல்கிறீர்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அனுதாப அலை காரணம் அல்ல என்று நான் சொல்கிறேன். அனுதாப அலை தான் காரணம் என்றால் அங்கே வெற்றி பெற்றிருக்க வேண்டும். அந்த வகையில் திரு. ஹெக்டேவுக்கு என்ன வந்தது? கர்நாட





கத்திலே திரு. ஹெக்டேயை யார் நீக்கினார்கள்? (குறுக்கீடு) நீங்கள் பேசுங்கள்; நான் வேண்டுமானால் உட்கார்ந்து விடுகிறேன். நீங்கள் சொல்லவேண்டிய காரணங்களை எல்லாம் சொல்லிவிட்டீர்கள். நான் சொல்கிறேன், சொல்ல விடுங்களேன். கேட்டால் கேளுங்கள், எடுத்துக்கொள்ளவேண்டும் என்றால் எடுத்துக் கொள்ளுங்கள், தள்ள வேண்டுமானால் தள்ளுங்கள், எடுத்துச் சொல்லுவதற்கு எனக்கு உரிமையிருக்கிறது. உங்கள வாதத்தை ஏற்கனவே சொல்லிவிட்டீர்கள். திரு. ஹெக்டே எப்படி வெற்றிபெற்றார் என்று சொன்னால் காங்கிரஸ் அலை என்று சொன்னால் இந்தியா முழுவதும் இந்த அலை வீசியிருக்க வேண்டும். கர்நாடகத்திலும் வீசியிருக்கவேண்டும். அந்த அலை இருந்தால் இந்தியாவில் எல்லா இடங்களிலும் காங்கிரஸ் வென்று இருக்க வேண்டும். மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் மருத்துவ மனையில் இருந்ததால் அலை என்றால் 234 இடங்களும் எங்களுக்கே வந்து இருக்க வேண்டும். தொகுதி தொகுதியாக எடுத்துக் கொண்டால்கூட மக்கள் எங்களிடத்திலே நம்பிக்கை இருக்கிறது என்று தெரிவித்தால் நாங்கள் வெற்றி பெற்று இருக்கிறோம். சில இடங்களிலே நாங்கள் நிறுத்தி வைத்தவர்கள் தோற்றுவிட்டார்கள். நீங்கள் நிறுத்திவைத்தவர்களை மக்கள் தேர்ந்தெடுத்து இருக்கிறார்கள். இதற்குக் காரணம் உங்களிடம் நம்பிக்கை வைத்து இருக்கிறார்கள். தொகுதிக்குத் தொகுதி மாநிலத்திற்கு மாநிலம் மக்கள் வைத்து இருக்கிற நம்பிக்கையைப் பொறுத்து, பொறுப்புகளைப் பொறுத்து இருக்கிறதே தவிர அனுதாபம் என்ற காரணத்தைக் காட்டி அனுதாபம் காரணமாக வந்தார்கள் என்று சொல்ல முடியாது. அண்ணா நகரிலே இருந்த அனுதாபம் மறுபடியும் திருப்பத்தூரிலே வரவில்லை. போன அனுதாபம் எப்படி வந்து இருக்க முடியும். எனவே, அந்த வாதம் சரியல்ல என்பதற்காகத்தான் நான் சொல்லுகிறேன். யாராகஇருந்தாலும், மக்களிடத்திலே யார் நம்பிக்கையைப் பெறுகிறார்களோ, யார் மக்களுடைய அன்பைப் பெறுகிறார்களோ, யார் மக்களுடைய ஆதரவைப் பெறத்தக்க அளவிற்குத் தங்களுடைய நடவடிக்கைகளைக்காட்டுகிறார்களோ அவர்கள் வெற்றி பெறுகிறார்கள் என்கிற காரணத்திற்காகத்தான் எடுத்துச் சொன்னேனே தவிர, அந்த அனுதாபத்தை வைத்து வெற்றி பெற்றோம் என்று சொல்லுகின்ற அந்தச் சூழ்நிலை இல்லை.

அப்படிப் பார்ப்போமேயானால், சாதாரணமாக, 1978-லிருந்து மாண்புமிகு உறுப்பினர்கள் சிலபேர் பட்டியல் போட்டு காட்டியது மாதிரி, 1973 இல் திண்டுக்கல் நாடாளுமன்ற இடைத் தேர்தலிலே மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய அணி வெற்றி பெற்றது என்று சொன்னால் அப்பொழுது என்ன அனுதாபம் இருந்தது? 1974 இல் கோயம்புத்தூர் நாடாளு மன்ற, சட்டமன்றத் தேர்தலிலே எந்த அனுதாபம் வந்து வெற்றி பெற வைத்தது? 1974 இல் பாண்டிச்சேரியிலே பொதுத் தேர்தல் நடந்தபொழுது எந்த அனுதாபம் வந்து வெற்றி பெற வைத்தது? 1977-லே நடைபெற்ற பொதுத் தேர்தலிலே எந்த அனுதாபம் வந்து வெற்றிபெற வைத்தது? (குறுக்கீடு) ஆகவே, அவர்கள் சொல்வதும் வாஸ்தவம்தான், இப்பொழுதாவது புரட்சித் தலைவரைத் தூக்கி எறிந்ததால்தான் அந்த அனுதாபம் வந்தது என்று சொல்கிறார்கள். தூக்கி எறிந்தவுடன் எல்லோரும் அவர்கள் பக்கம் போய்ச் சேர்ந்தார்கள் என்பது உண்மை. இங்கேயே வைத்திருந்தோம் என்றால் -- நடக்கும் சேர்ந்துதான் சொல்கிறேன் — எல்லோரும் சேர்ந்து வந்திருந் போம் ஒன்றாக. ஆகவே, எதற்காக நான் சொல்ல வருகிறேன் என்றால், அப்பொழுதெல்லாம், எந்த அனுதாபத்தினுடைய அடிப் படையில் வெற்றி பெற்றது என்பதற்காகத்தான் நான் இதைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றேனே தவிர வேறொன்றுமில்லை.

1977 பொதுத் தேர்தலிலேயும் சரி, 1978 மாநகராட்சி மன்றத் தேர்தலில் மதுரையிலேயும் சரி, பிறகு 80-லே நடைபெற்ற தேர்தலி லேயும் சரி, 80-ல் நடைபெற்ற நாடாளுமன்ற தேர்தலைப் பொறுத்தவரையிலும், அப்பொழுதிருந்த சூழ்நிலை அகில இந்திய அரசை யார் ஆள்வது? ஜனதாவா, அல்லது இந்திரா காந்தியா — இந்திரா காங்கிரஸா என்கிறபொழுது, மக்களுடைய நம்பிக்கை, மக்களுடைய எண்ணம், அத்தனையும் இந்திரா காங்கிரஸ் பக்கம் இருக்க வேண்டுமென்று போயிற்று. அப் பொழுது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமாகிய நாங்கள் ஜனதாவை ஆதரித்தோம். நாங்கள் ஆதரித்தவர்களை மக்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. ஆகவே 80-லே நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலிலே நாங்கள் அதிக இடங்களைப் பெற முடியவில்லை. அந்த நம்பிக்கைகளைப் பெற்றவர்கள். பெற்றார்கள்



ஏன் இதை நான் சொல்ல வருகிறேன் என்று சொன்னால், இந்த அனுதாபம் என்ற காரணத்தை வைத்துக்கொண்டு வந்து விட்டீர்கள், இப்பொழுது அனுதாபம் நீங்கிவிட்டது, இனிமேல் இல்லை என்பது அல்ல. நான் இப்பொழுதே எடுத்துச் சொல் கிறேன். அடுத்து நடைபெறுகின்ற பொதுத் தேர்தலிலேயும் சரி, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டணிதான் வெற்றி பெறும் என்ற நம்பிக்கையை நாங்கள் கொண்டிருக்கிறோம் என்பதை மட்டும் இந்த வாய்ப்பிலே கூறிக் கொள்ள நான் விரும்புகின்றேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் பேசு கின்றபொழுதுகூடச் சொன்னார்கள், ஆளுங்கட்சிக்கு ஏற்பட்ட வெற்றி, இதற்குக் கிடைத்த வெற்றியா, அதற்குக் கிடைத்த வெற்றியா என்ற ஐய வினாவாகவும் கேட்டார்; அறிய வினா வாகவும் கேட்டார்; அறியா வினாவாகவும் கேட்டார். ஆனால், அவரையும் நாடு நன்கு அறியும். அவர் எடுத்து வைத்த பிரச்சி னைகள் எந்த அளவிற்கு உண்மைக்குப் புறம்பானவை என்பதையும் நாடு நன்கு அறியும். தி.மு.க. அணியைவிட, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அணி தான் நாட்டுக்கு நிலையான நன்மையைச் செய்ய முடியுமென்று வாக்காளப் பெருமக்கள் மனதார விரும்பியதன் காரணமாகப் பெருவாரியான வெற்றி எங்களுக்குக் கிடைத்தது என்று நாங்கள் கருதுகின்றோம். உண்மைக்குப் புறம்பான உரைகளையும், உண்மைக்குப் புறம்பான செய்திகளையும் மக்கள் ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டார்கள் என்பதையும் இந்தத் தேர்தல்களினுடைய முடிவுகள் மிகச் சிறப்பாக எடுத்துக் காட்டியிருக்கின்றன.

அதைத் தவிர, அரசியலிலே நேருக்கு நேர், தெளிவாக, உண்மையாக எடுத்துச் சொல்லப்படுகின்றபொழுது அதற்கு மக்கள் எந்த அளவிற்கு மதிப்புக் கொடுக்கிறார்கள் என்பதை மக்கள் மன்றத்திலே இரு சாராரும் வந்து போட்டியிடுகின்ற பொழுது மிகத் தெளிவாகவே அறிந்துகொள்ள முடியும். ஆனால், மோசடி போக்குகளிலேயோ அல்லது பித்தலாட்டத் தன்மைகளிலேயே எடுத்து வைக்கப்படுகின்ற கருத்துக்களுக்கு மக்கள் தங்களுடைய ஆதரவைத் தர மாட்டார்கள் என்பதையும் இந்தத் தேர்தலினுடைய வெற்றிகள் மிகச் சிறப்பாகக் காட்டிக் கொண்டிருக்கின்றன.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1985 மார்ச் 16

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டணி மீது பெரும்பாலான வாக்காளர்கள் நம்பிக்கை வைத்திருந்தார்கள் என்பது தான் எங்களுடைய எண்ணம். அந்த நம்பிக்கையைத் தொடர்ந்து பெற வேண்டுமென்பதிலேதான் நாங்களும் எங்களுடைய கவனத்தைச் செலுத்திக் கொண்டிருக்கிறோம்.

"குடிதழீஇக் கோலோச்சும் மாநில மன்னன்
அடிதழீஇ நிற்கும் உலகு."

என்று வள்ளுவப் பெருந்தகை கூறியதற்கிணங்க பெரும்பாலான குடிமக்களுடைய எண்ணத்தை எந்தெந்த அளவிற்குத் தங்களுடைய பணிகளை யார் யார் ஆற்றி வருகிறார்களோ அவர்கள் பக்கம் மக்கள் வந்து நிற்கும் என்ற நிலைதான் ஏற்படுகின்றது. அந்த நிலைமைக்கேற்ப ஏற்படுகின்ற சூழ்நிலைகளை ஒட்டி வருகிறதே தவிர, மாண்புமிகு உறுப்பினர் சொல்வது மாதிரி, தோல்வியும், வெற்றியும் மாறிமாறி வரும்; அது ஒருவருக்கேதான் வரும், மற்றவர்களுக்கு வராது என்பது அல்ல. எந்த அளவிற்கு ஒருவர் அதைத் தக்க வைத்துக் கொள்கிறார், நிலைத்து வைத்துக் கொள்கிறார் என்பது அவர் அவர்களுடைய சாமர்த்தியத்தைப் பொறுத்தது.

(முற்பகல் 11-40)

பிரிட்டிஷ் பாராளுமன்றத்தை எடுத்துக் கொண்டால் லேபர் பார்ட்டியும், கன்சர்வேடிவ் பார்ட்டியும் மாறி மாறி வந்து கொண்டிருக்கின்றன. ஒரு பெரும் போரை நடத்தி முடித்ததற்குப் பிறகு, மிகப்பெரும் போரை நடத்துவதற்குத் தன்னுடைய அறிவை மிகச் சிறப்பாக பயன்படுத்தியவர் என்ற பெயர் பெற்று, கூட்டு அமைச்சரவையைக் கூட நடத்திக் காட்டிய பெருமை மிக்க, சர்ச்சில் அவர்களாயே அது முடிந்த அடுத்த ஆண்டு நடைபெற்ற தேர்தலில் கூட சர்ச்சிலின் பணி எங்களுக்குத் தேவையில்லை, அட்லியின் பணிதான் தேவை என்ற அளவுக்கு அந்தத் தேர்தல் முடிவு காட்டியது. அதேமாதிரி ரிபப்ளிக் பார்ட்டியும், டெமாக்ராட்டிக் பார்ட்டியும் அமெரிக்காவிலே மாறி, மாறி வருகின்ற நிலைமை இருக்கின்றது. எனவே வெற்றி, தோல்வி என்பதைப்பற்றிய பிரச்சினையில்லை. பேரறிஞர் அண்ணா அவர்களே அழகுபட எடுத்துச் சொன்னார்கள், 'நாங்கள் வெற்றிக்காக வெறிபிடித்து அலையவும் மாட்டோம்;



1985 மார்ச் 16] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

தோல்விக்கு தொடை நடுங்கி அறையிலே போய் உட்கார்ந்து முக்காடிட்டு அழவும் மாட்டோம்' என்ற அந்த கருத்திற்கிணங்க தேர்தல் முடிவு என்பது அந்தந்த சூழ்நிலையைப் பொறுத்து வருகின்றது. யார் எந்தச் சூழ்நிலையைச் சிறப்பாக உருவாக்குகிறார்களோ அவர்களுக்கு மக்கள் தங்களுடைய மதிப்பை அளிக்கிறார்கள் என்ற கருத்தை நிலைநாட்டத்தான் நான் இந்த வாதங்களை இங்கே எடுத்துக் காட்டுகிறேனே தவிர, வேறல்ல. அந்த வகையில் நடைபோடவேண்டும் என்ற எண்ணத்திலே தான் நாங்கள் எங்கள் கருத்துக்களை எடுத்து வைத்துக்கொண்டிருக்கிறோம்.

இங்கே பல கருத்துக்களை எல்லாம் எடுத்துச் சொல்லிய போது சிலபல கருத்துக்கள் நிலையான கருத்துக்கள், நீடித்த கருத்துக்கள், எற்றும் தருகின்ற அளவுக்கு உள்ள நிலையாகக் கொண்டிருக்கின்ற கருத்துக்கள் உண்டு; அப்படிப்பட்ட கருத்துக்களை நாம் திரும்பத் திரும்ப எடுத்துச் சொல்லவேண்டிய அவசியம் இல்லை. சிலபல திட்டங்களை எடுக்கின்றபோது சிலபல பிரச்சினைகளை ஒட்டி, அல்லது சூழ்நிலையை ஒட்டி அல்லது வருகின்ற, ஏற்படுகின்ற அரசியல் விளைவுகளை ஒட்டி சிலபல புதிய கருத்துக்கள், புதிய அணுகுமுறைகள் மற்றவற்றை நாம் எடுக்கவேண்டும். அந்த வகையில் இங்கே திரும்பத் திரும்ப எடுத்துச் சொல்லப்படுகின்ற கருத்துக்களில் மொழிப் பிரச்சினை, மற்றும் மாநிலத்திற்கு அதிக அதிகாரம் உள்ள சுயாட்சித் தன்மை, தன்னாட்சிச் சூழ்நிலைகளைப் பெற வேண்டிய கருத்துக்கள் பற்றி மாண்புமிகு திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவர் பேராசிரியர் அவர்கள் எடுத்துச் சொன்ன கருத்துக்கள் ஆகிய அத்தனையும் எங்களுக்கு உடன்பாடானதுதான் என்று நான் அடிக்கடி இந்த மன்றத்திலே எடுத்துச் சொல்லியிருக்கிறேன். எங்கும் தமிழ், எதிலும் தமிழ், என்றும் தமிழ் என்ற கொள்கை நிலைநாட்டப்பட தொடர்ந்து முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இத்தகைய கொள்கைகள் நிலைத்த கொள்கைகளாகக் கொள்ளப்பட்டிருப்பதன் காரணத்தால் ஒவ்வொரு சமயமும் அதைச் சொல்லித் தெரியவேண்டிய அவசியம் இல்லை. அவ்வாறு நிலைத்த, நீடித்த, அந்தக் கொள்கையில் ஆடாமல் அசையாமல் இருக்கவேண்டும்; அதற்கு எந்த அளவுக்கு ஆக்கம் தர முடியுமோ அந்த அளவுக்குத் தந்து

எல்லா தரப்பினருடைய ஆக்கத்தோடும் அதனை நிலை நாட்ட வேண்டும் என்று எண்ணத்திலே அமைத்திருகிய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் இருக்கின்றது.

தமிழ், ஆங்கிலம் என்ற இருமொழிக்கொள்கை பின்பற்றப்பட்ட வேண்டும் என்ற கருத்திலே கடுகளவும் மாறாமல் இருக்கிறோம். அதற்கு எந்தவித ஊறு ஏற்படுமேயானாலும்கூட அந்த ஊறு ஏற்படுகின்ற நிலைமையைத் தடுத்து நிறுத்துகின்ற முயற்சிகளை நாங்கள் செய்வோம்; நாங்கள் மறந்தாலும் நீங்களும் அதைக் காட்டிக்கொடுப்பீர்கள். இருவரும் சேர்ந்தே கூட தடுத்து நிறுத்துவதற்கு ஆயத்தமாக இருக்கவேண்டும் என்று அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக நான் தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன். இந்தி திணிப்புக்கு, ஆதிக்கத்திற்கு இடம் கொடுக்காமல் இந்தி எதிர்ப்புக்கு எப்போதும் தோள் கொடுப்போம் என்ற கருத்தில்கூட எப்போதும் மாறுபாடான கருத்து கிடையாது.

ஒருவர் பல மொழிகளைக் கற்றுக்கொள்வது என்றால் அது அவரவர்களுடைய விருப்பம். 15 மொழிகள், 20 மொழிகள், 25 மொழிகள் என்று அவரவர் விருப்பப்படி தனியாகக் கற்றுக் கொள்ளலாம். ஆனால் மாநில அரசினுடைய பணம் இந்த மாநிலத்திற்கு உரிய மொழியாகிய தமிழ் மொழிக்கும், உலகத் தொடர்பு கொள்ளவும், அறிவியலோடு தொடர்பு கொள்ளவும் தொழில் நுட்பத் துறையோடு தொடர்பு கொள்ளவும், உலக வாணிபம் மற்றவைகளைச் செய்வதற்கும் பிற மாநிலங்கள், பிற நாடுகள் ஆகியவற்றுடன் தொடர்பு கொள்ளவும் ஒரு மொழி நமக்குத் தேவை; அந்த மொழி இன்றைய நிலையில் ஆங்கில மொழியாக இருக்கின்றது; அதற்குத்தான் செலவிடப்பட வேண்டும். சரியாகவோ தப்பாகவோ ஆங்கிலம் நம்மோடு 300 ஆண்டுகளாக பழக்கப்பட்டுவிட்ட காரணத்தாலும், நமக்கு அறிந்த, புரிந்த ஒரு மொழியாக இருப்பதாலும் வேறு பல மாநிலங்களை விட நம்முடைய மாநிலத்தில் 1-வது வகுப்பிலே இருந்து கடைசி வரையில் ஆங்கிலமும் தமிழும் கட்டாயப் பாடமாகத்தான் இருக்கும் என்பதை நிலைநாட்டிக் கொண்டு வருகிறோம். வேறு சில மாநிலங்களில் 5 வது வகுப்புக்கு மேல்தான் ஆங்கிலத்தை வைத்திருக்கிறார்கள். இன்னும் சில மாநிலங்களில் 8 வது வகுப்புக்கு மேலே மூன்றாண்டுக்காலம் ஆங்கிலம் கற்றுக்





கொண்டால் போதும்; ஒன்றிலிருந்தே இந்தியை மட்டும் கற்றுக்கொண்டால் போதும் என்கிறார்கள். அதனுடைய விளைவை, பலனை அவர்கள் அனுபவித்து விட்டுப் போகட்டும்.

ஆனால் தமிழகத்தைப் பொறுத்தவரையில், இந்த அரசைப் பொறுத்தவரையில், இரு மொழிக் கொள்கையை நிலைநாட்டு வதில் அழுத்தந்திருத்தமாக இருப்போம் என்பதை இந்த வாய்ப்பிலே எடுத்துக்கூற விரும்புகிறேன். இந்தியாவைக் காக்க, இந்தியாவின் சுதந்திரத்தையும், இந்திய எல்லையையும் காக்க, அதனுடைய உரிமையையும் காக்க என்னென்ன வசதிகளும், அதிகாரமும் உண்டோ அது மத்திய கூட்டாட்சியினிடத்திலே, அதனுடைய கையிலே இருக்கவேண்டும். இந்தியா முழுவதும் இருக்கின்ற போக்குவரத்து அதன் கையிலே இருக்கட்டும். காஷ்மீரிலிருந்து கன்னியாகுமரி வரையில் கான்சி என்று சொல் லப்படுகின்ற ரூபாய் மதிப்பீடு அவர்களுடைய கையிலே இருக் கட்டும். எக்ஸ்டர்னல் அஃபையர்ஸ் என்று சொல்லப்படுகின்ற வெளிநாட்டுத் தொடர்பு அவர்களுடைய கையிலே இருக்கட்டும். ஆக அந்த வகையில் இவையெல்லாம் இந்தியாவைக் காக்கவும், சுதந்திரத்தைக் காப்பாற்றவும் கூட்டாட்சி என்ற முறையில் மத்திய அரசின் கையிலே இருக்கட்டும்.

ஆனால் மக்களை வாழ வைப்பதற்காக இருக்கின்ற துறைகள், திட்டங்கள் ஆகிய அத்தனையும் மாநிலத்தின் கீழ் இருக்கின்ற அளவுக்கு மாநிலம் தன்னாட்சி பெறவேண்டும். அப்படி தன்னாட்சி புரிகின்ற அளவுக்கு மாநிலங்கள் விடப்படுமேயானால் மத்திய அரசுக்கும் மாநில அரசுக்கும் இருக்கின்ற உறவில் கசப்பு ஏற்பட வழியே இருக்காத ஒரு நல்ல சூழ்நிலை ஏற்படும். ஒவ்வொரு மாநிலமும் தங்கள், தங்களுடைய தனித் திறமையக் காட்டவும் வழி ஏற்படும். மத்திய அரசு, வேண்டுமானாலும் வளர்ந்து, சிறந்து, வளம் பொருகிய மாநிலங்களிடமிருந்து ஒரு தொகையைப் பெற்று, ஒரு பொதுத் தொகையாக வைத்துக் கொண்டு, வளராத, பிற்போக்கான மாநிலங்களுக்கு, அதிலே யிருந்து பங்கு கொடுப்பது என்கிற ஒரு முறையை வைத்துக் கொண்டாலும்கூட பரவாயில்லை. ஆனால், மாநிலங்களை வாழ வைக்கிற வேளாண்மைத் துறை, கல்விக் துறை, கால்நடைத் துறை, போக்குவரத்துத் துறை, பாலம் கட்டுகிற துறை, இந்தத்

துறைகள் எல்லாம் மாநிலங்களின் கையிலே இருக்கவேண்டும். அந்த அதிகாரங்கள் நமக்கு வர வேண்டும்; வரவேண்டுமென்று தான் மாண்புமிகு திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவர் பேராசிரியர் அவர்கள் இங்கே சுட்டிக்காட்டியதுபோல், கல்வி, மாநிலத்தின் கையில் இருக்கவேண்டுமென்பதுதான் இன்றைக்கு நம்முடைய எண்ணம். அதைத்தான் கல்வி அமைச்சர் அவர்கள் மாநாட்டிலும் நமது கல்வி அமைச்சர் அவர்கள் வற்புறுத்தி வந்தார்கள். எக்காரணம் கொண்டும் அதை மாற்றக் கூடாது. அப் பொதுப் பட்டியலிலே வரக் கூடாது என்று. பொதுப்பட்டியலின் கீழே கொண்டு வருவதன் மூலம் என்ன ஆகிறது என்றால், இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொன்ன மாதிரி, டெல்லி என்ன திட்டம் போடுகிறதோ, டெல்லி என்ன கொள்கை வகுக்கிறதோ அந்தக் கொள்கைதான் இங்கே வரும் என்று வற்புறுத்துகின்ற சூழ்நிலை ஏற்படக் கூடும்.

ஆகவே தான் கல்வி முழுக்க, முழுக்க மாநிலத் துறையினுடைய கையிலே இருக்கவேண்டுமென்று கருத்தை வாய்ப்பு ஏற்படும் போதெல்லாம் வற்புறுத்துகின்றோம் என் டி.சி.மீட்டிங்கில் இரண்டு, மூன்று முறை வற்புறுத்தி இருக்கிறோம். மறுபடியும் வற்புறுத்துவோம். அதற்காக வாதாடும் நிலைமை வருமே யானால், மாநிலங்களைத் தனித்தனியாக, அந்தந்த அமைச்சர் களை நாட் கேட்போமானால் மாநிலத்தின் துறையின்கீழே இருக்க வேண்டுமென்றுதான் சொல்கிறார்கள். 'லீட்' வருகிறபொழுது அந்தக் கூட்டங்களிலே அதற்கான ஒரு மறுப்பு ஏற்படுகிறது. ஆனால், உணர்வு வளர்க்கப்பட்டு வருமானால் அந்த உணர்வுச் சூழ்நிலையால் எல்லா மாநிலங்களிலும் ஆக்கமும் ஊக்கமும் ஏற்படுகின்ற பொழுது, என்றைக்கேனும் ஒரு நாளைக்கு அந்த எண்ணங்கள் ஈடேற வழிவகை ஏற்படும் என்கிற நம்பிக்கையில் அதனையும் நாம் சிறப்பாக்கிக் கொள்ளலாம். அந்த வகையிலே இந்திய நாட்டினுடைய ஒருமைப்பாட்டு உணர்வுக்கு ஊறு நேரிடாத வகையில், மாநிலம் தன்னாட்சி பெற வேண்டும்; மாநிலம் என்று எப்பொழுது சொல்லிவிட்டோமோ அப்பொழுதே அது தனி நாடாகாது. மாநிலம் என்பது ஒரு நாட்டினுடைய ஒரு பகுதி என்று வருகிறது. மாநிலத்திற்குத்தான் தனி ஆட்சி கேட்கிறோமே தவிர, தமிழகத்தை ஒரு தனி நாடாகப் பிரித்து, அதற்குத் தனி ஆட்சியை நாம் கேட்கவில்லை. மாநில தன்னாட்சி என்கிறபொழுது இந்தியாவுக்குள்ளே உள்ள கூட்டாட்



சிக்குள்ளே அடங்கிய ஒன்று என்று ஆகின்றபொழுது பிரிவினை என்ற வாதத்தை யாரும் எழுப்ப வேண்டிய அவசியம் இருக்காது. சிறுபான்மையோருக்கு எல்லா வழிகளிலும் எல்லா வகையிலும் பாதுகாப்பு அளிக்க வேண்டுமென்று அந்த நிலைக் கொள்கையையும் இந்த அரசு தொடர்ந்து கொண்டிருக்கிறது என்பதையும் இந்த வாய்ப்பிலே கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மேலும் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் மாண்புமிகு திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் அவர்களும் மாண்புமிகு அப்துல் சமத் அவர்களும் மற்ற கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களும் மற்ற உறுப்பினர்களும் பெரும்பாலும் இலங்கைப் பிரச்னையைப் பற்றியெல்லாம் எடுத்துச் சொன்னார்கள். இலங்கை வாழ் தமிழர்களுக்கு இழைக்கப்படுகின்ற கொடுமைகளையும் அந்தக் கொடுமைகள் பயங்கரமாகவும் மனிதத் தன்மைக்கு மீறியும் மனித மனப்பான்குக்கு இடம் தராத வகையிலும் நடைபெறுகின்றன என்பதையும் எடுத்துக் குறிப்பிட்டார்கள். அவர்கள் காப்பாற்றப்பட வேண்டும், அவர்களுக்கு வாழ்வளிக்கப்பட வேண்டும், சிறுபான்மையராக இருக்கிற அவர்களுக்கு முழு உரிமையும் அளிக்கப்பட வேண்டும். ஒவ்வொரு நாட்டிலும் ஒவ்வொரு வகையிலும் ஒரு பகுதி சிறுபான்மையர் என்று இல்லாத நாடே உலகத்திலே கிடையாது. அமெரிக்கா என்று எடுத்துக் கொண்டால் வெள்ளையர், கறுப்பர் என்ற தன்மை இருக்கிறது; பணக்காரர், ஏழை என்று இருக்கிறது. கனடா என்று எடுத்துக் கொண்டால் பிரெஞ்ச் பேசுகிறவர்கள், ஆங்கிலம் பேசுகிறவர்கள் என்று இருக்கிறது. ஒவ்வொரு நாட்டிலும் மதத்தைப் பொறுத்து இருக்கிறது, ஜாதியைப் பொறுத்து இருக்கிறது.

ஆனால், இலங்கையைப் பொறுத்தவரையிலும் தமிழைத் தாய் மொழியாகக் கொண்டு வாழ்ந்த தமிழர்கள், சிங்களத்தைத் தாய் மொழியாகக் கொண்ட சிங்களவர்கள் என்ற காரணத்தினால், முழு உரிமையும் முழு பாதுகாப்பும் சிறுபான்மையோருக்கு அளிக்கப்பட்ட வேண்டும். தமிழர்கள் கொடுமைப்படுத்தப் படுகிறார்கள். எந்த அளவுக்குக் கொடுமை என்பதையெல்லாம் இங்கே உறுப்பினர்கள் பலரும் மிக உருக்கமாகவும் மிகத் தெளிவாகவும், ஆத்திரப்பட்டும் கூட எடுத்துத் தெரிவித்தார்கள். அதிலே நல்லதொரு முடிவு கான வேண்டுமென்ற எண்ணம் நம்

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1985 மார்ச் 16

அத்தனை பெருக்கும் உண்டு, இலங்கையிலே வாழ்கிற
தமிழர்கள், நிரந்தரமாக, நிலையாக, இலங்கையையே
வாழ்விடமாகக் கொண்டிருக்கிற யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த
தமிழர்கள், இலங்கையிலே பிழைக்கச் சென்று அங்கே உரிமை
பெற்று வாழ்கிற தமிழர்கள், வியாபாரம் செய்யச் சென்று
இருந்து வியாபாரம் செய்து கொண்டிருக்கிற தமிழர்கள்,
அத்தனை பேருக்கும் முழு வாழ்வு ஏற்பட வேண்டும், நல்ல
வாழ்வு ஏற்பட வேண்டும். அவர்களுடைய உரிமைகள் எந்த
வகையிலும் பாதிக்கப்படாத அளவுக்கு நிலைமைகள் ஏற்பட
வேண்டும். அதற்கு என்ன செய்ய வேண்டுமென்று ஏற்படுகிறதோ
அதைச் செய்ய தமிழகம் தயாராக இருக்கிறது என்பதை இந்த
மாநிலத்திலே எல்லா கட்சியினரும் சேர்ந்து, தங்களுடைய
உணர்ச்சியை வெளிப்படுத்தி, ஏகமனதாக நாம் ஒரு
தீர்மானத்தை நிறைவேற்றினோம்.

(முற்பகல் 11-50)

தமிழகத்திலே இருக்கிற 5 கோடி மக்களும் இலங்கை வாழ்
தமிழர்களுக்கு நல்வாழ்வு அளிக்கவேண்டுமென்று தீவிரமான
எண்ணத்தைக் கொண்டிருக்கிறார்கள் என்பதை ஒரு நாள் பொது
வேலை நிறுத்தத்தையும், கடை அடைப்பையும் நடத்திக்காட்டி
இதற்கு முன்னாலே அப்படிப்பட்ட நிலை இல்லையென்றாக்க
நம்முடைய உணர்ச்சியை எல்லாம் எடுத்து வெளிப்படுத்தி இருக்
கிறோம். சிலபல நடவடிக்கைகளை மத்திய அரசு அதனை
ஒட்டி எடுத்தது. சர்வகட்சித் தலைவர்களை அழைத்துக்
கொண்டு இருமுறை மாண்புமிகு முதல்வர் அவர்கள் டெல்லிக்குச்
சென்று மறைந்த பிரதமர் இந்திரா காந்தி அம்மையார்
அவர்களை சந்தித்து இந்த மாநில மக்களுடைய
குமுறல்களையும், என்ன செய்ய வேண்டும் என்பதையும்
இலங்கையிலே வாழ்கிற தமிழர்களுக்கு பாதுகாப்பு அளிக்க
தீவிரமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்
என்பதையும் எடுத்துத் தெரிவித்தார்கள். அதனை ஒட்டி
சிலபல நடவடிக்கைகளை அவர்கள் மேற்கொண்டார்கள்.
அதை நிதானமாக செய்ய வேண்டும். ஆனால்
உறுதியாக செய்யவேண்டும். அதற்கு சிலபல நிகழ்ப்போக்கு
தன்மையில் செய்யவேண்டுமென்று மாண்புமிகு இந்திரா காந்தி
அம்மையார் அவர்கள் பதில் உரைத்தார்கள். அதற்குப்
பின்னாலும் நாம் எடுத்துத் தெரிவித்தோம். அதற்கு பின்னால்



1985 மார்ச் 16] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

திரு. ஜி. பார்த்தசாரதி அவர்களை அனுப்பி வைத்தார்கள்.
தான் திரு. ஜி. பார்த்தசாரதி அவர்களை சொன்னார்கள். அவர்களும்
அவர்களையும் வரும்படியாகச் சொன்னார்கள். அவர்களும்
பிரதிநிதிகளை அனுப்பி வைத்து டெல்லியிலே பேசினார்கள்.
அதற்குப் பிறகு திரு. ஜி. பார்த்தசாரதி அவர்களும் இலங்
கைக்குச் சென்று ஒரு வாரம் தங்கியிருந்து எதிர்க்கட்சித்
தலைவர்களுடன் பேசினார்கள். ஆளும்கட்சித் தலைவர்களுடன்
பேசினார்கள். அதிபர் ஜெயவர்த்தனே அவர்களுடனும்
பேசினார்கள்.

அதற்குப் பிறகு வட்டமேஜை மாநாட்டிலே ஒரு சுமுகமான
முடிவு ஏற்படுமா என்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.
அதிலே முடிவு ஏற்படுமா என்று எதிர்பார்க்கப்பட்டது.
அந்த வட்டமேஜை மாநாட்டிலே எந்தவிதமான முடிவும்
ஏற்படவில்லை என்பது மட்டுமல்லாமல் எந்த ஒரு
பிரச்னையும் தீர்ப்பதற்கான அடிப்படை முடிவும் எடுக்கப்பட
வில்லை என்கிற நிலைமையும் ஏற்பட்டது, என்பது
மட்டுமல்லாமல், அதற்குப் பிறகு வன்முறைச் செயல்களும்
அதிகமாகி அதிகமாகி, இங்கே உறுப்பினர்கள் எடுத்துத்
தெரிவித்ததற்கிணங்க நாளுக்கு நாள் உயிருக்கு பாதுகாப்பில்லை,
உடைமைக்கு பாதுகாப்பில்லை, அங்கே வாழ்வதற்கே
பாதுகாப்பில்லை என்ற அளவிற்கு நிலைமைகள் வளர்ந்துள்ளன.
கிட்டத்தட்ட 16 ஆயிரம், 17 ஆயிரம் பேர்கள் இராமேஸ்வரத்தில்
அகதிகளாக வந்து சேர்ந்து இருக்கிறார்கள். அவர்களை ஏற்று
அங்கேயும் சிலபேர்களை வைத்து மற்ற இடங்களிலும் ஒவ்வொரு
மாவட்ட ஆட்சித் தலைவர்களிடமும் சொல்லி ஆங்காங்கே
அவர்களுக்கு பாதுகாப்பு தரவும், அவர்களுக்கு வாழ்வு
அளிக்கவுமான ஏற்பாடுகளை செய்து கொண்டு வருகிறோம்.

என்றாலும் கூட இந்தப் போக்கு மாண்புமிகு உறுப்பினர்கள்
எடுத்து தெரிவித்த மாதிரி இலங்கையிலே தமிழர்களுடைய
வாழ்வை பாதிக்கிற அளவிற்கு, தமிழர்களே இல்லாத
அளவிற்கு அடியோடு அழித்து, பூண்டோடு ஒழித்து
விடுவார்களோ என்கிற நிலை இருக்கிறபோது மாநில
அரசு தன்னுடைய கருத்தை, மாண்புமிகு பேராசிரியர் அவர்கள்
எடுத்துத் தெரிவித்த மாதிரி அந்த அணுகுமுறையோடு அணுகி,
அந்த முறையில் இதைச் செய்யலாம், இந்த முறையில் அதைச்
செய்யலாம் என்றாலும், அந்தக் குறிக்கோளைப் பொறுத்த
வரையிலும் இந்த அவையிலே இருக்கிற 234 உறுப்பினர்களுக்கும்
ஒரேவிதமான குறிக்கோள் இருக்கிறது. அதை அடைவதற்

கான முறைகள் என்னவென்று நாம் தனித்தனியாக எடுத்துச் சொன்னாலும் சரி, தனித்தனியாக வற்புறுத்தினாலும் சரி, ஒன்று சேர்ந்து நாம் வற்புறுத்தினாலும் சரி, அதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டியவர்கள் மத்திய அரசாகத்தான் இருக்கிறது. மத்திய அரசு அதற்கான சிலபல நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டு வருகிறது. மாண்புமிகு இராஜீவ் காந்தி அவர்கள்கூட அப்படிப்பட்ட அட்டூழியங்கள் அதிகமாக நடக்குமானால் அதைப் பார்த்துக் கொண்டிருக்க முடியாது, நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று இரண்டுமுறை எச்சரிக்கை விடுத்திருக்கிறார்கள். இப்போது அங்கே நடைபெறுகிற அக்கிரமத்தை ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த பிரதிநிதி ஒருவர்கூட ஐக்கிய நாடுகள் அவையில் மிக வன்மையாக கண்டிக்கிற ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அமெரிக்காவிலிருந்து கூட சிங்களவே ஓரளவிற்கு ஆதரவாக இருந்தவர்கள், மனிதாபிமான தன்மையிலே உரிமைகளைப் பெறவேண்டுமென்றும், கொலை செய்கிற போக்கை நிறுத்தவேண்டும் என்றும் அவர்களும் எச்சரிக்கை செய்திருக்கிறார்கள்.

அதுமட்டுமல்லாமல், நம்முடைய மீனவர்கள் நாளுக்கு நாள் பழிவாங்கப்படுகிறார்கள். இந்திய உரிமை பெற்று இலங்கையிலே, கொழும்பிலே மற்ற இடங்களில் வாழ்கிறவர்கள் உயிருக்கு பாதுகாப்பு இல்லை. அவர்களுக்கும் சேர்ந்து கெடுதல் இருக்கிறதென்றால் அந்தக் கட்டத்திலே தலையிடுவதும், தலையிட்டு ஏதேனும் செய்வதற்கும் மத்திய அரசிற்கு உரிமை இருக்கிறது. நமக்குச் சொந்தமான ஒரு வங்கி அங்கே கொள்ளையிடப்பட்டிருக்கிறது. இந்தியாவிற்குச் சொந்தமான வங்கிகள் அங்கே தாக்கப்படுகின்றன என்றால் அதுபற்றி தட்டிக் கேட்கிற உரிமை மத்திய அரசிற்கு வந்து விடுகிறது. இவை எல்லாவற்றையும் சேர்த்து வைத்து எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை எந்த முறையிலே எடுக்க வேண்டும் என்பதை மத்திய அரசு தான் முடிவு செய்ய வேண்டியதாக அமைந்திருக்கிறது. இப்போது நாளுக்கு நாள் பிரச்னை அதிகமாகி அண்மையில், 2, 3 மாதங்களாக மிக பயங்கரமாக சென்று கொண்டிருப்பதன் காரணமாக, ஏற்கனவே 1983 ஆம் ஆண்டில் ஏற்பட்டிருக்கிற நிலைமை, 1984 ஆம் ஆண்டிலே ஏற்பட்டிருக்கிற நிலைமை இவையெல்லாவற்றையும்விட இன்று பயங்கரமாக ஆகியிருப்பதன் காரணமாக, மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் எடுத்துத் தெரிவித்ததைப் போன்று இங்கே





இருக்கிற முக்கியமான அரசியல் கட்சிகள் அத்தனைபேரும் சேர்ந்து ஒரு ஒருமித்த நடவடிக்கை எடுக்கலாமென்று நமக்குள்ளே ஒரு ஒருமித்த முடிவிற்கு வந்து, அந்த ஒருமித்த முடிவை டெல்லிக்குச் சென்றாவது சொல்லலாம். இப்போது இருக்கிற பாரதப் பிரதமர் திரு. இராஜீவ் காந்தி அவர்களிடத்தில் நேரடியாக தெரிவிப்பதன் மூலம் சிலபல விளைவுகளை எதிர்பார்க்க இயலுமா என்று எண்ணலாம். ஏனென்றால் திரு. இராஜீவ் காந்தி அவர்களைப் பொறுத்தவரையில் அவர்களோடு நான் சில சமயங்களில் பழகியிருக்கிற வரையிலும் சில நேர்மையான, சில நல்ல எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளை எதற்கும் அச்சம், தயவு தாட்சண்யம் இல்லாமல் எடுக்கவேண்டுமென்று முனைப்பு உள்ளத்தோடு அவர்கள் இருக்கிறார்கள்.

அவர்களை அணுகுவதன் மூலம், இருக்கிற பிரச்னைகளுக்குத் தீர்வு காண்பதிலே சிலபல நல்ல விளைவுகள் ஏற்படும் என்று கருதுகிறோம். சர்வ கட்சிக் கூட்டத்தைக் கூட்டி, ஒரு முடிவை எடுத்து, சில பிரதிநிதிகளையும் கூட்டிக் கொண்டு போய் அவர்களிடம் நாம் நிலைமைகளை நேரில் எடுத்துச் சொல்லலாம். நாம் சொல்லுகின்ற பிரச்சனைகளை எண்ணிப் பார்த்து அவர்கள் சிலபல நடவடிக்கைகளை எடுக்கலாம். மாண்புமிகு பேராசிரியர் அவர்கள் இங்கே தெரிவித்ததைப்போல நமக்கும் இலங்கைக்கும் இருக்கின்ற உறவை முறித்துக்கொள்ளும் நடவடிக்கையை எடுத்தாலும் சரி, வேறு பல நடவடிக்கைகளை எடுத்தாலும் சரி, அந்நிய நாடுகள் அல்லது காமன் வெல்த் நாடுகளின் தொடர்பு கொண்டு ஏதாவது நடவடிக்கை எடுத்தாலும் சரி, எந்த வகையிலே நடவடிக்கை எடுத்தாலும் சரி, நாம் நம்முடைய ஏகோபித்த கருத்தை எடுத்துச் சொல்லுகின்ற வகையிலே விரைவிலே ஒரு சர்வகட்சிக் கூட்டத்தைக் கூட்டி, ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி சில பிரதிநிதிகளோடு சென்று பிரதமர் இராஜீவ் காந்தி அவர்களை நேரில் சந்தித்து, நம்முடைய நிலைமையை எடுத்துச் சொல்வோம். நாம் சொல்வது அவர்களுடைய மனதுக்கு சரி என்று பட்டால், அவர்கள் நிச்சயமாகத் தகுந்த நடவடிக்கை எடுப்பார்கள் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. அந்தப் பாங்கு அவர்களுக்கு உண்டு. அதை அவர்கள் செய்வார்கள் என்று கருதுகிறேன். ஆகவே, அதற்கு ஏற்பாடு செய்யலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1985 மார்ச் 16

மற்றொன்று, மாநில சுயாட்சி பற்றி எடுத்துச்சொல்லும் போது இதிலே குறிப்பிடப்படவில்லையே தவிர, ஒவ்வொரு ஆண்டும் வலியுறுத்தி வந்திருக்கிறோம் என்பதை சுட்டிக் காட்ட விரும்புகிறேன். 1981-82, 1982-83, 1983-84, 1984-85 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கைகளில் எல்லாம் 2 பாரா, 3 பாராக்களிலே சொல்லியிருக்கிறோம் என்பதை மட்டும் இப்போது நினைவுபடுத்த விரும்புகிறேன். அதுபற்றி இந்த ஆளுநர் உரையிலே நினைவுபடுத்தத் தேவையில்லை என்று கருதுகிறேன். அடுத்த பட்ஜெட் உரையில் அது இன்னும் கடுமையாக இருக்கும். (குறுக்கீடு). தொடர்ந்து சொல்லிக்கொண்டு வருகிறோம். நினைவுபடுத்த வேண்டிய நேரத்தில் முறைப்படி நினைவுபடுத்தி வருகிறோம். மேலும் நினைவுபடுத்துவோம். ஆளுநர் உரையில் அது இல்லை. ஆனால் பட்ஜெட்டில் நிதியமைச்சர் எடுத்துச் சொல்வார். இதை எதற்காகச் சொல்கிறேன் என்றால் ஆளுநர் உரையில் சொன்னதை மட்டும்தான் செய்வோம், வேறு ஒன்றும் செய்யமாட்டோம் என்பதல்ல, என்பதற்காகத்தான்.

பல்வேறு பணிகளுக்கு நாம் ஆண்டுக்காண்டு செலவு செய்து வருகிறோம். இருக்கின்ற நிலைமைகளை அனுசரித்து, நிதி வசதிகளைப் பொறுத்து, அந்த அடிப்படையிலே நாம் செய்து வருகிறோம். அதை அடிப்படையாக வைத்துதான் இங்கே ஆளுநர் சிலவற்றைக் கோடிட்டுக் காட்டியிருக்கிறார்கள். அந்த வகையிலே இந்த ஓராண்டு காலத்திற்கு, அதாவது 1985-86 ஆம் ஆண்டுக்கு எதை எதைச் செய்ய வேண்டும் என்பதிலே நாட்டம் செலுத்துவோம், முன்னுரிமை தருவோம், முக்கியத்துவம் தருவோம். என்னென்ன திட்டங்களை நிறைவேற்ற இருக்கிறோம் என்பதை ஆளுநர் அவர்கள் பட்டியல் போட்டு காட்டியிருக்கிறார்கள். அவற்றை நிறைவேற்றுகின்ற சூழ்நிலைகளை நாங்கள் மெல்ல மெல்ல மேற்கொள்வோம் என்று கூறிக் கொள்கிறேன்.

நலிந்தோருக்கு, சாதாரண மக்களுக்கு ஒரு வாய்ப்பும் இல்லை என்று சொன்னார்கள். அந்த அளவுக்கு இல்லை. எந்த அளவுக்கு செய்ய முடியுமோ அந்த அளவுக்குச் செய்து வருகிறோம்; கவனம் செலுத்தி வருகிறோம். மத்திய அரசின் உதவியும் இதிலே தேவைப்படுகிறது. இத்தகையத் திட்டங்களுக்கு மத்திய அரசு ஒத்துழைப்பு தந்து, பல்வேறு திட்டங்களை



[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

1985 மார்ச் 16]

வருத்திக் கொடுத்து வருகின்ற காரணத்தால் சிலபல நன்மைகளை நம்மால் செய்ய முடிகிறது. அந்த வகையிலே, ஒன்றுதான் வங்கிகள் மூலம் செக்யூரிட்டி வாங்காமல் 5,000 ரூபாய் வரையில் கடன் வழங்க உத்தரவாதம் பெற்றது.

தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள், ஷெட்யூல்டு வங்கிகள் தமிழ் நாட்டில் 58 இருக்கின்றன. அந்த வங்கிகள் மூலம், உத்தரவாதம் பெற்று, கடன் உதவி செய்த காரணத்தால் பலருக்கு வேலை வாய்ப்பை ஏற்படுத்தியிருக்கிறோம். 1984-85 ஆம் ஆண்டில் இட்டத்தட்ட 5 இலட்சம் பேர்களுக்கு அவை கடன் வழங்கி யிருக்கின்றன. சிறு சிறு தொழில்களை நடத்தத் தெரிந்தவர்கள், நிதி வசதி இல்லாமல் அந்தத் தொழில்களை நடத்த முடியாத வர்களுக்கு நிதி வசதி செய்து கொடுத்து, ஊக்கம் அளிக்க 5 இலட்சம் பேர்களுக்கு 100 கோடி ரூபாய் கடன் தரவேண்டு மென்ற இலக்கினை ஏற்படுத்தினாலும் கூட, 31—12—1984 வரையில் 9 மாத காலத்திற்கு 6.5 இலட்சம் பேர்களுக்கு வங்கிகள் மூலம் 165 கோடி ரூபாய் கடன் தரக்கூடிய அளவுக்கு வந்திருக்கிறது. அப்படி கடன் பெற்றவர்கள் எல்லாம் நேர்மையாக, நாணயமாக தொழில் நடத்தினால் இட்டத்தட்ட 6.5 இலட்சம் பேர் சுயவேலை வாய்ப்பைப் பெறுகின்ற ஒரு சூழ்நிலையை ஏற்படுத்தியவர்களாக இருப்போம்.

கடன் உதவி வழங்குவதைப் பொறுத்தவரையில், 1980 அக்டோபர் முதல் 31—1—1985 வரையில் 13,62,820 பேர்கள் கடன் உதவி பெற்றிருக்கிறார்கள். அவர்களுக்கு மொத்தமாக அளிக் கப்பட்ட கடன் தொகை 144 கோடியே 84 இலட்சம் ரூபாய்.

(நண்பகல் 12-00)

தொழில் மேம்பாட்டுக்காக, படித்து வேலையில்லாத இளைஞர்கள், பட்டதாரிகளுக்கு சுய வேலைவாய்ப்பை ஏற்படுத்த, அவர்கள் 25 சதவீதம் தொழில் முதலீடு செய்ய, மீதியை 11 சதவீதம் வட்டியில் 60 தவணைகளில் திருப்பிச் செலுத்தும் வகையில் கடன் உதவி அளிக்க ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறது. அந்த வகையில் 31—12—1984 வரையில் 21,247 விண்ணப்பங்கள் கிடைத்தன. ஆனால் வழங்கப்பட்ட கடன்கள் இதுவரையில் 33 கோடியே 16 லட்சம் ரூபாய், இந்த வேலையில்லாமல் இருக்கிற படித்த இளைஞர்களுக்கு சுய

வேலைவாய்ப்பு ஏற்படுத்துவதற்கு நாம் தந்திருக்கிறோம். அதன் மூலமாக இந்த ஆண்டு மட்டும் 1984 லே மட்டும் 3,683 விண்ணப்பங்களுக்கு 8 கோடியே 89 லட்சம் ரூபாய் வழங்கப்பட்டு இருக்கிறது.

அதைப்போலவே சிறு பொருள் விவசாயிகளுக்கு, கடன் வழங்குகிற வகையிலே, 31—12—1984 லே சிறு பாசன வசதிகள், சிறு பாசன விவசாயிகளுக்கு 50,723 பேர்களுக்கு 10 கோடியே 5 லட்சமும், 5,259 பேர்களுக்கு அவர்கள் மேம்பாட்டிற்காக 49 லட்சமும் நாம் உதவி செய்து அவர்களை ஊக்குவித்து இருக்கிறோம்.

இது மாதிரி ஆதி திராவிட பழங்குடியினர் தொழில் நடத்த அவர்களுக்கு ஒரு தனித் திட்டம் என்ற வகையில் 4 சதவிதம் வட்டியை அவர்கள் செலுத்தினால் போதும் என்று சொல்லி, 2,56,000 பேர்களுக்கு, 24 கோடி ரூபாய் கடன் வழங்கப்பட்டிருக்கிறது. இவைகள் எல்லாம் அவர்களை ஊக்குவிப்பதற்காக செலவழிக்கப்பட்டிருக்கிறது.

இளைஞர்களுக்கு ஊரக சுயவேலைவாய்ப்புத் திட்டத்தின் மூலம் கடன் தொகை 3 ஆயிரத்திலேயிருந்து 16 ஆயிரம் வரையிலும் வழங்கலாம் என்ற திட்டத்தின் அடிப்படையிலே, அதற்கும் 4 சதவிதம் வட்டி என்ற அடிப்படையிலே கிட்டத்தட்ட 5 ஆயிரம் ரூபாயிலிருந்து 10 ஆயிரம் ரூபாய் வரையில் 10 சதவிதம் வட்டியும், 3 ஆயிரத்திலிருந்து 5 ஆயிரம் வரைக்கும் 4 சதவிதம் வட்டியும் செலுத்த வேண்டும் என்று வைத்திருக்கிறோம். 31—12—1984 வரையில் இதிலே பயன் பெற்றவர்கள், 3,324 பேர்கள். கடன் உதவி 13 கோடியே 24 லட்சம். ஏன் இவற்றை எல்லாம் சொல்லுகிறேன் என்றால், முன்னுரிமை இனங்களுக்கு வங்கிக் கடன்கள் தந்து, அந்தந்தத் தொகுதிகள் வளர்க்கப்படாமல் இல்லை, வளர்க்கப்பட்டுத்தான் வருகின்றன.

அரசின் மூலமாக செய்யப்படுகிறவைகள், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி திட்டம், கிராம வேலைவாய்ப்புத் திட்டம், வேறு தனி முறைகளிலே அவரவர்களுக்குத் தருகிற திட்டம், தன்னிறைவுத்திட்டம், இவற்றின் மூலமாக மட்டுமல்லாமல், நமக்கு என்று ஒரு தனி நிதி நிறுவனம் ஒன்றை ஏற்படுத்தி, அதேசமயத்தில் ஏழைஎளியவர்களுக்கும் மற்றவர்களுக்கும், வங்கிகளுக்கும் ஒரு



தொடர்பை ஏற்படுத்தி, கடன் வாங்கித் தருகிற வகைகளிலே நாம் பணிபுரிந்து வருகிற வகையிலே, 1977-83 முடிய மட்டும் எல்லா வங்கிகளும் சேர்ந்து, 2,430 கோடி ரூபாய் கடன் வழங்கப்பட்டு இருக்கிறது. போக்குவரத்து உரிமையாளர்களுக்கு 269 கோடி ரூபாயும், சில்லறை வியாபாரம் செய்பவர்களுக்கு 407 கோடி ரூபாயும், சுயவேலை செய்து வருகிறவர்களுக்கு 138 கோடி ரூபாயும், பிற இனங்கள் உள்ளிட்ட மொத்த உரிமைக் கடன் வழங்கியவர்களுக்கு 3,709 கோடியே 10 லட்சம் ரூபாயும் வழங்கப்பட்டிருக்கிறது.

அதோடு மகளிருக்காக அதிகமான வேலைவாய்ப்பு தந்தது அதிலேயும் தமிழகம் முதலிடம் பெற்றிருக்கிறது என்ற வகையிலே 1982-83 லே நிகழ்ந்த சாதனைக்கு மட்டும் மத்திய அரசு நமக்கு ரூபாய் 25 லட்சத்தைப் பரிசாக, விருதாக தந்திருக்கிறது. அதையும் இந்தத் துறைக்கு வைத்திருக்கிறோம். 1982-83 லே மட்டுமல்ல, 1983-84 லேயும், தமிழகம் முன்னாலே இருந்தது என்பதற்காக இந்த ஆண்டும், 25 லட்ச ரூபாயை மத்திய அரசின் மூலமாக நாம் பெற்றிருக்கிறோம், என்பதை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மற்றொரு கருத்தை நான் இங்கே நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் பல பேர்கள் எடுத்துச்சொல்கிறபோது, தமிழகம் ஒரு காலத்திலே தொழில் துறையில் 3 வது இடத்திலே இருந்தது, இப்போது எந்த இடத்திற்கோ போய்விட்டது என்று எல்லாம் சொன்னார்கள். எல்லா மாநிலத்தையும் அப்படிகலாக வைத்துப் பார்த்தால் நம்முடைய மாநிலம் 19-வது இடத்திலே இருக்கிறதே தவிர, ஆனால் தொழில் துறையைப் பொறுத்தவரையில் நாம் பார்ப்போமேயானால், 3 வது இடத்திலேதான் நாம் இன்றைக்கும் இருக்கிறோம். ஆகவே அந்த வகையிலே பார்க்கிறபோது, மத்திய தொழில் துறையினுடைய இயக்குநர் ஒரு 10 நாளைக்கு முன்னாலே இங்கே வந்து பார்த்துவிட்டு, அவர்கள் பத்திரிகைகளுக்கு அறிக்கை விடுக்கின்றபோது கூட தொழில் வளர்ச்சியில் தமிழகம் மூன்றாம் இடத்தை வகிக்கிறது, தொழில் உற்பத்தி, தொழிலாளர் எண்ணிக்கை இவற்றில் குஜராத், மகாராஷ்டிரா, ஆகிய மாநிலங்களுக்கு அடுத்ததாக தமிழகம் இடம் பெற்றுள்ளது என்று சொல்லியிருக்கிறார்கள்.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1985 மார்ச் 16

நாடுமுழுவதும் உள்ள தொழிலாளர்களின் எண்ணிக்கையைப் பார்த்தால், 10 சதவீதம் இருக்கின்றனர். தமிழகத்தின் மக்கள் தொகை எண்ணிக்கை கிட்டத்தட்ட மொத்தத்திலே 7 சதவீதம் என்றாலும், தொழிலாளர்களைப் பொறுத்தவரையில் 10 சதவீதத் தினர் தமிழக தொழிற்சாலைகளில் பணிபுரிகிறார்கள். நாட்டின் மொத்த உற்பத்தியில 10.8 சதவீதம் தமிழகத்தில் இருக்கிறது. 1977-லே 18 ஆயிரமாக பதிவு செய்யப்பட்டிருந்த சிறு தொழில்கள், 1984 டிசம்பர் இறுதியில் 59 ஆயிரமாக ஆகியிருக் கிறது. ஆகவே 7 ஆண்டுக்காலத்தில், 18 ஆயிரமாக இருந்தது 59 ஆயிரமாக பெருகியிருக்கிறது என்று சொன்னால் அளவு உற்பத்தியும் பெருகி நமக்கு கிட்டத்தட்ட நம்முடைய விற்பனை வரி மூலம் 350, 400 கோடி ரூபாய் என்று இருந்தது, இப்போது கிட்டத்தட்ட தொள்ளாயிரத்து சொச்சம் கோடி அளவிற்கு நமக்கு வந்திருக்கிறது. அந்த அளவிற்கு இவைகள் அதிகரித்திருக்கின்றன. இப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்பட்டா லொழிய நாம் எதிர்பார்க்கிற தன்மைகள் வந்து சேர இயலாது.

அதுமட்டும் அல்லாமல் சிறு தொழில் வளர்ச்சியைப் பொறுத்த மட்டில் இந்த மாநிலத்தினுடைய சதவீதம் மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது 20 சதவீதம் வளர்ச்சி ஏற்பட்டிருக் கிறது. பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட சிறுதொழில்களை புதியதாக ஏற்படுத்த வேண்டும் என்ற ஒரு குறிக்கோளையும் தொழில் துறை கொண்டிருக்கிறது. சர்க்கரை உற்பத்தியைப் பொறுத்தவரையில் நாட்டினுடைய மொத்த உற்பத்தியில் 9 சத வீதம் நம்முடைய மாநிலம், சிமெண்ட் உற்பத்தியில் 15.8 சதவீதம் நம்முடைய மாநிலம். டீசல் என்ஜின் உற்பத்தியைப் பொறுத்த வரையில், 35 சதவீதம் என்கிற இந்தியாவின் மொத்த உற்பத்தி யையும் தமிழகம்தான் செய்கிறது. மின்சாரப் பம்ப் செட்டுகள் செய்வதிலே 46 சதவீதம் தமிழகத்திலே செய்கிறோம். சைக்கிள் உற்பத்தியிலும்கூட அகில இந்திய உற்பத்தியிலே 40 சதவீதம் தமிழகத்திலேதான். அது போல டிராக்டர் உற்பத்தியிலே 12 சதவீதம் தமிழகத்திலேதான் நடைபெறுகிறது.

இதைத் தவிர ஆளுநர் உரையிலே குறிப்பிட்டது மாதிரி திருச்சியிலே 170 கோடியிலே தொழிற்சாலை ஒன்று உருவாக இருப்பதைப்பற்றி அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள் அதைப்



1985 மார்ச் 16] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

போலவே காட்பாடியில் 20 கோடியே 85 லட்சம் ரூபாய் மூலதனத் திலேயும் கடலூரில் 15 கோடி ரூபாய் மூலதனத்திலேயும் புதிய தொழிற்சாலைகள் வருவதற்கு வாய்ப்பு இருக்கிறது. அகில இந்தியாவில் இருக்கிற மொத்த தொழில் வளர்ச்சியினுடைய சதவீதம் சென்ற ஆண்டு கணக்குப்படி பார்த்தால் 5 சதவீதம் வருகிற நிலையில், தமிழகத்தைப் பொறுத்தவரையில் 8 சதவீதம் வளர்ச்சி வந்திருக்கிறது. தொழிற்சாலைகளுக்கான மூலதனம் வழங்குவதில் தமிழ்நாடு முக்கிய பங்கு வகிக்கிறது. மூலதன சதவீதம் 13 சதவீதம், ஏன் நான் இதையெல்லாம் சொல்லி வருகி றேன் என்றால், தமிழ்நாடு பின்தங்கி விடவில்லை என்பதற்காகத் தான்.

எட்டாவது நிதிக் கமிஷனுடைய பரிந்துரையிலே நாம் எதிர் பார்த்த அளவிற்கு உதவி வர முடியாமல் போனதற்குக் காரணமே இதுதான். அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்றால் பெர்கேப் பிட்டா இன்கம்மிலே, வளர்ந்த 6 மாநிலங்களிலே தமிழகமும் ஒன்று. ஆகவே, உங்களுக்கு வசதி வாய்ப்புகள் இருக்கின்றன. ஆகவே, புதிய புதிய தொழிற்சாலைகளை மத்திய அரசு உருவாக்க வேண்டும் என்று சொல்கிறபோது, இந்தியா முழுவதும் இருக்கிற எல்லா மாவட்டங்களையும் காணுகிறபோது, தொழிற் சாலையே இல்லாத ஒரு மாவட்டம் தமிழகத்திலே எதுவுமே இல்லை

ஆகவே, தொழிற்சாலையே இல்லாத மாவட்டங்கள் என்ற வகையில் பிற இடங்களிலே 39 மாவட்டங்களுக்கு மத்திய அரசு உதவி செய்திருக்கிறது. நமக்கு ஏன் செய்யவில்லை என்று கேட்டால் தமிழகத்திலே இருக்கிற அவ்வளவு மாவட்டங்களி லேயும் ஏதேனும் ஓரிரு தொழிற்சாலைகள் இருக்கின்றன என்கி றார்கள். ஆகவேதான் நாங்கள் திரும்ப திரும்ப வற்புறுத்துவது, மற்றவர்களுக்கும் நமக்கும் இருக்கும் வித்தியாசம் அவர்கள் சிறிய சிறிய மாவட்டங்களாக வைத்திருக்கிறார்கள். நாம் பெரிய பெரிய மாவட்டங்களாக வைத்திருக்கிறோம். ஆகவே, மாவட்டத்தைக் கணக்கெடுக்கக் கூடாது. வட்டத்தைத்தான் கணக்கு எடுக்க வேண்டும். தாலுக்கா என்று எடுத்தால் பிற்படுத்தப்பட்ட தாலுக்காக்கள் இங்கே இருக்கின்றன. அங்கே இன்வெஸ்ட்மென்ட் சப்சிடியிலே 15 சதவீதம் சலுகைக்கு புதிய புதிய

தொழிற்சாலைகள் வருவதற்கு வாய்ப்பு இருக்கிறது. அதை பெற்றுக் கொள்ள வேண்டும் என்று தொடர்ந்து நாம் வற்புறுத்திக் கொண்டு வருகிறோம். இந்த 8வது நிதிக் கமிஷனைப் பொறுத்த வரையிலே, நாம் எதிர் பார்த்த பணம் நமக்கு வந்து சேரவில்லை என்றால், அது நம் திறமைக் குறைவினால் அல்ல. எட்டாவது நிதிக்குழு ஒரு பார்முலா வகுத்திருக்கிறது. அந்த பார்முலாவின் படி நாம் பார்ப்போமேயானால், 8வது நிதிக் குழு மாநிலங்களுக்கு பகிர்ந்து அளித்த மொத்த தொகை 39,452 கோடி. அதிலே 7வது நிதிக் குழு வகுத்த அதே விகிதாச்சாரத்தின் அடிப்படையில் பார்த்தால் நமக்கு, அதாவது 7வது நிதிக் குழு என்னென்ன வாய்ப்பாடு வகுத்ததோ, என்னென்ன பார்முலா வகுத்ததோ அதன்படி நமக்கு இன்றைக்கு வேண்டுமென்றால் 2,845 கோடி கிடைத்திருக்க வேண்டும்.

ஆனால் இப்பொழுது சவான் அவர்களுடைய தலைமையில் அமைந்த 8வது நிதிக் குழு, மக்கள் எண்ணிக்கைக்காக ஒரு 25 சதவிகிதத்தை ஒதுக்கி, மற்றவைகளுக்கெல்லாம் 75 சதவிகிதம், பிற்பட்ட தன்மை, பிற்பட்ட தன்மை, பிற்பட்ட தன்மை என்று ஒதுக்கி விட்டதன் காரணமாகவே தமிழ்நாடு, கர்நாடகம், மகாராஷ்டிரம், பஞ்சாப், குஜராத், மேற்கு வங்காளம் ஆகிய இந்த 6 மாநிலங்களும் இந்த 75 சதவித பிற்போக்கு தன்மையிலே வரவே இல்லை. ஆகவே, இந்த 25 சதவிகிதம் தான் உங்களுக்கெல்லாம் என்று சொல்லி 75 சதவிகிதம் பிற பிற்போக்கு மாநிலங்களுக்கும் மற்றவைகளுக்கும் ஒதுக்கித் தருகிற இந்த பார்முலா இங்கே வந்தது. ஆகவே இந்த பார்முலா கூடாது. அந்த பார்முலாவை வைக்கக் கூடாது என்று நாங்கள் வற்புறுத்தி வருகிறோம். ஏழாவது நிதிக் கமிஷனின் பார்முலாபடி நமக்கு இந்த 39,452 ல் 2,845 கோடி கிடைக்க வேண்டும். இப்பொழுது சவான் தலைமையிலான 8-வது நிதிக் குழுவிலே நமக்கு என்ன கிடைக்கிறது என்றால் 2,466 கோடிதான் கிடைக்கிறது. ஆகவே நமக்கு இழப்பு எவ்வளவு என்றால் 379 கோடி. இந்த பார்முலா மாற்றத்தினாலே ஏற்படுகிறது.

ஆகவேதான் இதை மீண்டும் மீண்டும் வற்புறுத்தி வருகிறோம். சவான் குழுவிடத்திலேயும் எடுத்துச் சொன்னோம். மறுபடியும் எடுத்துச் சொன்னோம். கடைசியில் இறுதி முடிவைச் செய்கின்ற அளவுக்கு என்.டி.சி. மீட்டிங் எனப்படும், தேசிய





டெவலப்மெண்ட் கவுன்சில் மீட்டிங் வந்தால், அதிலே எடுத்துச் சொன்னால் ஓரளவு பிரதமர் எடுத்துக் கொள்வார் என்று நினைக்கிறோம். இதிலே நாம் என்ன கேட்கிறோம் என்று சொன்னால் மக்களுக்காக 25 சதவிதம் ஒதுக்கட்டும்.

(பிற்பகல் 12-10)

அது மட்டுமல்லாமல், வறுமையில் வாடுவோர், வேலையற்றோர். இந்த சதவிகிதத்திற்கு ஒரு 25 சதவீதம் ஒதுக்க வேண்டும் என்பது நம்முடைய வாதம். வறுமைக் கோட்டிற்குக் கீழே இருப்பவர்கள் என்று கணக்கு எடுத்தால் நம் தமிழகத்தில் 52 சதவீதம் மக்கள் வறுமைக் கோட்டிற்கு கீழே இருக்கிறார்கள். ஆனால் இந்த கணக்கை அவர்கள் எடுக்க மறுக்கிறார்கள். மற்றொன்று வேலையற்றோர் சதவிகிதத்தை எடுத்துக்கொள்ள வேண்டும் என்கிறோம். வேலையற்றோர் சதவிகிதம் எங்கே அதிகமாக இருக்கிறது என்றால், எங்கே கல்வி வசதி அதிகமாகவும், படிப்பதற்கு கல்வி நிலையங்கள் அதிகமாகவும், படிப்பதற்கு அதிக வசதி வாய்ப்புகளை ஏற்படுத்திய மாநிலங்கள் எவை எவையோ, அங்கே வேலை இல்லாதவர்கள் எண்ணிக்கை, படித்தவர்கள் வேலையற்றிருக்கும் எண்ணிக்கை அதிகமாக இருக்கும். அதிலே, கேரளா, தமிழகம், மகாராஷ்டிரம், மேற்கு வங்காளம் மிகவும் பாதிக்கப்படுகின்றன. ஆகவே தான் நாங்கள் வற்புறுத்துவது இதற்கு 12½ சதவீதம், அதற்கு 12½ சதவீதம். ஆக மொத்தம் 25 சதவீதம். வேலையற்றோர் இங்கே அதிகமாக இருக்கிறார்கள் என்று கருதி அவர்களுக்கு வாய்ப்பளிக்க ஒதுக்க வேண்டும் என்றும், மற்றொன்று ஏழ்மை கோட்டிற்கு கீழே இருப்பவர்களுடைய எண்ணிக்கைக்கு தகுந்தாற்போல் 12 சதவிகிதம் ஒதுக்க வேண்டும் என்பதையும் வற்புறுத்துகிறோம். அதை சவான் குழுவினர் கேட்கவில்லை. சமன்பாடு அடிப்படையிலே (ஈக்குவலைசேஷன்) வளர்ந்து வருகின்ற நாட்டிற்கு மேற்கொண்டு வளர்ச்சியை கொடுத்தால் தான் மேலும் வளர்ந்து கொண்டு போகுமே தவிர, வளர்ந்து வந்த நாட்டை நீ நில்லு என்று சொல்லி நிறுத்திவிட்டு, வளராதவர்களையெல்லாம் வளர்த்துக்கொண்டு வருகிறோம் அதற்கு பிறகு நீ ஒன்றாக சேரலாம் என்று சொல்வார்களானால் ஒரு நாடு வளர முடியாது. ... என்ற முறையிலே வளர்ந்து கொண்டே போகின்றது என்று

சொன்னால், அது போய்க் கொண்டே இருக்க வேண்டுமே தவிர, மறுபடியும் குறுகிய நிலைக்கு வரக்கூடாது. அதையும் வற்புறுத்திய காரணத்தினால் தான் 25 சதவிகிதம் மக்களுக்கு என்று ஒதுக்கியதில் வேலையற்றோர், வறுமைக்கோட்டிற்கு கீழே இருப்பவர்கள், நாட்டினுடைய மற்றைய தன்மைகள் இருக்க வேண்டும்.

மற்றொரு கோரிக்கை என்னவென்றால், குடும்ப நலத் திட்டத்தை சிறப்பாக, செம்மையாக நிறைவேற்றுகின்ற மாநிலம் நம்முடைய மாநிலம். சென்ற ஆண்டு நாம் முதலிலே வந்தோம். இப்போது வந்து இருக்கின்ற டார்கெட்படி கூட, இந்த ஆண்டும் நம் மாநிலம் முதலாவதாக வரலாம். மக்கள் தொகை குறைகிறது. மொத்த வருமானத்தை வகுத்து காட்டும் போது பெர்கேபிடா இன்கம் கூடுகிறது. எனவே உங்களுக்கு உதவி இல்லை என்று சொல்கிறார்கள். ஆகவே தான் திருப்பி கேட்டுக் கொண்டிருக்கிறோம். குடும்ப நலத் திட்டத்தை நாங்கள் நிறைவேற்றுவதற்கு எங்களுக்கு தண்டனையா இது? குடும்ப நலத் திட்டத்தை நிறைவேற்றாமல் இருப்பவர்களுக்கு சலுகையா என்று.

1951 ஆவது ஆண்டு மக்கள் எண்ணிக்கை என்னவோ அதைத் தான், இந்த பங்கீடு தருவதில் எடுத்துக்கொள்ள வேண்டுமே தவிர, அவ்வப்போது வருவதை எடுத்துக்கொள்ளாவிட்டால், யார் குடும்ப நலத் திட்டத்தை சிறப்பாக நிறைவேற்றுகிறார்களோ, அவர்களுக்கு ஒரு பலன் ஏற்படும் என்று வலியுறுத்திட்டோம். கடைசியில் ஞானம் வந்து 1971 ஆம் ஆண்டு சென்சஸை நாம் நிரந்தரமாக எடுத்துக்கொள்ளலாம் என்று முடிவெடுத்து மத்திய அரசு வந்திருக்கிறது. 1981-ஐ எடுத்தால் நமக்கு இன்னும் குறையும். 1971-வது சென்சஸிலிருந்து எடுக்கலாம் என்று சொல்லியிருப்பதால் ஞானம் வந்து கொஞ்சம் சாதகம் வரலாம். இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு இங்கே எடுத்து தெரிவித்ததைப் போல் மீண்டும் வற்புறுத்துவோம். எடுத்துச் சொல்லுவோம். என்.டி.சி. மீட்டிங்கில் வாதாடுவோம். நியாயங்களை எடுத்துச் சொன்னால் மாண்புமிகு மத்திய அமைச்சர் அவர்கள் ஏற்றுக் கொள்வார்கள் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது. அந்த வகையில் நாம் சிறந்த தன்மைகளை பெற முடியும்.



திரு. ஏ. கா. அ. அப்துல் சமத்: பேரவைத் தலைவர் அவர்களே, முன்னவர் அவர்கள், குடும்ப நலத் திட்டத்தை நாம் தீவிரமாக அமல்படுத்தி, மக்கள் தொகையை குறைந்து, அதற்கு ஏற்ப மத்திய அரசு நமக்கு தர வேண்டிய நிதியும் குறைக்கக்கூடாது என்பதில் முனைந்து எச்சரிக்கை எடுத்து, அவர்கள் வற்புறுத்தியிருப்பதைத் தெரிவித்தார்கள். மகிழ்ச்சி. ஏற்கனவே இந்த குடும்பக் கட்டுப்பாட்டை தீவிரமாக அமல்படுத்திய காரணத்தினால், மக்கள் தொகைக்கு இணங்க, நாடாளுமன்றத்திலே ஒரு இடம் குறைந்துவிட்டது. அதையும் போராடி பெறுவார்களா என்பதை அறிய அவர்களை விரும்புகிறேன்.

டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்துல் சமத் அவர்கள் சொல்வது உண்மை தான். அந்தக் காலத்தில், 1951-ல் 41 இடங்கள் இருந்தது. அதிலே மக்கள் தொகையைக் கட்டுப்பாடு செய்ததன் காரணத்தால், இப்போது நமக்கு 39 தான் வருகிறது. அவர்கள் சொல்கிற மாதிரி, 1951 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கை எடுத்துப் பார்த்தால், நாடாளுமன்றத்தில் தற்போ ஆக மறுபடியும் நமக்கு 41 இடம் வரவேண்டும். நமக்கு உரிய பங்கு இதிலே வரவேண்டும். யார், யார் குடும்ப நலத் திட்டத்தைச் சிறப்பாக நடத்துகிறார்களோ, அவர்களுக்குப் பாராட்டு என்றும், யார் நிறைவேற்றவில்லையோ அவர்கள் தண்டனை அனுபவிக்கட்டும் என்று விட்டுவிடலாம். நல்லவை செய்பவர்களுக்கு பரிசும், தவறுகள் செய்கின்றவர்களுக்கு தண்டனை அனுபவிக்க வேண்டிய இப்போது போக்கும் இருக்கிறது.

அடுத்து குடிநீர் தன்மையைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோரும் தெரிவித்தார்கள். வசதி வாய்ப்பு வருகின்றபோது வேர்ல்டு பாங்கிடமிருந்தும், ரிசர்வ் பாங்கிடமிருந்தும், மத்திய அரசாங்கத்திடமிருந்தும், கடன் வாங்கி ஆண்டுக்காண்டு நிறைவேற்றி வருகிறோம். ஊரகத்திற்கு குடிநீர் வசதி இன்றியமையாத தேவை தான். குடிநீர் வசதி இல்லாத சிற்றூர்கள் பல இருக்கின்றன. இந்த நிலை எல்லாத் தொகுதியிலும் இருக்கிறது. குறிப்பாக என்னுடைய தொகுதியிலும் இருக்கிறது. ஆக எல்லாத் தொகுதியிலும்

இருக்கிறது என்று தான் சொன்னேன். ஆக இந்தக் குடிநீர் வசதியைப் பொறுத்தவரையில், உடனடியாக இந்தக் குறைபாடுகளை நாம் போக்க வேண்டுமானாலும் கூட, கிட்டத்தட்ட ஓரளவிற்கு கிராமங்களுக்கு ரூ. 300 கோடி தேவைப் படுகிறது. இருந்தாலும் நாம் இதை 'பேஸ்டு புரோகிராமாக' தான் செய்ய வேண்டும். இதற்காக கடன் உதவியைக் கேட்டுக் கொண்டிருக்கிறோம். அதனால் இப்போது ஓரளவிற்கு வறட்சி ஏற்பட்டிருப்பதன் காரணமாக, உடனடியாக ஏற்கனவே போட்ட ஆழ் துளைக் கிணறுகளைச் சீர்படுத்தி, செம்மைப் படுத்திக் கொடுக்கவும், புதிய ஆழ் துளைக் கிணறுகளை, எங்கெங்கு தேவைப்படுகின்றனவோ, அங்கெல்லாம் விரைவில் போட்டுத் தருவதற்காக, தொகையை நாம் கேட்டுக் கொண்டிருக்கிறோம்.

இப்போது மார்ச். இப்போதே இந்த நிலை. என்றால், மே-யில் இந்த நிலைமை இன்னும் கடுமையாகும் என்பதால், முன்னேற்பாடான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று அந்தத் துறையினர் எச்சரிக்கப்பட்டிருக்கிறார்கள். இருந்தாலும் முன்கூட்டியே, ஆழ் துளைக் கிணறுகளை, வேண்டிய அளவிற்கு, தண்ணீர் கிடைக்கின்ற இடங்களிலே, புதியதாகப் போடவும், ஏற்கனவே போடப்பட்டிருந்த ஆழ் துளைக் கிணறுகள் பழுதுபட்டிருக்குமேயானால், அவைகளைப் பழுதுபார்த்து, செம்மைப்படுத்திக் கொண்டு வரவும், சில பல இடங்களில் தண்ணீரை லாரிகளின் மூலமாகவும் வண்டிகளின் மூலமாகவும் கொண்டு வருவதற்கும், அங்கே ஒரு அக்யூட், நெருக்கடியான தன்மை மக்களுக்கு வருமேயானால், அதற்குத் தேவையான திட்டங்களைத் தீட்டி, அதற்குரிய பல்வேறு நடவடிக்கைகளை நாம் மேற்கொண்டு வருகிறோம்.

அதுபோன்று மின்சாரத்தைப் பற்றியும் மாண்புமிகு உறுப்பினர்கள் பல பேர் எடுத்துத் தெரிவித்தார்கள். மின்சாரத்திற்கு அதிக முக்கியத்துவம் தர வேண்டும் என்று குறிப்பிட்டார்கள். இதைத் தரவேண்டுமென்பதில் மிகுந்த அக்கறை கொண்டிருக்கிறது அரசு. ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நாம் மூன்றில் ஒரு பகுதித் தொகையை மின்சாரத்திற்காக ஒதுக்கினோம். ரூ. 3,150 கோடி ஒதுக்கப்பட்டதில், ரூ. 3,600 கோடி சொச்சம் அதற்காக நாம் செலவு





செய்ததிலும் அதிலே மூன்றிற்கு மேற்பட்ட ஒரு பகுதியாக மின்சாரத்திற்குத் தந்தோம். ஏழாவது ஐந்தாண்டுத் திட்டம் போடுவதிலும் மூன்றில் ஒரு பங்குத் தொகை மின்சாரத்திற்குத் தர வேண்டுமென்பது தான். ஏனென்றால் தமிழகத்தினுடைய வளர்ச்சியே மின்சாரத்தைப் பொறுத்தது தான். தொழில் வளர்ச்சியானாலும் சரி, வணிக வளர்ச்சியானாலும் சரி, வேளாண்மை வளர்ச்சியானாலும் சரி, ஆக எந்த வளர்ச்சிக்கும் அடிப்படைத் தேவை மின்சாரமாகத்தான் இருக்கிறது. நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில், ஏழாவது ஐந்தாண்டுத் திட்டம் முடிகின்ற நேரத்திலும் கூட, நமக்கு இருக்கின்ற ஆதாயங்களை வைத்து, அப்போது ஓரளவிற்கு டெபிசிட்டாகத் தான் இருக்கும் என்ற கணக்கைக் கொடுத்து இருக்கிறார்கள். இப்போது இருக்கும் நிலைமையில், கல்பாக்கம் ஓரளவுக்குப் பழுது படாமல் இருந்திருந்தால், 200 மெகாவாட் நமக்குக் கிடைத்திருக்கும். நெய்வேலி பழுதடைந்து இப்போது சீர்பட்டு வருகிறதென்று சொல்கிறார்கள். தூத்துக்குடி பழுதடைந்து இப்போது ஓரளவிற்கு நிவர்த்தி செய்யப்பட்டு விட்டது.

ஆக ஆண்டுக்காண்டு மின்சாரத்தினுடைய தேவையின் அளவு வளர்ந்துகொண்டே வருவதன் காரணமாக இப்போது இருக்கின்ற தன்மைகளின் அளவிற்கு நீர் நிலை மின்சாரத்தை சீர்படுத்தவும், இதற்குத் தேவையான நிலக்கரியை மத்திய அரசிடம் கேட்டு, உடனுக்குடன் அனுப்பக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டால், தூத்துக்குடி அனல் மின்சார நிலையம், எண்ணூர் மின்சார நிலையம், அதனுடைய முழு கெபாசிட்டி அளவிற்கு மின்சாரத்தை உருவாக்கித் தர முடியும். ஓரளவு இப்போது நெய்வேலியில் இன்னும் 400 மெகாவாட் கிடைப்பதற்குத் திட்டத்தைத் தீட்டியிருக்கிறார்கள். அது மத்திய அரசினுடைய அனுமதிக்காகப் போயிருக்கிறது என்று சொல்கிறார்கள். அனுமதி கிடைக்க காலம் ஆகும் என்றாலும் கூட, இப்போது மின்வெட்டு போட்டிருப்பது, பெரிய தொழிற்சாலைகளுக்குத்தான். தமிழகத்தைப் பொறுத்தவரையில், மொத்தம் 1,540 தொழிற்சாலைகள் இருக்கின்றன. இதிலே 40 சதவிகித மின்வெட்டு அமல்படுத்தியுள்ள தொழிற்சாலைகள் 949 இருக்கின்றன. 50 சதவிகித மின்வெட்டிற்கு உட்பட்டு அதிமின் உபயோக தொழிற்சாலைகள் 33 தான்.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1985 மார்ச் 16

(பத்திகள் 13-20)

ஆக, மின்வெட்டுக்கு உள்ளாகியுள்ள தொழிற்சாலைகள் மொத்தமே 960. அதுவும் பெருந்தொழிற்சாலைகள். தமிழகத்திலே மொத்தம் குறைவழுத்த மின்சக்தி பெறும் தொழிற்சாலைகள் 1,84,760. இவை இப்போது பாதிக்கப்படவில்லை. ஆனால், மின்சாரத்தின் அளவு சில பல மணிநேரம் குறைக்க வேண்டிய அளவுக்கு இருக்கிறது. அடியோடு வெட்டுப் போடப்படவில்லை. இதை சீர்ப்படுத்துவதற்கு மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் எடுத்து தெரிவித்த மாதிரி அதை நிறைவேற்றலாம். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் எடுத்துச் சொன்னது மாதிரி தனியார் துறையிலே தெர்மல் ஸ்டேஷன்கள் அவர்களுடைய செலவிலே வைத்துக் கொள்ளலாம். அதிலே மிச்சப்படுகிற மின்சாரத்தை அரசு வாங்கிக் கொள்ளலாம், என்ற கொள்கையை இந்த அரசு ஏற்றுக்கொண்டு அது குறித்து மத்திய அரசிடம் கேட்டுக் கொண்டிருக்கிறது. அதற்கு இடம் அவர்கள் தந்துவிடுவார்களானால், கோயம்புத்தூரைப் பொறுத்த வரையில் தனியாரை வைத்து அவர்களையே வேர் போடச் சொல்லி, தேவையானால் அரசு ஓரளவுக்கு பங்கெடுத்துக் கொண்டு.

திரு. கு. சுப்பாராயன்: லோட் ஷெட்டிங் அன் அப்நெடிகலாக செய்யப்படுகிறது. அதனால் ஏற்படுகிற பவர் கட்டை தடுக்க அரசு என்ன ஆலோசனை செய்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு உறுப்பினர் சொல்வதை மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் அவர்கள் கவனித்து அது என்ன என்கிற நிலைமைகள் எனக்கு தெளிவாக தெரியவில்லை. அதை மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் பார்த்து தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்வார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஓசூர், சென்னை, ஆவடி, அம்பத்தூர், திருநெல்வேலி, மதுரை போன்ற பகுதிகளில் தனியார்கள் வைத்துக் கொள்வதற்கு நாம் இடம் கொடுத்து விடுவோமானால் அந்த மின்சாரத்தை தொழில்களுக்கும் மற்றவற்றிற்கும் வீடு முதலியவற்றிற்கும் தருவதற்கு வாய்ப்பு ஏற்படும் என்று கருதுகிறோம். இதை



1985 மார்ச் 16] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

தேசியமயமாக தெளிவாக எடுத்துச் சொன்னால் ஆட்சேபனை செய்வதற்கு இல்லை. பம்பாயில் தனியார் துறையினர்தான் மின்சாரம் தருகிறார்கள். டாடா கம்பெனி உற்பத்தி செய்து பம்பாய் முழுவதும் தருகிறது. தனியார் கம்பெனி நடத்தாமல் இல்லை. ஏற்கனவே இங்கேயும், தனியார்கள் 2, 3 கம்பெனிகள் நடத்திக்கொண்டு இருந்தார்கள். நாம்தான் அந்த தேசிய மயமாக்கினோம். தனியார் பல்வேறு கம்பெனிகளை நடத்தச் சொல்லி எல்லோரும் கூட்டு சேர்ந்து நடத்தக்கூடிய அளவில் மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்ன கருத்துக்களின் அடிப்படையில் அவற்றையும் நிறைவேற்றலாம் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

மற்றும் வேறு பல கருத்துக்களையும் பற்றியவைகளையும் சொல்ல வேண்டுமானால் அடுத்து நிதிநிலை அறிக்கை வருகிறது. அதிலும் மாண்புமிகு உறுப்பினர்கள் பேசுவார்கள், அதற்கு பதில் சொல்ல வேண்டியிருப்பதால் வேறு பல துறைகளைப் பற்றி எடுத்துச் சொல்லலாம் என்று நினைக்கிறேன்.

இலங்கையிலிருந்து தாயகம் திரும்பியவர்களுக்கு 1976-லிருந்து 1984 வரையில் கடன்கள் மற்றவைகள் வழங்கப்பட்டு இருக்கிறது. அதற்கு பிறகு அவர்களுக்கு வசதி செய்து தருகிற முறையில் பல்வேறு வகைகளில் 4 கோடியே 15 லட்சத்து ஆயிரத்து நூற்று பதினொரு ரூபாய் செலவழித்து இருக்கிறோம். அதற்கு மத்திய அரசு ஓரளவுக்கு உதவி செய்கிறது. நாம் கிட்டிய அளவில் திரும்பியிருக்கும் செய்து கொண்டும் வருகிறோம். நான் முதலிலே சொல்லியபடி இந்தப் பிரச்சினை ஓரளவுக்கு தீர்க்கப்பட வேண்டியது தான். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் தங்கள் பகுதிகளில் உள்ள குறைபாடுகளைப் பற்றிச் சொன்னார்கள். குறைபாடுகளை நீக்குவதிலே குடிநீருக்கு முதலிடம் தரவேண்டும். இரண்டாவதாக சாலை வசதிகளுக்கு இடம் தர வேண்டும். மூன்றாவதாக மின்சாரத்திற்கு இடம் தரவேண்டும் என்றும் அதற்கு பிறகு தனிப்பட்ட நலன்களை கவனிக்கலாம் என்ற அளவுக்கு பொது நன்மை கருதி செய்ய வேண்டும் என்ற அடிப்படையிலே முதலிடம் தர வேண்டும் என்ற அடிப்படையை வைத்து பணியாற்றிக் கொண்டு வருகிறோம். அதற்கு ஏற்ற நல்ல ஒரு சூழ்நிலையை மாண்புமிகு உறுப்பினர்கள் உருவாக்கித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1983 மார்ச் 16

ஆளுநர் உரையிலே எல்லா உறுப்பினர்களும் எடுத்து சொன்னது மாதிரி உள்ளாட்சி மன்றத் தேர்தல்களை நடத்த வேண்டும் என்ற எண்ணம் தான் 100-க்கு 100 அ.இ.அ.தி.மு. கழகத்திற்கு உண்டு. உள்ளாட்சித் துறையின் தேர்தல்கள் காலாகாலத்தில் நடைபெற்று, மக்களுடைய பிரதிநிதிகள் ஒவ்வொரு ஊரிலும் ஒவ்வொரு நகராட்சியிலும் மற்ற பகுதியிலும் இருப்பார்களேயானால், இங்கே இப்போது நடக்கிற பணிகளை விட இன்னும் கொஞ்சம் செம்மையாக நடைபெறும் என்ற நம்பிக்கை ஆளும் கட்சிக்கு உண்டு. பல்வேறு காரணங்களால் உள்ளாட்சி மன்றத் தேர்தல் தள்ளப்பட்டு, தள்ளப்பட்டு அதற்கு பிறகு சிலமுறைகள் வகுக்கப்பட்டு அந்த முறைகளுக்கு இடர்தர முடியாத சூழ்நிலை ஏற்பட்டு மாச்சரியங்கள் எல்லாம் ஏற்பட்டு, அதை நாம் ஒரு கொள்கை அடிப்படையில் கொண்டு வந்தாலும் கூட நடைமுறைப்படுத்துவதில் மக்களுடைய மனப்பான்மை பக்குவப்படவில்லை.

ஆகவே, ஆதி திராவிடர்களுக்கு 18 சதவிகிதம் ஒதுக்கவும், பெண்களுக்கு 15 சதவிகித இடம் ஒதுக்கவும், அல்லாமல் ஊராட்சி மன்றங்கள் ஒதுக்கவும், அது மட்டும் மன்றங்களோடு ஊராட்சி ஒன்றியங்களை ஒதுக்கவும், ஊராட்சிகளை ஒதுக்கவும், முடிவு செய்யப்பட்டபோது நகராட்சி சூழ்நிலைகளில் பல மாச்சரியங்கள் வருகின்றன. ஆங்காங்கு வந்து இங்கே நின்று மக்களுக்கு நன்மை செய்யலாம் என்று நினைத்துக் கொண்டு இருக்கும்போது அது பொதுத் தொகுதியாக இருந்து தனித் தொகுதியாக போய்விடுமானால் நாம் வேறு ஒரு இடத்திற்கு போய் நிற்கமுடியாது என்ற மாச்சரியங்கள் வந்து தடை ஆணை வாங்கக்கூடிய நிலைமை ஏற்பட்டு, பல்வேறு தடை ஆணைகள் வாங்கப்பட்டுள்ளன. இப்படிப்பட்ட நிலைமைகளை மாற்ற முடியுமா என்று எல்லாம் பார்ப்போம். இதிலேயே பல காலம் தள்ளப்பட்டுவிட்டது. இன்று எல்லா உறுப்பினர்களும் சேர்ந்து அ.இ.அ.தி.மு.க. உட்பட நாமும் நன்றாக உணர்கிறோம். ஆங்காங்கு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள், தலைவர்கள், துணைத்தலைவர்கள் மற்றவர்கள் இருந்தால் ஆங்காங்கு இருக்கக்கூடிய அதிகாரிகளை கண்காணிக்க முடியும். அவர்கள் தவறு செய்தாலும், அதிகாரிகள் கண்காணிக்க முடியும். இரண்டு பேரிலே யார் தவறு செய்தாலும் அது அரசுக்கும் பொதுமக்களுக்கும், வரும். இரண்டாவதாக



1983 மார்ச் 16] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

ஒவ்வொரு பகுதியிலே உள்ள குறைபாடுகளை நச்சரித்து, நச்சரித்து போக்குகிற போக்கினை ஆங்காங்கு உள்ள உறுப்பினர்கள் பெற்று இருப்பார்கள். இதற்கு எல்லாம் இடம் இல்லாமல் இருப்பதால் மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொன்ன குறைபாடுகளில் நியாயம் இருக்கிறது என்பதை நாம் ஒத்துக் கொள்கிறோம். மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் கூட வழக்கு மன்றங்களிலே வருகின்ற நிலைமைகள் மாச்சரியங்கள் எல்லாம் பார்த்தால் சமீபத்திலே அவை தீருகிற மாதிரி தெரியவில்லை. தீர்ந்தாலும் இன்னொரு வழியை கண்டுபிடிக்கக்கூடிய அளவுக்கு ஏதாவது ஓட்டை உடைசல் கிடைக்குமா என்று அவர்கள் தேடிக் கொண்டிருப்பார்கள், இப்படிப்பட்ட சூழ்நிலையில் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்தபடி புதிய முறையிலே தெளிவு ஏற்படா விட்டாலும் பழைய முறையில் ஊராட்சி [illegible] ஊராட்சி ஒன்றியங்கள், நகராட்சி மன்றங்கள் [illegible]க்கு தேர்தலை நடத்துவது என்ற வாக்குறுதி [illegible] மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே எடுத்துக் [illegible]ார்கள்.

[illegible] மாதிரி அ.இ.அ.தி.மு.கழகம் தன்னுடைய தேர்தல் அறிக்கையிலே திட்டவட்டமாக நாங்கள் சொல்லியிருக்கிறோம். வருகின்ற ஆண்டில் உள்ளாட்சி மன்றத் தேர்தல்களை நடத்துகின்ற முயற்சியை கழகம் ஆட்சி பொறுப்பை ஏற்றால் செய்யும் என்ற உறுதிமொழியை கொடுத்து இருக்கிறோம். அந்த வகையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வாக்குறுதி அளித்தபடியும் அ.இ.அ.தி.மு.கழகம் தேர்தல் அறிக்கையில் கூறிய படியும் உள்ளாட்சி மன்ற தேர்தல்கள், ஊராட்சி ஒன்றியத் தேர்தல்கள், நகராட்சி மன்றத் தேர்தல்கள், மாநகராட்சி மன்றத் தேர்தல்கள் அடுத்து அடுத்து முறையே ஆகஸ்ட், செப்டம்பர் திங்களில் கட்டாயம் நடைபெறும். ஏன் என்றால் திருச்செந்தூர் தேர்தல் ஏப்ரல் 24 ஆம் தேதி வரும் என்று ஏற்கனவே சொல்லி விட்டார்கள். ஆகவே, நம்முடைய சட்டமன்ற நடவடிக்கைகளை ஏப்ரல் முதல் வாரத்தில் முடித்துக்கொள்ள வேண்டிய கட்டாயத்தில் நாம் இருக்கிறோம். அது முடிந்ததற்குப் பிறகு மே, மாதம் பெரும் வெப்பமாக இருப்பதால் ஜூன் மாதத்திலிருந்து ஜூலை மாதத்திற்குள்ளாக சட்டமன்ற

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1985 மார்ச் 16

நடவடிக்கைகளை முடிக்க வேண்டியிருக்கிறது. அதற்கு
முன்னாலே நடத்தலாம் என்றாலும்கூட ஆகஸ்டு, செப்டம்பர்
திங்களில் நடத்தலாம் என்பதை உறுதியான நிலையை
வாக்குறுதி என்று கூட அல்ல, எழுத்து மூலமாக நான்
இதை அவைக்கு தெரிவிக்க விரும்புகிறேன். பழைய
முறையிலேயே தேர்தல் நடைபெற ஏற்ற முறையில்
சட்ட திருத்தம் கொண்டு வரப்படும். ஏற்கனவே சட்டத்தை
திருத்தி இருக்கிறோம், திருத்திய சட்டத்தை பழைய
முறைக்கு கொண்டு வர நாம் மீண்டும் திருத்த வேண்டும். அதிலே
ஒரு எண்ணத்திற்கு அடிப்படை வைக்கலாம். ஒவ்வொரு
ஊராட்சியிலும், ஊராட்சிய ஒன்றியத்திலும், நகராட்சிகளிலும்
மற்றவைகளிலும் ஆதி திராவிடர்கள், பெண்களுக்கு என்று குறிப்
பிட்ட எண்ணிக்கையை நியமன முறையில் — அவர்கள் தேர்ந்
தெடுக்கப்பட்டு வந்தால் சரி இல்லாவிட்டால் — இவ்வளவு பேர்
இருக்க வேண்டும் என்ற முறையை நாம் அந்த சட்டத்திலே
சேர்த்து விடுவோமானால் ஆதி திராவிடர் இனத்தைச் சேர்ந்த
வர்களும், பெண்களும் உள்ளாட்சி மன்றங்களில் இடம்
பெறுவதற்கு வாய்ப்பு உண்டு. ஆகவே இந்தக் கூட்டத் தொடர்—
4, 5 ஆம் தேதிக்குள் முடித்துக்கொள்ளப்படும்போது அல்லது
இந்த பட்ஜெட் முடிந்தபிறகு ஒரு நாளில் கட்டாயம் வைத்து
இந்த சட்ட திருத்தத்தை கொண்டு வந்து நிறைவேற்றிவிடுவோ
மானால் அதற்கான நடவடிக்கைகளை நாம் எடுக்கலாம். அந்த
வகையில் சட்டத் திருத்தம் இந்தக் கூட்டத் தொடரிலேயே
கொண்டு வரப்படும் என்பதை எடுத்துச் சொல்லி, மேதகு
ஆளுநர் அவர்கள் உரையில் பல்வேறு கருத்துக்களை வழங்கிய
அத்தனை உறுப்பினர்களுக்கும் என்னுடைய நன்றியை
தெரிவித்து அமைகிறேன்.

(பிற்பகல் 12-30)

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவ
ரவர்களே, இந்த ஆண்டு சில மாவட்டங்களில் பருவமழை
பொய்த்துவிட்டதன் காரணமாகக் கடுமையாக வறட்சி நிலவிக்
கொண்டிருக்கிறது. வரும் மாதங்களில் வறட்சி இன்னும் அதிகமாக
இருக்கும். அவை முன்னவரவர்கள், குடிதண்ணீர்ப் பிரச்சனையைப்
போக்குவதற்காகப் புள்ளி விவரங்கள் சேகரிக்கப்படுவதாகச்
சொன்னார்கள். அது ஆரம்பக் கட்டத்திலேதான் இருப்பதால்



[illegible] 16] [திரு. என். எஸ். வி. சித்தன்]

[illegible] ஆகவே, நான் உங்கள் மூலமாகக் கேட்டுக்
[illegible] இப்பொழுது சிலயிடங்களில் குடிதண்ணீர்ப்
[illegible] கடுமையாக இருப்பதால் உடனடியாக நம்மிடம் உள்ள
[illegible] அந்தந்தப் பகுதிகளுக்கு அனுப்பி, போர்க்கால
[illegible] போல எடுத்தால் சிறப்பாக இருக்கும்.
ஏனென்றால் அந்த நிலைமைகளையெல்லாம் நேரில் பார்த்த
காரணத்தால் இதைச் சொல்கிறேன். எனவே, ஆரம்ப
வேலைகள் உடனடியாக, துரிதமாக எடுக்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு
பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு.
சித்தன் அவர்கள் சொல்லியதுபோன்று எல்லா மாவட்ட ஆட்சித்
தலைவர்களிடத்திலேயும் நாங்கள் அறிவுரைகள் கூறியிருக்
கின்றோம். ஆங்காங்கு இருக்கின்ற வேலைகளின் தன்மை,
வறட்சியின் அளவு, வறட்சியின் தன்மை, முழுவதும் பாதிக்கப்
பட்டிருந்தால் வரி வசூலை ரத்து செய்வது அரை பங்கா, முக்கால்
பங்கா, முழுப் பங்கா என்பதுபற்றியெல்லாம் அறிய வறட்சியின்
தன்மைபற்றி ரிப்போர்ட் கேட்டிருக்கிறோம். அந்த அறிக்கை
வந்தபிறகு, திட்டங்களைத் தீட்டி நடைமுறைப்படுத்துகின்ற
முயற்சிகளிலே அரசு ஈடுபடும் என்பதைத் தெரிவித்துக்
கொள்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : பேரவைத் தலைவரவர்களே, ஆளுநர்
உரையில் குறிப்பிடப்பட்டிருக்கின்ற ஒரு வாசகத்தைப் பற்றி
நிதியமைச்சரவர்களிடத்திலே விளக்கம் கேட்க விரும்புகின்றேன்.
"தகுதியுள்ள பிள்ளைகள் அனைவருக்கும் இலவசமாகச்
சீருடைகள் வழங்கத் கருதப்பட்டுள்ளது." என்று சொல்லப்பட்
டிருக்கிறது. தகுதியானவர்கள் என்றால் யார்? இலவச
மின்சாரம் என்று சொல்லுகின்றபொழுது எல்லா விவசாயிகளும்
என்று இல்லாமல் வேறு தொழில் செய்கின்றவர்களுக்கு இலவச
மின்சாரம் கிடையாது; அதேபோன்று, எஸ்.எஸ்.எல்.சி., பி.யு.சி.
படித்தவர்களுக்கு உதவித் தொகை வழங்குகின்ற திட்டம் என்று
சொல்லுகின்றபொழுது, அவர்களுக்கு 50 ரூபாய் வருமானம்
வந்தாலே அது கிடையாது. Such applicants are not eligible
அதேமாதிரி, தாலிக்குத் தங்கம் என்று சொல்லுகின்றபொழுது,
மகளுக்குத் தாலி ஏறுவதாக இருந்தால் அம்மாவிற்குத்
தாலியிருக்கக் கூடாது "daughter of widow"

[திரு. அ. ரகுமான்கான்] [1985 மார்ச் 16

இதேபோன்ற நிபந்தனைகள் இருக்கின்றனவே, அதேமாதிரி, தகுதியானவர்களுக்குச் சீருடை என்று சொல்லுகின்றபொழுது அது என்ன தகுதி, எந்தவிதமான நிபந்தனையும் இல்லாமல் தரப்படுமா அல்லது நிபந்தனை இருக்கிறதா? ஏனென்றால் அதன் பயன் சரியாக இருக்க வேண்டுமென்பதற்காக இதைக் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இப்பொழுது பள்ளிகளிலே உள்ள மாணவர்களுக்கு சத்துணவு போடுவதைப் பொறுத்து நாம் கொண்டு வந்துள்ள முறை, அவர்கள் ஏழ்மைக் கோட்டிற்குக் கீழே இருப்பவர்கள் யார் யாரோ அவர்களுக்குத் தருவது— அத்தனை பேர்களுக்கும் தருவது என்று வைத்திருக்கிறோம். அந்த அடிப்படையில், தகுதியின் அடிப்படையில் திட்டத்தட்ட மதிய சத்துணவு பெறுபவர்கள் அத்தனை பேர்களுக்கும் சீருடை வழங்கப்படும்.

திரு. வி. பி. சிந்தன்: மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, நான் மூன்று பிரச்னைகளை வலியுறுத்திக் கூறினேன், ஆளுநர் உரையின் மீது பேசுகின்றபொழுது. போலீஸ் நிலையங்கள், அநேகமாக ஆறு, ஏழு ஆண்டுக்காலமாக, ஆளுங்கட்சியின் கிளைக் கழகங்களாகப் பணியாற்றிக் கொண்டிருக்கின்றன தமிழகத்திலே. அந்தக் கொள்கையில் மாற்றம் ஏதேனும் இருக்குமா என்று கேட்டேன்.

மூடிய ஆலைகள் ஏராளமாக இருக்கின்றன, சிறிய தொழில் களிலேயும், பெரிய தொழில்களிலேயும். அந்த ஆலைகளைத் திறப்பதற்கு அரசினுடைய கொள்கை என்ன என்று கேட்டேன். இதேமுறையில், தொழில் துறையில் ஆறு, ஏழு ஆண்டுக்காலமாக அராஜகம் நிலவியது. ஒருவேளை அந்த அமைச்சரை அப்புறப் படுத்தியதற்கு அதுவும் ஒரு காரணமாக இருக்குமோ என்னவோ தெரியாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கொள்கைகளைப்பற்றித்தான் கேட்கலாம்; திரும்பவும் விவாதமாக ஆகிவிடக் கூடாது.



1985 மார்ச் 16]

திரு. வி. பி. சிந்தன்: அந்தக் கொள்கைகளைப் பற்றியும், தொழிலாளர் துறை பற்றியும் எந்த விளக்கமும் கூறப்படவில்லை. அதைப்பற்றியும் கூற வேண்டுமென்று வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அந்தந்த மானியக் கோரிக்கைகள் வருகின்றபொழுது அந்தந்த அமைச்சர்கள் மாண்புமிகு உறுப்பினர் திரு. சிந்தன் அவர்கள் சொல்லுகின்ற கருத்துக் களுக்குத் தெளிவாகவும், திட்பமாகவும் சொல்லுவார்கள். ஆனால் ஒன்றை மட்டும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

நாட்டிலுள்ள அவ்வளவு காவல் நிலையங்களும், அவ்வளவு அதிகாரிகளும் மோசமாக நடக்கிறார்கள் என்று சொல்வதற் கில்லை. ஆனால் சிலபல நேரங்களில் சிலவிடங்களில் அப்படி இருக்கலாம். அந்த நிலைமை எப்பொழுதுமே உண்டு. ஏகநாதருடைய 12 சீடர்களில் ஒருவர்தான் காட்டிக்கொடுக்கின்ற நிலைமை ஏகநாதர் காலத்திலேயே இருந்திருக்கிறது. எனவே, அப்படிப்பட்டவர்கள் சிலர் இருக்கக்கூடும். மாண்புமிகு உறுப் பினரவர்கள் சொல்வதைப்போன்று எங்கேயாவது அராஜகம் நடந்து விட்டது என்று குறிப்பாக, திட்டவட்டமாக, தெளிவாக சொல்வதாக இருந்தால் அரசு நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறது; எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் ஒட்டுமொத்தமாக எல்லோரையும் சொல்லிவிட முடியாது; எல்லா நிலையங்களையும் சொல்லிவிட முடியாது. முறை தவறி, நீதிக்கு மாறான முறையில் இருந்து குறிப்பிட்டுச் சொன்னால் நடவடிக்கை எடுக்கலாம். இதுபற்றிக் காவல்துறை மானியக் கோரிக்கை வரும்போது எல்லோரும் பேசலாம்.

தொழிலாளர் சம்பந்தமாகச் சொன்னார்கள். அது சம்பந்த மான விவரங்களையும் மானியக் கோரிக்கைகள் வரும்பொழுது எடுத்துச்சொன்னால் சம்பந்தப்பட்ட அமைச்சரவர்கள் விரிவாக எடுத்துச் சொல்வார்கள் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. கு. சுப்பராயன்: பேரவைத் தலைவரவர்களே, . . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்படி எல்லோரும் எழுந்து கேட்க ஆரம்பித்தால் கேள்வி நேரம்போல ஆகிவிடும். இங்கே பேசியதற்குப் பதில் சொல்லிவிட்டார்கள். அதிலே ஏதாவது

கிளாரிபிகேஷன் கேட்பதாக இருந்தால்கூடப் பரவாயில்லை. ஆனால் இப்படிக் கேட்கின்ற முறையை இதுவரையில் கடைப்பிடிக்கவில்லை. இன்னும் 40 நாட்கள் இருக்கின்றன. இப்போது மேலும் கேள்வி கேட்பதற்கு ஒரு உறுப்பினருக்கு வாய்ப்பளித்தால் கேள்வி கேட்க விரும்பும் அனைத்து உறுப்பினர்களுக்கும் வாய்ப்பளிக்கவேண்டிய நிலைமை ஏற்படும். நாம் கடைப்பிடித்து வருவது என்னவென்றால் பேரவை முன்னவர் அவர்கள் விளக்கமளித்துப் பேசியபின் வேண்டுமென்றால் ஒரு சின்ன கிளாரிபிகேஷன் கேட்பதற்கு அனுமதிக்கலாம் என்பதுதான். ஆனால் எல்லோரும் கேட்கவேண்டும் என்று விரும்பினால் நேரம் மிக அதிகமாக ஆகிவிடும். (குறுக்கீடுகள்) எனவே இப்போது அனுமதிப்பதற்கு இல்லை.

திருவாளர்கள் டி. வெங்கடரெட்டி, டி. என். முருகானந்தர் ஆகியோர் இருப்பிடத்தில் இல்லாததால் அவர்களுடைய திருத்தங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப் பெற்றனவாகக் கருதப்பெற்றன.

திரு. கு. ராமணி அவர்களுடைய திருத்தம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி: "ஆளுநர் அவர்களுக்கு கீழ்க்கண்ட நன்றியுரை அளிக்கப்பெறவேண்டும் —

1985 ஆம் ஆண்டு, மார்ச் திங்கள் 8 ஆம் தேதியன்று இரு அவைகளும் சேர்ந்த சட்டமன்றக் கூட்டத்தில் ஆளுநர் அவர்கள் நிகழ்த்திய பேருரைக்கு, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பெரிதும் நன்றியுடையவர்களாவர்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை மறுநாள் (18—3—85) காலை 9-00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 12-36 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.





## 5. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

### (அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

96. கொடைக்கானல், மகளிர் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தராக திருமதி கே. வசந்தி தேவி அவர்களை நியமிப்பது குறித்து கல்வி, அறிவியல்-தொழிற் நுட்பவியல் துறையின் 4—2—1984 ஆம் நாளிட்ட 115 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1984 ஆம் ஆண்டு அன்னை தெரசா மகளிர் பல்கலைக் கழக சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 15/1984) 51 (2) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

97. கொடைக்கானல், அன்னை தெரசா மகளிர் பல்கலைக் கழகத்தின் முதல் பதிவாளராக பேராசிரியை திருமதி சத்தியவதி மனுவேல் அவர்களை நியமிப்பது குறித்து, கல்வி, அறிவியல்-தொழிற் நுட்பவியல் துறையின் 21—3—1984 ஆம் நாளிட்ட 316 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1984 ஆம் ஆண்டு அன்னை தெரசா மகளிர் பல்கலைக் கழக சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 15/1984) 51 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

98. கொடைக்கானல், அன்னை தெரசா மகளிர் பல்கலைக் கழகத்தின் நிதி அலுவலராக செல்வி பா. மதுராமணி அவர்களை நியமிப்பது குறித்து கல்வித் துறையின் 12—6—1984 ஆம் நாளிட்ட 742 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1984 ஆம் ஆண்டு அன்னை தெரசா மகளிர் பல்கலைக் கழக சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 15/1984) 51 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

99. அன்னை தெரசா மகளிர் பல்கலைக் கழகத்தின் நிர்வாகிகளை அமைப்பதற்கான காலத்தை நீட்டிப்பது குறித்து கல்வித் துறையின் 9-7-1984 ஆம் நாளிட்ட 878 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1984 ஆம் ஆண்டு அன்னை தெரசா மகளிர் பல்கலைக் கழக சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 15/1984) 51 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

### (ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

எதுவுமில்லை.

13637 ... 600 005

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS.

### IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road, Madras-5.
10 The South India Saiva Siddhanta Works Publishing Society (Tirunelveli) Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras-1.
12 New Century Book House (Private) Limited, Madras-2
13 Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egmore, Madras-8.

### IN MOFUSSIL OF TAMIL NADU.

1 A Venkatasubban & Company, Vellore (North Arcot District)
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V. Nathan Company, Kumbakonam (Tanjore District).
4 Appar Book Stall, Thanjavur.
5 P N Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Bros., Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Cut Road, Coimbatore-12.
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore-1.
11 S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tiruchirappalli-1.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi.
13 Mary Martin, Booksellers, Kottagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem-1.
15 Parameswari Book Shop, No. 45D, Old Market Street, Salem.
16 Meenakshi Pathipagam, Pudukkottai.
17 K V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-10.
21 Kumaran Book Depot, Booksellers, Erode-1.
22 Vela Book Company, No. A, Annaji Rao Street, Erode-1.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajantha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchirappalli-2.
26 Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi, Madras-1.

### IN OTHER STATES.

1 Jain Book Agency, New Delhi.
2 Inter National Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthaghalayam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bagchi & Company, 286, R.B. Gandhi Street, Calcutta-11.

© Published under Rules 234 and 237 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing Madras.